# மார்க்ஸ் எங்கெல்ஸ்

# சோஷலிஸ்ட் புரட்சி



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்

# சோஷலிஸ்ட் புரட்சி

தொகுப்பு

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்கள்: நா. தர்மராஜன் எம்.ஏ.மற்றும் சிலர்

К. Маркс, Ф. Энгельс

О СОЦИАЛИСТИЧЕСКОЙ РЕВОЛЮЦИИ

(Сборник)

*На тамильском языке*

**K. Marx, F. Engels**

THE SOCIALIST REVOLUTION

(Collection)

*in Tamil*

**வாசகர்களுக்கு**

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்துக்களையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

உங்கள் கடிதங்களைத் தயவு செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

© முன்னேற்றப் பதிப்பகம், 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$\text{МЭ}\frac{0101010000-475}{014(01)-86}$ 341—86

# பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . . . . . . 7

பி. எங்கெல்ஸ். எல்பெர்பெல்ட் சொற்பொழிவுகள் 1845 பிப்ரவரி 15ந் தேதியன்று நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து . . . . . . . . . . 37

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ். ஃபாயர்பாஹ். பொருள்முதல்வாதத்துக்கும் கருத்துமுதல் வாதத்துக்கும் உள்ள ஒரு வித்தியாசம் (''ஜெர்மன் சித்தாந்தம்'' என்ற நூலின் முதல் அத்தியாயத்திலிருந்து) . . . . . . . . . . 41

பி. எங்கெல்ஸ். பிரஸ்ஸெல்சிலிருந்த கம்யூனிஸ்ட் தொடர்புக் கமிட்டிக்கு எழுதிய கடிதத்திலிருந்து, அக்டோபர் 23, 1846. . . . 43

கா. மார்க்ஸ். ''மெய்யறிவின் வறுமை'' என்ற நூலிலிருந்து. திரு. புரூதோன் எழுதிய ''வறுமையின் மெய்யறிவு'' எனும் நூலுக்குப் பதில் . . . . . . . . . . . . . . . 44

பி. எங்கெல்ஸ். ''கம்யூனிசத்தின் கோட்பாடுகள்'' என்ற நூலிலிருந்து . . . . . . . . . . . 47

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ். ''கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை'' என்ற நூலிலிருந்து . . . . . 59

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ். கம்யூனிஸ்டுக் கழகத்துக்கு மத்தியக் கமிட்டியின் வேண்டுகோள். மார்ச், 1850 . . . . . . . . . . 96

பி. எங்கெல்ஸ். ''ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும்'' என்ற நூலிலிருந்து . . . 115

கா. மார்க்ஸ். யோசிஃப் வெய்டமையருக்கு எழுதிய கடிதத்திலிருந்து, மார்ச் 5, 1852 . 117

கா. மார்க்ஸ். ''இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள்'' என்ற கட்டுரையிலிருந்து. . . . 119

கா. மார்க்ஸ். *The People's Paper*இன் ஆண்டு விழாவின் போது நிகழ்த்திய சொற்பொழிவு, லண்டன், ஏப்ரல் 14, 1856 . . . . . . . . 123

கா. மார்க்ஸ். ''அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை'' என்ற நூலின் முதல் பதிப்புக்கு எழுதிய முன்னுரையிலிருந்து . . . . . . . . . . . . . . 127

கா. மார்க்ஸ். ''சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொது விதிமுறைகள்'' என்ற நூலிலிருந்து . . . . . . . . . . . . . . 130

கா. மார்க்ஸ். ''மூலதனம்''. முதல் தொகுதியிலிருந்து . . . . . . . . . . . . . 132

கா. மார்க்ஸ். லுட்விக் கூகல்மனுக்கு எழுதிய கடிதத்திலிருந்து, ஏப்ரல் 12, 1871 . . . 138

கா. மார்க்ஸ். லுட்விக் கூகல்மனுக்கு எழுதிய கடிதத்திலிருந்து, ஏப்ரல் 17, 1871 . . . 140

கா. மார்க்ஸ். பிரான்சில் உள்நாட்டுப் போர். சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுவின் பேருரை. . . . . . . 142

கா. மார்க்ஸ். '' 'பிரான்சில் உள்நாட்டுப் போர்' என்ற நூலின் முதல் உருவரை''யிலிருந்து . 204

பி. எங்கெல்ஸ். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையைப் பற்றி. லண்டன் மாநாட்டுக் கூட்டத்தின் போது நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்புகள், செப்டெம்பர் 21, 1871 . . . . . . . . . . . . . . 222

பி. எங்கெல்ஸ். அதிகாரத்தைப் பற்றி . . . . 224

கா. மார்க்ஸ். கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம். . . . . . . . . . . . . . 230

வில்ஹெல்ம் பிராக்கேவுக்கு எழுதிய கடிதம் . . . . . . . . . . . . . . . 230

ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சியின் வேலைத்திட்டத்தைப் பற்றி சில குறிப்புகள் . . . . . . . . . . . . . 233

கா. மார்க்ஸ். 1878 டிசம்பர் முற்பாதியில் *Chicago Tribune* என்ற அமெரிக்க செய்தித்தாளின் நிருபருக்குக் கார்ல் மார்க்ஸ் கொடுத்த பேட்டியிலிருந்து. . . . . . . . . . . 263

பி. எங்கெல்ஸ். ''கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்'' என்ற பிரசுரத்திலிருந்து. 266

கா. மார்க்ஸ். பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டத்தின் முன்னுரை . . . 277

கா. மார்க்ஸ். ஹேக்கிலிருந்த ஃபெர்டினண்டு டமெலா நியூவென்ஹைசுக்கு எழுதிய கடிதத்திலிருந்து, பிப்ரவரி 22, 1881 . . . . . 279

பி. எங்கெல்ஸ். சமூகத்தின் அவசியமான வர்க்கங்களும் மிகையான வர்க்கங்களும் . . . . 282

பி. எங்கெல்ஸ். வியன்னாவிலிருந்த கார்ல் காவுத்ஸ்கிக்கு எழுதிய கடிதத்திலிருந்து, செப்டெம்பர் 12, 1882 . . . . . . . . . . . 288

பி. எங்கெல்ஸ். "கார்ல் மார்க்சின் மரணத்தை ஒட்டி" என்பதிலிருந்து . . . . . . . . . . 290

பி. எங்கெல்ஸ். "குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்" எனும் நூலிலிருந்து . . . . . . . . . . . . . 292

பி. எங்கெல்ஸ். கோபன்ஹேகனிலிருந்த ஜெர்சன் டிரியருக்கு எழுதிய கடிதத்திலிருந்து, டிசம்பர் 18, 1889. . . . . . . . . . . 296

பி. எங்கெல்ஸ். கா. மார்க்சின் "பிரான்சில் உள்நாட்டுப் போர்" என்ற புத்தகத்துக்கு அறிமுகம் . . . . . . . . . . . . . . . . 299

பி. எங்கெல்ஸ். "1891ம் வருட சமூக-ஜனநாயக வேலைத்திட்ட நகலின் விமர்சனம்" என்பதிலிருந்து. . . . . . . . . . . . . 306

பி. எங்கெல்ஸ். ஜோவான்னி போவியோவுக்கு பதில் . . . . . . . . . . . . . . . . 313

பி. எங்கெல்ஸ். பாரிசிலிருந்த போல் லஃபார்குக்கு எழுதிய கடிதத்திலிருந்து, மார்ச் 6, 1894 . . . . . . . . . . . . . . . 317

பி. எங்கெல்ஸ். "பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்சினை" என்ற நூலிலிருந்து. . 318

குறிப்புகள் . . . . . . . . . . . . 330

பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . . 354

## முன்னுரை

சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றிய தத்துவம் மார்க்சிய-லெனினிய விஞ்ஞானத்தின் மிக முக்கியமான பிரிவுகளில் ஒன்ருகும். கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் அதன் அடிப்படைக் கோட்பாடுகளை 19ம் நூற்ருண்டில் வகுத்தளித்தனர்.

புரட்சியைப் பற்றிய மார்க்சியத் தத்துவத்தை அடியொற்றியுள்ள பொதுவான தத்துவஞான அடிப்படை, வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கண்ணேட்டமாகும். மார்க்சும் எங்கெல்சும் தத்துவஞானப் பொருள்முதல்வாதத்தையும் வளர்ச்சியின் தத்துவமான இயக்கவியலையும் வரலாற்றுத் துறைக்கு விரிவுபடுத்திஞர்கள். பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தியும் மறு உற்பத்தியுமே சமூக வாழ்க்கை மற்றும் அதன் வரலாற்று நிகழ்வுப் போக்கின் அடிப்படை என்பதை அவர்கள் எடுத்துக் காட்டிஞர்கள். சமூக-பொருளாதார அமைப்புக்களின் வளர்ச்சி மற்றும் மாற்றத்தின் இயற்கையான நிகழ்வுப் போக்குதான் வரலாறு. சமூக அமைப்புக்களின் முன்னேற்றம் இறுதிநிலையில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை, உற்பத்தி உறவுகளும் உடைமையும் தவருமல் தம்மைத் தகவமைத்துக் கொள்ள வேண்டிய மட்டத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகவே உற்பத்தி உறவுகள் சமூகத்தின் அடிப்படையாக இருக்கின்றன, அதன் மீது மேற்கட்டுமானம் அதாவது அவற்றுக்குப் பொருத்தமான அரசியல், சட்டத்துறை மற்றும் இதர உறவுகளும் அமைப்புக்களும், சமூக உணர்வு மற்றும் சித்தாந்தம், இதரவற்றின் வடிவங்கள் நிறுவப்படுகின்றன. உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையில், ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் உற்பத்தி முறைக்கும் அதன் வடிவங்களுக்கும் இடையில் உள்ள புறநிலையான முரண்பாடு வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அந்த சமூகத்தின் வாழ்க்கையில் தீவிரமான மாற்றங்களுக்கு, சமூகப் புரட்சிக்கு இட்டுச் செல்கிறது.

இந்த முரண்பாடு புரட்சியின் பொருளாயத அடிப்படையாக அமைகிறது. பழைய அமைப்பிற்குள் புதிய அமைப்பின் முன் நிபந்தனைகள் படிப்படியாக முதிர்ச்சியடைகின்ற நிகழ்வுப் போக்கைப் புரட்சி பூர்த்தி செய்கிறது, புதிய உற்பத்திச் சக்திகளுக்கும் பழைய உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டைத் தீர்க்கிறது, காலாவதியான உற்பத்தி உறவுகளையும் அவற்றைக் காத்துக்கொண்டிருக்கின்ற அரசியல் மேற்கட்டுமானத்தையும் நொறுக்கி உற்பத்திச் சக்திகளின் கூடுதலான வளர்ச்சிக்கு இடமளிக்கிறது.

மார்க்ஸ் தன்னுடைய அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை என்ற நூலின் முன்னுரையில் வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தை மூலச் சிறப்பான முறையில் வகுத்தளித்தார். உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலுள்ள மோதலைத் தீர்ப்பதிலும் ஒரு சமூக-பொருளாதார அமைப்பிலிருந்து மற்றொன்றுக்கு மாறுவதிலும் சமூகப் புரட்சியின் சாராம்சம் அடங்கியிருக்கிறது என்பதை மார்க்ஸ் வலியுறுத்துகிறார்; ''எந்தச் சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒரு போதும் அழிக்கப்படுவதில்லை; புதிய, உயர்வான உற்பத்தி உறவுகள் தாங்கள் நீடித்திருக்கக் கூடிய சுற்று வட்டத்துக்குள் முதிர்ச்சியடைவதற்கு முன்பே பழைய உற்பத்தி உறவுகளை ஒருபோதும் அகற்றுவதில்லை''* என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

வரலாற்று நிகழ்வுப் போக்கின் புறநிலையான தன்மையை வலியுறுத்துகின்ற பொழுதே மார்க்சியம் வளர்ச்சியடைந்த புரட்சிகரத் தத்துவத்தின் மகத்தான பாத்திரத்தை வலியுறுத்தி வர்க்கங்கள், கட்சிகள், கோஷ்டிகள் மற்றும் தனி நபர்களின் உணர்வுபூர்வமான நடவடிக்கைகளுக்கும் மாபெரும் முக்கியத்துவமளிக்கிறது. வரலாற்றில் மக்களுடைய பாத்திரத்தைப் பற்றி மார்க்சியத்தின் அடிப்படையான கோட்பாடுகள் மார்க்சும் எங்கெல்சும் கூட்டாக எழுதிய முதல் புத்தகமாகிய புனிதக் குடும்பத்தில் ஏற்கெனவே வகுத்தளிக்கப்பட்டன. பெருந்திரளான மக்கள், உழைக்கும்

---

* இப்புத்தகத்தில் 129ம் பக்கத்தைப் பார்க்கவும்.— ப-ர்.

மக்கள், தொழிலாளர்களும் விவசாயிகளும் சமூகத்தில் மிக முக்கியமான உற்பத்திச் சக்தியாக இருக்கின்றனர். அவர்கள் தமது உழைப்பின் மூலம் பொருளாயதச் செல்வம் அனைத்தையும் படைக்கிறார்கள், அவர்களே வரலாற்றை உண்மையாகப் படைப்பவர்கள்: ''உற்பத்திக் கருவிகளனைத்திலுமே ஆகமிகப் பெரிதான உற்பத்திச் சக்தி புரட்சிகரமான தொழிலாளி வர்க்கமேயாகும்''*.

வரலாற்றின் முற்போக்கான வளர்ச்சியில் மக்களின் தீர்மானமான பாத்திரத்தின் முக்கியத்துவம் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. சமூகத்தில் ஏற்படுகின்ற கொந்தளிப்பு எவ்வளவு விரிவானதாகவும் ஆழமானதாகவும் இருக்கின்றதோ அந்த அளவுக்கு அதில் ஈடுபட்டிருக்கின்ற பெருந்திரளான மக்களும் எண்ணற்றவர்களாக இருக்கின்றார்கள். மக்களே சமூகப் புரட்சிகளை நிறைவேற்றுகிறார்கள். ''சமுதாய அமைப்பின் பூரண மாற்றம் என்பது எங்கு ஒரு பிரச்சினையாக இருக்கிறதோ அங்கு மக்கள் திரளினர் தாமுங்கூட அதில் ஈடுபட்டிருக்க வேண்டும், அவர்கள் தாமே போராடி நிலைநாட்ட வேண்டியது என்ன, உடலும் உள்ளமும் ஒருசேர எதற்காக அவர்கள் பாடுபடுகிறார்கள் என்பவற்றை ஏற்கெனவே புரிந்து கொண்டிருக்க வேண்டும்''** என்று 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் நடைபெற்ற வர்க்கச் சண்டைகளின் விளைவுகளில் சிலவற்றை விமர்சித்த எங்கெல்ஸ் 1895இல் குறிப்பிட்டார். பொருளாயத உற்பத்தி விதிகள் மற்றும் உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகளின் இயக்கியலை ஆராய்ந்த மார்க்சும் எங்கெல்சும் வர்க்கங்களாகப் பிரிந்திருக்கும் எல்லாச் சமூகங்களின் வளர்ச்சியின் பிறப்பிடம், இயக்கு சக்தி **வர்க்கப் போராட்டமே** என்பதை விளக்கினர். சமூகத்தின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற ஒவ்வொரு அரசியல், சமூக மற்றும் இதர மாற்றத்துக்குப் பின்னும் வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டம், சுரண்டப்படுபவர்களுக்கும் சுரண்டுகின்றவர்களுக்கும் இடையில் நடைபெறுகின்ற போராட்டம் முக்கியமான காரணியாக

---

* இப்புத்தகத்தில் 44ம் பக்கத்தைப் பார்க்கவும்.— ப-ர்.

** கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 2, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 121.

இருப்பதைப் பார்க்கும்படி மார்க்சியம் நமக்கு போதிக்கிறது. பகைநிலையான சமூக அமைப்புகளில் இந்தப் போராட்டத்தின் முடிவு நிலைகளாக சமூகப் புரட்சிகள் இருக்கின்றன. ''இது நாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களது வரலாறே ஆகும்... ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் ஒருவருக்கொருவர் தீராப்பகை கொண்டோராய், ஒரு நேரம் மறைவாகவும் ஒரு நேரம் பகிரங்கமாகவும், இடைவிடாப் போராட்டம் நடத்தி வந்தனர். இந்தப் போராட்டம் சமுதாயம் முழுவதன் புரட்சிகரப் புத்தமைப்பிலோ அல்லது போராடும் வர்க்கங்களின் பொது அழிவிலோதான் எப்போதும் முடிவுறலாயிற்று''*. முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாத விதத்தில் தொழிலாளி வர்க்கத்தின் சமூகப் புரட்சிக்கு, சமூகப் புரட்சியின் மிக உயர்ந்த ரகமான சோஷலிஸ்ட் புரட்சிக்கு இட்டுச் செல்கிறது.

சமூகப் புரட்சிகள் சமூகத்தை உயர்ந்த வளர்ச்சிக் கட்டத்துக்கு, ஒரு புதிய சமூக, பொருளாதார அமைப்புக்கு வளர்த்துச் செல்கின்றன என்ற உண்மையில் மட்டும் அவற்றின் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் அடங்கியிருக்கவில்லை; அவை சமூக, அரசியல் முன்னேற்றத்தை வலிமையான முறையில் விரைவுபடுத்துகின்றன என்ற உண்மையில் அவற்றின் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது என்பதை மார்க்சும் எங்கெல்சும் எடுத்துக் காட்டினார்கள். மார்க்ஸ் **பிரான்சில் வர்க்கப் போராட்டம்** என்ற புத்தகத்தில் புரட்சிகளை ''வரலாற்றின் என்ஜின்கள்''** என்று வர்ணித்தார்; அவை வளர்ச்சி வேகத்தை மிகவும் அதிகமான அளவுக்கு விரைவுபடுத்துகின்றன, மக்களின் வன்மையான படைப்புச் சக்திகளைக் கட்டவிழ்த்துவிடுகின்றன என்றார். சாதாரண நிலைமைகளில் பல பத்தாண்டுகள் அல்லது நூறாண்டுகள்கூட அவசியமாக இருக்கின்ற வேலைகளை புரட்சிகளின் மூலம் சில மாதங்களில் அல்லது வருடங்களில் நிறைவேற்றுவது சாத்தியம். அவை ஒடுக்கப்படுபவர்கள், சுரண்டப்படுபவர்களின்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கங்கள் 190—191.

** Marx and Engels, *Selected Works*, Vol. 1, Moscow, 1976, p. 277.

விழாவாகும். பெருந்திரளான மக்கள் புரட்சிகளின் போது சமூக ஒழுங்குமுறைகளைப் படைப்பதில் அதிகமான அளவுக்குச் சுறுசுறுப்பாகப் பாடுபடுவதைப் போல வேறு ஒரு போதும் பாடுபடுவதில்லை.

புரட்சிகரமான கொந்தளிப்புக்கு அவசியமான பொருளாயத முன்நிபந்தனைகளைப் பற்றி மார்க்சும் எங்கெல்சும் ஜெர்மன் சித்தாந்தம் என்ற நூலில் எழுதுகின்றபொழுது ''... ஒரு பக்கத்தில் உற்பத்திச் சக்திகள் இருக்க வேண்டும், மறு பக்கத்தில் புரட்சிகரமான பெருந்திரளினர் உருவாகியிருக்க வேண்டும். அவர்கள் அன்றைக்கிருக்கும் சமூகத்தின் தனிப்பட்ட நிலைமைகளுக்கு எதிராக மட்டுமல்லாமல், அன்றைக்கிருக்கின்ற வாழ்க்கை சூழ்நிலைக்கும் அது அமைக்கப்பட்டிருக்கும் மொத்த நடவடிக்கைக்கும் எதிராகக் கிளர்ந்தெழ வேண்டும்''* என்று சுட்டிக் காட்டினார்கள்.

இக்கருத்துக்கள் இன்னும் விரிவான முறையில் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் எடுத்துக் கூறப்படுகின்றன. மனித குலத்தின் வளர்ச்சியில் முதலாளித்துவம் ஒரு இயற்கையான கட்டம்; நிலப்பிரபுத்துவத்துடன் ஒப்பிடும்பொழுது அது முற்போக்கானது; ஆனால் வரலாற்று ரீதியில் அது தற்காலிகமான கட்டம்; அது இன்னும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்ட சமூக உறவுகளுக்கு இடங்கொடுக்கும். முதலாளித்துவ சமூகம் பிரம்மாண்டமான உற்பத்தி சக்திகளைப் படைக்கின்றபொழுது தன்னுடைய சொந்த அழிவுக்கும் வழிவகுத்துக் கொண்டிருக்கிறது. அது தனக்குச் சவக்குழி தோண்டுபவரை, பாட்டாளி வர்க்கத்தைப் பிரசவித்திருக்கிறது. உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள போராட்டம் சர்வாம்சம் கொண்டது; அது உலகளாவிய தன்மையைக் கொண்டிருக்கிறது. வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் உற்பத்திக் கருவிகளின் தனியுடைமை உற்பத்திச் சக்திகளின் மீது மாட்டப்பட்ட விலங்காக மாறிவிடுகிறது, சோஷலிசப் புரட்சி முதலாளித்துவத்தை அழிப்பதைத் தவிர்க்க முடியாததாக்குகிறது. வளர்ச்சியுற்றுக்கொண்டிருக்கும் உற்பத்திச் சக்திகளுக்கும் காலாவதியான முதலாளி வர்க்க உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் ஏற்படுகின்ற மோதலே சோஷலிசப் புரட்சிக்குப் பொருளாதார அடிப்படையாகும்.

---

* K. Marx, F. Engels, *Collected Works*, Vol. 5, Moscow, 1976, p. 54.

முதலாளித்துவ சமுதாயத்தில் தலைமையான உற்பத்திச் சக்தியான பாட்டாளி வர்க்கத்துக்கும் கூலியுழைப்பின் மூலம் படைக்கப்படுகின்ற உற்பத்தியில் பெரும்பகுதியை சுவீகரித்துக் கொள்கின்ற முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள சமரசப்படுத்த முடியாத முரண்பாடு அதன் சமூக, வர்க்க அடிப்படையாக இருக்கிறது.

பாட்டாளி வர்க்கப் புரட்சியே முதலாளித்துவ சமூகத்தை மாற்றியமைப்பதற்குச் சாத்தியமான ஒரே வழியாகும். முதலாளித்துவத்தினால் வளர்க்கப்பட்டுள்ள பிரம்மாண்டமான உற்பத்தி சக்திகளுடன் உற்பத்தி உறவுகளைப் பொருந்தச் செய்வது, அதன் மூலம் சமூகம் மேலும் வளர்ச்சியடைகின்ற நிலைமைகளைத் தோற்றுவிப்பது, இயற்கைச் சக்திகளை ஆட்சி புரியும் நிலைமையைப் பெறுதல், தனிநபருடைய முழு வளர்ச்சி, தனிநபர் மற்றும் சமூக நலன்களுக்கிடையில் ஒத்திசைவான இணைப்பை ஏற்படுத்துவது அதன் நோக்கமாகும். முந்திய புரட்சி எதுவுமே மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழிக்கவில்லை; அதன் வடிவங்கள் மட்டுமே மாறின. பாட்டாளி வர்க்கப் புரட்சி எல்லாவிதமான சுரண்டலையும் ஒழிக்கிறது, உற்பத்திக் கருவிகளின் பொது உடைமையைக் கொண்டுவருகிறது—மற்ற புரட்சிகளுக்கும் இதற்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு இதுவே.

மார்க்ஸ் எழுதிய முக்கியமான நூல், அவர் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு எழுதிய **மூலதனம்** சோஷலிஸ்ட் புரட்சி தவிர்க்க முடியாதது என்பதற்கு மிகவும் அடிப்படையான பொருளாதார நிரூபணத்தைத் தருகிறது.

''இந்த மாற்றச் செய்முறையின் அனுகூலங்களனைத்தையும் அபகரித்து ஏகபோகமாக்கிக் கொள்ளும் மூலதனப் பெருமுதலைகளின் எண்ணிக்கை இடையறாது குறைவதோடு கூட, துன்பம், ஒடுக்குமுறை, அடிமைத்தனம், சீரழிவு, சுரண்டல் ஆகியவற்றின் அளவும் அதிகரிக்கிறது, ஆனால் இத்தோடு, எப்போதுமே எண்ணிக்கையில் அதிகரித்துக் கொண்டிருப்பதும் முதலாளித்துவ உற்பத்திச் செய்முறையின் இயங்கமைப்பாலேயே கட்டுப்பாடுடையதாக்கப்பட்டு ஒன்றுபடுத்தப்பட்டு ஸ்தாபன ரீதியாக்கப்படுவதுமான தொழிலாளி வர்க்கத்தின் எதிர்ப்புக்கிளர்ச்சியாக வளர்கிறது. மூலதனத்தின் ஏகபோகம், அதனோடு சேர்ந்து அதன்கீழ்ப் பிறந்து மலர்ந்துள்ள உற்பத்திச் செய்முறைக்குப் பூட்டிய

தோர் விலங்காகிறது. உற்பத்திச் சாதனங்கள் மையப்படுவதும் உழைப்புச் சமுதாய ரீதியாவதும், அவற்றின் முதலாளித்துவ ஓட்டுக்குப் பொருந்தி வராத ஒரு கட்டத்தைக் கடைசியில் எட்டுகின்றன. இவ்வாறு ஓடு உடைத்தெறியப் படுகிறது. முதலாளித்துவத் தனிச்சொத்தின் சாவுமணி ஒலிக்கிறது. பறிமுதல்காரர்கள் பறிமுதல் செய்யப்படுகின்றனர்.''*

அடிப்படையான உற்பத்திச் சாதனங்களில் பொது உடைமையை நிறுவும்பொழுது சோஷலிஸ்ட் புரட்சி மொத்த சமூகத்தையும் மாற்றியமைக்கிறது என்று மார்க்ஸ் வலியுறுத்துகிறார். புறநிலையான பொருளாதார விதிகளின் தன்னியல்பான, குருட்டுத் தனமான நடவடிக்கைக்குப் பதிலாக அவை உணர்வு பூர்வமாகப் பயன்படுத்தப்படுகின்றன; சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினர் மற்றும் சமூகம் முழுவதின் நன்மைக்காகவும் சமூக உற்பத்தி திட்டமிட்ட முறையில் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

முதலாளித்துவத்தின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது என்று விஞ்ஞான ரீதியாக நிரூபித்து விட்டால் அது தன்னளவில், தானாகவே நடைபெறும் என்று அர்த்தமல்ல. மனிதர்களின் உணர்வு அல்லது சித்தத்துக்குச் சம்பந்தமில்லாத புறநிலையான முன்நிபந்தனைகளைத் தவிர உணர்வு பூர்வமான, புரட்சிகர வெகுஜன நடவடிக்கைகளும் அவசியம். காலாவதியான முதலாளித்துவ உற்பத்தி முறைகளை ஒழிப்பதற்கு, தமது ஆதிக்கத்தின் இந்த அடிப்படையைப் பாதுகாக்கின்ற ஆளும் வர்க்கத்தினருடைய பலத்தை நொறுக்க வேண்டும்; அதற்குப் புரட்சிகர சக்தி அவசியம். மார்க்சும் எங்கெல்சும் சோஷலிஸ்ட் புரட்சியின் அவசியத்தை நிரூபித்ததோடல்லாமல் இந்த மிகப் புரட்சிகரமான கடமையை வரலாறு எந்த சமூக சக்தியிடம் ஒப்படைத்திருக்கிறது என்பதையும் எடுத்துக்கூறினார்கள். தொழிலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கமே இந்த சக்தி. ''மனிதகுலத்தின் மறுமலர்ச்சி'' அதனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று மார்க்ஸ் கூறினார்.

பாட்டாளி வர்க்கத்தின் உலகு தழுவிய வரலாற்றுக் கடமையை **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** அசாதாரணமான

---

* இப்புத்தகத்தில் 134ம் பக்கத்தைப் பார்க்கவும்—**ப-ர்.**

வன்மையுடனும் ஆழத்துடனும் எடுத்துரைக்கிறது. முதலாளித்துவமே தொழிலாளி வர்க்கத்தைப் பிரசவிக்கிறது, தொழில் வளர்ச்சி முன்னேற்றத்துக்கு நேரடியான விகிதத்தில் தொழிலாளி வர்க்கம் அதிகரிக்கிறது, வளர்ச்சியடைகிறது, தன்னை ஒன்று படுத்திக்கொண்டு அமைப்பு ரீதியாகத் திரட்டிக் கொள்கிறது. மூலதனத்தின் கூலியுழைப்பு என்ற பாட்டாளி வர்க்கத்தின் புறநிலையான நிலைமை கூலியுழைப்பு என்ற மொத்த அமைப்புக்கும் அதை சமரசப்படுத்த முடியாத எதிரியாக்குகிறது. ஒடுக்கப்படுகின்ற இதர வர்க்கங்கள் பிரிந்து, சிதறிவிடுகின்ற பொழுது தொடர்ச்சியாக வளர்ச்சியடைகின்ற இந்த வர்க்கம் ஒன்றே சுரண்டலின் எல்லா வடிவங்களுக்கும் ஒடுக்கு முறையின் ஒவ்வொரு ரகத்துக்கும் ஊசலாட்டமின்றி நிலையான தன்மையுடன் சமரசமில்லாத எதிரியாக இருக்கிறது.

முதலாளித்துவத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் அதன் சொந்த விடுதலையை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை; அதன் நலங்கள் உழைக்கும் மக்களின் மிக விரிவான பகுதிகளின் நலன்களுடன் பொருந்தியிருக்கின்றன. முதலாளித்துவத்தின் கீழ் விவசாய வர்க்கத்துக்கும் நகரக் குட்டிமுதலாளி வர்க்கத்துக்கும் நலிவையும் அழிவையும் தவிர வேறு எந்த வழியுமில்லை; மூலதனத்தின் ஆட்சியைத் தூக்கியெறிகின்ற போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்துடன் அணிவகுப்பதே அவர்களுக்கு ஒரே வழியாகும். பாட்டாளி வர்க்கம் சமூக மற்றும் தேசிய அடிமைத்தனத்தின் எல்லா வடிவங்களையும் நிரந்தரமாக ஒழிக்காமல், அதன் மூலம் சமூகம் முழுவதையும் விடுவிக்காமல், தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது. அதனால்தான் தனக்குச் சொந்த உடைமை இல்லாத இந்த வர்க்கம், முதலாளித்துவ சமூகத்தின் கேந்திரமான நகரங்களில் குவிக்கப்பட்டிருக்கும் இந்த வர்க்கம், ஒன்று சேர்ந்து, அமைப்பு ரீதியாக்கப்பட்டு அடிப்படையான நலன்களை நன்கறிந்துள்ள இந்த வர்க்கம் முழு சமூக விடுதலை, சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்துக்கும் நடைபெறுகின்ற போராட்டத்தில் எல்லா உழைக்கும் மக்களின் முன்னணிப் படையாகவும் தலைவனாகவும் இருக்கிறது. இது இப்பொழுது பன்முறை நடைமுறையில் நிரூபிக்கப்பட்டிருப்பதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. ''உலகத் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய பாத்திரத்தை, அவர்

களுடைய கடமையை, அவர்களுடைய பணியை அதாவது மூலதனத்துக்கு எதிரான புரட்சிகரப் போராட்டத்தில் முதலில் கிளர்ந்தெழ வேண்டும், இந்தப் போராட்டத்தில் அனைத்து உழைக்கின்ற மக்களையும் சுரண்டப்படுகின்ற மக்களையும் தன்னைச் சுற்றித்திரட்ட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டியது மார்க்ஸ், எங்கெல்சின் மாபெரும் வரலாற்றுச் சிறப்பாகும்''* என்று லெனின் எழுதினர்.

உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையில் நடைபெறுகின்ற போராட்டத்தின் உலகு தழுவிய பரிமாணம் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசத் தன்மையை நிர்ணயிக்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு மிக முக்கியமான நிபந்தனைகளில் ஒன்று அதன் புரட்சிகர நடவடிக்கைகள் சர்வதேச மயமாக்கப்பட வேண்டும் என்பதாகும். மார்க்சும் எங்கெல்சும் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை நிறுவிய பொழுது ''வெவ்வேறு நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காக இப்பொழுது நடைபெறுகின்ற தொடர்பில்லாத முயற்சிகளை ஒன்றுகூட்டிப் பொதுமைப் படுத்துவது'', பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதக் கோட்பாடுகளை முரணில்லாமல் பின்பற்றுவது அச்சங்கத்தின் நோக்கம் என்றனர்**. தேசியக் குறுகிய மனம், இந்தக் கோட்பாடுகளைப் புறக் கணித்தல் அல்லது மீறுதல் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தை மட்டுமின்றி, எல்லாவற்றுக்கும் மேலாக, அதன் தனித்தனியான தேசியப் பிரிவுகளுக்கு ஊறு விளைவிக்கும். ''வெவ்வேறு நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கிடையே இருக்க வேண்டிய, விடுதலைக்கான எல்லாப் போராட்டத்திலும் அவர்கள் ஒருவரோடொருவர் உறுதியாகச் சேர்ந்து நிற்குமாறு தூண்ட வேண்டிய சகோதரப் பிணைப்பை அலட்சியம் செய்வது அவர்களுடைய தொடர்பில்லாத முயற்சிகளின் பொதுவான தோல்வியினுல் தண்டிக்கப்படும் என்பதைக் கடந்த கால அனுபவம் எடுத்துக் காட்டியிருக்கிறது''*** என்று மார்க்ஸ் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் துவக்க அறிக்கையில் எழுதினர். மூலதனத்தின்

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 28, p. 165.

** Marx and Engels, *Selected Works*, Vol. 2, Moscow, 1976, p. 77.

*** கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 5, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1985, பக்கம் 23.

சர்வதேச பலத்தையும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக நடத்துகின்ற ஒன்றுபட்ட முயற்சிகளையும் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமையினாலும் ஒருமைப்பாட்டினாலும் எதிர்க்க வேண்டும். அதன் வெற்றிக்கு அது அவசியமான நிபந்தனை. ''தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசக் கூட்டைத் தவிர வேறு எதுவும் அதன் திட்டவட்டமான வெற்றியை உறுதிப்படுத்த முடியாது''*.

கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான, உணர்வு பூர்வமான முன்னணிப் படை, அதன் அமைப்பாளி, தலைவன் என்ற **தத்துவத்தின்** அடிப்படைகளை மார்க்சும் எங்கெல்சும் வகுத்தளித்தனர். அத்தகைய கட்சிக்குத் தலைமை தாங்குவது தொழிலாளி வர்க்கத்தின் உலகு தழுவிய வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதற்கு மிகவும் அவசியமான நிபந்தனை என்பதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இத்தகைய தலைமை இல்லாமல் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி பெற முடியாது, புதிய சமூகத்தை நிர்மாணிக்கவும் முடியாது. ''தீர்மானமான தினத்தன்று வெற்றிபெறுகின்ற அளவுக்குப் பாட்டாளி வர்க்கம் வலிமையோடிருக்க வேண்டுமென்றால் அது மற்ற எல்லாக் கட்சிகளிலிருந்தும் வேறுவிதமான, அவற்றை எதிர்க்கின்ற தனிக் கட்சியை உணர்வு பூர்வமான, வர்க்கக் கட்சியை அமைத்துக்கொள்ள வேண்டும்; நானும் மார்க்சும் 1847ம் வருடத்திலிருந்தே இதை வலியுறுத்தி வந்திருக்கிறோம்'' என்று எங்கெல்ஸ் 1889இல் எழுதினார்.** புரட்சி வெற்றி பெற வேண்டுமென்றால் தொழிலாளி வர்க்கம் தக்க முறையில் ஸ்தாபனமாகத் திரட்டப்பட்டிருக்க வேண்டும். பாட்டாளி வர்க்கம் தன்னுடைய போராட்டத்தின் இறுதி இலட்சியங்கள் எவை என்பதை உணராமலேயே தானாகவே இயங்கத் தொடங்குகிறது. இந்தப் போராட்ட நிகழ்வினூடே பாட்டாளி வர்க்க ஸ்தாபனத்தின் பல்வேறு வடிவங்கள், உதாரணமாக, அதன் பொருளாதார நலன்களை உயர்த்திப் பிடிக்கின்ற தொழிற் சங்கங்கள் மற்றும் இதரவையும் அமைக்கப்படுகின்றன. தொழிலாளி வர்க்கம் தன்னைப் பின்பற்றுகின்ற சமூகப் பகுதி

---

* Marx-Engels, *Werke*, Bd. 16, Berlin, 1968, S. 322.

** இப்புத்தகத்தில் 296ம் பக்கத்தைப் பார்க்கவும்.—ப-ர்.

யினருடன், விவசாய வர்க்கம், அறிவுஜீவிகள் மற்றும் உழைக்கும் மக்களின் இதர பாட்டாளி வர்க்கம் அல்லாத பகுதியினருடன் முன்னேறிச் செல்வதற்கு உதவி புரிகின்ற புரட்சிகரமான கட்சிதான் வர்க்க ஸ்தாபனத்தின் மிக உயர்ந்த வடிவமாகும். கட்சி தொழிலாளர் இயக்கத்திற்குள் விஞ்ஞான ரீதியான உலகக் கண்ணோட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் தன்னுடைய மாபெரும் வரலாற்றுக் கடமையை உணர்ந்த தலைமையான சமூக சக்தியாக அதை ஆக்குகிறது. வர்க்கப் போராட்டத்துக்கு, புரட்சிக்கு, ஒரு புதிய சமூகத்தை நிர்மாணிப்பதற்குத் தலைமை தாங்குகின்ற தகுதி கட்சிக்கு மட்டுமே உண்டு.

பாட்டாளி வர்க்கக் கட்சியைப் பற்றிய தத்துவத்தின் அடிப்படையான கோட்பாடுகள் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் வகுத்தளிக்கப்பட்டன. அறிக்கையின் ஆசிரியர்கள் ''மற்ற எல்லோரையும் முன்னே உந்தித் தள்ளுகின்ற'' தொழிலாளி வர்க்கத்தின்''மிகவும் வளர்ச்சியடைந்த, உறுதியான'' பகுதியாகக் கட்சியைக் கருதினார்கள்*; அவர்கள் அதன்மூலம் கட்சிக்கும் வர்க்கத்துக்கும் இடையிலான உறவு நிலையை எடுத்துக்காட்டிக் கட்சியின் நோக்கங்களையும் கடமைகளையும் வரையறுத்துக் கூறினார்கள். கட்சி தொழிலாளி வர்க்கத்துடன் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டிருக்க வேண்டும்; மிகவும் வளர்ச்சியடைந்த தத்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும்; இயக்கத்தின் நிலைமைகளையும் வழியையும் அது புரிந்திருக்க வேண்டும்; மற்ற தொழிலாளர்களைக் காட்டிலும் நெடுந்தொலைவைப் பார்க்க வேண்டும்; அதன் வர்க்கத்தின் மிகவும் உணர்வு பூர்வமான, சுறுசுறுப்பான பகுதியாக இருக்க வேண்டும். வெவ்வேறு கட்டங்களில், பாட்டாளி வர்க்கத்தின் உடனடியான இலட்சியங்களுக்கும் நலன்களுக்கும் போராடுகின்ற பொழுது கம்யூனிஸ்டுகள் ''இயக்கத்தின் எதிர்காலத்தையும் உயர்த்திப் பிடிக்கிறார்கள்''. அவர்கள் தொழிலாளி வர்க்கம் முழுவதின் மிகப் பொதுவான நலன்களை, இயக்கம் முழுவதின் நலன்களை எடுத்துரைக்கிறார்கள். கட்சி இல்லாமல் தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தை வென்றெடுப்பதோ அல்லது சமூகத்தை அடிப்படையாக மாற்றியமைப்பதோ முடியாது

* இப்புத்தகத்தில் 81ம் பக்கத்தைப் பார்க்கவும்.—ப-ர்.

என்று அறிக்கை முடிவாகக் கூறியது. இதற்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் இதை முழுமையாக நிரூபித்தன. பாரிஸ் கம்யூன் தோல்வியடைந்ததற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று அந்த இயக்கத்தை வழிநடத்தும் சக்தியாக ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி இல்லை என்பதாகும்.

1847ம் வருடத்திலிருந்து மார்க்சும் எங்கெல்சும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் செயல்திட்ட மற்றும் அமைப்புக் கோட்பாடுகளை விரித்துக்கூறிப் பல புத்தகங்களை எழுதினர்கள். பாட்டாளி வர்க்கத்தின் முதல் சர்வதேச ஸ்தாபனமாகிய கம்யூனிஸ்ட் கழகம்—அது விஞ்ஞான கம்யூனிசத்தைத் தன்னுடைய சித்தாந்தமாகப் பிரகடனம் செய்தது; சர்வதேசத் தொழிலாளர் சங்கம் (முதலாவது அதிலம்)—பாட்டாளி வர்க்க அரசை நிறுவுவதற்கு வரலாற்றில் செய்யப்பட்ட முதல் முயற்சியான பாரிஸ் கம்யூனுக்குத் தொழிலாளர்களைச் சித்தாந்த ரீதியில் தயாரித்தது; பல நாடுகளில் மார்க்சியக் கோட்பாடுகளின் அடிப்படையில் தொழிலாளர்கள் கட்சிகள் நிறுவப்படுதல்; இரண்டாவது அகிலத்தை (1889) நிறுவுவதில் எங்கெல்சின் பங்கு—தொழிலாளி வர்க்கக் கட்சிகளை நிறுவுவதில் மார்க்ஸ், எங்கெல்சும் நிறைவேற்றிய பணியில் முக்கியமான மைல்கற்கள் இவை. **பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டத்தின் (1880) முன்**னுரையை எழுதிய பொழுது மார்க்ஸ் இந்த அனுபவத்தைத் தொகுத்துக் கூறினர்: சோஷலிஸ்ட் புரட்சி "...ஒரு சுயேச்சையான அரசியல் கட்சியாக அமைக்கப்பட்ட உற்பத்தியாளர்களின் வர்க்கம் அதாவது பாட்டாளி வர்க்கத்தினரின் புரட்சிகரமான நடவடிக்கையில் மட்டுமே... நடைபெற முடியும்; அத்தகைய ஸ்தாபனத்தை அமைப்பதற்குப் பாட்டாளி வர்க்கத்துக்குக் கிடைக்கக் கூடிய எல்லாச் சாதனங்களையும் உபயோகிக்க முயற்சிப்பது அவசியம்"*.

முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் வர்க்க ரீதியில் ஒத்துழைப்பு மற்றும் முதலாளித்துவம் சமாதானமான முறையில் சோஷலிசமாக வளர்ச்சியடைதல் ஆகிய சீர்திருத்தவாதக் கருத்துக்களை மார்க்சும் எங்கெல்சும் அம்பலப்படுத்தினர்கள்; வர்க்கப் போராட்டத்தைப்

---

* இப்புத்தகத்தில் 277ம் பக்கத்தைப் பார்க்கவும்.—**ப-ர்.**

பற்றிய புரட்சிகரத் தத்துவத்தை சந்தர்ப்பவாதிகள் திரித்துக் கூறுகிருர்கள், உண்மைக்குப் பதிலாகப் போலியைக் காட்டுகிருர்கள் என்று அவர்கள் இதை விமர்சித்தார்கள். சோஷலிஸ்ட் புரட்சியும் தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதுமே—அது சமாதான முறையில் அல்லது சமாதானம் அல்லாத முறையில், எத்தகைய வடிவத்தை எடுத்தபோதிலும்—வர்க்கங்கள் இல்லாத, மனிதனை மனிதன் சுரண்டுதல் இல்லாத புதிய சமூகத்தை நிர்மாணிக்கக் கூடிய நிலைமைகளைப் படைக்க முடியும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சோஷலிஸ்ட் புரட்சித் தத்துவத்துக்கு மையமாக இருக்கிறது. புரட்சியைப் பாதுகாப்பதற்கு, அதன் சாதனைகளை நிலைநிறுத்துவதற்கு, தூக்கியெறியப்பட்ட வர்க்கங்கள் முதலாளித்துவத்தை மறுபடியும் கொண்டுவருவதற்குச் செய்கின்ற முயற்சிகளை முறியடிப்பதற்குப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியமாக இருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாமல் சுரண்டுகின்ற வர்க்கங்களின் எதிர்ப்பை நசுக்குவதும் ஒரு புதிய சமூகத்தை நிர்மாணிப்பதற்கு அவசியமான சமூக, பொருளாதார நடவடிக்கைகளை நிறைவேற்றுவதும் இயலாது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ருலே புரட்சியின் முக்கியமான பிரச்சினை, அதாவது அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினை தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைக்கும் மக்களுக்கும் சாதகமான முறையில் தீர்க்கப்படுகிறது என்று பொருள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத் தத்துவம் தொழிலாளி வர்க்கத்தின் உலகு தழுவிய வரலாற்றுக் கடமையைப் பற்றிய தத்துவத்தை ஸ்தூலமான முறையில் மேலும் விரித்துரைப்பதைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தை வென்றெடுக்க வேண்டிய அவசியம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிய கருத்து முதல் தடவையாக ஜெர்மன் சித்தாந்தத்தில் முன்வைக்கப்பட்டது: "... ஆதிக்கத்தை நோக்கமாகக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு வர்க்கமும்—பாட்டாளி வர்க்கத்தைப் போல அந்த ஆதிக்கம் சமூகத்தின் பழைய வடிவத்தை மொத்தமாகவும் பொதுவாக ஆதிக்கத்தையும் ஒழிப்பதற்கு இட்டுச் செல்கின்ற பொழுதும் கூட—முதலில் அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்க வேண்டும்"*. கம்யூ

* Marx and Engels, *Collected Works*, Vol. 5, Moscow, 1976, p. 47.

னிஸ்டுக் கட்சி அறிக்கை முழுவதிலும் இக்கருத்து விரவிநிற்கிறது. ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்ற சொற்றொடர் இன்னும் தோன்றவில்லை (மார்க்ஸ் 1850இல் பிரான்சில் வர்க்கப் போராட்டம் என்ற புத்தகத்தில் அதை முதல் தடவையாக உபயோகிக்கிறார்); ஆனால் இந்த அடிப்படையான செயல்திட்டக் கோட்பாடு தெளிவாகவும் உறுதியாகவும் வகுத்தளிக்கப்பட்டது: ''பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயரச் செய்வதுதான், ஜனநாயகத்துக்கான போரில் வெற்றி ஈட்டுவதுதான் தொழிலாளி வர்க்கம் நடத்தும் புரட்சியின் முதலாவது படி.''* தொழிலாளி வர்க்கத்தின் இந்த அரசியல் தலைமையினையே எங்கெல்ஸ் மிகவும் பொருத்தமான முறையில் ''புதிய சமூகத்தின் ஒரே கதவு''** என்று குறிப்பிட்டார்.

சமூக உறவுகளை சோஷலிஸ்ட் கோட்பாடுகளின் அடிப்படையில் மறுபடியும் நிர்மாணிப்பதற்கு தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களிடம் அரசியல் அதிகாரம் இருப்பது அவசியம். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வகிக்க வேண்டிய பாத்திரத்தை விளக்கி மார்க்சும் எங்கெல்சும் பின்வருமாறு எழுதினார்கள்: ''பாட்டாளி வர்க்கம் தனது அரசியல் மேலாண்மையைப் பயன்படுத்தி முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து படிப்படியாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றும்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒருசேர மையப்படுத்தும்; மற்றும் உற்பத்தி சக்திகளது ஒட்டுமொத்தத் தொகையைச் சாத்தியமான முழு வேகத்தில் அதிகமாக்கும்''***.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுதல் என்றால் ''ஜனநாயகத்துக்கான போரில் வெற்றி ஈட்டுவது'' என்று பொருள் என்று மார்க்சும் எங்கெல்சும் எழுதினார்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சோஷலிசத்தின் எதிரிகளுக்கு, வரலாற்றுப் போக்கைத் திருப்பி மக்களால் வெறுக்கப்படுகின்ற முதலாளித்துவத்தைத் திரும்பவும் கொண்டு வர

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975, பக்கம் 77.

** Marx and Engels, *Selected Correspondence*, Moscow, 1975, p. 386.

*** இப்புத்தகத்தில் 93ம் பக்கத்தைப் பார்க்கவும்.—ப-ர்.

விரும்புகின்ற சுரண்டல்காரர்களுக்கு எதிராக வன்முறையை உபயோகிக்கும். ஆனால் மக்களின் மீத அதிகமான பெரும்பான்மையினருக்கு, உழைக்கும் மக்களின் பெருந்திரளினருக்குப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது மிகவும் முழுமையான, விரிவான ஜனநாயகமாக சம்பிரதாயமான ஜனநாயகமாக இல்லாமல் உண்மையான ஜனநாயகமாக இருக்கும்.

மார்க்சும் எங்கெல்சும் முதலாளித்துவ ஜனநாயகத்தையும் நாடாளுமன்றவாதத்தையும் பற்றி மேதாவிலாசத்தோடு விமர்சனம் செய்தார்கள். இது வரையறுக்கப்பட்ட, குறுக்கப்பட்ட, சம்பிரதாயமான ஜனநாயகம். முதலாளித்துவ ஜனநாயகம் என்பது முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரு வடிவம் மட்டுமேயாகும். நாடாளுமன்றவாத நிலைமைகளில் உழைக்கும் மக்களுக்கு ஒரேயொரு உரிமை மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது—முதலாளி வர்க்கக் கட்சிகளில் எந்தக் கட்சி தங்களைக் குறிப்பிட்ட காலத்துக்கு ஆட்சி செய்யும் என்று தேர்ந்தெடுப்பதே அது. தொழிலாளர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகுதான் மக்களின் முக்கியமான பகுதியினர் ஜனநாயக சுதந்திரத்தை அடைகிறார்கள். அப்பொழுது தான் உழைக்கும் மக்களுக்கு, மக்களில் பெரும்பான்மையினருக்கு ஜனநாயகம்—அதுவே ஜனநாயகத்தின் மிக உயர்ந்த ரகம், உண்மையான ஜனநாயகம்.

சோஷலிஸ்ட் புரட்சித் தத்துவத்தை விரித்துக் கூறுவதில் மார்க்ஸ் எழுதிய **லூயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர்** என்ற புத்தகம் முக்கியமான இடத்தை வகிக்கிறது. 1848-49 புரட்சிகள் மற்றும் இதர முதலாளி வர்க்கப் புரட்சிகளை ஆராய்ந்து, அவையனைத்தும் ஆளும் வர்க்கங்களின் இராணுவ-அதிகார வர்க்க மத்தியப்படுத்தப்பட்ட அரசுப் பொறியமைவை நொறுக்குவதற்குத் தவறிவிட்டன, என்பதை மார்க்ஸ் நிறுவினார். புரட்சிகரமான உழைக்கும் பெருந்திரளினரை நசுக்குவதற்கு எதிர்ப்புரட்சி இப்பொறியமைவைப் பயன்படுத்தியது. ''எல்லாப் புரட்சிகளுமே இந்த இயந்திரத்தை உடைத்து நொறுக்குவதற்கு பதிலாக அதை முழுமையாக்கின; தலைமையான ஆதிக்கத்தைப் பெறுவதற்காக மாறிமாறிப் போராடிய கட்சிகள் ஒவ்வொன்றுமே இந்தப் பிரம்மாண்டமான அரசு இயந்திரத்தைக் கைப்பற்றுவதுதான் போரில் வெற்றி பெற்றவர்களுக்குக் கிடைக்

கும் ஆதாயம்''* என்று கருதின. முதலாளிவர்க்கப் புரட்சியிலிருந்து வேறுபட்ட வகையில் முதலாளி வர்க்கத்தின் இந்த அரசு இயந்திரத்தை நொறுக்குவதே பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கடமை. 20ம் நூற்றுண்டின் அனைத்து சோஷலிஸ்ட் புரட்சிகளிலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்ற இந்த முடிவை முதலாளித்துவ அரசை சோஷலிஸ்ட் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு உபயோகிக்க முடியும் என்ற சீர்திருத்தவாதிகளின் மிகவும் தவறுன கருத்துக்களுக்கு எதிராக மார்க்சியம் வைக்கிறது.

1871ம் வருடப் பாரிஸ் கம்யூன் முன்னே வைக்கப்பட்ட ஒரு மாபெரும் காலடியாகும். பிரான்சில் உள்நாட்டுப் போர் என்ற புத்தகத்திலும் மற்றும் இதர புத்தகங்களிலும் கம்யூனின் வரலாறு மற்றும் அனுபவத்தைப் பற்றிய நுணுக்கமான விளக்கமும் அதன் தவறுகளுக்கும் கம்யூன்வாதிகளின் தோல்விக்கும் காரணங்களைப் பற்றிய மிகச் செறிவான, மிக ஆழமாக ஊடுருவுகின்ற விமரிசனப் பகுப்பாய்வை வாசகர் காண முடியும். 72 நாட்கள் மட்டுமே நீடித்த வீரஞ்செறிந்த கம்யூனில் மார்க்ஸ் முற்றிலும் புதிய வரலாற்று ரகத்தைச் சேர்ந்த அரசின் முன்மாதிரியைக் கண்டார். தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் அரசு இயந்திரத்தை நொறுக்குவதோடு மட்டுமல்லாமல், அதனிடத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பெருந்திரளான மக்களின் புரட்சிகரமான படைப்பாற்றலில் பிறந்த பாரிஸ் கம்யூன் எடுத்துக் காட்டியது. கம்யூன் ''தொழிலாளி வர்க்க அரசாங்கம், ...பொருளாதார ரீதியில் உழைப்பின் விடுதலையைச் செயலாக்குவதற்குக் கடைசியாகக் கண்டு பிடிக்கப்பட்ட அரசியல் வடிவம்''** என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினர். அதன் முக்கியமான சமூக நடவடிக்கைகள் இதையே பிரத்யேகமான நோக்கமாகக் கொண்டிருந்தன. ''வர்க்கங்கள் மற்றும் வர்க்க ஆதிக்க முறை சார்ந்திருக்கின்ற பொருளாதார அடிப்படைகளை வேரோடு அகற்று

---

* கா. மார்க்ஸ், லூயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கங்கள் 170—171.

** இப்புத்தகத்தில் 170ம் பக்கத்தைப் பார்க்கவும்.—ப-ர்.

வதற்குக் கம்யூன் ஒரு கருவியாக''* இருந்தது. ஆனால் கம்யூன் மிகக் குறுகிய காலத்துக்கு மட்டுமே நீடித்தபடியால் ''அதன் சொந்த நடவடிக்கைகள், மக்களால் நிறைவேற்றப்பட்ட மக்களுடைய நிர்வாகத்தின் வளர்ச்சிப் போக்கைக் குறிப்பதாக மட்டுமே''** இருந்தன. பாரிஸ் கம்யூன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதல் அரசு, முதல் அனுபவம் என்பதில் அதன் உலகு தழுவிய வரலாற்று முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது.

பாட்டாளி வர்க்கப் புரட்சி, சோஷலிஸ்ட் புரட்சி ஒரு நெடிய சிக்கலான நிகழ்வுப் போக்கு என்று மார்க்ஸ் குறிப்பிட்டார். முதலாளி வர்க்கப் புரட்சியைப் போல, புரட்சிகர வர்க்கத்துக்கு அதிகாரம் மாற்றப்பட்டு, அந்த வர்க்கத்தின் அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கத்தின் தடைகள் அகற்றப்பட்டதும் அது முடிந்து விடுவதில்லை. அதிகாரத்தை வென்றெடுப்பது சமூகத்தைப் புரட்சிகரமான முறையில் மாற்றியமைப்பதற்குத் தொடக்கநிலையாக மட்டுமே இருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவியதும் புரட்சியின் படைப்புக் கடமைகளைப் பற்றிய உணர்வு தொடங்குகிறது. அந்தக் கடமைகளை நிறைவேற்றுகின்ற நிலைமையும் கருவியுமே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம். பிற்காலத்தில் கம்யூனுடைய அனுபவத்தை ஆராய்ந்தபொழுது தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பது வர்க்கப் போராட்டத்தை அகற்றிவிடாது என்று மார்க்ஸ் வலியுறுத்தினார். இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுவதற்கு, ''தன் வெவ்வேறு கட்டங்களை மிகவும் அறிவுபூர்வமான மற்றும் மனிதாபிமான முறையில்''***நிறைவேற்றுவதற்குரிய சாதகமான நிலைமை தொழிலாளி வர்க்கத்துக்கு உருவாக்கப்படுகிறது என்பதைக் காட்டிலும் அதிகமாக ஒன்றுமில்லை.

விஞ்ஞான கம்யூனிசத்தின் செயல்திட்டத்தை வகுத்த **கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம்** என்ற நூலில் இக்கருத்துக்கள் மேலும் வளர்த்துக் கூறப்பட்டன. முதலாளித்

* இப்புத்தகத்தில் 170ம் பக்கத்தைப் பார்க்கவும்.—ப-ர்.

** இப்புத்தகத்தில் 177ம் பக்கத்தைப் பார்க்கவும்.—ப-ர்.

*** இப்புத்தகத்தில் 208ம் பக்கத்தைப் பார்க்கவும்.—ப-ர்.

துவத்துக்கும் கம்யூனிசத்தின் முதல் கட்டமான சோஷலிசத் துக்கும் இடையில் ஒரு தனியான மாறுங் கட்டம் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதது என்ற மிக முக்கியமான கோட் பாட்டை மார்க்ஸ் இந்நூலில் வகுத்துக் கூறினர். ''முத லாளித்துவ சமுதாயத்திற்கும் கம்யூனிச சமுதாயத்திற்கும் இடையில் ஒன்று மற்றென்ருகப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாக அரசியல் இடைக்கால கட்டம் ஒன்றும் இருக்கிறது. இந்த இடைக்கால கட்டத்தில் அரசு **பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரம்** என் பதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது.''*

கம்யூனிஸ்ட் சமூகம் அதன் வளர்ச்சியில் இரண்டு கட் டங்களின் வழியாகச் செல்கிறது என்று மார்க்ஸ் நிறுவினர்: முதலாவது சோஷலிசம், இரண்டாவது, அதன் உயர்ந்த கட்டமாகிய கம்யூனிசம்.

முதல் கட்டமாகிய சோஷலிசத்தில் மிகவும் குறிப்பிடத் தக்க அம்சங்களில் ஒன்று, ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவ ருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய உழைப்புக்கு ஏற்ப'' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அதாவது சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவருடைய உழைப்பின் அளவுக்கும் தன்மைக்கும் ஏற்ப, பொருளாயத செல்வத்தைப் பகிர்ந்தளிப்பதாகும். மனிதனை மனிதன் சுரண்டுதல் இனி இல்லை; ஆனால் சமூகத்திலிருந்து கிடைக்கின்ற பொருளாயத வெகுமதியைப் பொறுத்தமட் டில் மக்களுக்கு இடையில் ஓரளவுக்குச் சமத்துவமற்ற நிலைமை இன்னும் இருக்கிறது. ''கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டத்தில், ...நீடித்த பிரசவ வேதனைக்குப் பிறகு முத லாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் பிறந்து வெளிவந்திருக்கின்ற''** சமூகத்தில் இக்குறைபாடு தவிர்க்க முடியாதது என்று மார்க்ஸ் குறிப்பிட்டார். சோஷலிசம் என்பது குறுகிய வாழ்க்கை உடைய காலகட்டமல்ல, அது ஒரு முழுமையான வரலாற்றுச் சகாப்தம். புதிய அமைப்பின் பொருளாதார, சமூக மற்றும் இதர நன்மைகள் வளர்ச்சி படைந்த சோஷலிஸ்ட் சமூகத்தில் முழு அளவில் வெளிப்

---

* இப்புத்தகத்தில் 255-256ம் பக்கங்களைப்பார்க்க வும்.—ப-ர்.

** இப்புத்தகத்தில் 243ம் பக்கத்தைப் பார்க்கவும்.— ப-ர்.

படுகின்றன. சோஷலிசத்தின் முழுமையான, சர்வாம்ச வளர்ச்சி இன்னும் உயர்வான கட்டத்துக்குப் படிப்படியாக மாறுவதை இயற்கையாக உறுதிப்படுத்துகிறது.

அரசின் எதிர்காலத்தைப் பற்றிக் கூறுகின்ற பொழுது சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிப்பதற்கு ஒரு சோஷலிஸ்ட் அரசு அவசியம் என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். அந்த அரசு தன்னுடைய இலட்சியங்களை நிறைவேற்றிய பிறகு சுரண்டலையும் சுரண்டுபவர்களையும் ஒழித்து கம்யூனிசத்தை நிர்மாணிப்பதை உறுதிப்படுத்திய பிறகு, சோஷலிஸ்ட் அரசு உலர்ந்து உதிரத் தொடங்கும். கம்யூனிசத்தில் மட்டுமே அது முற்றிலும் மறைந்துவிடும்.

இரண்டாவது கட்டம், உயர்வான கம்யூனிச சமூகக் கட்டம் அவசியமான பொருளாதார, சமூக மற்றும் ஆன்மீக முன் நிபந்தனைகளைப் படைக்கின்ற நெடுங்கால நிகழ்வினை அடுத்து, ஒரு சோஷலிஸ்ட் சகாப்தத்தின் விளைவாகத் தொடரும். "... கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டத்தில், தனி நபரை உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்படுத்தி அடிமைத் தளையிடுவதும் அதனுடன் கூட கருத்து உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான எதிர்நிலையும் மறைந்த பின், உழைப்பானது பிழைப்புக்குரிய சாதனமாக மட்டுமின்றி வாழ்க்கையின் முதற்பெரும் தேவையுமாகிய பின், தனிநபருடைய சர்வாம்ச வளர்ச்சியோடுகூட உற்பத்தி சக்திகளும் அதிகரித்துவிட்ட பின், பொதுச் சமுதாயச் செல்வத்தின் அருவிகள் அனைத்தும் மேலும் அபரிமிதமாகப் பெருக்கெடுத்து ஓடுகையில்—அப்பொழுதுதான் முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு முழுமையாகக் கடக்கப்பட்டு, சமுதாயம் தன் பதாகையில் 'ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப!' என்று பொறித்துக் கொள்ளும்"* என்று மார்க்ஸ் எழுதினார்.

சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பது அசாதாரணமான அளவுக்கு சிக்கலான, நெடிய மற்றும் பன்முகத் தன்மை கொண்ட நிகழ்வுப் போக்காகும். அதன் வளர்ச்சியின் உண்மையான பாதையைப் பற்றி விஞ்ஞானக் கம்யூனிசத்

---

* இப்புத்தகத்தில் 244ம் பக்கத்தைப் பார்க்கவும்.— ப-ர்.

தின் மூலவர்களுடைய கருத்துக்கள் அழிவில்லாத தத்துவ மற்றும் செய்முறை முக்கியத்துவத்தைக் கொண்டிருக் கின்றன.

மார்க்சும் எங்கெல்சும் கம்யூனிஸ்டுக் கழகத்துக்கு மத்தியக் கமிட்டியின் வேண்டுகோளில் மற்றும் இதர நூல்களிலும் (மார்க்ஸ் எழுதிய லுயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர், எங்கெல்ஸ் எழுதிய ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் மற்றும் இதரவை) தொடர்ச்சியான புரட்சி என்ற கருத்தை வளர்த்துக் கூறினார்கள். முதலாளித்துவச் சீர்திருத்தக் கட் டம் இன்னும் முடிவடையாத பொழுது சோஷலிஸ்ட் புரட் சிக்கு முன்பாக முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி நடை பெறும் என்று அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். தொழி லாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் எதிர்காலச் சண்டைக் களத்தில் நிலப்பிரபுத்துவ அமைப்புக் களின் இடிபாடுகளை அகற்றிச் சுத்தம் செய்வது அதன் அடிப்படையான பாத்திரமாகும். முதலாளி வர்க்கப் புரட்சி யில் தீவிரமாகப் பங்கெடுக்கின்ற பொழுது தொழிலாளி வர்க்கம் தன்னுடைய சொந்தப் பதாகையின் கீழ் சண்டை போட வேண்டும். அதன் இறுதி இலட்சியங்களை நிலை விலிறுத்தி, முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியுடன் நின்று விடாமல் புரட்சியை மேலும் தொடர்வதற்கு, அதாவது இயன்ற அளவுக்கு அதை வளர்ப்பதற்குப் பாடுபட வேண் டும். முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை ஏமாற்று வதற்கு, மக்களால் வெற்றிகொள்ளப்பட்ட புரட்சியின் பலன் களைத் தானே அனுபவிப்பதற்கு முயற்சிக்கிறது; அந்த முத லாளி வர்க்கம் தருகின்ற அற்பமான சலுகைகளைக் கண்டு பாட்டாளி வர்க்கம் மயங்கிவிடக் கூடாது. புரட்சி பாதிவழி யில் நின்றுவிடக்கூடாது; உடைமை வர்க்கங்கள் அனைத்தும் ஒவ்வொன்றாக, ஆதிக்கம் மற்றும் அரசு அதிகார நிலைகளி லிருந்து அகற்றப்படுகின்றவரை, பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தை வென்றெடுக்கும் வரையிலும் அது தொடர வேண்டும். அனைத்தையும் தழுவிய ஜனநாயகப் போராட் டத்தையும் சோஷலிஸ்ட் புரட்சியையும் ஒற்றைப் புரட்சி கர நிகழ்வுப் போக்கின் வெவ்வேறு கட்டங்கள் என்று ஆராய்ந்த பொழுது மார்க்சும் எங்கெல்சும் வளர்ச்சியின் அவசியமான கட்டங்களைத் தாவிக் குதிக்கக் கூடாது என்று எச்சரிக்கை செய்தார்கள். பாட்டாளி வர்க்கம் முதலாளித்

துவ-ஜனநாயகப் புரட்சியைப் பற்றி அலட்சியமாக இருக்கக் கூடாது, அதிலிருந்து ஒதுங்கி நின்று, புரட்சியின் தலைமையை முதலாளி வர்க்கத்திடம் ஒப்படைத்துவிடக் கூடாது; அதற்கு மாறாக, பாட்டாளி வர்க்கம் அதில் தீவிரமாகப் பங்கெடுக்க வேண்டும், மிகவும் முறைப்படியான ஜனநாயகத்துக்கும் புரட்சியை அதன் முடிவு நிலைவரை கொண்டு போக வேண்டும் என்பதற்கும் உறுதியாகப் போராட வேண்டும் என்று அவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்குக் கற்பித்தார்கள். நிலப் பிரபுத்துவத்தின் எச்சமிச்சங்களை மிகவும் முற்றாக அகற்று வதில், ஜனநாயகக் குடியரசை நிறுவுவதில், ஜனநாயகத்தை மிக அதிகமான அளவுக்கு விஸ்தரிப்பதில் தொழிலாளி வர்க்கம் ஜீவாதாரமான அக்கறை கொண்டிருக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் அதிகாரத்தை நிறுவுவதற்காகப் போராடுவதற்கு மிகவும் சாதகமான நிலைமைகளை இந்த அரசு வடிவம் மட்டுமே தோற்றுவிக்கிறது.

புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகளைப் பற்றிய பிரச்சினை தொடர்ச்சியான புரட்சி என்ற தத்துவத் துடன் நேரடியாக இணைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச் சினைக்கு அடிப்படையான தீர்வு கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை யில் கூறப்பட்டிருந்தது; 1848-49ம் வருடங்களில் நடை பெற்ற புரட்சிகள் மற்றும் பாரிஸ் கம்யூனுடைய அனுபவங் களின் மூலம் அது மேலும் வளர்க்கப்பட்டது. புரட்சிகரப் போராட்டத்தில் தொழிலாளிவர்க்கம் மூலதனத்தால் சுரண் டப்படுகின்ற எல்லா உழைக்கும் மக்களுடைய—எல்லாவற் றுக்கும் மேலாக விவசாய வர்க்கத்தினுடைய—நலன்களை எடுத்துரைக்கிறது. ''எனவே விவசாயிகள் முதலாளித்துவ ஆட்சி அமைப்பை ஒழிப்பதைக் கடமையாகக் கொண்டுள்ள நகரப்புறப் பாட்டாளி வர்க்கத்தைத் தங்களுடைய இயற்கை யான தோழனாக, தலைவனாகக் காண்கின்றனர்''*. என்று மார்க்ஸ் லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர் என்ற நூலில் எழுதினார். விவசாய வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளியாகும் பொழுது ''பாட்டாளி வர்க்கப் புரட்சி அதன் கூட்டு இசையைப் பெறுகிறது, இல்லையென்றால் எல்லா விவசாய நாடுகளிலும் அதன் தனிப்பாட்டு கடைசிப் பாட்

* கா. மார்க்ஸ், லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 179.

டாகவே இருக்கும்''* என்று மார்க்ஸ் இந்நூலின் முதல் பதிப்பில் கூடுதலாக எழுதினர்.

இக்கருதுகோள்களில் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாய வர்க்கத்துக்கும் இடையில் புரட்சிகரமான கூட்டணியின் அவசியத்தைப் பற்றியும் அக்கூட்டணியில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையான பாத்திரத்தைப் பற்றியும் கேந்திரமான அரசியல் முடிவை மார்க்ஸ் உருவாக்கினர்.

பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தமட்டில், மற்ற வர்க்கங்கள் அனைத்தும் ''ஒற்றைப் பிற்போக்குத் திரளைப்'' பிரதிநிதித்துவம் செய்கின்றன என்ற லஸ்ஸாலின் கருதுகோளை மார்க்சும் எங்கெல்சும் தீவிரமாக எதிர்த்தார்கள். இக்கருத்து பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்துக்காக நடத்தும் போராட்டத்தில் நகரங்களிலும் நாட்டுப்புறத்திலும் மக்கள் தொகையின் குட்டிமுதலாளித்துவப் பகுதிகளிலிருந்தும் உழைக்கும் மக்களின் பாட்டாளி வர்க்கம் அல்லாத பகுதியினரிடமிருந்தும் ஒதுங்கி நிற்கும்படி விதித்தது. பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகளைப் பற்றிய பிரச்சினையை விரித்துரைப்பதில் எங்கெல்ஸ் எழுதிய நூல்கள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. **பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்சினை** என்ற புத்தகத்தில் எங்கெல்ஸ் சோஷலிஸ்டுகள் மத்தியில் பரப்பப்பட்டுவந்த சந்தர்ப்பவாதக் கருத்துக்களை விமர்சித்தார்; சோஷலிஸ்ட் புரட்சியின் விவசாயச் செயல்திட்டத்தின் தத்துவக் கோட்பாடுகளை முன்வைத்தார், சோஷலிஸ்ட் விவசாயச் சீரமைப்பின் சாதனங்களையும் வடிவங்களையும் பற்றிப் பல ஆழமான கருதுகோள்களை எடுத்துக் கூறினர்.

மார்க்சும் எங்கெல்சும் செய்த முடிவுகளை வரலாறு முற்றிலும் நிரூபித்தது. ஜனநாயகப் புரட்சி சோஷலிஸ்ட் புரட்சியாக வளர்ச்சியடைவதற்கு மிக முக்கியமான முன்நிபந்தனைகள் ஜனநாயகப் புரட்சியில் தொழிலாளி வர்க்கம் தீவிரமாகப் பங்கெடுத்தல், விவசாய வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் பாட்டாளி வர்க்கம் அல்லாத இதர பகுதிகளுடன் அதன் கூட்டணி, புரட்சியில் அதனுடைய தலைமை ஆகியன என்பதை 20ம் நூற்றுண்டில் நடைபெற்ற புரட்சிகள் எடுத்துக் காட்டியிருக்கின்றன.

---

* அதே நூல், பக்கம் 182.

இப்புரட்சிகர நிகழ்வுப் போக்கின் முக்கியமான உட் பகுதி ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் தேசிய விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் நடத்துகின்ற இயக்கமாகும். தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் சமூக விடுதலைக்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்துக்கும் இடையிலுள்ள மிக நெருக்கமான இடைத்தொடர்பையும் இடைச் சார்பையும் தொழிலாளி வர்க்கம் மிகவும் ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு மார்க்ஸ் எங்கெல்சின் போதனை உதவுகின்றது.

தேசிய ஒடுக்குமுறையை மிகத் தீவிரமாகவும் முரணில்லாமலும் எதிர்ப்பது தொழிலாளி வர்க்கமே. சோஷலிஸ்ட் புரட்சி ஒன்றுதான் தேசிய ஒடுக்குமுறையை முழுமையாக அகற்றும் என்று மார்க்சியம் போதிக்கிறது. ''தனியொருவர் பிறர் ஒருவரைச் சுரண்டுதல் எந்த அளவுக்கு ஒழிக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு ஒரு தேசம் பிறிதொன்றைச் சுரண்டுதலும் ஒழிக்கப்படும். தேசத்தினுள் வர்க்கங்களுக்கிடையிலான பகைநிலை எந்த அளவுக்கு மறைகிறதோ, அதே அளவுக்குத் தேசங்களுக்கிடையிலான பகைமையும் இல்லாதொழியும்''* என்று கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை கூறுகிறது.

தேசிய எல்லைகளுக்குள் புரட்சிகரப் போராட்டத்தின் வெற்றியை உலகப் புரட்சிகர இயக்கத்தின் பொதுப் போக்குடன் இணைத்து மார்க்சும் எங்கெல்சும் ஒவ்வொரு முறையும் எழுதினார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சி சர்வாம்ச முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது, எல்லா மக்களினங்களும் அதில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. ''...உழைப்பின் விடுதலை என்பது ஸ்தலப் பிரச்சினையல்ல, தேசியப் பிரச்சினையுமல்ல; அது நவீன சமூகம் இருக்கின்ற நாடுகள் அனைத்தையும் தழுவிய சமூகப் பிரச்சினை...''**

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கில் இரண்டு நீரோட்டங்கள், மேற்கில் பாட்டாளி வர்க்க இயக்கம் மற்றும் ருஷ்யாவில் விவசாய இயக்கம் மற்றும் அவற்றின் இடை இணைப்பைப் பற்றிய விஞ்ஞான ஆய்வில் வேரூன்றிய கருத்தை மார்க்சும் எங்கெல்சும் அநேகமாக 1870க்களில் உருவாக்

---

* இப்புத்தகத்தில் 90-91ம் பக்கங்களைப்பார்க்கவும்.—ப-ர்.

** கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 5, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1985, பக்கம் 146.

கிஞர்கள். ருஷ்யாவில் புரட்சிகர இயக்கத்தின் போக்கை மார்க்சும் எங்கெல்சும் நுணுக்கமாக கவனித்தார்கள். மேற்கில் பாட்டாளி வர்க்கப் புரட்சியைத் தொடங்குவதற்கு ருஷ்யாவில் வெகுஜனப் புரட்சி சமிக்கையாக இருக்க முடியும், ''அவை ஒன்றுக்கொன்று உதவி செய்ய முடியும்'' என்று வலியுறுத்திஞர்கள். எங்கெல்ஸ் **ருஷ்யாவில் சமூக உறவுகளைப் பற்றி** என்ற தன்னுடைய புத்தகத்தின் பின்னுரையில் 1894ம் வருடத்தில் பின்வருமாறு எழுதிஞர்: ''ருஷ்யப் புரட்சி... மேற்கில் தொழிலாளர் இயக்கத்துக்குப் புதிய உத்வேகத்தைக் கொடுக்கும்; அதன் போராட்டத்துக்குப் புதிய, இன்னும் சிறப்பான நிலைமைகளைத் தோற்றுவித்து, அதன் மூலம் நவீன தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியை முன்னே கொண்டு போகும்.''*

கீழ்த்திசை நாடுகளில் சமூக இயக்கங்களைப் பற்றிய ஆராய்ச்சி வளர்ச்சியில் பின்தங்கியிருக்கும் மக்களினங்களின் வரலாற்று விதிகளைப் பற்றிய முக்கியமான கோட்பாட்டை வகுப்பதைச் சாத்தியமாக்கிற்று. அவர்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சியுடன் இணைந்து செயலாற்றிஞல்தான் சோஷலிசத்தை நோக்கித் தங்களுடைய வளர்ச்சிக் காலத்தை குறைத்துக் கொள்ள முடியும். ''முதலாளித்துவப் பொருளாதார அமைப்பை உள்நாட்டிலும் அது தலைமையாக இருக்கின்ற நாடுகளிலும் வெற்றிகொண்ட பிறகுதான், 'அது எப்படிச் செயலாற்றுகிறது', நவீன தொழில்துறையின் உற்பத்தி சக்திகள் சமூகத்தின் உடைமை என்ற முறையில் சமூகம் முழுமைக்கும் எப்படி இயக்கப்படுகின்றன. என்ற தங்களுடைய உதாரணத்தைப் பின்தங்கிய நாடுகள் பார்க்கும் பொழுது மட்டுமே—அப்பொழுதுதான் பின்தங்கிய நாடுகள் வளர்ச்சியின் இந்தக் குறுகிய நிகழ்வுப் போக்கைத் தொடங்க முடியும்'' என்று எங்கெல்ஸ் எழுதிஞர். ''ஆஞல் அவர்களுடைய வெற்றி உத்தரவாதமானது. இது முதலாளித்துவத்துக்கு முந்திய வளர்ச்சிக் கட்டத்திலிருக்கும் எல்லா நாடுகளுக்கும்''** பொருந்தும் என்று அவர் சுட்டிக்காட்டிஞர்.

இப்புத்தகத்தில் தரப்பட்டுள்ள பகுதிகள் மார்க்சும் எங்

* Marx and Engels, *Selected Works*, Vol. 2, Moscow, 1973, pp. 403—404.

** *Ibid.*, pp. 409—410.

கெல்சும் உருவாக்கிய பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தின் போர்த்திட்டம் மற்றும் செயல்தந்திரத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், புரட்சித் தத்துவத்தின் தனித்தனியான அம்சங்களை—ஆயுதந்தாங்கிய எழுச்சி, புரட்சிக்கும் யுத்தத்துக்கும் இடையில் உள்ள தொடர்பு, இதரவை—பற்றி அவர்களுடைய கருத்துக்களை வாசகருக்கு விளக்கும். புரட்சிகரமான வாய்வீச்சுக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் எதிராக, யதார்த்த நிலைமையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் ஆயுதந்தாங்கிய எழுச்சியைப் பாட்டாளி வர்க்கத்தின் மீது திணிக்க அல்லது புறநிலையான சமூக, பொருளாதார நிலைமைகளைக் கருதாமல் அவசியமான கட்டங்களைத் தாவிக் குதிக்க முயற்சி செய்கின்ற, ''திடீர்ப் புரட்சி செய்ய முயற்சிக்கின்ற'' அராஜகவாதிகள் மற்றும் ''புரட்சியின் ரசவாதிகளுக்கு'' எதிராக அவர்கள் நடத்திய போராட்டத்தையும் வாசகருக்குத் தெரிவிக்கும். வீரசாகசவாதம் மற்றும் தன்னிச்சைவாதம் தவிர, ஒரு புதிய சமூகத்தை நிர்மாணிப்பதுடன் இணைந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியின் படைப்புத்தன்மை கொண்ட இலட்சியங்களையும் கடமைகளையும் நிராகரித்தல் மற்றும் அழிவு வெறி அராஜகவாதத்தின் குணும்சமாகும். புரட்சிகர நிகழ்வுப் போக்கின் பொருளாயத அடிப்படையைப் புரிந்து கொள்ளத் தவறுவதன் மூலம் அராஜகவாதிகள் பெருந்திரளான மக்களைப் புரட்சிகரப் போராட்டத்திலிருந்து திசை திருப்புகிருர்கள், அதன் மூலம் அப்போராட்டம் தவிர்க்க முடியாத விதத்தில் தோல்வி அடையும்படிச் செய்கிருர்கள்.

மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கிய சோஷலிஸ்ட் புரட்சித் தத்துவம் வறட்டுக் கோட்பாடு அல்ல, அது செயலுக்கு வழிகாட்டி. இக்காரணத்துக்காகவே அதைத் தோற்றுவித்தவர்கள் வர்க்கப் போராட்டத்தின் சிக்கலான பிரச்சினைகளுக்கு மிகவும் காரியசாத்தியமான அணுகுமுறையைக் கோரினுர்கள், தத்துவத்தைப் பற்றி வறட்டுக் கோட்பாட்டு ரீதியான அணுகுமுறையைக் கண்டனம் செய்தார்கள். அதிகாரத்தை வென்றெடுப்பதற்குரிய வழிகளைத் தேர்ந்தெடுத்தல், புரட்சிகரப் போராட்டத்தின் சமாதான மற்றும் சமாதானமற்ற வடிவங்களைப் பயன்படுத்துதல், ஒரு வடிவத்திலிருந்து மற்ருெரு வடிவத்துக்கு மாறுதல், போராட்டத்தில் நாடாளுமன்ற முறைகளையும் நாடாளுமன்ற

மல்லாத் முறைகளையும் இணைத்தல், இதரவை அனைத்தும் ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. யதார்த்த அரசியல் நிலைமை, நாட்டிற்குள்ளேயும் சர்வதேச அரங்கத்திலும் வர்க்க சக்திகளின் சமநிலை ஆகியனவற்றை தனிவகையான சமூக மற்றும் அரசியல் கூறுகள், தேசிய மரபுகள் மற்றும் தொழிலாளர் இயக்கம் அடைந்திருக்கின்ற வளர்ச்சிமட்டத்தைக் கருத்தில்கொண்டு பாட்டாளி வர்க்கக் கட்சி நிதானமாக, முழுமையாக மதிப்பீடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினர்.

பாரிஸ் கம்யூனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு 1871இல் அகிலத்தின் லண்டன் மாநாட்டுப் பிரதிநிதிகளிடம் உரை நிகழ்த்திய பொழுது மார்க்ஸ் பின்வருமாறு கூறினர்: ''நாம் அரசாங்கங்களுக்கு அறிவிக்க வேண்டும்: பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராகத் திருப்பப்பட்டிருக்கின்ற ஆயுதந்தாங்கிய சக்தி நீங்கள் என்பது எங்களுக்குத் தெரியும்; எங்கே சாத்தியமோ அங்கே அமைதியான வழியில் உங்களுக்கு எதிராகப் போராடுவோம், அவசியப்பட்டால் ஆயுதங்களைக் கொண்டும் போராடுவோம்''*.

மார்க்சும் எங்கெல்சும் ஏகபோகத்துக்கு முந்திய முதலாளித்துவ சகாப்தத்தில், தொழிலாளி வர்க்கத்தின் வெற்றிக்கு அவசியமான புறநிலையான நிபந்தனைகள் உருவாக்கமடைந்து கொண்டிருந்த பொழுது சோஷலிஸ்ட் புரட்சித் தத்துவத்தை விரித்துக்கூறினர்கள். 1848-49ம் வருடங்களின் புரட்சியும் பாரிஸ் கம்யூனும் முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழிக்கின்ற அளவுக்கு ஐரோப்பாவில் பொருளாதார வளர்ச்சி இன்னும் முதிர்ச்சி அடையவில்லை என்று எடுத்துக் காட்டின என்று எங்கெல்ஸ் 1895இல் சுட்டிக் காட்டினர். 19ம் நூற்றுண்டில் புரட்சிகரமான வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கம் கூட இன்னும் அதிகமான பலத்தைப் பெற வேண்டியிருந்தது. லெனின் விளக்கிக் காட்டியதைப் போல ஏகாதிபத்திய சகாப்தத்தின் தொடக்கத்தில் தான் வெற்றிகரமான சோஷலிஸ்ட் புரட்சிக்கு அவசியமான நிலைமைகள் முதிர்ச்சியடைந்தன.

இருபதாம் நூற்றுண்டின் புதிய வரலாற்று நிலைமைகளில் உழைக்கும் மக்களின் முன்னணிப் பகுதியும் மனிதகுலத்தின்

---

* Marx and Engels, *Collected Works*, Vol. 7, Moscow, 1976, p. 542.

ஒடுக்கப்பட்ட பெரும்பான்மையினரும் சுரண்டல், தேசிய ஒடுக்குமுறை வன்முறை, யுத்தங்கள் மற்றும் முதலாளித்து வத்தினுல் வளர்க்கப்பட்டுப் பரப்பப்படுகின்ற பேரழிவு களுக்கும் எதிராக மார்க்ஸ், எங்கெல்சினுடைய தத்துவ பாரம்பரியத்தை உபயோகித்தனர். மார்க்சியத்தின் முழு மையான வெற்றியும் மனித குலத்தின் வளர்ச்சியில் அதன் செல்வாக்கின் தொடர்ச்சியான வளர்ச்சியும் விளதீமிர் லெனி னுடைய நடவடிக்கை மற்றும் கருத்துக்களுடன், லெனினியத் துடன் பிணைந்திருக்கின்றன. 20ம் நூற்றுண்டின் வரலாற்று நிலைமைகளில் மார்க்சியத்தின் நேரடியான தொடர்ச்சி யாகவும் வளர்ச்சியாகவும் லெனினியம் இருக்கிறது. அது மார்க்சியத்தில் ஒரு புதிய, உயர்ந்த கட்டமாகும்.

மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கிய புரட்சித் தத்து வத்தை லெனின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் முடிவுகளின் மூலம் எல்லா அம்சங்களிலும் வளர்த்துச் செழுமைப்படுத் தினர்; அதை ஒரு புதிய, உயர்ந்த மட்டத்துக்கு உயர்த் தினர். முதலாளித்துவ வளர்ச்சியில் மிகவும் சமீபமான போக்குகளை மிகவும் ஆழமாகப் பொதுமைப்படுத்தியதன் அடிப்படையில் லெனின் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய தத்து வத்தைப் படைத்தார். ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகள் மற்றும் விதிகளைப் பற்றி அவருடைய பகுப்பாய்வு மார்க்ஸ் எழுதிய மூலதனத்துக்கு மேதாவிலாசம் நிறைந்த தொடர்ச்சி யாகவும் வளர்ச்சியாகவும் இருக்கிறது. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் கடைசிக் கட்டம், அதை ஒழிப்பதற் குரிய நிலைமைகள் அப்பொழுது முதிர்ச்சியடைந்திருக்கின்றன என்று லெனின் எடுத்துக் காட்டினர். ஏகாதிபத்தியம் சோஷ லிஸ்ட் புரட்சியின் முற்பொழுதாக, முதலாளித்துவ சமூகத் தில் முன்னெப்பொழுதும் ஏற்பட்டிராத சமூகக் கொந்த ளிப்புக்கள் மற்றும் பொருளாதார, அரசியல் நெருக்கடி களின் சகாப்தமாக இருக்கிறது. ஏகாதிபத்திய காலகட்டத் தில் முதலாளித்துவப் பொருளாதாரமும் கொள்கையும் சமமில்லாத,விட்டுவிட்டு நடைபெறுகின்ற முறையில் வளர்ச்சி யடைகின்றன என்ற கண்டுபிடிப்பு புதிய, மிகவும் முக்கிய மான கருதுகோள்களை நிலைநிறுத்துவதற்கு லெனினுக்கு உதவின. வெவ்வேறு நாடுகள் வெவ்வேறு காலங்களில் சோஷலிசத்தை அடையும், இந்த நிகழ்வுப் போக்கு மிக அதிகமான வளர்ச்சியடைந்த நாட்டில் தொடங்க வேண்டிய

தில்லை, சோஷலிசத்தின் வெற்றி ஆரம்பத்தில் தனியொரு நாட்டில் சாத்தியம் என்பவை இக்கருதுகோள்களாகும். இம்முடிவுகள் சோஷலிஸ்ட் புரட்சியின் பாதை மற்றும் அதன் வெற்றியின் நிபந்தனைகளைப் பற்றி முந்திய கருதுகோள்களை மாற்றியதோடு புரட்சிகரமான தொழிலாளர் இயக்கத்துக்குப் புதிய வாய்ப்புக்களைத் தோற்றுவித்தன.

1917 அக்டோபரில் ருஷ்யாவில் வெற்றியடைந்த புரட்சி உலகத்தின் முதல் சோஷலிஸ்ட் புரட்சியாகும். லெனின் தலைமையில் அது வெற்றி பெற்றது. மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி உலக வரலாற்றில் ஒரு புதிய யுகத்தை, முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸ்ட் சமூக-பொருளாதார உருவாக்கத்துக்கு மாற்றத்தைத் தொடங்கியது. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் தென் அமெரிக்காவிலும் பல நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றி சோஷலிசத்தை ஒரு உலக அமைப்பாக மாற்றியது, உலக வளர்ச்சியில் அதைத் தீர்மானமான காரணியாக மாற்றியது. சோஷலிசத்தின் முதல் வெற்றிக்குப் பிறகு வரலாற்று ரீதியான வளர்ச்சியின் பாதை மற்றும் எதிர்காலத்தைப் பற்றிய ஆழமான நுண்ணறிவுடன் லெனின் இரண்டு சமூக அமைப்புகளுக்கு இடையிலும் உலக ரீதியான போராட்டம் நடைபெறுவது தவிர்க்க முடியாதது என்று சுட்டிக் காட்டினார்; சோஷலிஸ்ட் வெளிநாட்டுக் கொள்கை, வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கு இடையில் சமாதான சகவாழ்க்கைக் கோட்பாடுகளை முரணில்லாமல் கடைப்பிடித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார்.

இருபதாம் நூற்றாண்டு சோஷலிஸ்ட் புரட்சியின் சகாப்தமாகும். இன்றைய பிரதான புரட்சிகர சக்தியான உலக சோஷலிஸ்ட் சமூகத்தின் பொருளாதார, அரசியல், தார்மிக வளம் தொடர்ச்சியாக வளர்ச்சியடைதல், தேசிய விடுதலை இயக்கம் ஈட்டிய வெற்றிகள்—உண்மையைக் கூறுவதென்றால் 1917 அக்டோபருக்குப் பிறகு மனித குலத்தின் மொத்த வளர்ச்சிப் போக்குமே மார்க்சிய-லெனினியத்தின் முடிவுகள் மிகச் சரியானவை என்பதை சந்தேகமில்லாதபடி நிரூபிக்கின்றன.

வர்க்கப் போராட்டம் ''நசித்துவிடும்'' அல்லது முதலாளித்துவ உலகில் அதை ''அகற்றிவிட'' முடியும் என்று மூலதனத்தை ஆதரிப்பவர்கள் நம்பினார்கள்; ஆனால்

வாழ்க்கை, இன்றைய யதார்த்தங்கள் அந்த நம்பிக்கைகளை நிராகரித்து விட்டன. மார்க்சியத்தின் எதிரிகளின் மிகச் சமீபத்திய கூற்றுக்கள்—முதலாளித்துவம் நவீனமடைதல் மற்றும் மாற்றமடைதல்—அவற்றின் எண்ணற்ற முற்காலக் கூற்றுக்களைப் போலவே உதவாக்கரையாக நிரூபிக்கப்பட்டு விட்டன. மார்க்சும் எங்கெல்சும் தவிர்க்க முடியாதது என்று விளக்கிக் கூறிய சோஷலிஸ்ட் புரட்சி இன்று ''மிகையானதாகி'' விடவில்லை; நம் காலத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் புரட்சி அதை மேன்மேலும் அவசியமாக்குகிறது.

புதிய தலைமுறைகளும் சமூகப் பகுதியினரும், புதிய கட்சிகளும் ஸ்தாபனங்களும் புரட்சிகர நிகழ்வுப் போக்கில் இணைந்து கொண்டிருக்கின்றன.

முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸ்ட் சமூக-பொருளாதார உருவாக்கத்துக்கு மாறுதல் நம்காலத்திய வரலாற்று நிகழ்வுப் போக்கின் பிரதான போக்காக இருக்கிறது.

பி. எங்கெல்ஸ்

# எல்பெர்பெல்ட் சொற்பொழிவுகள்

## 1845 பிப்ரவரி 15ந் தேதியன்று நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து

...இன்றைக்கிருக்கின்ற சமூக உறவுகளின் தவிர்க்க முடியாத விளைவு—எல்லா சந்தர்ப்பங்களின் கீழும் எல்லா இனங்களிலும்—ஒரு சமூகப் புரட்சியாக இருக்கும். கொடுக்கப்பட்ட கோட்பாடுகளிலிருந்து ஒரு புதிய கணிதக் கருதுகோளை நாம் எவ்வளவு நிச்சயமாகப் பெற முடியுமோ அதைப் போல இன்றைக்கிருக்கின்ற பொருளாதார உறவுகளிலிருந்தும் அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடுகளிலிருந்தும் ஒரு சமூகப் புரட்சி ஏற்படப்போவதை நிச்சயமாகப் பெற முடியும். எனினும் நாம் இந்தக் கொந்தளிப்பை இன்னும் சிறிதளவு நெருங்கிச் சென்று பார்ப்போம். அதன் வடிவம் எப்படி இருக்கும், அதன் விளைவுகள் என்னவாக இருக்கும், இதற்கு முன்னர் ஏற்பட்ட வன்முறையான கொந்தளிப்புகளிலிருந்து அது எவ்விதங்களில் வேறுபட்டிருக்கும்? கனவான்களே, ஒரு சமூகப் புரட்சி இதற்கு முன்னர் ஏற்பட்ட அரசியல் புரட்சிகளிலிருந்து முற்றிலும் வேறுவிதமானதாக இருக்கும். இவற்றைப் போல அது ஏகபோகத்தின் உடைமைக்கு எதிராகத் திருப்பப்பட்டதல்ல, உடைமையின் ஏகபோகத்துக்கு எதிரானதாக இருக்கும். கனவான்களே, சமூகப் புரட்சி என்பது **பணக்காரர்களை எதிர்த்து ஏழை மக்களின் பகிரங்கமான யுத்தமாகும்.** இதற்கு முந்திய வரலாற்றுச் சண்டைகளில் அடித்தளத்தில் இருண்டும் மறைவாகவும் இருந்த அனைத்துப் பிரதான விசைகளும் காரணங்களும் இத்தகைய போராட்டத்தில் பகிரங்கமாகவும் மறைவுகள் இல்லாமலும் இயங்குகின்றன. அத்தகைய போராட்டம் அதற்கு முன்பு நடைபெற்ற அனைத்தையும் காட்டிலும் அதிகமான அளவுக்கு மூர்க்கத்தனமானதாகவும் இரத்தம் பெருக்கெடுப்பதாகவும் இருக்கும் என்று பயமுறுத்துவதும் உண்

மையே. இந்தப் போராட்டத்தின் விளைவு இரண்டு விதமாக இருக்கக் கூடும். போராடுகின்ற தரப்பு சாரத்தை அல்ல, தோற்றத்தை மட்டுமே பொருளை அல்ல, வடிவத்தை மட்டுமே தாக்குகிறது; அல்லது அது அந்தப் பொருளைத் தாக்குகிறது, தீமையை வேரோடு பிடுங்குகிறது. முதல் இனத்தில் தனி உடைமை தொடர்ந்து நிலவுவதற்கு அனுமதிக்கப்படும், அது வேறுவிதமான முறையில் வினியோகிக்கப்படுவது மட்டும் நடைபெறும். அப்பொழுது இன்றைய நிலைமையை ஏற்படுத்தியுள்ள காரணங்கள் நீடித்தியங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றன. இவை சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ இதே நிலைமையை ஏற்படுத்தி மற்ெருரு புரட்சியைக் கொண்டுவரும். ஆனுல் இது சாத்தியமா, கனவான்களே? தன்னுடைய நோக்கத்தை உண்மையிலேயே நிறைவேற்ருத ஒரு புரட்சி இருக்கிறதா? முதலாம் சார்லசின் மத, அரசியல் ஒடுக்குமுறையினுல் வெடித்த ஆங்கிலப் புரட்சி தன் மத, அரசியல் கோட்பாடுகள் இரண்டையும் நிறைவேற்றிக் கொண்டது. பிரெஞ்சு முதலாளி வர்க்கம் பிரபுக் குலத்தையும் பழைய முடியாட்சியையும் எதிர்த்து நடத்திய போராட்டத்தில் தன்னுடைய நோக்கங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொண்டது, தன்னைக் கலகம் செய்யுமாறு உந்தித் தள்ளிய எல்லாக் கொடுமைகளுக்கும் முடிவு கட்டியது.[1] வறுமையும் அதற்குரிய காரணங்களும் ஒழிக்கப்படுவதற்கு முன்பு ஏழைகளின் புரட்சிகர எழுச்சி முடிந்துவிடுமா? கனவான்களே, அது சாத்தியமல்ல, அப்படிக் கற்பனை செய்வது வரலாற்று அனுபவம் அனைத்தையும் மீறுவதாகும். மேலும் குறிப்பாக, இங்கிலாந்திலும் பிரான்சிலும் தொழிலாளர்களுடைய கல்வி மட்டம் அது சாத்தியம் என்று நாம் நினைக்க முடியாதபடிச் செய்கிறது. இப்பொழுது அடுத்த சாத்தியம் மட்டுமே இருக்கிறது; அதாவது, எதிர்காலத்தில் நடைபெறப் போகின்ற சமூகப் புரட்சி இல்லாமை மற்றும் வறுமை, அறியாமை மற்றும் குற்றச்செயல்களின் உண்மையான காரணங்களைத் தேடிப் போராடும், ஆகவே அது உண்மையான சமூக சீர்திருத்தத்தை நிறைவேற்றும். கம்யூனிசக் கோட்பாடுகளைப் பிரகடனம் செய்வதன் மூலமாக மட்டுமே இது நடைபெற முடியும். தொழிலாளி கூடச் சிந்தனை செய்கின்ற நாடுகளில் அவனைத் தூண்டுகின்ற கருத்துக்களைப் பற்றிச் சிறிது சிந்தனை செய்யுங்கள், கனவான்களே! பிரான்சை,

தொழிலாளர் இயக்கத்தின் வெவ்வேறு பிரிவுகளைப் பாருங்கள். அவை அனைத்தும் கம்யூனிஸ்ட் தன்மை கொண்டிருக்கவில்லையா? இங்கிலாந்தில் தொழிலாளர்களுடைய நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குச் சொல்லப்படுகின்ற பிரேரணைகளைப் பற்றிச் சிந்தியுங்கள். அவை அனைத்துமே பொதுவான உடைமை என்ற கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லையா? சமூக சீர்திருத்தத்தைப் பற்றிய பல்வேறு முறைகளை ஆராய்ச்சி செய்யுங்கள். கம்யூனிஸ்ட் தன்மை இல்லாத முறைகளைக் கண்டுபிடிக்க முடியுமா? இன்றும் ஏதேனும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்ற முறைகள் அனைத்திலும் கம்யூனிஸ்ட் தன்மை இல்லாதது ஃபூரியேயினுடைய அமைப்பு ஒன்று மட்டுமே. அவர் மனித நடவடிக்கையின் உற்பத்திப் பொருள்களின் வினியோகத்தைக் காட்டிலும் மனித நடவடிக்கைக்குச் சமூக அமைப்பை ஏற்படுத்துவதில் அதிகமான கவனத்தைச் செலுத்தினர். எதிர்கால சமூகப் புரட்சி கம்யூனிஸ்ட் கோட்பாடுகளை அமுல் நடத்துவதில் நிறைவுபெறும், இதைத் தவிர வேறு எந்த சாத்தியத்துக்கும் இடமில்லை என்ற முடிவுக்கு வருவதை மேற்கூறிய விவரங்கள் நியாயப்படுத்துகின்றன.

கனவான்களே! இந்த முடிவுகள் சரியானவை என்றால், சமூகப் புரட்சியும் நடைமுறைக் கம்யூனிசமும் நம்மிடம் இன்றுள்ள நிலைமைகளின் அவசியமான விளைவு என்றால் எல்லாவற்றுக்கும் மேலாக சமூக நிலைமைகள் வன்முறையில், இரத்தப் பெருக்கில் தூக்கியெறியப்படுவதைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பற்றி நாம் அக்கறையெடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு ஒரே வழி மட்டுமே உண்டு. கம்யூனிசத்தை சமாதான பூர்வமான முறையில் கொண்டு வருவது அல்லது குறைந்தபட்சம் அதற்குத் தயாரிப்புச் செய்வது அந்த வழியாகும். சமூகப் பிரச்சினை இரத்த வெள்ளத்தில் தீர்க்கப்படுவதை நாம் விரும்பவில்லை என்றால் நம் பாட்டாளி வர்க்கத்தினருடைய கல்விக்கும் அவர்களுடைய நிலைமைக்கும் இடையில் அன்றாடம் வளர்ந்து கொண்டிருக்கின்ற முரண்பாடு—முரட்டு வன்முறை, மனமுறிவு மற்றும் பழிவாங்கும் வெறியுடன் இந்த முரண்பாடு தீர்க்கப்படும் என்பதே இதன் அர்த்தம் என்று மனித இயல்பைப் பற்றி நம்முடைய அனைத்து அனுபவமும் கூறுகிறது—வெடிப்பதை நாம் அனுமதிக்க விரும்பவில்லை என்றால், கனவான்களே,

நாம் சமூகப் பிரச்சினையைப் பற்றி மிகத் தீவிரமாக, தப் பெண்ணங்கள் இன்றிச் சிந்திக்க வேண்டும்; நவீன அடிமை வகுப்பினரின் (helots)[2] நிலைமையை மனிதப் பண்புடைய தாக்குவதில் நம் பங்கினைச் செலுத்துவதை நம்முடைய வேலை யாக எடுத்துக்கொள்ள வேண்டும். இது வரையிலும் இழிந்த நிலை வர்க்கங்களை மேலே உயர்த்துவது உங்களுடைய சொந்த நிலைமையை இழிவுபடுத்திக் கொள்ளாமல் முடியாது என்று உங்களில் சிலர் ஒருவேளை நினைத்தால் ஒவ்வொருவரும் தன் னுடைய மனித இயல்பை சுதந்திரமாக வளர்த்துத் தனக்குப் பக்கத்தில் வசிப்பவர்களுடன் மனித உறவில் வசிக்கக் கூடிய, தன்னுடைய நிலைமை பலாத்காரமாக நொறுக்கப்படும் என்று அஞ்ச வேண்டிய அவசியமில்லாத அத்தகைய நிலை மையை அனைத்து மக்களுக்கும் படைப்பது இங்கே சம்பந்தப் பட்டிருக்கிறது என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு சில தனி நபர்கள் தியாகம் செய்வது வாழ்க் கையை மெய்யாகவே மனித ரீதியில் அனுபவிப்பதை அல்ல, நம்முடைய மோசமான நிலைமைகளால் உற்பத்தி செய்யப் படுகின்ற ஆனந்தத்தின் வெளித்தோற்றத்தை — வெறும் தோற்ற அளவில் இருக்கின்ற இந்த வசதிகளை இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுடைய அறிவு மற்றும் இதயத்துடன் முரண்படுகின்ற ஏதோ ஒன்றை—மட்டுமே தியாகம் செய்கிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். உண்மையான மனித வாழ்க்கையை—அதன் அவசியங்கள் மற்றும் தேவைகள் அனைத்துடனும்—அழிப்பது நம்முடைய விருப்பமல்ல, அதற்கு மாறாக அதை மெய் யாகவே ஏற்படுத்துவது நம்முடைய விருப்பம். இவற்றைக் கூட விட்டுவிடுங்கள்; நம்முடைய இன்றைய நிலைமையின் விளைவுகள் எப்படி இருக்கப் போகின்றன, எத்தகைய திறுக்கு மறுக்கான முரண்பாடுகளுக்குள், ஒழுங்கு மீறல்களுக்குள் அது நம்மை இட்டுச் செல்கிறது என்பதை நீங்கள் ஒரு கண நேரமாவது தீவிரமாகச் சிந்தித்தால்—அப்பொழுது கனவான்களே, சமூகப் பிரச்சினையைத் தீவிரமாகவும் முற்றாகவும் ஆராய்வது அவசியம் என்று நீங்கள் நிச்சயமாக முடிவு செய்வீர்கள். இதைச் செய்யுமாறு நான் உங்களைத் தூண்டமுடிந்தால் என்னுடைய சொற்பொழிவின் நோக்கம் நிறைவேறியதாகக் கருதுவேன்.

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்

# ஃபாயர்பாஹ். பொருள்முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் உள்ள ஒரு வித்தியாசம்

*(''ஜெர்மன் சித்தாந்தம்'' என்ற நூலின் முதல் அத்தியாயத்திலிருந்து)*

...இறுதியாக, வரலாற்றைப் பற்றி நாம் எடுத்துரைத்த கருதுகோளிலிருந்து பின்வரும் முடிவுகளைப் பெறுகிறோம்: 1) உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில், உற்பத்திச் சக்திகளும் இடையுறவுச் சாதனங்களும் ஏற்பட்டு அவை அன்றுள்ள உறவுகளின் கீழ் சிக்கலை மட்டுமே ஏற்படுத்துகின்ற இனியும் உற்பத்தி சக்திகளாக இல்லாமல் அழிவுச் சக்திகளாக (இயந்திரம் மற்றும் பணம்) இருக்கின்ற கட்டம் ஏற்படுகிறது; மற்றும் இதனுடன் தொடர்புடைய முறையில், சமூகத்தின் வசதிகளை அனுபவிக்காமல் அதன் சுமைகள் அனைத்தையும் தாங்கிக் கொள்கின்ற வர்க்கம், சமூகத்திலிருந்து அகற்றப்பட்டு மற்ற எல்லா வர்க்கங்களுடனும் மிகவும் கூர்மையான முரண்பாட்டு நிலையில் பலவந்தமாக வைக்கப்படுகின்ற வர்க்கம் உருவாக்கப்படுகிறது; சமூகத்தின் எல்லா உறுப்பினர்களிலும் இந்த வர்க்கம் பெரும்பான்மையானதாக இருக்கிறது, அடிப்படையான புரட்சி அவசியம் என்ற உணர்வு, கம்யூனிஸ்ட் உணர்வு இந்த வர்க்கத்திடமிருந்து பிறக்கிறது. இந்த வர்க்கத்தின் நிலைமையைப் பற்றிச் சிந்திப்பதன் மூலமாக மற்ற வர்க்கங்களின் மத்தியிலும் இந்த உணர்வு தோன்றக் கூடும் என்பது மெய்யே. 2) திட்டவட்டமான உற்பத்திச் சக்திகளைச் செயல்படுத்தக் கூடிய நிலைமைகள் சமூகத்தில் ஒரு திட்டவட்டமான வர்க்கத்தின் ஆட்சியின் நிலைமைகளே—அந்த வர்க்கத்தின் உடைமையிலிருந்து பெறப்படுகின்ற அதன் சமூக சக்தி ஒவ்வொரு இனத்திலும் அரசு என்ற வடிவத்தில் அதன் **செய்முறை-சிந்தனுவாத** வடிவத்தைக் கொண்டிருக்கிறது. ஆகவே ஒவ்

வொரு புரட்சிகரமான போராட்டமும் அப்பொழுது ஆட்சி செய்து கொண்டிருக்கும் வர்க்கத்துக்கு எதிராக நடைபெறு கிறது. 3) இதற்கு முந்திய புரட்சிகள் அனைத்திலும் செயல் முறை எப்பொழுதும் மாருதபடி இருந்தது. இந்த நடவடிக் கையை வேறு விதத்தில் வினியோகிப்பதை, உழைப்பை மற்ற நபர்களுக்கும் தருகின்ற புதிய வினியோகத்தைப் பற்றிய பிரச்சினையாகவே அது இருந்தது. ஆனல் இதுவரை இருந்து வந்திருக்கின்ற செயல் முறைக்கு எதிரானது கம் யூனிஸ்ட் புரட்சி, அது உழைப்பை ஒழிக்கிறது[3], அனைத்து வர்க்கங்களின் ஆட்சியையும் அந்த வர்க்கங்களுடன் சேர்த்து ஒழிக்கிறது, ஏனென்றல் சமூகத்தில் ஒரு வர்க்கமாக இனியும் கருதப்படாத, வர்க்கமாக அங்கீகரிக்கப்படாத, இன்றைய சமூகத்தின் கீழ் எல்லா வர்க்கங்களும், தேசிய இனங்களும், இதரவையும் கரைந்துள்ள நிலைமையின் வெளியீடாக இருக் கின்ற வர்க்கத்தினல் அது நிறைவேற்றப்படுகிறது. 4) இந்தக் கம்யூனிஸ்ட் உணர்வைப் பெருவீத அளவில் உற்பத்தி செய் தல், அந்த இலட்சியத்தின் வெற்றி—ஆகிய இரண்டுக்குமே மனிதர்களைப் பெருந்திரளான அளவில் மாற்றுவது அவ சியம், இத்தகைய மாற்றம் ஒரு செய்முறையான இயக்கத் தில், புரட்சியில் மட்டுமே நடைபெற முடியும். ஆளும் வர்க் கத்தை வேறு எவ்விதத்திலும் தூக்கியெறிய முடியாது என் பதற்காக மட்டுமல்லாமல், அதைத் தூக்கியெறிகின்ற வர்க் கம் பல யுகங்களாகத் தன்னிடம் அப்பிக் கொண்டுள்ள அழுக்கு முழுவதையும் அகற்றுவதில் வெற்றியடைந்து ஒரு புதிய சமூகத்தை நிறுவுவதற்குத் தகுதி பெறுவதற்கு ஒரு புரட்சியில் மட்டுமே முடியும் என்பதனல் புரட்சி அவசிய மாக இருக்கிறது.

1845-46ம் வருடங்களின் போது எழுதப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழி யில் எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

# பிரஸ்ஸெல்சிலிருந்த கம்யூனிஸ்ட் தொடர்புக் கமிட்டிக்கு எழுதிய கடிதத்திலிருந்து[4]

**பாரிஸ், அக்டோபர் 23, 1846**

## கமிட்டிக்கு மூன்றாவது கடிதம்

*...ஆகவே நான் கம்யூனிஸ்டுகளின் குறிக்கோள்களைப் பின்வருமாறு வரையறுத்தேன்: 1) முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாத்தல்; 2) தனியுடைமையை ஒழித்து அதனிடத்தில் பொருள்களின் பொதுவான உடைமையை ஏற்படுத்துவதன் மூலம் இதைச் செய்தல்; 3) இக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு பலாத்காரமான ஜனநாயகப் புரட்சியைத் தவிர வேறு எந்த வழியினையும் அங்கீகரிக்காதிருத்தல்.*

*மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது*

கா. மார்க்ஸ்

# மெய்யறிவின் வறுமை

## என்ற நூலிலிருந்து

திரு. புருதோன் எழுதிய
''வறுமையின் மெய்யறிவு'' எனும்
நூலுக்குப் பதில்

## *இரண்டாவது அத்தியாயத்திலிருந்து*

*... வர்க்கங்களின் பகைமை மீது நிறுவப்பட்ட ஒவ்வொரு சமுதாயத்துக்கும் ஒரு ஒடுக்கப்பட்ட வர்க்கம் இருப்பது உயிர்நிலையான நிபந்தனையாகும். எனவே ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் விடுதலை என்பது அவசியமான முறையிலே ஒரு புதிய சமுதாயத்தைப் படைப்பதை உட்கிடையாகக் கொண்டுள்ளது. ஒடுக்கப்பட்ட வர்க்கம் தன்னைத் தானே விடுதலை செய்துகொள்வதற்கு அவசியத் தேவை, ஏற்கெனவே பெறப்பட்டிருக்கும் உற்பத்திச் சக்திகளும் இருந்து வரும் சமுதாய உறவுகளும் மேலும் அக்கம் பக்கமாக இருந்துவர முடியாதவையாக ஆகவேண்டும். உற்பத்திக் கருவிகளனைத்திலுமே ஆகமிகப் பெரிதான உற்பத்திச் சக்தி புரட்சிகரமான தொழிலாளி வர்க்கமேயாகும். வர்க்கம் என்கிற வகையில் புரட்சிகரமான நபர்கள் அனைவரையும் ஒழுங்குபடுத்துதல் பழைய சமுதாயத்தினுள்ளே வளர்க்கப் படக் கூடிய உற்பத்திச் சக்திகள் அனைத்தும் இருப்பதை அனுமானிக்கிறது.*

*இதற்குப் பொருள் பழைய சமுதாயத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு ஒரு புதிய வர்க்கத்தின் ஆதிக்கம் ஏற்பட்டு அது ஒரு புதிய அரசியல் அதிகாரத்திலே போய் முடியும் என்பதா? இல்லை.*

*எல்லாப் படிப்பிரிவுகளையும்* சிறப்புரிமைக் குழுக்களை*

---

** சமூகப்பிரிவுகள் என்பது இங்கே, வரலாற்றுப் பொருளில், நிலப்பிரபுத்துவ சமுதாயத்தைச் சேர்ந்த சமூகப் பிரிவுகளை, திட்டவட்டமான வரம்புக்குட்பட்ட சிறப்புரிமைகள் கொண்டிருந்த சமூகப்பிரிவுகளைக் குறிக்கிறது. முதலாளித்துவப் புரட்சி சமூகப்பிரிவுகளையும் அவற்றின் சிறப்*

யும் ஒழித்துவிடுவது மூன்றாவது படிப்பிரிவின், முதலாளி வர்க்கத்தின் விடுதலைக்கு நிபந்தனையாக இருந்தது போலவே, எல்லா வர்க்கங்களையும் ஒழித்துவிடுவது தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கு நிபந்தனையாகும்.

தொழிலாளி வர்க்கம் தனது வளர்ச்சிப் போக்கிலே முதலாளித்துவச் சமுதாயத்துக்குப் பதிலாக எல்லா வர்க்கங்களையும் அவற்றின் பகைமையையும் விலக்கிவிடும் ஒரு சங்கத்தை அமைக்கும், முழு அர்த்தத்தில் அரசியல் அதிகாரம் இனிமேல் இராது, ஏனெனில் அரசியல் அதிகாரம் என்பது முதலாளித்துவச் சமுதாயத்திலுள்ள பகைமையின் அதிகார பூர்வமான வெளிப்பாடாகும்.

இதற்கிடையே தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயுள்ள பகைமை வர்க்கத்துக்கு எதிராக வர்க்கம் நடத்தும் ஒரு போராட்டமாகும், அதன் உச்சநிலை வெளிப்பாடு ஒரு முழுமையான புரட்சியே. உண்மையிலே பார்த்தால், வர்க்கங்களின் எதிர்ப்பின் மீது நிறுவப்பட்ட ஒரு சமுதாயம் அதன் இறுதி விளைவாக மூர்க்கத்தனமான முரண்பாட்டிலே, உடலோடு உடல் மோதிக் கொள்ளும் அதிர்ச்சியிலே, போய் முடிவதில் வியப்புண்டா?

சமுதாய இயக்கம் அரசியல் இயக்கத்தை விலக்கி வைக்கிறது என்று சொல்லாதீர்கள். ஒரு அரசியல் இயக்கம் அதே நேரத்தில் சமுதாய இயக்கமாக அல்லாமல் என்றைக்கும் இருந்ததில்லை.

வர்க்கங்களும் வர்க்கப் பகைமைகளும் மேற்கொண்டு இல்லாதிருக்கும் ஒரு அமைப்பு முறையிலேதான் சமுதாயப் பரிணமங்கள் அரசியல் புரட்சிகளாக இருப்பது நின்றுவிடும். அதுவரை, சமுதாயத்தின் ஒவ்வொரு பொதுவான மாற்றத்

---

புரிமைகளையும் ஒழித்துவிட்டது. முதலாளித்துவச் சமுதாயத்தில் வர்க்கங்கள் மட்டுமே உண்டு. எனவே, தொழிலாளி வர்க்கத்தை ''நான்காம் சமூகப்பிரிவு'' என்று வர்ணிப்பது வரலாற்றுக்கு முற்றிலும் முரணானதாகும்.—பி. எ. (1885 ஜெர்மன் பதிப்புக்கு பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

தின் தருவாயிலும் சமுதாய விஞ்ஞானத்தின் இறுதி மொழி இவ்வாறுதான் எப்போதும் இருந்து வரும்:

''சண்டை அல்லது சாவு; இரத்தஞ்சிந்தும் போராட்டம் அல்லது அழிவு. பிரச்சினை இப்படித்தான் ஈவிரக்கமின்றி கோரப்படுகிறது''.

(ழார்ழ் சாண்டு.)[5]

1847ம் ஆண்டு முதல் பாதியில் எழுதப்பட்டது

மூலம் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

# கம்யூனிசத்தின் கோட்பாடுகள்[6]

## என்ற நூலிலிருந்து

...**கேள்வி 14:** *இது எந்த வகைப்பட்ட புதிய சமுதாய அமைப்பாக இருக்க வேண்டும்?*

**பதில்:** முதற்கண், இந்தப் புதிய சமுதாய அமைப்பு, தம் இடையே போட்டியிட்டுக் கொண்டு இருக்கும் இணைப் பற்ற தனி நபர்கள் கரங்களில் இருந்து, பொதுவாக தொழில் துறை நிர்வாகத்தையும் உற்பத்தியின் எல்லாப் பிரிவுகளையும் எடுத்துக்கொள்ளும், பதிலாக பொருளுற்பத்தியின் இந்தப் பிரிவுகள் அனைத்தையும், சமுதாயம் முழுவதன் சார்பாக, அதாவது ஒரு சமுதாயத் திட்டத்துக்கு ஏற்பவும், சமுதாயத் தின் உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையிலும் எடுத்து நிர்வாகம் செய்யும். இவ்வாறு அது போட்டியை ஒழித்து அதனிடத்தில் இணைப்பை நாட்டும். தனி நபர்கள் தொழில்களை நிர்வகிப்பது தவிர்க்க முடியாத வகையில் தனியார் உடைமைக்கு இட்டுச் செல்வதாலும், போட்டி என்பது தனிப்பட்ட உரிமையாளர்கள் தொழிலை நிர்வகிக் கும் தன்மையே தவிர வேறு எதுவுமல்ல என்பதாலும், தனி யார் உடைமையைத் தனி நபர்கள் தொழில்களை நிர்வாகம் செய்வதில் இருந்தும் போட்டியில் இருந்தும் பிரிக்க முடி யாது. எனவே தனியார் உடைமையும் ஒழிக்கப்பட வேண் டும். இதற்குப் பதிலாக எல்லா உற்பத்திக் கருவிகளும் பொதுவாகப் பயன்படுத்தப்படும், பொது உடன்பாடு மூலம் எல்லாப் பொருட்களும் வினியோகிக்கப்படும் அல்லது பொருட்களின் சமுதாய உரிமை நிலைநாட்டப்படும். தனி யார் உடைமை ஒழிப்பு என்பது, தொழில்துறை வளர்ச்சியில்

இருந்து தவிர்க்க முடியாத வகையில் தொடரும், சமுதாய அமைப்பு முழுவதன் உருமாற்றத்தின் மிகவும் மணிச்சுருக்க மான மற்றும் மிகவும் தனிக்குறிப்பான மொத்தமான வெளி யீடாகும். எனவே இதுவே கம்யூனிஸ்டுகள் முன்வைக்கும் பிரதான கோரிக்கையாக இருக்கிறது என்பது முற்றிலும் சரியே.

**கேள்வி 15:** இதன் பின்விளைவாக, தனியார் சொத் துடைமை ஒழிப்பு முன்நாட்களில் சாத்தியமற்றதாக இருந்ததா?

**பதில்:** ஆம். சமுதாய அமைப்பிலான ஒவ்வொரு மாற்ற மும், சொத்துடைமை உறவுகளிலான ஒவ்வொரு புரட்சியும், புதிய உற்பத்தி சக்திகள் படைத்துருவாக்கப்படுவதன் முக் கியமான விளைவேயாகும். இந்த உற்பத்தி சக்திகள் இனி என்றுமே பழைய சொத்துடைமை உறவுகளுடன் சரி ஒப்பாக இரா. தனியார் சொத்துடைமையே இந்த வழியில் தான் உதித்தது. ஏனெனில் தனியார் சொத்துடைமை என்றென் றும் நிலவவில்லை. மாறாக, மத்திய காலங்களின் இறுதியில் பட்டறைத் தொழில் வடிவில் ஒரு புதிய உற்பத்தி முறை புகுத்தப்பட்ட போது அன்று நிலவிவந்த பிரபுத்துவ மற்றும் கைவினைச் சங்கச் சொத்துடைமையுடன் ஒவ்வாததாயும், பழைய சொத்துடைமை உறவுகளை விஞ்சிக் கடந்து விட்டது மான பட்டறைத் தொழில், ஒரு புது வடிவிலான உடை மையை—தனியார் உடைமையைப் படைத்துருவாக்கியது. பட்டறைத் தொழில் காலப்பகுதியிலும்,பெருவீதத் தொழில் துறை வளர்ச்சியின் முதல் கட்டத்தின் போதும் தனியார் உரிமையுடைமை தவிர்த்த வேறு சொத்துடைமை வடிவம் எதுவும் சாத்தியமல்ல. தனியார் உடைமை மீது நிறுவப் பட்டதல்லாத வேறு சமுதாய அமைப்பு முறை எதுவும் சாத்தியமல்ல. எந்தக் காலம் வரை எல்லோருக்கும் வழங்கு வதற்காக மட்டுமன்றி, சமுதாய மூலதனத்தின் அதிகரிப்புக் காகவும், உற்பத்தி சக்திகளை மேலும் அபிவிருத்தி செய் வதற்கும் பொருட்களை உபரியாக வழங்குவதற்கு வகை செய்யும் முறையில், போதுமான அளவுக்கு உற்பத்தி செய்ய முடியாது போகிறதோ, அந்தக் காலம் வரையில் சமுதாயத் தின் உற்பத்தி சக்திகள் மீது ஆட்சி செலுத்தும் ஓர் ஆதிக்க வர்க்கமும், ஓர் ஏழ்மைப்பட்ட ஒடுக்கப்பட்ட வர்க்கமும் எப்போதும் இருந்தே தீர வேண்டும். இந்த வர்க்கங்கள்

எந்த வழியில் அமைகின்றன என்பது உற்பத்தி வளர்ச்சியின் கட்டத்தைச் சார்ந்ததாக இருக்கும். விவசாயத்தின் மீது சார்ந்து நின்ற மத்திய காலங்களில் நாம் நிலப் பிரபுவையும் பண்ணை அடிமையையும் காண்கிறோம்; மத்திய காலங்களின் பிந்திய பகுதி நமக்கு கைவினைச் சங்க ஆண்டானையும், அவனது பணி பயில்வோனையும், நாள் கூலி தொழிலாளர்களையும் வழங்குகிறது. பதினேழாம் நூற்றாண்டில் பட்டறை அதிபர்களும் பட்டறைத் தொழிலாளர்களும் உள்ளனர், பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரிய தொழிற்சாலை உடைமையாளரும் பாட்டாளியும் வாழ்கின்றனர். எல்லோருக்கும் போதுமான அளவு உற்பத்தி செய்யவும், இந்த உற்பத்தி சாதனங்களுக்கு தனியார் சொத்துடைமையை ஒரு தளையாகவும் ஒரு தடை வேலியாகவும் செய்ய வல்லதுமான உற்பத்தி சக்திகள் போதிய அளவு பரவலாக இன்னும் வளர்ச்சி அடையவில்லை என்பது கண்கூடு. ஆயினும் இப்போது, பெருவீதத் தொழில்துறையின் வளர்ச்சியானது, முதலாவதாக, இதுகாறும் கேட்டிராத அளவுக்கு மூலதனத்தையும் உற்பத்தி சக்திகளையும் படைத்துருவாக்கியுள்ளதோடு, இந்த உற்பத்தி சக்திகளை மிகக்குறுகிய கால அளவிற்குள் எல்லையின்றி பல்கிப் பெருகவைப்பதற்கான சாதனங்களும் இருக்கும்; இப்போது, இரண்டாவதாக, இந்த உற்பத்தி சக்திகள் ஒரு சில முதலாளிகளிடம் ஒருமுனையில் குவிந்திருக்க அதே போதில் மாபெரும் மக்கள் திரளினர் முன் என்றையும் விட அதிகமாகப் பாட்டாளிகளின் அணிகளுக்குத் தள்ளப்பட்டு, முதலாளி வர்க்கத்தின் செல்வம் பன்மடங்காய்ப் பெருகிவரும் அதே அளவுக்கு அவர்களது நிலைமை மேலும் அதிகத் துன்பகரமானதாய் தாங்க முடியாததாய் மாறிவரும்; இப்போது, மூன்றாவதாக, இந்த வலிமை மிக்கதும் எளிதில் பன்மடங்காகப் பெருகக் கூடியதுமான உற்பத்தி சக்திகள் தனியார் சொத்துடைமையையும் முதலாளித்துவ வர்க்கத்தையும் மிகப் பெருமளவு விஞ்சிக் கடந்து, இதன் விளைவாக அவை சமுதாய அமைப்பில் வன்மையான அமளி அடிக்கடி ஏற்படுத்திவரும் இப்போது—இப்போது மட்டுமே தனியார் சொத்துடைமையை ஒழிப்பது என்பது சாத்தியம் மட்டுமல்ல, மாறாகக் கண்டிப்பாயும் இன்றியமையாததாகி விட்டது.

**கேள்வி 16:** தனியார் சொத்துடைமை ஒழிப்பை சமாதானமான முறைகளில் ஏற்பாடு செய்ய முடியுமா?

பதில்: இது நடைபெறக் கூடும் எனில் அது விரும்பத் தக்க காரியம். இதைக் கம்யூனிஸ்டுகள் நிச்சயமாயும் எதிர்க்க மாட்டார்கள். சதித்திட்டங்கள் எல்லாம் பயனற்றவை என்பது மட்டுமல்ல, கேடுவிளைப்பவையுங்கூட என்பதைக் கம்யூனிஸ்டுகள் நன்ருக அறிவார்கள். புரட்சிகள் முன் கருதலுடனே தன்னிச்சையாகவோ செய்யப்படுவதில்லை என்பதையும், மாருக அவை எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும், குறிப்பிட்ட கட்சிகள் மற்றும் முழு வர்க்கங் களின் சித்தம் மற்றும் தலைமையில் இருந்து அறவே சுதந் திரமான புறநிகழ்வுகளின் இன்றியமையாத விளைவே என் பதையும் அவர்கள் நன்ருக அறிவார்கள். அவர்கள் இதே போன்று, கிட்டத்தட்ட எல்லா நாகரிகமடைந்த நாடுகளி லும் பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி பலவந்தமாக அடக்கப்படுகிறது என்பதையும், இதன் வழி கம்யூனிசத்தின் எதிராளிகள் எல்லா வழிகளிலும் புரட்சியை ஊக்குவிக்க நாடுகிருர்கள் என்பதையும் காண்கிருர்கள். கடைசியாக, ஒடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம் ஒரு புரட்சியில் இறங்கு மாறு தூண்டப்படுமாஞல், கம்யூனிஸ்டுகளாகிய நாம் பாட் டாளிகளின் லட்சியத்துக்கு இப்போது சொல் மூலம் எதைச் செய்து வருகிருேமோ அதைச் செயல் மூலமும் புரிவோம்.

கேள்வி 17: ஒரே அடியில் தனியார் சொத்துடைமையை ஒழித்து விட முடியுமா?

பதில்: இல்லை. சமுதாயம் முழுவதற்கும் படைத்தளிக்கக் கூடிய அளவுக்கு இப்போது இருக்கும் உற்பத்தி சக்திகளை ஒரே அடியில் பன்மடங்காக்குவது எப்படி சாத்தியமல்லவோ அது போலவே இந்தக் காரியமும் சாத்தியமல்ல. எனவே தான் பாட்டாளி வர்க்கப் புரட்சி—இது எப்படியும் நெருங்கி வருகிறது—மட்டுமே இன்று நிலவும் சமுதாயத்தைப் படிப் படியாக மாற்றியமைக்க முடியும், தேவையான அளவில் உற்பத்தி சாதனங்கள் உருவாக்கப்படும் போது மட்டுமே அது தனியார் உடைமையை ஒழிக்க முடியும்.

கேள்வி 18: இந்தப் புரட்சியின் செல்வழி எதுவாக இருக் கும்?

பதில்: முதன் முதலாக அது ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பைத் தொடங்கிவைக்கும், அதன் மூலம் நேரடியாகவோ நேரடி இன்றியோ பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆட்சி யைத் தொடங்கி வைக்கும். பாட்டாளி வர்க்கம் ஏற்கெனவே

மக்களில் பெரும்பான்மையாக இருக்கும் இங்கிலாந்தில் நேரடியாகவே இதைச் செய்யும். ஜெர்மனியிலும் பிரான்சிலும் நேரடி இன்றி இதைச் செய்யும் இவற்றில் பெரும்பான்மை மக்கள் இடையே பாட்டாளிகளுடன் கூடவே சிறுதர விவசாயிகள், குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டோர் உள்ளனர். இவர்கள் இப்போது பாட்டாளிகளாக மாற்றப்படுகிறார்கள், அவர்களது அரசியல் நலன்களைப் பொருத்தவரை பாட்டாளி வர்க்கத்தை மேலும் மேலும் சார்ந்து நிற்பவர்களாக மாறிவருகிறார்கள். ஆகவே விரைவில் பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுக்கு இணங்கி வருவார்கள். ஒருவேளை இது இரண்டாவது போராட்டத்தை உள்ளடக்கலாம், அது பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியில் மட்டுமே சென்று முடியும்.

தனியார் உடைமையை நேரடியாகத் தாக்குவதற்கும், பாட்டாளி வர்க்கத்தின் வாழ்நிலையை உறுதியாக நிலைநாட்டவும், மேற்கொண்ட பல நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கான சாதனமாக ஜனநாயகத்தை உடனடியாகப் பயன்படுத்தாவிட்டால், பாட்டாளி வர்க்கத்துக்கு அதனால் எவ்விதப் பயனும் கிடையாது. இப்போது நிலவும் உறவுகளின் மீது ஏற்கெனவே பின்விளைவாக உருவாகிவிட்ட நடவடிக்கைகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1. படிப்படியாக அதிகரிக்கும் வருமான வரிகள், மரபுரிசை சொத்து மீது உயர் வரிகள், கிளைவழிவந்தோர் (சகோதரர், சகோதர சகோதரிகளின் புதல்வர்கள்) மரபுரிமைச் சொத்துப் பெறுவதை ஒழித்தல், கட்டாயக் கடன்கள் இத்தியாதிகள் வாயிலாக தனியார் உடைமைக்கு வரம்பு கட்டுதல்.

2. நில உரிமையாளர்கள், ஆலைச் சொந்தக்காரர்கள், ரயில்வே மற்றும் கப்பல் கம்பெனி அதிபர்கள் ஆகியோரை, படிப்படையாக உடைமை நீக்கம் செய்வது. இது ஓரளவு அரசுத்துறைத் தொழில்கள் தோற்றுவிக்கும் போட்டி மூலமும், ஓரளவு நேரடியாக காகித நோட்டுகளிலான இழப்பீடு கொடுப்பல்கள் மூலமும் செய்யப்படும்.

3. பெரும்பான்மை மக்களுக்கு எதிராக இருக்கும் எல்லா வெளியேறிகள் மற்றும் கலகக்காரர்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்வது.

4. உழைப்பை ஒழுங்கமைத்தல், அல்லது தேசிய நிலச் சொத்துக்கள், தேசிய ஆலைகள் மற்றும் பணிமனைகளைப் பாட்டாளிகள் கைப்பற்றிக் கொள்வது. இதன் மூலம் தொழிலாளர் தம்மிடையேயான போட்டிக்கு முடிவு கட்டுதல், அதோடு ஆலைச் சொந்தக்காரர்கள் இருக்கும் வரை அரசு கொடுக்கும் அதே உயர் ஊதியங்களைக் கொடுக்கும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துவது.

5. தனியார் உடைமை ஒழிப்பு பூர்த்தியாகும் வரை சமுதாயத்தின் உறுப்பினர் அனைவரும் வேலை செய்ய வேண்டும் எனும் சமப்பொறுப்புக்கு உள்ளாக்கப்படுதல். தொழில் துறை ஊழியர் படைகள் குறிப்பாயும் விவசாயத்தில் நிறுவப்படுதல்.

6. அரசு மூலதனத்துடனான தேசிய வங்கி மூலமும், தனியார் வங்கிகள் மற்றும் வங்கி அதிபர்களை ஒடுக்குவது மூலமும் அரசின் கரங்களில் கடன் வசதி மற்றும் வங்கி அமைப்புகளை மையப்படுத்துவது.

7. தேசிய ஆலைகள், பணிமனைகள், ரயில்வேக்கள், கப்பல்கள் ஆகியவற்றை அதிகரிப்பது, சாகுபடி செய்யப்படாத எல்லா நிலங்களிலும் பயிர் செய்தல், ஏற்கெனவே சாகுபடி நடத்திய நிலங்களை மேம்படுத்துதல். இது தேசத்தின் செயலாட்சியில் வரும் மூலதனம் மற்றும் தொழிலாளர் பெருக்கத்தின் அதே விகிதாச்சாரத்தில் செய்யப்பட வேண்டும்.

8. தாயின் பராமரிப்பில் இருந்து விடுபடும் அளவுக்கு வயது வந்த எல்லாக் குழந்தைகளுக்கும் தேசியக் கல்வி நிறுவனங்களில் தேசத்தின் செலவில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். கல்வி பொருள் உற்பத்தியோடு இணைக்கப்பட வேண்டும்.

9. தொழில் துறையிலோ விவசாயத்திலோ ஈடுபட்டு வேலை செய்து வரும் குடி மக்கட் சமுதாயங்களுக்குப் பொது வசிப்பிடமாக தேசிய எஸ்டேட்டுகள் மீது பெரிய மாளிகைகள் கட்டப்படவேண்டும். நாட்டுப்புற நகரப்புற வாழ்க்கைகளின் சாதனங்களை இணைத்தும், குடி மக்கள் ஏதாவதொன்றின் ஒரு சார்புத் தன்மை அல்லது பாதக அம்சங்களால் துன்புறுத வகையில் ஆவன செய்ய வேண்டும்.

10. சுகாதாரமற்றதும் மோசமாகக் கட்டப்பட்டதுமான வீடுகள் மற்றும் வசிப்பிடத் தொகுதிகள் இடித்துத் தகர்க்கப்பட வேண்டும்.

11. முறையிலா மணப்படிப் பிறந்த குழந்தைகளுக்கும் முறைப்படியான மணப்படிப் பிறந்த குழந்தைகளுக்கும் சமமான மரபுரிமைச் சொத்துரிமை உண்டு.

12. எல்லாப் போக்குவரத்து சாதனங்களும் தேசத்தின் உடைமையில் ஒரு முனைப்படுத்தல்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாகக் கொண்டுவர முடியாது என்பது மெய்யே. ஆனால் ஒன்று எப்போதும் இன்னொன்றுக்கு இட்டுச் செல்லும். தனியார் உடைமை உரிமை மீது முதல் அடிப்படைத் தாக்குதல் தொடுக்கப்பட்டு விட்ட உடனேயே பாட்டாளி வர்க்கம் மேலும் முன்னே சென்று, அரசின் கரங்களில் சகல மூலதனத்தையும், விவசாயம் அனைத்தையும், தொழில்துறை எல்லாவற்றையும், போக்குவரத்து சர்வத்தையும், பரிவர்த்தனை சாதனங்கள் பூராவையும் மேலும் மேலும் ஒரு முனைப்படுத்தும்படி கட்டாயப்படுத்தப்படும். இந்த நடவடிக்கைகள் முழுமையும் இத்தகைய பலன்களை நோக்கியே செயல்படுகின்றன. அதோடு பாட்டாளி வர்க்கத்தின் உழைப்பால் நாட்டின் உற்பத்தி சக்திகள் பன்மடங்காகப் பெருகும் அதே விகிதாச்சாரத்தில் அவை நிறைவேற்றம் பெறும், மற்றும் அவற்றின் மையப்படுத்தும் பின்விளைவுகள் அபிவிருத்தியடையும் என்பது திண்ணம். இறுதியாக எல்லா மூலதனமும், சகல பொருள் உற்பத்தியும் அனைத்துப் பரிவர்த்தனையும் தேசத்தின் கரங்களில் ஒரு முனைப்படுத்தப்படும் போது, தனியார் உடைமை உரிமை தானாகவே இல்லாதபடி போய்விடும், பணம் தேவையற்றதாகி விடும், பழைய சமுதாய உறவுகளின் இறுதி வடிவங்கள் தேய்ந்தழிந்து போக இயலும் வகையில் பொருள் உற்பத்தி அந்தளவு அதிகரித்திருக்கும், மனிதர்கள் அம்முறையில் மாற்றம் அடைந்திருப்பார்கள்.

**கேள்வி 19.** இந்தப் புரட்சி ஒரு நாட்டில் மட்டும் நடைபெறுவது சாத்தியமா?

**பதில்:** இல்லை. உலக மார்க்கெட்டை ஏற்கெனவே படைத்து உருவாக்கியதன் மூலம், பெருவீதத் தொழில்துறை உலகின் மக்களினங்கள் அனைத்தையும் சிறப்பாக நாகரிகமடைந்த மக்களினங்களைப் பிணைத்திருக்கும் தன்மையை கண்டால், ஒவ்வொரு மக்களும் இன்னொரு மக்களுக்கு என்ன நேருமோ அதைச் சார்ந்திருக்கின்றனர் என்பது தெரியவரும். மேலும், பெருவீதத் தொழில்துறை நாகரிகமடைந்த

எல்லா நாடுகளின் சமுதாய வளர்ச்சியையும் பெருமளவுக்கு சமனப்படுத்தியுள்ளது. எனவே இந்த நாடுகள் அனைத்திலும் முதலாளித்துவ வர்க்கமும் பாட்டாளி வர்க்கமும் சமுதாயத்தின் இரண்டு தீர்மானகரமான வர்க்கங்களாகி விட்டன. அதோடு அவற்றின் இடையிலான போராட்டம் இன்றைய பிரதான போராட்டமாகி விட்டது. எனவே கம்யூனிஸ்டுப் புரட்சி ஒரு தேசத்தின் புரட்சியாக மட்டும் இராது. அது நாகரிகமடைந்த நாடுகள் எல்லாவற்றிலும் நடைபெறும், அதாவது குறைந்த பட்சம் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் ஏககாலத்தில் நடக்கும். இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும், எதனிடம் அதிக வளர்ச்சியடைந்த தொழில்துறை, அதிகச் செல்வம் மற்றும் பெருந்திரளான உற்பத்தி சக்திகள் இருக்கின்றனவோ அதைப் பொருத்து இப்புரட்சி வளர்ச்சியுற நீடித்த காலமோ அல்லது குறைந்த காலமோ பிடிக்கும். எனவே ஜெர்மனியில் இது ஆக மெதுவான கதியை மேற்கொள்ளும், இது அங்கு சாதனையாவது மிகவும் கடினமாக இருக்கும் என்பதும் திண்ணம். இங்கிலாந்தில் இது மிக வேகமாகவும் மிகவும் எளிதாகவும் நிறைவேற்றப்பட முடியும். இது, இதுகாறும் நிலவி வந்த அவற்றின் வளர்ச்சிப் பாணியை முற்றாக மாற்றியமைத்தும், அதைப் பெருமளவு வேகமுடுக்கம் செய்தும், உலகின் இதர நாடுகள் மீது கணிசமாகச் செல்வாக்கும் செலுத்தும். இது உலகப் புரட்சியாகவே இருக்க வேண்டும், எனவே இது உலகம் முழுவதையும் தனது அரங்கமாகக் கொள்ள வேண்டும்[7].

**கேள்வி 20:** தனியார் உடைமையுரிமை இறுதியாக ஒழிக்கப்படுவதன் பின்விளைவுகள் எவை?

**பதில்:** தனியார் முதலாளிகள் பயன்படுத்தி வரும் எல்லா உற்பத்தி சக்திகள் மற்றும் தொடர்புச் சாதனங்களையும், பொருட்களின் பரிவர்த்தனை மற்றும் வினியோகத்தையும் கூட சமுதாயம் உடைமை நீக்கம் செய்து, சமுதாயம் முழுவதற்கும் கிடைக்கக் கூடிய சாதனங்கள் மற்றும் அதன் தேவைகளை அடிப்படையாக்கிய ஒரு திட்டத்திற்கு ஏற்ப அவற்றின் நிர்வாகத்தை ஏற்பாடு செய்யும் பட்சத்தில், தற்போது தவிர்க்க முடியாதபடி நிலவும் பெருவீதத் தொழில்துறையின் கெடுவிளைவுகளை முதன் முதலாக அகற்றி நீக்கம் செய்ய முடியும். நெருக்கடிகள் இனி இல்லாதொழி

யும், இன்றைய சமுதாய அமைப்பில் அமித உற்பத்தியாக வந்துவிடுவதும், துன்ப துயரங்களுக்கு இத்தகைய வன்மை யான காரணமாக இருப்பதுமான விரிவுபடுத்தப்பட்ட உற் பத்தி, பின்னுல் போதுமானதாகக் கூட இல்லாமல், மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும். சமு தாயத்தின் உடனடித் தேவைகளை விஞ்சிடும் அமித உற்பத்தி அடுத்துத் தொடர்ந்து துன்ப துயரங்களைக் கொண்டுவரு வதற்கு மாருக, எல்லோரின் தேவைகளையும் நிறைவு செய் யும், புதிய தேவைகளையும் அதோடு கூடவே அவற்றை நிறை வேற்றும் சாதனங்களையும் படைத்து உருவாக்கும். இது இனி மேற்பட்டதான முன்னேற்றத்துக்கு உரிய நிபந்தனையாக வும் தூண்டு கோலாகவும் மாறும். இதுகாறும் சமுதாய அமைப்பைக் குழப்பத்தில் எப்போதும் ஆழ்த்தி வந்தது போல இல்லாமல் இது முன்னேற்றத்தைச் சாதனையாக்கும். தனியார் உடைமையின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்ட உடனேயே, பெருவீதத் தொழில்துறை, நமது காலத்தின் பெருவீதத் தொழில்துறையுடன் ஒப்பிடும் போது பட் டறைத் தொழில் அமைப்பு எப்படித் தோற்றமளித்ததோ அதைப் போல, அதன் இன்றைய வளர்ச்சி மட்டம் வெகு அற்பமாகத் தோன்றும் அளவுக்குப் பெரு வளர்ச்சியடை யும் என்பது திண்ணம். தொழில்துறையின் இந்த வளர்ச்சி, எல்லோருடைய தேவைகளையும் நிறைவு செய்வதற்குப் போதுமான அளவிலான பொருட்களை சமுதாயத்துக்கு நிச்சயம் வழங்கும். கிடைக்கக் கூடிய மேம்பாடுகளையும் விஞ்ஞான சாதனைகளையும் கொண்டுவந்து புகுத்துவதிலிருந்து தனியார் உடைமையின் நிர்ப்பந்தத்தாலும், நிலத்தைத் துண்டாடியது மூலமும் தடங்கல் செய்யப்பட்டு வந்த விவ சாயமும் கூட ஒரு புதிய முன்னேற்றத்தைக் காண்பது நிச் சயம், மற்றும் அது சமுதாயத்தின் வசம் அமோகமான அள வில் திரளான பல பொருட்களை ஒப்படைக்கும். இவ்வாருக, சமுதாயம் அதன் உறுப்பினர்கள் அனைவரின் தேவைகளை யும் நிறைவு செய்யக் கூடிய அளவுக்கு வினியோகத்தை ஏற்பாடு செய்வதற்குப் போதுமான பொருட்களை உற்பத்தி செய்யும். சமுதாயம் பல்வேறு பகைமை வர்க்கங்களாகப் பிளவுறுவது என்பது இதனுல் தேவையற்றதாகிவிடும். இது தேவையற்றதாகிவிடுவது மட்டுமல்ல, அதோடு புதிய சமு தாய அமைப்புக்கு இது ஒவ்வாததாகவும் கூட ஆகிவிடும்,

உழைப்புப் பிரிவினையின் வாயிலாகவே வர்க்கங்கள் தோன்றின. இந்த உழைப்புப் பிரிவினை இது காறும் நிலவி வந்த வடிவில் முற்றாக மறைந்து விடும். இங்கு சித்தரிக்கப்பட்ட சிகரங்களுக்கு தொழில்துறை மற்றும் விவசாயப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு யந்திர மற்றும் இரசாயனத் துணைக் கருவிகள் மட்டும் போதுமானதல்ல. இந்தத் துணைக் கருவிகளை இயங்க வைக்கும் மக்களின் ஆற்றல்களும் இதற்குச் சரி ஒப்பான முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கடந்த நூற்றாண்டில் விவசாயிகளும் பட்டறைத் தொழிலாளர்களும் பெருவீதத் தொழில்துறையில் ஈர்க்கப்பட்ட போது எப்படித் தமது வாழ்க்கை முறை முழுவதையும் மாற்றிக் கொண்டு முற்றிலும் வேறுவகையான மக்களாக மாற வேண்டி இருந்ததோ, அதுபோலவே சமுதாயம் முழுதுமாக உற்பத்தியைக் கூட்டாக நிர்வாகம் செய்வதும், இதன் விளைவாக உற்பத்தியில் ஏற்பட்டுவரும் புதிய வளர்ச்சிக்கும் கூட அறவே புதிய மக்கள் தேவைப்படுகின்றனர், மற்றும் அவர்கள் உருவாக்கவும் படுகின்றனர். இன்று மக்கள் இருக்கும் நிலைமையில், ஒவ்வொரு தனி நபரும் உற்பத்தியின் தனி ஒரு பிரிவுக்கு என ஒதுக்கப்பட்டு அதில் கட்டுண்டு, அதனால் சுரண்டப்படும், இதர ஆற்றல்கள் அனைத்துக்கும் பிரதிகூலமான முறையில் தனது ஆற்றல்களில் ஒன்றை மட்டுமே வளர்த்துக் கொண்டும், ஒட்டு மொத்தமான உற்பத்திப் பிரிவில் ஒரு கிளையை மட்டுமே தெரிந்து கொண்டும் இருக்கும் போது உற்பத்தியின் கூட்டு நிர்வாகத்தை நடத்திச் செல்ல முடியாது. சமகாலத் தொழில் துறையில் கூட இத்தகைய பேர்களால் பயன் இல்லை. சமுதாயம் முழுவதாலும், திட்டப்படி, கூட்டாக நிர்வகிக்கப்படும் தொழில்துறை சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்த ஆற்றல்களைக் கொண்ட மக்களை, உற்பத்தி அமைப்பு முறை அனைத்தையும் மேற்பார்வை செய்யவல்ல மக்களை எதிர் நோக்குகிறது. இதன் பின்விளைவாக, யந்திர முறையால் ஏற்கெனவே தகர்க்கப்பட்டதும் ஒரு மனிதனை விவசாயியாயும், இன்னொருவனை காலணி செய்பவனாயும், மூன்றாம் நபரை ஆலைத்தொழிலாளியாயும், நான்காமவனை பங்குமார்க்கெட் லாப வேட்டையாளனாயும் செய்துவரும் இந்த உழைப்புப் பிரிவினை இவ்வாறு முழுமையாக மறைந்துவிடும். கல்வி போதனை, இளம் மக்கள் உற்பத்தி முறை பூராவையும்

தாமே பரிச்சயம் செய்து கொள்ள இயலுமாறு உதவும், சமுதாய தேவைகள் அல்லது அவர்களது சொந்த நாட்டங்களுக்கு ஏற்ப அவர்கள் தொழில்துறையின் ஒரு பிரிவில் இருந்து இன்னொரு பிரிவுக்குக் கடந்து செல்லத் துணை செய்யும். எனவே இது இன்றைய உழைப்புப் பிரிவினையால் எல்லாவற்றின் மீதும் திணிக்கப்பட்டிருக்கும் வளர்ச்சியின் ஒரு தலைப் போக்கை ஒழித்துக் கட்டும். இவ்வாறாக, கம்யூனிச முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயம் அதன் உறுப்பினர்களுக்கு அவர்களது சர்வாம்ச ரீதியில் வளர்க்கப்பட்ட ஆற்றல்களை ஒரு சர்வாம்ச வழியில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்க முடியும். இதனுடன் இணைவாக தவிர்க்க முடியாத வகையில் பல்வேறு வர்க்கங்களும் மறைந்து போகும். இவ்வாறாக, ஒரு புறத்தில் கம்யூனிச முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயம் வர்க்கங்கள் நிலவுவதற்கு அறவே ஒவ்வாதது என்பதோடு, இந்த சமுதாயத்தின் உருவாக்கமே இந்த வர்க்க வேறுபாடுகளை அகற்றுவதற்கான சாதனங்களை வழங்கும்.

நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான முரண் நிலை இதே போன்று மறைந்து விடும் என்பது இவை எல்லாவற்றில் இருந்தும் தொடர்கிறது. முற்றிலும் பொருளாயதக் காரணங்களுக்காகவே என்றாலுங்கூட, விவசாயத்தையும் தொழில்துறை உற்பத்தியையும் இரண்டு வெவ்வேறு வர்க்கங்களுக்குப் பதிலாக ஒரே மக்களைக் கொண்டு நடத்துவது என்பது கம்யூனிச முறையிலான இணைப்பின் இன்றியமையாத நிபந்தனையாகும். பெரிய நகரங்களில் தொழிற்துறை மக்கள் தொகை நெருங்கி மொய்த்துக் கொண்டிருப்பதுடன் கூடவே, விவசாயி மக்கள் தொகை நாடு முழுதும் சிதறிக்கிடப்பது என்பது விவசாயம் மற்றும் தொழில்துறையின் வளர்ச்சி குன்றிய கட்டத்துக்கு மட்டுமே தகுதியான நிலைமையாகும், இது இனி மேற்பட்டதான எல்லா வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாகும். இது இப்போதே மிகவும் துலாம்பரமாகத் தெரியவருகிறது.

உற்பத்திச் சக்திகளை எல்லோருக்குமாகவும் திட்டமிட்ட முறையிலும் பயன்படுத்த சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களும் அடங்கிய பொது இணைப்பை நிறுவுதல், எல்லோருடைய தேவைகளையும் வழங்குவதற்குப் போதுமான அளவுக்குப் பொருள் உற்பத்தியை விரிவுபடுத்தல், சிலரது

தேவைகள் நிறைவு செய்யப்படும் போது வேறு சிலர் பிரதி கூலத்திற்கு உள்ளாகும் நிலைமைக்கு முடிவு கட்டுதல், வர்க்கங்களையும் அவற்றின் முரண் நிலையையும் முற்றாக ஒழித்துக்கட்டுதல்; இதுவரையில் மேலோங்கி இருந்த உழைப்புப் பிரிவினையை ஒழித்துக்கட்டுவதன் மூலமும், தொழில்துறைக் கல்வி போதனை வாயிலாகவும் செயல்பாட்டில் மாற்றம் செய்வதன் வழியாகவும், எல்லோரும் உற்பத்தி செய்யும் வாழ்க்கை வளங்களில் எல்லோரும் பங்கு பெறுவதாலும், நகரத்தையும் நாட்டுப்புறத்தையும் கலந்து ஒன்றாக்குவதன் ஊடேயும் சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரின் ஆற்றல்களை சகல துறைகளிலும் அபிவிருத்தி செய்தல்—இவையே தனியார் சொத்துடைமை ஒழிக்கப்படுவதில் இருந்து எதிர்பார்க்கப்படும் பிரதான விளைவுகளாகும்.

1847ம் ஆண்டில்
அக்டோபர்-நவம்பர் இறுதியில்
எழுதப்பட்டது

மூலம் ஜெர்மன்
மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்

# கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை[8]
## என்ற நூலிலிருந்து

ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம்—கம்யூனிசம் என்னும் பூதம். போப்பாண்டவரும் ஜாரரசனும், மெட்டர்னிஹூம் கிஸோவும், பிரெஞ்சுத் தீவிரவாதிகளும் ஜெர்மன் உளவாளிகளுமாய், பழைய ஐரோப்பாவின் சக்திகள் அனைத்தும் இந்தப் பூதத்தை ஓட்டுவதற்காகப் புனிதக் கூட்டு சேர்ந்திருக்கின்றன.

ஆட்சியிலுள்ள தனது எதிராளிகளால் கம்யூனிஸ்டு என்று ஏசப்படாத எதிர்க் கட்சி எங்கேனும் உண்டா? கம்யூனிசம் என்று இடித்துரைத்துத் தன்னிலும் முன்னேறிய எதிர்த்தரப்பாருக்கும், மற்றும் பிற்போக்கான தனது எதிராளிகளுக்கும் பதிலடி கொடுக்காத எதிர்க் கட்சிதான் உண்டா?

இரண்டு முடிவுகள் இவ்வுண்மையிலிருந்து எழுகின்றன:

1. கம்யூனிசமானது ஒரு தனிப்பெரும் சக்தியாகிவிட்டதை ஐரோப்பிய சக்திகள் அனைத்தும் ஏற்கெனவே ஏற்றுக் கொண்டுவிட்டன.

2. பகிரங்கமாய் அனைத்து உலகும் அறியும் வண்ணம் கம்யூனிஸ்டுகள் தமது கருத்துக்களையும் தமது நோக்கங்களையும் தமது போக்குகளையும் வெளியிட்டு. நேரடியாய்க் கட்சியின் அறிக்கை மூலம் கம்யூனிசப் பூதமெனும் இந்தக் குழந்தைப் பிள்ளைக் கதையை எதிர்க்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

இந்த நோக்கத்துடன், பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் லண்டனில் கூடி, அடியிற் கண்ட அறிக்கையை ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், ஃபிளெமிஷ், டேனிஷ் மொழிகளில் வெளியிடுவதற்காக வகுத்திட்டனர்.

## I

## முதலாளிகளும் பாட்டாளிகளும்*

இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும்** வர்க்கப் போராட்டங்களது வரலாறே ஆகும்.

---

* இக்காலத்து முதலாளிகளாகிய முதலாளித்துவ வர்க்கத்தார் (பூர்ஷ்வா வர்க்கத்தார்) சமூகப் பொருளுற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்கள், கூலி உழைப்பை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறவர்கள். இக்காலத்துக் கூலித் தொழிலாளர்களது வர்க்கமே பாட்டாளி வர்க்கம் எனப் படுவது; இத்தொழிலாளர்கள் சொந்தத்தில் தம்மிடம் உற்பத்திச் சாதனங்கள் இல்லாத காரணத்தால் தமது உழைப்பு சக்தியை [labour power] விற்று வாழ்க்கை நடத்தும்படி தாழ்த்தப்பட்டிருக்கிறவர்கள். (1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்சின் குறிப்பு.)

** அதாவது, ஏட்டிலேறிய வரலாறு அனைத்தும். வரலாற்றுக்கு முற்பட்ட சமுதாயம் குறித்து, எழுத்தில் பதிவாகியுள்ள வரலாற்றுக்கு முன்பு நிலவிய சமூக ஒழுங்கமைப்பு குறித்து, 1847ல் அனேகமாய் ஏதும் அறியப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பிற்பாடு, ஹாக்ஸ்த்ஹாவுசன் ருஷ்யாவில் நிலம் பொதுவுடைமையாய் இருந்ததென்று கண்டுபிடித்தார்; டியூட்டானிய இனங்கள் யாவுமே நிலத்திலான பொதுவுடைமையாகிய இந்தச் சமூக அடித்தளத்திலிருந்து தான் வரலாற்றை ஆரம்பித்தன என்று மௌரர் நிரூபித்துக் காட்டினார்; இந்தியாவிலிருந்து அயர்லாந்து வரை எங்குமே நிலத்தைப் பொதுவுடைமையாய்க் கொண்ட கிராம சமுதாயங்கள் தான் சமுதாயத்தின் புராதன ஆதி வடிவமாய் இருக்கிறது அல்லது இருந்திருக்கிறது என்பது நாளாவட்டத்தில் தெரியலாயிற்று. இவற்றுக்கு எல்லாம் மணிமுடிவைத்தாற் போல், கணம் என்பதன் மெய்யான தன்மையையும் அதற்கும் பூர்வ குடிக்குமுள்ள உறவையும் மார்கன் கண்டுபிடித்ததானது, இந்தப் புராதனக் கம்யூனிச சமுதாயத்தின் உள்ளமைப்பை அதன் தூய வகையிலான வடிவில் தெளிவாய்ப் புலப்படுத்

சுதந்திரமுடையானும் அடிமையும், பட்ரீஷிய உயர்குலச் சீமானும் பிலெபியப் பாமரக் குடியோனும், நிலப்பிரபுவும் பண்ணையடிமையும், கைவினைச் சங்க ஆண்டானும்* கைவினைப் பணியாளனும், சுருங்கக் கூறுமிடத்து ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் ஒருவருக்கொருவர் தீராப்பகை கொண்டோராய், ஒரு நேரம் மறைவாகவும் ஒரு நேரம் பகிரங்கமாகவும், இடையறாப் போராட்டம் நடத்தி வந்தனர். இந்தப் போராட்டம் சமுதாயம் முழுவதன் புரட்சிகரப் புத்தமைப்பிலோ, அல்லது போராடும் வர்க்கங்களது பொது அழிவிலோதான் எப்போதும் முடிவுறலாயிற்று.

வரலாற்றின் முந்திய சகாப்தங்களில் அனேகமாய் எங்குமே பல்வேறு வகுப்புகளாலாகிய சிக்கலான சமூகப்பாகுபாடு, சமூக அந்தஸ்தின் பன்மடிப் படிநிலை அமைவு இருக்கக் காண்கிறோம். பண்டைய ரோமாபுரியில்: சீமான்கள், வீர மறவர், பாமரக் குடியோர், அடிமைகள்; மத்திய காலத்தில்: பிரபுத்துவக் கோமான்கள், மான்யக்காரர்கள், கைவினைச் சங்க ஆண்டான்கள், கைவினைப் பணியாளர்கள், பண்ணையடிமைகள். இந்த வகுப்புகளில் அனேகமாய் ஒவ்வொன்றிலும் படிநிலை உட்பிரிவுகளும் இருக்கக் காண்கிறோம்.

பிரபுத்துவ சமுதாயத்தின் இடிபாடுகளிலிருந்து முளைத்தெழுந்துள்ள தற்கால முதலாளித்துவ சமுதாயம் வர்க்கப் பகைமைகளுக்கு முடிவுகட்டி விடவில்லை; பழையவற்றின் இடத்தில் புதிய வர்க்கங்களையும், புதிய ஒடுக்குமுறை நிலைமைகளையும், புதிய போராட்ட வடிவங்களையும் நிலைநாட்டியிருக்கிறதே அன்றி வேறில்லை.

---

திற்று. இந்தப் புராதன சமுதாயங்களின் சிதைவைத் தொடர்ந்து சமுதாயமானது பாகுபாடுற்றுத் தனித்தனியான, முடிவில் ஒன்றுக்கொன்று பகைமையான வர்க்கங்களாய்ப் பிரிய முற்படுகிறது. இந்தச் சிதைவு நடந்தேறிய நிகழ்ச்சிப் போக்கினை *Der Ursprung der Familie, des Privateigentums und des Staats* (''குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்'') என்ற நூலில் (இரண்டாம் பதிப்பு, ஷ்டுட்கார்ட், 1886) நான் விவரித்துக் காட்ட முயன்றிருக்கிறேன். **(1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்சின் குறிப்பு.)**

* கைவினைச் சங்க ஆண்டான் [guild-master], அதாவது கைவினைச் சங்கத்தின் முழு உறுப்பினன், இச்சங்கத்துக்கு உட்பட்டுள்ள ஆண்டான்; இதன் தலைவனல்ல. **(1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்சின் குறிப்பு.)**

ஆயினும் நமது சகாப்தமாகிய இந்த முதலாளித்துவ வர்க்கச் சகாப்தத்தின் ஒரு தனி இயல்பு என்னவெனில், வர்க்கப் பகைமைகளை இது சுருக்கி எளிமையாக்கியுள்ளது: சமுதாயம் மேலும் மேலும் இரு பெரும் பகை முகாம்களாய், எதிரும் புதிருமான இரு பெரும் வர்க்கங்களாய்—முதலாளித்துவ வர்க்கமும் பாட்டாளி வர்க்கமுமாய்—பிளவுண்டு வருகிறது.

மத்திய காலத்துப் பண்ணையடிமைகளிடமிருந்து ஆதி நகரங்களின் சுதந்திர நகரத்தார் உதித்தெழுந்தார்கள். இந்த நகரத்தாரிடமிருந்து முதலாளித்துவ வர்க்கத்தின் ஆரம்பக் கூறுகள் வளரலாயின.

அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதாலும், ஆப்பிரிக்க நன்னம்பிக்கை முனையைச் சுற்றிச் செல்லும் கடல்வழி கண்டறியப்பட்டதாலும், தலைதூக்கி வந்த முதலாளித்துவ வர்க்கத்துக்குப் புதிய வாய்ப்புகள் கிடைத்தன. கிழக்கு இந்திய, சீனச் சந்தைகள், அமெரிக்காவில் குடியேற்றம், காலனிகளுடனான வாணிபம், பரிவர்த்தனைச் சாதனங்களிலும் பொதுவாய்ப் பரிவர்த்தனைப் பண்டங்களிலும் ஏற்பட்ட பெருக்கம் ஆகிய இவை எல்லாம் வாணிபத்துக்கும் கப்பல் போக்குவரத்துக்கும் தொழில் துறைக்கும் இதன்முன் என்றும் கண்டிராத அளவுக்கு ஊக்கமூட்டின; ஆட்டங்கண்டுவிட்ட பிரபுத்துவ சமுதாயத்தில் புரட்சிகரக் கூறு வேகமாய் வளர்வதற்கு இவ்விதம் இவை தூண்டுதல் அளித்தன.

பிரபுத்துவ முறையில் அமைந்த தொழில் அமைப்பில் தொழிற் பண்டங்களது உற்பத்தியானது தனியுரிமை பெற்ற கைவினைச் சங்கங்களின் ஏகபோகமாய் இருந்தது. இப்போது இந்தப் பிரபுத்துவத் தொழில் அமைப்பு புதிய சந்தைகளின் வளர்ந்து பெருகும் தேவைகளுக்கு ஒவ்வாததாகியது. இதன் இடத்தில் பட்டறைத் தொழில் முறை வளரலாயிற்று. கைவினைச் சங்க ஆண்டான்களைப் பட்டறைத் தொழில் மத்தியதர வர்க்கத்தார் அப்புறப்படுத்தினர். பல்வேறு கூட்டிணைவுகளாய் அமைந்த கைவினைச் சங்கங்களுக்கு இடையிலான உழைப்புப் பிரிவினை தனித்தனி தொழிலகத்திலுமான உழைப்புப் பிரிவினையின் முன்னால் நிற்க முடியாமல் மறைந்தொழிந்தது.

இதற்கிடையில் சந்தைகள் தொடர்ந்து மென்மேலும் வளர்ந்து விரிவடைந்தன, தேவை மென்மேலும் உயர்ந்து

சென்றது. பட்டறைத் தொழில் முறையுங்கூட இப்போது போதாததாகியது. இந்நிலையில் தான் நீராவியும் இயந்திரங்களும் தொழிற் பண்டங்களின் உற்பத்தியில் புரட்சியை உண்டாக்கின. பட்டறைத் தொழில்முறை போய் அதனிடத்தில் பிரம்மாண்டமான நவீனத் தொழில் துறை எழுந்தது; பட்டறைத் தொழில் மத்தியதர வர்க்கத்தாரின் இடத்தில் கோடீஸ்வரத் தொழிலதிபர்கள், பெரும் பெரும் தொழில் துறைப் பொருளுற்பத்திச் சேனைகளது அதிபதிகள், தற்காலத்து முதலாளிகள் உருவாயினர்.

நவீனத் தொழில் துறை அனைத்து உலகச் சந்தையை நிறுவியிருக்கிறது; அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதானது இதற்குப் பாதையைச் செப்பனிட்டது. வாணிபத்தையும் கடல்வழிப் போக்குவரத்தையும் நிலவழிப் போக்குவரத்தையும் அனைத்து உலகச் சந்தை பிரமாதமாய் வளரச் செய்திருக்கிறது. இந்த வளர்ச்சி அதன் பங்கிற்கு மீண்டும் தொழில் துறையின் பெருக்கத்தை ஊக்குவித்தது. எந்த அளவுக்குத் தொழில் துறையும் வாணிபமும் கப்பல் போக்குவரத்தும் ரயில்பாதைகளும் விரிவடைந்து சென்றனவோ, அதே அளவுக்கு முதலாளித்துவ வர்க்கமும் வளர்ச்சியுற்று ஓங்கிற்று, தனது மூலதனத்தைப் பெருகச் செய்து கொண்டது, மத்திய காலம் விட்டுச் சென்றிருந்த ஒவ்வொரு வர்க்கத்தையும் பின்னிலைக்குத் தள்ளிற்று.

இவ்வாறு, நவீன முதலாளித்துவ வர்க்கம் நீண்டதொரு வளர்ச்சிப் போக்கின் விளைவாய், உற்பத்தி முறைகளிலும் பரிவர்த்தனை முறைகளிலும் வரிசையாய் ஏற்பட்ட புரட்சிகளின் விளைவாய் உருவானதே என்பதைக் காண்கிறோம்.

முதலாளித்துவ வர்க்கம் அதனுடைய வளர்ச்சியின் ஒவ்வொரு படிக்கும் ஏற்றவாறு அரசியல் வெற்றிகளும் அடைந்தது. பிரபுத்துவக் கோமான்களது ஆதிக்கத்தில் ஒடுக்கப்பட்ட ஒரு வகுப்பாகவும், மத்திய காலக் கம்யூனில்* ஆயுத

---

* ''கம்யூன்'' என்பது பிரெஞ்சு நாட்டில் உதித்தெழுந்து வந்த நகரங்கள், அவற்றின் பிரபுத்துவக் கோமான்களிடமிருந்தும் ஆண்டான்களிடமிருந்தும் வட்டாரத் தன்னாட்சியும் அரசியல் உரிமைகளும் வென்று ''மூன்றாவது ஆதீனம்'' ["Third Estate"] ஆகும் முன்னரே தமக்கு இட்டுக் கொண்ட பெயராகும். பொதுவாய் இங்கு முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இங்கிலாந்தும், அதன்

மேந்திய தன்னாட்சிக் கழகமாகவும் இருந்தது; இங்கே (இத்தாலியிலும் ஜெர்மனியிலும் காணப்பட்டதுபோல) சுயேச்சை நகரக் குடியரசாகவும், அங்கே (பிரான்சில் காணப்பட்டது போல) வரிக்குரிய ''மூன்றாவது ஆதீன''மாகவும் விளங்கிற்று; பிற்பாடு பட்டறைத் தொழில் மேலோங்கிய காலத்தில் பிரபுத்துவக் கோமான்களுக்கு எதிராய் அரைப் பிரபுத்துவ முடியரசுக்கோ, வரம்பிலா முடியரசுக்கோ துணை நின்றது, மொத்தத்தில் முடிப் பேரரசுகளுக்கு ஆதாரத் தூணாயிற்று; முடிவில் நவீனத் தொழில் துறையும் அனைத்து உலகச் சந்தையும் நிறுவப்பட்டதும் தனக்கு நவீன காலப் பிரதிநிதித்துவ அரசினில் ஏகபோக அரசியல் ஆதிக்கம் வென்று கொண்டது. நவீன கால அரசின் ஆட்சியதிகாரமானது முதலாளித்துவ வர்க்கம் அனைத்துக்குமான பொது விவகாரங்களை நிர்வகிக்கும் குழுவே அன்றி வேறல்ல.

வரலாற்று அரங்கில் முதலாளித்துவ வர்க்கம் மிகவும் புரட்சிகரமான பங்கு ஆற்றியிருக்கிறது.

எங்கெல்லாம் முதலாளித்துவ வர்க்கம் ஆதிக்க நிலை பெற்றதோ, அங்கெல்லாம் அது எல்லாப் பிரபுத்துவ உறவுகளுக்கும், தந்தைவழிச் சமுதாய உறவுகளுக்கும், கிராமாந்திரப் பாரம்பரிய உறவுகளுக்கும் முடிவு கட்டியது. மனிதனை ''இயற்கையாகவே மேலானோருக்குக்'' கீழ்ப்படுத்திக் கட்டிப் போட்ட பல்வேறு வகையான பிரபுத்துவ பந்தங்களையும் ஈவிரக்கமின்றி அறுத்தெறிந்துவிட்டு, மனிதனுக்கும் மனிதனுக்கும் அப்பட்டமான தன்னலத்தைத் தவிர, பரிவு உணர்ச்சியில்லாப் ''பணப் பட்டுவாடா''வைத் தவிர வேறு —ஒட்டுமில்லை உறவுமில்லை என்றாக்கிற்று. சமயத்துறைப் பக்திப் பரவசம், பேராண்மையின் வீராவேசம், சிறுமதியோராது உணர்ச்சிப் பசப்பு ஆகிய புனிதப் பேரானந்தங்

---

அரசியல் வளர்ச்சிக்கு பிரான்சும் மாதிரி நாடுகளாய்க் கொள்ளப்படுகின்றன. (1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்சின் குறிப்பு.)

கம்யூன்—இத்தாலியிலும் பிரான்சிலும் நகரவாசிகள் தன்னாட்சிக்கான முதலாவது உரிமைகளைத் தமது பிரபுத்துவக் கோமான்களிடமிருந்து விலை கொடுத்தோ, போராடியோ பெற்ற பிறகு தமது நகர சமுதாயங்களுக்கு இட்டுக்கொண்ட பெயர். (1890ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்சின் குறிப்பு.)

களை எல்லாம் தன்னலக் களிப்பெனும் உறைபனிக் குளிர் நீரில் மூழ்க்கடித்துள்ளது. மனிதனது மாண்பினைப் பரிவர்த்தனை மதிப்பாய் மாற்றியிருக்கிறது. சாசனங்களில் பிரகடனம் செய்யப்பட்ட விலக்கவோ துறக்கவோ முடியாத எண்ணிலடங்காச் சுதந்திரங்களுக்குப் பதிலாய், வெட்கங்கெட்ட வாணிபச் சுதந்திரமெனும் ஒரேயொரு சுதந்திரத்தை ஆசனத்தில் அமர்த்தி வைத்திருக்கிறது. சுருங்கச் சொல்வதெனில் சமயத்துறைப் பிரமைகளாலும் அரசியல் பிரமைகளாலும் திரையிட்டு மறைக்கப்பட்ட சுரண்டலுக்குப் பதிலாய், முதலாளித்துவ வர்க்கம் வெட்க உணர்ச்சியற்ற அம்மணமான, நேரடியான, மிருகத்தனமான சுரண்டலை நிலை நாட்டியிருக்கிறது.

இதுகாறும் போற்றிப் பாராட்டப்பட்டு, பணிவுக்கும் பக்திக்குமுரியதாய்க் கருதப்பட்ட ஒவ்வொரு பணித் துறையையும் முதலாளித்துவ வர்க்கம் மகிமை இழக்கச் செய்துள்ளது. மருத்துவரையும் வழக்கறிஞரையும் சமய குருவையும் கவிஞரையும் விஞ்ஞானியையும் அது தனது கூலியுழைப்பாளர்கள் ஆக்கிவிட்டது.

குடும்பத்திடமிருந்து முதலாளித்துவ வர்க்கம் அதன் உணர்ச்சி நயமுகத்திரையைக் கிழித்தெறிந்து, குடும்ப உறவை வெறும் காசுபண உறவாய்ச் சிறுமையுறச் செய்துவிட்டது.

பிற்போக்கர்கள் போற்றிப் பாராட்டுகிறார்களே மத்திய காலத்துப் பேராண்மையின் முரட்டுக் கூத்து, அது எவ்வளவு மூடத்தமான செயலின்மையைத் தனது உற்ற துணையாய்க் கொண்டிருந்தது என்பதை முதலாளித்துவ வர்க்கம் நிதர்சனமாக்கியிருக்கிறது. மனிதச் செயற்பாடு என்னவெல்லாம் செய்ய வல்லது என்பதை முதன்முதலாய்த் தெரியப்படுத்தியது முதலாளித்துவ வர்க்கம்தான். எகிப்திய பிரமிடுகளையும் ரோமானியக் கட்டுக்கால்வாய்களையும் கோதித் தேவாலயங்களையும் மிஞ்சிய மாபெரும் அதிசயங்களை அது சாதித்திருக்கிறது; முற்காலத்துக் குடிப் பெயர்ச்சிப் பயணங்களும் சிலுவைப் போர்ப் பயணங்களும்[9] அற்பகாரியங்களாய்த் தோன்றும்படியான தீரப் பயணங்களை நடத்தியிருக்கிறது.

முதலாளித்துவ வர்க்கத்தால் ஓயாது ஒழியாது உற்பத்திக் கருவிகளிலும், இதன் மூலம் உற்பத்தி உறவுகளிலும்,

இவற்றுடன் கூடவே சமூக உறவுகள் அனைத்திலுமே புரட்சி கர மாற்றங்களை ஏற்படுத்தாமல் வாழ முடியாது. ஆனால் இதற்கு முந்திய தொழில் வர்க்கங்களுக்கு எல்லாம் பழைய உற்பத்தி முறைகளை மாற்றமில்லா வடிவில் அப்படியே பாது காத்துக் கொள்வதுதான் வாழ்வதற்குரிய முதலாவது நிபந் தனையாய் இருந்தது. ஓயாது ஒழியாது உற்பத்தியில் ஏற் படும் புரட்சிகர மாற்றங்களும் சமூக உறவுகள் யாவும் இடை யறாது அமைதி குலைதலும் முடிவே இல்லாத நிச்சயமற்ற நிலைமையும் கொந்தளிப்பும் முதலாளித்துவச் சகாப்தத்தை அதற்கு முந்திய எல்லாச் சகாப்தங்களிலிருந்தும் வேறு படுத்திக் காட்டுகின்றன. நிலையான, இறுகிக் கெட்டிப்பிடித்துப் போன எல்லா உறவுகளும், அவற்றுடன் இணைந்த பழங் காலத் தப்பெண்ணங்களும் கருத்துகளும் துடைத்தெறியப் படுகின்றன, புதிதாய் உருவாகியவை எல்லாம் இறுகிக் கெட் டியாவதற்கு முன்பே பழமைப்பட்டுவிடுகின்றன. கெட்டி யானவை யாவும் கரைந்து காற்றிலே கலக்கின்றன, புனித மானவை யாவும் புனிதம் இழக்கின்றன, முடிவில் மனிதன் தெளிந்த புத்தியுடன் தனது வாழ்க்கையின் மெய்யான நிலைமைகளையும் தனது சக மனிதர்களுடன் தனக்குள்ள உறவு களையும் நேர்நின்று உற்று நோக்க வேண்டியதாகிறது.

முதலாளித்துவ வர்க்கத்தின் உற்பத்திப் பொருள் களுக்குத் தொடர்ந்து மேலும் மேலும் விரிவடைந்து செல் லும் சந்தை அவசியமாகும். இந்த அவசியம் முதலாளித்துவ வர்க்கத்தைப் புவிப்பரப்பு முழுதும் செல்லும்படி விரட்டு கிறது. அது எல்லா இடங்களுக்கும் சென்று ஒட்டிக் கொள்ள வேண்டியதாகிறது, எல்லா இடங்களிலும் குடியேற வேண் டியதாகிறது, எல்லா இடங்களிலும் தொடர்புகள் நிறுவிக் கொள்ள வேண்டியதாகிறது.

அனைத்து உலகச் சந்தையைப் பயன்படுத்திச் செயல்படு வதன் மூலம் முதலாளித்துவ வர்க்கம் ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தியையும் நுகர்வையும் அனைத்துலகத் தன்மை பெறச் செய்திருக்கிறது. பிற்போக்கர்கள் கடுங்கோபங் கொள்ளும் படி அது தொழில்களது காலுக்கு அடியிலிருந்து அவற்றின் தேசிய அடிநிலத்தை அகற்றியுள்ளது. நெடுங்காலமாய் நாட் டிலே இருந்துள்ள தொழில்கள் யாவும் அழிக்கப்பட்டு விட் டன, அல்லது நாள் தோறும் அழிக்கப்பட்டு வருகின்றன. புதிய தொழில்களால் அவை அப்புறப்படுத்தப்படுகின்றன.

இந்தப் புதிய தொழில்களைத் தோன்றச் செய்வது நாகரிக நாடுகள் யாவற்றுக்கும் ஜீவமரணப் பிரச்சினையாகிவிடுகிறது. முன்பிருந்தவற்றைப் போல் இந்தப் புதிய தொழில்கள் உள் நாட்டு மூலப் பொருள்களை மட்டும் உபயோகிப்பவை அல்ல, தொலைதூரப் பிரதேசங்களிலிருந்து தருவிக்கப்படும் மூலப் பொருள்களை உபயோகிப்பவை. இவற்றின் உற்பத்திப் பொருள்கள் தாய்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டு எல்லாப் பகுதிகளிலும் நுகரப்படு கிறவை. தாய்நாட்டு உற்பத்திப் பொருள்களால் பூர்த்தி செய்யப்பட்ட பழைய தேவைகளுக்குப் பதில், தொலைதூர நாடுகள், மண்டலங்களது உற்பத்திப் பொருள்களால் பூர்த்தி செய்யப்படும் புதிய தேவைகள் எழுகின்றன. வட்டாரங்கள், நாடுகள் இவற்றின் பழைய ஒதுக்க நிலைக்கும் தன்னிறைவுக்கும் பதில், எல்லாத் திசைகளிலுமான நெருங்கிய தொடர்பும் உலக அளவில் நாடுகளுக்கிடையிலான சார்புடைமையும் ஏற்படுகின்றன. பொருள் உற்பத்தியில் எப்படியோ அப்படியே தான் அறிவுத் துறை உற்பத்தியிலும் தனித் தனி நாடுகளுடைய அறிவுத் துறைப் படைப்புகள் எல்லா நாடுகளுக்குமான பொதுச் சொத்தாகின்றன. தேசிய ஒரு தலைப்பட்ச பார்வையும் குறுகிய மனப்பாங்கும் மேலும் மேலும் இயலாதனவாகின்றன. நாட்டளவிலும் மண்டல அளவிலுமான எத்தனையோ பல இலக்கியங்களிலிருந்து ஓர் அனைத்துலக இலக்கியம் உருவாகின்றது.

உற்பத்திக் கருவிகள் அனைத்தின் அதிவேக அபிவிருத்தியின் மூலமும், போக்குவரத்துச் சாதனங்களின் பிரமாதமான மேம்பாட்டின் மூலமும் முதலாளித்துவ வர்க்கம் எல்லாத் தேசங்களையும், மிகவும் அநாகரிகக் கட்டத்தில் இருக்கும் தேசங்களையும்கூட, நாகரிக வட்டத்துக்குள் இழுக்கிறது. தன்னுடைய பண்டங்களின் மலிவான விலைகளை அது சக்தி வாய்ந்த பீரங்கிகளாய்க் கொண்டு, சீன மதிலை ஒத்த எல்லாத் தடைமதில்களையும் தகர்த்திடுகிறது; அநாகரிகக் கட்டத்தில் இருப்போருக்கு அந்நியர்பால் உள்ள முரட்டுப் பிடிவாத வெறுப்பைப் பணிய வைக்கிறது. ஏற்காவிடில் அழியவே நேருமென்ற நிர்ப்பந்தத்தின் மூலம் அது எல்லாத் தேசங்களையும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை ஏற்கச் செய்கிறது; நாகரிகம் என்பதாய்த் தான் கூறிக்கொள்வதைத் தழுவும்படி, அதாவது முதலாளித்துவமயமாகும்

படி எல்லாத் தேசங்களையும் பலவந்தம் செய்கிறது. சுருங்கக் கூறுமிடத்து, அப்படியே தன்னை உரித்து வைத்தாற் போன்றதோர் உலகைப் படைத்திடுகிறது அது.

முதலாளித்துவ வர்க்கம் நாட்டுப்புறத்தை நகரங்களது ஆட்சிக்குக் கீழ்ப்படச் செய்துள்ளது, மாபெரும் நகரங்களை அது உதித்தெழ வைத்திருக்கிறது; கிராம மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் நகர மக்கள் தொகையை வெகுவாய் அதிகரிக்கச் செய்திருக்கிறது; இவ்விதம் மக்களில் ஒரு கணிசப் பகுதியோரை கிராம வாழ்க்கையின் மடமையிலிருந்து மீட்டிருக்கிறது. எப்படி அது நாட்டுப்புறத்தை நகரங்களைச் சார்ந்திருக்கச் செய்துள்ளதோ, அதே போல அநாகரிக நிலையிலும் குறை நாகரிக நிலையிலுமுள்ள நாடுகளை நாகரிக நாடுகளையும், விவசாயிகளது நாடுகளை முதலாளிகளது நாடுகளையும், கிழக்கு நாடுகளை மேற்கு நாடுகளையும் சார்ந்திருக்கச் செய்துள்ளது.

மக்கள் தொகை, உற்பத்திச் சாதனங்கள், சொத்து இவற்றின் சிதறுண்ட நிலைக்கு முதலாளித்துவ வர்க்கம் மேலும் மேலும் முடிவு கட்டி வருகிறது. மக்கள் தொகையை அது அடர்ந்து திரட்சி பெறச் செய்திருக்கிறது, உற்பத்திச் சாதனங்களை மையப்படுத்தியிருக்கிறது, சொத்துகளை ஒரு சிலர் கையில் குவிய வைத்திருக்கிறது. இதன் தவிர்க்க வொண்ணுத விளைவு என்னவெனில், அரசியல் அதிகாரமும் மையப்படுத்தப்பட்டது. தனித்தனி நலன்களும் சட்டங்களும் அரசாங்கங்களும் வரிவிதிப்பு முறைகளும் கொண்டனவாய்ச் சுயேச்சையாகவோ, அல்லது தளர்ந்த இணைப்புடனே இருந்த மாநிலங்கள் ஒரே அரசாங்கத்தையும் ஒரே சட்டத் தொகுப்பையும் தேச அளவிவான ஒரே வர்க்க நலனையும் ஒரே தேச எல்லையையும் ஒரே சுங்கவரி முறையும் கொண்ட ஒரே தேசமாய் ஒருசேர இணைக்கப்பட்டன.

முதலாளித்துவ வர்க்கம் ஒரு நூருண்டுகூட நிறைவுருத அதன் ஆட்சிக் காலத்தில், இதற்கு முந்திய எல்லாத் தலைமுறைகளுமாய்ச் சேர்ந்து உருவாக்கியதைக் காட்டிலும் மலைப்பு தட்டும்படியான பிரம்மாண்ட உற்பத்தி சக்திகளைப் படைத்தமைத்திருக்கின்றது. இயற்கை சக்திகளை மனிதனுக்கு அடிபணியச் செய்தல், இயந்திரச் சாதனங்கள், தொழில் துறையிலும் விவசாயத்திலும் இரசாயனத்தைப் பயன்படுத்தல், நீராவிக் கப்பல் போக்குவரத்து, ரயில்

பாதைகள், மின்விசைத் தந்தி, முழுமுழு கண்டங்களைத் திருத்திச் சாகுபடிக்குச் செப்பனிடுதல், ஆறுகளைக் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றவாய் ஒழுங்கு செய்தல், மனிதன் அடியெடுத்து வைத்திராத இடங்களில் மாயவித்தை புரிந்தாற்போல் பெரும் பெரும் தொகுதிகளிலான மக்களைக் குடியேற்றுவித்தல்—இம்மாதிரியான பொருளுற்பத்தி சக்திகள் சமூக உழைப்பின் மடியில் சயனம் புரியுமென இதற்கு முந்திய எந்த நூற்றுண்டாவது கனவிலும் நினைத்திருக்குமா?

ஆக நாம் காண்பது என்னவெனில்: முதலாளித்துவ வர்க்கம் உருப்பெற்று எழுவதற்கு அடிப்படையாய் இருந்த பொருளுற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்கள் பிரபுத்துவ சமுதாயத்தில் ஜனித்தவை. இந்தப் பொருளுற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்களது வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், பிரபுத்துவ சமுதாயத்தின் பொருளுற்பத்தி, பரிவர்த்தனை உறவுகள், விவசாயத்துக்கும் பட்டறைத் தொழிலுக்குமான பிரபுத்துவ ஒழுங்கமைப்பு—சுருக்கமாய்ச் சொல்வதெனில் பிரபுத்துவச் சொத்துடைமை உறவுகள்—வளர்ச்சியுற்றுவிட்ட உற்பத்தி சக்திகளுக்கு ஒவ்வாதனவாயின; அவை பொருளுற்பத்திக்குப் பூட்டப்பட்ட கால் விலங்குகளாய் மாறின. அந்த விலங்குகளை உடைத்தெறிய வேண்டியிருந்தது; அவை உடைத்தெறிப்பட்டன.

அவற்றின் இடத்தில் தடையில்லாப் போட்டியும், அதனுடன் கூடவே அதற்குத் தகவமைந்த சமூக,அரசியல் அமைப்பும் முதலாளித்துவ வர்க்கத்தினுடைய பொருளாதார, அரசியல் ஆதிக்கமும் வந்தமர்ந்து கொண்டன.

இதைப் போன்றதோர் இயக்கம் இப்போது நம் கண்ணெதிரே நடைபெற்று வருகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி, பரிவர்த்தனை உறவுகளையும் முதலாளித்துவச் சொத்துடைமை உறவுகளையும் கொண்டதாகிய நவீன முதலாளித்துவ சமுதாயம், மாயவித்தை புரிந்து தோற்றுவித்தாற் போல் இவ்வளவு பிரம்மாண்டப் பொருளுற்பத்திச் சாதனங்களையும் பரிவர்த்தனைச் சாதனங்களையும் தோற்றுவித்திருக்கும் இச்சமுதாயம், பாதாள உலகிலிருந்து தனது மந்திரத்தின் வலிமையால் தருவித்த சக்திகளை அடக்கியாள முடியாமற் போன மந்திரவாதியின் நிலையில் இருக்கக் காண்கிறோம். கடந்த சில பத்தாண்டுகளது தொழில், வாணிப

வரலாறே, நவீனப் பொருளுற்பத்தி சக்திகள் நவீனப் பொருளுற்பத்தி உறவுகளை எதிர்த்து, முதலாளித்துவ வர்க்கமும் அதனுடைய ஆதிக்கமும் நிலவுவதற்கு அவசியமான நிலைமைகளாகிய சொத்துடைமை உறவுகளை எதிர்த்துப் புரிந்திடும் கலகத்தின் வரலாறுதான் இதைத் தெளிவுபடுத்த, கால அலை வட்ட முறையில் திரும்பத் திரும்ப எழும் வாணிப நெருக்கடிகளைக் குறிப்பிட்டால் போதும்—திரும்பத் திரும்ப எழுந்து, ஒவ்வொரு தரமும் முன்னிலும் அபாயகரமான முறையில் இந்நெருக்கடிகள் முதலாளித்துவ சமுதாயம் அனைத்தின் நிலவுதலை ஆட்சேபக் கேள்விக்குரிய தாக்குகின்றன. இந்த வாணிப நெருக்கடிகளின் போது ஒவ்வொரு தரமும் இருப்பிலுள்ள உற்பத்திப் பொருள்களில் மட்டுமின்றி, ஏற்கெனவே உருவாக்கப்பட்ட உற்பத்தி சக்திகளிலும் ஒரு பெரும் பகுதி அழிக்கப்படுகிறது. இந்த நெருக்கடிகளின் போது, இதற்கு முந்திய எல்லாச் சகாப்தங்களிலும் அடி முட்டாள்தனமாய்த் தோன்றியிருக்கும் படியான ஒரு கொள்ளை நோய்—அமித உற்பத்தி என்னும் கொள்ளை நோய்—மூண்டு விடுகிறது. திடுமென சமுதாயம் பின்னோக்கி இழுக்கப்பட்டுச் சிறிது காலத்துக்குக் காட்டுமிராண்டி நிலையில் விடப்படக் காண்கிறோம். பெரும் பஞ்சம், சர்வநாச முழுநிறைப் போர் ஏற்பட்டு வாழ்க்கைத் தேவைப் பொருள்கள் எவையும் கிடைக்காதபடி செய்துவிட்டாற் போலாகிறது; தொழிலும் வாணிபமும் அழித்தொழிக்கப் பட்டுவிட்டதாய்த் தோன்றுகிறது—ஏன் இப்படி? ஏனென்றால் நாகரிகம் மிதமிஞ்சிவிட்டது, வாழ்க்கைத் தேவைப் பொருள்கள் அளவு மீறிவிட்டன, தொழிலும் வாணிபமும் எல்லை கடந்துவிட்டன. சமுதாயத்தின் வசமுள்ள உற்பத்தி சக்திகள் முதலாளித்துவச் சொத்துடைமை உறவுகளின் வளர்ச்சிக்கு இனி உதவுவதாய் இல்லை. மாறாக, அவை இந்த உறவுகளுக்குப் பொருந்தாத படி அளவுமீறிவலிமை மிக்கவையாகிவிட்டன, இந்த உறவுகள் அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாகிவிட்டன. பொருளுற்பத்தி சக்திகள் இந்தத் தடைகளைக் கடக்க முற்பட்டதும் அவை முதலாளித்துவ சமுதாயம் முழுமையிலும் குழப்பம் உண்டாக்குகின்றன, முதலாளித்துவச் சொத்துடைமை நிலவுதற்கே அபாயத்தை ஏற்படுத்துகின்றன. அவை உற்பத்தி செய்யும் செல்வத்துக்குத் தம்முள் இடம் போதாதபடி முதலாளித்துவச் சமூக

உறவுகள் குறுகலாயிருக்கின்றன இந்த நெருக்கடிகளை முதலாளித்துவ வர்க்கம் எப்படிச் சமாளிக்கிறது? ஒரு புறத்தில், வலுக்கட்டாயமாய் உற்பத்தி சக்திகளில் ஒரு பெரும் பகுதியை அழிப்பதன் மூலமும், மறு புறத்தில் புதிய சந்தைகளை வென்று கைப்பற்றுவதன் மூலமும் பழைய சந்தைகளை இன்னும் அழுத்திப் பிழிவதன் மூலமும்—அதாவது மேலும் விரிவான, மேலும் நாசகரமான நெருக்கடிகளுக்கு வழி கோலுவதன் மூலமும் நெருக்கடிகளைத் தடுப்பதற்கான வழிதுறைகளைக் குறைப்பதன் மூலமும்.

எந்த ஆயுதங்களைக் கொண்டு முதலாளித்துவ வர்க்கம் பிரபுத்துவத்தை வீழ்த்திற்றோ, அதே ஆயுதங்கள் இப்பொழுது முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய்த் திருப்பப்படுகின்றன.

முதலாளித்துவ வர்க்கம் தன்னை அழித்தொழிக்கப் போகும் ஆயுதங்களை வார்த்தெடுத்திருப்பதோடு அன்னியில், அந்த ஆயுதங்களைப் பிரயோகிப்பதற்குரிய ஆட்களையும்—பாட்டாளிகளாகிய நவீனத் தொழிலாளி வர்க்கத்தையும்—தோன்றியெழச் செய்திருக்கிறது.

எந்த அளவுக்கு முதலாளித்துவ வர்க்கம், அதாவது மூலதனம் வளர்கிறதோ, பாட்டாளி வர்க்கமாகிய நவீனத் தொழிலாளி வர்க்கமும் அதே அளவுக்கு வளர்கிறது. இந்தத் தொழிலாளர்கள் தமக்கு வேலை தேடிக் கொள்ள முடிகிற வரைதான் வாழ முடியும், தமது உழைப்பு மூலதனத்தைப் பெருகச் செய்யும் வரைதான் வேலை தேடிக் கொளள் முடியும். சிறுகச் சிறுகத் தம்மைத் தாமே விலைக்கு விற்க வேண்டிய நிலையிலுள்ள இந்தத் தொழிலாளர்கள், ஏனைய எல்லா விற்பனைப் பொருள்களையும் போல் தாமும் ஒரு பரிவர்த்தனைப் பண்டமாகவே இருக்கிறார்கள்; ஆகவே போட்டா போட்டியின் எல்லா அசம்பாவிதங்களுக்கும், சந்தையின் எல்லா ஏற்றயிறக்க அலைவுகளுக்கும் இலக்காகிறார்கள்.

விரிந்த அளவில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதன் விளைவாகவும், உழைப்புப் பிரிவினையின் விளைவாகவும் பாட்டாளிகளுடைய வேலையானது தனித்தன்மையை முற்றும் இழந்துவிட்டது; ஆதலால் தொழிலாளிக்கு அவரது வேலை அறவே சுவையற்றதாகிவிட்டது. இயந்திரத்தின் துணையுறுப்பு ஆகிவிடுகிறார் அவர்; மிகவும் எளிமையானதும்,

அனுப்புத் தட்டும்படியாய் ஒரே விதமானதும், ஆகவே சுலபமாய்ப் பெறத் தக்கதுமாகிய கைத்திறன்தான் அவருக்கு வேண்டியிருக்கிறது. எனவே தொழிலாளியினது உற்பத்திச் செலவு அனேகமாய் முற்றிலும் அவரது பராமரிப்புக்கும் அவரது இன விருத்திக்கும் தேவையான பிழைப்புச் சாதனங்களுக்கு மேற்படாதபடி குறுகிவிடுகிறது. ஆனால் பரிவர்த்தனைப் பண்டத்தின் விலை—ஆகவே உழைப்பின் விலை—அதன் உற்பத்திச் செலவுக்குச் சமமாகும். இதனால் வேலை எவ்வளவுக்கு எவ்வளவு வெறுக்கத்தக்கதாய் அமைகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு கூலியும் குறைகிறது. அது மட்டுமல்ல, இயந்திரங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவதும் உழைப்புப் பிரிவினையும் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு வேலைப் பளுவும் அதிகமாகிறது—வேலை நேரத்தை அதிகமாக்குவதன் மூலமோ, குறிப்பிட்ட நேரத்தில் வாங்கப்படும் வேலையைக் கூடுதலாக்குவதன் மூலமோ, இயந்திரங்களின் வேகத்தை அதிகரிப்பதன் மூலமோ, இன்ன பிற வழிகளிலோ இது நடந்தேறுகிறது.

நவீனத் தொழில் துறையானது தந்தைவழிக் குடும்ப ஆண்டானுடைய சிறிய தொழிற்கூடத்தைத் தொழில் முதலாளியினது பெரிய தொழிற்சாலையாய் மாற்றியுள்ளது. தொழிற்சாலையினுள் நெருக்கமாய்க் கூட்டப்பட்டிருக்கும் திரளான தொழிலாளர்கள் படையாட்களைப் போல் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறார்கள். தொழில் துறைச் சேனையின் படையாட்களாகிய இவர்கள், ஆபீசர்கள் என்றும் சார்ஜெண்டுகள் என்றும் முற்றும் படிநிலைக் கிரமத்தில் அமைந்த படைத்தலைமையின்கீழ் இருத்தப்படுகிறார்கள். இவர்கள் அடிமைகளாய் இருப்பது முதலாளித்துவ வர்க்கத்துக்கும் முதலாளித்துவ அரசுக்கும் மட்டுல்ல, நாள்தோறும் மணிதோறும் இயந்திரத்தாலும், மேலாளர்களாலும், யாவருக்கும் முதலாய்த் தனித்தனி முதலாளித்துவ ஆலையதிபராலும் இவர்கள் அடிமைகளாக்கப்படுகிறார்கள். இந்தக் கொடுங்கோன்மை எவ்வளவுக்கு எவ்வளவு பகிரங்கமாய் இலாபத்தைத் தனது இறுதி முடிவாகவும் குறிக்கோளாகவும் பிரகடனம் செய்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் இது இழிவானதாய், வெறுக்கத்தக்கதாய், கசப்பூட்டுவதாய் இருக்கிறது.

உடலுழைப்புக்கு வேண்டிய திறமையும் உடல் வலியும் குறையக் குறைய, அதாவது நவீனத் தொழில் துறையின் வளர்ச்சி மட்டம் உயர உயர, ஆடவரின் உழைப்பு மேலும் மேலும் அகற்றப்பட்டு அதனிடத்தில் பெண்களின் உழைப்பு அமர்த்தப்படுகிறது. வயது வேறுபாடும் ஆண், பெண் வித்தியாசமும் இனி தொழிலாளி வர்க்கத்துக்குத் தனியான எந்த சமூக முக்கியத்துவமும் இல்லாமல் போய்விட்டன. எல்லோருமே உழைப்புக் கருவிகள்தான், உபயோகித்துக் கொள்வதற்கு ஆகும் செலவுதான் வயதுக்கும் பாலுக்கும் ஏற்ப அதிகமாகவோ குறைவாகவோ இருக்கிறது.

ஆலை முதலாளியால் இதுவரை சுரண்டப்பட்ட தொழிலாளி, இந்தச் சுரண்டல் முடிவுற்று தனது கூலியைப் பண வடிவில் பெற்றுக் கொண்டவுடனே, முதலாளித்துவ வர்க்கத்தின் பிற பகுதியோரான வீட்டுச் சொந்தக்காரராலும் கடைக்காரராலும் அடகு வட்டிக்கடைக்காரராலும் இன்ன பிறராலும் தாக்கப்படுகிறார்.

மத்தியதர வர்க்கத்தின் கீழ்த்தட்டுகளைச் சேர்ந்த சிறு உற்பத்தியாளர்கள், கடைக்காரர்கள், சிறு வாடகை, வட்டி வருவாயினர், கைவினைஞர்கள், விவசாயிகள் ஆகிய எல்லோரும் சிறிது சிறிதாய்த் தாழ்வுற்று பாட்டாளி வர்க்கத்தை வந்தடைகிறார்கள். காரணம் என்னவெனில், முதலாவதாக அவர்களிடமுள்ள சொற்ப அளவு மூலதனம் நவீனத் தொழிலின் வீச்சுக்குப் போதாமல் பெரிய முதலாளிகளுடைய போட்டிக்குப் பலியாகிவிடுகிறது, இரண்டாவதாக அவர்களுடைய தனித் தேர்ச்சியானது பொருளுற்பத்தியின் புதிய முறைகளால் மதிப்பற்றதாக்கப்படுகிறது. இவ்விதம் தேச மக்கள் தொகுதியைச் சேர்ந்த எல்லா வர்க்கங்களிடமிருந்தும் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆட்கள் திரட்டப்படுகிறார்கள்.

பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி பல்வேறு கட்டங்களைக் கொண்டதாகும். பிறந்ததுமே அது முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துத் தனது போராட்டத்தைத் துவக்கிவிடுகிறது. ஆரம்பத்தில் இந்தப் போராட்டத்தைத் தனிப்பட்ட தொழிலாளர்களும், அடுத்து ஓர் ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்களும், பிறகு ஒரு வட்டாரத்தில் ஒரு தொழிற்கிளையைச் சேர்ந்த தொழிலாளர்களும் தம்மை நேரடியாய்ச் சுரண்டும் தனிப்பட்ட முதலாளிகளை

எதிர்த்து நடத்துகிருர்கள். முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகளை எதிர்த்து அவர்கள் தமது தாக்குதல்களைத் தொடுக்கவில்லை; உற்பத்திக் கருவிகளையே தாக்குகிருர்கள். தமது உழைப்புக்குப் போட்டியாய் வந்த இறக்குமதிப் பொருள்களை அவர்கள் அழிக்கிருர்கள்; இயந்திரங்களைச் சுக்கு நூருய்த் தகர்க்கிருர்கள்; ஆலைகளுக்குத் தீவைத்து எரிக்கிருர்கள்; மறைந்துவிட்ட மத்திய காலத்துத் தொழிலாளி நிலையை வன்முறையின் மூலம் மீட்டமைக்க முயலுகிருர்கள்.

இந்தக் கட்டத்தில் தொழிலாளர்கள் இன்னமும் தம்மிடையே தொடர்பின்றி நாடெங்கிலும் சிதறியமைந்த திரளினராய் இருக்கிருர்கள்; தம்மிடையிலான போட்டியால் பிளவுபட்டிருக்கிருர்கள். எங்காவது ஒன்றுபட்டு முன்னிலும் ஒருங்கிணைந்த தொகுப்புகள் ஆகிருர்கள் என்ருல், இன்னமும் அது அவர்களது செயல் திறன் மிக்க சொந்த ஒற்றுமையின் விளைவு அல்ல; முதலாளித்துவ வர்க்கத்தின் ஒற்றுமையால் ஏற்பட்டதாகவே இருக்கிறது. முதலாளித்துவ வர்க்கம் தனது சொந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பாட்டாளி வர்க்கம் அனைத்தையும் இயங்க வைக்க வேண்டியிருக்கிறது; சிறிது காலத்துக்கு அதனுல் இப்படி இயங்க வைக்கவும் முடிகிறது. ஆகவே இந்தக் கட்டத்தில் பாட்டாளிகள் தமது பகைவர்களை எதிர்த்துப் போராடவில்லை; பகைவர்களின் பகைவர்களாகிய எதேச்சாதிகார முடியாட்சியின் மீதமிச்சக் கூறுகளையும் நிலச்சுவான்தார்களையும் தொழில்துறையைச் சேராத முதலாளிகளையும் குட்டிமுதலாளித்துவப் பிரிவோரையும்தான் எதிர்த்துப் போராடுகிருர்கள். இவ்விதம் வரலாறு வழிப்பட்ட இந்த இயக்கம் முற்றிலும் முதலாளித்துவ வர்க்கத்தின் கைக்குள் இருக்கிறது; இவ்வழியில் பெறப்படும் ஒவ்வொரு வெற்றியும் முதலாளித்துவ வர்க்கத்தின் வெற்றியாகிறது.

ஆனுல் தொழில்துறையின் வளர்ச்சியைத் தொடர்ந்து தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் அதிகமாவதோடு கூட, மேலும் மேலும் பெருந் திரள்களாய் ஒன்றுகுவிகிறது; அதன் பலம் கூடுதலாகிச் செல்கிறது; அது இந்தப் பலத்தை மேன்மேலும் உணர்கின்றது. இயந்திரச் சாதனங்கள் உழைப்பின் இடையிலான பாகுபாடுகளை

ஒழித்து அனேகமாய் எங்கும் கூலி விகிதங்களைக் கீழ்நிலையிலான ஒரே மட்டத்துக்குக் குறையச் செய்வதற்கு ஏற்ப, பாட்டாளி வர்க்க அணிகளினுள் வெவ்வேறு நலன்களும் வாழ்க்கை நிலைமைகளும் மேலும் மேலும் சமனமாக்கப் படுகின்றன. முதலாளித்துவ வர்க்கத்தாரிடையே வளரும் போட்டியும் இதன் விளைவாய் மூளும் வாணிப நெருக்கடிகளும் தொழிலாளர்களுடைய கூலிகளை மேன்மேலும் அலைவுறச் செய்கின்றன. இயந்திரச் சாதனங்கள் ஓயாது ஒழியாது மேம்பாடடைந்து தொடர்ந்து மேலும் மேலும் வேகமாய் வளர்ந்து பெருகுவதானது, அவர்களுடைய பிழைப்பை மேன்மேலும் நிலையற்றுச்சரியச் செய்கிறது. தனிப்பட்ட தொழிலாளர்களுக்கும் தனிப்பட்ட முதலாளிகளுக்கும் இடையில் எழும் மோதல்கள் மேலும் மேலும் ஒரு வர்க்கங்களுக்கு இடையிலான மோதல்களின் தன்மையைப் பெறுகின்றன. இதனுல் தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு எதிராய் இணைவுகள் (தொழிற் சங்கங்கள்) அமைத்துக் கொள்ள முற்படுகிருர்கள்; கூலிகள் குறையாதவாறு பாது காத்துக் கொள்ள அவர்கள் ஒன்றிணைகிருர்கள், அவ்வப் போது மூண்டுவிடும் இந்த மோதல்களுக்கு முன்னேற் பாடாய் நிரந்தரமான சங்கங்களை நிறுவிக் கொள்கிருர்கள். சிற்சில இடங்களில் இந்தப் போராட்டம் கலகங்களாய் வெடிக்கின்றன.

சிற்சில சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் வெற்றியடைகிருர்கள், ஆனுல் இவ்வெற்றிகள் சிறிது காலத்துக்கு மேல் நீடிப்பதில்லை. அவர்களுடைய போராட்டங்களது மெய்யான பலன் உடனடி விளைவில் அல்ல, தொழிலாளர்களது இடையருது விரிவடையும் ஒற்றுமையில் காணக்கிடக்கிறது. நவீனத் தொழில் துறையால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் வளர்ச்சியுற்ற போக்குவரத்துச் சாதனங்கள், வெவ்வேறு வட்டாரங்களையும் சேர்ந்த தொழிலாளர்களை ஒருவரோடொருவர் தொடர்பு பெறச் செய்து இந்த ஒற்றுமைக்குத் துணை புரிகின்றன. யாவும் ஒரே தன்மையனவாய் இருக்கும் எண்ணற்ற வட்டாரப் போராட்டங்களை வர்க்கங்களுக்கு இடையே தேச அளவில் நடைபெறும் ஒருமித்த போராட்டமாய் மையப்படுத்த இந்தத் தொடர்புதான் தேவையாய் இருந்தது. வர்க்கப் போராட்டம் ஒவ்வொன்றும் ஓர் அரசியல் போராட்டமாகும். மத்திய கால நகரத்தார் அக்

காலத்திய படுமோசமான சாலைகளின் துணை கொண்டு பெறுவதற்குப் பன்னூறு ஆண்டுகள் தேவைப்பட்ட அந்த ஒற்றுமையை நவீனப் பாட்டாளிகள் ரயில் பாதைகளின் துணை கொண்டு ஒருசில ஆண்டுகளிலேயே பெறுகிறார்கள்.

பாட்டாளிகள் இவ்விதம் ஒரு வர்க்கமாகவும், ஆகவே ஓர் அரசியல் கட்சியாகவும் ஒழுங்கமைப்பு பெறும் நிகழ்வானது தொழிலாளர்களிடத்தே ஏற்படும் போட்டியால் ஓயாமல் மீண்டும் குலைக்கப்படுகிறது. ஆயினும் இந்த ஒழுங்கமைப்பு முன்னிலும் வலிவும் உறுதியும் சக்தியும் மிக்கதாய்த் திரும்பத் திரும்ப உயர்ந்து எழுகிறது. இது முதலாளித்துவ வர்க்கத்தாரிடத்தே இருக்கும் பிளவுகளைப் பயன்படுத்தி வலுக்கட்டாயம் செய்து, தொழிலாளர்களுக்குரிய தனி நலன்களுக்குச் சட்ட அங்கீகாரம் பெறுகிறது. இங்கிலாந்தில் பத்து மணி நேர வேலை நாள் மசோதா இவ்வாறு தான் சட்டமாய் நிறைவேற்றப்பட்டது[10].

பொதுவாய்ப் பேசுமிடத்து, தொழிலாளி வர்க்க வளர்ச்சிப் போக்குக்குப் பழைய சமுதாயத்தின் வர்க்கங்களிடையே எழும் மோதல்கள் பல வழிகளிலும் உதவியாய் இருக்கின்றன. முதலாளித்துவ வர்க்கம் இடையறாத போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருக்கிறது: ஆரம்பத்தில் பிரபுக் குலத்தோருடனும், பிற்பாடு முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்த சில பகுதிகளின் நலன்கள் தொழில் முன்னேற்றத்துக்கு விரோதமாகிவிடும் போது இந்தப் பகுதிகளுடனும், எக்காலத்துமே அன்னிய நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்துடனும் அது போராட வேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டங்களின் போது முதலாளித்துவ வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை அணுகி வேண்டுகோள் விடுக்கும்படியும், அவ்வர்க்கத்தின் உதவியை நாடும்படியும், இவ்விதம் அதை அரசியல் அரங்கில் பிரவேசிக்குமாறு இழுக்கும்படியும் நேருகிறது. ஆகவே முதலாளித்துவ வர்க்கமே பாட்டாளி வர்க்கத்துக்கு வேண்டிய அரசியல் கல்வி, பொதுக் கல்வி ஆகியவற்றின் கூறுகளை அதற்கு அளித்திடுகிறது; அதாவது, தன்னையே எதிர்த்துப் போராடுவதற்கான ஆயுதங்களை அது பாட்டாளி வர்க்கத்துக்கு வழங்குகிறது.

தவிரவும், மேலே நாம் கண்ணுற்றது போல, தொழில் முன்னேற்றத்தின் விளைவாய் ஆளும் வர்க்கங்களில் முழு முழுப்பிரிவுகள் பாட்டாளி வர்க்கத்துக்குள் தள்ளப்படு

கின்றன, அல்லது குறைந்தது அவை தமது வாழ்வு நிலைமைகளை இழக்கும்படியான ஆபத்துக்கு உள்ளாக்கப்படுகின்றன. இப்பிரிவுகளும் பாட்டாளி வர்க்கம் அறிவொளி பெறுவதற்கும் முன்னேறுவதற்கும் பல புதிய கூறுகளை வழங்குகின்றன.

இறுதியில், வர்க்கப் போராட்டம் முடிவு கட்டும் நிலையை நெருங்கும் நேரத்தில் ஆளும் வர்க்கத்தினுள்ளும் பழைய சமுதாயம் அனைத்தினுள்ளும் நடந்தேறும் சிதைவுப் போக்கானது அவ்வளவு உக்கிரமுற்றுப் பட்டவர்த்தனமாகிவிடுவதால், ஆளும் வர்க்கத்திலிருந்து ஒரு சிறு பிரிவு துண்டித்துக் கொண்டு அதனிடமிருந்து விலகி எதிர்காலத்தைத் தன் பிடியில் கொண்டிருக்கும் வர்க்கமாகிய புரட்சி வர்க்கத்துடன் சேருகிறது. இதற்கு முந்திய காலத்தில் எப்படிப் பிரபுக்களில் ஒரு பிரிவினர் முதலாளித்துவ வர்க்கத்தின் தரப்புக்குச் சென்றார்களோ, அதே போல இப்போது முதலாளித்துவ வர்க்கத்தாரில் ஒரு பிரிவினர் பாட்டாளி வர்க்கத் தரப்புக்குச் செல்கின்றனர், குறிப்பாய் முதலாளித்துவச் சித்தாந்தவாதிகளில் வரலாற்று இயக்கத்தை ஒட்டுமொத்தமாய்த் தத்துவார்த்த வழியில் புரிந்து கொள்ளும் நிலைக்கு உயர்ந்துவிட்ட ஒரு பிரிவினர் பாட்டாளி வர்க்கத் தரப்புக்குச் செல்கின்றனர்.

இன்று முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் எல்லா வர்க்கங்களிலும் பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் மெய்யாகவே புரட்சிகரமான வர்க்கமாகும். ஏனைய வர்க்கங்கள் நவீனத் தொழிலினது வளர்ச்சியின் முன்னால் நலிவுற்றுச் சிதைந்து முடிவில் மறைந்து போகின்றன, பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் நவீனத் தொழிலுக்கே உரித்தான அதன் நேரடி விளைவாய் அமைகிறது.

மத்தியதர வர்க்கத்தின் கீழ்ப் பகுதிகளாகிய சிறு பட்டறையாளர், கடைக்காரர், கைவினைஞர், விவசாயி இவர்கள் எல்லோரும் தொடர்ந்து தாம் மத்தியதர வருப்பினராய் நீடித்திருப்பதற்காக முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். ஆகவே இவர்கள் பழமைப் பற்றாளர்களே அன்றி புரட்சித்தன்மை வாய்ந்தோரல்லர். அது மட்டுமல்ல, இவர்கள் பிற்போக்கானவர்களும்கூட; ஏனெனில் வரலாற்றின் சக்கரத்தை இவர்கள் பின்னோக்கி உருளச் செய்யமுயலுகிறார்கள். சந்தர்ப்பவசமாய்ப் புரட்சி

கரமாய் இருப்பார்களாயின், இவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்குப் போய்விடும் தறுவாயில் இருக்கிறார்கள் என்பதே அதற்குக் காரணம்; இவ்வாறு இவர்கள் பாதுகாப்பது தமது எதிர்கால நலன்களையே அன்றி நிகழ்கால நலன்களை அல்ல; பாட்டாளி வர்க்கத்தின் நோக்குநிலையை ஏற்கும் பொருட்டு, தமது சொந்த நோக்குநிலையைக் கைவிடுகிறார்கள்.

பழைய சமுதாயத்தின் அடிமட்டத்து அடுக்குகளிலிருந்து எறியப்பட்டுச் செயலற்று அழுகிக் கொண்டிருக்கும் சமூகக் கசடாகிய ''அபாயகரமான வர்க்கம்'' பாட்டாளி வர்க்கப் புரட்சியால் எங்கேனும் ஒருசில இடங்களில் இயக்கத்துக்குள் இழுக்கப்படலாம், ஆனால் அதன் வாழ்க்கை நிலைமைகள் பிற்போக்குச் சதியின் கைக்கருவியாய் லஞ்சம் பெற்று ஊழியம் புரியவே மிகப் பெரும் அளவுக்கு அதைத் தயார் செய்கின்றன.

பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகளில் பழைய சமுதாயத்தின் வாழ்க்கை நிலைமைகள் ஏற்கெனவே அனேகமாய்ப் புதையுண்டு விடுகின்றன. பாட்டாளிக்குச் சொத்து ஏதும் இல்லை, மனைவி மக்களிடத்து அவனுக்குள்ள உறவுக்கும் முதலாளித்துவக் குடும்ப உறவுகளுக்கும் பொதுவானது இப்போது எதுவும் இல்லை. பிரான்சில் எப்படியோ அதே போல் இங்கிலாந்திலும், ஜெர்மனியில் எப்படியோ அதே போல் அமெரிக்காவிலும், நவீனத் தொழில் துறை உழைப்பானது, மூலதனத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கும் நவீன அடிமை நிலையானது, பாட்டாளியிடமிருந்து தேசியத் தனித்தன்மையில் எந்தச் சாயலையும் விட்டு வைக்காமல் துடைத்தெடுத்து விட்டது. இந்தப் பாட்டாளிக்கு, சட்டம், ஒழுக்க நெறி, சமயம் ஆகியவை அத்தனையும் அத்தனை விதமான முதலாளித்துவ நலன்கள் பதுங்கிக் கொண்டிருக்கும் முதலாளித்துவத் தப்பெண்ணங்களே அன்றி வேறல்ல.

மேலாதிக்கம் பெற்ற முந்திய வர்க்கங்கள் யாவும் வாழ்க்கையில் ஏற்கெனவே தாம் அடைந்திருந்த உயர் நிலைக்கு அரண் அமைத்துக் கொள்ளும் பொருட்டுத் தமது சுவீகரிப்பு முறைக்கு சமுதாயம் முழுவதையும் கீழ்ப்படுத்த முற்பட்டன. ஆனால் பாட்டாளிகள் தமது முந்திய சுவீகரிப்பு முறையையும், ஆகவே ஏனையோரது முந்திய சுவீகரிப்பு முறைகள் யாவற்றையும் ஒழித்திடாமல் சமுதாயத்தின் உற்

பத்தி சக்திகளுக்கு எஜமானர்களாக முடியாது. அவர்கள் பாதுகாத்துக்கொள்ளவும் அரண் அமைத்துக் கொள்ளவும் சொந்தத்தில் ஏதும் இல்லாதவர்கள், தனியார் சொத்துடைமைக்கு இதன் முன்பிருந்த பாதுகாப்புகளையும் காப்புறுதிகளையும் தகர்த்து ஒழிப்பதே அவர்களது இலட்சியப் பணி.

முந்திய வரலாற்று இயக்கங்கள் எல்லாம் சிறுபான்மையோரது இயக்கங்களே, அல்லது சிறுபான்மையோரது நலனுக்கான இயக்கங்களே ஆகும். ஆனால் பாட்டாளி வர்க்க இயக்கம் மிகப் பெருவாரியானோரது நலனுக்காக மிகப் பெருவாரியானோர் தன்னுணர்வோடு நடத்தும் சுயேச்சையான இயக்கமாகும். தற்கால சமுதாயத்தின் அடிமட்டத்து அடுக்காகிய பாட்டாளி வர்க்கமானது அங்கீகாரம் பெற்ற சமுதாயத்தில் மேலமைந்த அத்தனை அடுக்குகளையும் காற்றிலே பறந்தெழச் செய்யாமல் அசையவோ நிமிர்ந்து நிற்கவோ முடியாது.

முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம், உள்ளடக்கத்தில் இல்லையேனும் எப்படியும் வடிவத்தில், ஆரம்பத்தில் தேசியப் போராட்டமாகவே இருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் பாட்டாளி வர்க்கமும் தனது நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்துடன்தான் முதலில் கணக்கு தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பாட்டாளி வர்க்கத்தினது வளர்ச்சியின் மிகப் பொதுவான கட்டங்களை விவரித்த நாம், தற்கால சமுதாயத்தில் ஏறக்குறைய திரை மறைவில் நடைபெறும் உள்நாட்டுப் போரை, அது பகிரங்கப் புரட்சியாய் வெடித்து, முதலாளித்துவ வர்க்கம் பலாத்காரமாய் வீழ்த்தப்படுவதன் மூலம் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரத்துக்கு அடித்தளம் இடப்படும் நிலை வரையில் உருவரை தீட்டிக் காட்டினோம்.

இதுகாறும் சமூக அமைப்பு ஒவ்வொன்றும், ஏற்கெனவே நாம் கண்ணுற்றது போல், ஒடுக்கும் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் வர்க்கத்துக்கும் இடையிலான பகைமையையே அடிப்படையாய்க் கொண்டிருந்தது. ஆனால் ஒரு வர்க்கத்தை ஒடுக்கி வைக்க வேண்டுமாயின், அந்த வர்க்கம் தொடர்ந்து தனது அடிமை நிலையிலாவது நீடிப்பதற்கு அவசியமான குறிப்பிட்ட நிலைமைகளை அதற்கு உத்தரவாதம் செய்து

தந்தாக வேண்டும். பண்ணையடிமை முறை நிலவிய காலத்தில் பண்ணையடிமை தன்னை நகர சமுதாய உறுப்பினனாக உயர்த்திக் கொள்ள முடிந்தது, அதே போல் பிரபுத்துவ எதேச்சாதிகாரத்தின் ஒடுக்குமுறையில் குட்டிமுதலாளித்துவப் பிரிவினர் முதலாளியாய் வளர முடிந்தது. ஆனால் நவீன காலத்திய தொழிலாளி இதற்கு மாறாய், தொழில் முன்னேற்றத்துடன் கூடவே தொடர்ந்து செல்வதற்குப் பதில், தனது வர்க்கம் நிலவுதற்கு அவசியமான நிலைமைகளுக்கும் கீழே மேலும் மேலும் தாழ்ந்து செல்கிறான். அவன் ஓட்டாண்டியாகி ஏதும் இல்லாதான் ஆகின்றான்; மக்கள் தொகையையும் செல்வத்தையும் காட்டிலும் இல்லாமை அதிவேகமாய் அதிகரிக்கிறது. ஆகவே இப்போது தெட்டத் தெளிவாய்த் தெரிகிறது—முதலாளித்துவ வர்க்கம் இனி சமுதாயத்தின் ஆளும் வர்க்கமாய் இருக்கத் தகுதியற்றது, தான் நீடித்து நிலவுவதற்கு வேண்டிய நிலைமைகளை யாவற்றுக்கும் மேலான சட்டவிதியாய் இனியும் சமுதாயத்தின் மீது பலவந்தமாய் இருக்கத் தகுதியற்றது என்பது தெட்டத் தெளிவாய்த் தெரிகிறது. அது ஆளத் தகுதியற்றதாகிறது—ஏனெனில் அதன் அடிமை அவனது அடிமை நிலையில் தொடர்ந்து வாழ்வதற்கு அதனால் வகை செய்ய முடியவில்லை; அவன் அதற்கு உண்டி அளிப்பதற்குப் பதில் அது அவனுக்கு உண்டி அளிக்க வேண்டிய ஒரு நிலைக்கு அதன் அடிமை தாழ்ந்து செல்வதை அதனால் தடுக்க முடியவில்லை. சமுதாயம் இனி இந்த முதலாளித்துவ வர்க்கத்துக்குப் பணிந்து வாழ முடியாது, அதாவது முதலாளித்துவ வர்க்கம் இனியும் தொடர்ந்து நீடிப்பது சமுதாயத்துக்கு ஒவ்வாததாகிவிட்டது.

மூலதனம் உருவாதலும் பெருகிச் செல்லுதலும்தான் முதலாளித்துவ வர்க்கம் நிலவுதற்கும் ஆதிக்கம் புரிவதற்குமான அத்தியாவசிய நிபந்தனை. கூலியுழைப்புதான் இந்த மூலதனத்துக்கு அத்தியாவசிய நிபந்தனையாய் அமைகிறது. கூலியுழைப்பானது தொழிலாளர்களுக்கு இடையிலான போட்டியையே ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ வர்க்கம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஊக்குவிக்க வேண்டியிருக்கும் தொழில் முன்னேற்றமானது, தொழிலாளர்களிடையே போட்டியின் விளைவான தனிமைப்பாட்டை நீக்கி, ஒற்றுமையின் விளைவான புரட்சிகர

இணைவை உண்டாக்குகிறது. இவ்விதம் நவீனப் பெருவீதத் தொழிலின் வளர்ச்சியானது, எந்த அடிப்படையில் முதலாளித்துவ வர்க்கம் பொருள்களை உற்பத்தி செய்தும் சுவீகரித்தும் வருகிறதோ அந்த அடிப்படைக்கே உலை வைக்கிறது. ஆகவே முதலாளித்துவ வர்க்கம் தனக்குச் சவக்குழி தோண்டுவோரையே அனைத்துக்கும் மேலாய் உற்பத்தி செய்கிறது. இவ்வர்க்கத்தின் வீழ்ச்சியும், அதேபோல் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியும் தவிர்க்கவொண்ணுதவை.

## II

## பாட்டாளிகளும் கம்யூனிஸ்டுகளும்

ஒட்டுமொத்தமாய்ப் பாட்டாளிகளுடன் கம்யூனிஸ்டுகளுக்கு இருக்கும் உறவு என்ன?

கம்யூனிஸ்டுகள் ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளுக்கு எதிரான ஒரு தனிக் கட்சியாய் இருக்கவில்லை.

அவர்கள் பாட்டாளி வர்க்கம் அனைத்துக்குமுள்ள நலன்களை அன்னியில் தனிப்பட்ட நலன்கள் எவையும் இல்லாதவர்கள்.

பாட்டாளி வர்க்க இயக்கத்தை வடிவமைக்க அவர்கள் தமக்கெனக் குறுங்குழுக் கோட்பாடுகள் எவற்றையும் வகுத்துக் கொள்ளவில்லை.

ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளிடமிருந்து கம்யூனிஸ்டுகளை வேறுபடுத்திக் காட்டுகிறவை பின்வருவன மட்டுமேதான்: 1. வெவ்வேறு நாடுகளிலும் தேச அளவில் பாட்டாளிகள் நடத்தும் போராட்டங்களில் அவர்கள் தேசிய இனம் கடந்து பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரித்தான பொது நலன்களைச் சுட்டிக்காட்டி முன்னிலைக்குக் கொண்டு வருகிருர்கள். 2. முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தொழிலாளி வர்க்கப் போராட்டம் கடந்து செல்ல வேண்டியிருக்கும் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் அவர்கள் எப்போதும் எங்கும் இயக்கம் அனைத்துக்குமான நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிருர்கள்.

ஆகவே நடைமுறையில் கம்யூனிஸ்டுகள் எல்லா நாடுகளிலும் தொழிலாளி வர்க்கக் கட்சிகளது மிகவும் முன்னேறிய, மிகவும் வைராக்கியமான பகுதியாய், ஏனைய எல்லோரையும் முன்னேக்கி உந்தித் தள்ளும் பகுதியாய் இருக்

கிருர்கள்; தத்துவார்த்தத்தில் அவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வழிநடப்பையும் நிலைமைகளேயும் பொதுவான இறுதிவிளேவுகளேயும் தெளிவாய்ப் புரிந்து கொள்ளும் அனுகூலத்தை, பாட்டாளி வர்க்கத்தின் பெருந்திரளினருக்கு இல்லாத அனுகூலத்தைப் பெற்றிருக்கிருர்கள்.

கம்யூனிஸ்டுகளுடைய உடனடி நோக்கம் ஏனைய எல்லாப் பாட்டாளி வர்க்கக் கட்சிகளது உடனடி நோக்கம் என்னவோ அதுவேதான்: பாட்டாளிகளே ஒரு வர்க்கமாய் உருப் பெறச்செய்வதும், முதலாளித்துவ மேலாதிக்கத்தை வீழ்த்துவதும், பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வென்று கொள்வதும்தான்.

கம்யூனிஸ்டுகளுடைய தத்துவார்த்த முடிவுகள் உலகைப் புத்தமைக்க நினைக்கும் இந்த அல்லது அந்தச் சீர்திருத்தாளர் புனைந்தமைத்தோ, கண்டுபிடித்தோ கூறிய கருத்துக்களே அல்லது கோட்பாடுகளே எவ்வகையிலும் அடிப்படையாய்க் கொண்டவையல்ல.

நடப்பிலுள்ள வர்க்கப் போராட்டத்திலிருந்து, நம் கண்ணெதிரே நடைபெற்று வரும் வரலாற்று இயக்கத்திலிருந்து உதிக்கும் மெய்யான உறவுகளேயே இந்த முடிவுகள் பொதுப்பட எடுத்துரைக்கின்றன. நடப்பிலுள்ள சொத்துடைமை உறவுகளே ஒழிப்பது எவ்விதத்திலும் கம்யூனிசத்துக்கு உரித்தான ஒரு தனிச் சிறப்பல்ல.

வரலாற்று நிலைமைகளில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாய்ச் சொத்துடைமை உறவுகள் யாவும் கடந்த காலத்தில் தொடர்ந்தாற்போல் வரலாற்று வழியில் மாற்றமடைந்தே வந்திருக்கின்றன.

எடுத்துக்காட்டாய், பிரெஞ்சுப் புரட்சியானது பிரபுத்துவச் சொத்துடைமையை ஒழித்து அதனிடத்தில் முதலாளித்துவச் சொத்துடைமையை நிலைநாட்டிற்று.

பொதுப்பட சொத்துடைமையை ஒழிப்பதல்ல, முதலாளித்துவச் சொத்துடைமையை ஒழிப்பதே கம்யூனிசத்திற்குரிய சிறப்பியல்பு. ஆனுல் நவீன முதலாளித்துவத் தனிச்சொத்துடைமையானது வர்க்கப் பகைமைகளின் அடிப்படையில், ஒருசிலர் மிகப் பலரைச் சுரண்டுவதன் அடிப்படையில் பொருள்களே உற்பத்தி செய்வதற்கும் சுவீகரிப்பதற்குமான அமைப்பின் இறுதியான, மிகவும் நிறைவான வெளிப்பாடாகும்.

இந்த அர்த்தத்தில் கம்யூனிஸ்டுகளுடைய தத்துவத்தை இரத்தினச் சுருக்கமாய், தனிச் சொத்துடைமையை ஒழித்திடல் என்பதாய்க் கூறலாம்.

ஒருவர் தமது சொந்த உழைப்பின் பயனுய்ப் பெறுவதைத் தமது தனிச் சொத்தாக்கிக் கொள்ளும் உரிமையைக் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஒழிக்க விரும்புவதாய் எங்களே ஏசுகிறுர்கள்; இந்தத் தனிச் சொத்துதான் தனியாளின் சுதந்திரம், செயற்பாடு, சுயேச்சை வாழ்வு ஆகியவற்றுக்கு எல்லாம் அடிநிலே என்கிறுர்கள்.

பாடுபட்டுப் பெற்ற, சொந்த முயற்சியால் சேர்த்த, சுயமாய்ச் சம்பாதித்த சொத்தாம் இது! இங்கே நீங்கள் குறிப்பிடுவது எந்தச் சொத்து? சிறு கைவினேஞர், சிறு விவசாயி ஆகியோரது சொத்தா? அதாவது முதலாளித்துவச் சொத்து வடிவத்துக்கு முற்பட்டதாகிய சொத்து வடிவமா? இம்மாதிரியான சொத்தை ஒழிக்கத் தேவை இல்லே; தொழில் வளர்ச்சியானது இதை ஏற்கெனவே பெருமளவுக்கு அழித்து விட்டது, இனியும் தொடர்ந்து நாள்தோறும் அழித்து வருகிறது.

அல்லது நவீன கால முதலாளித்துவத் தனிச் சொத்தையா குறிப்பிடுகிறீர்கள்?

ஆளுல் கூலியுழைப்பானது பாட்டாளிக்குச் சொத்தையா படைத்தளிக்கிறது? இல்லவே இல்லே. அது படைப்பது மூலதனம்தான்; அதாவது கூலியுழைப்பைச் சுரண்டுவதும், புதிதாய்ச் சுரண்டுவதற்குப் புதிதாய்க் கூலியுழைப்பு கிடைக்காவிடில் அதிகரிக்க முடியாததுமாகிய சொத்து வகைதான். சொத்தானது அதன் தற்கால வடிவில் மூலதனத்துக்கும் கூலியுழைப்புக்கும் இடையிலான பகைமையை அடிப்படையாய்க் கொண்டதாகும். இந்தப் பகைமையின் இரு தரப்புகளேயும் பரிசீலிப்போம்.

முதலாளியாய் இருப்பதற்கு அர்த்தம் பொருளுற்பத்தியில் தனியாள் வழியில் மட்டுமின்றி சமூக வழியிலுமான அந்தஸ்து வகிப்பதாகும். மூலதனமானது கூட்டுச் செயற்பாட்டிஞல் விளேவதாகும்; சமுதாயத்தின் பல உறுப்பினர்களது ஒன்றுபட்ட செயலால் மட்டுமே, இறுதியாய்ப் பார்க்குமிடத்து சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களது ஒன்றுபட்ட செயலால் மட்டுமே அதை இயங்க வைக்க முடியும்.

எனவே மூலதனம் தனியாளின் சக்தியல்ல, சமூக சக்தி.

ஆகவே மூலதனமானது பொதுச் சொத்தாய், சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களுக்குமான சொத்தாய் மாற்றப்படும் போது, தனியாளின் சொத்து அதன் மூலம் சமூகச் சொத்தாய் மாற்றப்படவில்லை. சொத்தின் சமூகத் தன்மை தான் மாற்றப்படுகிறது. சொத்தானது அதன் வர்க்கத்தன்மையை இழந்துவிடுகிறது.

இனி கூலியுழைப்பைப் பரிசீலிப்போம்.

கூலியுழைப்பின் சராசரி விலைதான் குறைந்தபட்சக் கூலி, அதாவது தொழிலாளி தொழிலாளியாய்த் தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமாய்த் தேவைப்படும் பிழைப்புச் சாதனங்களின் மொத்த அளவு. ஆகவே கூலித் தொழிலாளி தமது உழைப்பின் மூலம் சுவீகரித்துக் கொள்வது எல்லாம், தொடர்ந்து உயிர் வாழ்வதற்கும் இவ்வாழ்வினைப் புனருற்பத்தி செய்வதற்கும் மட்டும்தான் போதுமானது. உழைப்பின் உற்பத்திப் பொருள்களிலான இந்தத் தனியாள் சுவீகரிப்பை, மனித உயிர் வாழ்வின் பராமரிப்புக்காகவும் புனருற்பத்திக்காகவும் வேண்டியதை மட்டும் அளித்து, ஏனையோரது உழைப்பின் மீது ஆண்மை செலுத்த உபரியாய் எதையும் விட்டு வைக்காத இந்தச் சுவீகரிப்பை ஒழிக்க வேண்டுமென்ற விருப்பம் எங்களுக்குக் கிஞ்சித்தும் இல்லை. இந்தச் சுவீகரிப்பின் இழிவான தன்மையைத்தான், மூலதனத்தைப் பெருகச் செய்வதற்கு மட்டுமே தொழிலாளி வாழ்கிறன், ஆளும் வர்க்கத்தின் நலனுக்குத் தேவைப்படும் வரை மட்டுமே தொழிலாளிக்கு வாழ அனுமதி உண்டு என்ற இந்த இழிவான தன்மையைத்தான் நாங்கள் ஒழித்திட விரும்புகிறேம்.

முதலாளித்துவ சமுதாயத்தில் உயிருள்ள உழைப்பு சேமித்துத் திரட்டப்பட்ட உழைப்பைப் பெருகச் செய்வதற்குரிய ஒரு சாதனமாகவே இருந்து வருகிறது. கம்யூனிச சமுதாயத்தில் சேமித்துத் திரட்டப்பட்ட உழைப்பானது தொழிலாளியின் வாழ்வை விரிவுபெற்று வளமடைந்து ஓங்கச் செய்வதற்கான ஒரு சாதனமாகவே இருக்கும்.

ஆகவே முதலாளித்துவ சமுதாயத்தில் கடந்த காலம் நிகழ் காலத்தின் மீது ஆதிக்கம் புரிகிறது; கம்யூனிச சமுதாயத்தில் நிகழ் காலம் கடந்த காலத்தின் மீது ஆதிக்கம் புரியும். முதலாளித்துவ சமுதாயத்தில் மூலதனம் சுயேச்

சையானதாய் தனித்தன்மை கொண்டதாய் இருக்கிறது; அதேபோது உயிருள்ள ஆள் சுயேச்சையற்றவனாய், தனித் தன்மை இல்லாதவனாய் இருக்கின்றான்.

இப்படிப்பட்ட உறவுகளை ஒழிப்பதைத்தான் தனியாளது தனித்தன்மையின் ஒழிப்பாய், சுதந்திரத்தின் ஒழிப்பாய்க் கூறுகிறார்கள் முதலாளிகள்! சந்தேகமே வேண்டாம், முதலாளித்துவத் தனித்தன்மையையும் முதலாளித்துவ சுயேச்சையையும் முதலாளித்துவ சுதந்திரத்தையும் ஒழிப்பதுதான் குறிக்கோள்.

தற்போதுள்ள முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகளில், சுதந்திரம் என்பதற்கு சுதத்திரமான வாணிபம், சுதந்திரமான விற்பனையும் வாங்குதலும் என்றே அர்த்தம்.

ஆனால் விற்பனையும் வாங்குதலும் மறையும் போது சுதந்திரமான விற்பனையும் வாங்குதலும் கூடவே மறைந்து போகும். சுதந்திரமான விற்பனை, வாங்குதல் என்ற பேச்சுக்கும் பொதுப்பட சுதந்திரத்தை பற்றிய நமது முதலாளித்துவ வர்க்கத்தாரது ஏனைய எல்லாத் ''தீரச் சொல்வீச்சுகளுக்கும்'' ஏதாவது அர்த்தம் இருக்குமாயின், அது மத்திய காலத்திய கட்டுண்ட விற்பனையுடனும் வாங்குதலுடனும் வணிகர்களுடனும் ஒப்பிடும்போது மட்டும்தான். ஆனால் விற்பனையும் வாங்குதலும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகளும், இவற்றோடு முதலாளித்துவ வர்க்கமுங் கூட கம்யூனிசத்தின் மூலம் ஒழிக்கப்படுவதற்கு எதிராய் முன்வைக்கப்படுகையில் இந்தப் பேச்சுகள் யாவும் அர்த்தமற்றுப் போகின்றன.

தனிச் சொத்தை நாங்கள் ஒழித்துக் கட்ட விரும்புகிறோம் என்று நீங்கள் கிலி கொண்டு பதறுகிறீர்கள். ஆனால் தற்போதுள்ள உங்களுடைய சமுதாயத்தில் பத்தில் ஒன்பது பங்கு மக்களுக்குத் தனிச் சொத்து ஏற்கெனவே இல்லாமல் ஒழிக்கப்பட்டுவிட்டது; ஒருசிலரிடத்தே தனிச் சொத்து இருப்பதற்கே காரணம் இந்தப் பத்தில் ஒன்பது பங்கானோரிடத்தே அது இல்லாது ஒழிந்ததுதான். ஆக சமுதாயத்தின் மிகப் பெரும் பகுதியோரிடம் எந்தச் சொத்தும் இல்லா தொழிவதையே தனக்குரிய அவசிய நிபந்தனையாய்க் கொண்ட ஒரு சொத்து வடிவத்தை ஒழிக்க விரும்புகிறோம் என்று எங்களை ஏசுகிறீர்கள்.

சுருங்கச் சொல்வதெனில், உங்களுடைய சொத்தை ஒழிக்க விரும்புகிறோம் என்று ஏசுகிறீர்கள். ஆம், உண்மையில் அதுவேதான் நாங்கள் செய்ய விரும்பும் காரியம்.

எத்தருணம் முதல் உழைப்பை மூலதனமாய், பணமாய், நிலவாடகையாய் — ஏகபோகமாக்கிக் கொண்டுவிடுவதற்கு ஏற்ற ஒரு சமூக சக்தியாய்—மாற்ற முடியாமற் போகிறதோ, அதாவது எத்தருணம் முதல் தனியாளின் சொத்தினை முதலாளித்துவச் சொத்தாய், மூலதனமாய் மாற்ற முடியாமற் போகிறதோ, அத்தருணம் முதற்கொண்டே தனியாளின் தனித்தன்மை மறைந்து விடுவதாய் நீங்கள் கூறுகிறீர்கள்.

ஆதலால் ''தனியாள்'' என்னும் போது நீங்கள் முதலாளியையே தவிர, மத்தியதர வர்க்கச் சொத்துடைமையாளரையே தவிர, வேறு யாரையும் குறிப்பிடவில்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டாக வேண்டும். இம்மாதிரியான தனியாள் மெய்யாகவே மறையத்தான் வேண்டும், இருக்க முடியாதபடிச் செய்யப்படத்தான் வேண்டும்.

சமுதாயத்தின் உற்பத்திப் பொருள்களைச் சுவீகரித்துக் கொள்வதற்கான வாய்ப்பைக் கம்யூனிசம் எம்மனிதனிடமிருந்தும் பறிக்கவில்லை; இப்படிச் சுவீகரித்துக் கொள்வதன் மூலம் அவன் ஏனையோரது உழைப்பை அடிமைப்படுத்துகிறவனுக்கும் வாய்ப்பைத்தான் அது அவனிடமிருந்து பறிக்கிறது.

தனிச் சொத்தை ஒழித்ததும் எல்லாச் செயற்பாடுகளும் நின்று போய்விடும், அனைத்து மக்களும் சோம்பேறித்தனத்தால் பீடிக்கப்படுவர் என்பதாய் ஆட்சேபம் கூறப்படுகிறது.

இது மெய்யானல், முதலாளித்துவ சமுதாயம் நெடு நாட்களுக்கு முன்பே முழுச் சோம்பேறித்தனத்தில் மூழ்கி மடிந்திருக்க வேண்டும். ஏனெனில் முதலாளித்துவ சமுதாயத்தின் உறுப்பினர்களில் உழைப்போர் சொத்து ஏதும் சேர்ப்பதில்லை, சொத்து சேர்ப்போர் உழைப்பதில்லை. மூலதனம் இல்லாமற் போகும் போது கூலியுழைப்பு இருக்க முடியாதென்ற ஒருண்மையையே திருப்பித் திருப்பிப் பல வாருய்ச் சொல்லும் கூற்றே ஆகும் இந்த ஆட்சேபம் அனைத்தும்.

பொருளாயதப் படைப்புகளின் உற்பத்திக்கும் சுவீகரிப்புக்குமான கம்யூனிச வழிமுறைக்கு எதிராய் எழுப்பப்படும்

எல்லா ஆட்சேபங்களும், அறிவுத் துறைப் படைப்புகளின் உற்பத்திக்கும் சுவீகரிப்புக்குமான கம்யூனிச வழிமுறைக்கு எதிராகவும் எழுப்பப்படுகின்றன. எப்படி வர்க்கச் சொத்துடைமையின் மறைவு முதலாளிக்குப் பொருளுற்பத்தியே மறைந்து போவதைக் குறிப்பதாகின்றதோ, அதே போல வர்க்கக் கலாசாரத்தின் மறைவு அவருக்கு எல்லாக் கலாசாரமுமே மறைவதற்கு ஒப்பானதாகின்றது.

அழிந்து விடுமென அவர் அழுது புலம்பும் அந்தக் கலாசாரம் மிகப்பெருவாரியான மக்களுக்கு இயந்திரமாய்ச் செயல்படுவதற்கு வேண்டிய பயிற்சியாகவே இருந்து வருகிறது.

ஆனால் முதலாளித்துவச் சொத்துடைமையின் ஒழிப்பை நீங்கள் சுதந்திரத்தையும் கலாசாரத்தையும் சட்டநெறியையும் இன்ன பிறவற்றையும் பற்றிய உங்களது முதலாளித்துவக் கருத்துக்களைப் பிரமாணமாய்க் கொண்டு மதிப்பீடு செய்யும் வரை எங்களுடன் சர்ச்சைக்கு வர வேண்டாம். உங்களுடைய சட்டநெறி உங்கள் வர்க்கத்தின் சித்தத்தை எல்லோருக்குமான சட்டமாய் விதித்திடுவதுதான்; உங்களது இந்தச் சித்தத்தின் சாரத்தன்மையும் போக்கும் உங்களது வர்க்கம் நிலவுவதற்கு வேண்டிய பொருளாதார நிலைமைகளால் தீர்மானிக்கப்படுகிறவைதாம். இதே போல் உங்கள் கருத்துகள் எல்லாமே உங்களது முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கும் முதலாளித்துவச் சொத்துடைமைக்கும் வேண்டிய நிலைமைகளிலிருந்து பிறந்தெழுகிறவைதாம்.

தற்போதுள்ள உங்களுடைய பொருளுற்பத்தி முறையிலிருந்தும் சொத்துடைமை வடிவிலிருந்தும் உதித்தெழும் சமூக அமைப்பு வடிவங்களை, பொருளுற்பத்தியின் முன்னேற்றத்தின் போது வரலாற்று வழியில் தோன்றி மறைந்து போகும் உறவுகளாகிய இவற்றை, என்றும் நிலையான சாசுவத இயற்கை விதிகளாகவும் பகுத்தறிவு விதிகளாகவும் மாற்றும்படி உங்களது தவறான தன்னலக் கருத்தோட்டம் உங்களைத் தூண்டுகிறது. இந்தத் தவறான கருத்தோட்டம் உங்களுக்கு மட்டும் உரியதன்று, உங்களுக்கு முன்பிருந்த ஆளும் வர்க்கங்கள் யாவற்றுக்குமே உரியதாய் இருந்தது தான். பண்டைக்காலத்துச் சொத்துடைமையைப் பொறுத்தவரை நீங்கள் தெட்டத்தெளிவாய் காண்பதை, பிரபுத்துவச் சொத்துடைமை சம்பந்தமாய் நீங்கள் ஒத்துக் கொள்வதை, உங்களுடைய முதலாளித்துவச் சொத்

துடைமை குறித்து உங்களால் ஒத்துக் கொள்ள முடிவதே இல்லை, நீங்கள் தடுக்கப்பட்டுவிடுகிறீர்கள்.

குடும்பத்தை ஒழிப்பதாவது! கம்யூனிஸ்டுகளுடைய இந்தக் கேடுகெட்ட முன்மொழிவை எதிர்த்து அதிதீவிர வாதிகளுங்கூட கொதித்தெழுகிறார்கள்.

இக்காலத்துக் குடும்பத்துக்கு, முதலாளித்துவக் குடும்பத்துக்கு, அடிப்படையாய் அமைவது எது? மூலதனம்தான், தனியார் இலாபம்தான். இந்தக் குடும்பம் அதன் முழுவளர்ச்சியிலுமான வடிவில் முதலாளித்துவ வர்க்கத்தாரிடையே மட்டும்தான் இருந்து வருகிறது. ஆனால் இந்நிலைமையின் உடன்நிகழ்வாய் குடும்பவாழ்வு பாட்டாளிகளிடத்தே அனேகமாய் அற்றுப் போயிருப்பதையும், பொது நிலையிலான விபசாரத்தையும் காண்கிறோம்.

முதலாளித்துவக் குடும்பத்தின் உடன்நிகழ்வு மறையும் போது கூடவே முதலாளித்துவக் குடும்பமும் இயல்பாகவே மறைந்து போகும், மூலதனம் மறையும் போது இரண்டும் மறைந்துவிடும்.

குழந்தைகள் அவர்களுடைய பெற்றோரால் சுரண்டப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறோம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டுகிறீர்கள்? நாங்கள் இந்தக் குற்றத்தைப் புரிகிறவர்கள்தான், ஒப்புக்கொள்கிறோம்.

ஆனால் வீட்டுக் கல்விக்குப் பதிலாய் நாங்கள் சமூக முறையிலான கல்வியைப் புகுத்தி மனிதர்களிடையிலான உறவுகளிலேயே மிகப் புனிதமானவற்றை நாசமாக்க விரும்புகிறோம் என்பீர்கள்.

உங்களுடைய கல்வி இருக்கிறதே, அது மட்டும் என்னவாம்? அதுவும் சமூக முறையிலான கல்விதானே? எந்தச் சமூக நிலைமைகளில் நீங்கள் கல்வி போதிக்கிறீர்களோ அந்த நிலைமைகளாலும், பள்ளிக்கூடங்கள் மூலமும் இன்ன பிறவற்றின் மூலமும் சமுதாயத்தின் நேரடியான அல்லது மறைமுகமான தலையீட்டாலும் தீர்மானிக்கப்பட்டதுதானே அது? கல்வியில் சமுதாயம் தலையிடுதல் என்பது கம்யூனிஸ்டுகளுடைய கண்டுபிடிப்பு அல்ல; இந்தத் தலையீட்டின் இயல்பினை மாற்றவும், ஆளும் வர்க்கத்தினுடைய செல்வாக்கிலிருந்து கல்வியை விடுவிக்கவுமே கம்யூனிஸ்டுகள் முயலுகிறார்கள்.

குடும்பம், கல்வி என்றும், பெற்றோருக்கும் குழந்தைக்கு

முள்ள புனித உறவு என்றும் பேசப்படும் முதலாளித்துவப் பகட்டுப் பேச்சுகள் மேலும் மேலும் அருவருக்கத்தக்கன வாகி வருகின்றன; ஏனெனில் நவீனத் தொழில் துறை யின் செயலால் பாட்டாளிகளிடையே குடும்பப் பந்தங்கள் மேலும் மேலும் துண்டிக்கப்பட்டும், பாட்டாளிகளது குழந் தைகள் சாதாரண வாணிபச் சரக்குகளாகவும் உழைப்புக் கருவிகளாகவும் மாற்றப்படுகிறார்கள்.

ஆனால் கம்யூனிஸ்டுகளாகிய நீங்கள் பெண்களை எல் லோர்க்கும் பொதுவாக்கிவிடுவீர்களே என்று முதலாளித் துவ வர்க்கம் அனைத்துமாய்ச் சேர்ந்து கூக்குரலிடுகிறது.

முதலாளியாய் இருப்பவர் தனது மனைவியை வெறும் உற்பத்திக் கருவியாகவே பாவிக்கிறார். உற்பத்திக் கருவிகள் எல்லோர்க்கும் பொதுவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படப் போவதாய்க் கேள்விப்பட்டதும், உடனே அவர் எல்லோர்க் கும் பொதுவாகிவிடும் இதே கதிதான் பெண்களுக்கும் ஏற் படப் போகிறதென்று இயற்கையாகவே முடிவு செய்து கொண்டுவிடுகிறார்.

பெண்கள் வெறும் உற்பத்திக் கருவிகளின் நிலையில் இருத்தப்பட்டிருப்பதை ஒழிக்க வேண்டும், உண்மையில் இது தான் நோக்கம் என்பது அவருக்குக் கனவிலும் கருத முடியாத ஒன்றாகும்.

இருப்பினும், பெண்களைக் கம்யூனிஸ்டுகள் பகிரங்கமாக வும் அதிகார பூர்வமாகவும் எல்லோர்க்கும் பொதுவாக்கப் போகிறார்களென நமது முதலாளிமார்கள் புரளி பண்ணி நல்லொழுக்கச் சீலர்களாய் சீற்றம் கொள்கிறார்களே, அதைக் காட்டிலும் நகைக்கத்தக்கது எதுவும் இருக்க முடியாது. பெண்களை எல்லோர்க்கும் பொதுவாக்கும் காரியத்தைக் கம்யூனிஸ்டுகள் செய்யத் தேவையில்லை, நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே இது செய்யப்பட்டு வருகிறது.

நமது முதலாளிமார்கள் சாதாரண விபசாரிகளிடம் செல்வதைச் சொல்லவே வேண்டாம், அதோடு அவர்கள் தமது பிடியிலுள்ள பாட்டாளிகளது மனைவியரும் பெண் டிரும் போதாமல் தமக்குள் ஒருவர் மனைவியை ஒருவர் வசப் படுத்திக் களவொழுக்கம் கொள்வதில் ஆகப் பெரிய இன் பம் காண்கிறார்கள்.

முதலாளித்துவத் திருமணமானது உண்மையில் மனைவி யரைப் பொதுவாக்கிக் கொள்ளும் ஒரு முறையே ஆகும்.

ஆகவே கள்ளத்தனமாய்த் திரைமறைவில் பெண்களை எல்லோர்க்கும் பொதுவாக்கி வைக்கும் முறைக்குப் பதில், ஒளிவு மறைவற்ற சட்டபூர்வ முறையைக் கொண்டுவர விரும்புகிறார்கள் கம்யூனிஸ்டுகள் என்று இவர்கள் கண்டிக்கலாமே தவிர அதிகமாய் ஒன்றும் சொல்வதற்கில்லை எப்படியும், இன்றைய பொருளுற்பத்தி அமைப்பு ஒழிக்கப்படும் போது, இந்த அமைப்பிலிருந்து எழும் பொதுப் பெண்டிர்முறையும்—அதாவது பகிரங்கப் பொது விபசாரமும் இரகசியத் தனிவிபசாரமும்—கூடவே ஒழிந்தே ஆகவேண்டும் என்பது தெளிவு.

மேலும் தாய்நாட்டையும் தேசியத் தன்மையையும் இல்லாதொழிக்க விரும்புவதாகவும் கம்யூனிஸ்டுகள் குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

தொழிலாளர்களுக்குத் தாய்நாடு இல்லை. அவர்களிடம் இல்லாத ஒன்றை அவர்களிடமிருந்து பிடுங்குவது முடியாத காரியம். பாட்டாளி வர்க்கம் யாவற்றுக்கும் முதலாய் அரசியல் மேலாண்மை பெற்றாக வேண்டும், தேசத்தின் தலைமையான வர்க்கமாய் உயர்ந்தாக வேண்டும், தன்னையே தேசமாக்கிக் கொண்டாக வேண்டும். அதுவரை பாட்டாளி வர்க்கம் தேசியத் தன்மை கொண்டதாகவே இருக்கிறது, ஆனால் இச்சொல்லுக்குரிய முதலாளித்துவ அர்த்தத்தில் அல்ல.

முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சி, வாணிபச் சுதந்திரம், அனைத்துலகச் சந்தை, பொருளுற்பத்தி முறையிலும் இம்முறைக்கு உரித்தான வாழ்க்கை நிலைமைகளிலும் நாடுகள் ஒருபடித்தானவை ஆதல்—இவற்றின் காரணமாய் வெவ்வேறு நாடுகளது மக்களுக்கும் இடையிலுள்ள தேசிய வேறுபாடுகளும் பகைமைகளும் நாள்தோறும் மேலும் மேலும் மறைந்து வருகின்றன.

பாட்டாளி வர்க்க மேலாண்மையானது இவற்றை மேலும் துரிதமாய் மறையச் செய்யும். குறைந்தது தலைமையான நாகரிக நாடுகளின் அளவிலாவது அமைந்த செயல் ஒற்றுமை, பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வேண்டிய தலையாய நிபந்தனைகளில் ஒன்றாகும்.

தனியொருவர் பிறர் ஒருவரைச் சுரண்டுதல் எந்த அளவுக்கு ஒழிக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு ஒரு தேசம் பிறிதொன்றைச் சுரண்டுதலும் ஒழிக்கப்படும்.

தேசத்தினுள் வர்க்கங்களுக்கிடையிலான பகைநிலே எந்த அளவுக்கு மறைகிறதோ, அதே அளவுக்குத் தேசங்களுக்கிடையிலான பகைமையும் இல்லாதொழியும்.

சமயத்தின், தத்துவவியலின், பொதுவாய்ச் சித்தாந்தத்தின் நோக்குநிலேயிலிருந்து கம்யூனிசத்துக்கு எதிராய்க் கூறப்படும் குற்றச்சாட்டுகள் விவரமாய்ப் பரிசீலிக்கத் தக்கவையல்ல.

மனிதனது கருத்துக்களும் நினைப்புகளும் கண்ணேட்டங்களும்—சுருங்கச் சொன்னல் மனிதனது உணர்வானது—அவனது பொருளாயத வாழ்நிலைமைகளிலும் சமூக உறவுகளிலும் சமூக வாழ்விலும் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலுடனும் சேர்ந்து மாறிச் செல்வதைப் புரிந்து கொள்ள ஆழ்ந்த ஞானம் வேண்டுமா, என்ன?

பொருள் உற்பத்தியில் ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ப, அறிவுத் துறை உற்பத்தியின் தன்மையிலும் மாற்றம் ஏற்படுகிறது—கருத்துக்களின் வரலாறு நிரூபிப்பது இதன்றி வேறு என்னவாம்? ஒவ்வொரு சகாப்தத்திலும் ஆதிக்கம் செலுத்தும் கருத்துக்கள் அந்தச் சகாப்தத்தின் ஆளும் வர்க்கத்தினுடைய கருத்துக்களாகத்தானே எப்போதுமே இருந்திருக்கின்றன.

சமுதாயத்தைப் புரட்சிகர முறையில் மாற்றிடும் கருத்துக்கள் என்பதாய்ச் சொல்கிருர்களே, அவர்கள் உண்மையில் குறிப்பிடுவது என்ன? பழைய சமுதாயத்தினுள் புதியதன் கூறுகள் படைத்துருவாக்கப்பட்டுவிட்டன, பழைய வாழ்நிலேமைகள் சிதைவதற்கு ஒத்தபடி பழைய கருத்துக்களும் கூடவே சிதைகின்றன என்ற உண்மையைத் தான் அவர்கள் குறிப்பிடுகிருர்கள்.

பண்டைய உலகம் அதன் கடைசிக் காலத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது பண்டைய சமயங்களே கிறித்தவ சமயம் வெற்றி கொண்டது. பிறகு 18ஆம் நூற்ருண்டில் கிறித்தவ சமயக் கருத்துகள் அறிவொளி இயக்கக் கருத்துகளுக்கு அடிபணிந்து அரங்கை விட்டகன்ற போது அக்காலத்திய புரட்சி வர்க்கமான முதலாளித்துவ வர்க்கத்துடன் பிரபுத்துவ சமுதாயம் தனது மரணப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது. சமயத் துறை சுதந்திரம், மன சாட்சி சுதந்திரம் ஆகிய கருத்துக்கள் கட்டற்ற சுதந்திரப் போட்டியின்

ஆதிக்கத்தினது அறிவு உலகப் பிரதிமைகளே ஆகும்.

''வரலாற்று வளர்ச்சியின் போது சமயம், ஒழுக்கநெறி, தத்துவவியல், சட்டநெறி இவை சம்பந்தமான கருத்துக்கள் உருத்திரிந்தது மெய்தான். ஆனல் சமயமும் ஒழுக்கநெறியும் தத்துவவியலும் அரசியல் விஞ்ஞானமும் சட்டமும் இந்த மாற்றங்களால் அழிந்துபடாது எப்போதுமே இவற்றைச் சமாளித்து வந்திருக்கின்றன'' என்று நம்மிடம் கூறுவார்கள்.

''இதன்றி சுதந்திரம், நீதி என்பன போன்ற சாசுவத உண்மைகள் இருக்கின்றன, இவை சமுதாயத்தின் எல்லாக் கட்டங்களுக்கும் பொதுவானவை. ஆனல் கம்யூனிசமானது சாசுவத உண்மைகளை இல்லாதொழியச் செய்கிறது; சமயம், ஒழுக்கநெறி ஆகிய அனைத்தையும் புதிய அடிப்படையில் அமைப்பதற்குப் பதில் இவற்றை ஒழித்துக் கட்டிவிடுகிறது. ஆகவே கம்யூனிசம் கடந்த கால வரலாற்று அனுபவம் அனைத்துக்கும் முரணுய்ச் செயல்படுகிறது.''

இந்தக் குற்றச்சாட்டில் அடங்கியுள்ள சாரப்பொருள் என்ன? கடந்த கால சமுதாயம் அனைத்தின் வரலாறும் வர்க்கப் பகைமைகளின் இயக்கமாய் இருந்திருக்கிறது, இந்தப் பகைமைகள் வெவ்வேறு சகாப்தங்களில் வெவ்வேறு வடிவங்களை ஏற்று வந்திருக்கின்றன.

ஆனல் இந்த வர்க்கப் பகைமைகள் ஏற்ற வடிவம் எதுவாஞலும், சமுதாயத்தின் ஒரு பகுதி மற்றொரு பகுதியால் சுரண்டப்பட்டு வந்தது என்பது கடந்த சகாப்தங்கள் யாவற்றுக்கும் பொதுவான உண்மையாகும். எனவே கடந்த சகாப்தங்களது சமூக உணர்வு எவ்வளவுதான் பல்வேறுபட்டதாகவும் பலவிதமானதாகவும்இருந்திருப்பினும்,வர்க்கப்பகைமைகள் அறவே மறைந்தாலொழிய முற்றிலும் கரைந்துவிட முடியாத குறிப்பிட்ட சில பொது வடிவங்கள் அல்லது பொதுவான கருத்துக்களின் வட்டத்தினுள்ளே தான் அந்த சமூக உணர்வு இயங்கி வந்திருக்கிறது, இதில் வியப்பு ஏதுமில்லை.

கம்யூனிசப் புரட்சி பாரம்பரியச் சொத்துடைமை உறவுகளிலிருந்து மிகவும் தீவிரமாய்த் துண்டித்துக் கொண்டுவிடும் புரட்சியாகும், ஆகவே இந்தப் புரட்சியினது வளர்ச்சியின் போது பாரம்பரியக் கருத்துக்களிடமிருந்து மிகவும் தீவிரமாய்த் துண்டித்துக் கொள்ளும்படி நேர்வதில் வியப்புக்கு இடமில்லை.

போதும், கம்யூனிசத்தை எதிர்த்து எழுப்பப்படும் முதலாளித்துவ ஆட்சேபங்களை இத்துடன் முடித்துக் கொள்வோம்.

பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயரச்செய்வதுதான், ஜனநாயகத்துக்கான போரில் வெற்றி ஈட்டுவதுதான், தொழிலாளி வர்க்கம் நடத்தும் புரட்சியின் முதலாவது படி என்பதை மேலே கண்டோம்.

பாட்டாளி வர்க்கம் தனது அரசியல் மேலாண்மையைப் பயன்படுத்தி முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து படிப்படியாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றும்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒருசேர மையப்படுத்தும்; மற்றும் உற்பத்தி சக்திகளது ஒட்டுமொத்தத் தொகையைச் சாத்தியமான முழு வேகத்தில் அதிகமாக்கும்.

ஆரம்பத்தில் இந்தப் பணியினைச் சொத்துடைமை உரிமைகளிலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகளிலும் எதேச்சாதிகார முறையில் குறுக்கிட்டுச் செயல்படுவதன் மூலம்தான் நிறைவேற்ற முடியும். அதாவது, பொருளாதார வழியில் போதாமலும் வலுக் குறைவாகவும் தோன்றும் நடவடிக்கைகளாய் இருப்பினும், இயக்கப் போக்கின் போது தம்மை மிஞ்சிச் சென்றுவிடுகிறவையும் பழைய சமூக அமைப்பினுள் மேலும் குறுக்கிடும்படியான அவசியத்தை உண்டாக்குகிறவையுமாகிய நடவடிக்கைகள் மூலம்தான், பொருளுற்பத்தி முறையைப் புரட்சிகரமாய் அடியோடு மாற்றியமைத்திடும் பாதையில் தவிர்க்க முடியாதவையாகிய இந்நடவடிக்கைகள் மூலம்தான், இந்தப் பணியினை நிறைவேற்ற முடியும்.

இந்த நடவடிக்கைகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறானவையாகவே இருக்கும்.

ஆயினும் மிகவும் வளர்ந்து முன்னேறிய நாடுகளுக்குப் பொதுவாய்ப் பெருமளவுக்குப் பொருந்தக் கூடிய நடவடிக்கைகள் வருமாறு:

1. நிலத்தில் சொத்துடைமையை ஒழித்தலும் நில வாடகைகள் அனைத்தையும் பொதுக் காரியங்களுக்காகப் பயன்படுத்தலும்.

2. கடுமையான வளர்வீத அல்லது படித்தர வருமான வரி.

3. பரம்பரை வாரிசாய்ச் சொத்துடைமை பெறும் உரிமை அனைத்தையும் ஒழித்தல்.

4. நாட்டைவிட்டு வெளியேறிவிடுவோர், கலகக்காரர்கள் ஆகியோர் எல்லோரது சொத்தையும் பறிமுதல் செய்தல்.

5. அரசு மூலதனத்துடன் தனியுரிமையான ஏகபோகம் கொண்ட தேசிய வங்கியின் மூலமாய், கடன் செலாவணியை அரசின் கைகளில் ஒருசேர மையப்படுத்தல்.

6. செய்தித் தொடர்பு, போக்குவரத்துச் சாதனங்களை அரசின் கைகளில் ஒருசேர மையப்படுத்தல்.

7. பொதுத் திட்டத்தின் பிரகாரம் ஆலைகளையும் உற்பத்திக் கருவிகளையும் விரிவாக்குதலும், தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவருதலும், பொதுவாய் மண் வளத்தை உயர்த்தலும்.

8. உழைப்பைச் சரிசமமாய் எல்லோருக்கும் உரிய கடமையாக்குதல், முக்கியமாய் விவசாயத் துறைக்காகத் தொழிற் துறைப் பட்டாளங்களை நிறுவதல்.

9. விவசாயத்தைத் தொழில் துறையுடன் இணைத்தல், தேச மக்களை மேலும் சீரான முறையில் நாடெங்கும் பரவியமையச் செய்வதன் மூலம் நகரத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இடையிலான பாகுபாட்டைப் படிப்படியாய் அகற்றுதல்.

10. எல்லாக் குழந்தைகளுக்கும் பொதுப் பள்ளிக்கூடங்களில் இலவசக் கல்வி அளித்தல். ஆலைகளில் குழந்தைகளது உழைப்பின் தற்போதைய நிலைமையை ஒழித்திடல். கல்வியைப் பொருள் உற்பத்தியுடன் இணைத்தல், இன்னபிற.

வளர்ச்சியின் போது வர்க்க பேதங்கள் மறைந்துவிடும் போதும், தேச மக்கள் அனைவராலுமான மாபெரும் கூட்டமைப்பின் கைகளில் பொருளுற்பத்தி அனைத்தும் ஒருசேரமையமுற்றுவிடும் போதும், பொது ஆட்சியதிகாரம் அதன் அரசியல் தன்மையை இழந்துவிடும். அரசியல் ஆட்சியதிகாரம் என்பது அதன் சரியான பொருளில், ஒரு வர்க்கத்தின் ஒழுங்கமைந்த பலவந்த அதிகாரத்தையே, பிறிதொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்காக அமைந்த பலவந்த அதிகாரத்தையே குறிக்கின்றது. முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதி

ரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் சந்தர்ப்பங்களது நிர்ப்பந்தம் காரணமாய்த் தன்னை ஒரு வர்க்கமாய் ஒழுங்கமைத்துக் கொள்கிறதெனில், புரட்சியின் மூலம் தன்னை ஆளும் வர்க்கமாக்கிக் கொள்கிறதெனில், ஆளும் வர்க்கம் என்ற முறையில் பழைய பொருளுற்பத்தி உறவுகளைப் பலவந்தமாய் ஒழித்திடுகிறதெனில், அப்போது அது இந்தப் பொருளுற்பத்தி உறவுகளுடன் கூடவே வர்க்கப் பகைமைகளும் பொதுவாய் வர்க்கங்களும் நிலவுதற்குரிய நிலைமைகளையும் ஒழித்திடுவதாகிறது, அதன் மூலம் அது ஒரு வர்க்கமாய்த் தனக்குள்ள மேலாண்மையையும் ஒழித்திடுவதாகிறது.

வர்க்கங்களையும் வர்க்கப் பகைமைகளையும் கொண்டிருந்த பழைய முதலாளித்துவ சமுதாயத்துக்குப் பதிலாய், ஒவ்வொருவரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதையே எல்லோரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதற்கான நிபந்தனையாய்க் கொண்ட மக்கட்கூட்டு ஒன்று எழுந்து விடும்.

1847 டிசம்பரில்—1848 ஜனவரியில் எழுதப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ். பி. எங்கெல்ஸ்

# கம்யூனிஸ்டுக் கழகத்துக்கு மத்தியக் கமிட்டியின் வேண்டுகோள்

## கழகத்துக்கு மத்தியக் கமிட்டி

சகோதரர்களே!

1848-49 ஆகிய இரண்டு புரட்சிகர ஆண்டுகளில் இந்தக் கழகம் இரண்டு புதுப்பாணிகளில் தன்னைத் தானே நிலை நாட்டிக் கொண்டது: முதலாவதாக, இதன் உறுப்பினர்கள் எல்லா இடங்களிலும் இயக்கத்தில் ஊக்கமுடன் பங்கேற்றார்கள், அதாவது பிரசாரத்தில், தடையரண்களில் மற்றும் போர்க்களங்களில் அவர்கள் தீர்மானகரமாயும் ஒரே புரட்சிகர வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கத்தின் முன் அணிகளில் நின்றார்கள், என்பது மூலம் இக்கழகம் தன்னைத் தானே நிலை நாட்டிக் கொண்டது. காங்கிரசுகளின் மற்றும் 1847 மத்தியக் கமிட்டியின் சுற்றறிக்கைகளிலும் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையிலும் வகுத்து முன்வைக்கப்பட்ட இயக்கம் பற்றிய அதன் கருத்தோட்டம் மட்டுமே சரியானது என்று காணப் பெற்றது மூலமும், அந்த ஆவணங்களில் வெளியிடப்பட்டிருந்த வருநிலைவாய்ப்புகள் முழுமையாக நிறைவேற்றம் பெற்றன என்பது மூலமும், முன் நாட்களில் இக்கழகத்தால் இரகசியமாக மட்டுமே பிரசாரம் செய்யப்பட்டு வந்த இன்றைய சமுதாய நிலைமைகள் பற்றிய கருத்தோட்டங்கள் இப்போது எல்லோரின் பேச்சிலும் அடிபடுவதும், சந்தை கூடும் இடங்களில் பகிரங்கமாகப் பிரசாரம் செய்யப்படுவதும் எல்லாம் கொண்டு இக்கழகம் மேலும் தன்னைத் தானே நிலைநாட்டிக் கொண்டது. அதே சமயம் இக்கழகத்தின் முன்னைய உறுதியான அமைப்புக்கட்டு கணிசமான அளவுக்கு தளர்த்தப்பட்டது. புரட்சிகர இயக்கங்களில் நேரடியாகப் பங்கேற்ற இதன் உறுப்பினர்களில் ஒரு பெரும் பகுதியினர்,

இரகசிய சங்கங்களுக்கான காலம் மலையேறி விட்டது எனவும் பகிரங்கமான நடவடிக்கைகள் மட்டுமே போதுமானவை எனவும் கருதினர்கள். தனிப்பட்ட வட்டங்களும் சமுதாயக் குழுக்களும் மத்தியக் கமிட்டியுடனுன தமது உறவுகள் தளர்ந்து போய் படிப்படியாக ஒடுங்கி இல்லாது போக இடமளித்தன. இதன் பின்விளைவாக, குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினரின் கட்சியான ஜனநாயகக் கட்சியானது ஜெர்மனியில் தன்னை மேலும் மேலும் ஒழுங்கமைத்துக் கொள்ள இயன்ற அதே போதில், தொழிலாளர் கட்சியானது தனது ஒரே உறுதியான ஆதாரத்தை இழந்து அதிகப் பட்சம் தனிப்பட்ட வட்டாரங்களில் மட்டுமே ஸ்தல நோக்கங்கள் அளவில் அமைப்புத் திரட்சியுடன் நிலவியது. இவ்வாறு, பொதுவான இயக்கம் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் ஆதிக்கத்தின் கீழ், தலைமையின் கீழ் முழுமையாக வந்திருந்தது. இத்தகைய நிலைமைக்கு முடிவு கட்ட வேண்டும், தொழிலாளரின் சுதந்திரம் மீட்டமைக்கப்பட வேண்டும். மத்தியக் கமிட்டி இந்த அவசியத்தை உணர்ந்தது. எனவே கழகத்தைச் சீரமைப்பதற்காக 1848—49 மாரிக் காலத்திலேயே ஒரு தனிப் பிரதிநிதி என்ற முறையில் யோசிப் மோள் என்பவரை அனுப்பியது. ஆயினும் மோள் மேற்கொண்ட லட்சியப் பணியில் நிலையான பலன் எதுவும் ஏற்படவில்லை. இதற்கு ஓரளவு காரணமாக இருந்தது ஜெர்மன் தொழிலாளர்கள் அந்தக் காலத்தில் போதிய அனுபவம் பெற்றிருக்கவில்லை. என்பதே, அதோடு முந்திய மே மாதத்திய புரட்சி எழுச்சி குறுக்கிட்டதும் இதற்கு ஓரளவு காரணமாகும். மோள் தாமே துப்பாக்கி ஏந்திக் கொண்டு பாடேன்-பலிபால்ட்ஸ் சேனையில் புகுந்து ஜூலை 19ந் தேதி முர்க் எனும் இடத்தில் நடந்த மோதலில் வீழ்ந்துபட்டார். கழகம் இவரது இழப்பினல் ஆக அனுபவப்பட்ட மிகவும் செயலூக்கமுடைய பெருமளவு நம்பகமான உறுப்பினர்களில் ஒருவரை இழந்தது. அன்னர் எல்லாக் காங்கிரசுகளிலும் மத்தியக் கமிட்டிகளிலும் தீவிரமான பங்கேற்றவர், இதற்கும் முன்பே கூட பல முக்கியமான பணித்திட்டங்களை மிகவும் வெற்றிகரமாகச் செய்து முடித்தவராவார். ஜெர்மனியிலும் பிரான்சிலும் புரட்சிகரக் கட்சிகளுக்கு ஏற்பட்ட தோல்விக்குப் பின்னர், 1849 ஜூலையில் கிட்டத்தட்ட எல்லா மத்தியக் கமிட்டி உறுப்பினர்களும் மீண்டும் லண்

டனில் ஒன்று கூடினூர்கள், புதிய புரட்சிகர சக்திகளைக் கொண்டு தமது அணிகளை மீண்டும் நிரப்பினூர்கள், புதிய பற்றுர்வத்துடன் கழகத்தை மறு சீரமைக்க முன்வந்தார் கள்.

தனிப் பிரதிநிதியால் மட்டுமே மறு சீரமைப்பைச் செய்து நிறைவேற்ற முடியும். மேலும் ஒரு புதிய புரட்சி நெருங்கிவரும் போது, எனவே தொழிலாளர் கட்சியானது 1848ல் போல மீண்டும் முதலாளித்துவ வர்க்கத்தால் ஆட்டி வைக்கப்படாமலும் கருவியாகப் பயன்படுத்தப்படாமலும் இருக்க வேண்டுமானுல், அது மிகவும் அமைப்புத் திரட்சி யுடன் அறவே ஒருமுகப்பட்ட நிலையில் ஆகச் சுயேச்சை யான முறையில் இயன்றவரை செயல்பட வேண்டும், எனக் கருதப்படும் இந்தத் தருணத்தில், குறிப்பாயும் இந்தத் தனிப் பிரதிநிதி செல்ல வேண்டுவது மிகமிக முக்கியமானது என்று மத்தியக் கமிட்டி கருதுகிறது.

சகோதரர்களே! ஜெர்மன் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் விரைவில் ஆட்சியதிகாரத்துக்கு வருவார்கள், அதோடு தாம் புதிதாகப் பெற்ற ஆட்சியதிகாரத்தை தொழிலாளர்களுக்கு எதிராக உடனடியாகத் திருப்புவார் கள் என்பதாக 1848ஆம் ஆண்டுத் துவக்கத்திலேயே நாம் உங்களிடம் கூறினேம். இது எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதை நீங்கள் ஏற்கெனவே கண்டீர்கள். உண்மையில், முதலாளித்துவ வர்க்கத்தினர் தான், 1848 மார்ச் இயக் கத்துக்குப் பின்[11] உடனடியாக அரசு அதிகாரத்தை மேற் கொண்டு இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி போராட்டத் தில் தமது நேச சக்திகளாக இருந்த தொழிலாளர்களை காலதாமதமின்றி அவர்களது முன்னுளைய ஒடுக்கப்பட்ட நிலைமைக்கு வலுவந்தமாகப் பின் தள்ளியவர்கள் ஆவர். மார்ச் மாதத்தில் பதவியில் இருந்து ஏற்கெனவே விலக்கப் பட்ட நிலப்பிரபுத்துவக் கட்சியுடன் ஒன்று சேராமல், இந்த நிலப்பிரபுத்துவ எதேச்சாதிகாரக் கட்சியிடம் மீண்டும் ஒரு முறை ஆட்சி அதிகாரத்தை இறுதியாக ஒப்படைக்காமல் முதலாளித்துவ வர்க்கத்தினரால் இதைச் செய்து நிறை வேற்ற முடியவில்லை, என்ற போதிலும், இன்னமும் அவர்கள் தமக்கென சில முன்னீடுகளைப் பெற்று விட்டிருந்தார்கள். இந்த நிலைமைகள், புரட்சி இயக்கம் இப்போது ஏற்கெனவே சமாதான முறையிலான வளர்ச்சி எனப்படுவதை மேற்

கொள்ளும் பட்சம், அரசாங்கத்தின் நிதித் துறைச் சங்கடங்கள் காரணமாக, முடிவில் இவர்களது கரங்களில் ஆட்சி அதிகாரத்தை வழங்கவும் இவர்களது நலன்கள் அனைத்தையும் பாதுகாக்கவும் உதவ முடியும். முதலாளித்துவ வர்க்கம் தனது ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, மக்களுக்கு எதிராக வன்முறை நடவடிக்கைகளை எடுத்துத் தன்னை வெறுக்கத்தக்கதாக ஆக்கிக் கொள்ளத் தேவை இல்லை. ஏனெனில் இத்தகைய வன்முறை நடவடிக்கைகள் யாவும் ஏற்கெனவே நிலப்பிரபுத்துவ எதிர்ப்புரட்சியால் எடுக்கப்பட்டுவிட்டன. ஆயினும் நிகழ்ச்சிகள் இந்த சமாதானப் பாதையை மேற்கொள்ளப் போவதில்லை என்பது திண்ணம். மாருக, இது பிரெஞ்சு பாட்டாளி வர்க்கத்தின் ஒரு சுயேச்சையான புரட்சி எழுச்சியின் மூலமோ அல்லது புரட்சிகர பாபிலோனுக்கு எதிராக புனிதக் கூட்டணியின்[12] ஒரு படையெடுப்பின் மூலமோ வெளிக்கொணரப்பட்டாலும் சரி, இந்த நிகழ்ச்சியை விரைவுபடுத்தும் புரட்சி நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பாத்திரத்தை, 1848ல் மக்களுக்கு எதிராக ஜெர்மன் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் வகித்த இந்த மிகவும் துரோகத்தனமான பாத்திரத்தை, நெருங்கிவரும் இந்தப் புரட்சியில் ஜனநாயக குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் மேற்கொள்வது திண்ணம். இவர்கள் இப்போது எதிர்த்தரப்பில் 1848க்கு முன்பாக மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் கொண்டிருந்த அதே நிலையை வகித்து வருகிருர்கள். முந்தைய மிதவாதக் கட்சியை விடவும் தொழிலாளர்களுக்கு மேலும் அதிக அபாயகரமான இந்தக் கட்சி, இந்த ஜனநாயகக் கட்சி மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்:

1. நிலப்பிரபுத்துவத்தையும் எதேச்சாதிகாரத்தையும் உடனடியாகவும் முழுமையாகவும் வீழ்த்தும் நோக்கத்தைப் பின்பற்றிவரும் பெரும் முதலாளித்துவ வர்க்கத்தின் மிகவும் முன்னேறிய பகுதிகள். இந்தப் பிரிவு ஒரு காலத்தில் பெர்லின் சமரசவாதிகளாய் இருந்தவர்களை, வரி எதிர்ப்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

2. ஜனநாயக-அரசியல் சட்ட ஆதரிப்பு குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் பிரிவு. முந்திய இயக்கத்தில் இவர்களது பிரதான நோக்கம், ஃபிராங்புர்ட் சட்டமன்றத்தில்

அவர்களது பிரதிநிதிகளால் இடதுசாரிகளாலும், பின்னுல் ஸ்டுட்கார்ட் நாடாளுமன்றத்தாலும்[13] ரைஹ் அரசியல் சட்டத்திற்கான இயக்கத்தில் தாமேயும் நிறுவ முயன்ற ஓர் ஏறத்தாழ்வான ஜனநாயக கூட்டு அரசினை நிலைநாட்டுவதேயாகும்.

3. குடியரசுவாத குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் பிரிவு. இவர்களது லட்சியம் சுவிட்சர்லாந்தின் தன்மையிலான ஒரு ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசாகும். இப்போது இவர்கள் தம்மை ''சிவப்பர்கள்'', ''சமூக-ஜனநாயகவாதிகள்'' என்று அழைத்துக் கொள்கிருர்கள். காரணம் அவர்கள் சிறிய மூலதனத்தின் மீதான பெரும் மூலதனத்தின் செல்வாக்கு பலத்தை, சிறிய முதலாளித்துவ வர்க்கத்தினர் மீதான பெரும் முதலாளித்துவ வர்க்கத்தினரின் செல்வாக்கு பலத்தை ஒழிக்க வேண்டும் எனும் ஆத்மார்த்திக விருப்பத்தை ஆதரித்துப் பேணிவருகிருர்கள். இந்தப் பிரிவின் பிரதிநிதிகள், ஜனநாயகக் காங்கிரசுகள் மற்றும் கமிட்டிகளின் உறுப்பினர்களாயும், ஜனநாயக சங்கங்களின் தலைவர்களாயும், ஜனநாயக செய்திப்பத்திரிகைகளின் ஆசிரியர்களாயும் இருந்தவர்கள்.

இப்போது, அவர்களது தோல்விக்குப் பின்னர் இந்தப் பிரிவுகள் எல்லாம் பிரான்சில் குடியரசுவாத குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் தம்மைத் தாமே சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்வது போலவே தம்மைத் தாமே ''குடியரசுவாதிகள்'' அல்லது ''சிவப்பர்கள்'' என்று அழைத்துக் கொள்கின்ருர்கள். வுர்டம்பர்க், பவேரியா இத்தியாதி இடங்களில் போல எங்கு அவர்கள் தமது நோக்கங்களை அரசியல் சட்ட பாணியில் அனுசரிப்பதற்கு இன்னும் வாய்ப்பு இருக்கக் காண்கிருர்களோ அங்கு அவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது பழைய தொடர்களை நீடித்து வைத்திருக்கிருர்கள், தாம் கிஞ்சிற்றும் மாறிவிடவில்லை என்பதைச் செயல்கள் மூலம் நிரூபிக்க முயல்கிருர்கள். மேலும், இந்தக் கட்சியின் பெயர் மாற்றம் தொழிலாளர் பாலான அதன் தோரணையில் சின்னஞ்சிறு மாறுதலைக் கூடக் கொண்டுவரவில்லை என்பதும், ஆனுல் இப்போது அவர்கள் எதேச்சாதிகாரத்துடன் ஒன்றிணைந்து விட்ட முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராகத் திரும்பவும், பாட்டாளி வர்க்கத்திடம் ஆதரவை நாடவுமான கட்டாயத்திற்கு உள்

ளாகியிருப்பதை மட்டுமே நிரூபிக்கிறது என்பதும் தெளிவு.

ஜெர்மனியில் உள்ள குட்டிமுதலாளித்துவ ஜனநாயகக் கட்சி மிகவும் சக்தி வாய்ந்தது. இதனுள் நகரங்களில் வாழும் முதலாளித்துவ வர்க்கத்தினரில் மாபெரும் பெரும் பான்மை மட்டுமன்றி தொழில் துறையிலும் வாணிகத்திலும் இருக்கும் சிறுதர நபர்கள் மற்றும் கைவினைச் சங்க ஆண்டான்கள் உட்படுவர். இதன் ஆதரவாளர்களிடையே விவசாயிகளும் நாட்டுப்புறப் பாட்டாளிகளும் அடங்குவர். பின்னவர்களைப் பொருத்தவரை அவர்கள் இதுகாறும் சுயேச்சையான நகரப்புறப் பாட்டாளி வர்க்கத்தினரின் ஆதரவை இன்னும் பெற்றுவிடவில்லை.

குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் பாலான புரட்சிகரத் தொழிலாளர் கட்சியின் உறவு நிலை இதுவே: அது எந்தப் பிரிவை வீழ்த்த எண்ணியுள்ளதோ அந்தப் பிரிவுக்கு எதிராக அவர்களுடன் சேர்ந்து நடைபோடுகிறது, தமது சொந்த நலன்களுக்காகத் தமது நிலையை கெட்டிப் படுத்த எங்கெல்லாம் அவர்கள் முயல்கிறார்களோ அம்முயற்சிகள் அனைத்திலும் அவர்களை எதிர்க்கிறது.

புரட்சிகரப் பாட்டாளிகளுக்கு வேண்டி சமுதாயம் முழுவதையும் புரட்சிமயமாக்க விழைவதற்கு மாறாக, ஜனநாயக குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் சமுதாய நிலைமைகளில் ஒரு மாற்றத்துக்குப் பாடுபட்டு, அதன் வழி நடப்பிலுள்ள சமுதாய அமைப்பைத் தமக்குப் போதுமானவரை தாங்கக் கூடியதாயும் வசதியானதாயும் செய்துகொள்ள முயல்கின்றனர். எனவே அவர்கள் முக்கியமாயும் அரசின் செலவினங்களைக் குறைத்தல், அதிகார வர்க்கத்தை கட்டுப்படுத்தல் மற்றும் பிரதான வரிகளை பெரிய நிலவுடைமையாளர் முதலாளிகள் மீது மாற்றிச் சுமத்துவது ஆகியவற்றைக் கோருகிறார்கள். மேலும் அவர்கள் பொது கடன் வசதி நிறுவனங்கள் மற்றும் கடுவட்டிக்கு எதிரான சட்டங்கள் வாயிலாக சிறிய மூலதனத்தின் மீதான பெரும் மூலதனத்தின் செல்வாக்கு பலத்தை ஒழிக்க வேண்டும் என்றும் கோருகிறார்கள். இத்தகைய நிறுவனங்கள் மூலம் அவர்களும் விவசாயிகளும் முதலாளிகளிடமிருந்தல்லாமல் அரசிடம் இருந்து சாதகமான நிபந்தனைகளின் பேரில் முன்பணம் பெறுவது சாத்தியமாகும். அதோடு அவர்கள் நாட்டுப்புறப் பகுதிகளில் நிலப்பிரபுத்துவத்தை முழுமையாக ஒழித்து முதலாளித்துவ

சொத்துடைமை உறவுகளை நிலைநாட்ட வேண்டும் எனவும் கோருகிறார்கள். இவை அனைத்தையும் சாதனையாக்க அவர்களுக்கு ஒன்று அரசியல் சட்டபாணி அல்லது குடியரசு பாணியிலான ஒரு ஜனநாயக அரசுக் கட்டுமானம் தேவை. அது அவர்களுக்கும் அவர்களது நேச சக்திகளான விவசாயிகளுக்கும் பெரும்பான்மையைத் தருவதாக இருத்தல் வேண்டும். அதோடு சமுதாயச் சொத்தின் மீதும் தற்போது அதிகார வர்க்கத்தினர் புரிந்து வரும் பல பணிகளின் மீதும் அவர்களுக்கு நேரடி ஆதிக்கத்தை வழங்குகிற ஒரு ஜனநாயக சமுதாயக் கட்டமைப்பும் தேவை.

மூலதனத்தின் மேலாதிக்கத்தையும் அதன் துரிதமான அதிகரிப்பையும் மேலும் மட்டுப்படுத்த ஓரளவு மரபுரிமையிலான சொத்துரிமையைக் கட்டுப்படுத்தவும் ஓரளவு சாத்தியமானவரை பல வேலைப் பொறுப்புக்களையும் அரசுக்கு மாற்றி வழங்கவும் ஆவன செய்ய வேண்டும். தொழிலாளர்களைப் பொருத்தவரை அவர்கள் முன்போலவே கூலித் தொழிலாளர்களாகவே நீடித்து இருப்பார்கள் என்பது விசேஷமாயும் நிச்சயமாக இருக்கும். ஜனநாயகவாத குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் தொழிலாளர்களுக்கு மேலும் நல்ல கூலியும் கூடுதல் பாதுகாப்பான வாழ்க்கையையும் மட்டுமே அளிக்க விரும்புகிறார்கள். இதனை ஓரளவு அரசின் சார்பில் பெறும் வேலைகள் மூலமும் அறக்கொடை நடவடிக்கைகள் மூலமாயும் நிறைவேற்றமுடியும் என்று கருதுகிறார்கள். சுருங்கக் கூறின் அவர்கள் கிட்டத்தட்ட மறைமுகமான பிச்சை மூலம் தொழிலாளர்களுக்கு கைக்கூலி தந்து, தற்காலிகமாக அவர்களது நிலைமையை சகிக்கத்தக்க தாக்குவது மூலம் அவர்களது புரட்சிகர ஆற்றலை உடைக்கவும் கருதுகிறார்கள். இங்கு சுருக்கித் தரப்பட்டுள்ள குட்டிமுதலாளித்துவ ஜனநாயகத்தின் கோரிக்கைகள் அதன் பிரிவுகள் அனைத்தாலும் முன்வைக்கப்படுவதில்லை, அதே சமயம் இப்பிரிவுகளின் உறுப்பினர்களில் மிகச் சிலரே இந்தக் கோரிக்கைகள் ஒட்டு மொத்தமான வகையில் திட்டவட்டமான நோக்கங்களாக அமைகின்றன என்பதாகக் கருதுகிறார்கள். இவர்கள் இடையிலிருந்து தனிநபர்களோ அல்லது தனிப் பிரிவுகளோ மேலும் விலகிச் செல்லும் பட்சத்தில் இந்தக் கோரிக்கைகளை மேலும் அதிகமாகத் தமது சொந்தக் கோரிக்கைகளாகக் கொள்வார்கள். மேலே வரையறுக்கப்பட்டுள்ளவற்றில்

தமது சொந்தக் கோரிக்கைகளைக் காணும் அந்த ஒரு சிலர் இதன் வழி அவர்கள் ஒரு புரட்சியிடம் இருந்து எதிர்பார்க்கும் உச்சபட்ச கோரிக்கைகளை முன்வைத்துவிட்டதாகக் கருதலாம். ஆனால் இந்தக் கோரிக்கைகள் ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியைப் பொருத்த வரை எவ்வகையிலும் போதவே போதாது. ஜனநாயக குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் அதிகப்பட்சம் மேலே குறிப்பிட்ட கோரிக்கைகளை சாதனையாக்குவதோடு புரட்சியைக் கூடுமான வரையில் விரைவாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதே பொழுதில், கிட்டத்தட்ட எல்லா உடைமை வர்க்கங்களும் அவற்றின் மேலாதிக்க நிலையில் இருந்து வலுவந்தமாக வெளியேற்றப்படும் வரையில், பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தை வென்று பெறும் வரையில், பாட்டாளிகளின் கூட்டமைப்பு ஒரு நாட்டில் மட்டுமன்றி உலகின் எல்லா ஆதிக்க நாடுகளிலும் முன்னேற்றமடைந்து அதன் விளைவாய் இந்த நாடுகளின் பாட்டாளிகளிடையான போட்டி இல்லாதாகி, குறைந்த பட்சம் நிர்ணயகரமான உற்பத்தி சக்திகள் பாட்டாளிகளின் கரங்களில் ஒரு முனைப்படுத்தப்படும் வரையில் புரட்சியை நிரந்தரமாக்குவது நமது நலன்களுக்கு உகந்தது, மேலும் நமது கடமையுமாகும். நமக்கு இந்தப் பிரச்சினை தனிச் சொத்துடைமையில் மாறுதல் செய்வதல்ல, மாறாக அதை அழித்தொழிப்பது மட்டுமே; வர்க்கப் பகைமைகளைச் சுமுகப்படுத்தல் அல்ல, மாறாக வர்க்கங்களை ஒழிப்பதே, நிலவும் சமுதாயத்தைத் திருத்துவதல்ல, மாறாக புதிய ஒரு சமுதாயத்துக்கு அடித்தளம் இடுவதே. புரட்சியின் இனி மேற்பட்டதான வளர்ச்சியின் போது குட்டிமுதலாளித்துவ ஜனநாயகமானது ஜெர்மனியில் சிறிது காலம் பேராதிக்கம் வகிக்கும் செல்வாக்கைப் பெறும் என்பதில் ஐயப்பாட்டுக்கு இடமில்லை. எனவே, இது சம்பந்தமாக பாட்டாளி வர்க்கத்தின் குறிப்பாக, இந்தக் கழகத்தின் தோரணை என்னவாக இருக்கும் எனும் கேள்வி எழுகிறது:

1. குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் இது போலவே ஒடுக்கப்படுகிற இன்றைய நிலைமைகள் நீடிக்கும் போது;

2. அவர்கள் கை மேலோங்க வகைசெய்யும் அடுத்த புரட்சிகரப் போராட்டத்தில்;

3. இந்தப் போராட்டத்திற்குப் பிறகு, வீழ்த்தப்பட்ட வர்க்கங்கள் மீதான மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் பேராதிக்க கட்டத்தின் போது.

1. இன்றைய தருணத்தில் ஜனநாயக குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் எல்லா இடங்களிலும் ஒடுக்கப்பட்டு வரும் போது, அவர்கள் பொதுப்படையாக பாட்டாளிகளிடம் ஒற்றுமையையும் இணக்கத்தையும் பற்றிப் பேசுகிறார்கள், அவர்களுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்து, ஜனநாயகக் கட்சியில் இருக்கும் எல்லாக் கருத்துச் சாயல்களையும் தழுவியதான ஒரு பெரிய எதிர்க்கட்சியை நிறுவுவதற்கு முயல்கிறார்கள். அதாவது அவர்கள் பொதுவான சமூக-ஜனநாயகத் தொடர்கள் பேராதிக்கம் வகிக்கும் ஒரு கட்சி நிறுவனத்தில் தொழிலாளர்களை மாட்டிவிட முயல்கிறார்கள். இத்தொடர்களின் பின்னால் அவர்களது விசேஷ நலன்கள் மறைந்து நிற்கின்றன. இதில் அருமைக்குரியதான சமாதானத்தின் பொருட்டு பாட்டாளி வர்க்கத்தின் குறிப்பிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்படாது போகலாம். இத்தகைய இணைப்பு முற்றிலும் அவர்களுக்குச் சாதகமானதாக மாறும், பாட்டாளிகளுக்கு அறவே பாதகமானதாகும். பாட்டாளி வர்க்கம் தனது முழு சுயேச்சையையும் அரும்பாடுபட்டுப் பெற்ற நிலையையும் இழந்து மீண்டும் ஒருமுறை அதிகார பூர்வமான முதலாளித்துவ ஜனநாயகத்தினை அண்டிநிற்கும் உறுப்பு என்ற நிலைக்குத் தாழ்வுறும். எனவே இந்த இணைப்பை மிகவும் தீர்மானகரமான முறையில் நிராகரிக்க வேண்டும். முதலாளித்துவ ஜனநாயகவாதிகளுக்குக் கரவொலி முழக்கும் தாள கோஷ்டியாகத் தொண்டு புரிய மீண்டும் ஒரு முறை குனிந்து தாழ்வுறுவதற்குப் பதில், தொழிலாளர்கள் விசேஷமாயும் இந்தக் கழகத்தினர் அதிகார பூர்வமான ஜனநாயகவாதிகளுடன் அக்கம் பக்கமாக சுதந்திரமான, இரகசியமும் பகிரங்கமுமான தொழிலாளர் கட்சி நிறுவனத்தை அமைப்பதற்குப் பாடுபட வேண்டும். அதோடு பாட்டாளி வர்க்கத்தின் நலன்களும் தோரணைகளும் இந்த மத்திய அமைப்பு மற்றும் தொழிலாளர்களின் மையக் கூறுகளில் முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வாக்குகளிலிருந்து சுயேச்சையான முறையில் விவாதிப்பதற்கு வகை செய்ய வேண்டும். முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் பாட்டாளிகள் அவர்களுடன் சம

மான அதிகாரம் மற்றும் சமமான உரிமைகளுடன் அக்கம் பக்கமாக நிற்கும் ஒரு கூட்டணி பற்றிக் காரியகரமாகக் கருதிப்பார்க்கவே இல்லை என்பதற்கு பிரெஸ்லா ஜனநாயக வாதிகளின் போக்கே ஓர் உதாரணமாகும். அவர்கள் தமது ஏடான *Neue Oder-Zeitung*இல்,[14] சுதந்திரமாக ஒழுங்கமைந்து வரும் தொழிலாளர்களை மிகவும் மூர்க்கமான முறையில் தாக்கியுள்ளனர். அத்தொழிலாளர்களை அவர்கள் சோஷலிஸ்டுகள் என்னும் பெயரால் குறிப்பிடுகிறார்கள். ஒரு பொது விரோதியுடனான போராட்டத்தில் ஒரு விசேஷ இணைப்பு எதுவும் தேவையில்லை. அத்தகைய ஒரு விரோதியை எதிர்த்து நேருக்கு நேர் போராட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்ட உடனேயே இரு தரப்புக்களின் நலன்களும் தற்காலிகமாக ஒன்றுபடுகின்றன. முன்போலவே, எதிர் காலத்திலும் கூட, தற்காலிகமாக மட்டுமே நிலவும் என்று கருதப்படும் இந்த இணைப்பு தானே தோற்றமளிக்கும். வரவிருக்கும் கடுமையான மோதல்களில், முந்திய மோதல்கள் அனைத்திலும் நடந்தது போலவே தொழிலாளர்கள்தான் பிரதானமாயும் தமது தீரம், உறுதி மற்றும் தன்னலத்தியாகம் மூலம் வெற்றியை ஈட்டிப் பெற வேண்டும் என்பது கூறாமலே விளங்கும். முன்பு போலவே இந்தப் போராட்டத்திலும் கூட பெருந்திரளான குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் சாத்தியமானவரை நீண்ட காலம் தயக்கம் காட்டுவர், முடிவு செய்யாது இருப்பர், செயல்படாது நிற்பர். ஆனால் பிரச்சினை தீர்க்கப்பட்ட உடனேயே வெற்றியைத் தாமே பறித்துக் கொள்வர், தொழிலாளர்களை அமைதி காக்கும் படியும், வேலைக்குத் திரும்பும் படியும், கேட்டுக் கொள்வர், அதீத நடவடிக்கைகள் எனப்படுவதை எதிர்த்து எச்சரிக்கையாக இருப்பர், வெற்றியின் பலன்களை அடையாத படி தொழிலாளர்களைத் தடை செய்வர். குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளை இதைச் செய்யாமல் தடுக்கும் அளவுக்குத் தொழிலாளரிடம் வலிமை இல்லை. ஆனால் ஆயுதமேந்திய பாட்டாளிகளுக்கு மேல் அவர்கள் கை ஓங்குவதைக் கடினமாக்கும் அளவுக்கும், முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் ஆட்சி துவக்க முதலே அதன் வீழ்ச்சியின் வித்துக்களைத் தாங்கி நிற்கும்படியான அத்தகைய நிலைமைகளைக் கட்டளையிடும் அளவுக்கும் தொழிலாளர்களிடம் வலிமை இருந்தது. இதன் மூலம் பின்னால் அவர்களது ஆட்சி பாட்

டாளி வர்க்க ஆட்சியால் வெளித்தள்ளப்படுவதற்கு இது கணிசமாக உதவியது. எல்லாவற்றுக்கும் மேலாக, மோதலின் போதும், போராட்டத்திற்குப் பின்னர் உடனடியாகவும் குழுறலை அமைதிப்படுத்தச் செய்யப்படும் முதலாளித்துவ வர்க்கத்தின் முயற்சிகளை எதிர்த்துச் செயல்பட்டும் ஜனநாயகவாதிகள் தமது இன்றைய சொல்லுருவிலான பயங்கரத்தை நிறைவேற்றுமாறு கட்டாயப்படுத்தவும் தொழிலாளர்கள் சாத்தியமான சகலத்தையும் செய்தல் வேண்டும். அவர்களது செயல்கள் வெற்றிக்குப் பின்னர் உடனடியாக நேரடி புரட்சிகரப் பரபரப்பு ஒடுக்கப்படுவதைத் தடைசெய்யும் நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும். இதற்கு மாருக, இந்தப் பரபரப்பை சாத்தியமான வரை நீண்ட காலம் உயிர்த்துடிப்புடன் வைத்திருக்க வேண்டும். அதீதமான செயல்கள் எனப்படுவனவற்றை எதிர்ப்பதற்கு நேர்மாருக, வெறுக்கத்தக்க நினைவுகளுடன் மட்டுமே சம்பந்தமுடைய வெறுக்கப்பட்ட தனிநபர்கள் அல்லது பொதுக் கட்டடங்களை எதிர்த்து நடக்கும் மக்களின் பழிவாங்கல் செயல்களைப் பொருத்தவரை, இத்தகைய சம்பவங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்பது மட்டுமின்றி இவற்றுக்கான தலைமையும் ஏற்றெடுக்கப்பட வேண்டும். போராட்டத்தின் போதும், போராட்டத்திற்குப் பிறகும் தொழிலாளர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் கோரிக்கைகளுக்கு அக்கம் பக்கமாகவே தமது சொந்தக் கோரிக்கைகளையும் முன்வைத்தல் வேண்டும். ஜனநாயக முதலாளித்துவ வர்க்கம் அரசாங்கத்தைத் தம் வசம் எடுத்துக் கொள்ளத் தொடங்கிய உடனேயே அவர்கள் தொழிலாளர்களுக்குரிய உத்தரவாதங்களைக் கோர வேண்டும். அவசியமானல் இந்த உத்தரவாதங்களை அவர்கள் பலப்பிரயோகம் மூலம் பெற வேண்டும். பொதுவாக புதிய ஆட்சியாளர்கள் சாத்தியமான எல்லா சலுகைகளையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்ற உறுதியெடுக்கும்படி அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இதுவே அவர்கள் இணக்குவிப்பதற்கான மிகவும் உறுதியான மார்க்கமாகும். பொதுவாக, அவர்கள் ஒவ்வொரு தெருப்போராட்டத்துக்குப் பிறகும் தோன்றுகிற வெற்றி போதையையும் புதிய நிலவரத்தின் பாலான உற்சாகத்தையும் எல்லா வழிகளிலும் கட்டுப்படுத்தி வைக்க இயன்ற

வரை முயல வேண்டும். நிலைமை பற்றிய ஓர் அமைதியான நடு நிலையான மதிப்பீடு மூலமும், புதிய அரசாங்கத்திடமான ஒளிவுமறைவற்ற அவநம்பிக்கை மூலமும் இந்தக் கட்டுப்படுத்தலைச் செய்தல் வேண்டும். புதிய அதிகார பூர்வமான அரசாங்கங்களுக்கு அக்கம் பக்கமாக அவர்கள் தமது சொந்த புரட்சிகர அரசாங்கங்களை முனிசிப்பல் கமிட்டிகள் மற்றும் முனிசிப்பல் கவுன்சில்கள் வடிவிலேயோ அல்லது தொழிலாளர் கிளப்புகள் அல்லது தொழிலாளர் கமிட்டிகள் வடிவிலேயோ உடனிகழ்வாக நிறுவ வேண்டும். இதன் விளைவாக முதலாளித்துவ ஜனநாயக அரசாங்கங்கள் உடனே தொழிலாளர்களின் ஆதரவை இழப்பது மட்டுமன்றி, அதோடு கூடவே துவக்க முதல் தொழிலாளர் திரள் முழுவதன் பின் பலத்தைக் கொண்ட அதிகார சக்தியால் மேற்பார்வை செய்யப்படுவதையும் அச்சுறுத்தப்படுவதையும் தாமே காண முடியும். சுருங்கக் கூறின், வெற்றியின் முதல் தருணம் முதலே, அவநம்பிக்கை இனி வெற்றி கொள்ளப்பட்ட பிற்போக்குக் கட்சிக்கு எதிராக அன்றி, தொழிலாளர்களின் முந்திய நேச சக்திகளுக்கு எதிராக, பொதுவான வெற்றியைத் தனக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள விரும்பும் கட்சிக்கு எதிராக நெறியாக்கம் செய்யப்பட வேண்டும்.

2. தொழிலாளர்களுக்கு எதிராக எதன் துரோகம் வெற்றியின் முதல் மணி தொட்டே துவங்குமோ அந்தக் கட்சியை ஊக்கத்தோடும் அச்சுறுத்தும் முறையிலும் எதிர்க்கும் பொருட்டு தொழிலாளர்கள் ஆயுதமேந்த வேண்டும், தம்மை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும். பாட்டாளி வர்க்கம் முழுவதற்கும் சுழல் துப்பாக்கிகள் கனத் துப்பாக்கி,பீரங்கி மற்றும் ஆயுத தளவாடங்கள் வழங்கி அவர்களை ஆயுத பாணிகளாக்கும் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். தொழிலாளருக்கு எதிராக நெறியாக்கம் செய்யப்படும் பழைய நகரவாசிகள் காவற்படை புதுப்பிக்கப்படுவதை எதிர்க்க வேண்டும். எங்கு பிந்திய செயல்காரிய சாத்தியமில்லையோ அங்கு தொழிலாளர்கள் தம்மைத்தாமே சுயேச்சையாக ஒரு பாட்டாளி வர்க்க காவற்படையாக ஒழுங்கமைத்துக் கொள்ளவும் தாமே தேர்ந்தெடுத்த தளபதிகள் தமது வருப்பப்படி தேர்வு செய்த படைத் தலைமை ஆகியவற்றை அமைக்கவும், தம்மை அரசின் அதிகார பலத்துக்குக் கீழடக்கிக் கொள்ளாது, தொழி

லாளர் அங்கீகரிக்க முடிந்துள்ள புரட்சிகரக் கமிட்டிகளின் அதிகாரத்தின் கீழ் செயல்பட முயலல் வேண்டும். எங்கு தொழிலாளர்கள் அரசின் செலவில் பதவிகளில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்களோ அங்கு அவர்களுக்கு ஆயுதம் வழங்கப்பட்டு தமது சொந்தத் தேர்வுப்படியான தளபதி கள் சகிதம் தனிப் படைப் பிரிவாகவோ அல்லது பாட்டாளி வர்க்கக் காவற்படையின் ஒரு பகுதியாகவோ ஒழுங்கமைக் கப்பட வேண்டும். எந்தச் சாக்குப் போக்கைக் கொண்டும் ஆயுதங்கள் மற்றும் ஆயுத தளவாடங்களை ஒப்படைக்கக் கூடாது. நிராயுத பாணிகளாக்குவதற்கான எந்த ஒரு முயற்சி யையும் தடுத்துச் செயல் குலைத்தல் வேண்டும். அவசிய மானால் பலப்பிரயோகம் மூலம் இதைச் செய்ய வேண்டும்; தொழிலாளர் மீதான முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் செல்வாக்கை அழித்தல், தொழிலாளர்களின் சுயேச்சை யான ஆயுதமேந்திய நிறுவனங்களை உடனே அமைத்தல், முதலாளித்துவ ஜனநாயகத்தின் தவிர்க்க முடியாத தற்கா லிக ஆட்சி மீது கூடுமானவரை கடினமான இணக்குவிப்ப தான நிபந்தனைகளை அமுலாக்கல்—இவையே நெருங்கி வரும் புரட்சி எழுச்சியின் போதும் அதற்குப் பின்னரும் பாட்டாளி வர்க்கம் மற்றும் இந்தக் கழகம் கவனத்தில் வைத்திருக்க வேண்டிய பிரதான அம்சங்களாகும்.

3. புதிய அரசாங்கங்கள் தமது நிலையை ஓர் அளவுக்கு கெட்டிப்படுத்திக் கொண்ட உடனேயே, தொழிலாளர்களை எதிர்த்த அவற்றின் போராட்டம் துவங்கும். இங்கு ஜன நாயக குட்டிமுதலாளித்துவ வர்க்கத்திடம் ஊக்கமான எதிர்ப்பை காட்டும் பொருட்டு தொழிலாளர்கள் கிளப்பு களில் சுயேச்சையாக ஒழுங்கமைக்கப்படுவதும், மத்தியப் படுத்தப்படுவதும் முக்கியமாயும் அவசியம். நடப்பிலுள்ள அரசாங்கங்களை வீழ்த்திய பின்னர், மத்தியக் கமிட்டி சாத் தியமான அளவு விரைவாக ஜெர்மனிக்குச் செல்லும், உடனே ஒரு காங்கிரசைக் கூட்டும், இயக்கத்தின் பிரதான களத்தில் நிறுவப்பட்ட தலைமையின் கீழ் தொழிலாளர் கிளப்புகளை மையப்படுத்துவதற்குத் தேவையான யோசனை களை முன்வைக்கும். குறைந்த பட்சம் தொழிலாளர் கிளப்பு களை மாகாண அளவில் பரஸ்பரம் இணைப்பதை துரிதமாக ஒழுங்கமைப்பது தொழிலாளர் கட்சியை வலுப்படுத்தவும் வளப்படுத்தவுமான மிகமுக்கியமான அம்சங்களில் ஒன்று;

நடப்பிலுள்ள அரசாங்கங்கள் வீழ்த்தப்படுவதன் உடனடிப் பின்விளைவு ஒரு தேசியப் பிரதிநிதித்துவ சபையைத் தேர்ந்தெடுப்பதாகும். இங்கு பாட்டாளி வர்க்கம் கவனம் செலுத்த வேண்டிய விஷயங்களாவன:

1. தொழிலாளர்களின் எந்த ஒரு பிரிவும் வட்டார அதிகாரிகள் அல்லது அரசாங்கக் கமிஷனர்களிடமிருந்து வரும் எவ்விதமான சாக்குப் போக்கு அல்லது தந்திரச் செயல்களால் தடைபடுத்தப்படாதபடி கவனித்துக் கொள்வது.

2. எல்லா இடங்களிலும் முதலாளித்துவ ஜனநாயக வேட்பாளர்களுக்கு அக்கம் பக்கமாக தொழிலாளர் வேட்பாளர்கள் நிறுத்திவைக்கப்பட வேண்டும், இவர்கள் கூடுமானவரை கழக உறுப்பினர்களாக இருக்க வேண்டும், அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை சாத்தியமான சகல வழிகளிலும் ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் தேர்ந்தெடுக்கப்படக் கூடியதான வாய்ப்பு இல்லாத இடங்களிலுங்கூட தமது சுயேச்சையைப் பேணிக் காப்பதற்காக தமது சக்திகளை கணித்திடவும் பொது மக்கள் முன்பாகத் தமது புரட்சிகர தோரணையையும் கட்சியின் நோக்கு நிலையையும் கொண்டு வரவும் வேண்டி தொழிலாளர்கள் தமது சொந்த வேட்பாளர்களை நிறுத்தி வைக்க வேண்டும். இதன் தொடர்பாக அவர்கள் ஜனநாயகவாதிகளின் இத்தகைய வாதங்களால், உதாரணமாக இவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் ஜனநாயகக் கட்சியைப் பிளவுறுத்துகிறார்கள், பிற்போக்காளர்கள் வெற்றியடைவதைச் சாத்தியமாக்குகிறார்கள் எனும் வாதங்களால் மருட்டப்பட இடமளித்தல் கூடாது. இத்தகைய தொடர்களின் இறுதி நோக்கம் பாட்டாளி வர்க்கத்தினரை ஏமாற்றுவதேயாகும். இத்தகைய சுயேச்சையான நடவடிக்கைகள் மூலம் பாட்டாளி வர்க்கக் கட்சி நிச்சயம் அடையப் போகும் முன்னேற்றம், பிரதிநிதித்துவ அமைப்பில் ஒரு சில பிற்போக்காளர்கள் இருப்பதால் ஏற்படவிருக்கும் பாதிப்பை விடவும் மிகவும் அளப்பரிய முக்கியத்துவமுடையதாகும். துவக்க முதலே ஜனநாயகமானது பிற்போக்கை எதிர்த்து உறுதியாகவும் பயங்கரமான முறையிலும் முன்வருமானால் தேர்தல்களில் பின்னதன் செல்வாக்கு முன் கூட்டியே அழித்தொழிக்கப்படும்.

முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் தொழிலாளர்களுடன் முரண்பட்டு மோதுவதற்கான முதல் விஷயம் நிலப்

பிரபுத்துவ ஒழிப்பு பற்றியதாகும். முதலாவது பிரெஞ்சுப் புரட்சியில்[15] போலவே குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் பிரபுத்துவ நிலங்களை விவசாயிகளுக்கு இலவசச் சொத்தாக அளிப்பர், அதாவது நாட்டுப் புறப் பாட்டாளி வர்க்கத்தை அப்படியே நிலவும்படி விட்டு ஒரு குட்டிமுதலாளித்துவ விவசாயி வர்க்கத்தை உருவாக்க முயல்வர். இந்த வர்க்கம் பிரெஞ்சு விவசாயிகள் இன்னமும் அனுபவித்து வரும் அதே வறுமை மற்றும் கடன் சுமை வட்டத்துக்குள் உழல்வது திண்ணம்.

நாட்டுப்புற பாட்டாளிகளின் நலன்களைக் கருதியும் தமது சொந்த நலனைக் கருதியும் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தைக் கட்டாயமாக எதிர்த்தே தீர வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட பிரபுத்துவச் சொத்துக்கள் அரசின் சொத்துக்களாக வைக்கப்பட்டு, அவை பெருவீத விவசாயத்தின் சகல சாதகங்களோடும் ஒன்றிணைந்த நாட்டுப் புறப் பாட்டாளிகளால் சாகுபடி செய்யப்படும் தொழிலாளர் காலனிகளாக மாற்றப்பட வேண்டும் என்று கோருவது அவசியம். இதன் வாயிலாக, ஆட்டங்கண்டு விட்ட முதலாளித்துவ சொத்துடைமை உறவுகளுக்கு மத்தியில் பொதுச் சொத்துடைமை எனும் கோட்பாடு உடனடியாக ஓர் உறுதியான அடித்தளத்தினைப் பெறுகிறது. ஜனநாயகவாதிகள் எந்தளவுக்கு விவசாயிகளுடன் சேர்ந்து இணைகிறார்களோ அந்த அளவுக்கு தொழிலாளர்கள் நாட்டுப்புறப் பாட்டாளிகளுடன் சேர்ந்து இணைகிறார்கள். மேலும் ஜனநாயகவாதிகள் ஒன்று நேரடியாக ஒரு கூட்டாட்சி குடியரசுக்காகப் பாடுபடுவர் அல்லது தனியொரு பிரிக்கவொண்ணா குடியரசை அவர்களால் தவிர்க்க முடியாத பட்சம் அவர்கள் சமுதாயக் கூட்டுகள் மற்றும் மாகாணங்களுக்கு அதிகப் பட்சம் சாத்தியமான தன்னாட்சியும் சுதந்திரமும் வழங்குவது மூலம் குறைந்தபட்சம் மத்திய அரசாங்கத்தை முடப்படுத்த முயல்வர். இந்தத் திட்டத்துக்கு எதிராகத் தொழிலாளர் தனி ஒரு பிரிக்கவொண்ணாத ஜெர்மன் குடியரசுக்காகப் பாடுபடுவது மட்டுமன்றி, இந்தக் குடியரசின் அகத்தே அரசு அதிகார சக்தியின் கரங்களில் ஆட்சியதிகாரம் மிகவும் உறுதியாக மையப்படுத்தப்படுவதற்காகவும் கூடப் பாடுபட வேண்டும். சமுதாயக் கூட்டுக்களுக்கு சுதந்திரம், சுய-ஆட்சி நிர்வாகம் இத்தியாதியான ஜனநாயக பாணிப்

பேச்சுக்களால் தவருக வழி நடத்தப்படுவதற்கு அவர்கள் இடந்தரக் கூடாது. ஒழிக்கப்பட வேண்டிய மத்திய கால எச்சமிச்சங்கள் ஏராளமாக இருக்கும் ஜெர்மனி போன்ற ஒரு நாட்டில், பெருமளவிலான வட்டார மற்றும் மாகாணப் பிடிவாதம் இன்னமும் தகர்க்கப்பட வேண்டியுள்ள ஒரு நாட்டில், மத்தியில் இருந்து மட்டுமே முழு வேகத்தில் முன் செல்லக் கூடியதான புரட்சிகரச் செயல் பாதையில் ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு மாகாணமும் புதிய முட்டுக்கட்டையைப் போடுவதற்கு எத்தகைய புறச் சூழலின் கீழும் இடமளித்தல் கூடாது. இன்றைய நிலவரமே மீண்டும் புதுப்பிக்கப்படுவதையோ, ஒரே விதமான அதே முன்னேற்றத்துக்காக ஜெர்மானியர்கள் ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு மாகாணத்திலும் தனித் தனியாகப் போராட வேண்டும் என்பதையோ அனுமதிக்கக் கூடாது. நவீன தனியார் சொத்துடைமையை விடவும் மிகவும் பின்னணியில் நிற்பதும், எல்லா இடங்களிலும் தவிர்க்க முடியாத வகையில் தனியார் சொத்தாக மாறி வருவதும், இதன் விளைவாக ஏழை செல்வந்த சமுதாயக் குழுக்களுக்கு இடையே எழும் சண்டைகளும், அதோடு தொழிலாளர்களை ஏமாற்றுகிற சமுதாய குடியுரிமைச் சட்டமும், இதனை நிரந்தரமாக்குவதற்குரிய சுதந்திர சமுதாய அரசியல் சட்டம் எனப்படுவது, இவற்றோடு சேர்ந்து இருப்பதுமான இந்த வடிவிலான சொத்துடைமை, அதாவது சமுதாய சொத்துடைமை, சிறிதளவும் அனுமதிக்கப்படக் கூடாது. 1793ல் பிரான்சில் தேவைப்பட்டது போன்று இன்று ஜெர்மனியில் கருரான மையப்படுத்தலை முடித்து நிறைவேற்ற வேண்டுவது மெய்யான புரட்சிகரக் கட்சியின் பணியாகும்*.

---

* இந்த வாசகம் ஒரு தப்பான எண்ணத்தை அடிப்படையாக்கியதாகும் என்பதை இன்று நினைவு கூர வேண்டுவது அவசியம். அந்த நேரத்தில்—போனப்பார்டிஸ்டு மற்றும் மிதவாத சரித்திரப் புரட்டர்கள் பிரசாரம் காரணமாக—பிரெஞ்சு நிர்வாகத்தின் மையப்படுத்தப்பட்ட பொறியமைவு மாபெரும் புரட்சியால் கொண்டுவரப்பட்டது எனவும், குறிப்பாயும் அது மன்னராதரிப்பாளர்கள், கூட்டாட்சி ஆதரிப்பாளர் மற்றும் வெளிநாட்டு விரோதிகளை முறியடிப்பதற்கான ஓர் இன்றியமையாத, நிர்ணயகரமான ஆயுத

அடுத்த இயக்கத்துடன் கூடவே ஜனநாயகவாதிகள் எவ்வாறு அதிகாரத்துக்கு வருவார்கள் என்பதையும், அவர்கள் கிட்டத்தட்ட சோஷலிஸ்டு நடவடிக்கைகளை முன்வைக்கும்படி எவ்வாறு கட்டாயப்படுத்தப்படுவார்கள் என்பதையும் நாம் ஏற்கெனவே பார்த்தோம். இதற்குப் பதிலாக தொழிலாளர்கள் என்ன நடவடிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்று கேட்கப்படும். இயக்கத்தின் ஆரம்ப கட்டத்தில் தொழிலாளர்கள் நேரடியான கம்யூனிஸ்டு நடவடிக்கைகளை மேலும் முன்வைக்க முடியாது என்பது திண்ணம். ஆனால் அவர்கள் செய்யக் கூடியவை பின்வருமாறு:

1. இதுவரை நிலவி வந்துள்ள சமுதாய அமைப்பில் எத்தனை துறைகளில் சாத்தியமோ அத்தனையிலும் தலையிடும்

---

மாக கன்வென்டினால் பயன்படுத்தப்பட்டது எனவுமான கருத்து நிலைநாட்டப்பட்டு விட்டதாக எண்ணப்பட்டது. ஆயினும், பதினெட்டாவது புரூமேர்[16] வரையிலான புரட்சி முழுவதன் ஊடேயும் ஆட்சித் துறை வட்டாரங்கள், நிர்வாகப் பிரிவு மற்றும் கம்யூன்களின் முழு ஆட்சி நிர்வாகத்திலும் சம்பந்தப்பட்ட வாக்காளர் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகார நபர்களே இடம் பெற்றிருந்தார்கள் என்பதும், இந்த அதிகாரிகள் பொதுவான அரசுச் சட்டங்களின் அகத்தே முழுமையான சுயேச்சையுடன் செயல்பட்டனர் என்பதும் இந்த மாகாண மற்றும் ஸ்தல சுயாட்சிகள் தான் அமெரிக்காவில் இருப்பது போலவே புரட்சியின் மிகவும் வன்மை வாய்ந்த நெம்புகோலாக மாறிவிட்டது என்பதும், பதினெட்டாம் புரூமேரில் தான் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு உடனடியாக நெப்போலியன் இதை போலீஸ் அதிகாரிகளின் ஒரு நிர்வாகத்தால் பதிலீடு செய்வதற்கு விரையும் அத்தகைய அளவுக்கு இது நெம்புகோலாக மாறிவிட்டது என்பதும், இந்த பதில் ஆட்சி நிர்வாகம் இன்னும் நிலவுகிறது என்பதும், எனவே இது துவக்க முதலே பிற்போக்கு சக்திகளின் அப்பட்டமான கருவியே என்பதும் எல்லாம் நன்கறிந்த மெய் நடப்புக்களே. ஆனால் ஸ்தல மற்றும் மாகாண சுயாட்சிகள் சிறிதளவு அரசியல் மற்றும் தேசிய மையப்படுத்தலுக்கு முரண்பாடாக இருப்பது போலவே, இது அதே ஒப்புக்கு சிறிய அளவில் அந்த குறுகிய மனப்போக்குள்ள பிரதேச அல்லது சமுதாய சுய நாட்டத்தால் தவிர்க்க முடியாதபடி கட்டுண்டு கிடக்கிறது. இது ஸ்விட்சர்லந்தில் நமக்கு வெறுப்பைத் தருவதாக இருக்கிறது. இதை 1849ல் ஜெர்மனியில் பொதுவிதியாக்கதெற்கு ஜெர்மன் கூட்டாட்சி குடியரசுகள் விரும்பின. **(1885 ஆண்டுப் பதிப்புக்கு எங்கெல்சின் குறிப்பு.)**

படியும், அதன் முறையான போக்கை குலைத்து தம்மைத் தாமே இணக்கப்படுத்திக் கொள்ளவும், அரசின் கரங்களில் உற்பத்தி சக்திகள், போக்குவரத்து சாதனங்கள், ஆலைகள், ரயில்வேக்கள் இத்தியாதிகளை சாத்தியமான வரை அதிகப்பட்சமாக ஒருமுனைப்படுத்தும் படியும் ஜனநாயகவாதிகளைக் கட்டாயப்படுத்துவது;

2. எப்படியும் புரட்சிகரமான முறையில் அன்றி, மாறாக முற்றிலும் சீர்திருத்தவாத முறையிலேயே செயல்படப் போகும் ஜனநாயகவாதிகளின் யோசனைகளை, அதிதீவிர முனைக்கு முடுக்கி அவற்றை தனியார் சொத்துடைமை மீதான நேரடித் தாக்குதல்களாக மாற்ற வேண்டும். இவ்வாறாக, உதாரணமாக குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் ரயில்வேக்களையும் ஆலைகளையும் விலைக்கு வாங்க வேண்டும் எனும் யோசனையை முன்வைக்கும் பட்சத்தில், தொழிலாளர்கள் இவை பிற்போக்காளர்களின் உடைமைகள் என்பதால் அரசு இழப்பீடுகள் எதுவும் வழங்காமல் அப்படியே பறிமுதல் செய்ய வேண்டும் என்று கோர வேண்டும். ஜனநாயகவாதிகள் சமவீதத்திலான வரிகளைப் பிரேரேபித்தார்கள் என்றால், தொழிலாளர்கள் வளர்வீத வரிகளை விதிக்கும்படி கோர வேண்டும்; ஜனநாயகவாதிகள் தாமாகவே ஒரு மித அளவிலான வளர்வீத வரியினை முன்வைப்பார்களானால், தொழிலாளர்கள் பெரு மூலதனம் இதன் மூலம் அழிவுறத் தக்க விதத்தில் மிகவும் அறவே கடுமையாக அதிகரிக்கும் வரிவிகிதங்களை விதிக்கும்படி வற்புறுத்த வேண்டும். ஜனநாயகவாதிகள் அரசுக் கடன்கள் முறைப்படுத்தப்படுவதைக் கோரினார்கள் என்றால் தொழிலாளர்கள் அரசின் திவால் நிலையைக் கோர வேண்டும். இவ்வாறாக, எல்லா இடங்களிலும் தொழிலாளர்களின் கோரிக்கைகள் ஜனநாயகவாதிகளின் சலுகைகள் மற்றும் நடவடிக்கைகளைத் தழுவியதாக இருக்க வேண்டும்.

ஜெர்மன் தொழிலாளர்கள் நீடித்த புரட்சிகர மாற்றத்தினை முழுமையாக அனுபவப்படாமல் ஆட்சி அதிகாரத்தை அடைய இயலாது, தமது சொந்த வர்க்க நலன்களை சாதிக்க முடியாது எனும் பட்சத்தில், அவர்கள் இந்த அணுகிவரும் புரட்சிகர நாடகத்தின் முதல் அங்கமானது பிரான்சில் தமது சொந்த வர்க்கத்தின் நேரடி வெற்றியுடன் ஒருங்கிணையும் என்பதையும், அதனால் பெருமளவுக்கு வேக

முடுக்கம் பெறும் என்பதையும், குறைந்தபட்சம் இந்தத் தடவை நிச்சயமாகத் தெரிந்து கொள்வார்கள்.

ஆனால் அவர்கள், தமது வர்க்க நலன்கள் என்பவை என்ன என்பதைத் தமது மனங்களில் தெளிவுபடுத்திக் கொள்வது மூலமும், சாத்தியமான அளவுக்கு விரைவாக தாம் ஒரு சுயேச்சையான கட்சி என்ற நிலையை மேற்கொள்வது வாயிலாகவும் பாட்டாளி வர்க்கத்தின் கட்சி எனும் சுதந்திரமான நிறுவனமாக இல்லாது, ஒழியும் போக்கில் ஜனநாயக குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினரின் போலியான தொடர்களால் வஞ்சிக்கப்பட இடமளியாத வகையிலும், தமது இறுதிவெற்றிக்காக உச்சபட்சம் பாடுபட வேண்டும். அவர்களது போராட்ட கோஷம்: ''நிரந்தரமாக நிலைபெறும் புரட்சி என்பதாகும்''.

லண்டன், மார்ச் 1850

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

# ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும்
என்ற நூலிலிருந்து

## *13. பிரஷ்ய அரசியல் நிர்ணய சபை. தேசிய சட்டமன்றம்*

*...யுத்தத்தைப் போலவே புரட்சியிலும் ஒரு பலமான முன்னணியைத் தோற்றுவிப்பது எப்போதும் அவசியம். யார் ஏறித்தாக்குகிருரோ அவர் சாதகமான நிலையில் இருப்பார்; மேலும் யுத்தத்தைப் போலவே புரட்சியிலும் தீர்மானமான தருணத்தில்—அதன் விளைவுகள் எப்படி இருந்த போதிலும்—எல்லாவற்றையும் பணயம் வைத்து ஈடுபடுவது உயர் அவசியமாகும். இந்த மூலவுண்மைகளின் மெய்மையை நிரூபித்துக் காட்டாத தனியொரு வெற்றிகர மான புரட்சி எதுவும் வரலாற்றில் நிகழ்ந்தது கிடையாது.*

## *17. புரட்சிகர எழுச்சி*

*...போர் அல்லது மற்ற எதையும் போலவே புரட்சிகர எழுச்சியும் ஒரு கலையே ஆகும். அதோடு அது ஒரு சில நடவடிக்கை விதிகளுக்கு உட்பட்டதுமாகும். இவை புறக்கணிக்கப்படும் பட்சத்தில், இவற்றைப் புறக்கணிக்கும் கட்சிக்கு நாசம் உண்டாக்கும். கட்சிகளின் தன்மை மற்றும் இத்தகைய விஷயத்தில் ஒருவர் கருதிச் செயல்பட வேண்டிய சந்தர்ப்பச் சூழல்கள் ஆகியவற்றில் இருந்து எழும் தர்க்க ரீதி முடிவுகளான இந்த விதிகள் மிகவும் தெளிவானவை, சாமான்யமானவை. 1848ஆம் ஆண்டின் குறுகிய அனுபவமே ஜெர்மானியருக்கு இவற்றை ஓரளவுக்கு நன்ருகப் பரிச்சயப்படுத்தி வைத்திருந்தது. முதலாவது விதி, உங்கள் விளையாட்டின் பின்விளைவுகளைச் சந்திக்க முற்றிலும் தயாராக இல்லாத பொழுது புரட்சிகர எழுச்சியுடன் விளையாடாதீர்கள். புரட்சிகர எழுச்சி என்பது மிகவும் திட்டவட்டமாக இல்லாத*

பரிமாணங்களைக் கொண்ட நுண்கணிதமாகும். இவற்றின் மதிப்பு நாள்தோறும் மாறலாம். உங்களுக்கு எதிராக இருக்கும் சக்திகளிலும் ஸ்தாபனம், கட்டுப்பாடு, தொடர்ச்சியான அதிகார பலம் ஆகிய எல்லா சாதகங்களும் உள்ளன. அவற்றை எதிர்த்து பலமான சக்திகளைக் கொண்டுவராவிட்டால் நீங்கள் முறியடிக்கப்படுவீர்கள், அழிக்கப்படுவீர்கள். இரண்டாவது விதி, புரட்சிகர எழுச்சி வாழ்க்கையில் பிரவேசித்து விட்டீர்களானல் மகத்தான உறுதியுடன் செயல்பட வேண்டும், ஏறித்தாக்க வேண்டும். தற்காப்பு என்பது ஆயுதமேந்திய புரட்சிகர எழுச்சி அனைத்துக்கும் விளையும் மரணமாகும். அதன் எதிரிகளுடன் மோத முனைவதற்கு முன்பே அது தோல்வியுறும். அவர்களது படைகள் சிதறிக் கொண்டிருக்கும் சமயத்தில் உங்கள் விரோதிகளைத் திடீர் என்று தாக்க வேண்டும்; எவ்வளவு சிறியதாக இருப்பினும் சரி தினசரி புதிய வெற்றிகளுக்கு ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும்; வெற்றிகரமான முதல் புரட்சிகர எழுச்சி உங்களுக்கு வழங்கியுள்ள தார்மிக மேம்பாட்டை விடாது பேணி வைத்திருக்க வேண்டும்; இவ்வாறு எப்போதும் பலமான தூண்டுவிசையைப் பின்பற்றுவதும், எப்போதும் அதிகப் பாதுகாப்பான தரப்பை நாடுவதுமான அந்த ஊசலாடும் நபர்களை உங்கள் பக்கம் ஒன்று திரட்டிக்கொள்ள வேண்டும், உங்கள் விரோதிகள் உங்களுக்கு எதிராகத் தமது பலத்தைத் திரட்ட முடிவதற்கு முன்பே அவர்களைப் பின்வாங்கும்படி கட்டாயப்படுத்த வேண்டும்; சுருங்கச் சொன்னல், இதுகாறும் கண்டறிந்த புரட்சிகரக் கொள்கையின் மகத்தான மேதை டன்தோன் கூற்றுப்படி: de l'audace, de l'audace, encore de l'audace!*

*எங்கெல்சால் 1851 ஆகஸ்டு— 1852 செப்டம்பரில் எழுதப் பட்டது*

*மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது*

---

* — *தீரமாக இருங்கள், தீரமாக இருங்கள், மீண்டும் தீரமாக இருங்கள்!*—**ப-ர்.**

கா. மார்க்ஸ்

# யோசிஃப் வெய்டமையருக்கு எழுதிய கடிதத்திலிருந்து

**லண்டன், மார்ச் 5, 1852**

*...என்னைப் பொறுத்தவரையிலும், நவீன சமூகத்தில் வர்க்கங்கள் இருப்பதையோ அல்லது அவர்களுக்கிடையே நடைபெறுகின்ற போராட்டத்தையோ கண்டுபிடித்த பெருமை என்னைச் சேர்ந்ததல்ல. எனக்கு வெகு காலத்துக்கு முன்பே முதலாளித்துவ வரலாற்றாசிரியர்கள் இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்றுரீதியான வளர்ச்சியையும், முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள் இந்த வர்க்கங்களின் பொருளாதார உள்ளமைப்பையும் வர்ணித்திருக்கிறார்கள். நான் புதிதாக என்ன செய்தேன் என்றால், அது கீழ்க் கண்டவற்றை விளக்கியது தான்: 1)* **வர்க்கங்கள் இருப்பதென்பது உற்பத்தியின் வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களோடு** *இணைக்கப்பட்டிருக்கிறது, 2) வர்க்கப் போராட்டம் கட்டாயமாகத்* **தொழிலாளி வர்க்க** *சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும், 3) இந்த சர்வாதிகாரம் என்பது* **எல்லா வர்க்கங்களையும் ஒழிப்பதற்கும், வர்க்கபேதமற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கும்** *மாற்றமாக இருக்கிறது. வர்க்கப் போராட்டத்தை மட்டுமல்லாமல் வர்க்கங்கள் இருப்பதைக் கூட மறுக்கின்ற ஹைன்ஸென் போன்ற அறிவில்லாத முட்டாள்கள்—அவர்கள் என்னதான் இரத்தம் சுண்டக் கூக்குரல் போட்டாலும், தங்களுக்கு மனிதாபிமானத் தோற்றத்தைக் கொடுத்துக்கொண்ட போதிலும்—முதலாளித்துவ வர்க்கம் ஆட்சி செய்கின்ற சமூக நிலைமைகளை வரலாற்றின் கடைசிப் பொருளாக,* non plus ultra* *ஆகக் கருதுகிறார்கள் என்*

* *—அடையக் கூடிய உச்சநிலை (லத்தீன்).*—ப-ர்.

பதையும் அவர்கள் முதலாளிகளின் ஊழியர்கள் என்பதை மட்டுமே நிரூபிக்கிறார்கள். முதலாளித்துவ ஆட்சியின் கட்டாயமான தற்காலிகத் தன்மையையும் அதன் அளவையும் இந்த முட்டாள்கள் எவ்வளவு குறைவாகப் புரிந்து கொள்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுடைய குற்றேவல் அதிக அருவருப்புடையதாக இருக்கிறது.

மூலம் ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

# இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள்

## என்ற கட்டுரையிலிருந்து

*...ஆங்கிலேய முதலாளி வர்க்கத்தினர் நிர்ப்பந்தத்தால் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவும் இந்தியாவின் மக்கள் திரளினருக்கு விடுதலையையும் கொண்டுவராது, அவர்களது சமூக நிலைமையைக் கணிசமாகச் சீர்ப்படுத்தவும் உதவாது. இந்த சாதனைகள் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை மட்டுமன்றி அவற்றை மக்கள் தமக்கெனச் சுவீகரித்துக் கொள்வதையும் சார்ந்திருக்கின்றன. ஆனால் முதலாளி வர்க்கத்தினர் இவை இரண்டுக்குமான பொருளாயத ஆதாரங்களை நிறுவும் பணியைப் புரியாமல் விட்டுவிட மாட்டார்கள். இதற்கு மேல் முதலாளி வர்க்கத்தினர் எப்போதேனும் அதிகமாகச் செய்திருக்கிறார்களா? தனிநபர்களையும் மக்களையும் ரத்தத்திலும் சக்தியிலும் துயரத்திலும் இழிவிலும் இழுத்தடிக்காமல் எப்போதேனும் முன்னேற்றத்தைச் சாதித்திருக்கிறார்களா?*

*பிரிட்டனில் இன்று அதிகாரத்தில் இருக்கும் ஆளும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டு அந்த இடத்தில் தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் பதவியில் அமர்த்தப்படும் வரையிலும், அல்லது ஆங்கிலேய ஆதிக்கத்தை இந்தியர்கள் முற்றிலும் ஒழிக்கும் அளவுக்கு வளர்ந்து வலிமை பெறும் வரையிலும், பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தினரால் தம்மிடையே அங்குமிங்குமாகத் தூவப்பட்டுக் கிடக்கும் சமுதாயத்தின் புதிய சக்திகளின் பலன்களை இந்தியர்கள் அனுபவிக்க முடியாது. எப்படி இருந்தாலும் சரி, அந்த மகத்தானதும் அக்கறைக்குரியதுமான நாடு ஏறத்தாழத் தொலைவான ஒரு கால கட்டத்தில் மறு மலர்ச்சியடையும் என்று நாம் நிச்சயமாக எதிர்*

பார்க்கலாம். அந்த நாட்டின் கண்ணியமிக்க சுதேசிகள், மிகவும் தாழ்மட்டத்தில் இருக்கும் வர்க்கங்களும் கூட இளவரசர் ஸல்திக்கோவின் சொற்றொடரைப் பயன்படுத்திக் கூறும் பட்சத்தில் "sont plus fins et plus adroits que les italiens"* இருக்கிறார்கள். அவர்களது பணிந்துபோகும் தன்மையுங்கூட ஒரு வகையான அமைதியான பெருந்தன்மையால் ஈடு செய்யப்படுகிறது; அவர்கள், தம்மிடம் இயல்பான தளர்ச்சி இருந்த போதிலும் தமது வீரதீரத்தால் பிரிட்டிஷ் அதிகாரிகளை வியப்புற வைத்திருக்கிறார்கள். அவர்களது நாடு நமது மொழிகள், நமது சமயங்களின் தலையூற்றாக இருந்து வந்துள்ளது; அந்த நாட்டைச் சேர்ந்த ஜாட் இனத்தவர் தொன்மையான ஜெர்மானியர், பிராமணர் பண்டைக்கால கிரேக்கர்களின் ரகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

முடிவாகச் சில குறிப்புரைகளை எடுத்துக் கூறாமல் இந்தியா எனும் இந்தத் தலைப்பை என்னால் பூர்த்தி செய்ய முடியாது.

தன் தாயகத்தில் கவுரவமான வடிவங்களை மேற்கொண்டும், அதே சமயத்தில் காலனிகளில் நிர்வாணத் தாண்டவமாடியும் வரும் முதலாளித்துவ நாகரிகத்தின் அப்பட்டமான போலித்தனமும் உள்ளார்ந்த காட்டுமிராண்டித்தனமும் வேடம் கலைக்கப்பட்டு நம் கண்முன்பு காட்சியளிக்கின்றன. முதலாளி வர்க்கத்தினர் சொத்துடைமையைத் தாங்கி ஆதரிப்பவர்கள்தான், ஆனால் வங்காளத்திலும் சென்னையிலும் பம்பாயிலும் நடைபெற்றிருப்பதைப் போன்ற விவசாயப் புரட்சிகளை புரட்சிகரக் கட்சி எதுவாயினும் எந்தக் காலத்திலேனும் தோற்றுவித்துள்ளதா? அந்த மாபெரும் கொள்ளைக்காரனான லார்ட் கிளைவ் கூறியிருக்கும் சொற்களையே பயன்படுத்திச் சொல்வதென்றால், இந்தியாவில் சாதாரண லஞ்சம் அவர்களது கொள்ளைக்காரத்தனமான பேராசைக்கு ஈடு செய்ய முடியாததால், கொடூரமான முறையில் பலவந்தமான சூறையாடலில் அவர்கள் இறங்கவில்லையா? தேசியக் கடனின் புனிதத்தன்மை நிரந்தரமானது என்று ஐரோப்பாவில் அவர்கள் பிதற்றிக் கொண்டிருந்து அதே போதில், தமது சொந்த சேமிப்புக்களை கிழக்கு இந்தியக் கம்பெனியின்

* —இத்தாலியர்களைக் காட்டிலும் அதிகச் செம்மையும் அதிகத் திறமையும் வாய்ந்தவர்கள்.—ப-ர்.

நிதிகளில் முதலீடு செய்திருந்த சுதேசி ராஜாக்களுக்குக் கொடுக்க வேண்டிய லாப ஈவுகளை இந்தியாவில் அவர்கள் பறிமுதல் செய்யவில்லையா? ''நமது புனித மதத்தைப்'' பாதுகாக்கிறோம் என்ற சாக்குப்போக்கில் பிரெஞ்சுப் புரட்சியை எதிர்த்துப் போராடிய அவர்கள் அதே பொழுதில், இந்தியாவில் கிறித்தவம் பரப்பப்படுவதைத் தடை செய்யவில்லையா? ஒரிஸ்ஸாவிலும் வங்காளத்திலும் உள்ள ஆலயங்களுக்குத் திரண்டு செல்லும் யாத்திரீகர்களிடம் பணம் பிடுங்குவதற்காக ஜகன்னாதர் கோயிலில் புரியப்பட்டு வந்த தற்பலியையும் விபசாரத்தையும் தமது வாணிபமாக்கிக் கொள்ளவில்லையா? இவர்கள் தான் ''சொத்து, முறைமை, குடும்பம், சமயம் ஆகியவற்றின் பாதுகாவலர்கள்!''

ஐரோப்பா அளவுக்குப் பரந்து விரிந்ததும் 15 கோடி ஏக்கர் நிலத்தைக் கொண்டதாயும் உள்ள ஒரு நாடான இந்தியா சம்பந்தப்பட்டவரை நேர்ந்துள்ள ஆங்கிலத் தொழில் துறையின் நாசகர விளைவுகள் ஸ்தூலமானவையாயும் திகைப்பூட்டுவனவாயும் இருப்பதைத் காணலாம். ஆனால் அவை இப்போது உருவகம் பெற்றுள்ள பொருள் உற்பத்தி அமைப்பு முறை முழுவதுடனும் இணைந்த விளைவுகள் மட்டுமே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த உற்பத்தி முறை மூலதனத்தின் தலைமையான ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மூலதனம் ஒரு சுயேச்சையான சக்தியாகத் திகழ வேண்டுமானால் மூலதனத்தை மையப்படுத்துவது அத்தியாவசியமாகும். உலக மார்க்கெட்டுகளின் மீது அந்த மையப்படுத்தல் முறை செலுத்திவரும் அந்த நாசகரமான செல்வாக்கே, நாகரிகமடைந்த ஒவ்வொரு நகரிலும் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த கட்டமைப்பு விதிகளை மிகவும் பிரம்மாண்டமான பரிமாணங்களில் வெளிக்காட்டுகின்றது. வரலாற்றின் முதலாளித்துவ கால கட்டம் புதிய உலகத்திற்குரிய பொருளாயத அடித்தளத்தைப் படைத்துருவாக்க வேண்டும்: ஒரு புறத்தில் மனிதகுலத்தின் பரஸ்பர சார்பு நிலை மீது தோற்றுவிக்கப்பட்ட சர்வவியாபகமான ஒட்டுறவையும் அந்த ஒட்டுறவுக்கான வழிவகைகளையும் உருவாக்க வேண்டும்; மறு புறத்தில் மனிதனின் உற்பத்தி ஆற்றல்களையும், பொருள்வகை உற்பத்தி இயற்கை சக்திகள் விஞ்ஞான பூர்வமான மேலாண்மையாக உருமாற்றப்

படுவதையும் வளர்த்துச் செல்ல வேண்டும். மண்ணியல் புரட்சிகள் பூமியின் மேல் பரப்பைப் படைத்துருவாக்கியிருப் பது போன்று அதே வழிகளில் முதலாளித்துவத் தொழில் துறையும் வாணிகமும் புதிய உலகத்துக்கான இந்தப் பொரு ளாயத நிலைமைகளைப் படைக்கின்றன. மகத்தான சமூகப் புரட்சியானது முதலாளித்துவ சகாப்தத்தின் சாதனைகளையும் உலக மார்க்கெட்டையும் நவீன உற்பத்தி சக்திகளையும் வசப்படுத்தும் முழுத் தேர்ச்சிபெற்று, மிகவும் முன்னேறிய மக்களின் பொதுவான கண்காணிப்பிற்குக் கீழடக்கினால் மட் டுமே மனித குலத்தின் முன்னேற்றம், கொலையுண்டோரது மண்டையோடுகளில் இருந்து மட்டுமே அமுதம் பருகும் பயங்கரமான காட்டுமிராண்டி விக்ரகத்தை ஒத்திருக்கும் நிலைக்கு முடிவு கட்டும்.

மார்க்சால் 1853, ஜூலை 22ல் எழுதப்பட்டது

மூலம் ஆங்கில மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

# *The People's Paper*இன்[17] ஆண்டுவிழாவின் போது நிகழ்த்திய சொற்பொழிவு

**லண்டன், ஏப்ரல் 14, 1856**

1848ம் வருடப் புரட்சிகள் என்று சொல்லப்படுபவை அற்பமான சம்பவங்களைத் தவிர ஒன்றுமில்லை; ஐரோப்பிய சமூகத்தின் காய்ந்து போன மேற்பரப்பில் தோன்றிய சிறு பிளவுகளும் வெடிப்புகளும்தான். எனினும் அவை படு குழியைச் சுட்டிக் காட்டின. கெட்டியாகத் தோன்றும் மேற் பரப்புக்குக் கீழே சமுத்திரத்தைப் போல திரவப் பொருள் இருப்பதையும் அது சற்று பொங்கினுல் உறுதியான பாறை களைக் கொண்ட கண்டங்கள் சுக்குச் சுக்காக நொறுங்கிய போய்விடும் என்பதையும் அவை எடுத்துக் காட்டின. அவை பாட்டாளி வர்க்கத்தின் விடுதலையை, அதாவது பத்தொன் பதாம் நூற்ருண்டின் இரகசியத்தையும் அந்த நூற்ருண் டின் புரட்சியின் இரகசியத்தையும் கூச்சலோடும் குழப்பத் தோடும் அறிவித்தன.

அந்தச் சமூகப் புரட்சி 1848ல் கண்டுபிடிக்கப்பட்ட புதுமை அல்ல என்பது உண்மையே. நீராவியும் மின்சாரமும் நூற்பு இயந்திரமும் குடிமக்களான பர்பே, ரஸ்பைல் மற்றும் பிளாங்கீயைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு ஆபத்தான தன்மையைக் கொண்ட புரட்சியாளர்களாக இருந்தன. நாம் வாழ்கின்ற காற்று மண்டலம் 20,000 பவுண்டு சக்தி யோடு ஒவ்வொருவரையும் அழுத்துகிறது என்ருலும் நீங்கள் அதை உணர்கிறீர்களா? 1848க்கு முன்பிருந்த ஐரோப்பிய சமூகம் எல்லாப் பக்கங்களிலும் அதைச் சூழ்ந்து அழுத்திக் கொண்டிருந்த புரட்சிகரமான சூழலை உணர்ந்த அளவைக் காட்டிலும் கூடுதலாக நாம் உணர்வதில்லை.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் குறியடையாளமான மகத்தான உண்மையை நாம் காணலாம்; இந்த உண்மையை

எந்தக் கட்சியும் மறுக்கத் துணிவதில்லை. ஒரு பக்கத்தில், இதற்கு முந்திய மனிதகுல வரலாற்றின் எந்தச் சகாப்தத்திலும் சந்தேகிக்கப்பட்டிராத தொழில் துறை மற்றும் விஞ்ஞான சக்திகள் வாழ்க்கையில் ஆரம்பமாகி விட்டன. மறு பக்கத்தில், ரோமானியப் பேரரசின் கடைசிக் காலங்களில் பதிவுசெய்யப்பட்ட பயங்கரங்களையும் மிஞ்சுகின்ற அழிவின் அறிகுறிகள் இருந்து வருகின்றன.

நம் காலத்தில் ஒவ்வொன்றும் அதன் மறுப்பையும் சூல் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. மனித உழைப்பைக் குறைக்கக் கூடிய, பலன் விளைவிக்கக் கூடிய அதிசயமான சக்தியைக் கொண்ட இயந்திரம் மக்களைப் பட்டினி போடுவதையும் கூடுதலாக உழைக்கச் செய்வதையும் பார்க்கிறோம். புதுவரவான செல்வத்தின் தோற்றுவாய்கள் ஏதோ ஒரு விசித்திரமான சாபத்தினல் வறுமையின் தோற்றுவாய்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஒழுக்கத்தின் வீழ்ச்சியை விலையாகக் கொடுத்துக் கலையின் வெற்றிச் சாதனைகளை வாங்குவதாகத் தோன்றுகிறது. மனிதகுலம் இயற்கையை அடிமைப்படுத்துகின்ற அதே வேகத்தில் மனிதன் மற்ற மனிதர்களுக்கு அல்லது தன்னுடைய கொடும்பழிகளுக்கு அடிமையாகி விடுவதைப் போலத் தோன்றுகிறது. விஞ்ஞானத்தின் தூய்மையான வெளிச்சம் அறியாமை என்ற இருண்ட பின்னணி இல்லாவிட்டால் ஒளி வீச முடியாது என்று தோன்றுகிறது. நம்முடைய எல்லாக் கண்டுபிடிப்பும் முன்னேற்றமும் பொருளாயதச் சக்திகளுக்கு அறிவு பூர்வமான வாழ்க்கையைக் கொடுத்து மனித வாழ்க்கையை ஒரு பொருளாயதச் சக்தியாக வீணுக்கும் விளைவில் முடிவதைப் போலத் தோன்றுகின்றன. ஒரு பக்கத்தில் நவீனத் தொழில் துறை மற்றும் விஞ்ஞானத்துக்கும் மறு பக்கத்தில் நவீன வறுமை மற்றும் சீரழிவுக்கும் இடையிலுள்ள இந்த முரண்பகை, நம் சகாப்தத்தின் உற்பத்திச் சக்திகளுக்கும் சமூக உறவுகளுக்கும் இடையே உள்ள இந்த முரண்பகை உணரக் கூடிய, நம்மை மூழ்கடிக்கின்ற உண்மை, மறுக்கப்பட முடியாத உண்மை. சில கட்சிகள் அதைப் பற்றி ஓலமிடலாம். மற்ற கட்சிகள் நவீன மோதல்களை ஒழிப்பதற்காக நவீனக் கலைகளை ஒழிக்க விரும்பலாம்; அல்லது தொழில் துறையில் அடைந்த சிறந்த முன்னேற்றத்தைப் பூர்த்தி செய்வதற்கு அரசியல் துறையில் சிறப்பான பின்னேற்றம் வேண்டும்

என்று அது விரும்புவதாக இக்கட்சிகள் கற்பனை செய்து கொள்ளலாம். நம்மைப் பொறுத்தவரை, இம்முரண்பாடு கள் அனைத்திலும் தொடர்ந்து இடம்பெற்றுள்ள கூருணர்ச்சி யின் வடிவத்தை நாம் தவருகப் புரிந்து கொள்ளவில்லை. சமூகத்தில் புதிதாகத் தோன்றியுள்ள இச்சக்திகளை நன்ருக உபயோகிப்பதற்கு, அவை புதிய மனிதர்களால் மட்டுமே அடக்கியாளப்படுவதை விரும்புகின்றன—உழைக்கும் மனி தர்கள் அப்படிப்பட்டவர்களே. இயந்திரத்தைப் போல அதே அளவுக்கு அவர்களும் நவீன காலத்தின் கண்டுபிடிப்பே. முதலாளி வர்க்கம், மேன்மக்கள், பின்னேற்றத்தின் பரி தாபத்துக்குரிய தீர்க்கதரிசிகள் ஆகியோரைக் குழப்புகின்ற அறிகுறிகளில் நம்முடைய வீரமான நண்பரை, இராபின் குட்பெல்லோவை,* பூமியில் மிகவும் வேகமாகத் துளைத்துக் கொண்டு போகின்ற பழைய அகழ் எலியை, தகுதி மிக்க முன் ஞேடியை, புரட்சியை நாம் அடையாளம் கண்டு கொள் கிறேம். இங்கிலாந்தின் தொழிலாளர்கள் நவீனத் தொழில் துறையின் முதற்குழந்தைகள். அந்தத் தொழில் துறையால் உற்பத்தி செய்யப்பட்ட சமூகப் புரட்சிக்கு—உலக முழுவதி லும் மூலதனத்தின் ஆட்சியும் கூலி உழைப்பின் அடிமைத்தன மும் இருப்பதைப் போலவே உலக முழுவதிலுமுள்ள அவர் களுடைய சொந்த வர்க்கத்தின் விடுதலையே அந்தப் புரட்சி யின் அர்த்தம்—உதவியளிப்பதில் அவர்கள் கடைசியாக இருக்க மாட்டார்கள் என்பது உறுதி. ஆங்கிலத் தொழி லாளி வர்க்கம் கடந்த நூற்ருண்டின் நடுப் பகுதியிலிருந்து நடத்தியிருக்கும் வீரமிக்க போராட்டங்களை நான் தெரிந்து கொள்கிறேன்; அந்தப் போராட்டங்களைப் பற்றி அதிகமாகத் தெரியாததால், முதலாளி வர்க்க வரலாற்ருசிரியர்கள் அவற்றை மறைத்து விட்டபடியால் அவை பிரபலமடைய வில்லை. மத்திய காலத்தில் ஜெர்மனியில் ஆளும் வர்க்கத் தின் கொடுமைகளுக்குப் பழி வாங்குவதற்காக "Vehmgericht" என்ற பெயரில் ஒரு இரகசிய நீதி மன்றம் இருந்தது. ஒரு வீட்டுச் சுவரில் சிகப்பு நிறத்தில் சிலுவைக் குறி போடப்

* —விசித்திர குணங்கள் உள்ள நபர்; எல்லோருக்கும் உதவி செய்பவர் என்பது ஆங்கில கிராமியக் கற்பனை. ஷேக்ஸ்பியர் எழுதிய ''நடு வேனிற்காலக் கனவு'' என்ற நாடகத்தில் முக்கியமான பாத்திரம்.—ப-ர்.

பட்டிருந்தால் அதன் உடைமையாளரை "Vehm" ஒழிக்கப் போகிறது என்பதை மக்கள் அறிந்து கொண்டார்கள். ஐரோப்பாவில் இன்று எல்லா வீடுகளிலும் மர்மமான சிகப்புச் சிலுவைக் குறி போடப்பட்டிருக்கிறது. வரலாறு தான் நீதிபதி, தண்டனையை நிறைவேற்றுபவர் பாட்டாளி வர்க்கம்.

மூலம் ஆங்கில மொழியில்
எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

# “அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை” என்ற நூலின் முதல் பதிப்புக்கு எழுதிய முன்னுரையிலிருந்து

...சட்ட உறவுகளேயோ அல்லது அரசியல் வடிவங்களேயோ, தனித்தனியாகவோ அல்லது மனித அறிவின் பொதுவான வளர்ச்சிப் போக்கு என்று சொல்லப்படுகின்ற அடிப்படையைக் கொண்டோ புரிந்துகொள்ள முடியாது; அதற்கு மாருக, அவை வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளில் பிறக்கின்றன; இவற்றின் முழுத்தொகுதியையே ஹெகல், பதினெட்டாம் நூற்ருண்டைச் சேர்ந்த ஆங்கில, பிரெஞ்சுத் தத்துவஞானிகளின் உதாரணத்தைப் பின்பற்றி ‘‘சிவில் சமூகம்’’ (civil society) என்ற வார்த்தைகளில் அடைக்கிருர்; எனினும் இந்த சிவில் சமூகத்தின் உள்ளமைப்பை அரசியல் பொருளாதாரத்தில் தேட வேண்டும்—என்னுடைய ஆராய்ச்சியின் பலஞக மேற்கூறிய முடிவுகளுக்கு வந்தேன். பாரிசில் இந்த ஆராய்ச்சியைத் தொடங்கினேன். ஆனல் திரு கிஸோ என்னை பாரிசிலிருந்து வெளியேறும்படி உத்தரவிட்டபடியால் இந்த ஆராய்ச்சியை பிரஸ்ஸல்ஸ் நகரத்தில் தொடர்ந்து செய்தேன். இதன் மூலம் நான் உருவாக்கிய பொதுவான முடிவை — இந்த முடிவுக்கு வந்தவுடன் அதுவே என்னுடைய ஆராய்ச்சிகளுக்கு வழி காட்டும் கொள்கையாக மாறியது—பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம். மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக ஈடுபடும் சமூக உற்பத்தியில் திட்டவட்டமான உறவுகளில் தவிர்க்க முடியாத வகையில் ஈடுபடுகிருர்கள். இந்த உறவுகள் அவர்களுடைய சித்தங்களிலிருந்து தனித்து நிற்பவையாகும், அதாவது அவர்களுடைய உற்பத்தியின் பொருளாயத சக்திகளின் வளர்ச்சியில் அந்தக் குறிப்பிட்ட கட்டத்துக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளாகும். இந்த உற்பத்தி உறவுகளின்

கூட்டுமொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகிறது. இதன் மீது சட்டம், அரசியல் என்ற மேற்கட்டடம் எழுப்பப்பட்டு, அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவாகின்றன. பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுலக வாழ்க்கையின் பொதுவான போக்கை நிர்ணயிக்கிறது. மனிதர்களின் உணர்வு அவர்களுடைய வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பதில்லை; அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர்களுடைய உணர்வை நிர்ணயிக்கிறது. வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமூகத்தின் பொருளாயத உற்பத்திச் சக்திகள் அன்றைக்கிருக்கின்ற உற்பத்தி உறவுகளோடு—அல்லது அவற்றைச் சட்டபூர்வமான வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்ற சொத்துரிமை உறவுகளோடு—இதுவரை அவை இயங்கி வந்திருக்கின்ற சுற்றுவட்டத்துக்குள் மோதுகின்றன. இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான வடிவங்கள் என்பதிலிருந்து அவற்றின் மீது மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளாக மாறி விடுகின்றன. இதன் பிறகு சமூகப் புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகிறது. பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாபெரும் மேற்கட்டடம் முழுவதையும் சீக்கிரமாகவோ அல்லது சற்றுத் தாமதமாகவோ, மாற்றியமைக்கின்றன. இப்படிப்பட்ட மாற்றங்களை ஆராய்கிற பொழுது உற்பத்தியின் பொருளாதார நிலைமையில் ஏற்படுகிற பொருள்வகை மாற்றங்களுக்கும் (இயற்கை விஞ்ஞானத்தைப் போல இதைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியும்) சட்டம், அரசியல், மதம், கலைத் துறை அல்லது தத்துவஞானத் துறைகளில்—சுருக்கமாகச் சொல்வதென்றால் சித்தாந்தத் துறைகளில் — இந்தப் போராட்டத்தை மனிதர்கள் உணர்ந்து கொண்டு அதில் இறுதி முடிவுக்காகப் போராடுகின்ற கொள்கை வடிவங்களுக்கும் வேறுபாட்டைக் காண்பது எப்பொழுதுமே அவசியமாகும். ஒரு தனிநபர் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதைக் கொண்டு நாம் அவரைப் பற்றி முடிவு செய்வதில்லை. அது போலவே இப்படி மாறிக் கொண்டிருக்கும் காலகட்டத்தை அதன் உணர்வைக் கொண்டு முடிவு செய்ய முடியாது. அதற்கு மாறாக, இந்த உணர்வைப் பொருளாயத வாழ்க்கையின் முரண்பாடுகள் மூலமாக, சமூக உற்பத்திச் சக்தி

களுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள போராட்டத்தின் மூலமாகவே விளக்க முடியும். எந்தச் சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை; புதிய, உயர்வான உற்பத்தி உறவுகள் தாங்கள் நீடித்திருக்கக் கூடிய பொருளாயத நிலைமைகள் பழைய சமூகத்தின் சுற்று வட்டத்துக்குள் முதிர்ச்சியடைவதற்கு முன்பே பழைய உற்பத்தி உறவுகளை ஒருபோதும் அகற்றுவதில்லை. எனவே மனித குலம் தன்னால் சாதிக்கக் கூடிய கடமைகளையே தனக்குத் தவிர்க்க முடியாதபடி விதித்துக் கொள்கிறது. ஏனென்றால் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய பொருளாயத நிலைமைகள் முன்பே இடம் பெற்ற பிறகு அல்லது குறைந்த பட்சம் உருவாகிக் கொண்டிருக்கும் பொழுதுதான் அந்தப் பிரச்சினையே தோன்றுகிறது என்பது அதிக நுணுக்கமாக ஆராயும் பொழுது புலப்படும். விரிவான உருவரையில் ஆசிய, பண்டைக்கால, நிலப்பிரபுத்துவ, நவீன முதலாளித்துவ உற்பத்தி முறைகளை சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியின் முன்னேற்றத்தைக் குறிக்கும் சகாப்தங்கள் என்று குறிப்பிடலாம். முதலாளித்துவ உற்பத்தி முறைதான் உற்பத்தியின் சமூக நிகழ்வில் கடைசி முரணியல் வடிவம்—முரணியல் என்பது தனிப்பட்ட முரணியல் என்ற பொருளில் அல்ல, தனிநபர்களின் ஜீவனோபாயத்தின் சமூக நிலைமைகளிலிருந்து தோன்றும் முரணியலே; ஆனால் முதலாளித்துவ சமூகத்தின் உள்ளே வளர்ந்து கொண்டிருக்கும் உற்பத்திச் சக்திகள் இந்த முரணியலைத் தீர்ப்பதற்குரிய பொருளாயத நிலைமைகளையும் உருவாக்குகின்றன. எனவே இந்த சமூக அமைப்போடு மனித சமூகத்தின் வரலாற்றுக்கு முந்திய காலம் முடிவடைகிறது...

லண்டன், ஜனவரி, 1859

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

# “சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொது விதிமுறைகள் என்ற நூலிலிருந்து[18]

கீழ்க்காணும் அம்சங்களை மனதிற்கொண்டு, அதாவது:

தொழிலாளி வர்க்கத்தினரின் விடுதலையைத் தொழிலாளி வர்க்கத்தினரே வென்றெடுத்துக் கொள்ள வேண்டும்; தொழிலாளி வர்க்கத்தினருடைய விடுதலைக்கான போராட்டமென்பது வர்க்கத் தனி உரிமைகளுக்கும் ஏகபோகங்களுக்கும் நடைபெறுகின்ற போராட்டம் என்று அர்த்தமல்ல; அது சமத்துவமான உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் எல்லா வகையான வர்க்க ஆதிக்கத்தை ஒழிப்பதற்கும் நடைபெறுகின்ற போராட்டமே;

உழைப்புச் சாதனங்களை அதாவது வாழ்க்கையின் ஆதாரங்களை ஏகபோகமாக வைத்திருப்பவரிடம் உழைக்கும் மனிதன் பொருளாதார ரீதியில் கீழ்ப்பட்டிருப்பதே அடிமைத்தனத்தின் எல்லா வடிவங்களுக்கும், எல்லா விதமான சமூகத் துன்பம், அறிவின் தரங் குறைதல் மற்றும் அரசியல் அடிமைத்தனத்துக்கும் ஆதியாக இருக்கிறது;

ஆகவே ஒவ்வொரு அரசியல் இயக்கமும் தன்னைச் சாதனமாக அர்ப்பணிக்க வேண்டிய மகத்தான இலட்சியம் தொழிலாளி வர்க்கத்தினரின் பொருளாதார விடுதலையே;

ஒவ்வொரு நாட்டிலும் பலவிதமான தொழிலாளர் பிரிவுகளுக்கிடையேயும் ஒற்றுமை இல்லாததனாலும் பல்வேறு நாடுகளிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தினரிடையே சகோதரப் பிணைப்பு இல்லாததனாலும் இந்த மகத்தான இலட்சியத்தை நிறைவேற்றச் செய்யப்பட்ட எல்லா முயற்சிகளும் இது வரை தோல்வியடைந்திருக்கின்றன;

உழைப்பின் விடுதலை என்பது ஸ்தலப் பிரச்சினையல்ல, தேசியப் பிரச்சினையுமல்ல; அது நவீன சமூகம் இருக்கின்ற

நாடுகள் அனைத்தையும் தழுவிய சமூகப் பிரச்சினை; அதன் தீர்வு மிக அதிகமான வளர்ச்சியடைந்த நாடுகளின் செய்முறை மற்றும் தத்துவ ரீதியான ஒத்துழைப்பைச் சார்ந்திருக்கிறது;

ஐரோப்பாவில் மிகவும் அதிகமாகத் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தினிடம் இன்று ஏற்பட்டிருக்கும் புத்தெழுச்சி புதிய நம்பிக்கையை ஏற்படுத்திய போதிலும் பழைய தவறுகளை நாம் மறுபடியும் செய்யக் கூடாதென்று கண்டிப்பாக எச்சரிக்கை செய்வதோடு இன்னும் தொடர்பில்லாதிருக்கும் இயக்கங்களை உடனடியாக இணைக்க வேண்டும் என்று அறைகூவுகிறது;

குறிப்பிடப்பட்ட இந்தக் காரணங்களைக் கவனத்தில் கொண்டு சர்வதேசத் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டிருக்கிறது.

இது பின்வருமாறு பிரகடனம் செய்கிறது:

இதில் சேர்கின்ற எல்லாச் சங்கங்களும் மற்றும் தனி நபர்களும் தங்களுக்கிடையேயும் எல்லா மனிதர்களுக்கிடையேயும் நிறம், மதம், தேசிய இன வேறுபாடுகளைக் கடந்து உண்மை, நீதி, அறநெறியைத் தம் நடத்தையின் அடிப்படையாகக் கொள்வர்; கடமைகள் இல்லாமல் உரிமைகள் இல்லை, உரிமைகள் இல்லாமல் கடமைகள் இல்லை என்பதை அது அறிவிக்கிறது.

இந்த உணர்ச்சியின் அடிப்படையில் பின்வரும் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன:

1. பல்வேறு நாடுகளிலும் உள்ள, ஒரே இலட்சியத்தை அதாவது தொழிலாளி வர்க்கங்களின் பாதுகாப்பு, முன்னேற்றம் மற்றும் பரிபூரண விடுதலையை நோக்கமாகக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களின் சங்கங்களுக்கிடையே தகவல் தொடர்புக்கும் ஒத்துழைப்புக்கும் மத்திய அமைப்பாக இச்சங்கம் நிறுவப்படுகிறது.

*1864 அக்டோபர் 21-27ம் தேதிகளுக்கிடையில் எழுதப்பட்டது*

*மூலம் ஆங்கில மொழியில் எழுதப்பட்டது*

கா. மார்க்ஸ்

# மூலதனம்[19]

## முதல் தொகுதி

### 32ம் அத்தியாயத்திலிருந்து

### 7. முதலாளித்துவத் திரட்சியின் வரலாற்றுப் போக்கு

மூலதனத்தின் புராதனத்திரட்சி, அதாவது அதன் வரலாற்று ரீதியான மூலத்தோற்றம் என்னவாக உருக்கொள்கிறது? அது அடிமைகளையும் பண்ணையடிமைகளையும் கூலித் தொழிலாளர்களாக உடனடி மாற்றம் செய்வதல்லவென்பதால், அதாவது எளிய வடிவங்களின் மாற்றம் அல்ல என்பதால், நேரடி உற்பத்தியாளர்களைப் பறிமுதலுக்காளாக்குவதென்பதே, அதாவது தனிச் சொத்துரிமையாளரின் உழைப்பின் அடிப்படையிலான தனிச் சொத்தின் குலைவு என்பதே அதன் பொருளாகிறது.

சமுதாய ரீதியான, கூட்டு ரீதியான சொத்துக்கு எதிர் நிலை என்ற விதத்தில் தனிச் சொத்தானது, உழைப்புச் சாதனங்களும் உழைப்பின் புற நிலைமைகளும் தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமாயுள்ள இடங்களில் மட்டுமே நிலவுகிறது. ஆனால் இந்தத் தனிப்பட்ட நபர்கள் உழைப்பாளர்களா அல்லவா என்பதற்கேற்பத் தனிச் சொத்துக்கு வித்தியாசமான ஒரு தன்மையுள்ளது. அது முதலில் காட்டுகின்ற எண்ணற்ற சாயல்கள் இந்த இரண்டு கடைக்கோடிகளுக்குமிடையே இருக்கின்ற இடைநிலைக் கட்டங்களுக்குரியவை.

உழைப்பாளியின் உற்பத்திச் சாதனங்களில் இருக்கின்ற அவனது தனிச் சொத்து, விவசாயத்தினுடையதானாலும் பட்டறைத் தொழிலினுடையதானாலும், அல்லது இரண்டினுடையதுமேயானாலும் குட்டித் தொழிலின் அஸ்திவாரமாகும்; மேலும் சமுதாய உற்பத்தியினுடையவும் உழைப்பாளியின் சுதந்திரமான தனித்தன்மையினுடையவும் வளர்ச்சிக்கான ஒரு அத்தியாவசிய நிபந்தனையாகக் குட்டித் தொழில் உள்ளது. இந்தக் குட்டியுற்பத்தி முறை அடிமைத்தனம், பண்ணையடிமைத்தனம், மற்ற சார்பு நிலைகளின் கீழும் நிலவு

வது உண்மையே. ஆனால் உழைப்பாளி தானே செயல்படுத்துகின்ற தன் சொந்த உழைப்புச் சாதனங்களின் தனிப்பட்ட சொந்தக்காரனாக—தான் சாகுபடி செய்கின்ற நிலத்துக்குரிய விவசாயியாக, தொழில் மேதையைப் போலத் தான் கையாளுகின்ற கருவிக்குரிய கைவினைஞனாக—இருக்குமிடத்தில் அது பூத்துக் குலுங்குகிறது, தன் முழு ஆற்றலையும் கட்டவிழ்த்து விடுகிறது, பொருத்தமான ஆதர்ச வடிவத்தை எட்டுகிறது.

இந்த உற்பத்தி முறை, நிலம் துண்டு துண்டாகப் பிரிவினை செய்யப்படுவதையும் மற்ற உற்பத்திச் சாதனங்கள் சிதறலாகிப் போவதையும் முன்தேவையாகக் கொண்டுள்ளது. இது இவ்வுற்பத்திச் சாதனங்களின் குவிதலைத் தவிர்ப்பது போலவே, கூட்டுப் பணி, ஒவ்வொரு தனித்தனி உற்பத்திச் செய்முறைக்குள்ளேயும் வேலைப் பிரிவினை, இயற்கைச் சக்திகளின் மீது சமுதாயக் கட்டுப்பாடு, இச்சக்திகளைச் சமுதாயம் உற்பத்திக்குரிய விதத்தில் பிரயோகிப்பது, சமுதாய உற்பத்தியாற்றல்களின் சுதந்திர வளர்ச்சி ஆகியவற்றையும் தவிர்க்கிறது. குறுகலான, ஏறக்குறைய ஆதிநிலைக்குரிய எல்லைகளுக்குள் இயங்குகின்ற ஓர் உற்பத்தியமைப்போடும் சமுதாயத்தோடும் மட்டுமே பொருந்திவரக் கூடியதாகும் இது. அதனை நிரந்தரமாக்குவதென்பது, பெக்கியோர் சரியாகக் கூறுவது போல, ''சர்வ வியாபக இரண்டாந்தர நிலைக்கு ஆணையிடுவதாகும்''. ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தில், தன் சொந்தக் கலைப்புக்கான பொருளியல் காரியாதிகளை அது கொண்டுவந்து சேர்க்கிறது. அத்தருணமுதல் சமுதாயத்தின் மார்பகத்தில் புதிய சக்திகளும் புதிய உணர்ச்சிகளும் சுரக்கின்றன; ஆனால் பழைய சமுதாய ஸ்தாபனம் அவற்றுக்கு விலங்கிட்டு அமுக்கி வைக்கிறது. அதனை ஒழித்தாக வேண்டும்; அது ஒழிக்கப்படுகிறது. அதன் ஒழிப்பு,—தனிநபர் ரீதியாக்கப்பட்ட, சிதறலாக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களைச் சமுதாய ரீதியில் குவிக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களாக மாற்றியமைப்பது, பலரது சிறு சொத்தைச் சிலரது பெருஞ்சொத்தாக மாற்றியமைப்பது, பெருந்திரளான மக்களிடமிருந்து நிலத்தையும் ஜீவனோபாயங்களையும் உழைப்புச் சாதனங்களையும் பறிமுதல் செய்வது, இவ்விதத்தில் மக்கள் திரளைப் பயங்கரமாகவும் வேதனைக்குரிய விதத்திலும் ஒட்டாண்டிகளாக்குவது—மூலதனத்

தின் வரலாற்றுக்கு முன்னுரையாக அமைகிறது. அதில் பல வந்த முறைகளின் ஒரு வரிசையே அடங்கியுள்ளது; இவற்றில் மூலதனத்தின் ஆதித்திரட்சி முறைகள் என்ற விதத்தில் வரலாறு படைப்பனவாக இருந்துள்ள முறைகளை மட்டுமே நாம் பரிசீலித்துள்ளோம். உடனடி உற்பத்தியாளர்களின் பறிமுதலானது, ஈவிரக்கமற்ற சிதைப்பு வேலையைக் கொண்டும், மிகமிகத் தீய, மிகமிகக் கேவலமான, மிகமிக அற்பத்தனமான, மிகமிக நீசத்தனமான விதத்தில் வெறுக்கத் தக்க உணர்ச்சிகளின் தூண்டு விசையின் கீழும் நிறைவேற்றப்பட்டது. தனித்த, சுதந்திரமான உழைக்கும் தனிநபரை அவனது உழைப்பின் நிலைமைகளுடன்—இப்படிச் சொல்வதானால்—ஒன்றாக உருக்கிக் கலப்பதன் அடிப்படையிலான சுயமாகச் சம்பாதித்த தனிச் சொத்தின் இடத்துக்கு, பெயரளவில் சுதந்திரமாயுள்ள மாற்றார் உழைப்பைச் சுரண்டுவதைச் சார்ந்துள்ள, அதாவது கூலியுழைப்பைச் சார்ந்துள்ள முதலாளித்துவத் தனிச் சொத்து வருகிறது.

இந்த மாற்றச் செய்முறையானது உச்சி முதல் உள்ளங்கால் வரை பழைய சமுதாயத்தைப் போதுமான அளவு சிதைத்ததுமே, உழைப்பாளிகள் பட்டாளிகளாக, அவர்களது உழைப்புச் சாதனங்கள் மூலதனமாக ஆக்கப்பட்டதுமே, முதலாளித்துவ உற்பத்தி முறை தன் சொந்தக் காலில் நின்றதுமே, மேற்கொண்டு உழைப்பைச் சமுதாயமயமாக்குவதும், மேற்கொண்டு நிலத்தையும் மற்ற உற்பத்திச் சாதனங்களையும் சமுதாய ரீதியில் பயன்படுத்தப்படுபவையும், எனவே பொதுவானவையுமான உற்பத்திச் சாதனங்களாக மாற்றுவதும், அதேபோல் மேற்கொண்டு தனிச் சொத்துரிமைகளைப் பறிமுதலுக்காளாக்குவதும் புது வடிவெடுக்கிறது. இப்போது பறிமுதலுக்காளாக்கப்பட வேண்டியது தனக்குத் தான் வேலை செய்கின்ற உழைப்பாளியல்ல, பல உழைப்பாளிகளைச் சுரண்டுகின்ற முதலாளியே.

இப்பறிமுதலானது முதலாளித்துவ உற்பத்தியின் உள்ளார்ந்த விதிகளின் செயலாலேயே, மூலதனம் மையப்படுவதாலேயே நிறைவேற்றப்படுகிறது. எப்போதுமே ஒரு முதலாளி பல முதலாளிகளை விழுங்கி ஏப்பம் விடுகிறான். இந்த மையப்படுதலோடு, அல்லது சில முதலாளிகள் பல முதலாளிகளை இவ்வாறு பறிமுதலுக்காளாக்குவதோடு சேர்ந்தாற்போல், உழைப்புச் செய்முறையின் கூட்டுச் செயல் வடிவ

மும், விஞ்ஞானத்தை உணர்வு பூர்வமாகத் தொழில் நுட்பப் பிரயோகம் செய்வதும், நிலத்தின் முறைவழிச் சாகுபடியும், உழைப்பாயுதங்களைப் பொதுவில் மட்டுமே பயன்படுத்தத் தக்க உழைப்பாயுதங்களாக மாற்றியமைப்பதும், சகல உற்பத்திச் சாதனங்களையும் ஒன்றிணைந்த, சமுதாயமயமாக்கப்பட்ட உழைப்பின் உற்பத்திச் சாதனங்களாக உபயோகிப்பதன் மூலம் அவை அனைத்தையும் சிக்கனப்படுத்துவதும், உலகச் சந்தை என்னும் வலையில் சகல மக்கள் சமூகங்களையும் சிக்க வைப்பதும், இதோடு முதலாளித்துவ ஆளுகையின் சர்வதேசியத் தன்மையும் என்றும் பெருகும் அளவில் வளர்கின்றன. இந்த மாற்றச் செய்முறையின் அனுகூலங்களனைத்தையும் அபகரித்து ஏகபோகமாக்கிக்கொள்ளும் மூலதனப் பெருமுதலைகளின் எண்ணிக்கை இடையருது குறைவதோடு கூட, துன்பம், ஒடுக்குமுறை, அடிமைத்தனம், சீரழிவு சுரண்டல் ஆகியவற்றின் அளவும் அதிகரிக்கிறது; ஆனால் இதோடு, எப்போதுமே எண்ணிக்கையில் அதிகரித்துக்கொண்டிருப்பதும் முதலாளித்துவ உற்பத்திச் செய்முறையின் இயங்கமைப்பாலேயே கட்டுப்பாடுடையதாக்கப்பட்டு ஒன்றுபடுத்தப்பட்டு ஸ்தாபன ரீதியாக்கப்படுவதுமான தொழிலாளி வர்க்கத்தின் எதிர்ப்புக் கிளர்ச்சியும் வளர்கிறது. மூலதனத்தின் ஏகபோகம், அதனோடு சேர்ந்து அதன் கீழ் பிறந்து மலர்ந்துள்ள உற்பத்திச் செய்முறைக்குப் பூட்டியதோர் விலங்காகிறது. உற்பத்திச் சாதனங்கள் மையப்படுவதும் உழைப்புச் சமுதாய ரீதியாவதும், அவற்றின் முதலாளித்துவ ஓட்டுக்குப் பொருந்தி வராத ஒரு கட்டத்தைக் கடைசியில் எட்டுகின்றன. இவ்வாறு ஓடு உடைத்தெறியப்படுகிறது. முதலாளித்துவத் தனிச் சொத்தின் சாவுமணி ஒலிக்கிறது. பறிமுதல்காரர்கள் பறிமுதல் செய்யப்படுகின்றனர்.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் விளைவான முதலாளித்துவத் தன்வயப்படுத்தல் முறை முதலாளித்துவத் தனியுடைமையை உண்டாக்குகிறது. உரிமையாளரின் உழைப்பை அஸ்திவாரமாகக் கொண்ட, தனிநபர் ரீதியான தனியுடைமையின் முதல் மறுப்பாகும் இது. ஆனால் முதலாளித்துவ உற்பத்தியானது ஓர் இயற்கை விதியின் விட்டுக்கொடுக்காத் தன்மையுடன் தன் சொந்த மறுப்பைப் பிரசவிக்கிறது. அது மறுப்பின் மறுப்பாகும். இது உற்பத்தியாளனுக்காகத் தனி

யுடைமையை மீண்டும் நிலைநாட்டுவதில்லை, ஆனால் முதலாளித்துவச் சகாப்தத்தின் சுவாதீனங்களின் அடிப்படையிலான, அதாவது கூட்டுப் பணி, நிலத்தையும் உற்பத்திச் சாதனங்களையும் பொதுவில் வைத்துக்கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையிலான தனிநபர் உடைமையை அவனுக்களிக்கிறது.

தனிநபர் உழைப்பிலிருந்து பிறக்கின்ற சிதறலான தனியுடைமையை முதலாளித்துவத் தனியுடைமையாக மாற்றியமைப்பதென்பது இயல்பாகவே, ஏற்கெனவே நடைமுறையில் சமுதாய ரீதியாக்கப்பட்ட உற்பத்தியைச் சார்ந்து நிற்கும் முதலாளித்துவத் தனியுடைமையைச் சமுதாய ரீதியாக்கப்பட்ட தனியுடைமையாக மாற்றியமைப்பதை விட, ஒப்பிட முடியாத அளவுக்கு அதிகம் நீண்ட நெடியதும், பலாத்காரமானதும், சிரமமிக்கதுமான ஓர் செய்முறையாகும். முதலில் சொன்ன மாற்றத்தில், மக்கள் திரளை ஒரு சில கொள்ளைப்பேர்வழிகள் பறிமுதலுக்காளாக்குவதைக் கண்டோம்; இரண்டாவதாகச் சொன்ன மாற்றத்தில், ஒரு சில கொள்ளைப்பேர்வழிகளை மக்கள் திரள் பறிமுதலுக்காளாக்குவதைக் காண்கிறோம்.*

மூலம் ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

---

* ''தொழிலின் முன்னேற்றமானது—இதன் இஷ்டப் பூர்வமில்லாத வளர்ப்பாளர் பூர்ஷ்வா வர்க்கமாகும்—போட்டியின் விளைவாகத் தொழிலாளர்கள் பிரிந்து தனிமைப்படுவதனிடத்தில், சகவாசத்தின் விளைவாக அவர்களின் புரட்சிகர ஒன்றிணைப்பைக் கொணர்கிறது. எனவே தற்காலத் தொழிலின் வளர்ச்சியானது, எந்த அடித்தளத்தின் மீது நின்று பூர்ஷ்வா வர்க்கம் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து தன்வயப்படுத்துகிறதோ அந்த அடித்தளத்தையே உருவி எறிந்து விடுகிறது. எனவே, அனைத்துக்கும் மேலாக பூர்ஷ்வா வர்க்கம் உற்பத்தி செய்வது தன் சொந்த சவக்குழியைத் தோண்டுவோரையே. அதன் வீழ்ச்சியும், பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியும் ஒரே மாதிரியாகத் தவிர்க்க முடியாதவை... இன்று பூர்ஷ்வா வர்க்கத்தோடு நேருக்கு நேராக நிற்கின்ற வர்க்கங்கள் அனைத்திலும் பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான் எதார்த்தத்திலேயே புரட்சிகரமான வர்க்கமாகும். தற்காலத் தொழிலினெதிரே மற்ற வர்க்கங்கள் மடிந்து மறைகின்றன; பாட்டாளி வர்க்கம் அந்தத் தற்காலத் தொழிலின் விசேஷமான, அத்தியாவசிய

விளைபயனுகும்.... நடுத்தர வர்க்கங்கள்—சிறு தொழிலதிபர்கள், கடைக்காரர்கள், கைவினைஞன், விவசாயி இவர்கள் எல்லோருமே நடுத்தர வர்க்கத்தின் பகுதிகளாக தாங்கள் ஜீவிப்பது முடிந்து விடாமல் காப்பாற்றிக்கொள்வதற்காக பூர்ஷ்வா வர்க்கத்துக்கெதிராகப் போராடுகின்றனர்... அவர்கள் பிற்போக்கானவர்கள்; ஏனென்றால் அவர்கள் வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னோக்கிச் சுழற்ற முயல்கின்றனர். ''(Karl Marx und Friedrich Engels, *Manifest der Kommunistischen Partei*, London, 1848, S. 11, 9.) —**பி. எங்கெல்சின் குறிப்பு.**

கா. மார்க்ஸ்

# ஹனேவரிலிருந்த லுட்விக் கூக்ல்மனுக்கு கார்ல் மார்க்ஸ் எழுதிய கடிதத்திலிருந்து

**லண்டன், ஏப்ரல் 12, 1871**

...நான் எழுதிய பதினெட்டாம் புரூமேர்[20] புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தை நீங்கள் படித்தால் இதற்கு முன்பு நடைபெற்று வந்த முறையில் அதிகார வர்க்க இராணுவ இயந்திரத்தை ஒருவரிடமிருந்து அடுத்தவருக்கு மாற்றிக் கொடுப்பதாக இல்லாமல், அதை நொறுக்குவதாகவே பிரெஞ்சுப் புரட்சியின் அடுத்த முயற்சி இருக்கும், ஐரோப்பாக் கண்டத்தில் ஒவ்வொரு உண்மையான மக்கள் புரட்சிக்கும் இதுவே பூர்வாங்க நிபந்தனே என்று நான் எழுதியிருப்பதை நீங்கள் பார்க்க முடியும். பாரிசில் நம்முடைய வீர மிக்க தோழர்கள் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறுர்கள்[21]. ஓ, இந்தப் பாரிஸ் மக்களிடம் உள்ள நெகிழ்ச்சி, வரலாற்று முன்முயற்சி, தியாக வேட்கை ஏராளம்! அந்நிய எதிரியைக் காட்டிலும் கூட அதிக அளவுக்கு உள்நாட்டின் துரோகத்திஞல் ஏற்பட்ட ஆறு மாத காலப் பட்டினி, அழிவுக்குப் பிறகு பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையில் ஒரு யுத்தம் ஒருபோதும் நடைபெருததைப் போல, எதிரி பாரிஸ் கதவுகளுக்குப் பக்கத்தில் இன்னும் இல்லாததைப் போல அவர்கள் பிரஷ்யர்களின் துப்பாக்கி ஈட்டிகளே எதிர்த்து எழுகிருர்கள்! இப்படிப்பட்ட மாவீரத்துக்கு வரலாற்றில் வேறு உதாரணமே கிடையாது! அவர்கள் முறியடிக்கப்படுவார்களே யாஞல் அதற்கு அவர்களுடைய ''நற்பண்பே'' காரணமாக இருக்கும். முதலில்,விஞுவாவும் பிறகு பாரிஸ் தேசியக்காவற் படையின் பிற்போக்குப் பிரிவும் பின்வாங்கிய பொழுதே அவர்கள் உடனடியாக வெர்சேய்[22] மீது படையெடுத்திருக்க வேண்டும். அவர்கள் மனச்சாட்சி காரணமாக அந்த சந்தர்ப்பத்தைத் தவறவிட்டார்கள். அவர்கள் உள்நாட்டுப்

போரை ஆரம்பிக்க விரும்பாமலிருந்தது தவறு—அந்த விஷமத்தனமான குள்ளன் தியேர் பாரிஸ் மக்களை ஆயுதப் பரிகரணம் செய்வதற்கு முயற்சித்ததன் மூலம் ஏற்கெனவே அந்த உள்நாட்டுப் போரைத் துவக்கவில்லையா! இரண்டாவது தவறு: கம்யூனுக்குத் தன் இடத்தை விடுவதற்கு மத்தியக் கமிட்டி தன்னுடைய அதிகாரத்தை மிகவும் சீக்கிரமாகவே ஒப்படைத்து விட்டது. இதுவும் அதிக ''கௌரவமான'' மனச்சாட்சியினுல்தான்! அது எப்படியிருந்தாலும் பாரிசில் இன்று ஏற்பட்டிருக்கும் எழுச்சி—பழைய சமூகத்தின் ஓநாய்களும் பன்றிகளும் இழிவான நாய்களும் அதை நசுக்கி விட்டால் கூட—பாரிசில் சென்ற ஜூன் மாத எழுச்சிக்குப்[23] பிறகு நம் கட்சியின் மிக அற்புதமான சாதனையாகும். விண்ணை முட்டத் தயாராயிருக்கும் பாரிஸ் மக்களை படைவீரர் பாசறைகள், திருச்சபை, முட்டகோசு ஜங்கர்கள்[24] மற்றும் எல்லாவற்றுக்கும் அதிகமாக அற்பவாதிகளின் நாற்றமடிக்கின்ற, பழையதாகி விட்ட முகமூடி நடனங்களைக் கொண்ட ஜெர்மன்-பிரஷ்ய புனித ரோமானியப் பேரரசின் விண்ணக அடிமைகளுடன் ஒப்பிடுங்கள்....

மூலம் ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

# ஹனோவரிலிருந்த லுட்விக் கூகல்மனுக்கு கார்ல் மார்க்ஸ் எழுதிய கடிதத்திலிருந்து

**[லண்டன்], ஏப்ரல் 17, 1871**

...பாரிசில் இன்று நடைபெறுகின்ற போராட்டத்துடன் à la *1849 ஜூன் 13*[25] மற்றும் இதர குட்டிமுதலாளி வர்க்க ஆர்ப்பாட்டங்களை நீங்கள் எப்படி ஒப்பிடுகிறீர்கள் என்பது எனக்கு முற்றிலும் புரியவில்லை.

தோல்வியடைய முடியாத சாதகமான சந்தர்ப்பங்களில் மட்டுமே போராட்டத்தை நடத்துவது என்ற நிபந்தனையைக் கடைப்பிடிப்பதென்றால் உலக வரலாற்றை உருவாக்குவது மிகச் சுலபம் என்பது உண்மையே. மறு பக்கத்தில் ''தற்செயலான நிகழ்வுகளுக்குப்'' பாத்திரமில்லை என்றால் வரலாறு மிகவும் மாயத்தன்மை கொண்டதாகவே இருக்கும். இத்தற்செயலான நிகழ்வுகள் இயற்கையாகவே வளர்ச்சியின் பொதுவான போக்கில் ஒரு பகுதியாக இருக்கின்றன, பிற தற்செயலான நிகழ்வுகளால் அவை ஈடு செய்யப்படுகின்றன. ஆனால் விரைவுபடுத்துவதும் தாமதமும் அந்த இயக்கத்துக்கு முதலில் தலைமை தாங்குகின்றவர்களின் தன்மை என்ற ''தற்செயலான நிகழ்வு'' உள்பட இத்தகைய ''தற்செயலான நிகழ்வுகளையே'' மிகவும் அதிகமாகச் சார்ந்திருக்கின்றன.

தீர்மானமான, பாதகமான ''தற்செயலான நிகழ்வை'' இந்தச் சமயத்தில் பிரெஞ்சு சமூகத்தின் பொதுவான நிலைமைகளில் தேடக் கூடாது—மாறாக, பிரான்சில் பிரஷ்யர்கள் இருந்தது மற்றும் பாரிசுக்கு முன்பாக அவர்கள் நிற்கும் நிலைமையில் அதைத் தேட வேண்டும். இதைப் பாரிஸ் மக்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள். ஆனால் வெர்சேயிலிருந்த முதலாளி வர்க்க இழிந்த கூட்டமும் இதை நன்றாகவே உணர்ந்திருந்தது. போராட்டத்தைத் தொடர்வது அல்லது

போராட்டமின்றிச் சரணடைவது என்ற இரண்டில் ஒரு வாய்ப்பை அவர்கள் பாரிஸ் மக்களுக்குக் கொடுத்தது துல்லியமாக இந்தக் காரணத்தினுல்தான். இரண்டாவது வாய்ப்பைப் பின்பற்றி இருக்குமானுல் தொழிலாளி வர்க்கம் மனச்சோர்வடைவது ஏராளமான ''தலைவர்களின்'' அழிவைக் காட்டிலும் மிகப் பெரிய துர்ப்பாக்கியமாக இருந்திருக்கும். முதலாளி வர்க்கத்துக்கும் அதன் அரசுக்கும் எதிரான தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் பாரிஸ் கம்யூனுடன் ஒரு புதிய கட்டத்தை அடைந்து விட்டது. உடனடியான விளைவு எப்படியிருந்தாலும் உலக வரலாற்று முக்கியத்துவமுடைய ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திவிட்டோம்.

மூலம் ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

# பிரான்சில் உள்நாட்டுப் போர்

## சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுவின் பேருரை[26]

*ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள சங்கத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும்*

### I

*1870 செப்டெம்பர் 4ந் தேதியன்று[27] பாரிஸ் நகரத் தொழிலாளர்கள் குடியரசைப் பிரகடனம் செய்த பொழுது அநேகமாக உடனே பிரான்ஸ் முழுவதிலும்—ஒரு ஆட்சேபக் குரல் கூட இல்லாமல்—அது ஆரவாரத்தோடு வரவேற்கப் பட்டது. அந்த நேரத்தில் தியேரைத் தங்களுடைய இராஜ தந்திரியாகவும் த்ரொஷூவைத் தங்களுடைய தளபதி யாகவும் கொண்ட பதவிக்குப் போட்டியிடும் வக்கீல்களின் கோஷ்டி ஒன்று நகர் மண்டபத்தைக் கைப்பற்றியது. வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த எல்லா நெருக்கடிக் கட்டங் களிலும் பிரான்சைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பொறுப்பு பாரிசைச் சேர்ந்தது என்ற வெறிமிகுந்த நம்பிக்கையில் அவர்கள் அப்போது தோய்ந்திருந்தபடியால் பிரான்சை ஆள்பவர்கள் என்பதாகத் தாங்கள் கைப்பற்றிய பதவிகளை முறைப்படுத்திக் கொள்வதற்குப் பாரிசின் பிரதிநிதிகள் என்ற காலாவதியான தகுதிகளைக் காட்டுவதே போதும் என்று அவர்கள் கருதினார்கள். சென்ற யுத்தத்தைப் பற்றிய எங்களது* **இரண்டாவது உரையில்**[28] *—இந்த நபர்கள் தலை தூக்கிய ஐந்து நாட்களுக்குப் பிறகு—அவர்கள் யார் என் பதை உங்களிடம் எடுத்துரைத்தோம். ஆனால் திகைப்பின் கொந்தளிப்பில், தொழிலாளர்களின் உண்மையான தலைவர் கள் இன்னும் போனபார்ட் சிறைகளில் அடைக்கப்பட் டிருந்த பொழுது, பிரஷ்யர்கள் ஏற்கெனவே பாரிசை நோக்கி அணிவகுத்து விரைவாக வந்து கொண்டிருந்த நேரத்தில் இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். அது*

தேசியப் பாதுகாப்பு என்ற ஒரே நோக்கத்துக்கு உபயோகிக்கப்பட வேண்டும் என்ற வெளிப்படையான நிபந்தனையின் பேரில் பாரிஸ் அதை சகித்துக் கொண்டது. பாரிஸ் தொழிலாளர்களுக்கு ஆயுதங்களைக் கொடுக்காமல், சக்தி வாய்ந்த படையாக அவர்களை அமைக்காமல், யுத்தத்தின் மூலமாக அவர்களுடைய அணிகளைப் பயிற்றுவிக்காமல் பாரிசைப் பாதுகாக்க முடியாது. ஆனால் பாரிஸ் ஆயுதமேந்தி விட்டால் அது புரட்சியே ஆயுதமேந்தியதாகும். பிரஷ்ய ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகப் பாரிசின் வெற்றி பிரெஞ்சு முதலாளி மற்றும் அவருடைய அரசுப் புல்லுருவிகள் மீது பிரெஞ்சுத் தொழிலாளியின் வெற்றியாக இருக்கும். தேசியக் கடமைக்கும் வர்க்க நலன்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் தேசியப் பாதுகாப்பு அரசாங்கம் தேசியத் துரோக அரசாங்கமாகத் தன்னை மாற்றிக் கொள்வதற்கு ஒரு வினாடி கூடத் தயங்கவில்லை.

அவர்கள் முதல் நடவடிக்கையாகத் தியேரை ஒரு நெடும் பயணத்தில் அனுப்பினார்கள். அவர் ஐரோப்பாவின் அரசவைகள் எல்லாவற்றிற்கும் சென்று ஒரு அரசருக்காகக் குடியரசைப் பண்டமாற்றுச் செய்யத் தயார் என்று கூறி மத்தியஸ்தம் செய்யும்படி அவர்களைக் கெஞ்சினார். மற்றுகை ஆரம்பமாகி நான்கு மாதங்களுக்குப் பிறகு சரணாகதி என்ற முதல் வார்த்தையை உச்சரிப்பதற்குத் தக்க தருணம் வந்து விட்டதென்று அந்த அரசாங்கம் கருதியது. ழூல் ஃபாவர் மற்றும் இதர சகாக்களின் முன்னிலையில் த்ரொஷூ பாரிஸ் மேயர்களின் கூட்டத்தில் பின்வருமாறு பேசினார்:

''செப்டெம்பர் 4ந் தேதியன்று மாலையில் என்னுடைய சகாக்கள் என்னிடம் கேட்ட முதல் கேள்வி இதுதான்: பிரஷ்ய இராணுவத்தின் முற்றுகையைப் பாரிஸ் வெற்றிகரமாகச் சமாளிக்க ஏதேனும் சந்தர்ப்பமிருக்கிறதா? இல்லை என்று பதிலளிப்பதற்கு நான் தயங்கவில்லை. நான் உண்மையிலேயே இந்தப் பதிலைக் கூறினேன், பிடிவாதமாக இந்தக் கருத்தை வற்புறுத்தினேன் என்பதற்கு இங்கே அமர்ந்திருக்கும் என்னுடைய சகாக்களில் சிலர் சாட்சியாக இருக்கிறார்கள். இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கும் பொழுது பிரஷ்ய இராணுவத்தின் முற்றுகையைப் பாரிஸ் சமாளிக்க முயற்சிப்பது முட்டாள்தனமாகும்—இதே சொற்களை நான் உபயோகித்தேன். நிச்சயமாக அது வீரம் நிறைந்த முட்டாள்தனம் என்றும் நான் கூறினேன். ஆனால் வேறு ஒன்று

மில்லை...'' (அவரால் நிர்வகிக்கப்பட்ட) ''சம்பவங்கள் என் முன்னனுமானத்தைப் பொய்யாக்கிவிடவில்லை''.

த்ரொஷூவின் இந்த அருமையான சிறிய சொற் பொழிவு அங்கே அமர்ந்திருந்த மேயர்களில் ஒருவரான திரு. கொர்போனல் பின்னர் வெளியிடப்பட்டது.

அரசின் சிறு போக்கிரித்தனங்களில் வித்தகர், பொய்ச் சத்தியம் செய்வதில் சூரர், நாடாளுமன்றக் கட்சிச் சண்டை யின் அற்பமான தந்திரங்கள், சூழ்ச்சிகள், நம்பிக்கை மோசடி கள் எல்லாவற்றிலும் நிபுணர்; பதவியில் இல்லாத பொழுது புரட்சியைத் தூண்டுவதற்கும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே அதை இரத்தவெள்ளத்தில் மூழ்கடிப்பதற்கும் ஒருபோதும் தயங்காதவர்; அவரிடம் கருத்துக்களுக்குப் பதிலாக வர்க்கக் குரோதங்களும் இதயத்துக்குப் பதிலாக அகம்பாவமும் இருந்தன; அவருடைய பொது வாழ்க்கை எவ்வளவு அருவருப்பானதோ அதே அளவுக்குக் அவருடைய சொந்த வாழ்க்கை கேவலமானது—பிரெஞ்சு ஸூல்லாவின் பாத்திரத்தை அவர் நடித்துக் கொண்டிருந்த இந்த நேரத் தில் கூட தன்னுடைய அருவருப்பான செயல்களை ஏளனத் துக்குரிய தன்னுடைய பகட்டின் மூலம் தூக்கிக் காட்டா திருக்க தியேரால் முடியவில்லை.

பாரிஸ் வீழ்ச்சி பிரஷ்யாவிடம் பாரிசை மட்டுமல்லாமல் மொத்த பிரான்சையுமே ஒப்படைப்பது செப்டெம்பர் 4ந் தேதி ஆட்சியைக் கைப்பற்றியோர் எதிரியுடன்—த்ரொஷூ சொன்ன மாதிரியே—அதே தினத்தில் ஆரம்பித்து நெடுங் காலமாக நடத்திவந்த துரோகத்தனமான சூழ்ச்சிகளை முடித்தது. மறுபக்கத்தில் பிரஷ்யாவின் உதவியுடன் குடி யரசுக்கும் பாரிசுக்கும் எதிராக அவர்கள் நடத்திய உள் நாட்டுப் போரை அந்த வீழ்ச்சி துவக்கியது. அந்தச் சரணாகதியின் ஷரத்துக்களிலேயே பொறி வைக்கப்பட்டிருந் தது. அந்தச் சமயத்தில் மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமான பிரதேசம் எதிரியிடம் சிக்கியிருந்தது, தலைநகரம் மாநிலங் களிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது, சாலைப் போக்குவரத்து கள் அனைத்தும் சீர்குலைந்திருந்தன. இத்தகைய சூழ்நிலை யில்—தயாரிப்புக்குப் போதிய அவகாசம் கொடுக்கப் பட்டாலொழிய—பிரான்சின் உண்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முடியாது. இதனைக் கருதியே எட்டு நாட்

களுக்குள் தேசிய சபை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சரணுகதி நிபந்தனை விதித்தது. ஆகவே தேர்தல் நடக்கப் போகிறது என்று செய்தி தேர்தலுக்கு முந்திய நாளன்று தான் பிரான்சின் பல பகுதிகளுக்குக் கிடைத்தது. மேலும் சமாதானமா அல்லது போரா என்று முடிவு செய்வதற்கும் அவசியப்பட்டால் சமாதான உடன்படிக்கையை முடிவு செய் கின்ற ஒரே நோக்கத்துக்காகவே தேசிய சபை தேர்ந்தெடுக் கப்படும் என்று சரணுகதி ஒப்பந்தத்தின் விசேஷ ஷரத்து கூறியது. போர்நிறுத்த உடன்படிக்கையின் ஷரத்துக்கள் போரைத் தொடர்வதை இயலாதபடிச் செய்திருக்கின்றன, பிஸ்மார்க்கினுல் திணிக்கப்படுகின்ற சமாதானத்துக்கு இசை வளிப்பதற்கு பிரான்சின் கடைகெட்ட மனிதர்களே மிகவும் சிறந்தவர்கள் என்று மக்கள் முடிவு செய்ததில் தவறில்லை. ஆனுல் இந்தத் தற்காப்புகளில் திருப்தி அடையாத தியேர் போர்நிறுத்த உடன்படிக்கையின் இரகசியம் பாரிசை எட்டு வதற்கு முன்னரே மாநிலங்களில் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணத்துக்காகப் புறப்பட்டார். போனப்பார்ட்டிஸ்டுகள் இனிமேல் ஆட்சி செய்ய முடியாதென்பதால் ஆர்லியான் வாதிகளோடு சேர்ந்து அவர்களுடைய இடத்தைப் பெற வேண்டிய முறைமைவாதக் கட்சிக்குப்[29] புத்துயிரூட்டுகின்ற நோக்கத்தோடு அவர் புறப்பட்டார். முறைமை வாதிகளைக் கண்டு அவர் அஞ்சவில்லை. நவீன பிரான்சை ஆட்சி செய்ய முடியாதென்பதால் அவர்கள் எதிரிகள் என்ற முறையில் இகழ்ச்சிக்குரியவர்கள். அந்தக் கட்சியின் நடவடிக்கை,

> ''வெளிநாட்டுப் படையெடுப்பு, உள்நாட்டுப் போர் மற்றும் அராஜகம் என்ற மூன்று முக்கிய இனங்களை மட்டுமே எப்பொழுதும் பயன்படுத்தியிருக்கிறது''

என்று தியேர் வர்ணித்தார் (பிரதிநிதிகள் சபை 1833 ஜன வரி 5).

ஆக, இக்கட்சியைக் காட்டிலும் எதிர்ப்புரட்சியின் கருவி யாகச் செயலாற்றுவதற்கு அதிகத் தகுதியுடைய கட்சி வேறு உண்டா? முறைமைவாதிகள் நெடுங் காலமாக எதிர் பார்த்த பின்னேக்கிய ஊழி வரும் என்று அவர்கள் உண்மை யிலேயே நம்பினுர்கள். அந்நிய ஆக்கிரமிப்பாளர்களின் குதிகால்கள் பிரான்சை மிதித்துக் கொண்டிருந்தன. பேர ரசு மீண்டும் வீழ்ச்சி அடைந்திருந்தது, போனப்பார்ட் மீண்டும்

சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். முறைமைவாதிகள் திரும்பிவந்து விட்டார்கள். வரலாற்றுச் சக்கரம் பின்னோக்கிச் சுழன்று 1816ம் வருடத்தின் "chambre introuvable"இல்[30] நின்றுவிட்டது என்பது வெளிப்படை. 1848 முதல் 1851 முடிய குடியரசுத் தேசிய சபைகளில் கல்விகற்ற பயிற்சியுடைய நாடாளுமன்ற அனுபவஸ்தர்கள் முறைமை வாதிகளைப் பிரதிநிதித்துவம் செய்தார்கள். இப்பொழுது அந்தக் கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள், பிரான்சின் புர்சொனியாக்குகள்* அனைவரும் வேகமாக நுழைந்தார்கள்.

இந்த ''நிலவுடைமையாளர் சபை''[31] போர்டோவில் கூடிய உடனே நாடாளுமன்ற விவாதம் என்ற கௌரவம் இல்லாமலே சமாதானப் பிரேரணைகளுக்கு உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும், அந்த ஒரே நிபந்தனையின் பேரில் தான் குடியரசுக்கும் அதன் கோட்டையான பாரிசுக்கும் எதிராக அவர்கள் போர் தொடங்குவதைப் பிரஷ்யா அனுமதிக்கும் என்பதைத் தியேர் அவர்களிடம் தெளிவுபடுத்தினார். எதிர்புரட்சிக்காரர்கள் தாமதிக்க முடியாத நிலைமையில் இருந்தார்கள் என்பது உண்மை. இரண்டாம் பேரரசு தேசியக் கடனை இரண்டு மடங்குக்கும் அதிகமாக உயர்த்தி விட்டது, எல்லாப் பெரிய நகரங்களையுமே மிக அதிகமான ஸ்தலக் கடன்களில் மூழ்க வைத்திருந்தது. போரின் விளைவாக நாட்டின் கடன் பொறுப்புகள் பயங்கரமான அளவுக்கு அதிகரித்திருந்தன, நாட்டின் செல்வ வளங்கள் ஈவிரக்கமின்றி சூறையாடப்பட்டிருந்தன. இந்த அழிவைப் பூர்த்தி செய்வதற்கு பிரஷ்ய ஷைலக்** ஐந்து லட்சம் பிரஷ்யப் படைவீரர்களை வைத்திருக்கின்ற செலவு, 5,000 மில்லியன்கள் நட்ட ஈடு மற்றும் கொடுக்கப்படாத தவணைகளுக்கு ஐந்து சதவிகித வட்டிப் பத்திரத்தோடு பிரெஞ்சு மண்ணில்

---

* —பிரெஞ்சு நாடக ஆசிரியரான மோலியேர் எழுதிய ''திரு. புர்சொனியாக்'' என்ற இன்பியல் நாடகத்தின் கதாநாயகன். நாட்டுப்புற நிலப்பிரபு; மூடத்தனமும் மந்த புத்தியும் உள்ள நபர்.—ப-ர்.

** —ஷேக்ஸ்பியர் எழுதிய ''வெனிஸ் வர்த்தகன்'' என்ற நாடகத்தில் ஒரு பாத்திரம். கடன் பெற்றவர் கடனைத் திருப்பித்தர வேண்டும் அல்லது உடலில் ஒரு பவுண்டு சதையை வெட்டிக் கொடுக்க வேண்டும் என்று கோரியவர், இரக்கமில்லாத வட்டிக்கடைக்காரர்.—ப-ர்.

காத்துக் கொண்டிருந்தார். இந்தத் தொகைகளைக் கட்டுவது யார்? குடியரசைப் பலாத்காரமாகத் தூக்கியெறிவதன் மூலமாக மட்டுமே, செல்வத்தைப் பறித்தவர்கள் தாங்களே தொடங்கிய ஒரு போரினால் ஏற்பட்ட சுமையை இச்செல்வத்தை உற்பத்தி செய்பவர்களின் தோள்களுக்கு மாற்ற முடியும். இப்படி ஆக்கிரமிப்பாளனின் பார்வை மற்றும் ஆதரவின் கீழ் அந்நியப் போரின் மீது ஒரு உள்நாட்டுப் போரை, அடிமை உடைமையாளர்களின் கலகத்தை ஒட்ட வைக்கும்படி பிரான்சின் படுபயங்கரமான அழிவு தேசபக்தி மிக்க நிலம் மற்றும் மூலதனத்தின் இப்பிரதிநிதிகளைத் தூண்டியது.

இந்தச் சதித்திட்டத்துக்கு முன்னால் ஒரு மாபெரும் தடை நின்றது. அதுதான் பாரிஸ். பாரிசை ஆயுதப் பரிகரணம் செய்வது வெற்றிக்கு முதல் நிபந்தனை. ஆகவே பாரிஸ் தன்னுடைய ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென்று தியேர் உத்தரவிட்டார். ''நிலவுடைமையாளர் சபையின்'' படபடப்பான குடியரசு எதிர்ப்புக் கூக்குரல்கள்; குடியரசின் சட்டபூர்வமான அந்தஸ்தைப் பற்றித் தியேரின் மழுப்பல்கள்; பாரிசைத் துண்டிப்போம், தலைநகரம் என்ற நிலையை மாற்றுவோம் என்ற பயமுறுத்தல்கள்; ஆர்லியான்வாதிகளைத் தூதர்களாக நியமித்தது; கொடுக்கப்பட வேண்டிய வர்த்தக முறிகள் மற்றும் வீட்டுவாடகைகளைப் பற்றிய டியுஃபோரின் சட்டங்கள்[32]—இவை பாரிசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை மீது அழிவை ஏற்படுத்தக் கூடியவை; கற்பனை செய்யக் கூடிய எந்தவொரு வெளியீட்டின் ஒவ்வொரு பிரதியின் மீதும் புயேர்-கெர்தியே இரண்டு காசு வரி விதித்தது; பிளாங்கீ மற்றும் ஃபிலொரான் மீது விதிக்கப்பட்ட மரணதண்டனைகள்; குடியரசுவாதப் பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டது; தேசிய சபை வெர்சேய்க்கு மாற்றப்பட்டது; பலிக்கவோவினால் அறிவிக்கப்பட்டு செப்டெம்பர் 4ந் தேதியன்று முடிவடைந்த முற்றுகை நிலை மீண்டும் ஏற்படுத்தப்பட்டது; பாரிஸ் கவர்னராக décembriseur[33] வினுவாவும் அதன் தலைமைப் போலீஸ் அதிகாரியாக போனப்பார்ட்டிஸ்ட் காவலாளி வலன்தேனும் அதன் தேசியக் காவற்படையின் தலைமைத் தளபதியாக ஏசு சபையின் ஜெனரல் ஒரேல் டெ பலடீனும் நியமிக்கப்பட்டது ஆகியவற்றினால் பாரிஸ் எரிச்சலடைந்திருந்தது.

இப்பொழுது நாம் திரு. தியேரிடமும் அவருடைய உதவி யாட்களான தேசியத் தற்காப்பு அரசாங்கத்தின் உறுப் பினர்களிடமும் ஒரு கேள்வி கேட்கப் போகிறோம். அவரது நிதி அமைச்சரான புயேர்-கொர்தியேவின் உதவியின் மூலம் தியேர் 2,000 மில்லியன் கடன் பெற்றிருப்பதாக அறி கிறோம். எனவே கீழே சொல்லப்பட்டிருப்பது உண்மையா அல்லது பொய்யா:

*1) தியேர், ழூல் ஃபாவர், எர்னேஸ்ட் பிகார், புயேர்-கொர்தியே மற்றும் ழூல் ஸிமோன் ஆகியோருக்குத் தனிப் பட்ட முறையில் சில நூறு மில்லியன்கள் கிடைக்கின்ற வகை யில் இந்த நடவடிக்கை அமைக்கப்பட்டதா?*

*2) பாரிஸ் ''அமைதியடைந்த'' பிறகுதான் பணம் கொடுக் கப்படுமா?*[34]

எப்படியிருந்த போதிலும் இந்த விவகாரத்தில் மிகவும் அழுத்தமான ஏதோ ஒன்று இருக்க வேண்டும். ஏனென்றால் போர்டோ சபையின் பெரும்பான்மையினர் சார்பாகத் தியேரும் ழூல் ஃபாவரும் பிரஷ்யத் துருப்புகள் உடனடியாகப் பாரிசுக்குள் நுழைய வேண்டும் என்று வெட்கங்கெட்ட முறையில் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் பிஸ்மார்க் ஜெர் மனிக்குத் திரும்பிய பொழுது தன்னைப் பற்றி ஆச்சரியப் பட்ட ஃபிராங்புர்ட் அற்பவாதிகளிடம் இகழ்ச்சியோடும் பகிரங்கமாகவும் கூறியதைப் போல, அவருடைய திட்டம் அதுவல்ல.

## II

எதிர்ப்புரட்சிச் சதித்திட்டத்தின் பாதையில் இருந்த ஒரே முனைப்பான தடை ஆயுதமேந்திய பாரிஸ்தான். எனவே பாரிசின் ஆயுதங்களைப் பறிக்க வேண்டும். இந்த விஷயத் தில் போர்டோ சபை கபடில்லாமல் நடந்து கொண்டது. ''நிலவுடைமையாளர் சபையின்'' கர்ச்சனை காதில் விழு வதற்குப் போதிய வலிமை இல்லாதிருந்தால் décembriseur வினுவா, போனப்பார்ட்டிஸ்ட் காவலாளி வலன்தேன், ஏசு சபை ஜெனரல் ஒரேல் டெ பலடீன் என்ற மும்மூர்த்தியிடம் தியேர் பாரிசை ஒப்படைத்தது சந்தேகத்தின் கடைசிச் சுவட்டைக் கூட அகற்றியிருக்கும். சதிகாரர்கள் பாரிசின் ஆயுதப் பரிகரணத்தின் உண்மையான நோக்கத்தை அவ மதிக்கின்ற முறையில் வெளிப்படுத்திய பொழுது மிகவும்

அப்பட்டமான, ஒளிவு மறைவில்லாத பொய்ச் சாக்கைச் சொல்லி பாரிஸ் தன்னுடைய ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென்று கோரினார்கள். பாரிஸ் தேசியக் காவற்படையின் பீரங்கிப் பிரிவு அரசுக்குச் சொந்தமானது, அதை அரசிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று தியேர் கூறினார். உண்மை இதுதான்: சரணடைந்த நாளிலிருந்து, அதாவது பிஸ்மார்க்கின் கைதிகள் பாரிசைப் பயமுறுத்துகின்ற வெளிப்படையான நோக்கத்துக்காக ஏராளமான வீரர்களைக் கொண்ட மெய்க் காவற்படையைத் தங்களுக்கென்று தனியாக வைத்துக் கொண்டு பிரான்சின் சரணாகதியைக் கையொப்பமிட்டுத் தந்த நாளிலிருந்து பாரிஸ் எச்சரிக்கையோடிருந்தது. தேசியக் காவற்படை தன்னைச் சீரமைத்துக் கொண்டது, பழைய போனபார்ட்டிஸ்ட் பிரிவுகளின் சில துணுக்குகளைத் தவிர மொத்த அமைப்பினாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியக் கமிட்டியிடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்தது. பிரஷ்யர்கள் பாரிசுக்குள் நுழைகின்ற முற்பொழுதில் பிரஷ்யர்கள் இருக்கப் போகின்ற பாசறைகளிலும் அவற்றைச் சுற்றிலும் capitulards[35] தேசத்துரோகமான முறையில் கைவிட்டுச் சென்ற பீரங்கிகள் மற்றும் பல்குழல் துப்பாக்கிகளை மொன்மார்ட்டர், பெல்வில், லாவிலேட் ஆகிய இடங்களுக்கு அகற்றுவதற்கு மத்தியக் கமிட்டி நடவடிக்கைகளை எடுத்தது. தேசியக் காவற்படையினரின் நன்கொடைகளைக் கொண்டு அமைக்கப்பட்டதே அந்தப் பீரங்கிப் பிரிவு. அது அவர்களுடைய சொந்த உடைமை என்பதை ஜனவரி 28ந் தேதிச் சரணாகதி உடன்படிக்கை அதிகாரபூர்வமாக அங்கீகரித்தது. அரசாங்கத்துக்குச் சொந்தமான ஆயுதங்களை வெற்றி பெற்றவரிடம் ஒப்படைக்கின்ற பொதுச் சரணாகதியிலிருந்து அந்தக் காரணத்துக்காகவே விதிவிலக்குத் தரப்பட்டிருந்தது. பாரிசுக்கு எதிராகப் போர் தொடுப்பதற்கு மிக அற்பமான சாக்கும் தியேருக்குக் கிடைக்காத காரணத்தால் தேசியக் காவற்படையின் பீரங்கிகள் அரசின் உடைமை என்ற முழுப் பொய்யை அவர் உபயோகிக்க வேண்டியிருந்தது!

தேசியக் காவற்படையின் பீரங்கிகளைக் கைப்பற்றியது பாரிசின் பொது ஆயுதப் பரிகரணத்துக்கு, அதன் மூலம் செப்டெம்பர் 4ந் தேதிய புரட்சியின் ஆயுதப் பரிகரணத்துக்குப் பூர்வாங்க நடவடிக்கையாக உதவுவதற்கே என்பது

வெளிப்படை. ஆனுல் அந்தப் புரட்சியே பிரான்சுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்தைக் கொடுத்தது. வெற்றி பெற்றவர் அந்தப் புரட்சியின் விளைவான குடியரசை சரணுகதி ஷரத்துக் களில் அங்கீகரித்திருந்தார். சரணுகதிக்குப் பிறகு எல்லா அந்நிய அரசுகளும் குடியரசை அங்கீகரித்தன, அதன் பெயரி லேயே தேசிய சபையும் கூட்டப்பட்டது. போர்டோவில் தலைமையிடத்தைக் கொண்டிருந்த தேசிய சபை மற்றும் அதன் செயலாட்சியின் ஒரே சட்டபூர்வமான தகுதி பாரி சில் செப்டெம்பர் 4ந் தேதியில் நடைபெற்ற தொழிலாளர் களின் புரட்சியிலிருந்து ஏற்பட்டதே. அப்புரட்சி இல்லை யென்ருல் அந்த தேசிய சபை பிரெஞ்சு—பிரஷ்யர் அல்ல—ஆட்சியின் கீழ் பொது வாக்குரிமையின் மூலம் 1869ல் தேர்ந் தெடுக்கப்பட்டுப் புரட்சியினுல் பலவந்தமாகக் கலைக்கப் பட்ட Corps Législatifக்கு உடனே இடம் கொடுக்க வேண்டி யிருக்கும். தியேரும் அவருடைய பரோல் கும்பலும் கையேனுவுக்கு[36] அனுப்பப்படுவதிலிருந்து தங்களைக் காப் பாற்றிக் கொள்வதற்கு லுயீ போனப்பார்ட் கையொப்ப மிட்ட பாதுகாப்பான பயண அனுமதிச் சீட்டுகளைப் பெறு வதற்காக சரணுகதியடைய வேண்டியிருக்கும். பிரஷ்யா வுடன் சமாதான உடன்படிக்கை ஷரத்துக்களை முடிவு செய் வதற்கு சட்ட அதிகாரத்தைக் கொண்ட தேசிய சபை புரட்சியின் சம்பவங்களில் ஒன்றுதான். ஆயுதமேந்திய பாரிஸ் இன்னும் கூட அதன் உண்மையான சொரூபமாக இருந்தது. பாரிஸ் புரட்சியைத் தொடங்கி வைத்தது, அதற்காக பஞ் சத்தின் கொடூரங்கள் உள்பட ஐந்து மாத கால முற்று கையை ஏற்றுக் கொண்டது. த்ரொஷுவின் திட்டத்துக்கு மாருக தன்னுடைய தொடர்ந்த எதிர்ப்பை மாநிலங்களில் பிடிவாதமாக நடைபெற்ற தற்காப்புப் போரின் அடிப்படை யாகச் செய்தது. போர்டோவின் கலகம் செய்கின்ற அடிமை யுடைமையாளர்களின் அவமதிப்பான உத்தரவுகளுக்குப் பணிந்து பாரிஸ் இப்பொழுது தன் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு செப்டெம்பர் 4ந் தேதியன்று தான் நடத்திய புரட்சிக்கு லுயீ போனப்பார்ட்டிடமிருந்து அவருடைய அரசப் பரம்பரைப் போட்டியாளர்களுக்குச் செய்யப்பட்ட சாதாரணமான அதிகார மாற்றம் என்பதைத் தவிர வேறு எந்த அர்த்தமும் இல்லை என்று ஒத்துக்கொள்ள வேண்டும்; அல்லது இரண்டாவது பேரரசை உருவாக்கிய—அதன் பரா

மரிப்பில் முற்றும் உளுத்துப் போன—அரசியல் மற்றும் சமூக நிலைமைகளைப் பரட்சிகரமான முறையில் தூக்கி எறியாமல் அழிவிலிருந்து மீட்சியும் புத்துயிர்ப்பும் சாத்தியமில்லாத பிரான்சின் தற்பலிக்குத் தயாராக உள்ள ஆதரவாளனுக முன்னே நிற்க வேண்டும். ஐந்து மாத காலப் பஞ்சத்தினுல் வாட்டமடைந்திருந்த பாரிஸ் ஒரு கணம் கூடத் தாமதிக்க வில்லை. பிரெஞ்சு சதிகாரர்களை எதிர்த்துப் போர் புரிவதி லுள்ள எல்லா ஆபத்துக்களையும்—பிரஷ்ய பீரங்கிகள் அதன் சொந்தக் கோட்டைகளிலிருந்தே அதற்கு எதிராகத் திருப் பப்படும் என்ற போதிலும்—சந்திப்பதென்று வீரத்தோடு முடிவு செய்தது. எனினும் உள்நாட்டுப் போருக்குள் பாரிஸ் துரத்தப்படுவதை மத்தியக் கமிட்டி வெறுத்த காரணத்தால், தேசிய சபையின் ஆத்திரமூட்டல்களையும் செயலாட்சியின் அடாவழிக் கைப்பற்றல்களையும் பாரிசுக்கு உள்ளேயும் அதைச் சுற்றிலும் அச்சுறுத்துகின்ற முறையில் துருப்புகள் குவிக்கப்பட்டிருந்ததையும் மீறி வெறும் தற்காப்பு அணுகு முறையைத் தொடர்ந்து கடைப்பிடித்தது.

தியேர், வினுவா தலைமையில் ஏராளமான போலீஸ்காரர் களையும் படைப்பிரிவுகள் சிலவற்றையும் மொன்மார்ட்ட ருக்கு எதிராக இரவு நேரக் கொள்ளையில், அங்கே எதிர்பாராத நேரத்தில் தேசியக் காவற்படையின் பீரங்கிகளைக் கைப் பற்றுவதற்காக அனுப்பி உள்நாட்டுப் போரைத் தொடங்கி வைத்தார். தேசியக் காவற்படையின் எதிர்ப்பினுலும் துருப்புகள் மக்களோடு தோழமையை ஏற்படுத்திக் கொண்ட படியாலும் இந்த முயற்சி தோல்வியடைந்தது நன்கு தெரிந்ததே. ஒரேல் டெ பலடீன் வெற்றி அறிவிப்பை முன்பே அச்சிட்டு வைத்திருந்தார். தியேர் திடீர்ப்புரட்சி நடவடிக்கைகளை அறிவிக்கும் விளம்பரப் பலகைகளைத் தயா ராக வைத்திருந்தார். இப்பொழுது இவற்றுக்குப் பதிலாக தேசியக் காவற்படை தன்னுடைய ஆயுதங்களைத் தன் னிடமே வைத்துக்கொள்ளலாம், அந்த ஆயுதங்களைக் கலகக் காரர்களுக்கு எதிராக அரசாங்கத்தின் தரப்பில் இது உப யோகிக்கும் என எதிர்பார்க்கின்ற தியேரின் பெருந்தன் மையான முடிவைக் கொண்ட அறிக்கையை வெளியிட வேண்டியிருந்தது. தேசியக் காவற்படையில் மொத்தம் 3,00,000 நபர்கள் இருந்தனர். இவர்களில் 300 நபர்கள் மட்டுமே தங்களுக்கு எதிராக அற்பன் தியேருக்கு ஆதரவளித்

தார்கள். மார்ச் 18ந் தேதியின் மாபெரும் தொழிலாளர் புரட்சி எந்த மறுப்புமில்லாமல் பாரிசை ஆட்சி செய்தது. மத்தியக் கமிட்டி அதன் தற்காலிக அரசாங்கம், சமீப காலத்தில் தன்னுடைய பிரமிப்பான அரசு மற்றும் இராணுவ சாதனைகள் உண்மையாக நடைபெற்றவையா அல்லது நெடுங் காலத்துக்கு முன்பே மறைந்து விட்ட கடந்த காலக் கனவுகளா என்று ஐரோப்பா ஒரு கண நேரம் சந்தேகிப்பதைப் போலத் தோன்றியது.

மார்ச் 18ந் தேதியிலிருந்து வெர்சேய் துருப்புக்கள் பாரிசுக்கு நுழைகின்ற வரை ''உயர்ந்த வர்க்கங்களின்'' புரட்சிகளில்—எதிர்ப்புரட்சிகளில் இன்னும் அதிகமாகவே—நிறைந்திருக்கின்ற வன்முறைச் செயல்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் அறவே இல்லாதிருந்தபடியால் அதன் எதிரிகள் ஒப்பாரி வைப்பதற்கு ஜெனரல்கள் லெகோன்ட் மற்றும் கிலெமான் தொமாவின் சிரச்சேதங்களையும் வெண்டோம் சதுக்கத்தின் விவகாரத்தையும் தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை.

மொன்மார்ட்டர் மீது நடைபெற்ற இரவு நேரப் படையெடுப்பில் ஈடுபட்ட போனப்பார்ட்டிஸ்ட் அதிகாரிகளில் ஒருவரான ஜெனரல் லெகோன்ட் பிகால் சதுக்கத்தில் கூடியிருந்த நிராயுதபாணியான கூட்டத்தினர் மீது சுடுமாறு 81வது போர்முனைப் பிரிவுக்கு நான்கு தடவைகள் உத்தரவிட்டார். அவர்கள் மறுத்துவிட்டதற்காக அவர்களை மிகவும் கேவலமாகத் திட்டினார். பெண்களையும் குழந்தைகளையும் சுடுவதற்குப் பதிலாக அவருடைய படையினரே அவரைச் சுட்டார்கள். படைவீரர்கள் தொழிலாளி வர்க்கத்தின் எதிரியிடம் பெற்ற பயிற்சியில் அடைந்துள்ள மாற்ற முடியாத பழக்கங்கள் இப்படைவீரர்கள் தங்களுடைய தரப்புக்களை மாற்றிக் கொண்ட மறு வினாடியிலேயே மாறிவிடப் போவதில்லை. அதே வீரர்கள் கிலெமான் தொமாவையும் சிரச்சேதம் செய்தார்கள்.

தன் பதவியைப் பற்றி அதிருப்தியடைந்த முன்னாள் தொடக்க நிலை இராணுவ சார்ஜென்ட் (''ஜெனரல்'') கிலெமான் தொமா லுயீ ஃபிலீப்பின் ஆட்சியின் கடைசிக் காலத்தில் குடியரசுவாத செய்தித்தாளான *Le National*[37] அலுவலகத்தில் போலிப் பதிப்பாசிரியர் (gérant responsable) மற்றும் அந்தச் சண்டைக்காரப் பத்திரிகையின் சண்டை-

போடும் அடாவடிக்காரன் என்ற இரட்டைப் பொறுப்பில் வேலைக்குச் சேர்ந்திருந்தார். பிப்ரவரி புரட்சிக்குப் பிறகு *Le National* செய்தித்தாளின் ஆட்கள் அதிகார பீடத்திலிருந்ததால் அவர்கள் இந்தப் பழைய தொடக்கநிலை இராணுவ சார்ஜென்டை ஜூன் மாதப் படுகொலையின் முற்பொழுதில் ஜெனரலாக மாற்றியிருந்தார்கள். ழூல் ஃபாவரைப் போல அவரும் அந்தப் படுகொலைக்குத் திட்டமிட்டவர்களில் ஒருவர், அதன் வஞ்சகமான கொலையாளிகளில் ஒருவராகவும் இருந்தார். பின்னர் அவரும் அவருடைய ஜெனரல் பதவியும் நெடுங் காலம் மறைந்துவிட்டு 1870 நவம்பர் முதல் தேதியன்று மறுபடியும் மேலே வந்தன. அதற்கு முந்திய நாளன்று நகர் மண்டபத்தில் சிறைப் பிடிக்கப்பட்ட பாதுகாப்பு அரசாங்கம் தாங்கள் தகா வழியில் அபகரித்த அதிகாரத்தைப் பாரிஸ் மக்கள் சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுக்கின்ற கம்யூனிடம்[38] ஒப்படைப்பதாக பிளாங்கி, ஃபிலொரான் மற்றும் தொழிலாளர்களின் இதர பிரதிநிதிகளிடம் படாடோபமாக வாக்குறுதி அளித்திருந்தார்கள். அவர்கள் தங்களுடைய வாக்கை நிறைவேற்றுவதற்குப் பதிலாகத் த்ரொஷூவின் பிரெட்டோன்களை—அவர்கள் இப்பொழுது போனபார்ட்டின் கார்சிக்கன்களுக்குப்[39] பதிலாகப் பயன்பட்டார்கள்—பாரிசுக்குள் அனுப்பினார்கள். இத்தகைய நம்பிக்கைத் துரோகத்தினால் தன் பெயரைக் கெடுத்துக் கொள்ள விரும்பாத ஜெனரல் தமிஸியேர் மட்டும் தேசியக் காவற்படையின் தலைமைத் தளபதி பொறுப்பை விட்டு விலகினார். அவருக்குப் பதிலாக கிலெமான் தொமா மறுபடியும் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர் தலைமைப் பொறுப்பிலிருந்த காலம் முழுவதிலும் பிரஷ்யர்களை எதிர்த்து அல்ல, பாரிஸ் தேசியக் காவற்படையை எதிர்த்தே போர் செய்தார். அவர்களுடைய பொதுவான ஆயுதப் பெருக்கத்தை எதிர்த்தார், பூர்ஷ்வாப் படைப்பிரிவுகளைத் தொழிலாளி வர்க்கப் படைப் பிரிவுகளுக்கு எதிராகத் திருப்பினார், த்ரொஷூவின் ''திட்டத்துக்கு'' விரோதமான அதிகாரிகளைக் களையெடுத்தார், கோழைகள் என்ற அவப்பெயரைச் சூட்டிப் பாட்டாளிகளின் படைப்பிரிவுகளைக் கலைத்தார்—இந்தப் படைப்பிரிவுகள் காட்டிய வீரம் அவற்றின் மிக உறுதியான எதிரிகளுக்குக் கூட இப்பொழுது வியப்பைக் கொடுத்திருக்கிறது. பாரிஸ் நகரப் பாட்டாளி

களின் தனிப்பட்ட எதிரி என்ற தன்னுடைய ஜூன் மாதக் கீர்த்தியை மீண்டும் அடைந்ததில் கிலெமான் தொமா மிகவும் பெருமை அடைந்தார். மார்ச் 18ந் தேதிக்குச் சில நாட்களுக்கு முன்பாகத்தான் யுத்த அமைச்சர் லெ ஃபிலோவிடம் ''பாரிஸ் canaille*இன் la fine fleur (மிகச் சிறந்த பகுதி)யை ஒழித்துக் கட்டுவதற்குத்'' தன்னுடைய சொந்தத் திட்டத்தை அவர் சமர்ப்பித்திருந்தார். வினுவாவின் தோல்விக்குப் பிறகு அவர் நடவடிக்கைக் களத்தில் அமெச்சூர் ஒற்றராக மறுபடியும் தோன்றுகிறார். வேல்ஸ் இளவரசி லண்டனுக்கு வருகையளித்த பொழுது நசுங்கிச் செத்த மக்களுக்கு அந்த இளவரசி எந்த அளவுக்குப் பொறுப்போ அதே அளவுதான் கிலெமான் தொமா மற்றும் லெகோன்ட் கொல்லப்பட்டதற்கு மத்தியக் கமிட்டியும் பாரிஸ் நகரத் தொழிலாளிகளும் பொறுப்பாவர்.

வெண்டோம் சதுக்கத்தில் நிராயுதபாணியான பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்பது கட்டுக் கதையே. தேசிய சபையில் தியேரும் ''நிலவுடைமையாளர் சபையின்'' பிரதிநிதிகளும் இக்குற்றச் சாட்டைப் பிடிவாதமாகப் புறக்கணித்துவிட்டு அதைப் பரப்புகின்ற பொறுப்பை முற்றிலும் ஐரோப்பியப் பத்திரிகை உலகத்தின் கடைத்தர ஊழியர்கள் மன்றத்திடம் ஒப்படைத்தார்கள். ''ஒழுங்கு முறையாளர்கள்'', பாரிசின் பிற்போக்காளர்கள் மார்ச் 18ந் தேதி வெற்றியைக் கண்டு நடுங்கினார்கள். பொதுஜனத் தீர்ப்பு முடிவில் வரப்போகிறது என்பதற்கு அது சமிக்கையாக இருந்தது. 1848 ஜூன் நாட்களிலிருந்து 1871 ஜனவரி 22ந் தேதி[40] வரை தங்களால் கொல்லப்பட்ட நபர்களின் ஆவிகள் அவர்களுக்கு முன்னால் தோன்றின. அவர்களடைந்த பீதியே அவர்களுக்கு ஒரே தண்டனையாயிற்று. போலீஸ்காரர்கள் நிராயுதபாணியாக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக இவர்கள் வெர்சேய்க்குப் பத்திரமாக பின்வாங்கிப் போவதற்கு உதவியாக பாரிஸ் கதவுகள் அகலமாகத் திறந்து வைக்கப்பட்டன. ''ஒழுங்குமுறையாளர்களுக்கு'' ஆபத்தேற்படுத்தாமல் விட்டதுடன் அவர்கள் ஒன்றுதிரளவும் பாரிசின் மையத்திலேயே ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களை எதிர்ப்

* —இழிந்த கும்பல்.—ப-ர்.

பின்றிக் கைப்பற்றவும் அனுமதிக்கப்பட்டனர். மத்தியக் கமிட்டி காட்டிய இரக்கத்தை, ஆயுதமேந்திய தொழிலாளர் களின் பெருந்தன்மையை—''ஒழுங்குமுறைக் கட்சியின்'' பழக்க வழக்கங்களுக்கு இது முற்றிலும் வேறுபட்டிருந்தது— உணர்வுபூர்வமான பலவீனத்தின் சமிக்கைகள் என்று அவர் கள் தவருகக் கருதினர்கள். ஆகவேதான் வினுவா தன் னுடைய பீரங்கிகள் மற்றும் பல்குழல் துப்பாக்கிகளின் உதவியோடு செய்யத் தவறியதை ஆயுதமில்லாத ஆர்ப்பாட் டம் என்ற போர்வையில் முயற்சிப்பதற்கு அவர்கள் அசட்டுத் தனமாகத் திட்டம் போட்டார்கள். மார்ச் 22ந் தேதி யன்று ''பெருந்தனக்காரர்களின்'' கலகக் கும்பல் பணக் காரர்கள் வசிக்கும் பகுதியிலிருந்து புறப்பட்டது. அந்தக் கூட்டத்திலிருந்தவர்கள் பல விதமான petits crevés*, பேர ரசில் மிகக் கேவலமான பெயரெடுத்த எக்கெரேன், கெட் லொகோன், அன்ரீ டெ பேன் மற்றும் இதரர்கள் அதற்குத் தலைமை தாங்கினர்கள். அமைதியான ஆர்ப்பாட்டம் என்ற பேடித்தனமான பொய்ச் சாக்கைச் சொல்லிக் கொண்டு இர கசியமாக ஆயுதங்களை ஏந்திவந்த இக்கும்பல் அணிவகுத்துச் செல்லத் தொடங்கியது. தாங்கள் போகும் வழியில் தென்பட்ட தேசியக் காவற்படையின் உதிரியாக வந்த ரோந்துப் படையினரையும் காவலர்களையும் அவமதித்து அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறித்தது. டெ ல பே வீதியிலிருந்து இறங்கிவந்த பொழுது ''மத்தியக் கமிட்டி ஒழிக! கொலைகாரர்கள் ஒழிக! தேசிய சபை வாழ்க!'' என்று கத்திக் கொண்டு அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படையை ஊடுருவிச் சென்று வெண்டோம் சதுக்கத்தில் தேசியக் காவற்படையின் தலைமையகத்தின் மீது திடீர்த் தாக்குதல் நடத்த முயற்சி செய்தது. அவர்கள் கைத்துப் பாக்கிகளைச் சுட்டதும் வழக்கம் போல sommations[41] (இங் கிலாந்திலுள்ள கலகச் சட்டத்துக்குச் சமமாக பிரான்சில் பின்பற்றப்படுவது) செய்யப்பட்டன; அவை பயனளிக்காத தனுல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி தேசியக் காவற் படை ஜெனரல்** உத்தரவு கொடுத்தார். ஜோஷுவாவின் பேரிகையைக் கேட்டதும் ஜெரிக்கோவின்[42] சுவர்கள்

* —அற்பர்கள்.—ப-ர்.

** —பெர்ழெரே.—ப-ர்.

இடிந்து விழுந்த மாதிரியான அதே விளைவு தங்களுடைய ''கௌரவத்தைக்'' காட்டியதும் பாரிஸ் புரட்சியின் மீது ஏற்படுமென்று நம்பிய அசட்டுக் கோமாளிகள் ஒரு வேட்டுச் சத்தம் கேட்டவுடன் தறி கெட்டு ஓடினார்கள். அவர்கள் ஓடிப் போன பிறகு அங்கே கொல்லப்பட்ட இரண்டு தேசியக் காவற்படையினருடைய உடல்களும் அதிகமாகக் காய மடைந்த ஒன்பது நபர்களின் உடல்களும் (அதில் ஒருவர் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்*) கிடந்தன. அவர்களுடைய ''அமைதியான'' ஆர்ப்பாட்டத்தின் ''நிராயுதபாணியான'' தன்மையை நிரூபிப்பதைப் போல அந்த இடம் முழுவதும் கைத்துப்பாக்கிகள், கைவாள்கள், மூங்கில் வாள்கள் ஆகியன சிதறிக் கிடந்தன. ரோம் நகரத்தின் மீது பிரெஞ்சுத் துருப்புகள் குற்றவாளித்தனமான முறையில் படையெடுத்ததைக் கண்டித்து தேசியக் காவற்படை 1849 ஜூன் 13ந் தேதியன்று உண்மையிலேயே அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்த பொழுது ஒழுங்குமுறைக் கட்சியில் அன்றைய ஜெனரலாக இருந்த ஷன்கர்னியே ஆயுதமில்லாத அந்த நபர்களைச் சுட்டுக் கொல்லும்படி, வாளினல் வெட்டும்படி, குதிரைகளின் குளம்புக் கால்களினல் மிதித்து நசுக்கும்படி எல்லாத் திசைகளிலிருந்தும் துருப்புகளை அனுப்பினர். அதற்காக தேசிய சபை அவரைப் பாராட்டியது; குறிப்பாக தியேர் அவரை சமூகத்தின் இரட்சகர் என்று பாராட்டினர். அன்று பாரிசில் முற்றுகை நிலை அறிவிக்கப்பட்டது. டியுஃபோர் புதிய ஒடுக்குமுறைச் சட்டங்கள் பலவற்றை சட்டசபையில் அவசரமாக நிறைவேற்றினர். புதிய கைதுகள், புதிய தடைகள், புது பயங்கர ஆட்சி ஏற்பட்டது. ஆனல் ''கீழ் வர்க்கத்தினருக்கு'' இப்படி நடந்து கொள்ளத் தெரியாது. 1871இன் மத்தியக் கமிட்டி இந்த ''அமைதியான'' ஆர்ப்பாட்டத்தின் வீரபுருஷர்களை அலட்சியமாக ஒதுக்கியது; ஆகவே அவர்கள் இரண்டு நாட்களுக்குப் பிறகு அட்மிரல் ஸெஸ்ஸேயின் தலைமையில் ஆயுதமேந்திய ஆர்ப்பாட்டத்துக்குத் திரளுவதற்கு உதவியது; அதன் உச்ச கட்டமே வெர்சேயை நோக்கி முன்னேறிய பிரபலமான நிகழ்ச்சி. மொன்மார்ட்டர் மீது தியேரின் கொள்ளைக்காரத்தனமான முயற்சியில் ஆரம்பமாகிய உள்நாட்டுப் போரைத் தொடர்வதற்கு மத்தியக் கமிட்டி

* மல்ஜூர்னல்.—ப-ர்.

விரும்பவில்லை. ஆனால் இந்தச் சமயத்தில் அவர்கள் ஒரு தீர்மானமான தவறைச் செய்தார்கள்; அப்பொழுது முற்றிலும் உதவியற்ற நிலைமையிலிருந்த வெர்சேய் மீது உடனே படையெடுத்துச் சென்று தியேரும் ''நிலவுடைமையாளர் சபையின்'' பிரதிநிதிகளும் செய்து கொண்டிருந்த சூழ்ச்சிகளுக்கு முடிவு கட்டியிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக கம்யூனுக்குத் தேர்தல் நடைபெற்ற மார்ச் 26ந் தேதியன்று அத்தேர்தலில் தன்னுடைய பலத்தைக் காட்டுவதற்கு ஒழுங்குமுறைக் கட்சி மறுபடியும் அனுமதிக்கப்பட்டது. பிறகு பாரிசின் நகர மன்றங்களில் ''ஒழுங்குமுறையாளர்கள்'' பெருந்தன்மை மிக்க வெற்றியாளர்களிடம் உரிய நேரத்தில் உங்களை ஒழித்துக் கட்டுவோம் என்று இதயங்களில் சபதங்களை முணுமுணுத்தாலும் நாகரிகமான முறையில் சமரச வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

இப்பொழுது பதக்கத்தின் மறுபக்கத்தைப் பாருங்கள். தியேர் பாரிசுக்கு எதிரான இரண்டாவது படையெடுப்பை ஏப்ரல் மாத ஆரம்பத்தில் தொடங்கினர். வெர்சேய்க்குக் கொண்டுவரப்பட்ட பாரிஸ் கைதிகளின் முதல் பகுதியினர் மிருகத்தனமான கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். எர்னேஸ்ட் பிகார் கால்சட்டைப் பைகளில் கைகளை நுழைத்துக் கொண்டு ஏளனம் செய்தபடியே நடந்தவாறிருந்தார். திருவாட்டிகள் தியேரும் ஃபாவரும் கௌரவமான(?)சீமாட்டிகள் புடை சூழ பால்கனியில் தோன்றி வெர்சேய் கும்பலின் கொடூரமான செயல்களைப் பாராட்டினர்கள். போர்முனையில் கைது செய்யப்பட்ட வீரர்கள் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டார்கள். நமது வீரமிக்க நண்பர், இரும்புப் பட்டறைக்காரர், ஜெனரல் டியுவால் எத்தகைய விசாரணையுமில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்டார். இரண்டாவது பேரரசின் களியாட்டங்களில் வெட்கமில்லாமல் பங்கு கொண்டு மிகவும் கெட்ட பெயரெடுத்த அவருடைய மனைவியின் ஆசைநாயகனை காலிஃபே தேசியக் காவற்படையின் ஒரு சிறு பிரிவு முழுவதையுமே—அந்தப் பிரிவின் காப்டன், லெப்டினென்ட் உட்பட—கொலை செய்துவிட்டதாகவும் அவருடைய படையினர் எதிர்பாராத நேரத்தில் அவர்களைப் பிடித்து ஆயுதத்தைப் பறித்துவிட்டதாகவும் ஒரு அறிவிப்பில் பெருமையாகக் கூறிக் கொண்டார். கம்யூன்வாதிகளின் அணியில் கைது செய்யப்பட்ட ஒவ்வொரு போர்வீரனை

யும் சுட்டுக் கொல்லும்படி பொதுப்படையான உத்தரவு கொடுத்த ஓடுகாலி வினுவாவுக்குத் கிராண்ட் கிராஸ் வீரப் பதக்கம் கொடுத்துச் சிறப்பித்தார். 1870 அக்டோபர் 31ந் தேதியன்று தேசிய தற்காப்பு அரசாங்கத்தின்[43] உறுப்பினர்களைப் பாதுகாத்த உயர்பண்பும் பெருந்தகைமையும் கொண்ட ஃபிலொரானை வஞ்சகமான முறையில் கசாப்புக் கடைக்காரனைப் போல வெட்டிக் கொன்றதற்காக டெமரே என்ற காவலாளிக்கு வீரப் பதக்கம் அளிக்கப்பட்டது. இந்தக் கொலையின் ''ஊக்கமளிக்கின்ற விவரங்களைத்'' தியேர் தேசிய சபையில் வெற்றிப் பெருமிதத்தோடு எடுத்துக் கூறினார். திமூரின் பாத்திரத்தை நடிக்க அனுமதிக்கப்பட்ட நாடாளுமன்றச் சித்திரக் குள்ளனுடைய இறுமாப்புடன் காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி அளிப்பது உள்பட நாகரிகமான போரில் தரப்பட வேண்டிய ஒவ்வொரு உரிமையையும் அவருடைய அற்பத்தனத்தை எதிர்த்த கலகக்காரர்களுக்கு மறுத்தார். புலியின் இயல்புணர்ச்சிகளை நிறைவேற்றும்படி ஒரு குரங்குக்குச் சொற்ப காலத்துக்கு அனுமதி கொடுத்தால் என்ன நடக்கும் என்பதை வொல்தெர் முன்னறிந்து கூறியுள்ளார்.[44] அந்தக் குரங்கைக் காட்டிலும் இது அருவருப்பானதல்ல. (பிற்சேர்க்கையின்* 357ம் பக்கத்தைப் பார்க்கவும்[45].)

ஏப்ரல் 7ந் தேதியன்று கம்யூன் வெளியிட்ட ஆணை திருப்பித் தாக்கும்படி உத்தரவிட்டு ''வெர்சேய் கொள்ளைக்காரர்களின் காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு எதிராக பாரிசைப் பாதுகாப்பது, கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் பழிவாங்க வேண்டியது'' கடமை என்று அறிவித்தது. இதற்குப் பிறகு தியேர் கைதிகளைக் காட்டுமிராண்டித்தனமாக நடத்துவதை நிறுத்தவில்லை என்பதோடு தன்னுடைய செய்தி அறிக்கைகளில் அவர்களைப் பற்றி அவமதிப்பாக எழுதினார்: ''இவ்வளவு அதிக அளவுக்குத் தரங்கெட்ட ஜனநாயகத்தின் தரங்கெட்ட முகங்களை நேர்மையான நபர்களின் புண்பட்ட பார்வைகள் ஒருபோதும் பார்த்ததில்லை''—தியேர் மற்றும் அவருடைய மந்திரிசபைக் கும்பலைச் சேர்ந்த மனிதர்களைப் போல நேர்மையானவர்கள். எனினும் கைதிகளைச் சுட்டுக் கொல்வது

* பிரான்சில் உள்நாட்டுப் போர் என்ற நூலின் பிற்சேர்க்கை.—ப-ர்.

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. எதிர் நடவடிக்கை களைப் பற்றிக் கம்யூன் வெளியிட்ட அரசாணை வெறும் பயமுறுத்தல்தான், தேசியக் காவற்படையின் மாறுவேடத்தில் பாரிசில் வெடி குண்டுகளோடு பிடிபட்ட தங்களுடைய காவலாளி ஒற்றர்கள் கூட மன்னிக்கப்படுகிறார்கள் என்பதைத் தியேரும் அவருடைய டிசம்பரிஸ்ட் ஜெனரல்களும் உணர்ந்தவுடன் கைதிகளைக் கூட்டம் கூட்டமாகச் சுட்டுக் கொல்வது மறுபடியும் தொடங்கி எந்த இடையீடுமில்லாமல் கடைசி வரை நடைபெற்றது. தேசியக் காவற்படையினர் மறைந்து கொண்ட வீடுகளைக் காவலர்கள் சூழ்ந்து கொண்டு அந்த வீடுகளில் பெட்ரோலை (இந்தப் போரில் இது இங்கே முதன் முறையாக உபயோகப்படுத்தப்பட்டது) ஊற்றி நெருப்பு வைத்தார்கள். பிறகு கருகிப் போன உடல்கள் டெர்ன் எனும் நகரப் பகுதியில் பத்திரிகையாளர்களின் மருத்துவ உதவிக் குழுவினரால் வெளியே கொண்டு வரப்பட்டன. தேசியக் காவற்படையைச் சேர்ந்த நால்வர் ஏப்ரல் 25ந் தேதியன்று பெல்-எபின் என்ற இடத்தில் குதிரைத் துருப்புகளிடம் சரணடைந்தார்கள். காலிஃபேயின் தகுதியுள்ள ஊழியனை காப்டன் அவர்களை ஒருவருக்குப் பின் ஒருவராகச் சுட்டு வீழ்த்தினான். செத்துப் போய்விட்டதாகக் கருதப்பட்ட நால்வரில் ஷெஃபெர் என்ற நபர் பாரிஸ் எல்லைக்கு ஊர்ந்து சென்றார், கம்யூனால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷனுக்கு முன்னால் இந்த உண்மையைத் தெரிவித்தார். இந்தக் கமிஷனுடைய அறிக்கையைப் பற்றி தொலேன் யுத்த அமைச்சரான லெஃபிலோவிடம் கேள்வி கேட்டபொழுது ''நிலவுடைமையாளர் சபையின்'' பிரதிநிதிகள் சத்தம் போட்டு அவருடைய குரலை அமுக்கிவிட்டார்கள், லெஃபிலோ அதற்குப் பதிலளிக்கக் கூடாது என்று தடுத்தார்கள். அவர்களுடைய ''புகழ்மிக்க'' இராணுவத்தின் செயல்களைப் பற்றிப் பேசுவது அதை அவமதிப்பது போலும். முலேன்-ஸக்கே என்ற இடத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது பிடிபட்ட கம்யூன்வாதிகளைத் துப்பாக்கி ஈட்டிகளால் குத்திக் கொன்றதையும் கிளமாரில் நடைபெற்ற மொத்த குண்டுவீச்சுகளையும் பற்றிச் சிறிதும் பொறுப்பில்லாத முறையில் தியேர் வெளியிட்ட அறிக்கைகள் லண்டன் *Times* பத்திரிகையின்[46] நரம்புகளுக்குக் கூட (அது அதிகமான கூருணர்ச்சியுடையது அல்ல) அதிர்ச்சியைக் கொடுத்

தன. ஆனால் பாரிஸ் நகரத்தின் மீது குண்டு வீசித் தாக்கியவர்கள், அந்நியப் படையெடுப்பின் பாதுகாப்பில் அடிமை எசமானர்களுடைய கலகத்தைத் தூண்டியவர்கள் நடத்திய பூர்வாங்கமான கொடுமைகளை விவரிப்பது இன்று நகைப்புக்குரியதே. இந்தப் பயங்கரங்கள் அனைத்துக்கும் நடுவே மாபெரும் பொறுப்பு தன்னுடைய சிறிய தோள்களை அழுத்திக் கொண்டிருப்பதைப் பற்றி நாடாளுமன்றத்தில் பேசியனவற்றை மறந்து தியேர் தன்னுடைய அறிக்கைகளில் l'Assemblée siège paisiblement (சபை நடவடிக்கைகள் தொடர்ந்து அமைதியாக நடைபெற்றன) என்று பீற்றிக் கொள்கிறார். ஒரு சமயத்தில் தனது டிசம்பரிஸ்ட் ஜெனரல்களுடனும் மறு சமயத்தில் ஜெர்மன் இளவரசர்களுடனும் தொடர்ச்சியாக விருந்து சாப்பிட்டுக் கொண்டு லெகோன்ட் மற்றும் கிலெமான் தொமாவினுடைய ஆவிகளினால் கூட தன்னுடைய ஜீரண சக்தி பாதிக்கப்படவில்லை என்பதை நிரூபிக்கிறார்.

## III

மார்ச் 18ந் தேதியன்று காலையில் "Vive la Commune!"* என்ற இடிமுழக்கத்துடன் பாரிஸ் விழித்தெழுந்தது. முதலாளி வர்க்கத்தின் மனதை மிகவும் மருட்டுகின்ற ஸ்பிங்க்ஸான கம்யூன் என்றால் என்ன?

"ஆளும் வர்க்கத்தினருடைய தோல்விகளுக்கும் துரோகங்களுக்கும் நடுவில் பொது விவகாரத்தை நெறிப்படுத்துகின்ற அதிகாரத்தைத் தங்களுடைய கைகளில் எடுத்துக் கொண்டு நிலைமையைக் காப்பாற்ற வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதைப் பாரிஸ் பாட்டாளிகள் புரிந்து கொண்டார்கள்... அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றி தங்களுடைய சொந்தத் தலைவிதிகளை நிர்ணயிப்பவர்களாகத் தங்களை அமைத்துக் கொள்வது தங்களுடைய தவிர்க்க முடியாத கடமையும் தனிமுதலான உரிமையுமாகும் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்" என்று மத்தியக் கமிட்டி மார்ச் 18ந் தேதி அறிக்கையில் கூறியது.

ஆனால் ஏற்கெனவே இருந்து வருகின்ற அரசு இயந்திரத்தைத் தொழிலாளி வர்க்கம் வெறுமனவில் எடுத்துக் கொண்டு அதைத் தன்னுடைய சொந்த நோக்கங்களுக்கு உபயோகிக்க முடியாது.

* —"கம்யூன் வாழ்க!"—ப-ர்.

முறைப்படியான, படிநிலையான வேலைப் பிரிவினைத் திட்டத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்ட நிரந்தரமான இராணுவம், போலீஸ், அதிகார வர்க்கம், மத போதகர்கள் மற்றும் நீதித்துறை என்ற எங்கும் நிறைந்த உறுப்புக்களைக் கொண்ட மத்தியப்படுத்தப்பட்ட அரசு அதிகாரம் எதேச்சாதிகார முடியாட்சிக் காலத்திலிருந்து தொடங்கி, புதிதாகத் தோன்றிய பூர்ஷ்வா சமூகம் நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் பலமிக்க ஆயுதமாக அதற்குப் பயன்பட்டு வந்தது. ஆனால் இன்னும் பலவிதமான எல்லா மத்தியக் காலக் குப்பைகள் — நிலப்பிரபுத்துவச் சேவைகள், ஸ்தல உரிமைகள், நகராட்சி மற்றும் கில்டு ஏகபோகங்கள், மாநில அரசியலமைப்பு விதிகள் ஆகியவற்றினால் அதன் வளர்ச்சி அடைபட்டிருந்தது. சென்ற காலத்தின் எச்சங்களாகிய இவை அனைத்தையும் 18ம் நூற்றாண்டின் பிரெஞ்சுப் புரட்சி என்ற மாபெரும் துடைப்பம் பெருக்கித் தள்ளியது. அதே சமயத்தில் முதல் பேரரசின் கீழ் எழுப்பப்பட்ட நவீன அரசுக் கட்டிடம் என்ற மேற்கட்டிடத்துக்குக் கடைசித் தடைகளைச் சமூக நிலத்திலிருந்து அகற்றியது. நவீன பிரான்சுக்கு எதிராக பழைய அரை நிலப்பிரபுத்துவ ஐரோப்பா நடத்திய கூட்டணி யுத்தங்களில் பிறந்த குழந்தையான முதலாம் பேரரசில் அந்தக் கட்டிடம் அமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஏற்பட்ட ஆட்சிகளின் போது நாடாளுமன்றக் கட்டுப்பாட்டின், அதாவது உடைமை வர்க்கங்களின் நேரடியான கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டிருந்த அரசாங்கம் கணக்கிட முடியாத தேசியக் கடன்கள் மற்றும் நசுக்குகின்ற வரிகளின் சேமக்கலமாக ஆனது மட்டுமல்லாமல், பணம், பதவி, செல்வாக்கு என்ற தவிர்க்க முடியாத வசீகர சக்தியைக் கொண்டிருந்தபடியால் ஆளும் வர்க்கத்தின் போட்டியிடுகின்ற கோஷ்டிகளுக்கும் துர்ச்சாகசக்காரர்களுக்கும் இடையில் தகராறுக்குரிய பிரச்சினையாக மாறியது மட்டுமல்லாமல், அதே சமயத்தில் சமூகத்தின் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப அதன் அரசியல் குணம்சமும் மாற்றமடைந்தது. மூலதனத்துக்கும் உழைப்புக்குமிடையே வர்க்க முரண்பாட்டை நவீனத் தொழில் துறையின் முன்னேற்றம் வளர்த்து விரிவுபடுத்தித் தீவிரமாக்கிய அதே வேகத்தில் அரசு அதிகாரம் உழைப்பின் மீதான மூலதனத்தின் தேசிய அதிகாரம், சமூக அடிமைத்தனத்துக்

காக அமைக்கப்பட்ட சமுதாய சக்தி, வர்க்க எதேச்சாதிகாரத்தின் இயந்திரம் என்ற குணும்சத்தை மென்மேலும் அடைந்தது. வர்க்கப் போராட்டத்தின் முற்போக்கான கட்டத்தைக் குறிக்கின்ற ஒவ்வொரு புரட்சிக்குப் பிறகும் அரசு அதிகாரத்தின் அப்பட்டமான ஒடுக்குமுறைத் தன்மை மென்மேலும் அழுத்தமாக எடுத்துக்காட்டப்படுகிறது. 1830ம் வருடப் புரட்சி ஆட்சியதிகாரத்தை நிலவுடைமையாளர்களிடமிருந்து முதலாளிகளுக்கு மாற்றிய பொழுது அதை தொழிலாளி வர்க்கத்தின் அதிகத் தொலே தூரத்திலுள்ள எதிரி என்பதிலிருந்து நேரடியான எதிரி என்ற நிலேமைக்கு மாற்றியது. பிப்ரவரி புரட்சியின் பெயரால் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிய பூர்ஷ்வாக் குடியரசுவாதிகள் அதை ஜூன் படுகொலேகளுக்கு உபயோகித்தார்கள். அதன் மூலம் ''சமூகக்'' குடியரசு என்பது தொழிலாளி வர்க்கத்தினரை சமூக அடிமைப்படுத்தலே உறுதி செய்கின்ற குடியரசுதான் என்று அவர்களே நம்பவைத்தார்கள், நிர்வாகத்தின் பொறுப்புக்களேயும் ஊதியங்களேயும் பூர்ஷ்வாக் ''குடியரசுவாதிகளிடம்'' ஆபத்தில்லாமல் விட்டுவிடலாம் என்று முதலாளி வர்க்கம் மற்றும் நிலவுடைமை வர்க்கத்தின் முடியாட்சி ஆதரவுப் பகுதியினரை நம்பவைத்தார்கள். ஆனுல் ஜூன் மாதத்தில் அவர்கள் செய்த ஒரே வீரச் செயலுக்குப் பிறகு பூர்ஷ்வாக் குடியரசுவாதிகள் முன்னணியிலிருந்த ஒழுங்குமுறைக் கட்சியின்—உற்பத்தி செய்கின்ற வர்க்கங்களுக்கு எதிராக இப்பொழுது பகிரங்கமாகக் காட்டிய பகைமையில் உற்பத்தி விளேவுகளே ஒதுக்கிக் கொள்ளும் வர்க்கத்தின் எல்லாவிதமான போட்டிக் குழுக்களும் கட்சிகளும் அடங்கிய கூட்டணி அது பின்னணிக்கு வரும்படியாயிற்று. அவர்களுடைய கூட்டுப் பங்கு நிர்வாகத்துக்குப் பொருத்தமான வடிவமே லுயீ போனப்பார்ட்டை ஜனுதிபதியாகக் கொண்ட நாடாளுமன்றக் குடியரசு. அவர்களுடைய ஆட்சி என்பது ''இழிவான கூட்டத்தின்'' மீது வெளிப்படையான வர்க்க ஒடுக்கமுறையும் தீவிரமான அவமதிப்புமே. தியேர் கூறியதைப் போல, நாடாளுமன்றக் குடியரசு ''அவர்களே (ஆளும் வர்க்கத்தின் பல்வேறு உட்குழுக்களே) சிறிதளவும் பிரிக்கவில்லே'' என்ருல் அந்த வர்க்கத்துக்கும் அதன் தனித்த அணிகளுக்கு வெளியே இருந்த மொத்த சமூகத் தொகுதிக்கும் இடையே ஒரு பள்ளத்தை ஏற்படுத்தியது. முந்திய ஆட்சி

முறைகளின் போது அரசு அதிகாரத்தை இன்னும் ஓரளவுக்குத் தடுத்துக் கொண்டிருந்த அவர்களுடைய சொந்தப் பிரிவினைகளின் கட்டுத்தளைகள் அவர்கள் ஒன்று சேர்ந்த படியால் அகற்றப்பட்டன; பாட்டாளி வர்க்கக் கொந்தளிப்பு பயமுறுத்திய காரணத்தால் அவர்கள் இப்பொழுது அரசு அதிகாரத்தை உழைப்புக்கு எதிராக மூலதனத்தின் தேசிய யுத்தக் கருவியாக ஈவிரக்கமின்றியும் அட்டகாசமாகவும் உபயோகித்தார்கள். ஆனால் உற்பத்தி செய்கின்ற பெருந்திரளான மக்களுக்கு எதிராக அவர்கள் இடைவிடாமல் நடத்திய யுத்தத்தில், தொடர்ச்சியாக அதிகரிக்கின்ற ஒடுக்குமுறை அதிகாரங்களை நிர்வாகத்திடம் கொடுக்க வேண்டியிருந்தது மட்டுமல்லாமல் அதே சமயத்தில் தங்களுடைய சொந்த நாடாளுமன்றக் கோட்டையான தேசிய சபை, நிர்வாகத்தை எதிர்த்துத் தற்காப்புக்கு தன்னுடைய சொந்தச் சாதனங்களை எல்லாம் ஒவ்வொன்றாகக் கைவிடவும் வேண்டியிருந்தது. லுயீ போனப்பார்ட்டின் உருவத்திலிருந்த நிர்வாகம் அவர்களை வெளியே விரட்டியது. ஒழுங்குமுறைக் கட்சிக் குடியரசின் இயற்கையான குழந்தையே இரண்டாம் பேரரசு.

Coup d'étatஐத் தன்னுடைய பிறப்புச் சான்றிதழாகவும் பொது வாக்குரிமையைத் தனக்கு அங்கீகாரமாகவும் வாளைத் தன்னுடைய செங்கோலாகவும் வைத்திருந்த பேரரசு மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தில் நேரடியாக ஈடுபடாத ஏராளமான வெகுஜன உற்பத்தியாளர்களை, விவசாயிகளைச் சார்ந்திருப்பதாகக் கூறியது. நாடாளுமன்றவாதத்தையும் அதோடு சேர்த்து உடைமை வர்க்கங்களிடம் அரசாங்கத்தின் ஒளிவுமறைவில்லாத அடிமைத்தனத்தையும் நொறுக்கித் தொழிலாளி வர்க்கத்தைக் காப்பாற்றுவதாகக் கூறியது. தொழிலாளி வர்க்கத்தின் மீது உடைமை வர்க்கங்களின் பொருளாதார ஆதிக்கத்தை ஆதரிப்பதன் மூலம் உடைமை வர்க்கங்களைக் காப்பாற்றுவதாகக் கூறியது. கடைசியாக தேசியக் கௌரவம் என்ற மாயத்தோற்றத்தை எல்லோருக்குமாகப் புத்துயிர் கொடுப்பதன் மூலம் எல்லா வர்க்கங்களையும் ஒன்றுபடுத்துவதாகக் கூறியது. உண்மை என்னவென்றால் முதலாளி வர்க்கம் ஏற்கெனவே தோற்று ஆனால் தொழிலாளி வர்க்கம் நாட்டை ஆட்சி செய்யும் தகுதியை இன்னும் பெரு

திருக்கின்ற நேரத்தில் பேரரசு ஒன்றே சாத்தியமான அரசு வடிவமாகும். சமூகத்தின் இரட்சகர் என்று உலக முழுவதிலும் அதைப் பாராட்டினார்கள். அதன் ஆதிக்கத்தில் அரசியல் கவலைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட முதலாளித்துவ சமூகம் தானே எதிர்பார்க்காத வளர்ச்சியை அடைந்தது. அதன் தொழில்துறையும் வர்த்தகமும் மாபெரும் அளவில் வளர்ச்சி அடைந்தன. நிதித்துறை மோசடி தனது பொதுக் களியாட்டங்களை நடத்தியது. மோசடியில் கிடைத்த பகட்டான, கவர்ச்சிகரமான, தரங்கெட்ட போகப் பொருள்களை வெட்கமில்லாமல் வெளியே காட்டுவதன் மூலம் பெருந்திரளான மக்களின் வறுமை விளம்பரப்படுத்தப்பட்டது. அரசு அதிகாரம் சமூகத்துக்கு மேலே மிதந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது, ஆனால் அதே சமயத்தில் அதுவே அந்தச் சமூகத்தின் மாபெரும் அவதூறாகவும் அதன் அனைத்து ஊழல்களின் சேமக் கலமாகவும் இருந்தது. அதன் உளுத்துப் போன தன்மையும் அது காப்பாற்றிய சமூகத்தின் உளுத்துப் போன தன்மையும் அந்த ஆட்சி முறையின் தலைமையிடத்தைப் பாரிசிலிருந்து பெர்லினுக்கு மாற்ற வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த பிரஷ்யாவின் ஈட்டியினால் அம்பலமாக்கப்பட்டன. புதிதாகப் பிறந்து கொண்டிருந்த முதலாளித்துவ சமூகம் நிலப்பிரபுத்துவத்திலிருந்து தன்னுடைய சொந்த விடுதலைக்கு ஒரு கருவியாகத் தோற்றுவிக்கத் தொடங்கியிருந்த அரசு அதிகாரத்தின் சோரத்தனமான, இறுதி நிலையான வடிவமாகப் பேரரசு முறை இருக்கிறது; நன்கு வளர்ச்சி அடைந்த முதலாளி வர்க்க சமூகம் உழைப்பை மூலதனம் அடிமைப்படுத்துவதற்குரிய கருவியாக முடிவில் அதை மாற்றிவிடுகிறது.

பேரரசின் நேரடியான எதிர்நிலையே கம்யூன். பாரிஸ் பாட்டாளி வர்க்கம் ''சமூகக் குடியரசு'' என்ற முழக்கத்துடன் பிப்ரவரி புரட்சியைக் கொண்டு வந்தது. எந்தக் குடியரசு வர்க்க ஆதிக்கத்தின் முடியாட்சி வடிவத்தை மட்டுமல்லாமல் வர்க்க ஆதிக்கத்தையுமே அகற்ற வேண்டுமோ, அந்தக் குடியரசைப் பற்றிய தெளிவில்லாத விருப்பத்தை அந்த முழக்கம் எடுத்துக் கூறியது. அந்தக் குடியரசின் நேரான வடிவமே கம்யூன்.

பழைய அரசாங்க அதிகாரத்தின் தலைமையான இடமாகவும் அதே சமயத்தில் பிரெஞ்சுத் தொழிலாளி வர்க்கத்

தின் சமூகக் கோட்டையுமாக இருந்த பாரிஸ், பேரரசினுல் தியேர் மற்றும் அவருடைய ''நிலவுடைமையாளர் சபையின்'' பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பழைய அரசாங்க அதிகாரத்தை மறுபடி ஏற்படுத்துவதற்கும் நிரந்தரமாக்குவதற்கும் அவர்கள் செய்த முயற்சிக்கு எதிராக ஆயுதபாணியாகக் கிளர்ந்தெழுந்தது. பாரிஸ் முற்றுகையின் விளைவாக இராணுவத்தை ஒழித்துவிட்டு அதனிடத்தில் உழைக்கும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தேசியக் காவற்படையை ஏற்படுத்தியிருந்ததனுல் அது எதிர்த்து நிற்க முடிந்தது. இந்த உண்மை இப்பொழுது ஒரு ஒழுங்குமுறையாக மாற்றப்படும். ஆகவே நிரந்தர இராணுவத்தை ஒழித்துவிட்டு அதனிடத்தில் ஆயுதமேந்திய மக்களின் படையை ஏற்படுத்துவதைக் கம்யூன் முதல் ஆணையாக வெளியிட்டது.

பாரிஸ் நகரத்தின் பல்வேறு வட்டங்களில் பொது வாக்குரிமையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களைக் கொண்டு கம்யூன் அமைக்கப்பட்டிருந்தது. இக்கவுன்சிலர்கள் வட்டங்களுக்குப் பொறுப்பாக இருப்பார்கள். அந்த வட்டங்கள் அவர்களை எந்த நேரத்திலும் திருப்பியழைக்க முடியும். அவர்களில் பெரும்பான்மையினர் தொழிலாளர்களாக அல்லது தொழிலாளி வர்க்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருந்தது இயற்கையே. கம்யூன் நாடாளுமன்ற அமைப்பல்ல, அது செயல்படுகின்ற, ஒரே சமயத்தில் நிர்வாகப் பொறுப்பையும் சட்டமியற்றும் பொறுப்பையும் கொண்ட அமைப்பு. போலீஸ் மத்திய அரசாங்கத்தின் கருவியாக நீடிப்பதற்குப் பதிலாக அதன் அரசியல் சார்பான பணிகள் உடனே நிறுத்தப்பட்டன; கம்யூனுக்குப் பொறுப்பான, கம்யூனுல் எந்த நேரத்திலும் மாற்றப்படக் கூடிய உறுப்பாக அது மாற்றப்பட்டது. நிர்வாகத்தின் மற்ற துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் இதே நிலைதான். கம்யூனுடைய உறுப்பினர்களிலிருந்து கீழேயுள்ள அனைவருடைய பொதுச் சேவைக்கும் தொழிலாளியின் ஊதியம் கொடுக்கப்படும். எல்லாவிதமான சலுகைகளும் அரசின் உயர்ந்த பதவிகளை வகித்தவர்களுக்குத் தரப்பட்ட விசேஷ ஊதியங்களும் அந்த அதிகாரிகளோடு சேர்ந்து மறைந்து விட்டன. பொதுப் பதவிகள் மத்திய அரசாங்கத்தின் கையாட்களின் சொந்த உடைமையாக இருந்த நிலை முடிவடைந்தது. நகராட்சி நிர்

வாகத்தை மட்டுமல்லாமல் அரசு இதுவரை வகித்து வந்த மொத்த முன்முயற்சியையும் கம்யூன் எடுத்துக்கொண்டது.

பழைய அரசாங்கத்தின் பொருளாயதக் கருவிகளான நிரந்தர இராணுவத்தையும் போலீசையும் ஒழித்தவுடனே ஆன்மிக ஒடுக்குமுறையின் கருவியை, ''மதகுருச் சக்தியை'' முறிப்பதில் கம்யூன் இறங்கியது, மத ஸ்தாபனத்தை அரசி லிருந்து பிரிப்பதன் மூலமும் சொத்துடைமை அமைப்புகள் என்ற முறையில் எல்லா மாதாகோவில்களுடைய சொத்துக் களையும் பறிமுதல் செய்வதன் மூலமும் இது அடையப் படும். மதகுருக்கள் அடக்கமான சொந்த வாழ்க்கை நடத் தும்படி, தங்களுக்கு முந்திய அப்போஸ்தலர்களைப் பின்பற்றி நம்பிக்கை உடையவர்கள் தரும் நன்கொடையில் வாழ்க்கை நடத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். கல்வி நிலையங்கள் அனைத்தும் மக்களுக்குத் திறந்து விடப்பட்டன. அங்கே கட்டணமில்லை. அதே சமயத்தில் இவற்றில் திருச்சபை மற்றும் அரசின் தலையீடுகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டன. இவ்வாறாக எல்லோரும் கல்வி கற்கின்ற வாய்ப்பை அளித்த தோடு கூட வர்க்கத் தப்பெண்ணங்களும் அரசாங்க அதி காரமும் பூட்டிய விலங்குகளிலிருந்து விஞ்ஞானம் விடுவிக் கப்பட்டது.

அடுத்தடுத்து வருகின்ற ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் விசுவாசப் பிரமாணம் செய்வதும் அதை மீறுவதுமாக இருக் கின்ற நீதித்துறை அதிகாரிகள் அந்த அரசாங்கங்களிடம் தங்களுடைய அடிமைத்தனத்தை மறைப்பதற்கு உதவு கின்ற போலியான சுதந்திரத்தை நீக்க உத்தேசிக்கப்பட்டது. சமுதாயத்தில் பதவி வகிக்கும் மற்ற ஊழியர்களைப் போலவே அவர்கள் பகிரங்கமான முறையில் தேர்ந் தெடுக்கப்படுவார்கள், பொறுப்பு வகிப்பார்கள். அவர்களை நீக்குகின்ற உரிமை மக்களுக்கு உண்டு.

பிரான்சின் மாபெரும் தொழில்துறை மையங்களுக்குப் பாரிஸ் கம்யூன் ஒரு மாதிரியாக இருக்கும் என்பது உண் மையே. பாரிசிலும் இரண்டாந்தர நகரங்களிலும் கம்யூன் ஆட்சி முறை ஏற்பட்டால் மாநிலங்களிலும் கூட பழைய மத்தியப்படுத்தப்பட்ட அரசாங்கம் உற்பத்தியில் ஈடுபட் டிருப்பவர்களின் சுயநிர்வாகத்துக்கு இடம் கொடுக்க வேண் டும். தேசிய ஒழுங்கமைப்பைப் பற்றிய ஒரு சுருக்கமான குறிப்பில்—அதைச் சரி செய்வதற்கு கம்யூனுக்கு அவகாச

மில்லை—நாட்டுப்புறத்திலுள்ள மிகவும் சிறிய கிராமத்தில் கூடக் கம்யூனே அரசியல் வடிவமாக இருக்கும், நாட்டுப்புற மாவட்டங்களிலும் நிரந்தர இராணுவத்திற்குப் பதிலாக மிகவும் குறுகிய சேவைக் காலத்தைக் கொண்ட மக்கள் தொண்டர் படை ஏற்படுத்தப்படும் என்று தெளிவாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்தின் எல்லாக் கிராமப் புறக் கம்யூன்களும் தங்களுடைய பொது விவகாரங்களை மாவட்டத்தின் தலைநகரத்தில் நடைபெறும் பிரதிநிதிகளின் கூட்டத்தில் முடிவு செய்ய வேண்டும்; தன் பங்கிற்கு இந்த மாவட்ட சபைகள் பாரிசிலுள்ள தேசியப் பிரதிநிதிக் குழுவிற்குப் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும்; ஒவ்வொரு பிரதிநிதியும் தன்னுடைய வாக்காளர்களின் mandat impératif (திட்டவட்டமான ஆணைகளுக்கு) கட்டுப்பட்டு நடக்க வேண்டும், அவர் எந்த நேரத்திலும் திருப்பி அழைக்கப் படக் கூடியவர். மத்திய அரசாங்கத்திற்கு இன்னும் மீதமிருக்கின்ற குறைவான—ஆனால் முக்கியமான—பணிகள் கம்யூனினால், ஆகவே முற்றிலும் பொறுப்பு மிக்க பிரதிநிதிகளால் நிறைவேற்றப்படும் (இந்தப் பணிகள் நீக்கப்படும் என்று வேண்டுமென்றே தவறான பிரச்சாரம் செய்யப்பட்டது). தேசியத்தின் ஒற்றுமையை முறிப்பதல்ல, அதற்கு மாறாக, கம்யூன் அரசியலமைப்பின் மூலம் அதை ஒழுங்கமைப்பது. தேசியத்தின் ஒற்றுமையின் சொரூபம் என்று பேசுகின்ற, ஆனால் தேசியத்திலிருந்து தனித்திருக்கின்ற, அதைக் காட்டிலும் உயர்வானதாக இருக்கவும் விரும்புகின்ற அரசு அதிகாரத்தை ஒழிப்பதன் மூலமாக தேசியத்தின் ஒற்றுமை எதார்த்தமாக மாற்றப்பட வேண்டும். உண்மையிலேயே இந்த அரசு அதிகாரம் தேசியத்தின் இரத்தத்தை உறிஞ்சுகின்ற மிகைச் சதையாக மட்டுமே இருந்தது. பழைய அரசாங்க அதிகாரத்தின் ஒடுக்குமுறை உறுப்புகளை வெட்டிப் போட்டுவிட்டு அதன் சட்டபூர்வமான பணிகளைச் சமூகத்தைக் காட்டிலும் உயர்வான நிலையை அபகரித்திருக்கின்ற அதிகார பீடத்திலிருந்து பறித்து சமூகத்தின் பொறுப்பான தொண்டர்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் எந்த உறுப்பினர் நாடாளுமன்றத்தில் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வது மற்றும் அடக்குவது என்பதை மூன்று அல்லது ஆறு வருடங்களுக்கு ஒரு முறை முடிவு செய்வதற்குப் பதிலாக ஒரு வேலைக்கு

அமர்த்துபவர் தனக்குத் தேவையான தொழிலாளர்களேயும் மேலாளர்களேயும் கணக்கர்களேயும் தேர்ந்தெடுப்பதற்குத் தனிப்பட்ட வாக்குரிமை உதவி புரிவதைப் போல பொது வாக்குரிமை கம்யூன்களாக அமைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உதவி செய்யும். வர்த்தக நடவடிக்கையில் சரியான நபரை சரியான இடத்தில் வைப்பதற்கும் தாங்கள் தவறு செய்துவிட்டால் அதை உடனடியாகத் திருத்திக் கொள்வதற்கும் தனி நபர்களேப் போல கம்பெனிகளால் சாதாரணமாக முடியும் என்று தெரியும். மறு பக்கத்தில் பொது வாக்குரிமைக்குப் பதிலாகப் படிநிலேயான investiture[47] ஐ ஏற்படுத்துவதைக் காட்டிலும் கம்யூன் உணர்ச்சிக்கு அந்நியமானது வேறு இருக்க முடியாது.

சமூக வாழ்க்கையின் முந்திய வடிவங்களே, அழிந்து போன வடிவங்களேக் கூட சிறிதளவு ஒத்திருக்கின்ற புதிய வரலாற்றுப் படைப்புகளே அவற்றின் ஒற்றுமை என்று தவருகப் புரிந்து கொள்வது பொதுவாக இவற்றின் தலேவிதியே. இதே மாதிரி நவீன அரசு அதிகாரத்தை நொறுக்குகின்ற இந்தப் புதிய கம்யூன், அதே அரசு அதிகாரத்துக்கு முன்னல் ஏற்பட்டு பிறகு அதன் அடித்தளமாக இருந்த மத்திய காலக் கம்யூனின் மறு பதிப்பு என்று தவருகக் கருதப்பட்டது.—பெரிய தேசிய இனங்களிடம் தொடக்கத்தில் அரசியல் பலாத்காரத்தால் ஏற்படுத்தப்பட்டாலும் இப்பொழுது சமூக உற்பத்தியின் சக்தி வாய்ந்த காரணியாக இருக்கின்ற ஒற்றுமையை—மொண்தெஸ்கியேயும் ஜிரோந்தவாதிகளும்[48] கனவு கண்டதைப் போல—சிறு அரசுகளின் சுட்டாட்சியாக மாற்றுவதற்குச் செய்யப்படும் முயற்சி என்று கம்யூன் அரசியலமைப்பு தவருகப் புரிந்துகொள்ளப்பட்டது. —அரசு அதிகாரத்துக்கு எதிரான கம்யூனுடைய பகைமை அதிகமான மத்தியப்படுத்துதலுக்கு எதிரான தொன்மையான போராட்டத்தின் மிகையான வடிவம் என்று தவருகப் புரிந்துகொள்ளப்பட்டது. பிரத்யேகமான வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் பிரான்சில் இருந்ததைப் போன்ற முதலாளி வர்க்க ஆட்சி முறையின் மூலச் சிறப்பான வளர்ச்சியைத் தடுத்து இங்கிலாந்தில் நடைபெற்றதைப் போல ஊழல்மிக்க மாதாகோவில் அலுவலர்கள், சுயலாப வேட்டையாடுகின்ற நகர கவுன்சிலர்கள் மற்றும் நகரங்களில் ஏழைகள் காப்பு விடுதிகளின் மூர்க்கத்தனமான நிர்வாகிகளேக் கொண்டும்

நாட்டுப்புறப் பகுதிகளில் அநேகமாகப் பரம்பரை மாஜிஸ்டி ரேட்டுகளைக் கொண்டும் முக்கிய மத்திய அரசு உறுப்புகளைப் பூர்த்தி செய்வதை அனுமதித்திருக்கக் கூடும். சமூகத்தைச் சுரண்டியும் அதன் சுதந்திரமான இயக்கத்தைத் தடுத்துக் கொண்டுமிருந்த ''அரசுப்'' புல்லுருவியால் இதுவரை உட்கொள்ளப்பட்ட அனைத்துச் சக்திகளையும் கம்யூன் அரசி யலமைப்பு மறுபடியும் சமூகத்திடம் ஒப்படைத்திருக்கும். இந்த ஒரு நடவடிக்கையைக் கொண்டு அது பிரான்சுக்குப் புத்துயிர் கொடுத்திருக்கும்.—மாநில நகரங்களில் இருந்த பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தினர் லூயீ ஃபிலீப்பின் காலத் தில் தங்கள் வகுப்பு நாட்டுப்புறப் பகுதிகளின் மீது கொண் டிருந்த ஆதிக்கத்தை—லூயீ நெப்போலியன் காலத்தில் நகரங்களின் மீது நாட்டுப்புறத்தின் ஆதிக்கம் என்ற போலி நாடகம் இதற்கு பதிலாக நடைபெற்றது—மறுபடி ஏற் படுத்துகின்ற முயற்சியைக் கம்யூனில் கண்டார்கள். எதார்த் தத்தில் கம்யூன் அரசியலமைப்பு நாட்டுப்புறப் பகுதிகளின் உற்பத்தியாளர்களைத் தங்கள் மாவட்டங்களின் தலைநகரங் களின் அறிவுபூர்வமான வழிகாட்டுதலின் கீழ் கொண்டு வந்து நகரத்திலுள்ள தொழிலாளர்களின் வடிவத்தில் அவர் களுடைய நலன்களின் உண்மையான பாதுகாவலர்களைத் தந்திருக்கும்.—கம்யூன் இருப்பதனாலேயே ஸ்தல சுயநிர்வாக மும்—தற்பொழுது தேவையில்லாத அரசு அதிகாரத்துக்கு எதிர்மறை என்ற முறையில் ஒருக் காலுமில்லாமல்—இயல் பாக ஏற்பட்டது. 1791ம் வருடத்திய பழைய பிரெஞ்சு முனிசிபல் அமைப்பின் கேலிச் சித்திரமாக இருக்கின்ற பிரஷ்ய முனிசிபல் அமைப்பை, நகராட்சி உறுப்புகளைப் பிரஷ்ய அரசின் போலீஸ் இயந்திரத்தின் துணைச் சக்கரங் களாக மதிப்புக்குறைக்கின்ற பிரஷ்ய முனிசிபல் அமைப்பை பாரிஸ் கம்யூன் விரும்பியது என்ற கருத்து ஒரு பிஸ்மார்க் கின் மூளையில் மட்டுமே உதிக்க முடிந்தது. இரத்தம் மற்றும் இரும்பு என்ற வழக்கமான சூழ்ச்சிகளில் ஈடுபடாமலிருக் கும் நேரத்தில் எப்பொழுதும் தன்னுடைய பழைய தொழிலை, *Kladderadatsch* (பெர்லினிலிருந்து வெளியாகின்ற *Punch*)[49] பத்திரிகையின் கட்டுரையாளர் தொழிலை—அவ ருடைய மூளைத்தரத்துக்கு அதுதான் மிகப் பொருத்தமானது —செய்ய விரும்புகின்ற அந்த நபருடைய மூளையில்தான் இந்தக் கருத்து உதிக்க முடியும்.

நிரந்தர இராணுவம், அரசுப் பதவிகள் என்ற இரண்டு மாபெரும் செலவினங்களை ஒழித்ததன் மூலம் மலிவான அரசாங்கம் என்ற எல்லா முதலாளி வர்க்கப் புரட்சிகளின் முழக்கத்தைக் கம்யூன் எதார்த்தமாக்கியது. குறைந்த பட்சம் ஐரோப்பாவில் வழக்கமான சுமையாகவும் வர்க்க ஆதிக்கத்தின் மிகவும் அவசியமான போர்வையாகவும் இருக்கின்ற முடியாட்சி முறையைக் கம்யூன் தன் இருத்தலினால் மறுத்தது. அது உண்மையிலேயே ஜனநாயக உறவுமுறைகளின் அடிப்படையைக் குடியரசுக்குக் கொடுத்தது. ஆனால் அதன் இறுதி நோக்கம் மலிவான அரசாங்கமோ அல்லது ''உண்மையான குடியரசோ'' அல்ல. அவை அதன் துணை விளைவுகளே.

கம்யூனைப் பற்றித் தரப்பட்டிருக்கின்ற பல விதமான விளக்கங்களும் அதில் வெளிப்பட்ட பல்வேறு நலன்களும், முந்திய அரசாங்க வடிவங்கள் சாராம்சத்தில் ஒடுக்குபவையாக இருந்த பொழுது இது முற்றிலும் நெகிழ்ச்சியான அரசியல் வடிவத்தைக் கொண்டிருந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றன. அதன் உண்மையான இரகசியம் இதுவே. அது அடிப்படையில் தொழிலாளி வர்க்க அரசாங்கம், அபகரிக்கும் வர்க்கத்துக்கு எதிராக உற்பத்தி செய்கின்ற வர்க்கம் நடத்திய போராட்டத்தின் விளைவு, பொருளாதார ரீதியில் உழைப்பின் விடுதலையைச் செயலாக்குவதற்குக் கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்ட அரசியல் வடிவம்.

இந்தக் கடைசி நிபந்தனை இல்லையென்றால் கம்யூன் அரசியலமைப்பு நடக்க முடியாததாகவும் மாயத்தோற்றமாகவும் இருந்திருக்கும். உற்பத்தி செய்பவர்களுடைய அரசியல் ஆதிக்கம் அவர்களுடைய நிரந்தரமான சமூக அடிமைத்தனத்துடன் ஒத்து வாழ முடியாது. ஆகவே வர்க்கங்கள் மற்றும் வர்க்க ஆதிக்க முறை சார்த்திருக்கின்ற பொருளாதார அடிப்படைகளை வேரோடு அகற்றுவதற்குக் கம்யூன் ஒரு கருவியாகப் பயன்பட வேண்டும். உழைப்பு விடுதலை அடையும் பொழுது ஒவ்வொரு மனிதனும் உழைக்கும் மனிதனாகிறான், உற்பத்தி செய்யும் உழைப்பு குறிப்பிட்ட வர்க்கத்திற்குரியதாக இருப்பது முடிந்து விடுகிறது.

இது ஒரு விசித்திரமான உண்மை: கடந்த அறுபது வருடங்களாக உழைப்பின் விடுதலையைப் பற்றிப் பகட்டாக எவ்வளவோ பேசப்பட்டிருக்கிறது, ஏராளமாக எழுதப்பட்

டிருக்கிறது. ஆனால் எங்காவது தொழிலாளர்கள் உறுதியுடன் அதை நிறைவேற்ற முயன்றால் உடனே மூலதனம் மற்றும் கூலி அடிமைத்தனம் (இப்பொழுது நிலப்பிரபு முதலாளியின் ஓய்ந்திருக்கும் பங்குதாரரே) என்ற இரண்டு எதிர்த் துருவங்களைக் கொண்டிருக்கும் இன்றைய சமூகத்தின் பாது காவலர்களின் மழுப்பும் விளக்கங்கள் வாரி இறைக்கப்படுகின்றன. முதலாளித்துவ சமூகம் இன்னும் அதன் மிகத் தூய்மையான, கன்னிமை கழியாத நிலைமையில்; அதன் முரணியல்புகள் இன்னும் வளர்ச்சி அடையாத நிலைமையில், அதன் மாயத்தோற்றங்கள் இன்னும் கலைக்கப்படாத நிலைமையில், அதன் விபச்சார எதார்த்தங்கள் இன்னும் அம்பலப்படுத்தப்படாத நிலைமையில் இருப்பதாகக் கருதுகிறார்கள் போலும்! கம்யூன் எல்லா நாகரிகத்துக்கும் அடிப்படையான சொத்துடைமையை ஒழிக்க உத்தேசிக்கிறது என்று அவர்கள் கூக்குரலிடுகிறார்கள்! கனவான்களே, ஆம்! மிகப் பலருடைய உழைப்பை மிகச் சிலருக்குச் செல்வமாகச் செய்கின்ற வர்க்கச் சொத்துடைமையை ஒழிப்பதற்குக் கம்யூன் விரும்பியது. உடைமை பறித்தோரின் உடைமைகளைப் பறித்தல் அதனுடைய நோக்கம். இன்று பிரதானமாக உழைப்பை அடிமைப்படுத்துகின்ற, சுரண்டுகின்ற கருவிகளாக இருக்கும் உற்பத்திச் சாதனங்கள், நிலம் மற்றும் மூலதனத்தை சுதந்திரமான மற்றும் கூட்டு உழைப்பின் கருவிகளாக மாற்றி தனிப்பட்ட உடைமையை ஒரு உண்மையாகச் செய்ய கம்யூன் உத்தேசித்தது. ஆனால் இது கம்யூனிசம், ''நடக்க முடியாத'' கம்யூனிசம்! ஆனால் இன்றைய அமைப்பை நெடுங் காலமாகத் தொடர முடியாது என்பதைப் பரிந்துகொள்ளப் போதிய மதிநுட்பமுடைய ஆதிக்க வர்க்கங்களின் பிரதிநிதிகள்—அவர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள்—கூட்டுறவு உற்பத்தியின் ஆரவாரமான, நச்சரிக்கின்ற திருத் தூதர்களாக மாறியிருந்தார்கள். கூட்டுறவு உற்பத்தி ஒரு மோசடியாகவும் பொறியாகவும் இல்லாதிருக்க வேண்டுமென்றால், முதலாளித்துவ அமைப்பை அது அகற்றிவிட்டு அதன் இடத்தைப் பெற வேண்டுமென்றால், ஒன்றுபட்ட கூட்டுறவு சங்கங்கள் பொதுவான திட்டத்தின் கீழ் தேசிய உற்பத்தியை ஒழுங்குபடுத்த வேண்டுமென்றால், அதைத் தங்களுடைய கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு முதலாளித்துவ உற்பத்தியில் தவிர்க்க இயலாத

நிரந்தரமான அராஜகத்துக்கும் குறிப்பிட்ட இடைவெளி களில் திரும்பத் திரும்ப ஏற்படுகின்ற குழப்பங்களுக்கும் முடிவு கட்ட வேண்டுமென்றால்—கனவான்களே! அது கம் யூனிசம், ''சாத்தியமான'' கம்யூனிசம் அல்லாமல் வேறு என்ன?

கம்யூன் அதிசயங்களை ஏற்படுத்தும் என்று தொழிலாளி வர்க்கம் எதிர்பார்க்கவில்லை. Par décret du peuple* அவர் களிடம் தயாராகவுள்ள கற்பனை உலகங்கள் கிடையாது. தங்களுடைய சொந்த விடுதலையைச் சாதிப்பதற்கும் அத னுடன் அதன் சொந்தப் பொருளாதார வளர்ச்சியால் இன் றைய சமூகம் மாற்றவியலாதபடி முன்னேறிக் கொண்டிருக் கும் அந்த உயர் வடிவத்தை அடைவதற்கும் அவர்கள் நெடும் போராட்டங்கள், சந்தர்ப்பங்களையும் மனிதர்களை யும் மாற்றியமைக்கின்ற வரலாற்று நிகழ்வுப் போக்குகள் என்ற தொடர்வரிசை ஆகியவற்றைக் கடந்து வர வேண்டி யிருக்கும் என்றெல்லாம் அவர்களுக்குத் தெரியும். சீரழிந்து வருகின்ற பழைய முதலாளித்துவ சமூகம் சூல் கொண் ருக்கின்ற புதிய சமூகத்தின் கூறுகளை விடுவிப்பதைத் தவிர அவர்கள் சாதிப்பதற்கு வேறு இலட்சியங்கள் இல்லை. தங் களுடைய வரலாற்று ரீதியான இலட்சியப் பயணத்தைப் பற்றிய முழு உணர்வும் அதை நிறைவேற்றியே தீருவோம் என்ற வீர சங்கற்பமும் கொண்ட தொழிலாளி வர்க்கம் கூலிப் பத்திரிகையாளர்களின் நயமில்லாத ஏச்சுக்களை, விஞ்ஞானச் செல்வாக்கு என்ற அசரீரியின் தோரணை யில் தங்களுடைய முட்டாள்தனமான வெற்றுரைகளையும் குறுங்குழுவாதச் சிம்புகளையும் அள்ளிக் கொட்டுகின்ற நல் லெண்ணமுடைய முதலாளி வர்க்க வறட்டுக் கோட்பாட்டு வாதிகளின் ஆசிரியத்தனமான உபதேசங்களை நோக்கி ஏளனமாகச் சிரிக்க முடியும்.

பாரிஸ் கம்யூன் புரட்சியைத் தானே நிர்வகிக்கத் தொடங்கிய பொழுது, சாதாரணமான தொழிலாளர்கள் முதல் தடவையாகத் தங்கள் ''இயற்கையான மேலோரின்'' சலுகைகளை, ஆட்சி செய்யும் சலுகைகளை ரத்துச் செய்யத் துணிந்த பொழுது, முன்னெப்போதும் ஏற்பட்டிராத நெருக் கடியான சந்தர்ப்பங்களில் தங்களுடைய பணியை அடக்கத்

* —மக்கள் அரசாணையின்படி.—ப-ர்.

தோடு, உணர்வோடு திறமையோடு நிறைவேற்றிய பொழுது, ஒரு பிரபலமான விஞ்ஞானி சுட்டிக் காட்டியதைப் போல லண்டனில் பள்ளிக்கூடக் கமிட்டியின் காரியதரிசிக்குத் தரப்படுகின்ற குறைந்தபட்ச ஊதியத்தில் ஐந்தில் ஒரு பங்குக்கும் சற்றுக் குறைவான தொகையைத் தங்களுடைய மிக உயர்ந்த ஊதியமாகப் பெற்றுக் கொண்டு நிறைவேற்றிய பொழுது உழைப்பாளியின் குடியரசின் சின்னமாக நகர் மண்டபத்தின் மீது பறந்து கொண்டிருந்த செங்கொடியைப் பார்த்த மாத்திரத்தில் பழைய உலகம் ஆவேசத்தில் துடித்தது.

எனினும் பணக்கார முதலாளிகளைத் தவிர சிறிய கடைக்காரர்கள், கைவினைஞர்கள் வர்த்தகர்களைக் கொண்ட பாரிஸ் மத்தியதர வர்க்கத்தின் மிகப் பெரும் எண்ணிக்கையினர் கூட சமூக முன்முயற்சியைக் கொண்ட ஒரே வர்க்கம் என்று தொழிலாளி வர்க்கத்தைப் பகிரங்கமாக அங்கீகரித்த முதல் புரட்சி இதுவே. மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் நிரந்தரமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் தகராறுக்குக் காரணமாகிய கடன் பெற்றவர்களுக்கும் கடன் கொடுத்தவர்களுக்கும் இடையில் கணக்குகளைப் பற்றிய பிரச்சினையைக் கம்யூன் மதிநுட்பத்தோடு தீர்த்து அவர்களைக் காப்பற்றியது. 1848 ஜூன் மாதத்திய தொழிலாளர்களின் எழுச்சியை நசுக்குவதற்கு உதவி புரிந்த மத்தியதர வர்க்கத்தின் அதே பகுதியினரை, அரசியல் நிர்ணய சபை அதன் பிறகு தயக்கமின்றி அவர்களுக்குக் கடன் கொடுத்தவர்களிடம் பலியிட்டது[50]. ஆனால் அவர்கள் இப்பொழுது தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றித் திரள்வதற்கு இது ஒன்று மட்டுமே காரணமல்ல. கம்யூன் என்ற ஒரு மாற்று வழி மட்டுமே இருப்பதாக, அது இல்லையென்றால் ஏதாவதொரு பெயரில் பேரரசு திரும்ப ஏற்படும் என்று அவர்கள் கருதினார்கள். பேரரசு பொதுச் சொத்தைச் சூறையாடியதன் மூலமும் அது பராமரித்த பெரும் அளவான நிதித்துறை மோசடிகளின் மூலமும் மூலதனத்தை மையப்படுத்தலைச் செயற்கையாக விரைவுபடுத்துவதற்கு அது ஆதரவு கொடுத்து அதன் பலனாக மேலே குறிப்பிட்ட மத்தியதர வர்க்கப் பகுதியினரின் சொத்தைப் பறித்ததன் மூலமும் அவர்களைப் பொருளாதார ரீதியில் நாசமாக்கியிருந்தது. பேரரசு அவர்களை அரசியல் ரீதியில் ஒடுக்கியிருந்தது, தன்னுடைய களியாட்டங்களின் மூலம்

அவர்களுக்கு தார்மீக ரீதியில் அதிர்ச்சியைக் கொடுத் திருந்தது, அவர்களுடைய குழந்தைகளின் வளர்ப்பை frères ignorantins[51] இடம் ஒப்படைத்ததன் மூலம் அவர் களுடைய வொல்தேர்வாதத்தை அவமதித்திருந்தது. அது ஒரு யுத்தத்துக்குள் அவர்களைத் தலை குப்புறத் தள்ளி—அந்த யுத்தத்தின் அழிவுகளுக்கு ஈடாகப் பேரரசின் வீழ்ச்சி என்ற ஒன்று மட்டுமே எஞ்சியிருந்தது—பிரெஞ்சுக்காரர் கள் என்ற முறையில் அவர்களுடைய தேசிய உணர்ச்சியைப் புண்படுத்தியிருந்தது. உண்மையைச் சொல்வதென்றால் உயர்குடி போனப்பார்ட்டிஸ்ட் அதிகாரிகள் மற்றும் முதலாளிகளின் bohème* பாரிசை விட்டு வெளியேறிய பிறகு மத்தியதர வர்க்கத்தின் உண்மையான ஒழுங்கு முறைக் கட்சி குடியரசு யூனியன் கட்சி[52] என்ற வடிவத்தில் வெளித்தோன்றியது, கம்யூன் கொடியின் கீழ் திரண்டு நின்று தியேரின் விஷமத்தனமான பொய்ப் பிரச்சாரத்துக்கு எதி ராக அதைக் காத்து நின்றது. மத்தியதர வர்க்கத்தின ருடைய இப்பெருந் தொகுதியின் நன்றி உணர்ச்சி இன்றைய கடுஞ் சோதனைகளைத் தாங்கிக் கொள்ளுமா என்பதைக் காலம்தான் எடுத்துக்காட்ட முடியும்.

''கம்யூனுடைய வெற்றிதான் உங்களுக்கு ஒரே நம் பிக்கை''[53] என்று விவசாயிகளிடம் கம்யூன் கூறியது முற்றி லும் சரியானதே. வெர்சேயில் தயாரிக்கப்பட்டு ஐரோப்பா வின் திறமையான கூலிப் பத்திரிகையாளர்களால் ஒலிபரப்பப் பட்ட பொய்கள் அனைத்திலும் மிகவும் வேடிக்கையானது ''நிலவுடைமையாளர் சபை'' பிரெஞ்சு விவசாயிகளைப் பிரதிநிதித்துவம் செய்தது என்பதே. பிரெஞ்சு விவசாயி கள் 1815க்குப் பிறகு நட்ட ஈடு என்ற பெயரில் ஆயிரம் மில்லி யன்கள்[54] கட்ட வேண்டிய நபர்களிடம் எவ்வளவு அன்பு காட்டியிருக்க முடியும் என்பதை மட்டும் நினைத்துப் பாருங்கள்! பெரிய நிலவுடைமையாளர் இருப்பதே 1789ம் வருடத்தில் தன்னுடைய வெற்றிகளின் மீது செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு என்று பிரெஞ்சு விவசாயி கருதினான். 1848ல் அவனுடைய துண்டு நிலத்தின் மீது ஒரு பிராங்குக்கு 45 சென்ட்டிம்கள்

---

* —பொஹிமியா, களியாட்டக் கும்பல்.—ப-ர்.

கூடுதல் வரியை முதலாளிகள் விதித்தார்கள்; அன்று அது புரட்சியின் பெயரால் செய்யப்பட்டது; ஆனால் இப்பொழுது, பிரஷ்யர்களுக்குக் கொடுக்க வேண்டிய 5,000 மில்லியன் நட்ட ஈட்டுப் பணத்தின் பிரதான சுமையை விவசாயிகளின் தோள்களுக்கு மாற்றுவதற்காக அவர்கள் புரட்சிக்கு எதிரான உள்நாட்டுப் போரைத் தூண்டிவிட்டார்கள். இதற்கு மாருக, யுத்தத்தை உண்மையில் தொடங்கியவர்களே அந்த நட்ட ஈட்டுத் தொகையைக் கொடுக்குமாறு செய்வோம் என்று கம்யூன் அதன் முதல் பிரகடனங்களில் ஒன்றில் அறிவித்தது. கம்யூன் விவசாயிக்கு இரத்த வரியிலிருந்து விடுதலை கொடுத்து மலிவான அரசாங்கத்தை ஏற்படுத்தியிருக்கும். இன்றுள்ள சான்றதிகாரி, வழக்குரைஞர், அமீன் மற்றும் இதர நீதித்துறையின் இரத்தம் குடிக்கும் பிசாசுகளை விவசாயியினல் தேர்ந்தெடுக்கப்பட்டு அவனுக்குப் பொறுப்பாக உள்ள மாதாந்தர ஊதியம் பெறுகின்ற கம்யூன் ஊழியர்களாக மாற்றியிருக்கும். அது நாட்டுப்புற போலீஸ், காவலாளி மற்றும் முனிசிபல் தலைவர்களின் கொடுங்கோன்மையிலிருந்து விவசாயிகளை விடுவித்திருக்கும், மதகுருவினல் அவர்களின் மூளை கெடுக்கப்படுவதற்குப் பதிலாகப் பள்ளி ஆசிரியர் அறிவு புகட்டுவதற்கு வழியமைத்திருக்கும். எல்லாவற்றையும் காட்டிலும் பிரெஞ்சு விவசாயி கணக்குப் போடத் தெரிந்தவன். மதகுருவின் சம்பளம் வரி வசூலிப்பவரால் பிடுங்கப்படுவதற்குப் பதிலாக அந்தப் பகுதியினரின் மத உணர்ச்சிகளின் இயல்பான நடவடிக்கையை மட்டுமே சார்ந்திருக்க வேண்டும் என்பது மிக நியாயமே என்பதை அவன் உணர்வான். கம்யூன் ஆட்சியில்—அந்த ஆட்சியில் மட்டுமே—பிரெஞ்சு விவசாயிகளுக்குக் கிடைத்த பெரும் பலன்கள் இவை. ஆகவே கம்யூன் மட்டுமே விவசாயிக்குச் சாதகமான முறையில் தீர்க்கக் கூடிய—அவசியமாகத் தீர்க்க வேண்டிய—மிகவும் சிக்கலான ஆனல் ஜீவாதாரமான பிரச்சினைகளைப் பற்றி இங்கே விரித்துக் கூறுவது முற்றிலும் மிகையாகும். விவசாயியின் துண்டு நிலத்தின் மீது அமுக்குப் பேயைப் போல உட்கார்ந்திருக்கும் ஒத்திக் கடன், தினமும் அதில் வளர்ச்சியடைகின்ற prolétariat foncier (விவசாயத் தொழிலாளிகள்), நவீன விவசாயத்தின் வளர்ச்சியினலும் முதலாளித்துவ விவசாய முறையின் போட்டியினலும் விவசாயிகளே மென்மேலும்

விரைவாக உடைமை பறிக்கப்பட்டது ஆகியவை இப் பிரச்சினைகளாகும்.

பிரெஞ்சு விவசாயிகள் லூயி போனப்பார்ட்டைக் குடியரசின் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுத்திருந்தனர்; ஆனல் ஒழுங்குமுறைக் கட்சி[55] இரண்டாவது பேரரசைப் படைத்தது. பிரெஞ்சு விவசாயி அரசாங்கத்தின் நகரவைத் தலைவருக்கு எதிராகத் தன்னுடைய மேயரையும் அரசாங்கத்தின் மதகுருவுக்கு எதிராகத் தன்னுடைய பள்ளி ஆசிரியரையும் அரசாங்கத்தின் போலீசுக்கு எதிராகத் தன்னையும் நிறுத்திதான் உண்மையாக எதை விரும்புகிருன் என்பதை 1849 மற்றும் 1850இல் எடுத்துக்காட்டத் தொடங்கினன். 1850 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் ஒழுங்குமுறைக் கட்சியின் எல்லாச் சட்டங்களும் விவசாயிக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட சட்டங்களே[56] என்று இக்கட்சிதானே ஒத்துக்கொண்டது. விவசாயி போனப்பார்ட்டிஸ்டே. ஏனென்றுல் அவன் பார்வையில் அந்த மாபெரும் புரட்சியும் அவனுக்கு அது அளித்த எல்லா நன்மைகளும் நெப்போலியனை உருவகமாகக் கொண்டிருந்தன. இந்த மாயத்தோற்றம் இரண்டாவது பேரரசின் கீழ் வேகமாக நொறுங்கிக் கொண்டிருந்தது (அதன் தன்மையிலேயே அது ''நிலவுடைமையாளர் சபைக்கு'' விரோதமானது). கடந்த காலத்தின் இந்தத் தப்பெண்ணம் விவசாயியின் வாழ்கின்ற நலன்களுக்கும் அவசரத் தேவைகளுக்கும் கம்யூன் கொண்டிருந்த கவர்ச்சியை எப்படி மறுக்க முடியும்?

பாரிஸ் கம்யூன் மூன்று மாத காலத்துக்கு மட்டுமே மாநிலங்களோடு சுதந்திரமான தொடர்பு வைத்துக்கொண்டால் விவசாயிகளின் பொதுவான எழுச்சி ஏற்பட்டுவிடும் என்பதை ''நிலவுடைமையாளர் சபை'' அறிந்திருந்தது; உண்மையில் இதுதான் அதன் முக்கியமான கவலையாக இருந்தது. ஆகவே இந்தத் தொத்துநோய் பரவாமற் தடுப்பதற்காக பாரிசைச் சுற்றி போலீஸ் வளையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கவலைப்பட்டார்கள்.

கம்யூன் பிரெஞ்சு சமூகத்திலுள்ள எல்லா விவேகமான சக்திகளின் உண்மையான பிரதிநிதியாக, ஆகவே உண்மையான தேசிய அரசாங்கமாக இருந்ததென்றுல் அது அதே நேரத்தில் தொழிலாளர்களின் அரசாங்கம் என்ற முறையில், உழைப்பின் விடுதலையைத் துணிச்சலோடு ஆதரித்து நின்றது

என்ற முறையில் அழுத்தமான சர்வதேசியத் தன்மையைக் கொண்டிருந்தது. இரண்டு பிரெஞ்சு மாநிலங்களை ஜெர்மனியோடு சேர்த்துக் கொண்ட பிரஷ்ய இராணுவத்தின் கண்களுக்கு முன்பாகக் கம்யூன் உலக முழுவதிலுமுள்ள தொழிலாளர்களைப் பிரான்சுடன் இணைத்துக் கொண்டது.

கம்யூனின் மகத்தான சமூக நடவடிக்கை அது நீடிப்பதும் பாடுபடுவதுமே. அதன் சொந்த நடவடிக்கைகள், மக்களால் நிறைவேற்றப்பட்ட மக்களுடைய நிர்வாகத்தின் வளர்ச்சிப் போக்கைக் குறிப்பதாக மட்டுமே இருக்க முடியும். ரொட்டிக் கடைத் தொழிலாளிகள் இரவில் வேலை செய்வதைத் தடை செய்தது, தொழிலாளர்களின் மீது பல்வேறு போலிக் காரணங்களைச் சொல்லி அபராதம் விதித்துக் கூலியைக் குறைக்கின்ற முதலாளிகளின் பழக்கத்தைத் தண்டிப்போம் என்று சொல்லித் தடை விதித்தது (இந்தச் செய்முறையில் முதலாளி சட்டமியற்றுபவராக, நீதிபதியாக, தண்டனையை நிறைவேற்றுபவராக இருப்பதோடு தொழிலாளியின் பணத்தையும் பறித்துக் கொள்கிறார்) ஆகியன இப்படிப்பட்ட நடவடிக்கைகளே. மூடப்பட்ட அனைத்துப் பட்டறைகளும் தொழிற்சாலைகளும்—முதலாளிகள் ஓடிப் போய்விட்டார்களா அல்லது கதவடைப்புச் செய்திருக்கிறார்களா என்பதைப் பற்றிக் கருதாமல்—நட்ட ஈடு தரப்படும் என்ற உறுதியுடன் தொழிலாளர்கள் சங்கங்களிடம் ஒப்படைக்கப் பட்டதும் இப்படிப்பட்ட நடவடிக்கையே.

நிதித்துறையில் கம்யூன் செய்த ஜாக்கிரதையும் நிதானமும் நிறைந்த நடவடிக்கைகள் முற்றுகையிடப்பட்டிருக்கும் நகரம் என்ற நிலைமைக்குப் பொருந்தும் நடவடிக்கைகளாக மட்டுமே இருக்க முடியும். பாரிஸ் நகரத்தில் ஒஸ்மானுடைய* பாதுகாப்பின் கீழ் பெரிய நிதிக் கம்பெனிகளும் கட்டிட ஒப்பந்தக்காரர்களும் நடத்திய பெருங் கொள்ளைகளோடு ஒப்பிடுகின்ற பொழுது அவர்களுடைய சொத்தைப் பறி

* இரண்டாவது பேரரசுக் காலத்தில் ஒஸ்மான் (Haussmann) பிரபு ஸேன் வட்டாரத்தின் (அதாவது பாரிசின்) தலைமைப் போலீஸ் அதிகாரியாக இருந்தார். அவர் தொழிலாளர்களின் எழுச்சிகளைச் சுலபமாக ஒடுக்குவதற்காகச் சாலைகளில் கற்களைப் பதித்துச் சீர்படுத்தினார். (லெனினால் **மேற்பார்வையிடப்பட்ட 1905ம் வருட ருஷ்யப் பதிப்புக்கு எழுதிய குறிப்பு.)—ப-ர்.**

முதல் செய்வதற்கு ஆர்லியன் குடும்பத்தின் மீது லுயீ நெப் போலியனுக்கு இருந்ததைக் காட்டிலும் ஒப்பிட முடியாத அளவுக்கு மிகச் சிறந்த உரிமை கம்யூனுக்கு இருந்தது. திருச் சபையின் உடைமைகளைக் கொள்ளையடித்து தங்களுடைய சொத்துக்களில் பெரும்பான்மையானவற்றை அடைந்திருக் கின்ற ஹோஹன்ஸோலர்ன்கள் மற்றும் ஆங்கில சிலவராட்சி யாளர்கள் (oligarchs) கம்யூன் திருச்சபையின் சொத்தைப் பறிமுதல் செய்ததன் மூலம் 8,000 பிராங்குகளை மட்டுமே பெற்றிருப்பதைக் கண்டு அதிகமாக அதிர்ச்சியடைந்தது நியாயமே.

வெர்சேய் அரசாங்கம் சிறிதளவு உணர்ச்சியும் பலமும் திரும்பப் பெற்றவுடனே கம்யூனுக்கு எதிராக மிகவும் வன் முறையான நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கத் தொடங் கியது; அது பிரான்ஸ் முழுவதிலும் அபிப்பிராயத்தைத் தங்குதடையில்லாமல் வெளியிடுவதைத் தடுத்து பெரிய நகரங்களின் பிரதிநிதிகளின் கூட்டங்களைக் கூடத் தடை செய்தது; வெர்சேயிலும் பிரான்சின் மற்ற பகுதியிலும் இரண்டாவது பேரரசையும் விஞ்சுகின்ற அளவில் உளவு வேலைகளை நடத்தியது; அது தன்னுடைய உளவு விசாரணைப் போலீசின் மூலம் பாரிசில் அச்சிடப்பட்ட எல்லாப் பத்திரிகை களையும் எரித்து பாரிசிலிருந்து வருகின்ற மற்றும் பாரிசுக்குப் போகின்ற எல்லாக் கடிதங்களையும் தணிக்கை செய்தது. தேசிய சபையில் பாரிசுக்குச் சாதகமான முறையில் ஒரு வார்த்தை சொல்வதற்குச் செய்யப்பட்ட மிகவும் பலவீன மான முயற்சிகள் 1816ம் வருட "chambre introuvable"[57] கூடக் கண்டிராத முறையில் கூச்சலிட்டு அமுக்கப்பட்டன; வெர்சேய் பாரிசுக்கு வெளியில் காட்டுமிராண்டித்தனமான யுத்தத்தைத் தவிர பாரிசுக்கு உள்ளே லஞ்சம் கொடுப் பதற்கும் சதிகள் செய்வதற்கும் முயற்சிகளைச் செய்தது. இத்தகைய சூழ்நிலைகளில் ஆழமான சமாதான காலத்தைப் போல நினைத்துக்கொண்டு மிதவாதத்தின் சம்பிரதாயமான வடிவங்கள் அனைத்தையும் பின்பற்றக் கம்யூன் முயன்றிருக் குமானால் தன் மீது வைக்கப்பட்டிருந்த நம்பிக்கைக்கு அது அவமானகரமான துரோகத்தைச் செய்வதாகாதா? கம்யூன் அரசாங்கம் தனது தன்மையில் தியேருடைய அரசாங் கத்தைப் போன்றதாக இருந்திருந்தால் வெர்சேயில் கம்யூனு டைய பத்திரிகைகளையும் பாரிசில் ஒழுங்குமுறைக் கட்சியின்

பத்திரிகைகளையும் நசுக்குவதற்குக் காரணங்களே இருந்திருக்காது.

திருச்சபைக்குத் திரும்புவதே பிரான்சினுடைய மீட்சிக்கு ஒரே வழி என்று தாங்கள் வற்புறுத்திய அதே நேரத்தில் கடவுள் நம்பிக்கை இல்லாத கம்யூன் பிக்புஸ் கன்னித்துறவியர் இல்லம் மற்றும் செயின்ட் லோரென்ட் மாதாகோயில் மர்மங்களை வெளியிட்டது[58] ''நிலவுடைமையாளர் சபைக்கு'' எரிச்சலூட்டியது இயற்கையே. போனப்பார்ட்டிஸ்ட் ஜெனரல்கள் சண்டைகளில் தோல்வியடைவதிலும் சரணுகதிகளில் கையெழுத்திடுவதிலும் வில்ஹெல்ம்ஸ்-ஹோயெவில்[59] சிகரெட்டுகளைத் தயாரிப்பதிலும் காட்டிய திறமைக்காக தியேர் அவர்களுக்கு வீரப்பதக்கங்களை வாரி வழங்கிய பொழுது கம்யூன் தன்னுடைய ஜெனரல்கள் தங்கள் கடமைகளை அலட்சியம் செய்து விட்டதாக சந்தேகப்பட்ட பொழுதெல்லாம் அவர்களைப் பொறுப்பிலிருந்து நீக்கியதும் கைது செய்ததும் தியேர் மீது செய்யப்பட்ட கேலியே. சாதாரண திவால் காரணத்திற்காக லியோனில் ஆறு நாட்கள் சிறைவாசம் செய்த கம்யூன் உறுப்பினர்களில் ஒருவர்* பொய்யான பெயரைக் கொடுத்து உள்ளே நுழைந்த பொழுது கம்யூன் அவரை வெளியேற்றியது, கைது செய்தது, ஆனுல் கள்ளக் கையொப்பமிட்ட ழூல் ஃபாவர் அன்று இன்னும் வெளிநாட்டு அமைச்சராக இருந்தார், பிரான்சை பிஸ்மார்க்குக்கு இன்னும் விற்பனை செய்து கொண்டிருந்தார், முன்மாதிரியான பெல்ஜிய அரசாங்கத்துக்கு ஆணைகளை இன்னும் வெளியிட்டுக் கொண்டிருந்தார் என்றுல் இது அவரை வேண்டுமென்றே அவமதித்ததாகாதா? ஆனுல் தான் தவறே செய்ய முடியாது என்று கம்யூன் பாசாங்கு செய்யவில்லை (அப்பாசாங்கே பழைய ரகத்தைச் சேர்ந்த எல்லா அரசாங்கங்களுக்கும் உரிய குணும்சம்) என்பது உண்மையே. என்ன செய்தோம், என்ன கூறினேும் என்று எல்லாவற்றையும் அது வெளியிட்டது, தன்னுடைய எல்லாக் குறைகளையும் பொதுமக்களிடம் எடுத்துக் கூறியது.

ஒவ்வொரு புரட்சியிலும் அதன் உண்மையான பிரதிநிதிகளின் தரப்பில் வேறு ரகத்தைச் சேர்ந்த மனிதர்கள் குறுக்கிடுகிருர்கள். அவர்களில் சிலர் கடந்த காலப் புரட்சிகளில்

---

* —பிளன்ஷே.—ப-ர்.

உயிர் தப்பியவர்களாக, அவற்றின் விசுவாசிகளாக இருப்பார்கள். அவர்களுக்கு இன்றைய இயக்கத்தைப் பற்றி நுண்ணறிவு இல்லாத போதிலும் அவர்கள் தம்முடைய நேர்மையாலும் துணிவாலும் அல்லது வெறும் மரபின் வலிமையினாலும் இன்னும் மக்களின் மீது செல்வாக்கைக் கொண்டவர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் வெறும் வாய் வீச்சுப் பேர்வழிகளாக இருப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு வருடமும் அப்பொழுதுள்ள அரசாங்கத்துக்கு எதிராக ஒரே விதமான பிரசங்கங்களை முழங்கி சிறந்த புரட்சிக்காரர்கள் என்ற பெயரைத் தவறுகப் பெற்றிருப்பார்கள். மார்ச் 18க்குப் பிறகும் இப்படிப்பட்ட சிலர் வந்தார்கள், சில சமயங்களில் அவர்கள் எப்படியோ சிறப்பான பங்கை வகித்தார்கள். அவர்களுடைய சக்தியைப் பொறுத்தமட்டில் இதற்கு முன்னர் நடைபெற்ற ஒவ்வொரு புரட்சியிலும் அதன் முழு வளர்ச்சியைத் துல்லியமாக இதே விதமான மனிதர்கள் தடுத்ததைப் போலவே அவர்களும் தொழிலாளி வர்க்கத்தின் மெய்யான இயக்கத்திற்குக் குந்தகம் விளைவித்தார்கள். அவர்கள் ஒரு தவிர்க்க முடியாத தீமையே. காலப் போக்கில் அவர்களை உதறிவிட்டு விடலாம், ஆனால் கம்யூனுக்கு அந்த அவகாசம் அனுமதிக்கப்படவில்லை.

கம்யூன் பாரிசில் ஏற்படுத்திய மாற்றத்தை ஒரு அற்புதம் என்றே சொல்ல வேண்டும்! இரண்டாம் பேரரசின் வெளிப்பகட்டான பாரிசினுடைய சுவடு கூட இனி அங்கு இல்லை. பிரிட்டிஷ் நிலப்பிரபுக்கள், ஐரிஷ் absenteeists[60] அமெரிக்காவின் முன்னாளைய அடிமை உடைமையாளர்கள் மற்றும் புதுப் பவிசுக்காரர்கள், ருஷ்யாவின் முன்னாளைய பண்ணையடிமை உடைமையாளர்கள் மற்றும் வல்லாச்சிய மேற்குடி நிலப்பிரபுக்கள் கூடுமிடமாகப் பாரிஸ் இனி இல்லை. பிணக்கிடங்கில் ஒரு பிரேதம் கூட இல்லை, இரவு நேரக் கொள்ளைகள் இனி இல்லை, திருட்டுகள் கூட அநேகமாக இல்லை. உண்மையைச் சொல்வதென்றால் 1848 பிப்ரவரி நாட்களுக்குப் பிறகு முதல் தடவையாக பாரிஸ் தெருக்கள்—எவ்விதமான போலீஸ் காவலும் இல்லாமலே—பாதுகாப்பாக இருந்தன.

''கொலை, திருட்டு, தனி நபர்களின் மீது தாக்குதல்கள் ஆகியவற்றைப் பற்றி நாம் இனி கேள்விப்படவில்லை. போலீஸ்காரர்கள் தங்களுடைய கன்சர்வெட்டிவ் நண்பர்கள் அனை

வரையும் தங்களுடன் வெர்சேய்க்கு இழுத்துக் கொண்டு போய்விட்டது போலத் தோன்றுகிறது'' என்று கம்யூனின் உறுப்பினர் ஒருவர் கூறினர்.

விபசாரிகள் தங்களுடைய பாதுகாவலர்களின்—குடும்பத்தை, மதத்தை, எல்லாவற்றுக்கும் மேலாக சொத்துடைமையை ஆதரித்து ஓடிவந்தவர்களின்—நறுமணத்தை மறுபடியும் முகர்ந்தார்கள். அவர்களுக்குப் பதிலாக சிறந்த பழங் காலப் பெண்களைப் போல வீரமும் உயர் பண்புகளும் விசுவாசமும் நிறைந்த உண்மையான பாரிஸ் நகரத்துப் பெண்கள் மறுபடியும் மேற்பரப்பில் தோன்றினர்கள். உழைக்கின்ற, சிந்திக்கின்ற, போராடுகின்ற, இரத்தம் கொட்டுகின்ற அதன் வரலாற்று ரீதியான முன்முயற்சியை உணர்ந்த உற்சாகத்தில் ஜொலிக்கின்ற பாரிஸ் ஒரு புதிய சமூகத்தை உத்வேகத்துடன் நிர்மாணிப்பதில் வாயிற் கதவுகளுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த காட்டுமிராண்டிகளை அநேகமாக மறந்துவிட்டது!

பாரிசிலிருந்த புதிய உலகத்துக்கு எதிராக வெர்சேயிலிருந்த பழைய உலகத்தைப் பாருங்கள். அங்கே செத்துப் போன ஆட்சி முறைகள் எல்லாவற்றின் ஆவிகள்; முறைமைவாதிகள், ஆர்லியான்வாதிகள் ஆகியோரடங்கிய கும்பல் தேசியத்தின் பிரேதத்தைக் குதறிப் போடத் துடிக்கின்றது. இவர்களோடு மிகப் பழங் காலத்திய குடியரசுவாதிகளின் வாலும் சேர்ந்திருந்தது. இவர்கள் தேசிய சபையில் தாங்கள் இருப்பதன் மூலம் அடிமை உடைமையாளர்களின் கலகத்தை அங்கீகாரம் செய்தவர்கள்; நாடாளுமன்றக் குடியரசிற்குத் தலைமை வகித்த கிழட்டுக் கோமாளியின் ஆணவத்தின் மூலமாக இந்த நாடாளுமன்றக் குடியரசு நீடிப்பதில் நம்பிக்கை வைத்தவர்கள்; தங்களுடைய கோரமான கூட்டங்களை ழே-டெ-போமில்* நடத்தியதன் மூலம் 1789ம் வருடத்தைக் கேலி செய்தவர்கள். பிரான்சில் செத்துப் போன எல்லாவற்றுக்கும் பிரதிநிதியான சபை இதுவே. அதில் இன்னும் உயிர் இருப்பதாக ஏதேனும் அறிகுறி தோன்று

---

* ழே-டெ-போம்: 1789ம் வருடத்திய தேசிய சபை தன்னுடைய பிரபலமான முடிவைச் செய்த பந்து விளையாட்டு மைதானம். (1871ம் வருட ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்சின் குறிப்பு.)—ப-ர்.

எண்ணிக்கையில் குறைவாகவும் தன்மையில் நம்பத் தகாதவை யாகவும் இருந்தன. உடனே வெர்சேய்க்கு தேசியக் காவற்படையையும் தொண்டர்களையும் அனுப்பி உதவி புரியும்படி அவர் மாநிலங்களைக் கேட்டுக் கொண்டார். ஆனால் அதற்குக் கிடைத்த பதில் உறுதியான மறுப்பே. பிரெட்டனி மட்டும் சில ஷுவான்களை[63] அனுப்பி வைத்தது. வெள்ளைக் கொடியின் கீழ் போர் புரிந்த அவர்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய மார்பில் ஏசுநாதரின் இதயம் வரையப்பட்ட வெள்ளைத் துணியை அணிந்திருந்தார்கள்; "Vive le Roi!" (அரசர் வாழ்க!) என்று முழங்கிக் கொண்டு போர் புரிந்தார்கள். இவ்வாறாக தியேர் தனக்கிருந்த மிதமிஞ்சிய அவசரத்தில் மாலுமிகள், கடற்படைக் காலாட்கள், போப்பின் ஸுவாவ்கள்* வலன்தேனுடைய காவலாளிகள் மற்றும் பியெத்ரீயின் போலீஸ்காரர்கள் மற்றும் mouchards** கொண்ட கதம்பப் படையை அமைத்துக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். பிஸ்மார்க் அனுப்பிக் கொண்டிருந்த போனப்பார்ட்டிஸ்ட் இராணுவத்தின் யுத்தக் கைதிகள் மட்டும் இல்லையென்றால் இந்த இராணுவம் கேலி செய்யப் படுகின்ற அளவுக்கு பலவீனமானதாக இருக்கும். ஆனால் பிஸ்மார்க்கோ ஒரு புறத்தில் உள்நாட்டுப் போர் நீடிக்கின்ற அளவுக்கு, மறு புறத்தில் வெர்சேய் அரசாங்கம் பிரஷ்யாவை முற்றிலும் சார்ந்திருக்கின்றபடி வைத்திருக்கக் கூடிய அளவுக்கு மட்டுமே போதிய எண்ணிக்கையில் அவர்களைக் கொடுத்தார். இந்த யுத்தத்தின் போது வெர்சேய் இராணுவத்தை வெர்சேய் போலீஸ் கண்காணிக்க வேண்டியிருந்தது. காவற்படையினர் அந்த இராணுவத்தை இழுத்துக் கொண்டு சென்று எப்பொழுதும் ஆபத்தான எல்லா இடங்களிலும் தாங்களும் சிக்கிக் கொள்ளும்படி ஆயிற்று. வீழ்ச்சியடைந்த கோட்டைகள் வெல்லப்படவில்லை—அவை விலை கொடுத்து வாங்கப்பட்டன. பாரிசின் எதிர்ப்பைத் தன்னுடைய போர்த்தந்திரத் திறமைகளினாலும் தன்னிடமுள்ள துப்பாக்கி ஈட்டிகளைக் கொண்டும் நொறுக்கி விட முடியாது என்பதைக் கம்யூன்வாதிகளின் வீரம் தியேருக்கு உணர்த்தியது.

---

* —பிரான்சிலிருந்த அல்ஜீரிய இராணுவ வீரர்கள்—ப-ர்.
** —ஒற்றர்களை.—ப-ர்.

இதற்கிடையில் மாநிலங்களோடு அவருடைய உறவுகள் மேன்மேலும் சிக்கலடைந்தன. தியேர் மற்றும் அவருடைய ''நிலவுடைமையாளர் சபைக்கு'' மகிழ்ச்சியைத் தருகின்ற வகையில் ஒரு அங்கீகாரச் செய்தி கூட வெர்சேய்க்கு வர வில்லை. அதற்கு மாறாக நடைபெற்றது. குடியரசை சந்தேகத் துக்கு இடமில்லாதபடி அங்கீகரித்தல், கம்யூன் சுதந்திரங் களை ஒத்துக் கொள்ளுதல், பதவிக் காலம் ஏற்கெனவே முடிந்து விட்ட தேசிய சபையைக் கலைத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பாரிசுடன் சமரசம் செய்யக் கோரி சிறிதுகூட மரியாதையற்ற முறையில் எழுதப்பட்ட மகஜர்களும் கடிதங்களும் எல்லாத் தரப்புக்களிலிருந்தும் அதிகமான எண்ணிக்கையில் வந்து கொண்டிருந்தபடியால் தியேரின் நீதித்துறை அமைச்சரான டியுஃபோர் ஏப்ரல் 23ந் தேதியன்று அரசு வழக்குரைஞர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், யாராவது ''சமரசம் என்ற பேச்சை'' எடுத்தாலே குற்றம் செய்ததாகக் கருதும்படி ஆணையிட்டார். பாரிசுக்கு எதிராக அவர் நடத்திய போரில் வெற்றியடை வதற்கு எத்தகைய வாய்ப்பும் இல்லாததைக் கண்ட தியேர் தன்னுடைய செயல்தந்திரத்தை மாற்றிக் கொள்ள முடிவு செய்தார். தேசிய சபைக்குத் தானே தயாரித்துக் கொடுத்த புதிய முனிசிபல் சட்டத்தின் அடிப்படையில் ஏப்ரல் 30ந் தேதியன்று நாடு முழுவதும் முனிசிபல் தேர்தல்களை நடத்த உத்தரவிட்டார். அவருடைய நகரவைத் தலைவர்களின் சூழ்ச்சிகள், போலீஸ் பயமுறுத்தல்கள் ஆகியவற்றினால் மாநிலங்களின் தேர்தல்களில் சாதகமான முடிவைப் பெற்று தேசிய சபைக்கு எக்காலத்திலும் இல்லாத தார்மிக அதி காரத்தை அதற்குக் கொடுப்பதற்கும் கடைசியாகவாவது பாரிசை வெற்றிகொள்ளத் தேவையான ஆள்பலத்தை மாநி லங்களிலிருந்து பெறுவதற்கும் இயலும் என்று அவர் நம்பினார்.

அவருடைய அறிக்கைகளில் மிகவும் பிரமாதப்படுத்தப் பட்ட பாரிசுக்கு எதிராக அவர் நடத்திய கொள்ளைக்கார யுத்தத்துடனும் பிரான்ஸ் முழுவதிலும் ஒரு பயங்கரமான ஆட்சியை நிறுவுவதற்கு அவருடைய அமைச்சர்கள் செய்த முயற்சிகளுடனும் தியேர் ஆரம்பத்திலிருந்தே சமரசம் என்ற ஒரு துணை நாடகத்தைச் சேர்க்க முயன்றார். அந்தத் துணை நாடகம் ஒன்றுக்கு மேற்பட்ட நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படும் என்று அவர் கருதினார். மாநிலங்களை ஏமாற்று

வதும் பாரிசிலுள்ள மத்தியதர வர்க்கப் பகுதியை வலையில் விழும்படி செய்வதும் எல்லாவற்றுக்கும் மேலாக தேசிய சபையில் போலி குடியரசுவாதிகள் தியேர் மீதுள்ள நம்பிக்கைக்குப் பின்னால் பாரிசுக்கு எதிரான தங்களுடைய துரோகத்தை மறைத்துக் கொள்வதற்கு வாய்ப்பு தருவதுமே அந்த நோக்கங்கள். மார்ச் 21ந் தேதியன்று இராணுவம் இன்னும் இல்லாமலிருந்த பொழுதே தியேர் தேசிய சபையில்

''நடப்பது நடக்கட்டும், நான் பாரிசுக்கு இராணுவத்தை அனுப்ப மாட்டேன்''

என்று தெரிவித்தார்.

மார்ச் 27ந் தேதியன்று அவர் மறுபடியும் கூறினார்:

''குடியரசு என்பது சாதிக்கப்பட்ட உண்மை என்பதை நான் காண்கிறேன். அது இருக்க வேண்டும் என்று நான் உறுதியாக முடிவு செய்திருக்கிறேன்''.

உண்மையில் அவர் லியோனிலும் மார்ஸேயிலும் குடியரசின் பெயரால் புரட்சியை ஒடுக்கினார்[64], அப்போதே வெர்சேயில் அவருடைய ''நிலவுடைமையாளர் சபையின்'' கூக்குரல் ''குடியரசு'' என்ற சொல்லை உச்சரிப்பதையே மூழ்கடித்தது. இந்தச் சாதனைக்குப் பிறகு அவர் ''சாதிக்கப்பட்ட உண்மையை'' உத்தேசித்த உண்மையாகக் குறைத்துக் கொண்டார். அவர் முன் ஜாக்கிரதையுடன் போர்டோவிலிருந்து வெளியேற்றிய ஆர்லியான் இளவரசர்கள் இப்பொழுது சட்டத்தை பகிரங்கமாக மீறி டிரியோவில் கூடி சூழ்ச்சிகளைத் திட்டமிடுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். பாரிஸ் மற்றும் மாநிலங்களிலிருந்து வந்த பிரதிநிதிகளோடு அவர் நடத்திய சகிக்க முடியாத கூட்டங்களின் போது முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள்—இவை காலத்துக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றவாறு தொடர்ச்சியாகத் தன்மையிலும் பண்பிலும் வேறுபட்டுக் கொண்டிருந்தாலும்—உண்மையில்

''லெகோன்ட் மற்றும் கிலெமான் தொமாவின் கொலையில் சம்பந்தப்பட்ட சில குற்றவாளிகளைப்''

பழிவாங்க வேண்டுவது அவசியம் என்ற அளவுக்கு மேல் ஒருபோதும் எட்டவில்லை.

நிச்சயமாக இதிலும், தியேர் 1830இல் லுயீ ஃபிலீப்பை மிகச் சிறந்த குடியரசாக ஒத்துக்கொண்டதைப் போல பாரிசும் பிரான்சும் திரு. தியேரை சாத்தியமான மிகச் சிறந்த குடியரசு என்று நிபந்தனையில்லாமல் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லாமலேயே புரிந்து கொள்ளப்பட்டது. இருப்பினும் அவர் தேசிய சபையில் தன்னுடைய அமைச்சர்களின் மூலமாக இந்தச் சலுகைகளுக்குத் தெரிவித்த அதிகாரபூர்வமான விளக்கவுரைகளில் இவற்றைப் பற்றியும் சந்தேகப்படும்படி வலிந்து முயற்சி செய்தது மட்டுமல்லாமல் தன்னுடைய டியுஃபோரை விடாதே என்று தூண்டினார். பழைய ஆர்லியான்வாத வழக்குரைஞரான டியுஃபோர் இப்பொழுது 1871இல் தியேரின் கீழ் முற்றுகை நிலையில் நியாயப்படுத்துபவராக இருந்ததைப் போல 1839இல் லுயீ ஃபிலீப்பின் கீழும் 1849இல் லுயீ போனபார்ட்டின் ஜனாதிபதிக் காலத்தின் போதும் எப்பொழுதும் நியாயப்படுத்தியவரே. அவர் அமைச்சர் பதவி வகிக்காதிருந்த பொழுது பாரிஸ் முதலாளிகளுக்காக வாதாடி பெருஞ் செல்வத்தைத் திரட்டினார்; அதே நேரத்தில் தானே உருவாக்கிய சட்டங்களுக்கு எதிராக வாதாடி அரசியல் முதலெடுத்தார். பாரிஸ் வீழ்ச்சிக்குப் பிறகு பிரான்சில் குடியரசுவாத சுதந்திரங்களின் கடைசி எச்சங்களையும் அழிக்கின்ற ஒடுக்குமுறைச் சட்டங்களின் தொகுதியை அவர் தேசிய சபையில் அவசரமாக நிறைவேற்றியதோடு, அவருடைய கருத்தின்படி இராணுவ விசாரணை என்ற மிகவும் நீண்ட கால முறையைக் குறுக்கிப் புதுவிதமான, கொடுமையான நாடுகடத்தும் சட்டத்தை நிறைவேற்றிப் பாரிசின் தலைவிதியை முன்னரே சுட்டிக் காட்டினார். 1848ம் வருடப் புரட்சி அரசியல் குற்றங்களுக்கு மரண தண்டனையை ஒழித்து அதற்குப் பதிலாக நாடுகடத்தும் சட்டத்தைக் கொண்டு வந்தது. கில்லட்டின் ஆட்சிமுறையை மறுபடியும் ஏற்படுத்துவதற்கு லுயீ போனபார்ட்டுக்குக்—குறைந்த பட்சம் கொள்கையளவில்—தைரியம் கிடையாது. பாரிசுக்காரர்கள் கலகக்காரர்கள் அல்ல, கொள்ளைக்காரர்களே—என்று கூறும் துணிவை இன்னும் பெறுதிருந்த "நிலவுடைமையாளர் சபை" எதிர் காலத்தில் பாரிசைப் பழிவாங்குவதை டியுஃபோரின் நாடுகடத்தும் சட்டத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. தியேர் எதிர்பார்த்ததைப் போலவே அவருடைய சமரச நாடகம் "நிலவுடைமை

யாளர் சபையிலிருந்து'' கோபம் நிறைந்த கண்டனங்களைத் தூண்டாவிட்டால்[65] அவர் இத்தகைய சூழ்நிலைகளில் இதைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. இச்சபை அதன் முட்டாள்தனத்தில் அந்த நாடகத்தையோ அல்லது போலித்தனம், பாசாங்கு, தாமதம் செய்தலின் அவசியங்களையோ புரிந்து கொள்ள முடியவில்லை.

ஏப்ரல் 30ந் தேதி முனிசிபல் தேர்தல்கள் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில் தியேர் தன்னுடைய சமரசக் காட்சிகளில் ஒன்றை ஏப்ரல் 27ல் நடத்திக் காட்டினார். அவர் தேசிய சபையில் நிகழ்த்திய உணர்ச்சிகரமான சொல்மாரிக்கு நடுவில் பின்வருமாறு கூறினார்:

''குடியரசுக்கு எதிராக ஒரே ஒரு சதி—பாரிஸ் சதி—இருக்கிறது, இது பிரெஞ்சு இரத்தத்தைக் கொட்டச் செய்கின்றது. ஆனால் இதை நான் மீண்டும் மீண்டும் திருப்பிக் கூறுகிறேன்: புனிதமற்ற ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் அவற்றைக் கீழே போடட்டும். உடனே தண்டனை கொடுப்பது நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்படும். மிகவும் குறைந்த எண்ணிக்கையிலிருக்கும் குற்றவாளிகளைத் தவிர மற்ற எல்லோருக்கும் அது பொருந்தும்''.

''நிலவுடைமையாளர் சபையின்'' பிரதிநிதிகள் ஆவேசத்தோடு குறுக்கிட்ட பொழுது அவர் பின்வருமாறு கூறினார்:

''கனவான்களே! நான் சொன்னது தவறு? உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். பதில் சொல்லுங்கள். குற்றவாளிகள் மிகவும் குறைந்த எண்ணிக்கைதான் என்ற உண்மையை நான் வெளியிட்டதற்காக நீங்கள் மெய்யாகவே வருந்துகிறீர்களா? ஜெனரல் கிலெமான் தொமா மற்றும் ஜெனரல் லெகோன்ட்டைக் கொலை செய்தவர்கள் மிக அபூர்வமான விதிவிலக்கைச் சேர்ந்தவர்கள் என்பது நமக்கு ஏற்பட்டிருக்கும் துன்பங்களுக்கு நடுவே ஒரு அதிர்ஷ்டமல்லவா?''

தியேர் தன்னுடைய நாடாளுமன்றப் பிரசங்கத்தை மோகினிப் பாட்டு என்று பெருமையாக நினைத்தாலும் பிரான்ஸ் அதைச் செவி மடுக்கவில்லை. பிரான்சில் இன்னும் எஞ்சியிருந்த 35,000 சமூகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 7,00,000 முனிசிபல் கவுன்சிலர்களில் முறைமைவாதிகள், ஆர்லியான்வாதிகள்[66] மற்றும் போனப்பார்ட்டிஸ்டுகள்

8,000 நபர்கள் கூட இல்லை. இதற்குப் பிறகு நடைபெற்ற துணைத் தேர்தல்களின் முடிவுகளும் இன்னும் அதிக அளவுக்குத் தீர்மானமான எதிர்ப்பைக் காட்டின. ஆகவே தேசிய சபை தனக்கு மிகவும் தேவைப்பட்ட ஆள்பலத்தை மாநிலங்களிலிருந்து பெறுவதற்குப் பதிலாக நாட்டின் பொதுச் சித்தத்தின் வடிவம் என்ற தார்மிக சக்திக்கான கடைசி உரிமையையும் இழந்தது. இந்தத் தோல்வியைப் பூர்த்தி செய்கின்ற விதத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரான்சிலுள்ள எல்லா நகரங்களின் முனிசிபல் கவுன்சில்களும் தகாத வழியில் அதிகாரத்தைக் கைப்பற்றிய வெர்சேய் சபைக்கு எதிராக போர்டோவில் ஒரு சபையைக் கூட்டுவோம் என்று பகிரங்கமாக பயமுறுத்தின.

இதன் பிறகு பிஸ்மார்க் நெடுங் காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த தீர்மானமான நடவடிக்கைக்குரிய நேரம் வந்துவிட்டது. முடிவான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தூதர்களை ஃபிராங்புர்ட்டுக்கு அனுப்பும்படி அவர் தியேருக்கு ஆட்சியாளர் என்ற முறையில் ஆணையிட்டார். தியேர் தனது எசமானருடைய உத்தரவுக்குப் பணிவுடன் கீழ்ப்படிந்து தனக்கு நம்பிக்கையான ழூல் ஃபாவரையும் அவருக்கு உதவியாக புயேர்-கெர்தியேயையும் அவசரமாக அனுப்பினார். புயேர்-கெர்தியே ருவானில் பருத்தி நூற்பாலை வைத்திருந்த ''மேன்மகன்'', இரண்டாம் பேரரசை அடிமைத்தனம் என்று சொல்லுகின்ற அளவுக்குத் தீவிரமாக ஆதரித்தவர். இரண்டாம் பேரரசு இங்கிலாந்துடன் செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தம் அவருடைய சொந்தத் தொழிலுக்குக் குந்தகம் விளைவித்தது என்பதைத் தவிர அவர் இரண்டாம் பேரரசில் வேறு எந்தக் குறையும் ஒருக்காலும் கண்டிராதவர். போர்டோவில் தியேரின் நிதி அமைச்சராகப் பதவியேற்ற உடனே அவர் அந்தப் ''புனிதமில்லாத'' ஒப்பந்தத்தைக் கண்டனம் செய்தார், அது அநேகமாக ரத்துச் செய்யப்படும் என்று சூசகமாகக் குறிப்பிட்டார். முந்திய சர்வதேச ஒப்பந்தங்கள் எதுவும் வழியில் தடையாக இல்லை என்று அவர் குறிப்பிட்ட அல்சாசுக்கு எதிராக பழைய காப்பு வரிகளை உடனடியாக அமுல்நடத்துவதற்கு (பிஸ்மார்க்கைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல்) வீணான முயற்சியைச் செய்கின்ற அளவுக்கு அகந்தை கொண்டார். ருவானில் கூலியைக் குறைப்பதற்கு எதிர்ப்புரட்சி ஒரு வழி என்று

கருதியவர், பிரான்சில் தன்னுடைய பண்டங்களின் விலைகளை உயர்த்துவதற்கு பிரெஞ்சு மாநிலங்களை ஒப்படைப்பது ஒரு வழி என்று கருதிய இந்த நபர் தியேரின் கடைசியான, எல்லாவற்றுக்கும் மகுடமிட்டதைப் போன்ற துரோகத்துக்கு உதவி செய்வதற்கு ழூல் ஃபாவருக்கு உதவி செய்பவனாகத் தியேரினால் பொறுக்கியெடுக்கப்படுவது முன்னரே விதிப்படி முடிவு செய்யப்பட்டதாகத்தானே இருக்க வேண்டும்?

இந்த அற்புதமான தூதர்கள் இருவரும் ஃபிராங்புர்ட்டுக்கு வந்த உடனே அடாவடிக்காரரான பிஸ்மார்க் அவர்களிடம் ''பேரரசை மறுபடியும் ஏற்படுத்துவது அல்லது சமாதானத்தைப் பற்றி என்னுடைய ஷரத்துக்களை நிபந்தனையில்லாமல் ஒத்துக் கொள்வது''—இந்த இரண்டில் எதைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள் என்று இறுமாப்புடன் கேட்டார். யுத்த நட்ட ஈட்டுக் கடனைக் கொடுக்க வேண்டிய தவணைக் காலத்தைக் குறைப்பது, பிரான்சிலுள்ள நிலைமைகளைப் பற்றி பிஸ்மார்க்குக்குத் திருப்தி ஏற்படுகின்றவரை பாரிஸ் கோட்டைகளைப் பிரஷ்யத் துருப்புகள் தொடர்ந்து வைத்திருப்பது ஆகியவை இந்த ஷரத்துக்களில் இடம் பெற்றிருந்தன. இவ்வாறாக பிரான்சின் உள்நாட்டு விவகாரங்களில் தலைமையான நடுவராக பிரஷ்யா அங்கீகரிக்கப்பட வேண்டும்! இதற்குக் கைம்மாறாக பாரிசை அழிப்பதற்காக சிறைப்பிடிக்கப்பட்ட போனப்பார்ட்டிஸ்ட் இராணுவத்தை ஒப்படைக்கவும் அதற்கு சக்கரவர்த்தி வில்ஹெல்மின் துருப்புகளின் உதவியை நேரடியாகக் கொடுக்கவும் அவர் தயாராயிருந்தார். பாரிசை ''அமைதிப்படுத்த வேண்டும்'' என்று நிபந்தனையின் பேரில் அவர் நட்ட ஈட்டுத் தொகையின் முதல் தவணையை ஒத்திப் போட்டுத் தான் கொடுத்த சொல்லைக் காப்பாற்றுவேன் என்று காட்டிக்கொண்டார். தியேரும் அவருடைய தூதர்களும் இந்த இரையை ஆர்வமாக விழுங்கினார்கள். அவர்கள் மே 10ந் தேதியன்று சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்கள், 18ந் தேதியன்று தேசிய சபை அதை அங்கீகரிக்குமாறு செய்தார்கள்.

சமாதான உடன்படிக்கையின் முடிவுக்கும் போனப்பார்ட்டிஸ்ட் கைதிகள் திரும்பி வருவதற்கும் இடையிலுள்ள காலத்தில் தியேர் தன்னுடைய சமரச நாடகத்தைத் தொடர்ந்து நடத்துவது அவசியமென்று அதிகமாக உணர்ந்தார், ஏனென்றால் பாரிஸ் படுகொலைக்குத் தயாரிப்புகள் நடைபெறுவதைத்

தனது குடியரசுவாத ஆதரவாளர்கள் பார்க்காதிருக்கும்படி அவர்களின் கண்களை மறைப்பதற்கு ஒரு சாக்குத் தேவைப் பட்டது. மிகப் பிந்திய காலமான மே 8ந் தேதியன்று கூட மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த சமரசவாதிகளின் தூதுக் குழுவிடம் அவர் பின்வருமாறு தெரிவித்தார்:

''சரணுகதி அடைவதென்று கலகக்காரர்கள் எப்பொழுது முடிவு செய்தாலும் ஜெனரல்கள் கிலெமான் தொமா மற்றும் லெகோன்ட்டின் கொலேகாரர்களைத் தவிர மற்ற அனைவருக்கும் பாரிஸ் நகரத்தின் கதவுகள் ஒரு வார காலத்துக்கு அகலமாகத் திறந்து விடப்படும்''.

சில நாட்களுக்குப் பிறகு, இந்த வாக்குறுதியைப் பற்றி ''நிலவுடைமையாளர் சபை'' ஆத்திரத்தோடு கோரிய விளக்கத்தைக் கொடுக்க மறுத்தார். ஆனால் பின்வரும் குறிப்பிடத்தக்க சூசகத்தைக் கூறினார்:

''உங்களிடையே அவசரக்காரர்கள், அளவுக்கு மீறி வேகமாகப் போக வேண்டும் என்று விரும்புகின்ற மனிதர்கள் இருக்கிறார்கள் என்று நான் சொல்கிறேன். அவர்கள் இன்னும் ஒரு வாரத்துக்குப் பொறுக்க வேண்டும். அதற்குப் பிறகு இனி ஆபத்துக் கிடையாது. அந்தக் கடமை அவர்களுடைய துணிவுக்கும் தகுதிகளுக்கும் பொருத்தமான விகிதத்தில் இருக்கும்''.

தியேர் சீக்கிரத்தில் பாரிசுக்குள் நுழைய முடியும் என்று மாக்மாஹோன் உறுதியளிக்க முடிந்த உடனே அவர் தேசிய சபையில் பின்வருமாறு கூறினார்:

''சட்டத்தை என் கைகளில் எடுத்துக்கொண்டு பாரிசுக்குள் நுழைவேன். படைவீரர்களின் உயிர்களை பலியிட்ட, பொது நினைவுச் சின்னங்களை இடித்த போக்கிரிகள் செய்த குற்றங்கள் எல்லாவற்றுக்கும் முழுமையான பரிகாரம் செய்ய வேண்டுமென்று கோருவேன்''.

முடிவு செய்ய வேண்டிய விநாடி நெருங்கி வந்த பொழுது ''நான் இரக்கமில்லாமல் நடந்து கொள்வேன்'' என்று அவர் தேசிய சபையில் கூறினார். உனக்கு இனி அழிவே என்று பாரிசை நோக்கிக் கூறினார். உங்கள் இதயங்கள் திருப்தி அடைகின்ற அளவுக்கு பாரிஸ் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளுங்கள், அதற்கு அரசாங்கத்தின் அனுமதி உங்களுக்குண்டு

என்று தன்னுடைய போனப்பார்ட்டிஸ்ட் கொள்ளைக்காரர்களிடம் கூறினர். கடைசியில் மே 21ந் தேதியன்று ஜெனரல் டுவேய் நுழையும்படி பாரிஸ் கதவுகள் துரோகத்தால் திறக்கப்பட்ட பொழுது மே 22ந் தேதியில் தன்னுடைய சமரச நாடகத்தைப் பிடிவாதமாகப் புரிந்துகொள்ள விரும்பாமலிருந்த ''நிலவுடைமையாளர் சபையிடம்'' அதன் ''நோக்கத்தை'' அவர் வெளியிட்டார்:

''நம்முடைய நோக்கத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று சில நாட்களுக்கு முன்பு நான் உங்களிடம் கூறினேன். அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதை உங்களிடம் தெரிவிப்பதற்கு இன்று வந்திருக்கிறேன். கடைசியில் ஒழுங்குமுறை, நீதி, நாகரிகத்துக்கு வெற்றி கிடைத்துவிட்டது!''

ஆம், வெற்றி கிடைத்துவிட்டது. முதலாளித்துவ அமைப்பின் நாகரிகமும் நீதியும் அந்த அமைப்பின் அடிமைகளாக, அடக்கப்படுபவர்களாக இருப்பவர்கள் தமது எசமானர்களை எதிர்த்துக் கிளம்புகின்ற பொழுதெல்லாம் கோரமாகவே வெளிப்படுகின்றன. அப்பொழுது இந்த நாகரிகமும் நீதியும் ஒளிவுமறைவில்லாத காட்டுமிராண்டித்தனமாகவும் சட்டமே இல்லாத பழிவாங்குதலாகவும் துலாம்பரமாகத் தெரிகின்றன. செல்வத்தை அபகரிப்பவர்களுக்கு எதிராக இச்செல்வத்தை உற்பத்தி செய்பவர்கள் நடத்தும் வர்க்கப் போராட்டத்தில் ஒவ்வொரு புதிய நெருக்கடியும் இந்த உண்மையை மிகப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகிறது. 1871ம் வருடத்தில் நடைபெற்ற வர்ணிக்க முடியாத பெரும்பழிக்கு முன்னுல் 1848 ஜூன் மாதத்தில் முதலாளி வர்க்கம் செய்த அக்கிரமங்கள் கூட மறைந்து விடுகின்றன. வெர்சேய் துருப்புகள் உள்ளே நுழைந்த பிறகு வாரம் முழுமையும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட பாரிஸ் மக்கள் தங்களைச் சுய பலியாக அர்ப்பணித்த வீரம் அவர்களுடைய லட்சியத்தின் பெருமையைத் துலக்கமாகப் பிரதிபலிப்பதைப் போலவே படைவீரர்களின் வெறுக்கத்தக்க செயல்கள் அவர்கள் கூலிப் படைகளாக, பழிவாங்குபவர்களாக வந்து நாகரிகத்தின் உள்ளார்ந்த ஆன்மாவைப் பிரதிபலித்தன. சண்டை முடிந்த பிறகு அதனுல் கொல்லப்பட்ட மனிதர்களின் பிரேதங்கள் மலையாகக் குவிந்து கிடந்தன; அவற்றை

எப்படி அப்புறப்படுத்துவதென்பது மாபெரும் பிரச்சினை யாக இருக்குமானால் அது ஒரு அற்புதமான நாகரிகம் என்பது மெய்யே!

தியேர் மற்றும் அவருடைய வேட்டை நாய்களின் நடத்தைக்கு ஒரு இணையைப் பார்க்க வேண்டுமென்றால் நாம் ஸூல்லா மற்றும் ரோம் நகரத்தின் இரண்டு மும்மூர்த்திகள்[67] காலத்துக்குப் போக வேண்டும். அதே மாதிரியான, ஈவிரக்கமில்லாத, மொத்தமான படுகொலைகள்; படுகொலையில் அதே மாதிரியாக வயது, பால் ஆகியவற்றைப் புறக்கணித்தல்; கைதிகளைச் சித்திரவதை செய்கின்ற அதே முறை; அதே மாதிரியாகத் துன்புறுத்தல், ஆனால் இம்முறையில் மொத்த வர்க்கத்துக்குமே; மறைந்துவிட்ட தலைவர்கள் தப்பிவிடக் கூடாது என்பதற்காக அதே மாதிரியாகக் காட்டுமிராண்டித்தனமாக வேட்டையாடுதல்; அதே முறையில் அரசியல் மற்றும் தனிப்பட்ட எதிரிகளைக் காட்டிக் கொடுத்தல்; இந்தப் போராட்டத்திற்கு முற்றிலும் சம்பந்தமில்லாதவர்களை அதே மாதிரியாக ஈவிரக்கமற்ற முறையில், காட்டுமிரண்டித்தனமாகப் படுகொலை செய்தல். சில வித்தியாசங்கள் மட்டுமே உண்டு. தண்டிக்கப்பட்டவர்களை மொத்தமாக சுட்டுக்கொல்வதற்கு ரோமானியர்களிடம் பல்குழல் துப்பாக்கிகள் கிடையாது. அவர்கள் ''கைகளில் சட்டத்தை வைத்திருக்கவில்லை'', உதடுகள் ''நாகரிகம்'' என்று கூக்குரலிடவில்லை.

இந்த பயங்கரங்களுக்குப் பிறகு முதலாளித்துவ நாகரிகத்தின் மறு பக்கத்தை—மேலும் கொடூரமான பக்கத்தை—அதன் சொந்தப் பத்திரிகைகள் வர்ணிப்பதைப் பாருங்கள்!

ஒரு லண்டன் கன்சர்வேடிவ் பத்திரிகையின் நிருபர் பாரிசிலிருந்து பின்வருமாறு எழுதினார்:

''தூரத்தில் எப்பொழுதாவது துப்பாக்கி வேட்டுச் சத்தம் இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறது; காயமடைந்த பரிதாபப் பிறவிகள் மருத்துவ உதவியில்லாமல் பெர்லாஷேஸ் கல்லறையில் நடுகற்களுக்கு நடுவில் செத்துக் கொண்டிருக்கிறார்கள்; பாதாளத்திலிருக்கும் கல்லறைகளின் வளைந்து செல்லும் வழிகளில் 6,000 கலகக்காரர்கள் நம்பிக்கை யிழந்து வேதனையோடு சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள்; பரிதாபத்துக்குரிய அந்த நபர்கள் பல்குழல் துப்பாக்கிகளி

ஞல் சுட்டுக் கொல்லப்படுவதற்காக நெருக்களில் திரளாக ஓட விரட்டப்படுகிறார்கள்; சாராயம், பில்லியர்ட்ஸ் மற்றும் டோமினோ விளையாட்டுக்காரர்கள் உணவு விடுதிகளில் நிறைந்திருப்பதைப் பார்ப்பதற்கே அருவருப்பாக இருக்கிறது; நெடுஞ்சாலைகளில் பகட்டான பெண்கள் உலவிக் கொண்டிருக்க, நாகரிகமான விடுதிகளில் cabinets particuliers* இருந்து வருகின்ற கேளிக்கைச் சத்தம் இரவின் அமைதியைக் குலைக்கிறது''.

கம்யூனால் தடை செய்யப்பட்ட *Journal de Paris*[68] என்ற வெர்சேய் ஆதரவுப் பத்திரிகையில் எட்வார் எர்வே பின்வருமாறு எழுதினார்:

''நேற்று பாரிஸ் குடிமக்கள்(1) தங்களுடைய திருப்தியை வெளிக்காட்டிய முறை விளையாட்டுத்தனமாக இருந்தது. போகப் போக இது மோசமடையும் என்று நாங்கள் அஞ்சுகிறோம். தற்பொழுது பாரிஸ் ஒரு விழாக் கொண்டாட்ட நாளைப் போல இருக்கிறது. அது பொருத்தமல்ல தாம் Parisiens de la décadence** என்று சொல்லப்படக் கூடாதென்றால் இப்படிப்பட்ட செயல்கள் நிறுத்தப்பட வேண்டும்''.

அவர் அடுத்தபடியாக டாசிட்டஸ் எழுதியிருப்பதை மேற்கோள் காட்டினார்:

''அந்த பயங்கரமான போராட்டத்துக்கு மறுநாள் காலையில்—அது முற்றிலும் முடியாதிருக்கின்ற பொழுதே—தகுதியிழந்த தரங்கெட்ட ரோம் அதன் உடலை அழித்து உள்ளத்தை அசுத்தப்படுத்துகின்ற ஒழுக்கங்கெட்ட சேற்றில் மறுபடியும் மூழ்கத் தொடங்கியது.—alibi proelia et vulnera, alibi balneae popinaeque (இங்கே சண்டைகளும் காயங்களும், அங்கே குளிப்பறைகளும் விருந்துகளும்)''.

இங்கே ''பாரிஸ் மக்கள்'' என்று சொல்லும் பொழுது பாரிஸ் நகரத்திலுள்ள தியேர் கூட்டத்தை, வெர்சேய், ஸான்-டெனீ, ரூயை, மற்றும் ஸான் ஜெர்மேனிலிருந்து திரும்பி வருகின்ற francs-fileurs பாரிசைக் குறிப்பிடுகிறேன் என்று எடுத்துக் கூறுவதற்கு எர்வே தவறிவிட்டார்; இது உண்மையிலேயே ''வீழ்ச்சிக் காலத்திய'' பாரிஸ்.

உழைப்பை அடிமைப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட அந்த அருவருக்கத்தக்க நாகரிகம் ஒவ்வொரு இரத்தக் களறியிலும் தன்னுடைய வெற்றிகளில் புதிய,

*—தனி அறைகள்.—ப-ர்.

** —வீழ்ச்சிக் காலத்திய பாரிஸ் மக்கள்.—ப-ர்.

இன்னும் உயர்வான சமூகத்துக்காகத் தங்களைப் பலி கொடுக்கத் தயாராக இருந்த போராடுவோர்களின் புலம்பல் களை அவதூறு மற்றும் வேட்டையாடுதல் என்ற பேரிரைச் சலில்—அது உலக முழுவதும் எதிரொலிக்கப்படுகிறது— மூழ்கடித்துவிடுகிறது. கம்யூனின் பாரிஸ், தொழிலாளர் களின் மாசுமறுவற்ற பாரிஸ் திடீரென்று ''ஒழுங்குமுறை'' வேட்டை நாய்களால் ஒரு பேய்க்கூடமாக மாற்றப்படுகிறது. இந்தக் கோரமான மாற்றம் எல்லா நாடுகளையும் சேர்ந்த முதலாளி வர்க்கத்தினருடைய மனங்களுக்கு எதை நிரூபிக் கிறது? ஏன், கம்யூன் நாகரிகத்துக்கு எதிராகச் சதி செய்தது என்பதையே! வரலாற்றுக்குத் தெரிந்த எந்தச் சண்டை யிலும் இல்லாத அளவுக்கு எண்ணற்ற பாரிஸ் மக்கள் கம் யூனுக்காக உற்சாகத்துடன் மடிகிறார்கள். அது எதை நிரூபிக் கிறது? ஏன், கம்யூன் மக்களுடைய சொந்த அரசாங்க மல்ல, ஒரு சில குற்றவாளிகள் அதிகாரத்தைத் தகாத வழியில் பெற்றதையே! தடுப்பு அரண்களிலும் சிரச்சேதம் நடைபெறுகின்ற இடங்களிலும் பாரிஸ் பெண்கள் மகிழ்ச்சி யோடு தங்களை பலியிட்டுக் கொள்கிறார்கள். இது எதை நிரூபிக்கிறது? கம்யூன் என்ற பேய் அவர்களை ஹெக்கட் டாக்களாகவும்* மெகேராக்களாகவும்** மாற்றிவிட்டது என்பதையே! இரண்டு மாதகாலம் ஆட்சேபமில்லாத அதி காரத்தை வகித்த பொழுது கம்யூன் காட்டிய நிதானத்துக்கு அதன் தற்காப்பின் வீரம் மட்டுமே இணையாக இருக்கிறது. அது எதை நிரூபிக்கிறது? ஏன், கம்யூன் நிதானம், மனிதப்பண்பு என்ற முகமூடிக்குப் பின்னால் தன்னுடைய பேயுணர்ச்சிகளின் இரத்த வெறியை இரண்டு மாதங்கள் ஜாக்கிரதையாக மறைத்து வைத்துக் கொண்டிருந்த பிறகு தனது மரண வேதனையில் அவிழ்த்துவிட்டது என்பதையே.

தொழிலாளர்களின் பாரிஸ் தன்னுடைய வீரமிக்க சுய வேள்வியில் கட்டிடங்களையும் நினைவுச் சின்னங்களையும் நெருப்

---

* —கிரேக்கத் தொல்கதைகளில் சொல்லப்படுகின்ற நிலவுத் தெய்வம், மூன்று தலைகளும் உடல்களும் உள்ள பெண்; பாதாள உலகத்தின் ஆவிகளுக்கும் பேய்களுக்கும் கடவுள்.—ப-ர்.

**—கிரேக்கத் தொல்கதைகளில் சொல்லப்படுகின்ற மூன்று பழிவாங்கும் கடவுள்களில் ஒன்று. பெண் தெய்வம்; எரிச்சல் மற்றும் பொறாமையின் உருவகம்.—ப-ர்.

பில் கொளுத்தியது. பாட்டாளி வர்க்கத்தை அடிமைப்படுத்து பவர்கள் அதன் உயிருள்ள உடலைக் கண்ட துண்டமாக வெட்டும் பொழுது கட்டுக்குலையாத தங்களுடைய பழைய இருப்பிடங்களுக்குள் வெற்றிகரமாக நுழைய முடியும் என்று அவர்கள் ஒருக்காலும் எதிர்பார்க்கக் கூடாது. ''நெருப்பு வைத்து அழிக்கிறார்கள்!'' என்று வெர்சேய் அரசாங்கம் கூக்குரலிடுகிறது. வெகு தூரத்திலுள்ள கிராமம் உட்படத் தன்னுடைய எல்லா இச்சகமான ஆதரவாளர்களிடமும் ஒரு கோஷத்தை இரகசியமாகச் சொல்கிறது: ''எல்லா இடங்களிலுமுள்ள என்னுடைய எதிரிகளை, நெருப்பு வைப் பதே தொழிலாகக் கொண்டவர்கள் என்ற முறையில் வேட் டையாடுங்கள்''. சண்டை முடிந்த பிறகு ஏற்பட்ட ஏராள மான படுகொலைகளில் திருப்தியடைந்த அதே உலக முத லாளி வர்க்கம் செங்கல்லும் சுண்ணும்பும் இடிக்கப்படுவதைப் பார்த்து பீதியடைந்து நடுங்குகிறது!

அரசாங்கங்கள் ''கொல், நெருப்பு வை, அழித்துவிடு'' என்று தங்களுடைய கப்பற்படைகளுக்கு அதிகாரபூர்வமான அனுமதி கொடுக்கும் பொழுது அது நெருப்பு வைத்து அழிப் பதற்குத் தரப்படுகின்ற அனுமதியா? பிரிட்டிஷ் துருப்புகள் வாஷிங்டனிலுள்ள கப்பித்தோலியத்திற்கும் சீனச் சக்கர வர்த்தியின் கோடைக் கால அரண்மனைக்கும்வேண்டுமென்றே தீ வைத்த பொழுது அது நெருப்பு வைத்து அழிப்பதாகுமா? பிரஷ்யர்களை — இராணுவக் காரணங்களுக்காக அல்ல, கொடிய முறையில் பழிவாங்குகின்ற ஒரே நோக்கத்தோடு —உதாரணமாக, ஷாதொடேன் என்ற நகரம் மற்றும் எண் ணற்ற பல கிராமங்கள் மீது பெட்ரோல் ஊற்றி நெருப்பில் அழித்த பொழுது அது நெருப்பு வைத்து அழிப்பதாகுமா? தியேர் மக்கள் இருக்கின்ற வீடுகளுக்கு மட்டும் நெருப்பு வைக்க விரும்புகிறேன் என்ற சாக்கின் பேரில் ஆறு வார காலம் பாரிஸ் மீது குண்டு வீசித் தாக்கிய பொழுது அது நெருப்பு வைத்து அழிப்பதாகுமா? யுத்தத்தில் மற்ற எல்லா வற்றையும் போல நெருப்பும் ஒரு நியாயமான ஆயுதம். எதிரியிடமுள்ள கட்டிடங்கள் மீது நெருப்பு வைப்பதற் காக அவை குண்டு வீசித் தாக்கப்படுகின்றன. அவற்றைப் பாதுகாப்பவர்கள் பின்வாங்கிச் செல்ல நேருமானால் எதிரி கள் அந்தக் கட்டிடங்களை உபயோகிக்காமல் தடுப்பதற்காக அவர்களே அந்தக் கட்டிடங்களுக்கு நெருப்பு வைக்கிறார்

கள். போர்முனைகளின் முன்வரிசையிலிருக்கும் கட்டிடங்கள் அனைத்துமே நெருப்பில் அழிவது அவற்றின் தவிர்க்க முடியாத விதியாக எப்பொழுதுமே இருந்து வந்திருக்கிறது. அடிமைகளாக்கப்பட்டவர்கள் தங்களை அடிமைகளாக்கியவர்களை எதிர்த்து நடத்திய போரில், வரலாற்றிலேயே நியாயமான ஒரே போரில் இது முற்றிலும் சரியல்லவாம்! கம்யூன் நெருப்பை ஒரு தற்காப்புச் சாதனம் என்ற முறையில் மட்டுமே உபயோகித்தது. ஒஸ்மான் பீரங்கி குண்டுகளினால் தாக்கிய அந்த நீண்ட, நேரான சாலைகளை வெர்சேய் துருப்புகள் உபயோகிக்காமல் தடுப்பதற்காக கம்யூன் நெருப்பை உபயோகித்தது. அது பின்வாங்கிய பொழுது முன்னேறி வந்த வெர்சேய் துருப்புகள் குண்டுகளை வீசிய அதே நோக்கத்தோடு, தனது பாதையை மறைப்பதற்கு நெருப்பைப் பயன்படுத்தியது. குறைந்த பட்சம் வெர்சேய் துருப்புகளின் குண்டுகள் கம்யூன் நெருப்பைப் போல அதே அளவுக்குப் பல கட்டிடங்களை அழித்தன. தற்காப்புப் படைகள் எத்தனை கட்டிடங்களுக்கு நெருப்பு வைத்தன, தாக்கிய படைகள் எத்தனை கட்டிடங்களுக்கு நெருப்பு வைத்தன என்பது இப்பொழுது கூட முடிவு செய்யப்படாத பிரச்சினையே. வெர்சேய் துருப்புகள் சிறைக் கைதிகளை மொத்தமாகப் படுகொலை செய்யத் தொடங்கிய பிறகு, அதற்குப் பிறகே தற்காப்புப் படைகள் நெருப்பு வைக்கத் தொடங்கின.— மேலும் தாங்கள் மிகவும் மோசமான நிலைமைக்குத் துரத்தப்பட்டால் பாரிசின் அழிவுக் குவியல்களுக்கு அடியில் தங்களைப் புதைத்துக் கொள்ள நேரும், பாரிஸ் இரண்டாவது மாஸ்கோவாக[69] மாற்றப்படும் என்று கம்யூன் நெடுங்காலத்துக்கு முன்னரே பகிரங்கமாக அறிவித்திருக்கிறது. தேசிய பாதுகாப்பு அரசாங்கமும் தன்னுடைய துரோகத்தை மறைப்பதற்காக அதே லாக்குறுதியைக் கொடுத்தது. அந்தக் காரியத்துக்காக த்ரொஷூ பெட்ரோலைத் தேடிக் கொடுத்தார். தன்னுடைய எதிரிகள் பாரிஸ் மக்களுடைய உயிர்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை, பாரிசிலுள்ள தங்கள் சொந்தக் கட்டிடங்களைப் பற்றியே மிகவும் கவலைப்படுகிறார்கள் என்பது கம்யூனுக்குத் தெரியும். மறு பக்கத்தில், தன்னுடைய பழிவாங்குதல் சிறிதும் விட்டுக் கொடுக்காதபடி இருக்கும் என்று தியேர் அவர்களுக்கு முன்னறிவிப்புக் கொடுத்திருந்தார். தியேர் ஒரு பக்கத்தில் தன்னுடைய

இராணுவத்தைக் கொண்டு வந்து நிறுத்திய உடனே, மறு பக்கத்தில் பிரஷ்யர்கள் அந்தப் பொறியை அடைத்து விட்ட பொழுது ''நான் ஈவிரக்கமின்றி நடந்து கொள்வேன்! பரிகாரம் முழுமையாக இருக்கும், நீதி கண்டிப்பான முறையில் இருக்கும்!'' என்று பிரகடனம் செய்தார். பாரிஸ் தொழிலாளர்களுடைய செயலைக் கலைச் சின்னங்களை அழித்தல் என்று கூறுவதென்றால் அது ஆபத்தான நிலைமையில் தற்காப்பு செய்வதற்காகக் கலைச் சின்னங்களை அழித்தலே தவிர, தொன்மைக் காலத்தில் கிறிஸ்துவம் அல்லாத, பல்கடவுளர் வழிபாட்டு மக்களினங்களின் உண்மையாகவே விலை மதிப்பற்ற கலைப் பொக்கிஷங்களைக் கிறிஸ்துவர்கள் அழித்ததைப் போல வெற்றியின் விளைவாக ஏற்பட்ட அழித்தல் அல்ல. அத்தகைய அழித்தலைக் கூட வரலாற்றாசிரியர் நியாயப்படுத்தியிருக்கிறார். ஏனெனில் நொறுங்கி விழுந்து கொண்டிருக்கின்ற பழைய சமூகத்துக்கும் வளர்ந்து கொண்டிருக்கும் புதிய சமூகத்துக்கும் இடையிலான மாபெரும் போராட்டத்தில் அது தவிர்க்க முடியாத, ஒப்பு நோக்கில் அற்பமான விளைவாக இருந்தது. வரலாற்றுச் சிறப்பான பாரிசைத் தரை மட்டமாக்கி போக்கிரிகளின் பாரிசை ஏற்படுத்திய ஒஸ்மானின் கலைச் சின்னங்களை அழித்தலுக்கு அது இன்னும் குறைவானதே.

ஆனால் பாரிஸ் ஆர்ச்பிஷப்பு உள்பட 64 பணயக் கைதிகளைக் கம்யூன் கொலை செய்ததைப் பற்றி! முதலாளி வர்க்கமும் அதன் இராணுவமும் பாதுகாப்பற்ற யுத்தக் கைதிகளைச் சுட்டுக் கொல்கின்ற — யுத்தத்தின் நடைமுறையிலிருந்து நெடுங்காலத்துக்கு முன்பே மறைந்துவிட்ட—பழக்கத்தை 1848 ஜுன் மாதத்தில் மறுபடியும் கொண்டு வந்தனர். ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் பொதுஜன எழுச்சிகளை ஒடுக்குபவர்கள் அன்று முதல் இந்தக் காட்டுமிராண்டித்தனமான பழக்கத்தை அநேகமாகக் கறாராகக் கடைப்பிடித்து வந்தனர். அது உண்மையில் ''நாகரிகத்தின் முன்னேற்றம்'' என்பதை இம்முறையில் நிரூபித்தனர்! மறு பக்கத்தில் பிரஷ்யர்கள் பணயக் கைதிகளைப் பிடிக்கும் முறையை, குற்றமில்லாதவர்கள் மற்றவர்களுடைய நடவடிக்கைகளுக்குத் தங்கள் உயிர்களின் மூலம் பதிலளிக்க வேண்டியவர்கள் என்ற முறையை பிரான்சில் மறுபடியும் ஏற்படுத்தியிருந்தார்கள். பாரிஸ் மீது போர் தொடங்கிய காலத்தி

லிருந்தே கம்யூன் கைதிகளைச் சுட்டுக் கொல்கின்ற இரக்க மான நடவடிக்கையைத் தியேர் அமுலாக்கிய பொழுது கம் யூன் அவர்களுடைய உயிர்களைக் காப்பாற்றுவதற்காகப் பணயக் கைதிகளைப் பிடிக்கின்ற பிரஷ்ய முறையைப் பின் பற்ற நேர்ந்தது. வெர்சேய் துருப்புகள் கைதிகளைத் தொடர்ந்து சுட்டுக் கொண்டிருந்த காலம் முழுவதிலும் இப் பணயக் கைதிகளின் உயிர்கள் மறுபடியும் மறுபடியும் இழக் கப்பட்டவையே. மாக்மாஹோனின் பிரிட்டோரியன்கள்[70] தாங்கள் பாரிசுக்குள் நுழைந்ததைக் கொண்டாடுவதற்கு நடத்திய படுகொலைக்குப் பிறகு அவர்களுடைய உயிர்களை எப்படி விட்டு வைக்க முடியும்? பணயக் கைதிகள் முத லாளித்துவ அரசாங்கத்தின் மனச் சாட்சியற்ற மூர்க்கத் தனத்துக்குக் கடைசித் தடை என்று கூற வேண்டும். அந்தக் கடைசித் தடையும் போலியாக்கப்படுவதா? ஆர்ச்பிஷப்பு டார்பு வாவின் உண்மையான கொலையாளி தியேரே. அப்பொழுது தியேரிடம் அகப்பட்டிருந்த ஒரே ஒரு பிளாங்கீக்குப் பதிலாக ஆர்ச்பிஷப்பையும் இன்னும் ஏராளமான மதகுருக்களையும் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தயார் என்று கம்யூன் திரும்பத் திரும்ப அறிவித்திருந்தது. தியேர் பிடிவாதமாக மறுத்தார். பிளாங்கீயை ஒப்படைத்தால் கம்யூனுக்கு ஒரு தலைவரைக் கொடுத்ததாகி விடும், ஆனால் ஆர்ச்பிஷப்பு பிரேதமானால் தன்னுடைய நோக்கத்துக்கு மிகவும் சிறப் பாகப் பயன்படுவார் என்பது தியேருக்குத் தெரியும். இந்த விஷயத்தில் தியேர் கவெனியாக்கின் முன்னுதாரணத்தைப் பின்பற்றினர். 1848 ஜூன் மாதத்தில் கவெனியாக்கும் அவ ருடைய ''ஒழுங்குமுறை நபர்களும்'' எழுச்சியில் ஈடுபட்ட வர்களை ஆர்ச்பிஷப்பு ஆஃப்பரைக் கொன்றவர்கள் என்று பழிசுமத்தி பயங்கரமான கூக்குரல்களை எழுப்பவில்லையா! ஆர்ச்பிஷப்பு ஒழுங்குமுறைக் கட்சியைச் சேர்ந்த படைவீரர் களால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும். ஆர்ச்பிஷப்பு கொலை செய்யப்பட்ட பொழுது ஸ்தலத்தில் இருந்த ஆர்ச்பிஷப்பின் விக்கார் ஜெனரலான ழகொமே அதற்குரிய சான்றுகளை அவர்களிடம் உடனடியாக ஒப்படைத்தார்.

ஒழுங்குமுறைக் கட்சி தன்னுடைய இரத்த வெறியாட் டங்களின் போது தனக்குப் பலியானவர்களுக்கு எதிராகக் கிளப்புகின்ற அவதூறுக் கூக்குரல் ஒரு விஷயத்தை நிரூபிக்

கிறது. பழைய காலப் பிரபு சாமான்யனுக்கு எதிராகத் தான் தூக்கிய எந்த ஆயுதமும் நியாயமானது, ஆனால் தனக்கு எதிராகச் சாமான்யன் தன் கைகளில் எந்த ஆயுதத்தை ஏந்தினாலும் அது ஒரு குற்றம் என்றே கருதினான். அந்தப் பிரபுவின் முறைப்படியான வாரிசு என்று நம் காலத்திய முதலாளி வர்க்கம் தன்னைக் கருதுகிறது.

புரட்சியை உள்நாட்டு யுத்தத்தினால் அழிக்க வேண்டும் என்று அந்நியப் படையெடுப்பாளனின் ஆதரவுடன் ஆளும் வர்க்கம் செய்த சதி—இந்தச் சதியை செப்டெம்பர் 4ந் தேதி முதல் மாக்மாஹோனுடைய பிரிட்டோரியன்கள் ஸான் கிளூ வாசல் வழியாக நுழைந்த வரை நாம் விவரித்திருக்கிறோம்—பாரிஸ் படுகொலை அழிவில் முடிவடைந்தது. பாரிசுக்கு ஏற்பட்ட அழிவைப் பற்றி பிஸ்மார்க் பெருமகிழ்ச்சி அடைகிறார். 1849ம் வருடத்தில் பிரஷ்ய chambre introuvable என்ற சபையின் ஒரு சாதாரணப் பிரதிநிதியாக அவர் இன்னும் இருந்த காலத்தில் மாபெரும் நகரங்களின் பொது வான அழிவுக்காகச் செய்த பிரார்த்தனையின் முதல் தவணையை அவர் அநேகமாகக் கண்டிருக்கலாம். பாரிஸ் பாட்டாளி வர்க்கத்தின் பிணங்களைப் பற்றி அவர் பூரிப்படைகிறார். இது அவருக்குப் புரட்சியின் அழிவு மட்டுமல்ல பிரெஞ்சு அரசாங்கத்தினாலேயே உண்மையில் தலை வெட்டப்பட்ட பிரான்சினுடைய அழிவாகவும் இருக்கிறது. வெற்றிகரமான ராஜீயவாதிகள் அனைவருக்கும் உரித்தான ஆழமில்லாத தன்மையுடன் இந்தப் பயங்கரமான வரலாற்று நிகழ்ச்சியின் மேற்பரப்பை மட்டுமே அவர் பார்க்கிறார். ஒரு வெற்றியாளன் காவலாளியாக மாறுவதுடன் மட்டும் நில்லாது முறியடிக்கப்பட்ட அரசாங்கத்தின் கூலி பெற்ற கொலையாளியாகவும் மாறுவதன் மூலம் தன்னுடைய வெற்றிக்கு மகுடம் வைக்கின்ற காட்சியை வரலாறு வேறு எங்காவது நடத்தியதுண்டா? பிரஷ்யாவுக்கும் கம்யூனுக்கும் இடையில் யுத்தம் ஏதும் கிடையாது. அதற்கு மாறாக, சமாதானத்துக்குரிய பூர்வாங்க நிபந்தனைகளைக் கம்யூன் அங்கீகரித்தது, பிரஷ்யா தன்னுடைய நடுநிலைமையை அறிவித்திருந்தது. ஆகவே பிரஷ்யா போரில் ஈடுபட்டுள்ள நாடு அல்ல. அது கூலி வாங்கிய கொலையாளியின் பாத்திரத்தை நடித்தது. பேடித்தனமான கொலையாளி—ஏனென்றால் அதற்கு எந்த ஆபத்தும் கிடையாது. கூலி வாங்கிய கொலையாளி—ஏனென்

ருல் பாரிஸ் வீழ்ச்சியடைந்தவுடன் 500 மில்லியன் இரத்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று அது முன்பே நிபந்தனை விதித்திருந்தது. கடவுள் நம்பிக்கை இல்லாத, ஒழுக்கங் கெட்ட பிரான்சைப் பக்திமிக்க, அறநெறி பிறழாத ஜெர்மனி தண்டிக்க வேண்டும் என்று கடவுளால் விதிக்கப்பட்ட யுத்தத்தின் உண்மையான தன்மை கடைசியில் இப்படி வெளிப்பட்டது! இது சர்வதேசச் சட்டத்தை முன்னெப்போதும் நடைபெற்றிராத அளவுக்கு மீறுவதே என்று பழைய உலகத்தின் வழக்குரைஞர்கள் கூடக் கூறுவார்கள். அது ஐரோப்பாவிலுள்ள ''நாகரிகமான'' அரசாங்கங்கள் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் அரசவையின் வெறும் கருவியாக இருந்த குற்றவாளியான பிரஷ்ய அரசாங்கத்தைத் தேசங்களுக்கிடையில் பிரஷ்டம் செய்த அரசாங்கம் என்று அறிவிப்பதற்குப் பதிலாக பாரிசைச் சூழ்ந்திருக்கும் இரட்டை வளையத்தை விட்டுத் தப்பியோடி வருகின்ற ஒரு சில நபர்களை வெர்சேய் கொலையாளிகளிடம் ஒப்படைக்கத் தானே வேண்டும் என்று சிந்திக்கத் தூண்டியது.

நவீன காலத்தின் மிகவும் பயங்கரமான யுத்தத்திற்குப் பிறகு வெற்றியடைந்த இராணுவமும் வெற்றி கொள்ளப்பட்ட படைகளும் பாட்டாளி வர்க்கத்தைப் படுகொலை செய்வதற்காக ஒன்றுசேருவது என்று ஈடு இணையில்லாத இந்தச் சம்பவம் பிஸ்மார்க் நினைப்பதைப் போல மேலே எழும்பிக் கொண்டிருக்கும் புதிய சமூகத்துக்குக் கொடுக்கப்பட்ட கடைசி அடி அல்ல, பழைய முதலாளித்துவச் சமூகம் தூள்தூளாக நொறுங்கிக் கொண்டிருப்பதையே அது குறிக்கிறது. பழைய சமூகம் இன்னும் நிறைவேற்றக் கூடிய ஆகப் பெரிய வீரமான முயற்சி தேசிய யுத்தமே. அதுவும் தற்பொழுது வர்க்கப் போராட்டத்தைத் தள்ளி வைப்பதை ஒரே ஒரு நோக்கமாகக் கொண்ட வெறும் அரசாங்க ஏமாற்று வித்தையாகத் தோன்றுகிறது. அந்த வர்க்கப் போராட்டம் உள்நாட்டு யுத்தமாக வெடித்த உடனே ஏமாற்று வித்தை தூக்கியெறியப்படுகிறது. வர்க்க ஆதிக்கம் தன்னைத் தேசியச் சீருடையில் மறைத்துக் கொள்ள இனியும் முடியாது. தேசிய அரசாங்கங்கள் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக ஒன்று திரண்டிருக்கின்றன!

1871ம் வருடத்தின் விட்ஞாயிற்றுக் கிழமைக்குப் பிறகு[71] பிரான்சின் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய உழைப்

பின் பலன்களை ஒதுக்கிக் கொள்பவர்களுக்கும் இடையில் சமாதானமோ அல்லது போர் நிறுத்தமோ சாத்தியமல்ல. கூலிப்படைகளின் இரும்புக் கரம் இரண்டு வர்க்கங்களையும் குறைந்த காலத்துக்குப் பொது ஒடுக்கு முறையின்கீழ் கட்டிப் போட்டு வைத்திருக்க முடியும். ஆனால் அவற்றுக்கு இடையில் போராட்டம் தவிர்க்க இயலாத முறையில் மீண்டும் மீண்டும் மேன்மேலும் அதிகரிக்கின்ற பரிமாணங்களில் வெடிக்கும். கடைசியில் வெற்றி அடையப் போவது யார்: ஒதுக்கிக் கொள்கின்ற சிலரா அல்லது உழைக்கின்ற மாபெரும் பெரும்பான்மையினரா என்பதைப் பற்றி சந்தேகம் இருக்க முடியாது. பிரெஞ்சுத் தொழிலாளர்கள் நவீனப் பாட்டாளி வர்க்கம் அனைத்தின் முன்னணிப்படையே.

இப்படி ஐரோப்பிய அரசாங்கங்கள் பாரிசுக்கு முன்பாக வர்க்க ஆதிக்கத்தின் சர்வதேசத் தன்மைக்குச் சாட்சியமளிக்கின்ற பொழுது அவர்கள், மூலதனத்தின் அனைத்துலகச் சதிக்கு எதிரான உழைப்பின் சர்வதேச ஸ்தாபனமாகிய சர்வதேசத் தொழிலாளர் சங்கம்[72] இந்தப் பேரழிவுகளின் தலையூற்று என்று எதிர்ப்புக் கூக்குரல் போடுகிறார்கள். தியேர் உழைப்பை விடுதலை செய்யப் போவதாகப் பாசாங்கு செய்து கொண்டே இந்த அமைப்பை உழைப்பின் கொடுங்கோலன் என்று கண்டனம் செய்தார்: அகிலத்தின் பிரெஞ்சுப் பிரிவுக்கும் மற்ற பிரிவுகளுக்குமிடையில் அனைத்து உறவுகளும் தடுக்கப்பட வேண்டுமென்று பிகார் உத்தரவிட்டார். அகிலத்தைக் களையெடுப்பது எப்படி என்பதே நாகரிகமான ஒவ்வொரு நாட்டின் அரசாங்கத்திற்கும் முன்பாக உள்ள மாபெரும் பிரச்சினை என்று 1835இல் தியேரின் கூட்டாளியாக இருந்த, பாதுகாக்கப்பட்ட பிரேதமாக மாறிவிட்ட கவுன்ட் ழொபேர் அறிவிக்கிறார். ''நிலவுடைமையாளர் சபை'' அவருக்கு எதிராகக் கர்ச்சனை புரிகிறது; அனைத்து ஐரோப்பியப் புத்திரிகைகளும் அந்தக் கூட்டிசையில் கலந்து கொள்கின்றன. நம் சங்கத்துக்கு முற்றிலும் அந்நியரான ஒரு கௌரவமிக்க பிரெஞ்சு எழுத்தாளர்* பின்வருமாறு கூறினார்:

''தேசியக் காவற்படையின் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்களும் கம்யூன் உறுப்பினர்களில் அதிகமான பெரும்

---

* இந்தக் குறிப்பு ரொபினேயைப் பற்றியதாக இருக்கலாம்.—ப-ர்.

பான்மையினரும் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் மிகச் சுறுசுறுப்பான, மதிநுட்பமுடைய, துடிப்பான உறுப்பினர்களே... அவர்கள் முற்றிலும் நேர்மையானவர்கள், உண்மையானவர்கள், அறிவாற்றல் மிக்கவர்கள், தன்னலமற்றவர்கள், தூய்மையானவர்கள், வெறி பிடித்தவர்கள் (அந்த வார்த்தையின் நல்ல அர்த்தத்தில்).''

சர்வதேசத் தொழிலாளர் சங்கம் ஒரு இரகசியச் சதிக் கூட்டத்தைப் போல இயங்குகிறது, அதன் மத்திய நிர்வாகக் குழு அவ்வப்பொழுது வெவ்வேறு நாடுகளில் கலகம் செய்யும்படி உத்தரவுகளை அனுப்புகிறது என்று போலீஸ் சாயம் பூசப்பட்ட முதலாளி வர்க்க மனம் இயற்கையாக நினைக்கிறது. உண்மையில் எங்கள் சங்கம் நாகரிகமடைந்த உலகத்தின் பல்வேறு நாடுகளிலுமுள்ள மிக முன்னணியான தொழிலாளர்களுக்கு இடையில் சர்வதேசப் பிணைப்பு என்பதைத் தவிர வேறு எதுவுமல்ல. எங்கெங்கே, எந்த வடிவத்திலேனும், எந்த நிலைமைகளின் கீழும் வர்க்கப் போராட்டம் தோன்றுகிறதோ அங்கே எங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் முன்னணியில் இருப்பது இயற்கையானதே. அது நவீன சமூகம் என்ற நிலத்திலிருந்துதான் வளர்ச்சி அடைகிறது. எத்தகைய பேரழிவை ஏற்படுத்தினாலும் அதை ஒழித்துவிட முடியாது. அதை ஒழிக்க வேண்டுமென்றால் அரசாங்கங்கள் தங்களுடைய சொந்தப் புல்லுருவி வாழ்க்கையின் அடிப்படையான உழைப்பின் மீது மூலதனத்தின் கொடுங்கோலான ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும்.

கம்யூனும் தொழிலாளர்களின் பாரிசும் ஒரு புதிய சமூகம் ஏற்படும் என்ற மகத்தான அறிவிப்பாக என்றும் இருக்கும்: அதற்காக உயிரைக் கொடுத்தவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் விரிந்த இதயத்தில் பதிக்கப்படுவார்கள். அதை அழித்தவர்களை வரலாறு ஏற்கெனவே அந்த நிரந்தரமான தண்டனைக் கட்டையில் ஆணிகளால் அடித்துவிட்டது. அவர்களுடைய மதகுருக்களின் பிரார்த்தனைகள் அனைத்துமே அவர்களைக் காப்பாற்றப் போதியன அல்ல.

அலுவலகம்: 256, ஹை ஹோல்பார்ன்,
லண்டன், வெஸ்டர்ன் ஸென்ட்ரல்.

மூலம் ஆங்கில
மொழியில்
எழுதப்பட்டது

மே 30, 1871இல் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

# " 'பிரான்சில் உள்நாட்டுப் போர்' என்ற நூலின் முதல் உருவரை"யிலிருந்து

## கம்யூன்

### கம்யூனின் தன்மை

...கம்யூன் என்பது தன்னைக் கட்டுப்படுத்துகின்ற, அடக்குகின்ற சக்திகளுக்குப் பதிலாக தன்னுடைய சொந்த ஜீவிய சக்திகள் என்ற முறையில் சமூகம் அரசு அதிகாரத்தை மறுபடியும் ஆட்கொள்ளுதல், மக்களை ஒடுக்குகின்ற அமைப்பு ரீதியான சக்திக்குப் பதிலாகத் தங்களுடைய சொந்த சக்தியை அமைத்த பெருந்திரளான மக்கள் ஆட்சியைப் பெறுதல்; இது அவர்களுடைய எதிரிகள் அவர்களை ஒடுக்குவதற்கு உபயோகிக்கின்ற, (அவர்களை ஒடுக்குபவர்களால் சுவீகரிக்கப்பட்டிருக்கின்ற) (அவர்களுக்கு எதிராக்கப்பட்ட, அவர்களுக்கு எதிராக அமைப்பு ரீதியாக்கப்பட்ட அவர்களுடைய சொந்த சக்திக்கு) சமூகத்தின் செயற்கையான சக்திக்குப் பதிலாக அவர்களுடைய சமூக விடுதலையின் அரசியல் வடிவமாகும். எல்லாப் பெரிய விஷயங்களையும் போலவே இந்த வடிவம் எளிமையானதாக இருந்தது. முந்திய புரட்சிகளில் அனைத்து வரலாற்று வளர்ச்சிகளுக்கும் தேவையான நேரம் கடந்த காலத்தில் எப்பொழுதுமே இழக்கப்பட்டது, பொதுஜன வெற்றியின் ஆரம்ப நாட்களில் மக்கள் தங்களுடைய வெற்றிகரமான ஆயுதங்களை ஒப்படைத்தவுடனே அவை அவர்களுக்கெதிராகவே திருப்பப்பட்டது. முந்திய புரட்சிகளுக்கு எதிர்ச் செயலாக கம்யூன் முதலில் இராணுவத்தின் இடத்தில் தேசியக் காவற்படையை வைத்தது.

''செப்டெம்பர் 4க்குப் பிறகு முதல் தடவையாக தனது எதிரிகளுடைய அரசாங்கத்திடமிருந்து குடியரசு விடுவிக்கப்பட்டிருக்கிறது... நகரத்தில் குடிமக்களிடமிருந்து அரசாங்கத்தைப்

பாதுகாக்கின்ற நிரந்தரமான இராணுவத்துக்குப் பதிலாக (அரசாங்கத்தின்) அதிகாரத்திடமிருந்து குடிமக்களைப் பாதுகாக்கின்ற தேசியத் தொண்டர் படை ஏற்பட்டிருக்கிறது'' (மத்தியக் கமிட்டியின் அறிக்கை, மார்ச் 22.)[73].

(மக்கள் இந்தத் தொண்டர் படையை தேசிய அளவில் அமைத்தால் நிரந்தர இராணுவங்களை ஒழித்து விடலாம்; எல்லாச் சமூக முன்னேற்றங்களுக்கும் அது பொருளாதார ரீதியில் முதல் conditio sine que non* ஆகும். வரிகளுக்கும் அரசுக் கடனுக்கும் தோற்றுவாயையும் வர்க்க ஆதிக்கத்தை—வாடிக்கையான வர்க்க ஆதிக்கத்தின் வடிவில் அல்லது எல்லா வர்க்கங்களையும் காப்பாற்றப் போவதாக நடிக்கின்ற துர்ச்சாகசக்காரனின் உருவத்தில்—அரசாங்கம் தகாத வழியில் பெற்றுவிடுமோ என்ற இந்த நிரந்கரமான அபாயத்தையும் இது உடனே ஒதுக்குகிறது.) அதே சமயத்தில் அது அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிரான மிகவும் பாதுகாப்பான உத்தரவாதமாக இருந்து அதிகமான செலவை ஏற்படுத்துகின்ற இராணுவ அமைப்பை மற்ற எல்லா அரசுகளிலும் மெய்யாகவே இயலாததாகச் செய்கிறது; அது விவசாயிக்கு இரத்த வரியிலிருந்தும் எல்லா அரசு வரிகளுக்கும் அரசுக் கடன்களுக்கும் மிகவும் வளமான தோற்றுவாய் என்ற நிலையிலிருந்தும் விடுதலை. விவசாயிக்கு கம்யூன் ஒரு கவர்ச்சி என்ற நிலை, அவன் விடுதலையைப் பற்றிய முதல் வார்த்தை ஏற்கெனவே இங்கே இடம் பெற்றிருக்கிறது; அதே சமயத்தில் ''சுதந்திரமான போலீஸ்'' ஒழிக்கப்பட்டு விட்டது; அதன் போக்கிரிகளுக்குப் பதிலாகக் கம்யூன் ஊழியர்கள் நியமிக்கப்பட்டார்கள். புனிதமான அரசு அதிகாரத்துக்கு நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அல்லது ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களின் கரங்களில் ஒரு நாடகமாக்கப்படுவதற்கு இதுவரையிலும் தவறுகப் பயன்படுத்தப்பட்ட, சில வருடங்களுக்கு ஒருமுறை நாடாளுமன்ற வர்க்க ஆதிக்கத்தை அங்கீகரிக்க (அதன் கருவிகளைத் தேர்ந்தெடுக்க) மட்டுமே மக்களால் உபயோகிக்கப்பட்ட பொது வாக்குரிமை அதன் மெய்யான நோக்கங்களுக்கு, கம்யூன் தன்னுடைய நிர்வாகம் மற்றும் சட்டமியற்றும் ஊழியர்களைத் தானே தேர்ந்தெடுப்பதற்கும் பயன்பட்டது. நிர்

*—அவசியமான நிபந்தனை.—ப-ர்.

வாகமும் அரசியல் ஆட்சியும் மர்மங்கள், அரசுப் புல்லுருவிகள், அதிகமான ஊதியம் பெறுகின்ற கொத்தடிமைகள், மானியப் பதவிகளில் இருப்போர் ஆகியோரைக் கொண்ட பயிற்சி பெற்ற ஜாதியின்—உயர் பதவிகளில் பெருந்திரளான மக்களின் அறிவைக் கிரகித்துக் கொண்டு படிநிலையான அமைப்பின் கீழான பதவிகளில் மக்கள் திரளினருக்கு எதிராக அவர்களையே திருப்பிய ஜாதியின் — கரங்களில் மட்டுமே நம்பி ஒப்படைக்கப்படக் கூடிய ஆழ்நிலைப் பணிகள் என்ற மயக்கம் ஒழிந்தது; அரசுப் படிநிலையான அமைப்பு முழுவதும் ஒழிக்கப்பட்டு, மக்களின் இறுமாப்புடைய எசமானர்களுக்குப் பதிலாக எப்பொழுதும் அகற்றப்படக் கூடிய ஊழியர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் பொது மக்களுடைய மேற்பார்வையின் கீழ் தொடர்ச்சியாகப் பாடுபடுவதால் போலியான பொறுப்புக்குப் பதிலாக உண்மையான பொறுப்பு ஏற்படுத்தப்பட்டது. தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களைப் போல மாதம் 12 பவுன் ஊதியம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது; மிக அதிகமான ஊதியம் வருடத்துக்கு 240 பவுன்களுக்கு உட்பட்டதே. இந்த ஊதியம் லண்டன் பள்ளிக்கூடக் கமிட்டியின் காரியதரிசிக்கு அவசியமான ஊதியத்தில் ஐந்தில் ஒரு பங்குக்குச் சிறிதளவே அதிகம் என்று மாபெரும் விஞ்ஞானியான பேராசிரியர் ஹக்ஸ்லி கூறுகிறுர். அரசு மர்மங்கள், அரசுப் பகட்டுகள் என்ற மொத்த மோசடியுமே கம்யூனல் ஒழிக்கப்பட்டது. அது சாதாரணத் தொழிலாளர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்தது. அவர்கள் பாரிசின் தற்காப்புக்கு அமைப்பை ஏற்படுத்தினுர்கள், போனப்பார்ட்டின் பிரிட்டோரியன்களுக்கு எதிராக யுத்தத்தைத் தொடர்ந்தார்கள், அந்த மாபெரும் நகரத்துக்குத் தேவையான உணவுப் பொருட்களைக் கொண்டு வந்தார்கள், இதுவரை அரசாங்கம், போலீஸ், நகராட்சி சபை ஆகியவற்றுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட அனைத்துப் பதவிகளுக்கும் ஆட்களை நியமித்தார்கள். அவர்கள் தங்கள் வேலையை பகிரங்கமாக, எளிமையாக, மிகவும் கடினமான, சிக்கலான சந்தர்ப்பங்களுக்கு மத்தியில் நிறைவேற்றினுர்கள். மில்தன் தனது இழந்த சொர்க்கத்தை எழுதியதைப் போல சில பவுன்களைப் பெற்றுக் கொண்டு, வெட்ட வெளிச்சத்தில், தவறே செய்யப் போவதில்லை என்ற எவ்விதமான பாசாங்கும் இல்லாமல், தட்டிக்கழிக்கின்ற பதவிகளுக்குப்

பின்னுல் மறைந்து கொள்ளாமல், தவறுகளை ஒத்துக்கொள் வதற்கு வெட்கப்படாமல் அவற்றைத் திருத்தி நிறைவேற்றி ஞர்கள். இராணுவ, நிர்வாக மற்றும் அரசியல் பொதுப் பணிகளைப் பயிற்சி பெற்ற ஒரு ஜாதியினருடைய மறைவான குணும்சங்களாக இல்லாமல் உண்மையிலேயே தொழிலாளர்களின் பணிகளாக உடனே செய்து காட்டினுர்கள்; (உள்நாட்டு யுத்தம், புரட்சி என்ற கொந்தளிப்புகளுக்கு நடுவே ஒழுங்கை நிலைநாட்டினுர்கள்), (பொதுவான புனரமைப்புக்குரிய நட வடிக்கைகளைத் தொடங்கினுர்கள்.) கம்யூன் அவ்வப்பொழுது எடுத்த நடவடிக்கைகள் எவ்வளவு நற்செயல்களாக இருந்த போதிலும் அதன் மாபெரும் சாதனை தனக்கு ஏற்படுத்திக் கொண்ட அமைப்பே. வெளிநாட்டு எதிரி ஒரு கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் பொழுது, வர்க்க எதிரி மறு கதவுக்குப் பக்கத்தில் நிற்கும் பொழுது தோன்றிய கம்யூன் தன்னுடைய உயிராற்றலைத் தன் வாழ்க்கையின் மூலம் நிரூபிக்கிறது, தன்னுடைய தத்துவங்களைத் தன்னுடைய நடவடிக்கையினுல் உறுதிப்படுத்துகிறது. அதன் தோற்றமே பிரான்சை வெற்றி கொண்டவர்கள் மீது அடைந்த வெற்றி யாகும். சிறைப்பட்ட பாரிஸ் மிருக பலத்தை நம்பிக் கொண் டிராமல், சமூக இயக்கத்துக்குத் தலைமையேற்பதன் மூலம், எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் விருப் பார்வங்களுக்கு வடிவங் கொடுப்பதன் மூலம், துணிச்சலான ஒரே பாய்ச்சலின் மூலம் ஐரோப்பாவின் தலைமையைத் திரும்பப் பெற்றது.

பாரிசை முன்மாதிரியாகக் கொண்டு பெரிய நகரங்கள் அனைத்துமே கம்யூன்களாக அமைக்கப்பட்டிருந்தால் எந்த அரசாங்கமும் இந்த இயக்கத்தைப் பிற்போக்கின் திடீர்த் தாக்குதலின் மூலம் நசுக்கியிருக்க முடியாது. இந்தப் பூர் வாங்க நடவடிக்கையின் மூலம் கூட அடைகாக்கின்ற நேர மும் இயக்கத்தின் உத்தரவாதமும் சாதிக்கப்பட்டுவிட்டன. பிரான்ஸ் முழுவதுமே சுயமாக உழைக்கின்ற, சுயமாக நிர் வகிக்கின்ற கம்யூன்கள் அமைக்கப்பட்டிருக்கும், நிரந்தர மான இராணுவத்துக்குப் பதிலாக பொதுஜனப் படைகள் ஏற்பட்டிருக்கும், எண்ணற்ற அரசுப் புல்லுருவிகள் நீக்கப் பட்டிருப்பார்கள், படிநிலையான சமய போதகர்களுக்குப் பதிலாகப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பார் கள், அரசு நீதிமன்றங்கள் கம்யூன் உறுப்புக்களாக மாற்றப்

பட்டிருக்கும், தேசியப் பிரதிநிதித்துவத்துக்கான தேர்தல்கள் அனைத்துச் சக்தியும் கொண்ட அரசாங்கம் செய்கின்ற மோசடியாக இல்லாமல் நன்கமைக்கப்பட்ட கம்யூன்களின் உணர்வுபூர்வமான கருத்தறிவிப்பாக ஆக்கப்பட்டிருக்கும், அரசுப் பணிகள் பொதுவான தேசிய நலன்களுக்குரிய ஒரு சில செயல்களாகக் குறைக்கப்பட்டிருக்கும்.

இதுதான் **கம்யூன்—சமூக விடுதலையின் அரசியல் வடிவம்,** உழைக்கும் மக்களாலேயே படைக்கப்பட்ட அல்லது இயற்கையின் பரிசாக இருந்த உழைப்புச் சாதனங்களை ஏகபோகமாக்கிக் கொண்டவர்கள் தகாத வழியில் பறித்துக் கொண்ட அதிகாரத்திலிருந்து (அடிமை உடைமையாளர்களின் அதிகாரத்திலிருந்து) உழைப்பின் விடுதலையின் அரசியல் வடிவம். அரசு இயந்திரமும் நாடாளுமன்றவாதமும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தினருடைய உண்மையான வாழ்க்கை அல்ல, அவர்களுடைய ஆதிக்கத்தின் அமைப்பு ரீதியாக்கப்பட்ட பொது உறுப்புக்கள், பழைய அமைப்பின் அரசியல் உத்தரவாதங்கள், வடிவங்கள் மற்றும் கருத்தறிவிப்புகள் மட்டுமே என்பதைப் போல கம்யூனும் தொழிலாளி வர்க்கத்தின் சமூக இயக்கம் அல்ல, ஆகவே மனிதகுலத்தின் பொதுவான மறுபிறவியின் இயக்கம் அல்ல, ஆனால் அது அமைப்பு ரீதியாக்கப்பட்ட நடவடிக்கைச் சாதனமே. தொழிலாளி வர்க்கம் வர்க்கப் போராட்டத்தின் மூலமாக எல்லா வர்க்கங்களையும் ஒழிப்பதற்கு, ஆகவே அனைத்து வர்க்க ஆதிக்கத்தையும் ஒழிப்பதற்குப் பாடுபடுகிறது. கம்யூன் வர்க்கப் போராட்டத்தை ஒழிக்கவில்லை (ஏனென்றால் அது ஒரு தனிப்பட்ட நலனைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை, அது "உழைப்பின்" விடுதலையை, அதாவது தனிமனித மற்றும் சமூக வாழ்க்கையின் அடிப்படையான மற்றும் இயற்கையான நிபந்தனையை — அபகரித்தல், மோசடி, செயற்கையான ஏற்பாடுகளின் மூலமாக மட்டுமே அதை சிலரிடமிருந்து பலருக்கு மாற்ற முடியும் — பிரதிநிதித்துவம் செய்கிறது). ஆனால் அந்த வர்க்கப் போராட்டம் தன் வெவ்வேறு கட்டங்களை மிகவும் அறிவுபூர்வமான மற்றும் மனிதாபிமான முறையில் நடத்துவதற்குரிய அறிவுபூர்வமான ஊடகத்தைத் தருகிறது. அது வன்முறையான எதிர்ப்பாக, வன்முறையான புரட்சிகளாகத் தொடங்க முடியும். அது ஒரு புறத்தில் அரசின் இரத்தத்தை உறிஞ்சுபவர்களின்

பயனற்ற, விஷமத்தனமான வேலையை ஒழித்து தேசிய உற்பத்தியின் மிகப் பெரும் பகுதியை அரசு என்ற அரக்கனுக்கு பலியிடுவதன் காரணங்களை அகற்றுவதன் மூலம், மறு புறத்தில் ஸ்தல மற்றும் தேசிய அளவிலான உண்மையான நிர்வாக வேலையைத் தொழிலாளியின் கூலிக்குச் செய்வதன் மூலம் தன்னுடைய மகத்தான இலட்சியமாகிய உழைப்பின் விடுதலையைத் தொடங்குகிறது. இவ்வாறாக அது மகத்தான சிக்கனத்தோடு, அரசியல் உருமாற்றத்தைப் போல பொருளாதாரச் சீர்திருத்தத்தோடு தொடங்குகிறது.

கம்யூன் அமைப்பு தேசிய அளவில் உறுதியாக நிறுவப்பட்டால் இன்னும் அவ்வப்பொழுது ஏற்படுகின்ற அடிமை உடைமையாளர்களுடைய கலகங்கள் என்ற பேரிடர்களை அது சமாளிக்க வேண்டியிருக்கும். அவை சமாதான ரீதியான முன்னேற்றப் பணியை ஒரு கண நேரம் நிறுத்தி வைத்த போதிலும் சமூகப் புரட்சியின் கையில் வாளைக் கொடுத்து இயக்கத்தைத் துரிதப்படுத்தவே செய்யும்.

வர்க்கப் போராட்டத்தின் பல்வேறு கட்டங்களின் வழியாகத் தாங்கள் செல்ல வேண்டியிருக்கும் என்பது தொழிலாளி வர்க்கத்தினருக்குத் தெரியும். சுதந்திரமான, கூட்டு உழைப்பின் நிலைமைகளின் மூலம் உழைப்பு அடிமைப்படுத்தப்படுகின்ற பொருளாதார நிலைமைகளை அகற்றுவது காலத்தின் முற்போக்குப் பணியாக (அந்தப் பொருளாதார மாற்றம்) மட்டுமே இருக்க முடியும், அதற்காக வினியோக முறையில் மாற்றம் செய்வது மட்டுமல்லாமல் ஒரு புதிய உற்பத்தி அமைப்பு அல்லது சரியாகச் சொல்வதெனில் இன்றைய அமைப்பு ரீதியாக்கப்பட்ட (இன்றைய தொழில் துறையினால் தோற்றுவிக்கப்பட்ட) உழைப்பில் உற்பத்தியின் சமூக வடிவங்களை அடிமைத் தளைகளிலிருந்தும் அவற்றின் இன்றைய வர்க்கத் தன்மையிலிருந்தும் விடுவித்து (சுதந்திரமாக்கி) அவற்றின் ஒத்திசைவான தேசிய மற்றும் சர்வதேசிய ஒருங்கிணைப்பைக் கொண்டு வருவது அவசியம் என்பவை அவர்களுக்குத் தெரியும். வேரூன்றியுள்ள நலன்கள் மற்றும் வர்க்கத் தன்னலங்களின் எதிர்ப்பினால் இப்புத்துயிரூட்டும் பணி திரும்பத் திரும்பத் தளர்வடையும், நிறுத்தப்படும் என்பது தொழிலாளி வர்க்கத்தினருக்குத் தெரியும். ''அடிமை முறையின் பொருளாதார விதிகளின் தன்னியல்பான செயலும்'' ''பண்ணையடிமை -முறையின் பொருளாதார விதிகளின்

தன்னியல்பான செயலும்'' ஒழிக்கப்பட்டதைப் போல இன்றுள்ள ''மூலதனம் மற்றும் நிலவுடைமையின் இயற்கையான விதிகளின் தன்னியல்பான செயலும்'' புதிய நிலைமைகளின் நீண்ட வளர்ச்சிப் போக்கில் மட்டுமே ''சுதந்திரமான, கூட்டு உழைப்பின் சமூகப் பொருளாதாரத்திற்குரிய விதிகளின் தன்னியல்பான செயலால்'' அகற்றப்பட முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் அதே சமயத்தில் கம்யூன் என்ற அரசியல் ஸ்தாபன வடிவத்தின் மூலம் உடனடியாக அதிக தூரம் போக முடியும், தங்களுக்காகவும் மனித குலத்துக்காகவும் அந்த இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பது அவர்களுக்குத் தெரியும்.

## விவசாயிகள்

(யுத்த நட்ட ஈடு.) கம்யூன் அமைக்கப்படுவதற்கு முன்னரே கூட மத்தியக் கமிட்டி தனது *Journal Officiel* வழியாக அறிவித்தது: ''**யுத்த நட்ட ஈட்டின் மிகப் பெரும் பகுதி யுத்தத்துக்குப் பொறுப்பானவர்களால்தான் கொடுக்கப்பட வேண்டும்**''[74]. ''ஒழுங்குமுறை நபர்கள்'' மிகவும் அஞ்சுகின்ற ''நாகரிகத்துக்கு எதிரான மாபெரும் சதி'' இதுவே. இது மிகவும் நடைமுறைப் பிரச்சினையே. கம்யூன் வெற்றியடைந்து விட்டால் யுத்தத்துக்குப் பொறுப்பானவர்கள் யுத்த நட்ட ஈட்டைக் கொடுக்க வேண்டியிருக்கும்; வெர்சேய் வெற்றியடைந்துவிட்டால் ஏற்கெனவே இரத்தமாகவும் அழிவாகவும் வரிகளாகவும் கொடுத்திருக்கின்ற உற்பத்தி செய்கின்ற பெருந்திரளான மக்கள் மறுபடியும் கொடுக்க வேண்டியிருக்கும்; நிதி மேல்தட்டினர் இந்த நடவடிக்கையிலிருந்து கூட லாபமடைவார்கள். யுத்தச் செலவுகளைத் தீர்ப்பதை உள்நாட்டு யுத்தமே முடிவு செய்யும். இந்த ஜீவாதாரமான விஷயத்தில் கம்யூன் தொழிலாளி வர்க்கம், குட்டிமுதலாளி வர்க்கத்தின் நலன்களை மட்டுமல்லாமல் **பூர்ஷ்வா வர்க்கத்தை** (செல்வந்தர்களான முதலாளிகள்), (பணக்கார நிலவுடைமையாளர்கள் மற்றும் அவர்களுடைய அரசுப் புல்லுருவிகள்) தவிர உண்மையிலேயே அனைத்து மத்தியதர வர்க்கத்தின் நலன்களையும் பிரதிநிதித்துவம் செய்கிறது. அது எல்லாவற்றுக்கும் மேலாக **பிரெஞ்சு விவசாயி வர்க்கத்தின்** நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தியேரும் அவருடைய ''நிலவுடைமையாளர் சபையும்'' வெற்றியடைந்தால் யுத்த

வரிகளின் பெரும் பகுதி விவசாயிகளின் மீதே சுமத்தப்படும். பெரிய நிலவுடைமையாளர்கள் விவசாயியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்ற ''நிலவுடைமையாளர் சபையின்'' கூக்குரலை எதிரொலிக்கின்ற முட்டாள்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஏற்கெனவே விவசாயியைப் புரட்சியின் நட்ட ஈட்டுத் தொகை ஆயிரம் மில்லியனைக் கட்டும்படி செய்தார்கள். அந்த விவசாயி தன்னுடைய வெகுளித்தனத்தின் காரணமாக யுத்த நட்ட ஈட்டுத் தொகையான ஆயிரம் மில்லியன்களை இந்த நல்ல ''நிலவுடைமையாளர்களின்'' சார்பில் தானே கொடுப்பதற்கு மிகவும் துடித்துக் கொண்டிருக்கிறான்!

இதே நபர்கள் விவசாயி மீது கூடுதலாக 45 சென்ட்டிம் வரி விதித்து வேண்டுமென்றே பிப்ரவரி மாதப் புரட்சிக்குச் சங்கடத்தைக் கொடுத்தார்கள். ஆனால் அப்பொழுது அவர்கள் அதைப் புரட்சியின் பெயரால், அதனால் தோற்றுவிக்கப்பட்ட ''தற்காலிக அரசாங்கத்தின்'' பெயரால் செய்தார்கள். அவர்கள் இப்பொழுது யுத்த நட்ட ஈட்டுத் தொகையைத் தங்களுடைய தோள்களிலிருந்து மாற்றி விவசாயி மீது சுமத்துவதற்குத் தங்களுடைய சொந்தப் பெயரில் கம்யூன் குடியரசுக்கு எதிராக உள்நாட்டு யுத்தத்தை நடத்துகிறார்கள்! அவன் அதைக் கண்டு மிகவும் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவான்!

கம்யூன் கட்டாய இராணுவ சேவையை ஒழிக்கும், ஒழுங்குமுறைக் கட்சி விவசாயி மீது இரத்த வரி விதிக்கும். ஒழுங்குமுறைக் கட்சி இரத்தத்தை உறிஞ்சுகின்ற, அதிகமான செலவை ஏற்படுத்துகின்ற அரசாங்க இயந்திரத்துக்குச் செலவிடுவதற்காக விவசாயி மீது வரி வசூலிப்பவனை ஏவிவிடும். கம்யூன் அவனுக்கு ஒரு மலிவான அரசாங்கத்தைக் கொடுக்கும். ஒழுங்குமுறைக் கட்சி நகரத்தின் லேவாதேவிக்காரன் அவனை இன்னும் கசக்கிப் பிழிவதை அனுமதிக்கும், கம்யூன் அவனுடைய துண்டு நிலத்தின் மீதுள்ள ஒத்திகள் என்ற அமுக்குப் பேயிடமிருந்து அவனை விடுவிக்கும். விவசாயியின் வருமானத்தில் பெரும் பகுதியைக் கொள்ளையடிக்கின்ற சான்றதிகாரி, அமீனா மற்றும் இதரர்களைக் கொண்ட இரத்தத்தை உறிஞ்சுகின்ற நீதி அமைப்புக்குப் பதிலாகத் தொழிலாளர்களின் ஊதியங்களைப் பெற்றுக் கொண்டு தங்கள் வேலைகளைச் செய்கின்ற கம்யூன் அலுவலர்களை நியமிக்கும். அவர்கள் விவசாயியின் உழைப்பிலிருந்து தங்களை வளப்படுத்திக்

கொள்ள முடியாது. பிரெஞ்சு விவசாயியைச் சுற்றிலுமிருக்கின்ற நீதிமன்றச் சிலந்தி வலையையும் அதில் உட்கார்ந்து கொண்டு அவன் இரத்தத்தை உறிஞ்சுகின்ற வழக்குரைஞர்கள், மேயர்கள் என்ற முதலாளி வர்க்கச் சிலந்திகளையும் கம்யூன் ஒழிக்கும்! ஒழுங்குமுறைக் கட்சி அவனை முன்பே இருந்ததைப் போல் போலீஸ் ஆட்சியின் கீழ் வைத்திருக்கும், கம்யூன் அவனுக்கு சுதந்திரமான சமூக மற்றும் அரசியல் வாழ்க்கையை மறுபடியும் ஏற்படுத்தும்! கம்யூன் பள்ளி ஆசிரியருடைய தலைமையில் அவனுக்கு அறிவூட்டும், ஒழுங்குமுறைக் கட்சி அவனை மழுங்கவைக்கும் மதகுருவின் ஆட்சியை அவன் மீது திணிக்கும்! ஆனால் எல்லாவற்றையும் காட்டிலும் பிரெஞ்சு விவசாயி கணக்குப் போடத் தெரிந்தவன்! மதகுருவின் சம்பளம் வரி வசூலிப்பவரால் பிடுங்கப்படுவதற்குப் பதிலாக விவசாயியின் மத உணர்ச்சிகளின் ''இயல்பான நடவடிக்கையைச்'' சார்ந்திருக்கும் என்பதை மிகவும் நியாயமானதாகக் கருதுவான்!

பிரெஞ்சு விவசாயிகள் லுயீ போனபார்ட்டைக் குடியரசின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்திருந்தனர்; ஆனால் ஒழுங்குமுறைக் கட்சி (அரசியல் நிர்ணய சபை மற்றும் சட்டசபை ஆட்சிகளின் கீழ் குடியரசின் பெயரில்லாத ஆட்சிமுறையின் போது) பேரரசைப் படைத்தது! பிரெஞ்சு விவசாயி அரசாங்கத்தின் நகரவைத் தலைவருக்கு எதிராகத் தன்னுடைய மேயரையும், அரசாங்கத்தின் மதகுருவுக்கு எதிராகத் தன்னுடைய பள்ளி ஆசிரியரையும் அரசாங்கத்தின் போலீசுக்கு எதிராகத் தன்னையும் நிறுத்தி தான் உண்மையாக எதை விரும்புகிறான் என்பதை 1849 மற்றும் 1850இல் எடுத்துக் காட்டத் தொடங்கினான். ஒழுங்குமுறைக் கட்சி 1849ல், குறிப்பாக 1850 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் வெளியிட்ட பிற்போக்கான சட்டங்களின் கரு பிரெஞ்சு விவசாயி வர்க்கத்துக்கு எதிராக விசேஷமாகத் திருப்பப்பட்டிருந்தது! மரபுப்படி பிரெஞ்சு விவசாயி முதல் புரட்சியின் விளைவாகத் தனக்குக் கிடைத்த எல்லா நன்மைகளுக்கும் முதலாம் நெப்போலியனே காரணம் என்று விசித்திரமாகக் கற்பனை செய்தபடியால் அவன் லுயீ போனபார்ட்டைக் குடியரசின் ஜனாதிபதியாக்கினான். ஆனால் பிரான்சின் சில வட்டாரங்களில் நடைபெற்ற விவசாயிகளின் ஆயுதந் தாங்கிய கலகங்களும் coup d'étatக்கு பிறகு போலீஸ் அவர்

களை வேட்டையாடியதும் அந்த மாயத்தோற்றம் வேகமாக நொறுங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நிரூபித்தது! விவசாயியிடம் செயற்கையான முறையில் பேணி வளர்க்கப் பட்ட பிரமைகள், மரபுவழிப்பட்ட தப்பெண்ணங்கள் என்ற அடிப்படைகளின் மீது பேரரசு நிறுவப்பட்டது; அவனுடைய ஜீவாதார நலன்கள், உண்மையான தேவைகளின் மீது கம்யூன் நிறுவப்படும்.

பிரெஞ்சு விவசாயியின் ஆத்திரம் நிலவுடைமையாளர், நாட்டுப்புற மாளிகைக்குச் சொந்தக்காரர், ஆயிரம் மில்லியன் நட்ட ஈட்டைப் பெற்றவர், நிலவுடைமையாளர் என்ற மாறுவேடத்திலிருக்கும் நகர முதலாளியின் மீது மையங் கொண்டிருக்கிறது. இரண்டாம் பேரரசின் போது அவர் விவசாயியின் நிலத்தைக் கைப்பற்றிய வேகம் வேறு எக்காலத்திலும் ஒருபோதும் இருந்ததில்லை. அது பகுதியளவுக்குச் செயற்கையான அரசு நடவடிக்கைகளின் மூலமாகவும் பகுதியளவுக்கு இயற்கையாக நவீன விவசாயத்தின் வளர்ச்சியினாலும் ஏற்பட்டது. குடியரசுக் கம்யூனின் மூன்று மாத ஆட்சி தங்களுக்கு எதிராக விவசாயிகள் மற்றும் விவசாயப் பாட்டாளிகளின் எழுச்சிக்கு சமிக்கையாக இருக்கும் என்பது நிலவுடைமையாளர்களுக்குத் தெரியும். அதனால்தான் அவர்கள் கம்யூனை மூர்க்கத்தனமாக வெறுத்தார்கள்! அவர்கள் நகரப் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலையைக் காட்டிலும் விவசாயிகளின் விடுதலையைப் பற்றி அதிகமாக அஞ்சுகிறார்கள்! விவசாயிகள் நகரப் பாட்டாளி வர்க்கத்தினரை வெகு சீக்கிரத்தில் தங்களுடைய தலைவர்களாகவும் அண்ணன்களாகவும் மதித்துப் போற்றுவார்கள். ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பெரும்பான்மையான நாடுகளைப் போல பிரான்சிலும் நகர உற்பத்தியாளர்களுக்கும் கிராம உற்பத்தியாளர்களுக்கும் இடையில், தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயி வர்க்கத்துக்கும் இடையில் ஆழமான முரண்பாடு இருக்கிறது என்பது உண்மையே. பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோள், அதன் இயக்கத்தின் பொருளாயத அடிப்படை என்னவென்றால் (இப்பொழுது எதேச்சாதிகார முறையில் அமைக்கப்பட்டிருந்தாலும்) மிகப் பெரிய அளவில் உழைப்பை அமைப்பு ரீதியாக்குவதும் (இப்பொழுது உற்பத்திச் சாதனங்களாக மட்டுமல்லாமல் உற்பத்தியாளனைச் சுரண்டுவதற்கும் அடிமைப்படுத்துவதற்கும்

சாதனங்கள் என்ற முறையில் ஏகபோகத்தின் கரங்களில் மத்தியப்படுத்தப்பட்டிருந்தாலும்) உற்பத்திச் சாதனங்களை மத்தியப்படுத்துவதுமே. பாட்டாளி வர்க்கத்தின் கடமை என்பது அந்த அமைப்பு ரீதியாக்கப்பட்ட உழைப்பு மற்றும் அந்த மத்தியப்படுத்தப்பட்ட உழைப்புச் சாதனங்களின் இன்றைய முதலாளித்துவத் தன்மையை உருமாற்றி, வர்க்க ஆதிக்கம் மற்றும் வர்க்கச் சுரண்டலுக்குரிய சாதனங்கள் என்ற நிலைமையிலிருந்து சுதந்திரமான கூட்டு உழைப்பின் வடிவங்கள் மற்றும் உற்பத்தியின் சமூகச் சாதனங்கள் என்ற நிலைமைக்கு அவற்றை மாற்றுவது. மறு பக்கத்தில் விவசாயிகளின் உழைப்பு பிரித்து வைக்கப்படுகிறது, அவர்களின் உற்பத்திச் சாதனங்கள் சிறு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன, தனித்தனியாக வைக்கப்படுகின்றன. இந்தப் பொருளாதார வேறுபாடுகளின் மீது வெவ்வேறு சமூக மற்றும் அரசியல் கருத்துக்கள் என்ற மொத்த உலகமுமே மேல் கட்டுமானமாக நிற்கிறது. ஆனால் இந்த விவசாயி உடைமை நெடுங் காலத்துக்கு முன்பே அதன் வாடிக்கையான கட்டத்தை, அதாவது அது எதார்த்தமாக இருந்த கட்டத்தை, சமூகத்தின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து நாட்டுப்புற உற்பத்தியாளர்களை வாடிக்கையான வாழ்க்கை நிலைமைகளில் வைத்த உற்பத்தி முறை மற்றும் உடைமை வடிவமாக இருந்த கட்டத்தைத் தாண்டி வளர்ந்துவிட்டது. அது அதன் தேய்வுக் கட்டத்தை அடைந்துவிட்டது. ஒரு பக்கத்தில் அதிலிருந்து prolétariat foncier (விவசாயப் பாட்டாளி வர்க்கம்) வளர்ந்திருக்கிறது. அதன் நலன்கள் நகரத்தின் கூலித் தொழிலாளிகளின் நலன்களை ஒத்திருக்கின்றன. உற்பத்தி முறையும் கூட வேளாண்மை இயலின் நவீன முன்னேற்றத்தில் காலாவதியாகிவிட்டது. கடைசியாக விவசாயினுடைய உடைமையும் கூடப் பெயரளவிலாகிவிட்டது, விவசாயிக்கு உடைமை என்ற பிரமையை மட்டும் கொடுத்து விட்டு அவனிடமிருந்து அவனுடைய சொந்த உழைப்பின் பலன்களைப் பறித்துவிடுகிறது. பெரிய நிலப் பண்ணைகளின் உடைமையாளர்களின் போட்டி, இரத்த வரி, அரசு வரி, நகர லேவாதேவிக்காரர்களின் வட்டிக் கொடுமை, விவசாயியைச் சூழ்ந்திருக்கின்ற நீதிமுறையின் சகலவித திருட்டுகள் ஆகியவை அவனை இந்திய விவசாயியின் நிலைக்குத் தாழ்த்திவிட்டன. அதே சமயத்தில்

உடைமை பறித்தல்—அவன் பெயரளவுக்குக் கொண்டிருக்கும் உடைமையும் கூடப் பறிக்கப்படுதல்—மற்றும் கிராமப் பாட்டாளியாக அவன் தாழ்த்தப்படுவது அன்றாட உண்மையாக மாறிவிட்டது. ஆகவே விவசாயியைப் பாட்டாளி வர்க்கத்தினரிடமிருந்து பிரிப்பது இனியும் அவனுடைய உண்மையான நலன் அல்ல—அவன் தன்னையே ஏமாற்றிக் கொள்கின்ற தப்பெண்ணமே அது. அவனுக்கு உடனடியாகப் பெரும் நன்மைகளைத் தரக் கூடிய ஒரே ஆட்சி கம்யூன் (அதன் இன்றைய பொருளாதார நிலைமையிலும் கூட) என்பதை நாம் எடுத்துக்காட்டினோம். அவனுடைய இன்றைய பொருளாதார நிலைமைகளை மாற்றியமைக்கக் கூடிய, ஒரு பக்கத்தில் நிலப்பிரபு அவனுடைய உடைமையைப் பறிப்பதிலிருந்து, மறு பக்கத்தில் நிலவுடைமையாளர் என்ற போலியான நிலைமையினால் அவனை அரைக்கின்ற, அழிக்கின்ற கடும் உழைப்பு மற்றும் துன்பத்திலிருந்து விடுவிக்கக் கூடிய ஒரே ஆட்சி வடிவம் அதுவே. அவன் பெயரளவுக்கு வைத்திருக்கின்ற நிலவுடைமையைத் தன்னுடைய உழைப்பின் பலன்களை அவன் அனுபவிக்கின்ற உண்மையான உடைமையாக மாற்றக் கூடியது அதுவே. உண்மையிலேயே சுதந்திரமான உற்பத்தியாளர் என்ற அவனுடைய நிலைமையை ஒழிக்காமல் சமூகத் தேவைகளால் தோற்றுவிக்கப்பட்ட ஆனால் இப்பொழுது அவனுக்கு விரோதமான சக்தி என்ற முறையில் ஒவ்வொரு நாளும் அவனை நெருக்கிக் கொண்டிருக்கின்ற நவீன வேளாண்மை இயலின் பலன்களை அவனுக்குத் திரட்டிக் கொடுக்கக் கூடியது அதுவே. கம்யூன் குடியரசினால் உடனடியான பலன்களைப் பெறுகின்றபடியால் அவன் சீக்கிரமாகவே அதில் நம்பிக்கை வைப்பான்.

## கம்யூன் (சமூக நடவடிக்கைகள்)

பாரிஸ் தொழிலாளர்கள் தற்பொழுது நடக்கின்ற புரட்சியில் முன்முயற்சி எடுத்திருப்பதிலும் அவர்கள் இந்தப் போராட்டத்தில் கடுமையான தாக்குதலுக்கு எதிராக வீர மிக்க சுயபலி உணர்வோடு நிற்பதிலும் புதியதாக ஒன்றுமில்லை. எல்லாப் பிரெஞ்சுப் புரட்சிகளிலும் குறிப்பிடத்தக்க மெய்விவரம் அதுவே! கடந்த காலம் திரும்பவும் நிகழ்வது மட்டும் அதுவே! பெருந்திரளான பொதுமக்களின், அதாவது

உற்பத்தி செய்கின்ற பெருந்திரளான மக்களின் பெயராலும் பகிரங்கமாக அவர்களுடைய நலன்களுக்காகவும் புரட்சி நடை பெறுவது இதற்கு முந்திய எல்லாப் புரட்சிகளையும் போல இந்தப் புரட்சியிலும் ஒரு கூறுக இருக்கிறது. மக்கள் முதல் எழுச்சிக்குப் பிறகு தங்கள் ஆயுதங்களை எறிந்து விடாதிருப் பதும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களின் குடியரசுவாதக் கோமாளிகளின் கைகளில் அதிகாரத்தை ஒப்படைக்காதிருப் பதும் கம்யூனை ஏற்படுத்தியதன் மூலம் அவர்கள் புரட்சியின் நடைமுறை நிர்வாகத்தைத் தங்களுடைய கைகளில் எடுத் துக்கொண்டு அதே சமயத்தில் ஆதிக்கம் செலுத்தும் வர்க் கத்தினரின் அரசாங்க இயந்திரத்துக்கு, அரசு இயந்திரத் துக்குப் பதிலாகத் தங்களுடைய சொந்த அரசாங்க இயந் திரத்தை ஏற்படுத்தி வெற்றி கிடைக்கின்ற பொழுது மக் களுடைய கைகளிலேயே அந்த அதிகாரத்தைத் தக்கவைப் பதற்குரிய சாதனத்தையும் கண்டுபிடிப்பதும் இங்கே புதிய அம்சம் எனலாம். இது அவர்களுடைய முன்னறியாத குற்றம்! தொழிலாளர்கள் ''உயர் மட்டத்திலுள்ள 10,000 நபர்களின்'' அரசாங்க உரிமைகளை மீறுவதா, சமூகத்தின் அமைப்பு ரீதியாக்கப்பட்ட அரசு சக்தியைத் தன்னுடைய சொந்த லாபத்துக்கு உபயோகப்படுத்திக் கொண்ட வர்க்க எதேச்சாதிகாரத்தின் பொருளாதார அடிப்படையை நொறுக் குவதற்குத் தாங்கள் தயார் என்று பிரகடனம் செய்வதா! ஐரோப்பாவிலும் அதைப் போலவே அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கௌரவமான வர்க்கத்தினருக்கு வலிப்பு நோய் ஏற்படுத்தியிருப்பதும் இது அடாத செயல் என்று அவர்கள் அருவருப்புடன் கூக்குரலிடுவதும் மக்களைக் கொல்ல வேண்டும் என்று அவர்கள் மூர்க்கத்தனமாக அறை கூவுவதும் அவர் களுடைய நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் அவர்களுடைய பத்திரிகைகளின் சேவகர்களும் சந்தைக் கடை பாணியில் வசவு, அவதூறுகளைப் பொழிவதும் இதனுல்தான்!

கம்யூனின் மகத்தான நடவடிக்கை இதுவரையிலும் கேள்விப்பட்டிராத நெருக்கடியான நிலைமைகளுக்கு நடுவில் அது நீடிப்பதும் பாடுபடுவதும் செயலாற்றுவதுமே! பாரிஸ் கம்யூன் ஏற்றிய செங்கொடி உண்மையில் பாரிஸ் தொழி லாளர்களுடைய அரசாங்கத்துக்கு மட்டுமே சிகரமாக இருக் கிறது! உழைப்பின் விடுதலையும் சமூகத்தை மாற்றியமைப் பதுமே தங்களுடைய இலட்சியம் என்று அவர்கள் தெளி

வாக, உணர்வுபூர்வமாகப் பிரகடனம் செய்துவிட்டார்கள்! அவர்களுடைய குடியரசின் உண்மையான ''சமூகத்'' தன்மை பாரிஸ் கம்யூனைத் தொழிலாளர்கள் நடத்துகிறார்கள் என்பதில் அடங்கியிருக்கிறது! அவர்களுடைய நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் அவை இயல்பாகவே பாரிசினுடைய இராணுவத் தற்காப்புக்கும் அதன் சப்ளைக்கும் தலைமையான கவனத்தைக் கொடுத்தன!

தொழிலாளி வர்க்கத்துக்குப் பெருமிதம் நிறைந்த ஆதரவு கொடுக்கின்ற சில நண்பர்கள் அவர்கள் ''சோஷலிஸ்ட்'' நடவடிக்கைகள் என்று கருதுகின்ற ஒரு சில நடவடிக்கைகளைப் பற்றி—அவற்றின் போக்கைத் தவிர வேறு சோஷலிஸ்ட் அம்சம் அவற்றில் ஏதுமில்லை என்றபோதிலும்—தங்கள் அருவருப்பை மறைக்க முடியாத அதே நேரத்தில் தங்களுடைய திருப்தியைத் தெரிவிப்பதுடன் என்ன இருந்தாலும் தொழிலாளர்கள் அறிவுள்ளவர்களே, அவர்கள் எப்பொழுது ஆட்சிக்கு வந்தாலும் எப்பொழுதுமே சோஷலிஸ்ட் முன்முயற்சிகளை உறுதியாகக் கைவிடுகிறார்கள் என்ற மாபெரும் கண்டுபிடிப்பின் மூலம் பாரிஸ் கம்யூனுக்கு ''மேற்குடியினரின்'' அனுதாபங்களைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள்! அவர்கள் மெய்யாகவே பாரிசில் ஒரு ஃபலான்ஸ்டரை அல்லது இகாரியாவை[75] ஏற்படுத்த முயற்சிக்கவில்லை. தங்கள் தலைமுறையின் மேதைகள் இவர்களே! தொழிலாளி வர்க்கத்தினரின் மெய்யான விருப்பார்வங்களையும் உண்மையான இயக்கத்தையும் பற்றி எவ்விதத்திலும் அறிவில்லாத இந்தப் பரோபகார ஆதரவாளர்கள் ஒரு விஷயத்தை மறந்துவிடுகிறார்கள். குறுங்குழுக்களை நிறுவிய சோஷலிஸ்டுகள் அனைவருமே உலக அரங்கத்தில் தொழிலாளி வர்க்கம் வரலாற்றின் உந்து சக்தியாக நுழைவதற்கு முதலாளித்துவச் சமுதாயத்தின் முன்னேற்றத்தின் மூலம் போதிய பயிற்சியளிக்கப்பட்டு ஸ்தாபனமாக அமைக்கப்படாத காலகட்டத்தைச் சேர்ந்தவர்கள். தொழிலாளி வர்க்கத்தினரின் விடுதலையின் பொருளாயத நிலைமைகள் பழைய உலகத்தில் போதிய அளவுக்கு முதிர்ச்சி அடையவுமில்லை. அவர்களிடம் வறுமை இருந்தது, ஆனால் அவர்களுடைய சொந்த இயக்கத்துக்குரிய நிலைமைகள் இன்னும் ஏற்படவில்லை. இக்குறுங்குழுக்களின் கற்பனாவாத ஸ்தாபகர்கள் இன்றைய சமூகத்தைப் பற்றித் தங்களுடைய விமர்சனத்தில் கூலி உழைப்பு

முறை மற்றும் வர்க்க ஆதிக்கத்தின் அனைத்துப் பொருளாதார நிலைமைகளையும் அகற்றுதல் என்ற அந்தச் சமூக இயக்கத்தின் இலட்சியத்தைத் தெளிவாக விவரித்தாலும் அவர்கள் சமூகத்தில் அதன் மாற்றத்துக்கு அவசியமான பொருளாயத நிலைமைகளைப் பார்க்கவில்லை, தொழிலாளி வர்க்கத்திடமும் அந்த இயக்கத்தின் அமைப்பு ரீதியான, உணர்வு பூர்வமான சக்தியைப் பார்க்கவில்லை. அவர்கள் ஒரு புதிய சமூகத்தைப் பற்றிப் புனைவுச் சித்திரங்களையும் திட்டங்களையும் தீட்டி இயக்கத்துக்கு அவசியமான வரலாற்று நிலைமைகள் இல்லாததை ஈடு செய்ய முயன்றார்கள்; அவற்றின் பிரச்சாரத்தில் மீட்சிக்குரிய உண்மையான வழிகளை அவர்கள் கண்டார்கள். தொழிலாளி வர்க்கத்தின் இயக்கம் உண்மையான விஞடியிலிருந்து இப்புனைவுக் கற்பனைகள் மறைந்தன — இக்கற்பனுவாதிகளின் குறிக்கோளைத் தொழிலாளி வர்க்கம் கைவிடவில்லை, அதற்குப் பதிலாக அவற்றை நிறைவேற்றுகின்ற உண்மையான சாதனங்களை அது கண்டு கொண்டதே அதற்குக் காரணம்—அவற்றுக்குப் பதிலாக இயக்கத்தின் வரலாற்று நிலைமைகளைப் பற்றி உண்மையான நுண்ணறிவு ஏற்பட்டது, தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணமிக்க ஸ்தாபனம் மேன்மேலும் பலமடைந்தது. ஆனுல் கற்பனுவாதிகள் பிரகடனம் செய்த கடைசி இரண்டு குறிக்கோள்களும் பாரிஸ் புரட்சியும்[76] அகிலமும் பிரகடனம் செய்திருக்கும் கடைசிக் குறிக்கோள்களே! அவற்றை அடைகின்ற வழிகள் மட்டுமே வேறு; இயக்கத்தின் உண்மையான நிலைமைகள் இனியும் கற்பனுவாதப் புனைகதைகளில் மூடப்பட்டிருக்கவில்லை. எனவே பாட்டாளி வர்க்கத்துக்குப் பெருமிதமான ஆதரவு கொடுக்கின்ற இந்த நண்பர்கள் இந்தப் புரட்சி உரத்த குரலில் பிரகடனம் செய்திருக்கின்ற சோஷலிஸ்ட் போக்குகளை மழுப்புகின்ற பொழுது அவர்கள் தங்களுடைய சொந்த அறியாமைக்கே பலியாகிருர்கள். தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தீர்க்கதரிசிகளின் கற்பனைப் படைப்புகள் அவர்களுக்கு இன்னும் ''சமூகப் புரட்சியாகவே'', அதாவது சமூகப் புரட்சி அவர்களுக்கு இன்னும் ''கற்பனுவாதமாக'' இருந்தால் அது பாரிஸ் பாட்டாளி வர்க்கத்தின் தவறு ஆகாது.

---

மத்தியக் கமிட்டியின் *Journal Officiel*, மார்ச் 20:

''ஆளும் (ஆதிக்கம் செலுத்தும்) வர்க்கங்களின் défaillances*க்கும் துரோகங்களுக்கும் நடுவில் பொது விவகாரத்தை (அரசு வேலைகளை) நெறிப்படுத்துகின்ற அதிகாரத்தை (நிர்வகிப்பதை) தங்களுடைய கைகளில் எடுத்துக்கொண்டு தலைமையைக் காப்பாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை பாரிஸ் பாட்டாளிகள் புரிந்துகொண்டார்கள் (compris)".

''முதலாளி வர்க்கத்தின் அரசியல் திறமையின்மையும் தார்மீகச் சீர்குலைவுமே'' ''பிரான்சின் துன்பங்களுக்குக்'' காரணம் என்று அவர்கள் கண்டித்திருக்கிறார்கள்.

''எல்லாவற்றையும் உற்பத்தி செய்தாலும் எதையுமே அனுபவிக்காதவர்கள் தொழிலாளர்கள். தாங்கள் உற்பத்தி செய்து குவித்த பொருட்கள், உழைப்புப் பலன்கள், வியர்வைக்கு நடுவில் துன்பத்தில் வாடுபவர்கள்... அவர்கள் தங்களுடைய விடுதலைக்காகப் பாடுபடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப்படுவதில்லையா?.. தன்னுடைய உரிமைகளுக்கு எதிரான நிரந்தரமான பயமுறுத்தல்கள், அதன் நியாயமான விருப்பங்கள் அனைத்தும் முற்றிலும் நிராகரிக்கப்படுதல், நாடு மற்றும் அதன் எல்லா நம்பிக்கைகளின் அழிவுக்கு நடுவில் தன்னுடைய விதியைத் தன் கைகளில் எடுத்து அரசு அதிகாரத்தை (en s'emparant du pouvoir) கைப்பற்றி தன்னுடைய வெற்றியை உறுதிப்படுத்துவது தன்னுடைய அதிகாரக் கடமை, தனிமுதலான உரிமை என்பதைப் பாட்டாளி வர்க்கம் புரிந்து கொண்டிருக்கிறது''.

முதலாவதாக, பிரான்சை ஆதிக்க வர்க்கத்தினர் அதன் மீது சுமத்தியுள்ள அழிவிலிருந்தும் ஊழல்களிலிருந்தும் காப்பாற்றுவதற்குத் தொழிலாளி வர்க்கத்தின் அரசாங்கம் அவசியம், ஆட்சியதிகாரத்திலிருந்து இந்த வர்க்கங்களை (பிரான்சை ஆட்சி செய்வதற்குரிய தகுதியை இழந்துவிட்ட இந்த வர்க்கங்களை) அகற்றுவது தேசியப் பாதுகாப்புக்கு அவசியமான நிபந்தனை என்பது இங்கே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் அரசாங்கம் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்குப் பாடுபடுவதன் மூலமே—அந்த விடுதலையின் நிபந்தனைகள் அதே சமயத்தில் பிரான்சின் புனர்

---

*—இன்சால்வென்சிகள்.—ப-ர்.

வாழ்வுக்குரிய நிபந்தனைகளாகவும் இருக்கின்றன—பிரான்சைக் காப்பாற்ற முடியும், தேசியப் பணியைச் செய்ய முடியும் என்பதும் இதற்குச் சிறிதும் குறைவில்லாத முறையில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்களின் அரசாங்கம் உழைப்புச் சாதனங்களை ஏகபோகமாக்கியவர்கள் மீது, மூலதனத்தின் மீது உழைப்பின் யுத்தம் என்று பிரகடனம் செய்யப்பட்டது.

முதலாளி வர்க்கத்தினரின் தேசியவெறி ஒரு அகந்தை, அவர்களுடைய பாசாங்குகள் அனைத்துக்கும் ஒரு தேசிய உடை மட்டுமே. அது நிரந்தரமான இராணுவங்களைக் கொண்டு சர்வதேசப் போராட்டங்களை நிரந்தரப்படுத்துவதற்கு, ஒவ்வொரு நாட்டிலுமுள்ள உற்பத்தி செய்பவர்களை மற்ற ஒவ்வொரு நாட்டிலுமுள்ள அவர்களுடைய சகோதரர்களுக்கு எதிராகப் போராடச் செய்து அவர்களை அடிமைப்படுத்துவதற்கு ஒரு வழியே; தொழிலாளி வர்க்கத்தின் விடுதலையின் முதல் நிபந்தனையான சர்வதேச ஒத்துழைப்பைத் தடுப்பதற்கு ஒரு வழியே. அந்த தேசியவெறியின் (அது நெடுங் காலமாகவே வெறும் சொற்றொடராகத்தான் இருக்கிறது) உண்மையான தன்மை ஸெடானுக்குப் பிறகு[77] நடைபெற்ற தற்காப்பு யுத்தத்தின் போது, தேசியவெறி முதலாளி வர்க்கம் எங்குமே அதை ஸ்தம்பிக்கச் செய்த பொழுது, பிரான்சின் சரணாகதியில், தேசியவெறியின் தலைமைப் பூசாரியான தியேரின் தலைமையில் பிஸ்மார்க்கின் தயவில் நடத்தப்பட்ட உள்நாட்டு யுத்தத்தில் வெளிவந்தது! சரணாகதிக்குப் பிறகு பாரிசில் அந்நியர்களை வேட்டையாடியதிலும் ஜெர்மானிய எதிர்ப்புச் சங்கத்தின்[78] அற்பத்தனமான போலீஸ் சூழ்ச்சியிலும் அது வெளிவந்தது. தேசியப் பகைமை என்ற வெறியினால் பாரிஸ் மக்களை (மற்றும் பிரெஞ்சு மக்களை) மழுங்கடித்துவிட முடியும், அந்நியர்களிடம் வெறுப்பைச் செயற்கையாகத் தூண்டுவதால் அவர்களுடைய உண்மையான இலட்சியத்தையும் உள்நாட்டு துரோகிகளையும் மறக்கும்படி செய்ய முடியும் என்று நம்பப்பட்டது!

இந்தச் செயற்கையான இயக்கம் புரட்சிகரமான பாரிசின் மூச்சுக் காற்றுக்கு முன்னால் எப்படி மறைந்துவிட்டது (சிதறிப் போயிற்று)! உற்பத்தி செய்பவன் பாடுபடும் இலட்சியம் எல்லா இடங்களிலும் ஒன்றே, எந்த தேசிய இனத்தைச்

சேர்ந்திருந்தாலும் (எந்த தேசியப் போர்வையில் இருந்தாலும்) அவனுடைய எதிரியும் ஒன்றே என்று பாரிஸ் தன் சர்வதேசியப் போக்குகளை உரத்த குரலில் முழங்கியது, வெளிநாட்டுக்காரர்களைக் கம்யூனில் சேர்த்துக் கொள்வதை ஒரு கோட்பாடாகப் பிரகடனம் செய்தது, அது ஒரு வெளிநாட்டுத் தொழிலாளியை* (அகிலத்தின் உறுப்பினரை) தன்னுடைய நிர்வாகக் கமிஷனுக்குக் கூடத் தேர்ந்தெடுத்தது, பிரெஞ்சு தேசியவெறியின் சின்னமான வெண்டோம் ஸ்தூபியைத்[79] தகர்க்கும்படி உத்தரவிட்டது!

முதலாளித்துவ தேசியவெறியர்கள் பிரான்சைக் கூறு போட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அந்நிய ஆக்கிரமிப்புச் சர்வாதிகாரத்துக்குப் பணிந்து சேவை செய்யும் பொழுது பாரிஸ் தொழிலாளர்கள் தங்களுடைய சொந்த வர்க்க ஆட்சியாளர்களைத் தாக்கி அந்நிய எதிரியை முறியடித்து விட்டார்கள், அனைத்து நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் முன்னணிப் படை என்ற நிலையை வென்றெடுத்துப் பிரதேச எல்லைகளை ஒழித்துவிட்டார்கள்.

முதலாளி வர்க்கத்தினரின் உண்மையான தேசபக்தி—பல்வேறு ''தேசிய'' சொத்துடைமைகளின் உண்மையான உடைமையாளர்களுக்கு அது மிகவும் இயற்கையானதே—அவர்களுடைய நிதி, வர்த்தக மற்றும் தொழில் முயற்சிகளின் மீது பொதுத் தன்மை முத்திரை குத்தப்பட்ட பிறகு வெறும் போலி என்ற அளவில் தேய்ந்து விட்டது. மற்ற நாடுகளிலும் இதே நிலைமைகள் ஏற்பட்டால் பிரான்சைப் போல அங்கும் வெடிக்கும்.

*1871*ல் ஏப்ரல்—மேயில் எழுதப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

---

*— லேவோ ஃபிரான்கெல்.—ப-ர்.

பி. எங்கெல்ஸ்

# தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையைப் பற்றி

## *லண்டன் மாநாட்டுக் கூட்டத்தின் போது நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்புகள்*

**செப்டெம்பர் 21, 1871**

அரசியல் விஷயங்களில் முற்றிலும் ஒதுங்கியிருப்பதென்பது முடியாது; எனவே ஒதுங்கியிருக்கும் பத்திரிகைகள் அனைத்துமே உண்மையில் அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இது எப்படிச் செய்யப்பட வேண்டும், எந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது ஒன்றே பிரச்சினை. அதைத் தவிர, நாம் தலையிடாதிருப்பதும் முடியாது. தொழிலாளர் கட்சி பெரும்பான்மையான நாடுகளில் ஏற்கெனவே ஒரு அரசியல் கட்சியாக இருந்து கொண்டிருக்கிறது. நாம் தலையிடாமையைப் போதித்து இதை அழிக்கக் கூடாது. யதார்த்தமான வாழ்க்கையின் அனுபவம், அரசியல் அல்லது சமூகக் காரணங்களுக்காக இன்றைக்கிருக்கும் அரசாங்கங்கள் தொழிலாளர்கள் மீது திணிக்கும் அரசியல் ஒடுக்கு முறை—அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்—தொழிலாளர்களை அரசியலில் ஈடுபடும்படி நிர்ப்பந்திக்கின்றன. அவர்களிடம் ஒதுங்கியிருப்பதைப் போதிப்பது முதலாளித்துவ வர்க்க அரசியலின் கரங்களுக்குள் அவர்களை விரட்டுவதைப் போன்றதாகும். குறிப்பாக, பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையை அட்டவணையில் சேர்த்து விட்ட பாரிஸ் கம்யூனுக்குப் பிறகு ஒதுங்கி நிற்பது என்பது முற்றிலும் இயலாததே.

வர்க்கங்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இதை எப்படி நிறைவேற்ற முடியும்! பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்தின் மூலமாகத்தான். இது எங்குமே அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பொழுது அரசியலில் தலையிட வேண்டாம் என்று நம்மிடம் சொல்கிறார்கள்! தலை

யிடாமையைப் பின்பற்றுகின்ற எல்லோரும் தங்களைப் புரட்சியாளர்கள் என்று—எல்லாவற்றுக்கும் மேலான புரட்சியாளர்கள் என்று கூட—சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் புரட்சி என்பது தலைமையான அரசியல் நடவடிக்கை; அதை விரும்புபவர் அதன் வழிகளையும் தொழிலாளர்களுக்குப் புரட்சியில் பயிற்சியை—அது இல்லையென்றால் போராட்டத்துக்கு மறு நாளே தொழிலாளர்கள் ஃபாவர்களாலும் பியாக்களாலும் எப்பொழுதும் ஏமாற்றப்படுவார்கள்—கொடுத்து அதற்குத் தயாரிக்கும் அரசியல் நடவடிக்கையையும் விரும்புவார்கள். ஆனால் நாம் நடத்த வேண்டிய அரசியல் தொழிலாளர்களின் அரசியலாகும். தொழிலாளர்களின் கட்சி முதலாளித்துவ வர்க்கக் கட்சிகள் சிலவற்றின் வெறும் ஒட்டுப் பகுதியாக இருக்கக் கூடாது; சொந்த இலட்சியத்தையும் சொந்தக் கொள்கையையும் கொண்ட முற்றிலும் சுயேச்சையான கட்சியாக இருக்க வேண்டும்.

அரசியல் சுதந்திரங்கள்—கூட்டம் நடத்தும் சுதந்திரம், சங்கம் அமைக்கும் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம்—இவை நம்முடைய ஆயுதங்கள். அவர்கள் இவற்றைப் பறிக்க முயற்சி செய்யும் பொழுது நாம் கைகளைக் கட்டிக் கொண்டு தலையிடாமல் இருப்பதா? எந்த அரசியல் நடவடிக்கையுமே இன்றைக்கிருக்கும் நிலைமையை அங்கீகரிப்பதை உள்ளடக்கியிருக்கிறது என்று நம்மிடம் கூறுகிறார்கள். ஆனால் இந்த நிலைமை அதை எதிர்ப்பதற்குரிய சாதனங்களையும் நம்மிடம் கொடுக்கும் பொழுது அத்தகைய சாதனங்களைப் பயன்படுத்தினால் இன்றைக்கிருக்கும் நிலைமையை அங்கீகரிப்பதென்று அர்த்தம் கூற முடியாது.

மூலம் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

# அதிகாரத்தைப் பற்றி

சமீப காலமாக சோஷலிஸ்டுகள் பலர் **அதிகாரக் கோட்பாடு**[80] என்று அவர்கள் கூறுவதற்கு எதிராக ஒரு தொடர்ச்சியான போர் தொடுத்திருக்கிறார்கள். இந்த அல்லது அந்த நடவடிக்கை **அதிகாரத்தோரணையானது** என்று அவர்களிடம் சொன்னால் அதுவே அதைக் கண்டனம் செய்யப் போதிய காரணமாகிறது. இப்படிப்பட்ட விசாரணையற்ற முறை அதிகமான அளவுக்குத் தவறாகப் பயன்படுத்தப்படுவதால் இந்த விஷயத்தை இன்னும் நுணுக்கமாகப் பார்ப்பது அவசியமாகியிருக்கிறது. அதிகாரம் என்ற சொல்லுக்கு—இங்கே உபயோகிக்கப்பட்டிருக்கக் கூடிய உணர்ச்சியில்—நம் மீது மற்றொருவருடைய சித்தத்தைத் திணிப்பது என்று பொருள்; மறு பக்கத்தில், அதிகாரம் என்பது கீழ்ப்படிதலை முன்னூகிக்கிறது. இந்த இரண்டு சொற்களுமே மோசமாக ஒலிப்பதால், கீழ்ப்படுத்தப்பட்டிருக்கும் தரப்பைச் சேர்ந்த வருக்கு அவை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறவு அதிருப்தியானதாக இருப்பதால், இன்றைய சமூகத்தின் நிலைமைகளின் கீழ் இவற்றை இல்லாமற்செய்வதற்கு ஏதேனும் வழியுண்டா, இந்த அதிகாரத்துக்கு இனி எந்தச் சந்தர்ப்பமும் இல்லாமற்செய்து அதன் காரணமாக அது மறைந்து விடுகின்ற மற்றொரு சமூக அமைப்பை நாம் படைக்க முடியுமா என்பதை ஆராய வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இன்றைய முதலாளித்துவச் சமூகத்துக்கு அடிப்படையாக இருக்கின்ற பொருளாதார, தொழில் துறை மற்றும் விவசாய நிலைமைகளை ஆராயும் பொழுது அவை தனித்த நடவடிக்கைகளுக்குப் பதிலாகத் தனி நபர்களின் கூட்டு நடவடிக்கை

களை ஏற்படுத்துவதற்கு மேன்மேலும் முற்படுகின்றன என்பதை நாம் காண்கிறோம். நீராவியினால் இயக்கப்படுகின்ற சிக்கலான இயந்திரங்களை நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மேற்பார்வையிடுகின்ற பெரிய தொழிற்சாலைகளையும் ஆலைகளையும் கொண்ட நவீன தொழில் துறை தனி உற்பத்தியாளர்களின் சிறு பட்டறைகளை அகற்றி விட்டது; நெடுஞ்சாலைகளில் ஓடிக் கொண்டிருந்த கோச், சரக்கு வண்டிகளுக்குப் பதிலாக ரயில் வண்டிகள் வந்து விட்டன; அதே போல, சிறு கப்பல்களுக்கும் படகுகளுக்கும் பதிலாக நீராவிக் கப்பல்கள் வந்து விட்டன. இயந்திரம் மற்றும் நீராவிச் சக்தியினுடைய ஆதிக்கத்தின் கீழ் விவசாயமும் கூட வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அவை மெதுவாக — ஆனால் கடும் உறுதியோடு—சிறு நிலவுடைமையாளர்களின் இடத்தில் பெரும் முதலாளிகளை வைத்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் கூலித் தொழிலாளர்களின் உதவியின் மூலம் மாபெரும் நிலப் பரப்புகளை உழுது பயிரிடுகிறார்கள். எல்லா இடங்களிலுமே தனி நபர்களின் சுதந்திரமான நடவடிக்கைக்குப் பதிலாகக் கூட்டு நடவடிக்கை, ஒன்றையொன்று சார்ந்திருக்கின்ற பல அடுக்கு நிகழ்வுப் போக்குகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் யாராவது ஒருவர் கூட்டு நடவடிக்கையைப் பற்றிப் பேசினால் அமைப்பையும் வலியுறுத்துகிறார்; இப்பொழுது அதிகாரம் இல்லாமல் அமைப்பு இருக்க முடியுமா?

செல்வத்தின் உற்பத்தி மற்றும் செலாவணியின் மேல் இப்பொழுது அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருக்கின்ற முதலாளிகளை ஒரு சமூகப் புரட்சி தங்கள் சிம்மாசனங்களிலிருந்து கீழே இறக்கி விடுவதாக வைத்துக் கொள்வோம். அதிகாரத்தோரணை-எதிர்ப்பாளர்களுடைய கருத்துக்களை முற்றிலும் ஏற்றுக்கொண்டு நிலமும் உழைப்பின் கருவிகளும் அவற்றை உபயோகப்படுத்துகின்ற தொழிலாளர்களின் கூட்டு உடைமை ஆகி விட்டதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் அதிகாரம் மறைந்துவிடுமா அல்லது அதன் வடிவத்தை மட்டும் மாற்றிக் கொள்கிறதா? கீழே காண்போம்.

ஒரு பருத்தி நூற்பு ஆலையை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். பருத்தி நூலாக மாறுவதற்கு முன்பு குறைந்த பட்சமாக அடுத்தடுத்து ஆறு நடவடிக்கைகளுக்கு உட்

படுத்தப்படுகிறது. இவை பெரும் பகுதியுமே வெவ்வேறு அறைகளில் நடைபெறுகின்றன. மேலும் எல்லா இயந்திரங் களும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்ருல் ஒரு எஞ் சினீயர் நீராவி இயந்திரத்தைப் பார்த்துக் கொள்ள வேண் டும்; பழுது பார்ப்பதற்கு மெக்கானிக்குகள் வேண்டும்; பொருளை ஒரு அறையிலிருந்து மற்ருெரு அறைக்கு மாற்று கின்ற வேலை மற்றும் இதரவைகளுக்காக இன்னும் பல தொழிலாளர்கள் வேண்டும். இத்தொழிலாளர்கள்—ஆண் கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும்—நீராவிச் சக்தி யின் அதிகாரத்தால் (தனி நபருடைய சுயாட்சியைப் பற்றி அதற்குக் கவலையே கிடையாது) நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற நேரங்களில் வேலையைத் தொடங்குவதும் முடிப்பதும் அவசியப்படுகிறது. ஆகவே தொழிலாளர்கள் முதலில் தங் களுடைய வேலை நேரங்களைப் பற்றி ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டும்; இந்த நேரங்களைப் பற்றி ஒரு தடவை முடிவு செய்த பிறகு எல்லோரும்—எத்தகைய விதிவிலக்குமில்லா மல்—அதைப் பின்பற்ற வேண்டும். அதற்குப் பிறகு ஒவ் வொரு அறையிலும் ஒவ்வொரு விளுடியும் உற்பத்தி முறை, பொருள்களின் வினியோகம் மற்றும் இதரவை சம்பந்த மான குறிப்பிட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன; இவை உட னடியாகத் தீர்க்கப்பட வேண்டும். இல்லையென்ருல் உற்பத்தி முழுவதும் உடனடியாக நின்று போய்விடும். ஒவ்வொரு உழைப்புப் பிரிவிலும் உச்சியிலிருக்கின்ற ஒரு பிரதிநிதியின் முடிவிஞல்—அல்லது சாத்தியமாஞல் பெரும்பான்மையினர் வாக்குப்படி—அவை தீர்க்கப்படுகின்றன. எப்படித் தீர்க்கப் பட்ட போதிலும் தனி நபரின் சித்தம் எப்பொழுதுமே கீழ்ப்படுத்தப்படுகிறது; பிரச்சினைகள் அதிகாரத்தோரணை யான முறையில் தீர்க்கப்படுகின்றன என்பது இதற்குப் பொருளாகும். தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக் கொள்கின்ற சிறு முதலாளிகள் முன்பு எக்காலத்திலும் இருந் ததைக் காட்டிலும் மிக அதிகமான எதேச்சாதிகாரத்தோடு பெரிய தொழிற்சாலையிலிருக்கும் தானியங்கி இயந்திரம் நடந்து கொள்கிறது. குறைந்தபட்சம் வேலை நேரத்தைக் பொறுத்த மட்டில் இந்தத் தொழிற்சாலைகளின் வாயில் களில் பின்வருமாறு எழுதிவிடலாம்: **உள்ளே வருபவர்கள் எல்லா சுயாட்சியையும் பின்ஞல் போட்டுவிட்டு நுழைய வேண்டும்!**[81] மனிதன் தன்னுடைய அறிவிஞலும் ஆராய்ச்சி மேதையிஞ

னும் இயற்கைச் சக்திகளைக் கீழ்ப்படுத்தியிருக்கிருன் என்ருல், அவை—அவற்றை அவன் உபயோகப்படுத்துகின்ற அளவில்—எல்லா சமூக அமைப்புகளிலிருந்தும் தனித்து நிற்கின்ற மெய்யான அதிகாரத்தோரணைக்கு அவனை உட்படுத்தி அவன் மீது பழி தீர்த்துக் கொள்கின்றன. பெருந்தொழில் துறையில் அதிகாரத்தை ஒழிப்பதென்பது தொழில் துறையையே ஒழிக்க விரும்புவதற்குச் சமம்; இராட்டைக்குத் திரும்புவதற்காக விசைத் தறியை ஒழிக்க விரும்புவதற்குச் சமம்.

இன்னொரு உதாரணமாக ரயில்வேயை எடுத்துக் கொள்வோம். இங்கும் ஏராளமான தனி நபர்களின் ஒத்துழைப்பு முற்றிலும் அவசியமாக இருக்கிறது. இந்த ஒத்துழைப்பைத் துல்லியமாக நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரங்களுக்கிடையே கடைப்பிடிக்க வேண்டும்; அப்பொழுதுதான் விபத்துக்கள் ஏற்படாமலிருக்கும். இதிலும் கூட கீழே ஏற்படுகின்ற எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கின்ற ஆதிக்கமான சித்தமே வேலையின் முதல் நிபந்தனையாக இருக்கிறது: அந்தச் சித்தம் தனிப் பிரதிநிதியாலோ அல்லது சம்பந்தப்பட்ட நபர்களின் பெரும்பான்மையினருடைய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குப் பொறுப்புத் தரப்பட்டிருக்கும் கமிட்டியினுலோ பிரதிநிதித்துவம் செய்யப்படலாம். எப்படியிருந்தாலும் இந்த உதாரணத்தில் மிகவும் முனைப்பான அதிகாரத்தைப் பார்க்கிருேம். மேலும், கௌரவமிக்க இரயில் பிரயாணிகள் மீது ரயில்வே சிப்பந்திகளின் அதிகாரம் ஒழிக்கப்பட்டிருந்தால் முதன்முதலாகச் செலுத்தப்பட்ட ரயில் வண்டிக்கு என்ன கதி ஏற்பட்டிருக்கும்?

ஆனுல் அதிகாரத்தின்—அதிலும் கண்டிப்பான அதிகாரத்தின்—அவசியத்தை நடுக்கடலில் போய்க் கொண்டிருக்கும் கப்பலில் பார்ப்பதைப் போல வேறு எங்குமே பார்க்க முடியாது. அங்கே ஆபத்தான நேரங்களின் போது எல்லோருடைய உயிர்களுமே ஒருவருடைய சித்தத்துக்கு எல்லோருமே உடனடியாகவும் முற்றிலும் கீழ்ப்படிவதைப் பொறுத்திருக்கிறது.

அதிகாரத்தோரணை என்றதும் மிகவும் சீறிவிழுகின்ற எதிர்ப்பாளர்களிடம் நான் இந்த வாதங்களைச் சமர்ப்பித்த பொழுது அவர்கள் பின்வரும் பதிலை மட்டுமே என்னிடம் சொல்ல முடிந்தது: ''ஆம், அது உண்மையே; ஆனுல் இந்த உதாரணத்தில் நாம் நமது பிரதிநிதிகளிடம் அதிகாரத்தைக்

கொடுக்கவில்லை, அவர்களிடம் ஒரு பணியை ஒப்படைத்திருக் கிறோம்!'' விஷயங்களின் பெயர்களை மாற்றிவிட்டால் விஷயங்களையே மாற்றி விட்டதாக இந்தக் கனவான்கள் நினைக் கிறார்கள். இச்சிந்தனையாளர்கள் இப்படி மொத்த உலகத் தையுமே கேலி செய்கிறார்கள்.

ஆகவே, ஒரு பக்கத்தில் ஒரு வகையான அதிகாரம் (அது எப்படி வழங்கப்பட்டிருந்தாலும்), மறு பக்கத்தில் ஒரு வகையான கீழ்ப்படுத்துதல்—இவை எல்லா சமூக ஸ்தா பனங்களிலிருந்தும் சுதந்திரமான முறையில், நாம் பொருள் களை உற்பத்தி செய்து செலாவணியாக்குகின்ற பொருளாயத நிலைமைகளோடு சேர்த்து நம் மீது திணிக்கப்படுகின்றன.

மேலும், உற்பத்தி மற்றும் செலாவணியின் பொருளா யத நிலைமைகள் பெரிய அளவு தொழில் மற்றும் பெரிய அளவு விவசாயத்தோடு தவிர்க்க முடியாத வகையில் வளர்ச்சி யடைகின்றன; இந்த அதிகாரத்தின் எல்லையை மேன்மேலும் விஸ்தரிக்க முற்படுகின்றன என்பதை நாம் பார்த்தோம். எனவே அதிகாரம் என்ற கோட்பாடு முற்றிலும் தீங்கானது என்றும் சுயாட்சி என்ற கோட்பாடு முற்றிலும் நல்லது என்றும் பேசுவது அர்த்தமில்லாததே. அதிகாரமும் சுயாட்சி யும் சார்பு நிலையான விஷயங்கள்; சமூக வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களோடு சேர்ந்து அவற்றின் எல்லைகளும் மாறுகின்றன. எதிர்கால சமூக அமைப்பில், உற்பத்தி நிலை மைகள் தவிர்க்க முடியாததாகச் செய்கின்ற எல்லைகளுக்குள் அதிகாரம் கட்டுப்படுத்தப்படும் என்று சொல்வதோடு சுயாட்சிவாதிகள் நிறுத்திக் கொண்டால் நாம் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அதிகாரத்தை அவசியமாக்குகின்ற எல்லா உண்மைகளையும் அவர்கள் பார்க்க மறுக்கிறார்கள்; அந்தச் சொல்லை எதிர்த்து உணர்ச்சியோடு போராடுகிறார்கள்.

அதிகாரத்தோரணை-எதிர்ப்பாளர்கள் அரசியல் அதி காரத்துக்கு, அரசுக்கு எதிராகக் கூக்குரலிடுவதோடு ஏன் நிற்பதில்லை? அரசியல் ரீதியான அரசு—அதோடு சேர்ந்து அரசியல் அதிகாரமும் —வரப் போகின்ற சமூகப் புரட்சியின் விளைவாக மறைந்துவிடும்; அதாவது, பொதுக் கடமைகள் அவற்றின் அரசியல் தன்மையைக் கைவிட்டு சமூகத்தின் உண்மையான நலன்களைக் கண்காணிக்கின்ற சாதாரணமான நிர்வாகச் செயல்களாக மாறிவிடும் என்று எல்லா சோஷ

லிஸ்டுகளுமே ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் அதிகாரத் தோரணையான அரசு ஒரேயடியாக—அதைப் பெற்றெடுத்த சமூக நிலைமைகள் ஒழிக்கப்படுவதற்கும் முன்பாகக் கூட—அழிக்கப்பட வேண்டும் என்று அதிகாரத்தோரணை-எதிர்ப்பாளர்கள் கோருகிறார்கள். அதிகாரத்தை ஒழிப்பதே சமூகப் புரட்சியின் முதல் நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள். இந்தக் கனவான்கள் எக்காலத்திலாவது புரட்சியைப் பார்த்திருக்கிறார்களா? புரட்சி தான் எல்லாவற்றிலும் மிகவும் அதிகாரத்தோரணையானது. மக்கள் தொகையின் ஒரு பகுதி துப்பாக்கிகள், ஈட்டிகள், பீரங்கிகளைக் கொண்டு (இவை அதிகாரத்தோரணையான சாதனங்கள்தான்—அப்படி எவையேனும் இருந்தால்) மறு பகுதியின் மீது தன்னுடைய சித்தத்தைத் திணிக்கின்ற நடவடிக்கையே அது. வெற்றியடைந்த கட்சியினர்—அவர்களுடைய போராட்டம் வீணாகாமலிருக்க வேண்டுமென்றால்—பிற்போக்காளர்களிடம் தன்னுடைய ஆயுதங்கள் ஏற்படுத்துகின்ற பயங்கரத்தின் மூலமாக இந்த ஆட்சியைத் தக்க வைக்க வேண்டும். பாரிஸ் கம்யூன் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக ஆயுதமேந்திய மக்களின் இந்த அதிகாரத்தை உபயோகித்திராவிட்டால் அது ஒரே ஒரு நாளாவது நிலைத்திருக்குமா? அதற்கு மாறாக, அதை இன்னும் தாராளமாகப் பயன்படுத்தாததற்காக நாம் அதைக் கண்டிக்க வேண்டாமா?

ஆகவே இந்த இரண்டில் ஒன்றுதான்: அதிகாரத்தோரணை-எதிர்ப்பாளர்கள் தாங்கள் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை—அப்படியானால் அவர்கள் குழப்பமேற்படுத்துவதைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை; அல்லது அவர்கள் புரிந்து கொண்டவர்களே — அப்படியானால் அவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்குத் துரோகம் செய்கிறார்கள். எப்படியிருந்த போதிலும் அவர்கள் பிற்போக்குவாதத்துக்குச் சேவை செய்கிறார்கள்.

அக்டோபர் 1872ல்—
மார்ச் 1873
எழுதப்பட்டது

மூலம் இத்தாலிய
மொழியில் எழுதப்
பட்டது

கா. மார்க்ஸ்

# கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம்[82]

## வில்ஹெல்ம் பிராக்கேவுக்கு எழுதிய கடிதம்

லண்டன், மே 5, 1875

அன்புள்ள பிராக்கே,

ஒற்றுமை வேலைத் திட்டத்தைப் பற்றிப் பின்வரும் விமர்சனக் குறிப்புகளைத் தாங்கள் படித்தபிறகு கேய்ப், ஆவுயெர் பெபெல் மற்றும் லீப்க்னெஹ்ட் படிப்பதற்காக இவற்றை அனுப்பிவைக்கும்படி வேண்டுகிறேன். நான் மிகவும் அதிகமாக வேலையில் மூழ்கிப் போயிருக்கிறேன். நான் எவ்வளவு வேலை செய்யலாம் என்று டாக்டர்கள் அனுமதித்திருக்கின்ற எல்லையை மீறிவிடுகிறேன். ஆகவே இத்தகைய நீண்ட கடிதத்தை எழுதுவது எனக்குச் சிறிதும் ''மகிழ்ச்சியைத்'' தரவில்லை. எனினும் கட்சியிலிருக்கின்ற நமது நண்பர்கள்—அவர்களுக்காகத்தான் இந்தக் கடிதம் எழுதப்பட்டது—இனிமேல் நான் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளைத் தவருகப் புரிந்து கொள்ளாமலிருப்பதற்கு இது அவசியமே. ஏனென்ருல் ஒற்றுமை காங்கிரஸ் முடிவடைந்த பிறகு மேற்கூறப் பட்ட கோட்பாடுகளின் வேலைத்திட்டத்திலிருந்து எங்களுடைய நிலை முற்றிலும் வேறு பட்டது, எங்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று ஒரு சிறு அறிக்கையை எங்கெல்சும் நானும் வெளியிடப் போகிருேம்.

ஐஸனுக் கட்சி[83] என்று சொல்லப்படுகின்ற இயக்கத்தை நாங்கள் இங்கிருந்து இரகசியமாக வழி காட்டுகிருேம் என்ற கருத்து—அது முற்றிலும் தவருனதாகும்—வெளிநாடுகளில் ஏற்பட்டிருப்பதால், கட்சியின் எதிரிகள் இக்கருத்தை மிகவும் கவனமாக வளர்த்துக் கொண்டிருப்பதால் இந்த அறிக்கை தவிர்க்க முடியாததாகும். சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு ருஷ்யப் புத்தகத்தில் பக்கூனின் அந்தக் கட்சியின் வேலைத்

திட்டம், இதரவைகளுக்கு மட்டுமல்லாமல் லீப்க்னெஹ்ட் மக்கள் கட்சியுடன்[84] ஒத்துழைப்பதற்குத் தொடங்கிய நாள் முதலாகச் செய்த ஒவ்வொரு நடவடிக்கைக்கும் கூட என்னையே பொறுப்பாக்குகிறார்.

இதைத் தவிர, என்னுடைய கருத்தின்படி கட்சியில் மனச் சோர்வுண்டாக்குகின்ற, ஆட்சேபகரமான வேலைத்திட்டத்துக்கு—இராஜதந்திரமான மௌனத்தின் மூலமாகக் கூட—அங்கீகாரம் அளிக்காமலிருப்பது என்னுடைய கடமையாகும்.

ஒரு உண்மையான இயக்கத்தின் ஒவ்வொரு காலடியும் ஒரு டஜன் வேலைத்திட்டங்களைக் காட்டிலும் அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. ஆகவே ஐஸெனக்வாதி வேலைத்திட்டத்துக்கும் அப்பால் போக முடியவில்லை—அன்றைய நிலைமைகள் அதை அனுமதிக்கவில்லை—என்றால், பொது எதிரிக்கு எதிரான நடவடிக்கைக்குரிய உடன்பாட்டை மட்டுமே ஒருவர் செய்திருக்க வேண்டும். ஆனால் கோட்பாடுகளைக் கொண்டவேலைத்திட்டத்தைத் தயாரித்ததன் மூலம் (கணிசமான காலம் பொது நடவடிக்கையின் மூலம் அதற்குப் பாதை அமைக்கப்படுகின்ற வரையிலும் அதை ஒத்திப் போடுவதற்கு பதிலாக) கட்சியின் தகுதிநிலையை மொத்த உலகமும் அளவிடுவதற்குரிய மைல்கற்களை அதற்கு முன்பு நிறுவுகின்றனர்.

லஸ்ஸால்வாதத் தலைவர்கள்[85] ஒத்துக்கொண்டார்கள் என்றால் சந்தர்ப்பங்கள் அவர்களை அப்படி நிர்ப்பந்தித்தன. கொள்கைகளைப் பற்றிப் பேரம் பேசமுடியாது என்று தொடக்கத்திலேயே அவர்களிடம் தெரிவித்திருந்தால் பொது நடவடிக்கைக்கு ஒரு செயல்திட்டம் அல்லது ஸ்தாபனத் திட்டத்துடன் அவர்கள் திருப்தி அடையும்படி ஏற்பட்டிருக்கும். இதற்கு பதிலாக ஆணைகளைப் பெற்றுக் கொண்டு வரும்படி அவர்களை அனுமதித்தனர், இந்த ஆணைகள் கட்டுப்படுத்தத் தக்கவை என்று அங்கீகரித்தனர்; அதன் மூலம் யாருக்கு உதவி அவசியமாக இருந்ததோ அவர்களிடம் நிபந்தனையின்றிச் சரணடைந்தனர். இந்த மொத்த விவகாரத்துக்கும் முடி சூட்டுவதைப் போல சமரசக் காங்கிரசுக்கு முன்பாக ஒரு காங்கிரசை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்—அவர்களுடைய சொந்தக் கட்சி சம்பவம் நடந்து முடிந்த பிறகு தன்னுடைய காங்கிரசை நடத்திக் கொண்டிருக்கிறது. எல்லா விமர்சனத்

துக்கும் ஒரு தந்திரத்தின் மூலம் முடிவு கட்ட, தன்னுடைய சொந்தக் கட்சி சிந்தனை செய்வதற்கு எத்தகைய சந்தர்ப்பமும் கொடுக்காமலிருக்க வேண்டும் என்று யாரோ விரும்பினார்கள் என்பது வெளிப்படையாகும். ஒற்றுமை என்ற விவரமே தொழிலாளர்களுக்கு திருப்தியைத் தருவது ஒருவருக்குப் புரிகிறது என்றபோதிலும் இந்தத் தற்காலிகமான வெற்றி மிகவும் அதிகமான விலை கொடுத்து வாங்கப்படவில்லை என்று ஒருவர் நம்புவது தவறாகும்.

வேலைத்திட்டம் லஸ்ஸால்வாத நம்பிக்கை கோட்பாடுகளைப் புனிதப்படுத்துகிறது என்பதை ஒதுக்கிவிட்டால் கூட அது வேறு சிறப்பில்லாதிருக்கிறது...

தங்கள், கார்ல் மார்க்ஸ்

# ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சியின் வேலைத்திட்டத்தைப் பற்றி சில குறிப்புகள்

## I

1. ''எல்லாச் செல்வத்துக்கும் எல்லாக் கலாச்சாரத்துக்கும் உழைப்பே தோற்றுவாய். பயனுள்ள உழைப்பு சமூகத்தின் மூலமாக மற்றும் சமூகத்தில் மட்டுமே சாத்தியமாக இருப்பதால் உழைப்பின் பலன்கள் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் குறையாத அளவில் சம உரிமையுடன் சொந்தமானவை''.

பாராவின் முதல் பகுதி: ''எல்லாச் செல்வத்துக்கும் எல்லாக் கலாச்சாரத்துக்கும் உழைப்பே தோற்றுவாய்''.

எல்லாச் செல்வத்துக்கும் உழைப்பு தோற்றுவாய் அல்ல. உழைப்பைப் போன்ற பயன் மதிப்புகளுக்கு (பொருளாயதச் செல்வம் என்பது நிச்சயமாக இவைதானே) இயற்கை ஒரு தோற்றுவாயே. உழைப்பும் கூட மனித உழைப்புச் சக்தி என்ற இயற்கைச் சக்தியின் வெளிப்பாடு மட்டுமே. மேற்கூறிய சொற்றொடரைக் குழந்தைகளின் அரிச்சுவடிப் புத்தகங்கள் அனைத்திலும். காண முடியும். உழைப்பு அதற்குரிய பொருள்களோடும் கருவிகளோடும் செய்யப்படுகிறது என்பதைக் குறிக்கின்ற அளவுக்கு அந்தச் சொற்றொடர் சரியானதே. ஆனால் இந்த முதலாளி வர்க்கச் சொற்றொடர்கள் அவற்றுக்கு அர்த்தத்தைத் தருகின்ற நிபந்தனைகளைப் பற்றி மௌனம் சாதிப்பதை ஒரு சோஷலிஸ்ட் வேலைத்திட்டம் அனுமதிக்க முடியாது. மனிதன் தொடக்கத்திலிருந்து உழைப்பின் எல்லாக் கருவிகள் மற்றும் பொருள்களின் மூலத் தோற்றுவாயான இயற்கையின்பால் ஒரு உடைமையாளர் என்ற முறையில் நடந்து கொள்வதால், அதைத் தனக்குச் சொந்தம் என்றவாறு நடத்துவதால், அவனுடைய உழைப்பு பயன்

மதிப்புக்களின் — ஆகவே பணத்துக்கும் கூடத்—தோற்று வாயாக இருக்கிறது. உழைப்புக்கு இயற்கைக்கும் உயர்வான படைப்புச் சக்தியைப் போலியான முறையில் ஏற்றிச் சொல் வதற்கு முதலாளி வர்க்கத்துக்கு மிகவும் நல்ல காரணங்கள் இருக்கின்றன. உழைப்பு இயற்கையை நம்பியிருக்கின்றது என்ற உண்மையிலிருந்தே தன்னுடைய உழைப்புச் சக்தி யைத் தவிர வேறு எந்த உடைமையும் இல்லாத நபர்— சமூக மற்றும் கலாச்சாரத்தின் எல்லா நிலைமைகளிலும்— உழைப்பின் பொருளாயத நிலைமைகளைத் தமக்கு உடைமை யாக்கிக் கொண்ட மற்ற மனிதர்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்பது அவசியமாகப் பெறப்படுகிறது. அவர்கள் அனுமதித்தால் மட்டுமே அவன் உழைக்க முடியும்; ஆகவே அவர்கள் அனுமதித்தால் மட்டுமே அவன் வாழ முடியும்.

இந்த வாக்கியத்தை இருக்கின்ற படி, அல்லது அது நொண்டிக்கொண்டிருக்கின்ற படி நாம் விட்டுவிடுவோம். முடிவில் ஒருவர் என்ன எதிர்பார்ப்பார்? அநேகமாக இதையே எதிர்பார்ப்பார்:

''எல்லா செல்வத்துக்கும் உழைப்பே தோற்றுவாய் என் பதால் சமூகத்தில் எவரும் உழைப்பின் உற்பத்தி என்ற முறையில் அல்லாமல் செல்வத்தை சுவீகரிக்க முடியாது. ஆகவே ஒரு நபர் உழைக்கவில்லை என்றால் அவர் மற்றவர் களுடைய உழைப்பைக் கொண்டு வாழ்கிறார், தன்னுடைய கலாச்சாரத்தையும் மற்றவர்களுடைய உழைப்பின் விளை வாகப் பெறுகிறார்''.

இதற்கு பதிலாக ''இருப்பதால்'' என்ற இணைப்பின் மூல மாக இரண்டாவது கருதுகோள் சேர்க்கப்படுகிறது; முதல் கருதுகோளை விட்டுவிட்டு இதிலிருந்து முடிவு பெறப்படு கிறது.

**பாராவின் இரண்டாம் பகுதி:** ''பயனுள்ள உழைப்பு சமூகத் தின் மூலமாக மற்றும் சமூகத்தில் மட்டுமே சாத்தியம்''.

முதற் கருதுகோளின்படி எல்லாச் செல்வத்துக்கும் எல்லாக் கலாச்சாரத்துக்கும் உழைப்பே தோற்றுவாய்; ஆகவே உழைப்பு இல்லாத சமூகம் சாத்தியமல்ல. இப்பொழுது நாம் இதன் மறுதலையை சமூகம் இல்லாமல் ''பயனுள்ள உழைப்பு சாத்தியமல்ல'' என்று அறிந்து கொள்கிறோம்.

பயனற்ற உழைப்பு—சமூக ரீதியில் ஆபத்தான உழைப் பும் கூட—சமூகத்தில் மட்டுமே லாபகரமான உழைப்பின்

ஒரு பிரிவாக இருக்க முடியும், ஒருவன் சோம்பேறியாக இருந்து கொண்டு வாழ்க்கை நடத்துவது சமூகத்தில் மட்டுமே முடியும், இதரவை, இதரவை என்றுகூட ஒருவர் கூறியிருக்க முடியும்—சுருக்கமாகச் சொல்வதென்றால் ரூஸோ எழுதிய அனைத்தையும் ஒருவர் காப்பியடித்திருக்க முடியும்.

மற்றும், ''பயனுள்ள'' உழைப்பு என்பது என்ன? உத்தேசிக்கப்பட்ட பயனுள்ள விளைவை உற்பத்தி செய்கின்ற உழைப்பு மட்டுமே என்பது நிச்சயம். கல்லை வீசி ஒரு பிராணியைக் கொல்கின்ற, கனிகளைச் சேகரிக்கின்ற, இதரவை ஒரு காட்டுமிராண்டி—மனிதக் குரங்கு நிலைக்குப் பிறகு மனிதன் காட்டுமிராண்டியாகத்தான் இருந்தான் — ''பயனுள்ள'' உழைப்பை நிறைவேற்றுகிறான்.

மூன்றாவதாக, முடிவு: ''பயனுள்ள உழைப்பு சமூகத்தின் மூலமாக மற்றும் சமூகத்தில் மட்டுமே சாத்தியமாக இருப்பதால் உழைப்பின் பலன்கள் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் குறையாத அளவில் சம உரிமையுடன் சொந்தமானவை''.

சிறந்த முடிவு! பயனுள்ள உழைப்பு சமூகத்தில் மற்றும் சமூகத்தில் மட்டுமே சாத்தியம் என்றால் உழைப்பின் பலன்கள் சமூகத்துக்குச் சொந்தம்—ஆகவே சமூகத்தை, உழைப்பின் ''நிலைமையை'' வைத்திருக்க அவசியமில்லாதவை மட்டும் தனிப்பட்ட தொழிலாளிக்குக் கிடைக்கிறது.

உண்மையில், குறிப்பிடப்பட்ட எந்த சந்தர்ப்பத்திலும் இருந்து கொண்டிருக்கின்ற சமூக நிலைமையை ஆதரிப்பவர்கள் இந்தக் கருதுகோளை எல்லாக் காலங்களிலும் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். முதலில் அரசாங்கம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொன்றின் கோரிக்கைகளும் வருகின்றன—ஏனென்றால் சமூக அமைப்பை நீடிக்கச் செய்கின்ற சமூக உறுப்பு அதுவே; அடுத்து தனியுடைமையின் வெவ்வேறு ரகங்களின் கோரிக்கைகள் வருகின்றன—ஏனென்றால் தனியுடைமையின் வெவ்வேறு ரகங்கள்தான் சமூகத்தின் அடிப்படைகள், இதரவை. இத்தகைய பொருளற்ற சொற்றொடர்களை விரும்பியபடி வளைக்கவும் மாற்றவும் முடியும் என்பதை ஒருவர் காணக் கூடும்.

இந்தப் பாராவின் முதல் மற்றும் இரண்டாம் பகுதிகள் பின்வருகின்ற அமைப்பில் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடிய இணைப்பைக் கொண்டிருக்கின்றன:

''சமூக உழைப்பு என்ற முறையில் மட்டுமே உழைப்பு செல்வம் மற்றும் கலாச்சாரத்தின் தோற்றுவாயாக இருக்கிறது'', அல்லது அதே பொருளைத் தருகின்ற ''சமூகத்தில் மற்றும் சமூகத்தின் மூலமாக''.

இந்தக் கருதுகோள் மறுக்க முடியாத விதத்தில் சரியானதே. ஏனென்றால் உதிரியான உழைப்பு (அதன் பொருளாயத நிலைமைகள் முன்னூகிக்கப்பட்டிருந்தால்) பயன் மதிப்புகளைப் படைக்க முடியும் என்றாலும், அது செல்வத்தையோ அல்லது கலாச்சாரத்தையோ படைக்க முடியாது.

ஆனால் அடுத்த கருதுகோளும் இதே அளவுக்கு மறுக்கப் பட முடியாதது:

''உழைப்பு சமூக ரீதியில் வளர்ச்சியுற்று, அதன் மூலம் செல்வம் மற்றும் கலாச்சாரத்தின் தோற்றுவாயாக மாறும் விகிதாச்சாரத்தில் தொழிலாளர்கள் மத்தியில் ஏழ்மையும் வறுமையும் வளர்ச்சியடைகிறது, தொழிலாளர் அல்லாதவர்களிடம் செல்வமும் கலாச்சாரமும் வளர்ச்சியடைகிறது''.

இது வரையிலும் உள்ள எல்லா வரலாற்றிலும் இதுதான் விதி. ''உழைப்பு'' மற்றும் ''சமூகத்தைப்'' பற்றிப் பொதுப் படையான சொற்றொடர்களை எழுதுவதற்கு பதிலாக இங்கே என்ன செய்திருக்க வேண்டுமென்றால் இன்றைய முதலாளித்துவ சமூகத்தில் இந்த சமூக சாபக்கேட்டை அகற்றுவதற்குத் தொழிலாளர்களுக்கு உதவுகின்ற மற்றும் அவர்களை நிர்ப்பந்திக்கின்ற பொருளாயத மற்றும் இதர நிலைமைகள் கடைசியில் எப்படி தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஸ்தூலமாக நிரூபித்திருக்க வேண்டும்.

உண்மை என்னவென்றால் நடையிலும் கருத்திலும் குளறுபடி செய்யப்பட்டிருக்கின்ற இந்த மொத்த பாராவுமே ''உழைப்பின் குறைக்கப்படாத பலன்கள்'' என்ற லஸ்ஸால்வாத முழக்கத்தைக் கட்சிக் கொடியின் உச்சியில் கோஷமாகப் பொறிப்பதற்காக மட்டுமே இந்த இடத்தில் எழுதப் பட்டிருக்கிறது. ''உழைப்பின் பலன்கள்'', ''சம உரிமை'' இதரவற்றை நான் பிறகு விவாதிப்பேன், ஏனென்றால் இனிமேல் அதே விஷயம் சற்று வித்தியாசமான வடிவத்தில் திருப்பிச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. ''இன்றைக்கிருக்கின்ற சமூகத்தில் உழைப்புக் கருவிகள் முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஏகபோகமாக

இருக்கின்றன. அதனல் தொழிலாளி வர்க்கத்துக்கு ஏற்படுகின்ற சார்புநிலை அதன் துன்பம் மற்றும் அடிமைத்தனத்தின் எல்லா வடிவங்களுக்கும் காரணமாக இருக்கிறது''.

அகிலத்தின் விதிகளிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்ற இந்த வாக்கியம்—இந்த ''முன்னேற்றமான'' வடிவத்தில்—தவருகும்.

இன்றைக்கிருக்கின்ற சமூகத்தில் உழைப்புக் கருவிகள் நிலவுடைமையாளர்கள் (நிலவுடைமையின் ஏகபோகம் மூலதனத்தின் ஏகபோகத்துக்குக் கூட அடிப்படையாகும்) மற்றும் முதலாளிகளின் ஏகபோகமாக இருக்கின்றன. மேற்கூறிய வாசகத்தில் அகிலத்தின் விதிகள் ஏகபோக வர்க்கங்களில் எந்த ஒன்றையும் குறிப்பிடவில்லை. விதிகள் ''உழைப்புச் சாதனங்களை, அதாவது வாழ்க்கையின் தோற்றுவாய்களை ஏகபோக மாக்கியவரைப்'' பற்றிப் பேசுகின்றன. ''வாழ்க்கையின் தோற்றுவாய்களை'' என்ற கூடுதலான சொற்ருெடர் உழைப்புக் கருவிகளில் நிலமும் சேர்க்கப்பட்டிருப்பதைப் போதுமான தெளிவுடன் எடுத்துக் காட்டுகின்றன.

லஸ்ஸால் முதலாளி வர்க்கத்தை மட்டுமே தாக்கினர். நிலவுடைமையாளர்களைத் தாக்கவில்லை—இதன் காரணங்கள் தற்பொழுது பொதுவாகத் தெரியும்—என்பதனல் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இங்கிலாந்தில் ஒரு முதலாளி வழக்கமாகத் தன்னுடைய தொழிற்சாலை அமைக்கப்பட்டிருக்கின்ற நிலத்துக்குக்கூட உடைமையாளராக இருப்பதில்லை.

> 3. ''உழைப்புக் கருவிகள் சமூகத்தின் பொதுச் சொத்தாக மேம்பாடடைவதும் உழைப்பின் பலன்களை எல்லா உழைப்பாளிகளுக்கும் நியாயமாக வினியோகிப்பதும் அவர்கள் எல்லோரையும் கூட்டுறவு முறையில் ஒழுங்குபடுத்துவதும் உழைப்பின் விடுதலைக்கு அத்தியாவசியமாகும்''.

''உழைப்புக் கருவிகள் சமூகத்தின் பொதுச் சொத்தாக மேம்பாடடைவது'' என்று எழுதப்பட்டிருப்பது ''பொதுச் சொத்தாக மாற்றப்படுவது'' என்று எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு; ஆனல் இது அவ்வளவு முக்கியமல்ல.

''உழைப்பின் பலன்கள்'' என்ருல் என்ன? உழைப்பால் ஏற்பட்ட பொருளா அல்லது அதன் மதிப்பா? பின்னல் சொல்லப்பட்டதாக இருக்குமானுல் அந்தப் பொருளின் மொத்த மதிப்பா அல்லது நுகர்வு செய்யப்பட்ட உற்பத்திச் சாதனத்தின் மதிப்போடு உழைப்பு புதிதாகச் சேர்த்திருக்கும் மதிப்பின் அந்தப் பகுதி மட்டும்தானு?

''உழைப்பின் பலன்கள்'' என்பது லஸ்ஸால் உபயோகிக்கின்ற தெளிவில்லாத கருத்தாகும்; திட்டவட்டமான பொருளாதாரக் கருதுகோள்களுக்குப் பதிலாக அவர் இதைப் பயன்படுத்துகிருர்.

''நியாயமாக'' வினியோகிப்பது என்ருல் என்ன?

இன்றைக்கிருக்கும் வினியோகம் ''நியாயமானது'' என்று முதலாளிகள் ஆணித்தரமாகப் பேசுவதில்லையா? மேலும் இன்றைய உற்பத்தி முறையின் அடிப்படையில் இது ஒன்று மட்டுமே ''நியாயமான'' வினியோகம் என்பது உண்மை தானே? பொருளாதார உறவுகள் சட்டக் கருதுகோள்களால் ஒழுங்குபடுத்தப்படவில்லையா அல்லது இதற்கு மாருக, சட்ட உறவுகள் பொருளாதார உறவுகளிலிருந்து தோன்றவில்லையா? ''நியாயமான'' வினியோகத்தைப் பற்றி சோஷலிஸ்டுக் குறுங்குழுவாதிகளும் அதிகமான அளவுக்கு வேறுபாடான கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லையா?

இங்கே ''நியாயமான'' வினியோகம் என்ற வார்த்தைகளில் அடங்கியிருப்பது என்ன என்பதைப் புரிந்துகொள்வதற்கு நாம் முதல் பாராவையும் இந்தப் பகுதியையும் சேர்த்துப் படிக்க வேண்டும். பிந்தியது ''உழைப்புக் கருவிகளை சமூகத்தின் பொதுச் சொத்தாகக் கொண்டு, எல்லா உழைப்பாளிகளையும் கூட்டுறவு முறையில் ஒழுங்குபடுத்துகின்ற'' சமூகத்தை முன்னூகிக்கிறது. ''உழைப்பின் பலன்கள் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் குறையாத அளவில் சம உரிமையுடன் சொந்தமானவை'' என்று முதல் பாராவிலிருந்து நாம் தெரிந்து கொள்கிறேம்.

''சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்குமா?'' வேலை செய்யாமல் இருப்பவர்களுக்கும் சேர்த்தா? ''உழைப்பின் பலன்கள் குறையாத அளவில்'' என்று சொல்லப்பட்டதே, அதில் மிஞ்சுவது என்ன? சமூகத்தில் உழைக்கின்ற உறுப்பினர்களுக்கு மட்டுமா? அப்படியானுல் சமூகத்தின் எல்லா

உறுப்பினர்களுக்கும் தரப்பட்டிருக்கும் ''சம உரிமை'' என்னவாகும்?

ஆனால் ''சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும்'' மற்றும் ''சம உரிமை'' என்பவையெல்லாம் வெறும் வார்த்தைகளே. இந்தக் கம்யூனிஸ்டு சமூகத்தில் ஒவ்வொரு தொழிலாளியும் லஸ்ஸாலின் ''உழைப்பின் பலன்களைக் குறையாத அளவில்'' பெற வேண்டும் என்பதே மூலப்பகுதி.

முதலாவதாக, ''உழைப்பின் பலன்கள்'' என்ற சொற்களை உழைப்பின் உற்பத்தி என்ற அர்த்தத்தில் நாம் எடுத்துக் கொள்வோம்; அப்படியானால் கூட்டு உழைப்பின் பலன்கள் **மொத்த சமூக உற்பத்திப் பொருள்** ஆகும்.

இதிலிருந்து நாம் பின்வருவனவற்றைக் கழிக்க வேண்டும்:

**முதலாவதாக,** உபயோகிக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களுக்குப் பதிலாக வேறு ஏற்படுத்துவதற்குரிய ஒதுக்கீடு.

**இரண்டாவதாக,** உற்பத்தியின் விஸ்தரிப்புக்கான கூடுதல் ஒதுக்கீடு.

**மூன்றாவதாக,** விபத்துக்கள், இயற்கையால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான சேம ஒதுக்கீடு அல்லது இன்ஷூரன்ஸ் ஒதுக்கீடு.

''குறையாத அளவில் உழைப்பின் பலன்களிலிருந்து'' இவற்றைக் கழித்துவிடுவது ஒரு பொருளாதார அவசியமாகும். இவற்றின் அளவு இருக்கின்ற சக்திகள், சாதனங்களினாலும், பகுதியளவுக்குச் சாத்தியமானவை பற்றிய கொள்கையினாலும் நிர்ணயிக்கப்படுகிறது: எனினும் அடிப்படை இயற்கை நீதியைக் கொண்டு ஒருபோதும் இதைக் கணக்கிட முடியாது.

மொத்த உற்பத்திப் பொருளில் இனி மிஞ்சுவது, நுகர்வுச் சாதனமாக உபயோகிக்க உத்தேசிக்கப்படும் அடுத்த பகுதியே.

இதைத் தனிநபர்களுக்குப் பிரித்துக்கொடுப்பதற்கு முன்பு இதிலிருந்து பின்வருவனவற்றை மறுபடியும் கழிக்க வேண்டும்:

**முதலாவதாக, உற்பத்தியோடு சேராத பொது நிர்வாகச் செலவுகள்.**

ஆரம்பத்திலிருந்தே இந்தப் பகுதி—இன்றைய சமூகத்துடன் ஒப்பிடும்பொழுது—மிகவும் அதிகமான அளவுக்குக்

குறைந்துவிடும்; புதிய சமூகம் வளர்ச்சி அடையும் பொழுது அதன் விகிதாச்சாரம் குறைந்துவிடும்.

இரண்டாவதாக, பொதுவான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருப்பது—பள்ளிக்கூடம், மருத்துவ வசதிகள் இதரவை.

ஆரம்பத்திலிருந்தே இந்தப் பகுதி—இன்றைய சமூகத்துடன் ஒப்பிடும்பொழுது—கணிசமான அளவில் அதிகரிக்கும்; புதிய சமூகம் வளர்ச்சி அடையும் பொழுது அதன் விகிதாச்சாரம் அதிகரிக்கும்.

மூன்றாவதாக, வேலை செய்ய இயலாதவர்களுக்காக ஒதுக்கப்படும் நிதி, இதரவை. சுருக்கமாகச் சொல்வதென்றால் இன்று ஏழைகள் நிவாரணம் என்ற பிரிவின்கீழ் சேர்க்கப்படுவது.

லஸ்ஸாலின் தாக்கத்தின் காரணமாக இந்த வேலைத்திட்டம் ஒரு குறுகிய பார்வையில் ''வினியோகத்தை'' மட்டுமே மனதில் கொண்டிருக்கிறது. அதாவது கூட்டுறவுச் சங்கத்தின் தனிப்பட்ட உற்பத்தியாளர்களிடையே பிரித்துக் கொடுக்கப்படுகின்ற நுகர்வுச் சாதனத்தின் பகுதியை மட்டுமே குறிக்கிறது. இதை நாம் இப்பொழுது எடுத்துக் கொள்வோம்.

''குறையாத அளவில் உழைப்பின் பலன்கள்'' முன்பே யாருக்கும் தெரியாமலே ''குறைவடைந்த பலன்களாக'' மாற்றப்படுகின்றன. ஆனால் தனிப்பட்ட நபர் என்ற முறையில் ஒரு உற்பத்தியாளர் எதை இழந்து விடுகிறாரோ அதை சமூகத்தின் உறுப்பினர் என்ற முறையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அடைந்துவிடுகிறார்.

''குறையாத அளவில் உழைப்பின் பலன்கள்'' என்ற சொற்றொடர் மறைந்து விடுவதைப் போல ''உழைப்பின் பலன்கள்'' என்ற சொற்றொடரும் முழுமையாக மறைந்து விடுகிறது.

உற்பத்திச் சாதனங்களைப் பொது உடைமையாகக் கொண்டிருக்கின்ற கூட்டுறவுச் சமூகத்துக்குள் உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருள்களைப் பரிவர்த்தனை செய்வதில்லை. இப்பொழுது முதலாளித்துவ சமூகத்துக்கு மாறுபட்ட வகையில், தனிப்பட்ட உழைப்பு மறைமுகமான வழியில் இனிமேலும் இருக்காமல் மொத்த உழைப்பின் பிரிக்க முடியாத அங்கமாக இருப்பதால் இந்தப் பொருள்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உழைப்பு இந்தப் பொருள்களின்

மதிப்பு என்ற வகையில் அவற்றில் அடங்கியிருக்கும் பொருளாயதத் தன்மையாகக் குறைவான அளவில் தோன்றுகிறது. இவ்விதத்தில் ''உழைப்பின் பலன்கள்'' என்ற சொற்றொடர்—அது தெளிவற்றதாக இருப்பதால் இன்று ஆட்சேபத்துக்குரியதாக இருக்கிறது—அதன் எல்லா அர்த்தத்தையும் இழந்துவிடுகிறது.

இங்கு நாம் ஆராய வேண்டியிருப்பது தனது சொந்த அடித்தளங்களின் மீது வளர்ச்சியடைந்துள்ள ஒரு கம்யூனிஸ்ட் சமுதாயத்தை அல்ல. அதற்கு மாறாக, முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து வெளித்தோன்றி, ஆகவே தான் உதித்த அந்தப் பழைய சமுதாயத்திடமிருந்து பெறப்பட்ட பிறவிக் குறிகள் ஒவ்வொரு வழியிலும்—பொருளாதார வழியிலும் தார்மிக வழியிலும் அறிவு வழியிலும்—இன்னமும் பதிந்திருப்பதுமான கம்யூனிச சமுதாயத்தையே நாம் இங்கே ஆராய்கிறோம். எனவே தனிப்பட்ட உற்பத்தியாளர் சமூகத்துக்குத் தான் என்ன கொடுத்தாரோ, அதையே—எல்லாக் கழித்தல்களும் செய்யப்பட்ட பிறகு—மிகத் துல்லியமாக அவர் திரும்பப் பெறுகிறார். அவர் சமூகத்துக்குக் கொடுத்தது உழைப்பின் அவருக்குரிய பகுதியாகும். உதாரணமாக, ஒரு சமூக உழைப்பு நேரம் தனிப்பட்டவர்களுடைய உழைப்பு மணி நேரங்களின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டிருக்கிறது. தனிப்பட்ட உற்பத்தியாளரின் தனிப்பட்ட உழைப்பு நேரம் அவர் பங்கு கொண்டிருக்கும் சமூக உழைப்பு நாளின் பகுதி, அதில் அவருடைய பங்கு எனலாம். அவர் இந்த எண்ணிக்கையுள்ள உழைப்பை (பொது நிதிகளுக்கு அவருடைய உழைப்பைக் கழித்துக் கொண்ட பிறகு கொடுத்திருக்கிறார் என்ற சான்றிதழைச் சமூகத்திலிருந்து பெறுகிறார். இதைக்கொண்டு நுகர்வுச் சாதனங்களின் சமூக இருப்பிலிருந்து தனது உழைப்பின் அளவுக்கு மதிப்பைக் கொண்ட நுகர்வுச் சாதனங்களை வாங்கிக் கொள்கிறார். அவர் ஒரு வடிவத்தில் சமூகத்துக்குக் கொடுத்த உழைப்பின் அதே அளவை வேறொரு வடிவத்தில் திரும்ப வாங்கிக் கொள்கிறார்.

இங்கே பண்டங்களின் பரிவர்த்தனையை—இது சம மதிப்புக்களின் பரிவர்த்தனையாக இருக்கும் அளவில்—ஒழுங்குபடுத்துகின்ற அதே கோட்பாடு நிலவுகின்றது என்பது தெளிவு. உள்ளடக்கமும் உருவமும் மாறிவிட்டன; ஏனென்

ருல் மாறிவிட்ட நிலைமைகளின்கீழ் ஒருவர் தன்னுடைய உழைப்பைத் தவிர வேறு ஒன்றையும் கொடுக்க முடியாது; மேலும் தனிப்பட்ட நுகர்வுச் சாதனங்களைத் தவிர வேறு ஒன்றும் தனிநபர்களின் உடைமைப் பொருளாக முடியாது. ஆனால் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் மத்தியில் பிந்தியதை வினியோகிப்பதைப் பொறுத்தவரையில் பண்ட சம மதிப்புக்களைப் பரிவர்த்தனை செய்வதிலுள்ள கோட்பாடுதான் நிலவுகிறது: ஒரு வடிவத்தில் உள்ள குறிப்பிட்ட அளவு உழைப்பு வேறொரு வடிவத்தில் உள்ள சம அளவு உழைப்புக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

எனவே தத்துவமும் நடைமுறையும் இனிமேல் மோதிக் கொள்வதில்லை என்ற போதிலும் சம உரிமை என்பது இன்னும் கோட்பாட்டளவில் முதலாளித்துவ உரிமையாகவே இருக்கிறது; பண்டங்களின் பரிவர்த்தனையில் சமமதிப்புக்களின் பரிவர்த்தனை தனிப்பட்ட இனத்தில் இருப்பதில்லை—சராசரியில் மட்டுமே உண்டு.

இவ்விதத்தில் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும் இந்தச் சம உரிமை இன்னும் முதலாளித்துவக் கட்டுப்படுத்தல் என்னும் பழியைத் தொடர்ச்சியாகத் தாங்கியிருக்கிறது. உற்பத்தியாளர்களின் உரிமை அவர்கள் கொடுக்கின்ற உழைப்பின் விகிதாச்சாரத்தில் இருக்கிறது. சமமான ஆதார அளவு, அதாவது உழைப்பு, அளவுகோலாகப் பயன்படுவதில் தான் சமத்தன்மை அடங்கியிருக்கிறது.

ஆனால் ஒரு நபர் மற்றொரு நபரைக் காட்டிலும் உடலமைப்பிலோ, அறிவாற்றலிலோ உயர்ந்தவராக இருக்கிறார். எனவே அவர் ஒரே அளவுள்ள நேரத்தில் அதிகமான உழைப்பைக் கொடுக்கிறார் அல்லது அவர் அதிக நேரம் உழைக்க முடிகிறது. உழைப்பை அளவு கோலாக வைத்துக் கொள்வதென்றால் அது கால அளவின் மூலம் அல்லது தீவிரத் தன்மையின் மூலம் வரையறுக்கப்பட வேண்டும்; இல்லையென்றால் அது ஆதார அளவுகோலாக இருக்க முடியாது. இந்த சம உரிமையானது சமமாக இல்லாத உழைப்புக்கு சமமில்லாத உரிமையாகும். ஒவ்வொருவரும் அடுத்தவரைப் போலவே ஒரு தொழிலாளி என்பதால் அது வர்க்க வேறுபாடுகளை அங்கீகரிப்பதில்லை; ஆனால் அது தனிப்பட்ட தகுதிகள் சமமில்லாதிருப்பதை, அதன் மூலம் உற்பத்தித்திறன் வேறுபடுவதை இயல்பான சிறப்புத் தகுதிகள் என்று மௌனமாக அங்கீ

கரிக்கிறது. எனவே இது ஒவ்வொரு உரிமையையும் போல, அதன் உள்ளடக்கத்தில் சமத்துவம் இல்லாத உரிமையாகும். உரிமை என்பது இயற்கையாகவே ஒரு சமமான அளவு கோலைப் பயன்படுத்துவதாக மட்டுமே இருக்க முடியும். ஆனால் சமமாக இல்லாத தனிநபர்கள் (அவர்கள் சமமாக இல்லாதிருக்கவில்லை என்றால் அவர்கள் வெவ்வேறு தனிநபர்களாக இருக்க மாட்டார்கள்) ஒரு சமமான கருத்து நிலையின்கீழ் கொண்டுவரப்படும் அளவுக்கு ஒரு சமத்துவமான ஆதார அளவுகோலால் மட்டுமே அளக்கப்பட முடியும், ஒரு திட்டவட்டமான பகுதியிலிருந்து மட்டுமே எடுக்கப்படுகிறார்கள். இங்கேயுள்ள உதாரணத்தின்படி, தொழிலாளர்களாக மட்டுமே கருதப்படுகிறார்கள்; அவர்கள் சம்பந்தமாக மற்ற எல்லாமே புறக்கணிக்கப்படுவதால் வேறு ஒன்றையும் பார்ப்பதில்லை. மேலும் ஒரு தொழிலாளிக்குத் திருமணமாகியிருக்கிறது. இன்னொரு தொழிலாளிக்குத் திருமணம் நடைபெறவில்லை. ஒரு தொழிலாளிக்கு இன்னொரு தொழிலாளியைக் காட்டிலும் அதிகமான குழந்தைகள் இருக்கின்றன, இதரவை. ஆகவே ஒருவர் சமமான உழைப்பை அளித்து, சமுதாய நுகர்வு நிதியிலிருந்து சமமான பங்கு பெறுவதன் மூலம் உண்மையில் ஒருவர் இன்னொருவரைவிட அதிகமாகப் பெறுவதற்கும், ஒருவர் இன்னொருவரை விடச் செல்வந்தராக இருப்பதற்கும், இன்னும் பலவாறாகவும் நேர்கிறது. இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க உரிமை சமமாக இருப்பதற்குப் பதிலாக சமமின்றி இருத்தல் வேண்டும்.

இந்தக் குறைபாடுகள் கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டத்தில் தவிர்க்க முடியாதவை. ஏனென்றால் இச்சமுதாயம் நீடித்த பிரசவ வேதனைக்குப் பிறகு முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் பிறந்து வெளிவந்திருக்கிறது. சமுதாயத்தின் பொருளாதார அமைப்பையும் அதனால் தகவமைக்கப்பட்ட கலாச்சார வளர்ச்சி நிலையையும் காட்டிலும் உரிமை உயர்ந்து விட முடியாது.

கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டத்தில், தனிநபரை உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்படுத்தி அடிமைத் தளையிடுவதும் அதனுடன் கூட கருத்து உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான எதிர்நிலையும் மறைந்த பின், உழைப்பானது பிழைப்புக்குரிய சாதனமாக மட்டுமின்றி வாழ்க்கையின் முதற்பெரும் தேவையுமாகிய பின், தனிநபருடைய

சர்வாம்ச வளர்ச்சியோடுகூட உற்பத்திச் சக்திகளும் அதிகரித்துவிட்ட பின், பொதுச் சமுதாயச் செல்வத்தின் அருவிகள் அனைத்தும் மேலும் அபரிமிதமாகப் பெருக்கெடுத்து ஓடுகையில்—அப்பொழுதுதான் முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு முழுமையாகக் கடக்கப்பட்டு, சமுதாயம் தன் பதாகையில் 'ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப!' என்று பொறித்துக் கொள்ளும்.

ஒரு பக்கத்தில் ''குறையாத அளவில் உழைப்பின் பலன்கள்'' என்பதையும் மறு பக்கத்தில் ''சம உரிமை'', ''நியாயமான வினியோகம்'' என்பனவற்றையும் பற்றி நான் இங்கே சற்று அதிகமாக எழுதியிருக்கிறேன். ஒரு பக்கத்தில், ஒரு காலத்தில் ஏதோ அர்த்தத்தைக் கொண்டிருந்து இப்பொழுது காலாவதியாகிப் போன வார்த்தைக் கூளமாக மாறியிருக்கின்ற கருத்துக்களைக் கோட்பாடுகளாக நம்முடைய கட்சியின் மீது மறுபடியும் திணிக்க முயற்சிப்பதும், மறு பக்கத்தில், மிக அதிகமான உழைப்பிற்குப் பிறகு கட்சியில் ஏற்படுத்தியிருக்கின்ற—இப்பொழுது வேரூன்றிவிட்ட—யதார்த்தவாதப் பார்வையை, ஜனநாயகவாதிகளிடமும் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளிடமும் சாதாரணமாகக் காணப்படுகின்ற சித்தாந்த, சட்ட மற்றும் இதர குப்பை கூளங்களைப் பற்றிய பிதற்றலின் மூலமாகக் கெடுப்பதற்குச் செய்யும் முயற்சியும் எவ்வளவு பெரிய குற்றம் என்பதை எடுத்துக்காட்டவே இப்படி எழுதியிருக்கிறேன்.

மேலே தரப்பட்டிருக்கும் விமரிசனத்தைத் தவிர, வினியோகம் என்று சொல்லப்படுவதைப் பற்றி அதிகமான பரபரப்பை ஏற்படுத்துவதும் அதற்குத் தலைமையான அழுத்தம் கொடுப்பதும் பொதுவாகத் தவறாகும்.

நுகர்வுச் சாதனங்களின் வினியோகம் எவ்வகையிலிருந்த போதிலும் அது உற்பத்தி நிலைமைகளின் வினியோகத்தின் விளைவுதான். எனினும் இரண்டாவதாகச் சொல்லப்படுகின்ற வினியோகம் உற்பத்தி முறையின் ஒரு பகுதியே ஆகும். உதாரணமாக, முதலாளித்துவ உற்பத்தி முறையை எடுத்துக் கொள்வோம். இதில் உற்பத்தியின் பொருளாயத நிலைமைகள் மூலதனம், நிலம் ஆகிய சொத்துக்களின் வடிவத்தில் தொழிலாளர் அல்லாதவர்களின் கைகளில் இருக்கின்றன; ஆனால் உற்பத்தியின் தனிப்பட்ட நிலைமைக்கு,

உழைப்புச் சக்திக்குப் பெருந்திரளான மக்கள் உடைமையாளர்களாக இருக்கிறார்கள். முதலாளித்துவ உற்பத்தி முறை இப்படி அமைந்திருக்கிறது. உற்பத்தியின் மூலக் கூறுகளை இப்படி வினியோகம் செய்தால் தானாகவே ஏற்படுகின்ற விளைவுதான் இன்றைய தினத்திலுள்ள நுகர்வுச் சாதனங்கள் வினியோகம். உற்பத்தியின் பொருளாயத நிலைமைகள் தொழிலாளர்களின் கூட்டுச் சொத்தாக இருந்தால் நுகர்வுச் சாதனங்களின் வினியோகம் இன்றைக்கு இருப்பதிலிருந்து வித்தியாசமான முறையில் ஏற்படும். உற்பத்தி முறையிலிருந்து வினியோகத்தை சுயேச்சையானதாக நினைப்பதையும் அதை அவ்வாறு ஆராய்வதையும் முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களிடமிருந்து கொச்சையான சோஷலிசம் (அதனிடமிருந்து ஜனநாயகத்தின் ஒரு பகுதியும்) எடுத்துக் கொண்டுவிட்டது. எனவேதான் சோஷலிசம் வினியோகத்தையே தலைமையாகச் சுற்றிச் சுழல்வதாகக் காட்டப்படுகிறது. உண்மையான உறவைத் தெளிவாக எடுத்துக் காட்டி எவ்வளவோ காலமான பிறகு மறுபடியும் எதற்காகப் பின்னால் போக வேண்டும்?

> 4. ''உழைப்பை விடுதலை செய்வது தொழிலாளி வர்க்கத்தின் பணியாக இருக்க வேண்டும். அதனுடன் சம்பந்தப்பட்ட மட்டில் இதர அனைத்து வர்க்கங்களும் **ஒரு பிற்போக்குத் திரள் மட்டுமே''.**

முதல் கூற்று அகிலத்தின் விதிகளின் அறிமுகத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் அது 'அபிவிருத்தி' செய்யப்பட்டிருக்கிறது. ''தொழிலாளி வர்க்கத்தின் விடுதலை தொழிலாளர்களின் செயலாக இருக்க வேண்டும்'' என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது; இங்கே அதற்கு மாறாக, ''தொழிலாளி வர்க்கம்'' விடுதலை செய்யவேண்டும்—எதை? ''உழைப்பை.'' இதைப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் புரிந்து கொள்ளட்டும்.

இதற்கு நட்ட ஈடான எதிர்க்கூற்று, மறுபக்கத்தில் முதல் தரமான லஸ்ஸால்வாத மேற்கோளாகும்: ''அதனுடன் (தொழிலாளி வர்க்கத்துடன்) சம்பந்தப்பட்ட மட்டில் இதர அனைத்து வர்க்கங்களும் **ஒரு பிற்போக்குத் திரள் மட்டுமே''.**

**கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** கூறுகிறது: ''இன்று முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நிற்கின்ற எல்லா வர்க்கங்

களிலும் பாட்டாளி வர்க்கம் மட்டுமே மெய்யான புரட்சிகர மான வர்க்கமாகும். ஏனைய வர்க்கங்கள் நவீனத் தொழிலின் வளர்ச்சிக்கு முன்னுல் நலிவுற்றுச் சிதைந்து முடிவில் மறைந்து போகின்றன. பாட்டாளிவர்க்கம் மட்டும்தான் நவீனத்தொழி லின் விசேஷமான, அவசியமான விளைவாக இருக்கிறது''.

காலாவதியான உற்பத்தி முறைகளினுல் படைக்கப்படு கின்ற அனைத்து சமூக அந்தஸ்துகளையும் தக்க வைத்துக் கொள்ள விரும்புகின்ற நிலப்பிரபுத்துவப் பெரிய நிலவுடை மையாளர்களுடனும் கீழ்நிலை மத்தியதரவர்க்கத்தினருடனும் ஒப்பிடுகின்ற பொழுது முதலாளி வர்க்கம் இங்கே ஒரு புரட்சி கரமான வர்க்கமாக, பெரிய அளவுத் தொழில் துறையைக் கொண்டு வருகின்றதாகக் கருதப்படுகிறது. ஆகவே அவர்கள் முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து ஒற்றைப் பிற்போக்குத் திர ளாக அமையவில்லை.

மறுபக்கத்தில், முதலாளி வர்க்கத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது பாட்டாளி வர்க்கம் புரட்சிகரமானது, ஏனென் ருல் பெரிய அளவுத் தொழில் துறையை அடிப்படையாகக் கொண்டு தான் வளர்ச்சியடைந்த பிறகு அது உற்பத்தியில் எந்த முதலாளித்துவத் தன்மையை முதலாளி வர்க்கம் நிரந் தரப்படுத்துவதற்கு முயல்கிறதோ அதை உற்பத்தியிலிருந்து பறிக்கப் பாடுபடுகிறது. ஆனுல் ''மத்திய தரவர்க்கத்தின் கீழ்த்தட்டுக்களைச் சேர்ந்தவர்கள்'' ''பாட்டாளி வர்க்கமாக மாற்றப்படவிருப்பதனுல்'' புரட்சிகரமாக மாறிக் கொண் டிருக்கிருர்கள் என்று அறிக்கை எடுத்துக் காட்டியிருக்கிறது.

ஆகவே இந்தக் கருத்து நிலையிலிருந்து பார்க்கும் பொழுது அவர்கள் தொழிலாளி வர்க்கத்துடன் ஒப்பிடும் பொழுது முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து—மற்றும் நிலப்பிரபுத் துவப் பெரிய நிலவுடைமையாளர்களையும் துணையாகச் சேர்த்துக் கொண்டு—''ஒரே மொத்தமான பிற்போக்குத் திரளாக அமைகிருர்கள்'' என்று சொல்வது மறுபடியும் பிதற்றல்தான்.

கடந்த தேர்தலின் போது கைவினைஞர்கள், சிறு அளவுத் தயாரிப்பாளர்கள், இதரர்களிடம் மற்றும் விவசாயிகளிடம் இப்படிப் பிரகடனம் செய்தார்களா?: ''எங்களோடு ஒப்பி டும் பொழுது நீங்கள் முதலாளி வர்க்கம் மற்றும் நிலப்பிர புத்துவப் பெரிய நிலவுடைமையாளர்களுடன் சேர்ந்து ஒற் றைப் பிற்போக்குத் திரளாகத்தான் அமைந்திருக்கிறீர்கள்!''

லஸ்ஸால் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை மனப்பாடமாக அறிவார். அவருடைய விசுவாசமிக்க சீடர்கள் அவர் எழுதிய சுவிசேஷங்களை நன்ருக உருப்போட்டிருப்பதைப் போன்றதே இது. எனவே லஸ்ஸால் அறிக்கையை மிக அதிகமாகத் திரித்துக் கூறுகிருர் என்ருல் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக அதன் எதேச்சாதிகார மற்றும் நிலப்பிரபுத்துவ எதிரிகளுடன் அவருடைய கூட்டணிக்குப் பகட்டான வர்ணம் பூசுவதற்காக மட்டுமே இதைச் செய்திருக்கிருர்.

மேலும் மேற்கூறிய பாராவில் அவருடைய அசரீரியான பொன்மொழி அகிலத்தின் விதிகளிலிருந்து அரைகுறையாக எடுக்கப்பட்ட மேற்கோளுடன் எத்தகைய தொடர்பும் இல்லாமல் பிரதானமாக வலிந்து புகுத்தப்படுகிறது. எனவே இங்கே அது வெறும் அதிகப் பிரசங்கித்தனமே, பெர்லின் நகரத்து மராத்[86] செய்கின்ற மலிவான அதிகப்பிரசங்கங்களில் ஒன்றுதான்; ஹெர் பிஸ்மார்க்குக்கு அது சிறிதுகூட அதிருப்தியை ஏற்படுத்தாது என்பது மெய்யே.

> 5. ''தொழிலாளி வர்க்கத்தினுடைய முயற்சிகளின் அவசியமான விளைவு—அவை எல்லா நாகரிகமடைந்த நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் பொதுவானவை—மக்களினங்களின் சர்வதேச சகோதரத்துவமாக இருக்கும் என்பதை அது உணர்ந்து முதலாவதாக இன்றைய தேசிய இன அரசு என்ற கட்டுக்கோப்பிற்குள் தன்னுடைய விடுதலைக்காகப் பாடுபடுகிறது''.

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கைக்கும் மற்றும் அதற்கு முந்திய சோஷலிசம் அனைத்துக்கும் எதிரான விதத்தில் லஸ்ஸால் மிகவும் குறுகலான தேசிய நிலையிலிருந்து தொழிலாளர்கள் இயக்கத்தைக் கண்டார். அவரை இதில் பின்பற்றுகிருர்கள்,—அதிலும் அகிலத்தின் பணிகளுக்குப் பிறகு!

தொழிலாளி வர்க்கம் போராட வேண்டுமென்ருல் கூட தன்னுடைய சொந்த நாட்டில் தன்னை ஒரு வர்க்கம் என்ற முறையில் அமைத்துக்கொள்ள வேண்டும், அதற்குச் சொந்த நாடுதான் உடனடியான போராட்டக்களம் என்பது முற்றிலும் தானுகத் தெரிந்ததே. அந்த அளவில் அதன் வர்க்கப் போராட்டம் தேசியமானதே—இது சாராம்சத்தில் அல்ல, ஆனுல் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை சொல்வதைப் போல ''வடிவத்தில்''. ஆனுல் ''இன்றைய தேசிய இன அரசின்

கட்டுக்கோப்பு'', உதாரணமாக, ஜெர்மன் சாம்ராஜ்யம் பொருளாதார ரீதியில் ''உலகச் சந்தையின் கட்டுக்கோப் பிற்குள்ளாகவும்'', அரசியல் ரீதியில் ''அரசுகளின் அமைப்பு என்ற கட்டுக்கோப்பிற்குள்ளாகவும்'' இருக்கிறது. ஜெர்மன் வர்த்தகம் என்பது அதே சமயத்தில் வெளிநாட்டு வர்த்த கமே என்பது ஒவ்வொரு வர்த்தகரும் அறிந்ததே. ஹெர் பிஸ்மார்க்கின் பெரும்புகழ் துல்லியமாக இப்படிப்பட்ட சர்வ தேசக் கொள்கையைப் பின்பற்றுவதில்தான் அடங்கியிருக் கிறது என்பது நிச்சயமே.

ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி தன்னுடைய சர்வ தேசியத்தை எப்படிக் குறுக்கியிருக்கிறது? தன்னுடைய முயற்சி களின் விளைவாக ''மக்களினங்களின் சர்வதேசிய சகோதரத்து வம்'' ஏற்படும் என்ற உணர்வுக்கு—முதலாளி வர்க்கத்தின் சமாதானம் மற்றும் சுதந்திரக் கழகத்திலிருந்து[87] இரவல் பெற்ற சொற்றொடர் இது. ஆளும் வர்க்கங்களுக்கும் அவர் களுடைய அரசாங்கங்களுக்கும் எதிரான கூட்டுப் போராட் டத்தில் தொழிலாளி வர்க்கத்தினரின் சர்வதேச சகோதரத் துவத்துக்கு இது சமம் என்று கருதப்படுகிறது. ஆகவே ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசக் கடமைகளைப் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை! அது தன்னுடைய சொந்த முதலாளி வர்க்கத்துக்கும்—அது ஏற்கெனவே தொழிலாளி வர்க்கத்தை எதிர்த்து மற்ற எல்லா நாடுகளையும் சேர்ந்த முதலாளி வர்க்கத்துடன் கை கோர்த்து நிற்கிறது—ஹெர் பிஸ்மார்க்கின் சதிகார சர்வதேசக் கொள்கைக்கும் இப் படிச் சவால்விடுகிறது!

உண்மையில் இந்த வேலைத்திட்டத்தின் சர்வதேசியம் சுதந்திர வர்த்தகக் கட்சியின் சர்வதேசியத்தைக் காட்டிலும் கூட மிகவும் அதிகமாகக் கீழே இறங்கிவிட்டது. பிந்திய கட்சியும் தன்னுடைய முயற்சிகளின் விளைவாக ''மக்களினங்களின் சர்வதேச சகோதரத்துவம்'' ஏற்படும் என்று வலியுறுத்து கிறது. எல்லா மக்களினங்களும் சொந்த நாட்டில் வர்த்த கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வுடன் அது ஒருக்காலும் திருப்தி அடைவதில்லை; ஆனால் வர்த்த கத்தை சர்வதேசமாக்குவதற்கு அது ஏதாவது செய்கிறது.

தொழிலாளி வர்க்கத்தினரின் சர்வதேச நடவடிக்கை சர்வதேசத் தொழிலாளர்கள் சங்கம் இருப்பதை எவ்விதத்தி லும் சார்ந்திருக்கவில்லை. அந்த நடவடிக்கைக்கு ஒரு மத்திய

அமைப்பை உருவாக்குவதற்குச் செய்யப்பட்ட முதல் முயற்சியே அது. அந்த முயற்சியின் உந்துதலின் காரணமாக அது நிரந்தரமான வெற்றியாக இருந்தது. ஆனால் அதன் முதல் வரலாற்று வடிவத்தில் அதன் ஈடேற்றம் பாரிஸ் கம்யூனின் வீழ்ச்சிக்குப் பிறகு இனியும் சாத்தியமாக இருக்கவில்லை.

ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி புதிய வேலைத்திட்டத்தில் சர்வதேசியத்தைத் தொடுவதில்லை என்று சத்தியம் செய்துவிட்டது என்று பிஸ்மார்க்கின் *Norddeutsche* தன்னுடைய எசமானருக்குத் திருப்தி அளிக்கும்படி அறிவித்தது முற்றிலும் சரியானதே.

## II

> ''ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி இந்த ஆதாரக் கோட்பாடுகளிலிருந்து தொடங்கி சுதந்திர அரசையும் மற்றும் சோஷலிஸ்ட் சமூகத்தையும் அடைவதற்கு: கூலியின் இரும்புச் சட்டத்துடன் சேர்த்துக் கூலி முறையையும் மற்றும் சுரண்டலின் ஒவ்வொரு வடிவத்தையும் ஒழிப்பதற்கு; எல்லா வகையான சமூக மற்றும் அரசியல் ஏற்றத்தாழ்வைப் போக்குவதற்கு சட்டபூர்வமான எல்லா வழிகளிலும் பாடுபடும்''.

''சுதந்திரமான'' அரசைப் பற்றிப் பிறகு எழுதுகிறேன்.

ஆகவே எதிர்காலத்தில் ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி லஸ்ஸாலின் ''கூலியின் இரும்புச் சட்டத்தில்'' நம்பிக்கை வைக்க வேண்டும். இதை மறக்காமலிருக்க வேண்டும் என்பதற்காக ''கூலியின் இரும்புச் சட்டத்துடன் சேர்த்துக் கூலி முறையையும் (கூலியுழைப்பு முறை என்று இருக்க வேண்டும்) ஒழிப்பது'' என்ற பிதற்றல் இங்கே இடம் பெறுகிறது. நான் கூலியுழைப்பை ஒழித்தால் இயற்கையாகவே அதன் சட்டங்களையும் ஒழித்துவிடுகிறேன்—அவை ''இரும்பா'' அல்லது கடற்பஞ்சா என்பது முக்கியமல்ல. ஆனால் கூலியுழைப்புக்கு எதிராக லஸ்ஸாலின் தாக்குதல் சட்டம் என்று பெயரிடப்பட்டுள்ள இதன் மீதே அநேகமாகத் தனியாகச் சுழல்கிறது. ஆகவே லஸ்ஸாலின் குறுங்குழு வெற்றிபெற்றிருக்கிறது என்று எடுத்துக் காட்டுவதற்காகக் ''கூலிமுறை'' ''கூலியின் இரும்புச் சட்டத்துடன் சேர்த்து'' ஒழிக்கப்பட வேண்டும்—அது இல்லாமல் அல்ல.

''கூலியின் இரும்புச் சட்டத்தில்'' ''இரும்பு'' என்ற வார்த்தையைத் தவிர லஸ்ஸாலுக்குச் சொந்தமானது எதுவுமில்லை என்பது எல்லோரும் அறிந்ததே. அந்த வார்த்தை கூட கேதேயின் ''மாபெரும், நிரந்தரமான இரும்பு விதிகள்'' என்ற சொற்றொடரிலிருந்து இரவல் பெறப்பட்டதே. ''இரும்பு'' என்பது ஒரு சின்னம். அதன் மூலம் உண்மையான விசுவாசிகள் ஒருவரையொருவர் அடையாளம் தெரிந்து கொள்கிறார்கள். ஆனால் லஸ்ஸாலின் முத்திரை பொறிக்கப்பட்ட இந்தச் சட்டத்தை நான் ஏற்றுக்கொண்டால்—ஆகவே அவருடைய அர்த்தத்தில் நான் ஏற்றுக்கொண்டால்—அதற்கு அவருடைய மெய்ப்பித்தலையும் நான் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அது என்ன? லஸ்ஸால் மரணமடைந்த பிறகு லாங்கே ஏற்கெனவே எடுத்துக்காட்டியதைப் போல அது மால்தசின் மக்கள் தொகைத் தத்துவமே[88] (இதை லாங்கே தான் பிரச்சாரம் செய்தார்). ஆனால் இந்தத் தத்துவம் சரி என்றால் நான் கூலியுழைப்பை நூறு முறை ஒழித்தால் கூட இந்த ''இரும்புச் சட்டத்தை'' ஒழிக்க முடியாது. ஏனென்றால் அப்பொழுது இந்தச் சட்டம் கூலியுழைப்பு முறையை மட்டுமின்றி ஒவ்வொரு சமூக அமைப்பையும் ஆள்கிறது. பொருளியலாளர்கள் இதை நேர் அடிப்படையாகக் கொண்டு சோஷலிசம் வறுமையை ஒழிக்க முடியாது—அதன் அடிப்படை இயற்கையிலேயே இருக்கிறது,—அதனால் வறுமையைப் பொதுப்படையாக்க மட்டுமே, ஒரே சமயத்தில் சமூகத்தின் மொத்தப் பரப்பு முழுவதிலும் வினியோகித்தலையே செய்ய முடியும் என்று கடந்த ஐம்பது வருடங்களாக நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இவை அனைத்தும் கூட முக்கியமல்ல. இந்தச் சட்டத்தை லஸ்ஸால் தவறாக வகுத்தளிப்பது ஒரு புறமிருக்கட்டும், உண்மையிலேயே அருவருப்பான பின்னடைவு பின்வரும் பகுதியில் காணப்படுகிறது:

கூலிகள் அவற்றின் தோற்றத்தின்படி இல்லை, அதாவது அவை உழைப்பின் மதிப்பு அல்லது விலை அல்ல, அவை உழைப்புச் சக்தியின் மதிப்பை அல்லது விலையை மறைக்கின்ற வடிவம் மட்டுமே என்ற விஞ்ஞான ரீதியான தெளிவு நம்முடைய கட்சியில் லஸ்ஸாலின் மரணத்துக்குப் பிறகு ஓங்கியிருக்கிறது. ஆகவே கூலிகளைப் பற்றிய மொத்த முதலாளி வர்க்கக்கருத்தும் அந்தக் கருத்துக்கு எதிராக இதுவரையிலும் சொல்லப்

பட்ட அனைத்து விமர்சனமும் நிரந்தரமாகத் தூக்கியெறியப் பட்டன; கூலித் தொழிலாளி குறிப்பிட்ட அளவு நேரம் முதலாளிக்காக (ஆகவே உபரி மதிப்பை அவருடன் சேர்ந்து நுகர்வு செய்கின்றவர்களுக்கும் கூட) இலவச உழைப்புச் செய்கின்ற அளவுக்கு மட்டுமே அவன் தன்னுடைய சொந்த ஜீவனத்துக்கு உழைக்க, அதாவது வாழ்வதற்கு, அனுமதிக்கப் படுகிறான்; நாளொன்றுக்கு வேலை செய்யும் நேரத்தை அதிகப்படுத்துவதன் மூலம் அல்லது உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி அதாவது உழைப்புச் சக்தியின் தீவிரத்தை அதிகப்படுத்துதல், இதரவற்றின் மூலம் இந்த இலவச உழைப்பை அதிகப்படுத்துவதைச் சுற்றியே மொத்த முதலாளித்துவ உற்பத்தி முறையும் சுழன்று வருகிறது; ஆகவே கூலியுழைப்பு முறை என்பது அடிமை முறையாகும், அதிலும் தொழிலாளியின் ஊதியம் அதிகரித்தாலும் அல்லது குறைந்தாலும் உழைப்பின் சமூக உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைகின்ற விகிதத்தில் அதிகம் கூர்மையடைகின்ற அடிமைத்தனம் என்பது உண்மையே என்ற தெளிவு ஏற்பட்டது. இந்தத் தெளிவு நம்முடைய கட்சியில் மேன்மேலும் வலுப் பெற்ற பிறகு லஸ்ஸாலின் வறட்டுக் கோட்பாட்டுக்குத் திரும்புகிறார்கள். கூலிகள் என்றால் என்னவென்பது லஸ்ஸாலுக்குத் தெரியாது, அவர் முதலாளி வர்க்கப் பொருளியலாளர்களைப் பின்பற்றி விஷயத்தின் சாராம்சத்துக்கு பதிலாக வெளித் தோற்றத்தை எடுத்துக் கொண்டார் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

இது அடிமைத்தனத்தின் ரகசியத்தைக் கடைசியில் தெரிந்து கொண்டு கலகம் செய்து கொண்டிருக்கும் அடிமைகளுக்கு மத்தியில் காலாவதியான கருத்துக்களுக்கு இன்னும் அடிமையாக இருக்கின்ற ஒரு அடிமை கலகக்காரர்களின் வேலைத்திட்டத்தில் அடிமை முறையில் அடிமைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற உணவு ஒரு குறிப்பிட்ட குறைவான உச்ச அளவுக்கு மேல் அதிகரிக்க முடியாது என்பதால் அடிமை முறையை ஒழிக்க வேண்டும் என்று பொறிப்பதைப் போன்றிருக்கிறது!

நம் கட்சியில் பெருந்திரளானவர்கள் மத்தியில் பரவியிருக்கின்ற தெளிவுக்கு எதிராக இத்தகைய கோரமான தாக்குதலை நம்முடைய கட்சிப் பிரதிநிதிகள் செய்ய முடிந்தது என்ற உண்மையே அவர்கள் எத்தகைய குற்றவாளித்

தனமான பொறுப்பின்மையுடனும் எந்த அளவுக்கு மனச் சாட்சி இல்லாமலும் இந்த சமரச வேலைத்திட்டத்தைத் தயாரித்தார்கள் என்பதை நிரூபிக்கவில்லையா?

பாராவின் முடிவில் எழுதப்பட்டிருக்கின்ற ''எல்லா வகையான சமூக மற்றும் அரசியல் ஏற்றத்தாழ்வைப் போக்கு தல்'' என்ற தெளிவில்லாத சொற்றொடருக்குப் பதிலாக வர்க்க வேறுபாடுகள் ஒழிக்கப்படும் பொழுது அவற்றி லிருந்து தோன்றுகின்ற எல்லா வகையான சமூக மற்றும் அரசியல் ஏற்றத்தாழ்வும் தானுகவே மறைந்துவிடும் என்று எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## III

> ''சமூகப் பிரச்சினையின் தீர்வுக்குப் பாதை அமைப்பதற்கு அரசு நிதியுதவியுடன் உழைக்கும் மக்களின் ஜனநாயக நிர் வாகத்தில் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்படவேண்டுமென்று ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி கோருகிறது. உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங் கங்கள் தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும்— மொத்த உழைப்பையும் சோஷலிஸ்ட் அமைப்பு ரீதியாக்குதல் அவற்றிலிருந்து ஏற்படுகின்ற பெரிய அளவில்— அமைக்கப்பட வேண்டும்''.

லஸ்ஸாலின் ''கூலியின் இரும்புச் சட்டத்துக்குப்'' பிறகு, தீர்க்கதரிசியின் மருந்து குறிப்பிடப்படுகிறது. அதற்குச் செல்கின்ற வழியும் தகுதியான முறையில் 'தயாரிக்கப்படு கிறது'. இன்றைக்கிருக்கும் வர்க்கப் போராட்டத்துக்குப் பதிலாக பத்திரிகை நிருபரின் சொற்றொடர் உபயோகிக்கப் படுகிறது: ''சமூகப் பிரச்சினை''—அதன் ''தீர்வுக்குப்''பாதை அமைக்க வேண்டும். ''மொத்த உழைப்பையும் சோஷலிஸ்ட் அமைப்பு ரீதியாக்குதல்'' புரட்சிகரமாற்ற நிகழ்வுப் போக் கிலிருந்து பிறப்பதற்கு பதிலாக அது உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு — இவற்றை ''ஏற்படுத்துவது'' தொழிலாளி அல்ல, அரசே—''அரசின் நிதியுதவியிலிருந்து'' தோன்றுகின்றன. அரசின் கடன் பணத்தைக் கொண்டு ஒரு புதிய ரயில்வே மட்டுமல்ல, ஒரு புதிய சமூகத்தையும் நிர்மாணிக்க முடியும் என்பது லஸ்ஸாலின் கற்பனைக்குப் பொருந்துவதே.

''அரசு நிதியுதவி'' ''உழைக்கும் மக்களின்'' ஜனநாயக நிர்வாகத்தின் கீழ் வைக்கப்படுகிறது—குற்ற உணர்ச்சியின் எச்சங்கள் இதற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

முதலாவதாக, ஜெர்மனியில் ''உழைக்கும் மக்களில்'' பெரும்பான்மையினர் விவசாயிகளே, பாட்டாளிகள் அல்ல.

இரண்டாவதாக, ''ஜனநாயகம்'' என்பது, ஜெர்மன் மொழியில் "Volksherrschaftlich" (''மக்களின் ஆட்சியினுல்'') என்று அர்த்தம். ''உழைக்கும் மக்களுடைய மக்களின் ஆட்சியினுல் செய்யப்படும் நிர்வாகம்'' என்ருல் என்ன அர்த்தம்? அரசிடம் இந்தக் கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம் தான் ஆட்சி செய்யவில்லை, ஆட்சி செய்கின்ற அளவுக்கு முதிர்ச்சி அடையவுமில்லை என்ற தன்னுடைய முழு உணர்வை வெளியிடுகின்ற உழைக்கும் மக்களைப் பற்றி என்ன சொல்ல முடியும்!

லுயீ ஃபிலீப்பின் ஆட்சிக் காலத்தில் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளுக்கு எதிராக பியுஷேயால் முன்வைக்கப்பட்டு அரசுத் தொழிற்சாலைகளின் (*Atelier*)[89] பிற்போக்கான தொழிலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மருந்தைப் பற்றிய விமர்சனத்தைக் குறித்து இங்கே எழுதுவது மிகையானதாகும். இங்கே முக்கியமான குற்றம் இந்தக் குறிப்பிட்ட விஷயத்தை வேலைத் திட்டத்தில் சேர்த்தது அல்ல, பொதுவாக, ஒரு வர்க்க இயக்கத்தின் நிலையிலிருந்து குறுங்குழு இயக்கத்தை நோக்கிப் பின்னுல் காலடி வைத்ததே.

தொழிலாளர்கள் சமூக அளவில் கூட்டுறவு உற்பத்திக்கு முதலாவதாக, தேசிய அளவில் தங்களுடைய சொந்த நாட்டில் கூட்டுறவு உற்பத்திக்கு அவசியமான நிலைமைகளை நிறுவுவதற்கு விரும்புகிருர்கள் என்ருல் அவர்கள் உற்பத்தியின் இன்றைய நிலைமைகளைப் புரட்சிகரமாக்கப் பாடுபடுகிருர்கள் என்று மட்டுமே அர்த்தம்; அரசின் நிதியுதவியுடன் கூட்டுறவு சங்கங்களை நிறுவுவதற்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. ஆனுல் இன்றைக்கிருக்கும் கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்தவரை அவை அரசாங்கங்கள் அல்லது முதலாளி வர்க்கத்தின் பாதுகாப்புப் பெறும் அமைப்புகளாக இல்லாமல் தொழிலாளர்களின் சுதந்திரமான படைப்புகளாக இருக்கின்ற அளவுக்கு மட்டுமே அவை பயனைக் கொண்டிருக்கும்.

## IV

நான் இப்பொழுது ஜனநாயகப் பகுதிக்கு வருகிறேன்:

### A. ''அரசின் சுதந்திரமான அடிப்படை''.

முதலாவதாக, ஜெர்மன் தொழிலாளர் கட்சி ''சுதந்திர மான அரசுக்காகப்'' பாடுபடுகிறது என்று இரண்டாம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

''சுதந்திரமான அரசு''—இதன் பொருள் என்ன?

பணிவு மிக்க குடிமக்கள் என்ற குறுகிய எண்ணத்தை அகற்றிவிட்ட தொழிலாளர்கள் அரசாங்கத்தை ''சுதந்திர மானதாக்குதல்'' என்ற நோக்கத்தை ஒரு போதும் கொண்டிருக்க மாட்டார்கள். ஜெர்மானிய சாம்ராஜ்யத்தில் ருஷ்யாவைப் போலவே ''அரசு'' அநேகமாக ''சுதந்திரமானதாகவே'' இருக்கிறது. அரசு என்பது சமூகத்தின் மேலே திணிக்கப்பட்ட உறுப்பு என்ற நிலையிலிருந்து சமூகத்துக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்த நிலைக்கு அதை மாற்றுவதில் தான் சுதந்திரம் அடங்கியிருக்கிறது. இன்றும் கூட அரசு வடிவங்கள் ''அரசின் சுதந்திரத்தைக்'' குறைப்பதைப் பொறுத்த வரை அதிகச் சுதந்திரமாக அல்லது குறைந்த சுதந்திரமாக நடந்து கொள்கின்றன.

இந்த வேலைத்திட்டத்தை நிறைவேற்றுகின்ற அளவுக்கு ஜெர்மன் தொழிலாளர் கட்சியில் சோஷலிஸ்ட் கருத்துக்கள் மேலெழுந்தவாரியாகக் கூடப் பிரபலமடையவில்லை என்பதை அக்கட்சி காட்டுகிறது. இன்றைக்கு இருக்கும் சமூகத்தை (எதிர்காலத்தில் ஏற்படுகின்ற எந்த சமூகத்துக்கும் இது பொருந்தும்) இன்றைக்கிருக்கும் அரசின் (அல்லது எதிர்கால சமூகம் என்றால் எதிர்கால அரசின்) ''அடிப்படை'' என்று எடுத்துக் கொள்ளாமல், அது அரசை ஒரு சுதந்திர மான அமைப்பாக, தனக்கென்று சொந்தமான ''அறிவுத் துறை, அறவியல், விடுதலைக் கோட்பாட்டைக்'' கொண்ட அமைப்பாக எடுத்துக் கொள்கிறது.

இந்த வேலைத்திட்டத்தில் ''இன்றைய அரசு'', ''இன்றைய சமுதாயம்'' என்ற சொற்கள் எவ்வளவு ஆரவாரமாகத் தவறாக உபயோகிக்கப்படுகின்றன; அது தன் கோரிக்கைகளை முன்வைக்கின்ற அரசைப் பற்றியும் எவ்வளவு தப்பபிப்பிரா

யங்களை ஆரவாரத்தோடு ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றியும் என்ன எழுதுவது?

''இன்றைய சமுதாயம்'' முதலாளித்துவ சமுதாயம். நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் இச்சமுதாயம் இருந்து வருகிறது; அதிகமாகவோ குறைவாகவோ மத்திய காலக் கூறுகளின் கலப்படத்திலிருந்து விடப்பட்டதாகவும் அந்தந்த நாட்டின் தனிப்பட்ட வரலாற்று வளர்ச்சியால் அதிகமாகவோ குறைவாகவோ பாதிக்கப்பட்டதாகவும், அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சியுற்றதாகவும் இருந்து வருகிறது. மறுபுறத்தில் ''இன்றைய அரசு'' அந்தந்த நாட்டின் எல்லையைக் கடந்ததும் மாறிவிடுகிறது. இது ஸ்விட்சர்லாந்தில் இருப்பதிலிருந்து பிரஷ்ய ஜெர்மானிய சாம்ராஜ்யத்தில் மாறுபட்டிருக்கிறது; அமெரிக்காவில் இருப்பதிலிருந்து இங்கிலாந்தில் மாறுபட்டிருக்கிறது. ஆகவே ''இன்றைய அரசு'' என்பது ஒரு கற்பனையே.

எனினும் நாகரிகமடைந்த பல்வேறு நாடுகளிலும் இருக்கின்ற பல்வேறு அரசுகளும் வடிவத்தில் வெவ்வேறு வகையாக இருந்தாலும், ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் முதலாளித்துவ வழியில் அதிகமான அல்லது குறைவான வளர்ச்சியைப் பெற்றிருப்பதைத் தவிர இவை அனைத்துக்கும் பொதுவான அம்சம் ஒன்று இருக்கிறது—இவை நவீன முதலாளித்துவச் சமுதாயத்தின் அடிப்படையில் அமைந்தவை. ஆகவே இவை சில முக்கியமான பொது இயல்புகளைப் பெற்றிருக்கின்றன. இந்த அர்த்தத்தில் ''இன்றைய அரசு'' என்று, இந்த அரசின் தற்போதைய மூலவேரான முதலாளித்துவச் சமுதாயம் மடிந்து மறைந்து விடுகின்ற வருங்கால அரசிலிருந்து வேறுபடுத்திப் பேசுவது சாத்தியமே.

ஆகவே இக்கேள்வி எழுகிறது: கம்யூனிச சமுதாயத்தில் அரசில் ஏற்படப் போகும் மாறுதல் என்ன? வேறுவிதமாகக் கூறினல் தற்போதுள்ள அரசின் பணிக்கு ஒப்பான எந்த சமுதாயப்பணிகள் அப்பொழுது எஞ்சியிருக்கும்? இந்தக் கேள்விக்கு விஞ்ஞான ரீதியில் மட்டுமே பதிலளிக்க முடியும். ''மக்கள்'' என்னும் சொல்லை ''அரசு'' என்னும் சொல்லுடன் ஆயிரம் வழியில் இணைப்பதன்மூலம் சாண் அளவுகூட இந்தப் பிரச்சினையின் தீர்வை நெருங்கி வந்துவிட முடியாது.

முதலாளித்துவச் சமுதாயத்துக்கும் கம்யூனிச சமுதாயத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாகப் புரட்சிகர மாற்ற

மடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாக அரசியல் இடைக்கால கட்டம் ஒன்றும் இருக்கிறது. இந்த இடைக் காலத்தில் அரசு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதி காரம் என்பதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடி யாது.

ஆனால் இந்த வேலைத்திட்டம் இதைப் பற்றியோ கம்யூ னிச சமுதாயத்தின் எதிர்கால அரசைப் பற்றியோ எடுத்துக் கூறவில்லை.

பொதுவான வாக்குரிமை, நேரடியாகச் சட்டமியற்றல், பொதுஜன உரிமைகள், மக்கள் ராணுவம், இதரவை ஆகிய எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த ஜனநாயகப் பல்லவிக்கு அப்பால் அதற்கு வேறு அரசியல் கோரிக்கைகள் எதுவுமே இல்லை. முதலாளிகளின் மக்கள் கட்சி, சமாதானம் மற்றும் சுதந்திரத்துக்கான கழகம் ஆகியவற்றின் எதிரொலி என்ற அளவிலே தான் அவை இருக்கின்றன. இந்தக் கோரிக்கைகள் அனைத்துமே—அவற்றை மகத்தான அற்புதங்களைப் போல மிகைப்படுத்திச் சொல்லவில்லையென்றால் — ஏற்கெனவே நிறைவேறிவிட்டவையே. ஜெர்மானிய சாம்ராஜ்யத்தின் எல்லை களுக்குள் இருக்கும் அரசில் இவை இல்லை என்பதைத் தவிர ஸ்விட்சர்லாந்து, அமெரிக்கா, இதர நாடுகளில் அவை இருக்கின்றன. இப்படிப்பட்ட ''எதிர்கால அரசு'' என்பது ஜெர்மானியப் பேரரசின் ''எல்லைக்கு'' அப்பால் இருந்த போதிலும் அது இன்றைக்கு உள்ள அரசு தான்.

ஆனால் ஒரு விஷயம் மறக்கப்பட்டுவிட்டது. ஜெர்மன் தொழிலாளர் கட்சியானது ''இன்றைக்கிருக்கும் தேசிய அரசுக்குள்'' இயங்குவதாக வெளிப்படையாகவே தெரிவிப்ப தால், அதன் சொந்த அரசுக்குள், பிரஷ்ய-ஜெர்மானிய சாம்ராஜ்யத்துக்குள் அது இயங்குவதால்—வேறுவிதமாக இருக்குமானால் அதன் கோரிக்கைகள் பெருமளவுக்கு அர்த்த மில்லாதவையாக இருக்கும்; ஏனென்றால் ஒருவர் தனக்குக் கிடைக்காதவற்றை மட்டுமே கோரிக்கைகளாக எழுப்பு கிறார்—அது முக்கியமான ஒன்றை, அதாவது இந்தச் சிறு ஆடம்பரப் பொருள்கள் அனைத்துமே மக்களின் அரசுரிமை என்று சொல்லப்படுவதை அங்கீகரிப்பதை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே அவை ஒரு ஜனநாயகக் குடியரசுக்கு மட்டுமே பொருத் தமானவையாகும்.

எனவே லூயீ ஃபிலீப் மற்றும் லூயீ நெப்போலியனுடைய ஆட்சியின்போது பிரெஞ்சுத் தொழிலாளர்களின் வேலைத் திட்டத்தைப் போல ஒரு ஜனநாயகக் குடியரசைக் கோருவதற்குத் துணிச்சல் இல்லாதிருப்பதால்—கவனமாக நடந்து கொள்ள வேண்டுமென்று சந்தர்ப்பங்கள் வற்புறுத்துவதால் அதுவும் புத்திசாலித்தனமே—நாடாளுமன்ற வடிவங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட நிலப்பிரபுத்துவச் சேர்க்கைகளைக் கொண்ட கலப்பாகவும், ஏற்கெனவே முதலாளிகளின் தாக்கத்துக்கு உட்பட்டு அதிகார வர்க்கத்தினுல் செப்பனிடப்பட்டு போலீஸ் பாதுகாப்புடன் உள்ள இராணுவ சர்வாதிகாரம் என்பதைத் தவிர வேறு எவ்விதமாகவும் இல்லாத ஒரு அரசிடம் ஒரு ஜனநாயகக் குடியரசில் மட்டுமே பொருளுடையதாக இருக்கக் கூடிய உரிமைகளைக் கோருகின்ற தந்திரத்தை—இது கண்ணியமும் அல்ல, ''கௌரவமானதும்'' அல்ல—கையாண்டிருக்கக் கூடாது. அதன் பிறகு இவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு அரசைச் ''சட்ட பூர்வமான வழிகளின் மூலம்'' நிர்ப்பந்திக்க முடியும் என்ற கற்பனையை அதே அரசிடம் உறுதி மொழியாகச் சொல்லியிருக்கக் கூடாது.

கொச்சையான ஜனநாயகம் ஜனநாயகக் குடியரசில் ஒரு பொற்காலத்தைக் காணுகிறது; முதலாளித்துவ சமூகத்தின் அரசின் இந்தக் கடைசி வடிவத்தில் இறுதி முடிவு ஏற்படும் வரை வர்க்கப் போராட்டம் நடக்கப்போகிறது என்று அது ஒருபோதும் சந்தேகித்ததில்லை. அப்படிப்பட்ட கொச்சையான ஜனநாயகம் கூட போலீசினுல் அனுமதிக்கப்பட்ட—ஆனுல் தர்க்கத்தால் அனுமதிக்கப்படாத—எல்லைகளுக்குள் மட்டுமே நின்றுவிடுகின்ற இந்த ஜனநாயகவாதத்தைக் காட்டிலும் மலைகளைப் போல உயர்ந்து நிற்கிறது.

''அரசு'' என்ற வார்த்தை அரசாங்க இயந்திரத்தை அல்லது அரசை—சமூகத்திலிருந்து உழைப்புப் பிரிவினையின் மூலம் பிரிக்கப்பட்ட விசேஷமான உயிரினமாக அது இருக்கின்ற அளவுக்கு—குறிக்கிறது என்பது பின்வரும் வார்த்தைகளிலிருந்து தெரியவருகிறது: ''படிப்படியாக முன்னேக்கிப் போகின்ற ஒருமுனை வருமான வரி அரசின் பொருளாதார அடிப்படையாக இருக்கவேண்டுமென்று ஜெர்மன் தொழிலாளர் கட்சி கோருகிறது'', இதரவை. அரசாங்க இயந்திரத்துக்குப் பொருளாதார அடிப்படை வரிகளே—மற்றவை எதுவு

மல்ல. ஸ்விட்சர்லாந்தில் இருக்கின்ற ''எதிர்கால அரசில்'' இந்தக் கோரிக்கை மிக நன்ருகவே நிறைவேற்றப்பட்டிருக் கிறது. வெவ்வேறு சமூக வர்க்கங்களின் வெவ்வேருன வருமான மூலங்களை வருமானவரி முன்னூகிக்கிறது. இதன் மூலம் முதலாளித்துவ சமூகத்தையும் முன்னூகிக்கிறது. எனவே லிவர்பூல் நகரத்தைச் சேர்ந்த நிதித்துறைச் சீர்திருத்தவாதிகள், கிளாட்ஸ்தனுடைய தம்பியின் தலைமை யில் திரண்டிருக்கும் முதலாளிகள் இந்த வேலைத் திட்டத்தி லிருக்கும் இதே கோரிக்கையை முன்வைப்பதில் அதிசய மில்லை.

> B. ''அரசின் அறிவு மற்றும் அறவியல் அடிப்படை யாகப் பின்வருவன இருக்க வேண்டுமென்று ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி கோருகிறது:
>
> 1. அரசின் மூலம் நடைபெறுகின்ற பொது மற்றும் **சமத்துவ ஆரம்பக்கல்வி.** அனைவருக்கும் பள்ளி வருகை கட்டாயமாக்கப்படுதல். இலவசக் கல்வி''.

**சமத்துவ ஆரம்பக்கல்வி?** இச்சொற்களின் பின்னுலிருக் கும் கருத்து என்ன? இன்றைய சமூகத்தில் (ஒருவர் இதை மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்ள முடியும்) எல்லா வர்க்கங்களுக்கும் கல்வி **சமமாக** இருக்க முடியும் என்று கருதப்படுகிறதா? அல்லது கூலித் தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல் விவசாயிகளுடைய பொருளாதார நிலைமை களுக்கும் மட்டுமே பொருத்தமான கல்வித் துணுக்காக உள்ள ஆரம்பப் பள்ளிக்கு உயர்வர்க்கங்களும் கூட கட்டாய மாகக் குறைக்கப்பட வேண்டும் என்று கோரப்படுகிறதா?

''அனைவருக்கும் பள்ளி வருகை கட்டாயமாக்கப்படுதல். இலவசக் கல்வி.'' முன்னுல் சொல்லப்பட்டது ஜெர்மனியில் கூட இருக்கிறது. இரண்டாவது, ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை ஸ்விட்சர்லாந்திலும் அமெரிக்காவிலும் இருக்கிறது. அமெரிக்காவில் சில அரசுகளில் உயர்கல்வி நிலையங்களின் கல்வி கூட ''இலவசமாக'' இருக்கிறதென்ருல் உண்மையில் உயர்வர்க்கத்தினருடைய கல்விக்காகப் பொது வரியிலிருந்து பணம் செலவு செய்வதே என்று தான் அதற்கு அர்த்தம். 5ம் ஷரத்தில் ''இலவச நீதி நிர்வாக முறை'' என்று கோரப்பட்டிருப்பதற்கும் இது தான் அர்த்தம் என் பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். கிரிமினல் சட்டத்

தின்படி நீதி நிர்வாகம் எங்குமே இலவசம் தான். சிவில் சட்ட நீதி என்பது அநேகமாக முற்றிலும் சொத்துக்களைப் பற்றிய தகராறுகள் சம்பந்தமானதாகும். ஆகவே அது உடைமை வர்க்கத்தினரையே அநேகமாக முழுமையாக பாதிக்கிறது. அவர்கள் தேசியக் கருவூலத்திலிருந்து தங்கள் வழக்குகளை நடத்துவதா?

பள்ளிக்கூடங்களைப் பற்றிய பாராவில் குறைந்த பட்சமாக ஆரம்பப் பள்ளிக்கூடத்துடன் சேர்ந்து தொழில்நுட்பப் பள்ளிக்கூடங்களை (தத்துவம் மற்றும் செய்முறை) கோரியிருக்க வேண்டும்.

**''அரசு மூலம் ஆரம்பக்கல்வி''** என்பது முற்றிலும் ஆட்சேபிக்கப்பட வேண்டியதாகும். ஒரு பொதுச் சட்டத்தின் மூலம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு நிதியுதவியை, ஆசிரியர்களின் கல்வித் தகுதிகளை, கல்விப் பிரிவுகளை, இதரவற்றை வரையறுப்பது, மற்றும்—அமெரிக்காவில் செய்யப்பட்டிருப்பதைப் போல—இந்தச் சட்டத் தகுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்று அரசு ஆய்வாளர்களின் மூலம் மேற்பார்வையிடுதல் என்பது மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்புக்கு அரசை நியமிப்பதிலிருந்து மிகவும் வேறானதாகும்! பள்ளிக்கூடத்தின் மீது எவ்விதமான தாக்கத்தையும் செலுத்தாதபடி அரசும் திருச்சபையும் சம அளவுக்கு ஒதுக்கிவைக்கப்பட வேண்டும். குறிப்பாக, பிரஷ்ய-ஜெர்மன் சாம்ராஜ்யத்தில் (''எதிர்கால அரசைப்'' பற்றிப் பேசுகிறோம் என்ற உளுத்துப் போன தந்திரத்தில் ஒருவர் ஒளிந்து கொள்ளக் கூடாது; இதைப் பொறுத்தமட்டில் நிலைமை எப்படி இருக்கிறது என்பது நமக்குத் தெரியும்) இதற்கு மாறாக, மக்கள் மிகவும் கண்டிப்பான முறையில் போதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது உண்மையே.

ஆனால், என்னதான் ஜனநாயக ஓசை இருந்தாலும் திட்டம் முழுவதுமே அரசு பற்றிய லஸ்ஸால் குறுங்குழுவின் அடிமைப்புத்திகொண்ட நம்பிக்கையில் அல்லது அதைக் காட்டிலும் சிறப்பில்லாத அதிசயங்கள் மீது ஜனநாயகமான நம்பிக்கையில் தோய்ந்திருக்கிறது; அல்லது சோஷலிசத்துக்கு சம அளவுக்கு அந்நியமான இந்த இரண்டு ரகங்களையும் சேர்ந்த நம்பிக்கைகளுக்கும் இடையில் அது ஒரு சமரசமாக இருக்கிறது.

''விஞ்ஞான ஆராய்ச்சிக்குச் சுதந்திரம்'' என்று பேசுகிறது பிரஷ்ய அரசியலமைப்புச் சட்டத்தில் ஒரு பாரா. இங்கே அது அவசியமா?

''மனச்சாட்சிச் சுதந்திரம்!'' Kulturkampf இன்[90] இன்றைய கட்டத்தில் மிதவாதத்திடம் அதன் பழைய முழக்கங்களை ஒருவர் நினைவுபடுத்த விரும்பினுல் அதைப் பின்வரும் வடிவத்தில் மட்டுமே செய்ய முடியும் என்பது நிச்சயம். போலீஸ்காரர்களுடைய குறுக்கீடு இல்லாமல் ஒவ்வொருவரும் தன்னுடைய உடல் தேவைகளையும் மதத் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு முடிய வேண்டும். ஆனுல் முதலாளி வர்க்கத்தின் ''மனச்சாட்சிச் சுதந்திரம்'' என்பது சாத்தியமான எல்லாவிதமான மதத்தின் மனச்சாட்சிச் சுதந்திரத்தை சகித்துக் கொள்வதைத் தவிர வேறு எதுவுமில்லை என்ற உண்மை தனக்குத் தெரிந்ததே, தன்னைப் பொறுத்த மட்டில் மதமாய் மாலங்களிலிருந்து மனச்சாட்சியை விடுதலை செய்யப்பாடுபடுகிறது என்பதை மற்றவை எப்படி இருந்தபோதிலும் தொழிலாளர்கள் கட்சி இங்கே எடுத்துக் காட்டியிருக்க வேண்டும். ஆனுல் ''முதலாளி வர்க்க'' மட்டத்தை மீறிப் போய்விடாதிருக்கவே ஒருவர் முனைகிருர்.

நான் இப்பொழுது கடைசிப் பகுதிக்கு வந்துவிட்டேன், ஏனென்ருல் இனிமேல் வேலைத்திட்டத்தில் அடுத்தபடியாகத் தொடர்கின்ற பிற்சேர்க்கை அதன் குறிப்பிட்ட உள்ளடக்கக் கூறு அல்ல. எனவே நான் இப்பொழுது மிகவும் சுருக்கமாக எழுதுகிறேன்.

### 2. ''வழக்கமான வேலைநாள்''.

வேறு எந்த நாட்டிலும் தொழிலாளர்கள் கட்சி இத்தகைய தெளிவில்லாத கோரிக்கையை முன்வைக்கவில்லை. குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் கட்சி முறையானது என்று கருதுகின்ற ஒரு நாளின் வேலை நேரத்தை எப்பொழுதுமே நிர்ணயத்துக் கோரியிருக்கிறது.

### 3. ''பெண் உழைப்பைக் கட்டுப்படுத்துவதும் குழந்தை உழைப்பைத் தடை செய்வதும்''.

வேலை நாளை ஆதாரப்படுத்தல் என்பது வேலை நாளின் கால அளவு, இடை ஓய்வு, இதரவற்றைப் பொறுத்த மட்டில்

பெண் உழைப்பைக் கட்டுப்படுத்துவதையும் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும்; இல்லையென்றால் குறிப்பாகப் பெண்களின் உடலுக்கு ஆரோக்கியக் குறைவான அல்லது தார்மிக ரீதியில் பெண்பாலினருக்கு ஆட்சேபகரமான தொழிற்பிரிவுகளில் பெண்கள் வேலை செய்வதைத் தவிர்ப்பதை மட்டுமே குறிக்கும். அது தான் இங்கே அர்த்தமென்றால் அப்படியே தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும்.

''குழந்தை உழைப்பைத் தடை செய்தல்''! இங்கே உச்ச வயதைக் குறிப்பிடுவது முற்றிலும் அவசியம்.

பெரிய அளவுத் தொழில்துறை இருக்கின்ற பொழுது குழந்தை உழைப்பைப் பொதுவாகத் தடை செய்தல் பொருந்தாது. ஆகவே அது வீணை, வெறும் பக்திபூர்வமான விருப்பமே.

அது நிறைவேறுவது—அது சாத்தியமாக இருக்குமானால்—பிற்போக்கானதாக இருக்கும். ஏனென்றால் வெவ்வேறு வயதுடைய பிரிவினர்களுக்கு ஏற்ற முறையில் வேலை நேரத்தைக் கண்டிப்பான முறையில் ஒழுங்குபடுத்துவதும் குழந்தைகளின் பாதுகாப்புக்கு அவசியமான மற்ற காப்பு நடவடிக்கைகளும், உற்பத்தியில் ஈடுபடுகின்ற உழைப்பும் கல்வியும் ஆரம்பத்தில் இணைவது இன்றைய சமூகத்தை மாற்றியமைக்கக் கூடிய மிகவும் சக்திவாய்ந்த சாதனங்களில் ஒன்றாகும்.

### 4. ''பாக்டரி, பட்டறை மற்றும் உள்நாட்டுத் தொழிலை அரசு மேற்பார்வை செய்தல்''.

பிரஷ்ய-ஜெர்மன் அரசைக் கருத்தில் கொண்டு, ஆய்வாளர்கள் நீதிமன்றத்தினால் மட்டுமே நீக்கப்பட வேண்டும் என்று திட்டவட்டமாகக் கோரியிருக்க வேண்டும். ஆய்வாளர்கள் தம் வேலைப் பொறுப்புகளில் அலட்சியம் காட்டினால் அவர்கள் மீது வழக்குத் தொடருவதற்கு எந்தத் தொழிலாளிக்கும் உரிமை வேண்டும்; ஆய்வாளர்கள் மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

### 5. ''கைதிகளின் உழைப்பை ஒழுங்குபடுத்துதல்''.

ஒரு பொதுவான தொழிலாளர்கள் வேலைத்திட்டத்தில் இது ஒரு அற்பமான கோரிக்கையே. எப்படி இருந்தாலும்,

போட்டியைப் பற்றிய அச்சத்தின் காரணமாக சாதாரணக் குற்றவாளிகளை மிருகங்களைப் போல நடத்துவதை அனுமதிக்கின்ற உத்தேசம் கிடையாது. தங்களை மேம்படுத்திக் கொள்வதற்கு அவர்களிடமிருக்கும் ஒரே சாதனமாகிய உற்பத்தியில் ஈடுபடும் உழைப்பைப் பறிக்கின்ற விருப்பம் கிடையாது என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்க வேண்டும். சோஷலிஸ்டுகளிடம் ஒருவர் குறைந்த பட்சம் இதையாவது எதிர்பார்ப்பார் என்பது நிச்சயமே.

### 6. ''செயலுரமிக்க கடன்பொறுப்புச் சட்டம்''.

''செயலுரமிக்க'' கடன்பொறுப்புச் சட்டம் என்பதற்கு என்ன அர்த்தம் என்று எடுத்துக் கூறியிருக்க வேண்டும்.

வழக்கமான வேலை நாளைப் பற்றிப் பேசுகின்ற பொழுது பாக்டரி சட்டத்தில் ஆரோக்கிய விதிகள் மற்றும் காப்பு நடவடிக்கைகளைப் பற்றிய பகுதி, இதரவை அக்கறையுடன் சிந்திக்கப்படவில்லை. இந்த விதிகள் மீறப்படுகின்ற சமயத்தில் மட்டுமே கடன்பொறுப்புச் சட்டத்தின்படித் தலையிட முடியும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், இந்தப் பிற்சேர்க்கையும் கூட கவனத்தோடு தயாரிக்கப்படவில்லை.

Dixi et salvavi animam meam*.

1875 ஏப்ரலிலும் மே மாதத் தொடக்கத்திலும் எழுதப்பட்டது.

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

---

*— நான் பேசிவிட்டேன்; என் ஆன்மாவைக் காப்பாற்றி விட்டேன்.—ப-ர்.

கா. மார்க்ஸ்

# 1878 டிசம்பர் முற்பாதியில் *Chicago Tribune* என்ற அமெரிக்க செய்தித்தாளின் நிருபருக்குக் கார்ல் மார்க்ஸ் கொடுத்த பேட்டியிலிருந்து

...''அடுத்த கேள்வி, இதுவரை சோஷலிசம் என்ன செய்திருக்கிறது?'' என்று உங்கள் நிருபர் கேட்டார்.

''இரண்டு காரியங்களைச் செய்திருக்கிறது'' என்று அவர் பதிலளித்தார். ''மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையில் நடைபெறுகின்ற பொதுவான, உலகு தழுவிய போராட்டத்தை, சுருக்கமாகச் சொல்வதென்றால் அதன் பொதுவான தன்மையை சோஷலிஸ்டுகள் எடுத்துக் காட்டிவிட்டார்கள். ஆகவே பல்வேறு நாடுகளிலுமுள்ள தொழிலாளர்களுக்கு இடையில் உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கு அவர்கள் முயற்சி செய்கிறார்கள். தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதில், அமெரிக்காவில் மட்டுமில்லாமல் இங்கிலாந்திலும் பிரான்சிலும் ஜெர்மனியிலும் உள்நாட்டுத் தொழிலாளர்களுக்கு எதிராக வெளி நாட்டுத் தொழிலாளர்களை நிறுத்துவதில் முதலாளிகள் அதிகமான முனைப்புக் காட்டியதனால் இது மிகவும் அவசியமாயிற்று. பல்வேறு நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களுக்கிடையில் உடனடியாக சர்வதேச உறவுகள் தோன்றின. சோஷலிசம் ஒரு ஸ்தலப் பிரச்சினை மட்டுமல்ல, அது ஒரு சர்வதேசப் பிரச்சினை, தொழிலாளர்களின் சர்வதேச நடவடிக்கையினால் மட்டுமே அதைத் தீர்க்க முடியும் என்று அவை எடுத்துக் காட்டின. தொழிலாளி வர்க்கத்தினர் தங்கள் இயக்கத்தின் இலட்சியங்கள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமல் தாமாகவே இயங்குகிறார்கள். சோஷலிஸ்டுகள் எந்த இயக்கத்தையும் கண்டுபிடித்துவிடவில்லை, அந்த இயக்கத்தின் தன்மை என்ன, அதன் இலட்சியங்கள் எவை என்பதை மட்டுமே தொழிலாளர்களிடம் எடுத்துக் கூறுகிறார்கள்,

''அது இன்றுள்ள சமூக அமைப்பை ஒழித்துவிடும் என்று அர்த்தம்'' என்று நான் இடையில் குறுக்கிட்டேன்.

''ஒரு பக்கத்தில் முதலாளிகளிடம் நிலமும் மூலதனமும், பண்டமாக விற்பனை செய்யப்படக் கூடிய வெறும் உழைப்புச் சக்தி மட்டும் தொழிலாளர்களிடம் இருக்கின்ற இந்த அமைப்பு வெறும் வரலாற்றுக் கட்டம் மட்டுமே என்று நாங்கள் கூறுகிறோம்'' என்று அவர் தொடர்ந்து கூறினார். ''அது மறைந்துவிடும். ஒரு உயர்ந்த சமூக அமைப்புக்கு அது வழிவிடும். எங்கும் சமூகம் பிரிந்திருப்பதை நாம் பார்க்கிறோம். நவீன நாடுகளின் தொழில்துறைச் செல்வாதாரங்களின் வளர்ச்சியுடன் இரண்டு வர்க்கங்களின் பகைமையும் கை கோர்த்துச் செல்கிறது. சோஷலிஸ்ட் கருத்து நிலையிலிருந்து பார்த்தால் இன்றைய வரலாற்றுக் கட்டத்தைப் புரட்சிகரமாக்குவதற்குரிய சாதனங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. பல நாடுகளில் தொழிற்சங்கங்களின் மீது அரசியல் ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவில் சுயேச்சையான தொழிலாளர் கட்சியின் அவசியம் வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது. அவர்கள் இனிமேல் அரசியல் வாதிகளை நம்ப முடியாது. கோஷ்டிகள் சட்டமன்றத்தைக் கைப்பற்றிவிட்டன, அரசியல் ஒரு வியாபாரமாக மாற்றப்பட்டுவிட்டது. ஆனால் இந்த விஷயத்தில் அமெரிக்கா மட்டும் தனியாக இருக்கவில்லை, அமெரிக்க மக்கள் ஐரோப்பியர்களைக் காட்டிலும் அதிகமான தீர்மானமுடையவர்களாக இருக்கிறார்கள் என்பது மட்டுமே வேறுபாடாகும். அங்கே விஷயங்கள் சீக்கிரமாக மேற்பரப்புக்கு வந்துவிடுகின்றன. செயற்கையான பேச்சும் போலித்தனமும் சமுத்திரத்தின் இந்தப் பகுதியைக் காட்டிலும் அங்கே சற்றுக் குறைவாக இருக்கின்றன...''

''போஸ்டன் நகரத்தைச் சேர்ந்த கண. ஜோசப் கூக்—உங்களுக்கு அவரைத் தெரியுமல்லவா—''

''நாங்கள் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்; சோஷலிசத்தைப் பற்றி அவருக்குத் தெரிந்திருப்பது மிகக் குறைவே''.

''சமீபத்தில் அதைப் பற்றிப் பேசிய பொழுது அவர் பின்வருமாறு கூறினார்: 'அமெரிக்காவிலும் கிரேட் பிரிட்ட

னிலும் ஒருவேளை பிரான்சிலும் இரத்தக்களறியான புரட்சி இல்லாமல் உழைப்பு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படலாம், ஆனால் ஜெர்மனியில், ருஷ்யாவில், இத்தாலியில் மற்றும் ஆஸ்திரியாவில் இரத்தம் சிந்தப்பட வேண்டியிருக்கும் என்று இப்பொழுது கார்ல் மார்க்ஸ் சொல்லியிருக்கிறார்' ''.

''ருஷ்யாவிலும் ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும்—இத்தாலியர்கள் இப்பொழுது பின்பற்றி வருகின்ற கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் ஒருவேளை இத்தாலியிலும்—இரத்தக்களறியான புரட்சி ஏற்படும் என்று எந்த சோஷலிஸ்டும் ஆரூடம் கூற வேண்டிய அவசியம் கிடையாது. பிரெஞ்சுப் புரட்சியில் நடைபெற்ற சம்பவங்கள் அந்த நாடுகளில் மறுபடியும் நடைபெறும். அரசியலை ஆராய்கின்ற எவருக்கும் இது தெரிந்ததே. ஆனால் அப்புரட்சிகள் பெரும்பான்மை மக்களால் நிறைவேற்றப்படும். புரட்சியை நிறைவேற்றுவது ஒரு கட்சியல்ல, ஆனால் ஒரு தேசம் அதை நிறைவேற்றும்''.

மூலம் ஆங்கில மொழியில்
எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

# கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்

### என்ற பிரசுரத்திலிருந்து

## III

...செயல் வன்மை வாய்ந்த சமூக சக்திகள், நாம் அவற்றைப் புரிந்து கொள்ளாமலும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும் இருக்கும் வரை இயற்கை சக்திகளைப் போலவே கண்மூடித்தனமாகவும் பலாத்காரமாகவும் நாசகரமாகவும் செயல்படுகின்றன. ஆனால் நாம் அவற்றைப் புரிந்து கொண்டதும், அவற்றின் செயலையும் திசைவழியையும் பலன்களையும் மனத்தால் பற்றிக் கொண்டதும், பிறகு அவற்றை மேலும் மேலும் நமது சித்தத்துக்குக் கீழ்ப்படியச் செய்து அவற்றைக் கொண்டு நமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வது முற்றிலும் நம்மையே பொறுத்ததாகும். முக்கியமாய் இது, பேராற்றல் கொண்ட இன்றைய உற்பத்தி சக்திகளுக்கு மிகவும் பொருந்துவதாகும். செயலுக்கான இந்தச் சமூகச் சாதனங்களின் தன்மையையும் இயல்பையும் புரிந்து கொள்ள நாம் பிடிவாதமாய் மறுக்கும் வரையில்—இவற்றைப் புரிந்து கொள்வது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பண்புக்கும் அதன் காவலர்களது மனப்பாங்குக்கும் முரணானது—இந்த சக்திகள் நம்மை மீறி, நமக்கு எதிராய்ச் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கும்; மேலே நாம் விவரமாய்க் காட்டியுள்ளது போல நம்மீது ஆதிக்கம் புரிந்து நம்மை ஆட்டிப்படைத்துக் கொண்டுதான் இருக்கும்.

ஆனால் அவற்றின் தன்மை புரிந்து கொள்ளப்பட்டதும், ஒன்றுபட்டு வேலை செய்யும் உற்பத்தியாளர்களுடைய கரங்களில், ஆட்டிப் படைக்கும் பூதங்களாய் ஆதிக்கம் புரியாமல், மனமுவந்து பணி புரியும் பணியாட்களாய் அவற்றை மாற்றிவிடலாம். இந்த வேறுபாடு புயலின் போது இடியிலுள்ள மின்விசை

யின் அழிவு சக்திக்கும் தந்தியிலும் வோல்ட்டா மின் வில்லிலும் பணிந்து செயல்படும் மின்விசைக்குமுள்ளது போன்றதாகும்; நாசம் விளைவிக்கும் பெருந்தீயிற்கும் மனிதனுக்குச் சேவை புரியும் நெருப்புக்குமுள்ளது போன்றதாகும். இன்றைய உற்பத்தி சக்திகளுடைய மெய்யான தன்மை முடிவாய் இவ்விதம் புரிந்துகொள்ளப்பட்டதும், பொருளுற்பத்தியின் சமூக அளவிலான அராஜகமானது ஒழிந்து, அதனிடத்தில் சமுதாயத்தின் தேவைகளுக்கும் ஒவ்வொரு தனி மனிதனின் தேவைகளுக்கும் ஏற்ப வரையறுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் பொருளுற்பத்தியின் சமூக அளவிலான ஒழுங்கியக்கம் கோலோச்சும். உற்பத்திப் பொருள் முதலில் உற்பத்தியாளரையும் பிறகு சுவிகரிப்பாளரையும் அடிமை செய்யும்படியான முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை மறைந்து, அதனிடத்தில் நவீன உற்பத்திச் சாதனங்களது தன்மையின் அடிப்படையில் உற்பத்திப் பொருள்கள் சுவிகரித்துக் கொள்ளப்படும் முறை அப்பொழுது உதித்தெழும். அதாவது, ஒரு புறத்தில், பொருளுற்பத்தியின் பராமரிப்புக்கும் விரிவாக்கத்துக்குமான சாதனங்களாய் நேரடியான சமூக சுவிகரிப்பையும், மறு புறத்தில், பிழைப்புக்கும் சுகானுபோகத்துக்குமான சாதனங்களாய் நேரடியாய்த் தனி மனித சுவிகரிப்பையும் அடிப்படையாய்க் கொண்ட சுவிகரிப்பு முறை உதித்தெழும்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை மக்கள் தொகையில் மிகப் பெரும்பாலோரை மேலும் மேலும் முழுமையாய்ப் பாட்டாளி வர்க்கத்தோராய் மாற்றும் அதேபோதில், தானே அழியாதிருக்க வேண்டுமாயின் இந்த மாற்றத்தைச் செய்து முடிக்கும்படியான கட்டாயத்துக்கு உள்ளாகும் ஒரு சக்தியையும் அது தோற்றுவிக்கிறது. ஏற்கெனவே சமூக மயமாகிவிட்ட பிரம்மாண்டப் பொருளுற்பத்திச் சாதனங்கள் மேலும் மேலும் அரசின் சொத்தாய் மாற்றப்படும்படி அது நிர்ப்பந்தம் செய்யும் அதே போதில், இந்த மாற்றத்தைச் செய்து முடிப்பதற்குரிய வழியையும் அது சுட்டிக் காட்டுகிறது. பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு, உற்பத்திச் சாதனங்களை அரசுச் சொத்தாய் மாற்றுகிறது.

ஆனால் இதன் மூலம் அது பாட்டாளி வர்க்கம் என்ற தனது நிலைக்கே முடிவு கட்டிக் கொள்கிறது, எல்லா வர்க்க

வேறுபாடுகளுக்கும் வர்க்கப் பகைமைகளுக்கும் முடிவு கட்டு கிறது, அரசு அரசாய் இருப்பதற்கும் முடிவு கட்டுகிறது. இது வரை சமுதாயம் வர்க்கப் பகைமைகளின் அடிப்படை யில் அமைந்திருந்ததால் அதற்கு அரசு தேவைப்பட்டது. அதாவது அந்தந்த காலத்திலும் சுரண்டும் வர்க்கமாய் இருக் கும் குறிப்பிட்ட வர்க்கத்துக்கான ஒழுங்கமைப்பு ஒன்று தேவைப்பட்டது; பொருளுற்பத்திக்காக நடப்பிலுள்ள நிலைமைகளில் வெளியார் தலையீடு எதுவும் இல்லாமல் தடுப் பதற்காகவும், இன்னும் முக்கியமாய், சுரண்டப்படும் வர்க் கங்களை அந்தந்தப் பொருளுற்பத்தி அமைப்புக்கும் (அடிமை முறை, பண்ணையடிமை முறை, கூலி உழைப்பு முறை) பொருத்தமான ஒடுக்குமுறை நிலையில் பலவந்தமாய் இருத்தி வைப்பதற்காகவும் ஒரு ஒழுங்கமைப்பு தேவைப்பட்டது. இந்த அரசு சமுதாயம் அனைத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதி யாக, கண்கூடான அதன் உருவகத் திரட்சியாக விளங்கிற்று. ஆனால் எந்த வர்க்கம் தன்னுடைய காலத்தில் சமுதாயம் முழுவதுக்கும் தானே பிரதிநிதியாக இருந்ததோ அந்த வர்க்கத்தின் அரசாய் இருந்த அளவுக்குத்தான், அதாவது புராதன காலத்தில் அடிமையுடைமைக் குடிகளின் அரசாக வும், மத்திய காலத்தில் பிரபுக்களின் அரசாகவும், நாம் வாழும் இக்காலத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசாக வும் இருந்த அளவுக்குத்தான், அரசால் இவ்வாறு விளங்க முடிந்தது. இறுதியில் அரசானது சமுதாயம் முழுமைக்கும் மெய்யான பிரதிநிதியாகும் போது, அது தன்னைத் தேவை யற்றதாக்கிக் கொள்கிறது. இனி கீழ்ப்படுத்தி வைக்க வேண் டிய சமூக வர்க்கம் எதுவும் இல்லாமற் போனதும், வர்க்க ஆதிக்கமும் பொருளுற்பத்தியில் தற்போதுள்ள அராஜகத்தின் அடிப்படையில் நடைபெறும் தனியார் வாழ்வுப் போராட்ட மும் இந்தப் போராட்டம் காரணமாய் எழும் மோதல்களும் மட்டுமீறிய செயல்களும் நீக்கப்பட்டதும், அடக்கி வைப் பதற்கு எதுவும் இல்லாமற் போகிறது, ஆதலால் தனிவகை அடக்குமுறை சக்தியான அரசுக்கு இனி அவசியம் இல்லாமற் போகிறது. அரசானது மெய்யாகவே சமுதாயம் முழுதுக்கும் பிரதிநிதியாய் முன்வந்து புரிந்திடும் முதலாவது செயல் —அதாவது உற்பத்திச் சாதனங்களைச் சமுதாயத்தின் உடை மையாக்கிக் கொள்ளும் இச்செயல்—அரசு என்ற முறையில் சுயேச்சையாய் அது புரிந்திடும் இறுதிச் செயலாகவும்

அமைந்துவிடுகிறது. சமூக உறவுகளில் அரசின் தலையீடு ஒவ்வொரு துறையாய்த் தேவையற்றதாகி, பிறகு தானாகவே தணிந்து அணைந்துவிடுகிறது. ஆட்களை ஆளும் அரசாங்கமானது பொருள்களது நிர்வாகமாய், பொருளுற்பத்தி வேலைகளது நடப்பாய் மாறிவிடுகிறது. அரசு ''ஒழிக்கப்படுவதில்லை'', அது உலர்ந்து உதிர்ந்துவிடுகிறது. ''சுதந்திர மக்கள் அரசு''[91] என்னும் தொடர் எந்த அளவுக்கு மதிக்கத்தக்கது என்பதையும்—கிளர்ச்சியை முன்னிட்டு சில நேரங்களில் எந்த அளவுக்கு அதன் பிரயோகம் நியாயமென்பதையும், முடிவில் விஞ்ஞான வழியில் அது எவ்வளவு குறைபாடானதென்பதையும், மற்றும் அராஜகவாதிகளுடைய கோரிக்கையாகச் சொல்லப்படும் ஒரே நொடியில் அரசு ஒழிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எந்த அளவுக்கு மதிக்கத்தக்கது என்பதையும் மேற்கூறியது புலப்படுத்துகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வரலாற்றில் உதித்தெழுந்தது முதலாகவே, உற்பத்திச் சாதனங்கள் யாவும் சமுதாயத்தால் சுவிகரிக்கப்பட வேண்டுமென்பது தனி மனிதர்களும் மற்றும் தனிக் குழுவினரும் அவ்வளவாய்த் தெளிவின்றி அடிக்கடி கண்டு வந்த ஒரு கனவாகவும், வருங்காலத்துக்குரிய இலட்சியமாகவும் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இது சித்தி பெறுவதற்கு வேண்டிய எதார்த்த நிலைமைகள் தோன்றிய பிறகே இது சாத்தியமாக முடியும், வரலாற்று வழியில் அவசியமாக முடியும். ஏனைய எந்தச் சமூக முன்னேற்றத்தையும் போல இதுவும் குறிப்பிட்ட புதிய பொருளாதார நிலைமைகள் ஏற்படுவதன் காரணமாய் நடைமுறை சாத்தியமாக முடியுமே அன்றி, வர்க்கங்கள் இருப்பது நீதிக்கும் சமத்துவத்துக்கும் இன்ன பிறவற்றுக்கும் முரணுகுமென்று மனிதர்கள் உணர்கின்றனர், இந்த வர்க்கங்களை ஒழிக்க விரும்புகிறார்கள் என்பதால் மட்டும் அல்ல. சுரண்டும் வர்க்கமாகவும் சுரண்டப்படும் வர்க்கமாகவும், ஆளும் வர்க்கமாகவும் ஒடுக்கப்பட்ட வர்க்கமாகவும் சமுதாயம் பிளவுண்டதானது, முற்காலத்தில் பொருளுற்பத்தியின் வளர்ச்சி போதாததாகவும் குறுகிய வரம்புக்குட்பட்டதாகவும் இருந்ததால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத விளைவாகும். மொத்த சமூக உழைப்பால் கிடைக்கும் உற்பத்திப் பொருள்கள் எல்லோருடைய உயிர் வாழ்வுக்கும் வேண்டிய அத்தியாவசிய அளவைக் காட்டிலும் சொற்ப

அளவே அதிகமாயிருக்கும் வரை, இதன் காரணமாய்ச் சமுதாயத்தின் உறுப்பினர்களில் மிகப் பெருவாரியானோரின் முழு நேரமும், அல்லது அனேகமாய் முழு நேரமும் உழைப்புக்காக வேண்டியிருக்கும் வரையில், இந்தச் சமுதாயம் தவிர்க்க முடியாதவாறு வர்க்கங்களாய்ப் பிளவுற்றிருக்க வேண்டியதாகிறது. முற்றிலும் உழைப்பிலே மட்டும் ஈடுபட வேண்டிய கொத்தடிமைகளான மிகப் பெருவாரியுடன் கூடவே நேரடியான பொருளுற்பத்திக்குரிய உழைப்பிலிருந்து விடுபட்ட ஒரு வர்க்கம் தோன்றி, உழைப்பை நெறிப்படுத்தல், அரசு, சட்டம் விஞ்ஞானம், கலை விவகாரங்கள் போன்ற சமுதாயத்தின் பொது அலுவல்களைக் கவனித்து வருகிறது. ஆகவே உழைப்புப் பிரிவினை விதிதான் வர்க்கப் பிரிவினைக்கு அடிப்படையாய் அமைகிறது. ஆனால் இந்த வர்க்கப் பிரிவினை பலாத்காரத்தாலும் கொள்ளையாலும் சூது முறையாலும் மோசடியாலும் நிலைநாட்டப்படவில்லை என்பதல்ல இதற்கு அர்த்தம். ஆதிக்க நிலை பெற்றதும் ஆளும் வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தின் செலவில் தனது ஆதிக்கத்தை உறுதியாக்கிக் கொள்ளவில்லை என்றோ, சமுதாயத்தில் தனக்கிருந்த தலைமைப் பதவியைப் பெருந்திரள் மக்கள் மீதான கொடும் சுரண்டலாய் மாற்றிக் கொள்ளவில்லை என்றோ இதற்கு அர்த்தமல்ல.

ஆனால் வர்க்கப் பிரிவினைக்கு இந்த விதத்தில் வரலாற்று வழியில் ஓரளவு நியாயம் உண்டெனில், குறிப்பிட்ட காலக் கூறில் மட்டும்தான், குறிப்பிட்ட சமூக நிலைமைகளில் மட்டும் தான் இப்படி அது நியாயமாகும். இதற்குப் பொருளுற்பத்தியின் போதாமையே அடிப்படையாய் இருந்தது. இது நவீன உற்பத்தி சக்திகளுடைய முழு வளர்ச்சியால் துடைத்தெறியப்பட்டுவிடும். உண்மையில் சமுதாயத்தில் வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதற்கு வரலாற்று வழியிலான பரிணும வளர்ச்சி குறிப்பிட்ட ஓர் அளவுக்கு இருப்பது முன்னிபந்தனை ஆகும்; இந்தப் பரிணும வளர்ச்சி ஏற்பட்டதும், குறிப்பிட்ட இந்த அல்லது அந்த ஆளும் வர்க்கம் மட்டுமின்றி, ஆளும் வர்க்கம் என்பதாய் எதுவும் இருப்பதும், ஆகவே வர்க்கப் பாகுபாடு இருப்பதும் காலங் கடந்து போய் சிறிதும் ஒவ்வாதனவாகிவிடும். சமுதாயத்தின் எந்த வர்க்கமும் உற்பத்திச் சாதனங்களையும் உற்பத்திப் பொருள்களையும் சுவிகரித்துக் கொள்வதும், அதோடுகூட அரசியல் ஆதிக்கம்

செலுத்துவதும், கலாசார ஏகபோகமும் அறிவுத் துறைத் தலைமைப் பதவியும் வகிப்பதும் தேவையற்றதாவதுடன் வளர்ச்சிக்குப் பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் அறிவுத்துறை வழியிலும் இடையூறுகிவிடும்படியான அளவுக்குப் பொருளுற்பத்தி வளர்ச்சியுறுவது வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதற்குரிய முன்னிபந்தனை ஆகும்.

இந்த வளர்ச்சி நிலை தற்போது எய்தப் பெற்றுவிட்டது. அரசியல் துறையிலும் அறிவுத் துறையிலும் முதலாளித்துவ வர்க்கம் கையாலாகாததாகிவிட்டது என்பது முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு இனி ஓர் இரகசியமாய் இருப்பதாய்க்கூற முடியாது. இவ்வர்க்கத்தாரின் பொருளாதாரக் கையாலாகாமை பத்தாண்டுக்கு ஒரு தரம் முறையாய் வெளிப்பட்டு வருகிறது.ஒவ்வொரு தரமும் நெருக்கடியின் போது சமுதாயம்அதனுடைய உற்பத்தி சக்திகள், உற்பத்திப் பொருள்களது சுமையின் கீழ் திணறித் திக்குமுக்காடுகிறது. இந்த உற்பத்தி சக்திகளையும் உற்பத்திப் பொருள்களையும் சமுதாயம் உபயோகித்துக் கொள்ள முடியவில்லை; உற்பத்தியாளர்களுக்கு நுகர ஏதுமில்லை, ஏனென்றால் நுகருவோர் போதுமான பேர் இல்லை என்னும் இந்த ஆபத்த முரண்பாட்டின் முன்னால் ஒன்றும் செய்ய இயலாததாய் நிற்கிறது.உற்பத்திச் சாதனங்களுடைய விரிவகற்சியின் வலிமை, முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை இவற்றுக்குப் போட்டுள்ள கட்டுகளை உடைத்தெறிகிறது. இந்தக் கட்டுகளிலிருந்து உற்பத்திச் சாதனங்கள் விடுதலை பெறுவது, உற்பத்தி சக்திகள் இடையறுமலும் மேலும் மேலும் கூடுதலான வேகத்திலும் வளர்ச்சி பெறுவதற்கும், இவ்விதம் பொருளுற்பத்தி அனேகமாய் வரம்பின்றி பெருகிச் செல்வதற்குமான ஒரேயொரு முன்னிபந்தனையாகும். இது மட்டுமல்ல. உற்பத்திச் சாதனங்களைச் சமுதாயம் சுவிகரித்துக் கொள்வதானது, தற்போது பொருளுற்பத்திக்கு இருந்து வரும் செயற்கையான தடைகளை ஒழித்துக் கட்டுவதோடுகூட, இன்று பொருளுற்பத்தியின் தவிர்க்க முடியாத உடனிணைவுகளாகி, நெருக்கடிகளின் போது உச்சநிலைக்கு உக்கிரமாகிவிடும் உற்பத்தி சக்திகள், உற்பத்திப் பொருள்களது அப்பட்டமான விரயத்துக்கும் அழிவுக்கும் முடிவு கட்டிவிடும். தவிரவும் இன்றைய ஆளும் வர்க்கங்களும் அவற்றின் அரசியல் பிரதிநிதிகளும் புரிந்து வரும் அர்த்தமற்ற அடாவடியான ஊதாரித்தனத்துக்கு

முடிவு கட்டுவதன் மூலம் அது பொதுவில் சமுதாயத்துக்குப் பெரிய அளவில் உற்பத்திச் சாதனங்களையும் உற்பத்திப் பொருள்களையும் விடுவித்துக் கொடுக்கும். சமூகமயமான பொருளுற்பத்தி மூலம் சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொருளாயத நிலையில் முற்றிலும் போதுமானதும், நாளுக்கு நாள் மேலும் பூரணமாகி வருவதுமான வாழ்வை மட்டுமின்றி, எல்லோருக்கும் தமது உடல் ஆற்றல்களும் உள்ளத்து ஆற்றல்களும் தங்குதடையின்றி வளர்ச்சியடைவதற்கும் செயல்படுவதற்கும் உத்தரவாதம் செய்யும் வாழ்வையும் கிடைக்கச் செய்வதற்கான சாத்தியப்பாடு முதன் முதலாய் இப்பொழுது இருப்பதோடு கைவரப் பெறவும் செய்கிறது.*

உற்பத்திச் சாதனங்களைச் சமுதாயம் கைப்பற்றிக் கொண்டதும், பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திக்கு முடிவு கட்டப்பட்டுவிடுகிறது, இதனுடன் கூடவே உற்பத்தியாளரை உற்பத்திப் பொருள் அடக்கி ஆண்மை செலுத்துவதும் ஒழிந்துவிடுகிறது. சமூகப் பொருளுற்பத்தியில் அராஜகம் அகற்றப்பட்டு, முறைப்படியான, திட்டவட்டமான ஒழுங்கமைப்பு உண்டாக்கப்படுகிறது. தனி மனிதனின் வாழ்வுப் போராட்டம் மறைகிறது. இதன்பின் முதன்முதலாய் மனிதன் ஒரு வகை அர்த்தத்தில் விலங்கின உலகிலிருந்து முடிவாய்த் துண்டித்துக் கொண்டு, விலங்கின வாழ் நிலைமை

---

* முதலாளித்துவ ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்துங்கூட நவீன உற்பத்திச் சாதனங்களது பிரம்மாண்ட விரிவகற்சி வலிமையைக் குத்துமதிப்பாய் உணர்த்துவதற்கு ஒரு சில புள்ளிவிவரங்களைக் குறிப்பிடலாம். திரு. ஜிஃபென் தரும் மதிப்பீடுகளின்படி, கிரேட் பிரிட்டன், அயர்லாந்து இவற்றின் மொத்தச் செல்வம் முழுத் தொகைகளில்,

*1814*ல்—*220,00,00,000* பவுனுகவும்
*1865*ல்—*610,00,00,000* ,,
*1875*ல்—*850,00,00,000* ,,

இருந்தது.

நெருக்கடியின் போது உற்பத்திச் சாதனங்களும் உற்பத்திப் பொருள்களும் விரயமாக்கப்படுவதற்கு ஓர் உதாரணம்: *1873-78*ஆம் ஆண்டுகளின் நெருக்கடியின் போது, ஜெர்மன் இரும்புத் தொழிலில் மட்டும், இரண்டாவது ஜெர்மன் தொழில் துறை காங்கிரசில் (பெர்லின், *1878* பிப்ரவரி *21*) தரப்பட்ட விவரங்களின்படி, *2,27,50,000* பவுன் மொத்த நஷ்டம் உண்டாயிற்று.

களிலிருந்து வெளிப்பட்டு மெய்யான மனித வாழ் நிலைமைகளினுள் பிரவேசிக்கிறான். மனிதனது சுற்றுச்சார்பாய் அமைந்து இதுகாறும் மனிதனை ஆட்சி புரிந்து வந்த வாழ் நிலைமைகளது முழு அரங்கும் இப்பொழுது மனிதனுடைய ஆதிக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டுவிடுகிறது; முதன்முதலாய் மனிதன் இயற்கையின் மெய்யான, உணர்வு பூர்வமான அதிபதி ஆகின்றான், ஏனெனில் இப்பொழுது அவன் தனது சமூக ஒழுங்கமைப்பை ஆட்சி புரியும் எஜமானன் ஆகிவிடுகின்றான். அவனுடைய சமூகச் செயற்பாடுகளின் விதிகள், இதுகாறும் இயற்கை விதிகளாய் அவனுக்கு அன்னியமாய் இருந்து ஆதிக்கம் செலுத்தி அவனை ஆட்டிப் படைத்த இந்த விதிகள், இனி அவனால் பூரணமாய் உணரப்பட்டுப் பயன்படுத்திக் கொள்ளப்படும்; ஆகவே மனிதன் இவற்றின் மீது ஆண்மை செலுத்துகிறவன் ஆகிவிடுவான். இயற்கையாலும் வரலாற்றாலும் அவனுக்கு விதிக்கப்பட்ட இன்றியமையா அவசியமாய் இதுகாறும் அவனை எதிர்நோக்கிய மனித சமூக ஒழுங்கமைப்பு இப்பொழுது அவனுடைய சுதந்திரமான சொந்த செயலின் விளைவாகிவிடுகிறது. இதுவரை வரலாற்றை ஆட்சி புரிந்த வெளிப்புறத்தே அமைந்த புறநிலை சக்திகள் நேரடியாய் மனிதனது கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. அது முதல்தான் மனிதன் மேலும் மேலும் உணர்வு பூர்வமாய்த் தனது வரலாற்றைத் தானே படைப்பவனாவான்; அது முதல்தான் அவனால் இயக்கிவிடப்படும் சமூகக் காரணங்கள் பிரதானமாகவும், மேலும் மேலும் கூடுதலான அளவிலும் அவன் விரும்பிய பலன்களை அளித்திடமுற்படும். அவசியத்தின் ஆட்சியிலிருந்து சுதந்திரத்தின் ஆட்சிக்கு மனிதன் வளர்ந்து உயருவதை இது குறிப்பதாகும்.

வரலாற்று பரிணாம வளர்ச்சி குறித்து நாம் கூறியதைச் சுருக்கமாய்த் தொகுத்தளிப்போம்:

**I. மத்திய காலச் சமுதாயம்**—தனிப்பட்டோரது சிறு வீதப் பொருளுற்பத்தி. உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்டோரது உபயோகத்துக்கு ஏற்றனவாய் இருக்கின்றன; ஆகவே புராதனமாய், செப்பமற்றனவாய், சின்னஞ்சிறியனவாய், செயலில் சிறுதிறத்தனவாய் இருக்கின்றன. நேரே உற்பத்தியாளர் அல்லது அவருடைய பிரபுத்துவக் கோமா

னது உடனடி நுகர்வுக்காகப் பொருளுற்பத்தி நடைபெறுகிறது. இந்த நுகர்வுக்கும் கூடுதலாய் உற்பத்தி செய்யப்படும் போதுதான் இந்த உபரிப் பொருள் விற்கப்படுகிறது; பரிவர்த்தனைக்கு வருகிறது. ஆகவே பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி பிள்ளைப் பருவத்திலேதான் இருக்கிறது. ஆனால், பொதுவில் சமுதாயத்தின் பொருளுற்பத்தியிலான அராஜகத்தை அது ஏற்கெனவே தன்னுள் கருவடிவில் கொண்டுள்ளது.

**II.** முதலாளித்துவப் புரட்சி—தொழில் துறை மாற்றியமைக்கப்படுதல்; முதலில் எளிய கூட்டுறவு அமைப்பு, பட்டறைத் தொழில் இவற்றின் மூலம் இது நடைபெறுகிறது. இதுகாறும் சிதறிக் கிடந்த உற்பத்திச் சாதனங்கள் பெரிய தொழிலகங்களாய் ஒன்றுகுவிகின்றன. தனி ஆட்களது உற்பத்திச் சாதனங்களாய் இருந்தவை இதன் விளைவாய்ச் சமூக உற்பத்திச் சாதனங்களாய் மாற்றப்படுகின்றன. ஆனால் இந்த மாற்றத்தால் மொத்தத்தில் பரிவர்த்தனையின் வடிவம் பாதிக்கப்பட்டுவிடவில்லை. பழைய சுவிகரிப்பு முறைகள் மாற்றமின்றி அப்படியே செயல்பட்டு வருகின்றன. முதலாளி உதித்தெழுகிறார். உற்பத்திச் சாதனங்களுடைய உடைமையாளர் என்ற முறையில் உற்பத்திப் பொருள்களை இம்முதலாளி தாமே அபகரித்துக் கொண்டு அவற்றைப் பரிவர்த்தனைப் பண்டங்களாய் மாற்றிவிடுகிறார். பொருளுற்பத்தி சமூகச் செயலாகிவிட்டது. பரிவர்த்தனையும் சுவிகரிப்பும் தொடர்ந்து தனி ஆள் செயல்களாய், தனிப்பட்டோரது செயல்களாய் இருந்து வருகின்றன. சமூக உழைப்பினாலான உற்பத்திப் பொருள் தனிப்பட்ட முதலாளியால் சுவிகரித்துக் கொள்ளப்படுகிறது. இந்த அடிப்படை முரண்பாட்டிலிருந்துதான், நமது இன்றைய சமுதாயத்துக்கு உரியவையான எல்லா முரண்பாடுகளும், நவீனத் தொழில் துறையால் பகிரங்கமாக்கப்படும் இந்த எல்லா முரண்பாடுகளும் எழுகின்றன.

அ. உற்பத்தியாளர் உற்பத்திச் சாதனங்களிலிருந்து துண்டித்து விலக்கப்படுதல். தொழிலாளி ஆயுள் முழுதும் கூலியுழைப்பில் உளையும்படிச் சபிக்கப்படுதல். பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான பகைமை.

ஆ. பரிவர்த்தனைப் பண்டங்களின் உற்பத்தியை ஆட்சி புரியும் விதிகள் மேன்மேலும் தலைமையாதிக்கம் பெறுதலும்,

மேன்மேலும் பயனுறுதி மிக்கனவாதலும். கட்டுக்கு அடங்காப் போட்டாபோட்டி. தனிப்பட்ட ஆலையில் பொருளுற்பத்தியின் சமூகமயமான ஒழுங்கமைப்புக்கும் பொதுவில் பொருளுற்பத்தியிலான சமூக அராஜகத்துக்கும் இடையிலாகிய முரண்பாடு.

இ. ஒரு புறத்தில், தனிப்பட்ட பட்டறை அதிபர் ஒவ்வொருவருக்கும் போட்டாபோட்டியினுல் இயந்திரச் சாதனங்கள் மேலும் மேலும் செம்மை செய்யப்படுதல் கட்டாயமாகுதலும் இதைத் தொடர்ந்து மேலும் மேலும் அதிகமான தொழிலாளர்கள் வேலையில்லாதோராய் ஆக்கப்படுதலும். தொழில் துறை சேமப் பட்டாளம். மறு புறத்தில், பொருளுற்பத்தி வரம்பின்றி பெருகிச் செல்தல்—இதுவும் போட்டாபோட்டியினுல் ஒவ்வொரு பட்டறை அதிபருக்கும் கட்டாயமாகிவிடுகிறது. இப்படி இரு வழிகளிலும் உற்பத்தி சக்திகள் என்றுமில்லாதபடி வளர்ச்சியடைந்து ஓங்குதல், அளிப்பானது [supply] சந்தைத் தேவைக்கு [demand] விஞ்சியதாகி உபரியாதல், அமிதமான உற்பத்தி, பண்டங்கள் குவிந்து சந்தைகள் திணறித் திக்குமுக்காடுதல், பத்தாண்டுக்கு ஒரு தரம் நெருக்கடி, நச்சுச் சுழல்: இங்கே உற்பத்திச் சாதனங்களும் உற்பத்திப் பொருள்களும் அமிதமாகிவிட்டன—அங்கே தொழிலாளர்கள் அமிதமாகி வேலையின்றி, பிழைப்புச் சாதனங்களின்றி நிற்கின்றனர். பொருளுற்பத்திக்கும் சமுதாயத்தின் நல்வாழ்வுக்குமான இந்த இரு நெம்புகோல்களும் ஒன்றுகூடிச் செயல்பட முடியவில்லை, ஏனென்ருல் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை உற்பத்தி சக்திகளைச் செயல்படாமலும், உற்பத்திப் பொருள்களைப் புழங்கவிடாமலும் தடுக்கின்றது; முதலில் அவை மூலதனமாய் மாற்றப்பட வேண்டுமென்று கோருகிறது — ஆனுல் அவற்றின் அதீத அபரிமிதமே அவற்றை மூலதனமாய் மாற முடியாதபடி தடுக்கின்றது. இந்த முரண்பாடு ஓர் அபத்தமாய் வளர்ந்துவிட்டது. பொருளுற்பத்தி முறை பரிவர்த்தனை முறையை எதிர்த்துக் கலகம் புரிகின்றது. முதலாளித்துவ வர்க்கம் தொடர்ந்து தமது சமூகப் பொருளுற்பத்தி சக்திகளை நிர்வகிக்கத் திறனற்றதாகிவிட்டது என்பது நிரூபிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

ஈ. உற்பத்தி சக்திகளுடைய சமூக இயல்பைப் பகுதி அளவுக்கு அங்கீகரிக்கும்படியான பலவந்தம் முதலாளிகளுக்கே ஏற்படுகிறது. பொருளுற்பத்திக்கும் போக்குவரத்

துக்குமான மாபெரும் நிலையங்கள் முதலில் கூட்டுப் பங்குக் கம்பெனிகளும், பிறகு டிரஸ்டுகளும், அதன்பின் அரசும் ஆகியவற்றின் சொத்தாய் மாற்றப்படுதல். முதலாளித்துவ வர்க்கம் தேவையற்ற வர்க்கம் என்பது கண்கூடாகப்படுகிறது. அதனுடைய சமூக வேலைகளும் இப்பொழுது சம்பளச்சிப்பந்திகளால் செய்யப்படுகின்றன.

**III.** பாட்டாளி வர்க்கப் புரட்சி — முரண்பாடுகளுக்குத் தீர்வு ஏற்படுகின்றது. பாட்டாளி வர்க்கம் பொது ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்கிறது. முதலாளித்துவ வர்க்கத்தின் கைகளிலிருந்து நழுவிக் கொண்டிருக்கும் சமூகமயமான உற்பத்திச் சாதனங்களை இவ்விதம் அது பொதுச் சொத்தாய் மாற்றுகின்றது. இந்தச் செயலின் மூலம் பாட்டாளி வர்க்கம் உற்பத்திச் சாதனங்களை அவை இதுகாறும் தாங்கியிருந்த மூலதன இயல்பிலிருந்து விடுவித்து, அவற்றின் சமூக இயல்பு செயல்படுவதற்கு முழுச் சுதந்திரம் அளிக்கின்றது. சமூகமயமான பொருளுற்பத்தி இனி முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் நடைபெறுவது சாத்தியமாகின்றது. பொருளுற்பத்தியின் வளர்ச்சியானது சமுதாயத்தில் வெவ்வேறு வர்க்கங்கள் இருத்தலை இனி காலத்துக்கு ஒவ்வாததாக்குகின்றது. சமூகப் பொருளுற்பத்தியில் அராஜகம் எவ்வளவுக்கு எவ்வளவு மறைகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அரசின் அரசியல் அதிகாரம் மடிந்து செல்கிறது. முடிவில் தனக்கு உரித்தான சமூக ஒழுங்கமைப்பை ஆட்சி புரியும் எஜமானனாகிவிடும் மனிதன், அதே போதில் இயற்கையின் அதிபதியும் ஆகி, தானே தனக்கு எஜமானன் ஆகின்றான்—அதாவது சுதந்திரமடைகின்றான்.

உலகளாவிய இந்த விடுதலைப் பணியைச் செய்து முடிப்பது நவீனப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையாகும். இந்தச் செயலுக்கான வரலாற்று நிலைமைகளையும், அதோடு கூடவே இதன் தன்மையையும் தீர்க்கமாய்ப் புரிந்து கொண்டு, தற்போது ஒடுக்கப்பட்டதாய் இருக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு இந்த நிலைமைகளையும், அது செய்து முடிக்க வேண்டிய சகாப்தகரச் சிறப்புடைத்த இந்தப் பணியின் முக்கியத்துவத்தையும் முழு அளவில் தெரியப்படுத்துவதுதான், பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தத்துவார்த்த வெளியீடாகிய விஞ்ஞான சோஷலிசத்தின் கடமை.

ஜனவரி—மார்ச் 1880இல்
எழுதப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

# பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டத்தின் முன்னுரை[92]

*உற்பத்தியாளர்கள் என்ற வர்க்கத்தின் விடுதலை இனம் அல்லது பால்வேறுபாடு இல்லாமல் அனைத்து மனிதகுலத்தின் விடுதலையாகும்;*

*உற்பத்தியாளர்களுக்கு உற்பத்திச் சாதனங்கள் உடைமையாகின்ற பொழுது மட்டுமே அவர்கள் சுதந்திரமானவர்களாக முடியும்;*

*உற்பத்திச் சாதனங்கள் இரண்டு வடிவங்களில் மட்டுமே அவர்களுடைய உடைமையாக இருக்க முடியும்:*

*1) தனிப்பட்ட வடிவத்தில்—அது பொது நிகழ்வு என்ற முறையில் ஒரு போதும் இருந்ததில்லை, தொழில்துறையின் முன்னேற்றத்தில் அது மேன்மேலும் அதிகமாக அகற்றப்பட்டு வருகிறது;*

*2) கூட்டுடைமை வடிவத்தில்—அதன் பொருளாயத மற்றும் அறிவுத்துறைக் கூறுகளை முதலாளித்துவ சமூகத்தின் வளர்ச்சியே படைத்துக் கொண்டிருக்கிறது;*

*என்பனவற்றை மனதில் கொண்டு, ஒரு சுயேச்சையான அரசியல் கட்சியாக அமைக்கப்பட்ட உற்பத்தியாளர்களின் வர்க்கம் அதாவது பாட்டாளி வர்க்கத்தினரின் புரட்சிகரமான நடவடிக்கையில் மட்டுமே இவ்விதமான கூட்டுடைமைச் சுவீகரிப்பு நடைபெற முடியும்;*

*அத்தகைய ஸ்தாபனத்தை அமைப்பதற்குப் பொது வாக்குரிமை—இது வரை மோசடியின் கருவியாக இருந்த நிலைமையிலிருந்து அது விடுதலையின் கருவியாக மாற்றப்பட்டிருக்கிறது — உள்பட பாட்டாளி வர்க்கத்துக்குக் கிடைக்கக் கூடிய எல்லாச் சாதனங்களையும் உபயோகிக்க முயற்சிப்பது அவசியம்;*

என்பனவற்றை மனதில் கொண்டு,

பொருளாதார மட்டத்தில் எல்லா உற்பத்திச் சாதனங்களிலும் கூட்டுடைமையை ஏற்படுத்துவதைத் தங்களுடைய இறுதி லட்சியமாக முன்வைத்திருக்கும் பிரெஞ்சு சோஷலிஸ்டுத் தொழிலாளர்கள் அமைப்பு மற்றும் போராட்டச் சாதனம் என்ற முறையில் பின்வரும் குறைந்தபட்ச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தேர்தல்களில் பங்கெடுப்பதென்று முடிவு செய்கிறார்கள்.

1880 மே மாதத்தின் தொடக்கத்தில் எழுதப்பட்டது

மூலம் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

# ஹேக்கிலிருந்த ஃபெர்டிஞண்டு டமெலா நியூவென்ஹைசுக்கு எழுதிய கடிதத்திலிருந்து

**லண்டன், பிப்ரவரி 22, 1821**

...*நீங்கள் எனக்குத் தெரிவிக்கின்ற ''பிரச்சினை'', அதாவது சீக்கிரத்தில் நடைபெறவிருக்கும் ஜூரிக் காங்கிரஸ் பிரச்சினை ஒரு தவறு என்று எனக்குத் தோன்றுகிறது. எதிர் காலத்தில் திட்டவட்டமான, குறிப்பிடப்பட்ட தருணத்தில் என்ன செய்ய வேண்டும்,* **உடனடியாக** *என்ன செய்ய வேண்டும் என்பது ஒருவர் செயலில் ஈடுபட வேண்டிய குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளை முற்றிலும் பொறுத்திருக்கிறது என்பது மெய்யே. எனினும் இந்தப் பிரச்சினை* **''மேகங்களில்''** *முன்வைக்கப்படுகிறது, ஆகவே அது மெய்யாகவே மாயமான தோற்றத்தைக் கொண்ட பிரச்சினையே. அந்தப்* **பிரச்சினையையே விமர்சனம்** *செய்வது தான் அதற்கு ஒரே பதிலாக இருக்க முடியும். ஒரு சமன்பாட்டின் இனங்கள் அதன் தீர்வின் கூறுகளைக் கொண்டிருக்கவில்லை என்றால் அதனைத் தீர்க்க முடியாது.... மக்களின் வெற்றியின் மூலம் திடீரென்று ஏற்பட்டிருக்கும் அரசாங்கத்தின் கஷ்டங்களில் பிரத்யேகமான ''சோஷலிஸ்ட் தன்மை'' என்று ஒன்றுமே கிடையாது. அதற்கு மாறாகவே இருக்கும். முதலாளி வர்க்க அரசியல் வாதிகள் வெற்றியடைந்த உடனே தங்களுடைய வெற்றியினால் சங்கடமடைகிறார்கள். ஆனால் சோஷலிஸ்டுகள் குறைந்த பட்சம் எந்தச் சங்கடமும் இல்லாமல் வேலை செய்ய முடிகிறது. மற்றவை எப்படி இருப்பினும் நீங்கள் ஒரு விஷயத்தைப் பற்றி நிச்சயமாக நம்பலாம்: நிரந்தரமான நடவடிக்கைக்கு முதலில் அத்தியாவசியமானதாகிய முதலாளி வர்க்கத்தின் பெருந்திரளினரைப் போதுமான அளவுக்கு பயமுறுத்தி அவகாசம் பெறுவதற்குத் தேவை*

யான நடவடிக்கைகளை உடனடியாகச் செய்யக் கூடிய அள வுக்கு நிலைமைகள் முதிர்ச்சி அடையாத நாட்டில் சோஷ லிஸ்ட் அரசாங்கம் ஆட்சிக்கு வருவது இயலாது.

ஒரு வேளை நீங்கள் என்னிடம் பாரிஸ் கம்யூனைச் சுட்டிக் காட்டலாம். ஆனால் இது அசாதாரணமான நிலைமைகளில் ஒரு நகரத்தின் புரட்சிகரமான எழுச்சி மட்டுமே என்ற உண்மை ஒரு புறமிருக்க, கம்யூனில் பெரும்பான்மையினர் சோஷலிஸ்டுகள் அல்ல, அப்படி இருக்கவும் முடியாது. எனினும் சிறிதளவு பொது அறிவைக் கொண்டேனும் அது வெர்சேயுடன் மக்கள் பெருந்திரளினர் அனைவருக்கும் உபயோகமுள்ள சமரசத்துக்கு வந்திருக்க முடியும் —அந்தச் சமயத்தில் சாத்தியமாக இருந்த ஒரே விஷயம் அதுவே. பாங்க் ஆப் பிரான்சின் இருப்புக்களைக் கைப்பற்றுவது வெர் சேய் நபர்களின் அகம்பாவத்தை பயமுறுத்தி முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மிகவும் போதுமானதாக இருந்திருக் கும், இதரவை, இதரவை.

1789ம் வருடத்துக்கு முன்பு பிரெஞ்சு முதலாளி வர்க் கத்தின் பொதுவான கோரிக்கைகள் முதலாளித்துவ உற்பத்தி முறையைக் கொண்ட எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கின்ற இன்றைய பாட்டாளி வர்க்கத்தின் முதன்மையான, உடனடியான கோரிக்கைகளைப் போன்ற அதே முறையில்—அவசியமான மாறுதல்களுடன்—வரை யறுக்கப்பட்டிருந்தன. பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தின் கோரிக்கைகள் எப்படி பலவந்தமாக நிறைவேற்றப்படும் என்று 18ம் நூற்றூண்டைச் சேர்ந்த எந்த ஒரு பிரெஞ்சுக் காரருக்காவது மனநிச்சயவாத முறையில் முன்பே மிகச் சிறிதளவான கருத்தாவது இருந்ததுண்டா? எதிர்காலப் புரட்சியின் நடவடிக்கைத் திட்டத்தைக் கோட்பாட்டுவாத மற்றும் தவிர்க்க முடியாத விசித்திரமான முறையில் எதிர் பார்ப்பது நிகழ்காலத்துக்கான போராட்டத்திலிருந்து ஒரு வரைத் திருப்பிவிடுவதை மட்டுமே செய்கிறது. உலகத்தின் முடிவு சமீபித்துவிட்டது என்ற கற்பனை ரோமானியப் பேரரசுக்கு எதிரான போராட்டத்தில் தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு உத்வேகமூட்டியது; தங்களுடைய வெற்றி யில் அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. சமூகத்தில் ஆதிக்கம் வகிக்கின்ற அமைப்பின் தவிர்க்க முடியாத சிதைவு நம் கண்களுக்கு முன்னால் தொடர்ச்சியாக நடைபெற்றுக்

கொண்டிருக்கிறது. இச்சிதைவைப் பற்றிய விஞ்ஞான ரீதியான நுண்ணறிவு, பழைய பேய் அரசாங்கங்கள் பெருந்திரளான மக்களை விரட்டியடிப்பதால் ஏற்படுகின்ற ஆவேசம் மேன்மேலும் அதிகரிப்பது மற்றும் உற்பத்திச் சாதனங்களின் பிரம்மாண்டமான ஆக்கபூர்வமான வளர்ச்சி ஒரே சமயத்தில் நடைபெறுதல் — உண்மையான பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடித்த உடனே அதன் உடனடியான, அடுத்த வழிமுறையின் நிலைமைகள் (இவை நிச்சயமாக அழகு மிகுந்திருக்கப் போவதில்லை) ஏற்பட்டுவிடும் என்பதற்கு இவை அனைத்தும் போதிய உத்தரவாதமாகும்.

மூலம் ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

# சமூகத்தின் அவசியமான வர்க்கங்களும் மிகையான வர்க்கங்களும்

சமூகத்திலுள்ள வெவ்வேறு வர்க்கங்கள் எந்த அளவுக்கு உபயோகமாக—அல்லது அவசியமாகக் கூட—இருக்கின்றன என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. இதற்கு பதில் சரித்திர ரீதியில் ஒவ்வொரு வேறுபட்ட சகாப்தத்துக்கும் ஒவ்வொரு விதமாக இருந்தது இயற்கையே. பிரதேச ரீதியான பிரபுக்குலம் சமூகத்தின் தவிர்க்க முடியாத, அவசியமான பகுதியாக இருந்த காலம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது மிக, மிக நெடுங்காலத்துக்கு முந்தியது. அதன்பிறகு முதலாளித்துவ மத்திய தர வர்க்கம்—அதைப் பிரெஞ்சுக்காரர்கள் bourgeoisie என்று குறிப்பிடுகின்றனர்கள்—அதே அளவுக்குத் தவிர்க்க முடியாத அவசியத்துடன் ஒரு காலத்தில் தோன்றியது. அது பிரதேசரீதியான பிரபுக் குலத்தை எதிர்த்துப் போராடி அதன் அரசியல் சக்தியை முறியடித்துப் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் மேலாதிக்கத்தைப் பெற்றது. ஆனால் வர்க்கங்கள் தோன்றிய காலத்திலிருந்து தொழிலாளி வர்க்கம் இல்லாமல் சமூகம் இயங்கக்கூடிய காலம் ஒருபோதும் இருக்கவில்லை. அந்த வர்க்கத்தின் பெயர், சமூக அந்தஸ்து மாறிவந்திருக்கிறது; அடிமையின் இடத்தைப் பண்ணையடிமை பெற்றான்; பிறகு அவனிடத்துக்கு சுதந்திரமான உழைக்கும் மனிதன் வந்தான். அவன் அடிமைத் தனத்திலிருந்து சுதந்திரமானவன் என்பது மட்டுமல்ல, தன்னுடைய சொந்த உழைப்புச் சக்தியைத் தவிர மற்ற பூமிக்குரிய எல்லா உடைமைகளிலிருந்தும் சுதந் திரமானவன். ஆனால் ஒன்று தெளிவானதாகும். எல்லா விதமான சந்தர்ப்பங்களிலும் இந்த வர்க்கம் அவசியமானதாக இருக்கிறது. ஆனால் அது இனியும் வர்க்கமாக இல்

லாத முழுச் சமூகத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும் காலம் நிச்சயமாக வரும்.

இந்த மூன்று வர்க்கங்களில் ஒவ்வொன்றும் இன்று இருப்பதற்கு ஏதாவது அவசியம் உண்டா?

இங்கிலாந்தில் நிலப்பிரபுக்கள் குறைந்த பட்சம் பொருளாதார ரீதியில் அவசியமற்றவர்கள்; அயர்லாந்திலும் ஸ்காட்லாந்திலும் அவர்களுடைய மக்கள் தொகை ஒழிப்புப் போக்கினுல் அவர்கள் நிச்சயமான தீமையாகிவிட்டார்கள். மக்களை சமுத்திரத்துக்கு அப்பால் ஓடச்செய்வது அல்லது பட்டினி கிடக்கச் செய்வது, அவர்களுக்கு பதில் ஆடுகள் அல்லது மான்களை வளர்ப்பது—அயர்லாந்து மற்றும் ஸ்காட்லாந்தின் நிலவுடைமையாளர்களின் தனிச்சிறப்பு இதுவே. அமெரிக்கக் காய்கறிகள் மற்றும் இறைச்சியின் போட்டி இன்னும் சிறிது அதிகரித்துவிடுமாறுல் ஆங்கிலப் பிரபுக்கள்—குறைந்த பட்சம் பெரிய நகரப் பண்ணைகளைக் கொண்டவர்கள்—அதையே செய்வார்கள். அமெரிக்காவின் உணவுப் பொருள்களின் போட்டி மற்றவர்களிடமிருந்து நம்மை விரைவில் விடுவிக்கும். அவர்கள் தொலைந்தால் நல்லதுதான். ஏனென்றுல் பிரபுக்கள் சபையிலும் காமன்ஸ் சபையிலும் அவர்களுடைய அரசியல் நடவடிக்கை முற்றிலும் தேசியத் தீமையாக இருக்கிறது.

ஆனுல் முதலாளித்துவ மத்தியதர வர்க்கத்தின், பிரிட்டனின் காலனியாதிக்கப் பேரரசை நிறுவி பிரிட்டிஷ் சுதந்திரத்தை ஏற்படுத்திய அந்த அறிவாற்றலுடைய, மிதவாத வர்க்கத்தின் நிலை என்ன? 1831இல் நாடாளுமன்றத்தைச் சீர்திருத்திய[93], தானியச் சட்டங்களை ரத்துச் செய்த[94], வரிகளை ஒவ்வொன்றுகக் குறைத்த வர்க்கத்தின் நிலை என்ன? பிரம்மாண்டமான தொழில்களையும் மாபெரும் வர்த்தகக் கப்பல் தொழிலையும் மேன்மேலும் விரிவடைகின்ற இங்கிலாந்தின் ரயில்வே அமைப்பையும் உருவாக்கி இன்னும் இயக்கிக் கொண்டிருக்கின்ற அந்த வர்க்கத்தின் நிலை என்ன? அது இயக்குகின்ற, மேன்மேலும் முன்னேற்றத்தை நோக்கிச் செலுத்திக் கொண்டிருக்கின்ற தொழிலாளி வர்க்கத்தைப் போலவே அந்த வர்க்கமும் குறைந்த பட்சம் அவசியமாகத் தானே இருக்க வேண்டும்.

முதலாளித்துவ மத்தியதர வர்க்கத்தின் பொருளாதாரச் செயல் நீராவித் தொழில்களையும் நீராவிச் செய்திப் போக்கு

வரத்துக்களையும் கொண்ட நவீன அமைப்பைப் படைத்து அந்த அமைப்பின் வளர்ச்சியைத் தாமதப்படுத்துகின்ற அல்லது தடை செய்கின்ற ஒவ்வொரு பொருளாதார மற்றும் அரசியல் தடையையும் அழிப்பது என்பது மெய்யே. முதலாளித்துவ மத்தியதர வர்க்கம் இந்தச் செயலை நிறைவேற்றிய மட்டில்—அந்த சந்தர்ப்பங்களின் கீழ்—அது அவசியமான வர்க்கமாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனல் அது இனியும் அவசியமான வர்க்கமா? பரந்த சமூகத்தின் நன்மைக்காக நடைபெறுகின்ற சமூக உற்பத்தியை நிர்வகித்து விரிவுபடுத்துகின்ற அவசியமான செயலை அது தொடர்ந்து நிறைவேற்றுகிறதா? இதைப் பற்றி ஆராய்வோம்.

முதலில் செய்தித் தொடர்புச் சாதனங்களை எடுத்துக் கொள்வோம். தந்தித் தொடர்புச் சாதனம் அரசாங்கத்தின் கைகளில் இருப்பதைப் பார்க்கிருேம். இரயில்வே அமைப்புக்களும் நீராவிக் கப்பல்களில் பெரும்பகுதியும் தங்களுடைய சொந்தத் தொழிலைத் தாங்களே நிர்வகிக்கின்ற தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சொந்தமானவை அல்ல, அவை கூட்டுப் பங்குக் கம்பெனிகளுக்குச் சொந்தமானவை. அத்தொழிலை ஊதியம் பெறுகின்ற ஊழியர்கள் நிர்வகிக்கருர்கள்; இவர்கள் அநேகமாக உயர்வான, அதிகமான ஊதியம் பெறுகின்ற தொழிலாளர்களாகவே இருப்பார்கள். இயக்குநர்களையும் பங்குதாரர்களையும் பொறுத்தவரை முதலாவதாகச் சொல்லப்பட்டவர்கள் நிர்வாகத்திலும் இரண்டாவதாகச் சொல்லப்பட்டவர்கள் மேற்பார்வையிலும் எவ்வளவு குறைவாகத் தலையிடுகின்ருர்களோ அவ்வளவு அந்தக் கம்பெனிக்கு நன்மையைத் தரும் என்பது இருவருக்குமே தெரியும். கண்டிப்பில்லாத, முற்றிலும் மேலெழுந்தவாரியான மேற்பார்வை மட்டுமே தொழிலின் உடைமையாளர்களுக்கு எஞ்சியிருக்கும் ஒரே வேலை என்பது உண்மையே. இந்த மாபெரும் நிறுவனங்களின் முதலாளிகளுக்கு அரை வருடாந்தர லாப ஈவுச் சீட்டுகளைக் காட்டிப் பணம் பெறுவதைத் தவிர வேறு எந்த வேலையும் அவற்றைப் பொறுத்த மட்டில் இல்லை என்பது உண்மை என்பதை நாம் பார்க்கிருேம். முதலாளிகளின் சமூகச் செயல் இங்கே கூலி பெறுகின்ற ஊழியர்களுக்கு மாற்றப்பட்டு விட்டது. ஆனல் அவர் தன்னுடைய லாப ஈவுத் தொகைகளை, அவர் நிறைவேற்ருத வேலைகளுக்கான ஊதியத்தைத் தொடர்ந்து பெற்றுக்கொள்கிருர்.

இங்கே குறிப்பிடப்பட்ட பெரிய நிறுவனங்களின் அளவு காரணமாக அவற்றின் நிர்வாகத்திலிருந்து ''ஓய்வெடுக்கும்படி'' நிர்ப்பந்திக்கப்பட்ட முதலாளிக்கு மற்றொரு செயல் இன்னும் எஞ்சியிருக்கிறது. பங்குச் சந்தையில் தன்னுடைய பங்குகளைக் கொண்டு சூதாடுவது இந்தச் செயலாகும். இதைக் காட்டிலும் சிறப்பான வேறு வேலை இல்லாத காரணத்தால் நம் ''ஓய்வுபெற்ற'' அல்லது அகற்றப்பட்ட முதலாளிகள் இந்தப் பணக்கடவுளின் ஆலயத்தில் விரும்பிய அளவுக்குச் சூதாடுகிறார்கள். அவர்கள் சம்பாதிப்பதாகப் பாசாங்கு செய்தார்களே, அந்தப் பணத்தை எடுக்கின்ற திட்டவட்டமான உத்தேசத்தோடு அங்கே போகிறார்கள். எல்லா உடைமைகளுக்கும் உழைப்பு மற்றும் சிக்கனமே தோற்றுவாய் என்று அவர்கள் கூறினாலும்—ஒரு வேளை தோற்றுவாயாக இருக்கலாம், ஆனால் நிச்சயமாக முடிவு அல்ல. கோடிக்கணக்கான ரூபாய்கள் தோற்கப்படுகின்ற அல்லது வெற்றியடையப்படுகின்ற மாபெரும் சூதாட்ட நிலையம் நம்முடைய முதலாளித்துவ சமூகத்துக்கு அவசியமாக இருக்கின்ற பொழுது அற்பமான சூதாடுமிடங்களைக் கட்டாயமாக மூடுவது எவ்வளவு போலித்தனம்! ''ஓய்வு பெற்ற'', பங்குமூலதனம் வைத்திருக்கின்ற முதலாளி இருப்பது இங்கே மிகையானது மட்டுமல்ல—அது முற்றிலும் தீமை என்பது உண்மையே.

இரயில்வேக்களுக்கும் நீராவிக் கப்பல் தொழிலுக்கும் எது உண்மையோ அது பெரிய தயாரிப்பு மற்றும் தொழில் நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் நாள்தோறும் மேன்மேலும் உண்மையாகிக் கொண்டிருக்கிறது. பெரிய தனியார் நிறுவனங்களை வரையறுக்கப்பட்ட கம்பெனிகளாக மாற்றுவது கடந்த பத்து வருடங்களுக்கும் அதிகமான காலத்தில் அன்றாட நடைமுறையாகியிருக்கிறது. ...நகரத்தின் பெரிய மாஞ்செஸ்டர் கிட்டங்கிகளிலிருந்து வேல்ஸ் மற்றும் வடபகுதியின் இரும்புத் தொழில் மற்றும் நிலக்கரிச் சுரங்கங்கள், லங்காஷயர் தொழிற்சாலைகள் வரை ஒவ்வொன்றுமே மிதக்க விடப் பட்டுவிட்டது அல்லது மிதக்கவிடப்பட்டிருக்கிறது. ஓல்ட்ஹாம் முழுவதிலுமே, தனியாரிடம் அநேகமாக ஒரு பருத்தி ஆலை கூட இல்லை. அது மட்டுமல்ல, சில்லறை வியாபாரி கூட மேன்மேலும் ''கூட்டுறவு ஸ்டோர்களினால்'' அகற்றப்படுகிறார். இவற்றில் மிகப் பெரும்பான்மை

யானவை பெயரளவுக்கு மட்டுமே கூட்டுறவு ஸ்தாபனங்கள்—அதைப் பற்றிப் பிறிதொரு சமயத்தில் எழுதுவோம். ஆகவே முதலாளியினுடைய உற்பத்தி முறையின் வளர்ச்சி கைத்தறி நெசவாளியை அகற்றுவதைப் போலவே நிச்சயமாக முதலாளியையும் அகற்றிவிடுகிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் இரண்டுக்கும் இடையில் ஒரு வேறுபாடு இருக்கிறது. கைத்தறி நெசவாளி பட்டினியாக இருந்து மெதுவாகச் சாகிறான். அகற்றப்பட்ட முதலாளி அதிகமாகச் சாப்பிட்டு மெதுவாகச் சாகிறார். இந்த விஷயத்தில் இருவரும் பொதுவாக ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். என்ன செய்வதென்று இருவருக்கும் தெரியவில்லை.

ஆகவே முடிவு இதுதான்: இன்றைய எதார்த்தமான சமூகத்தின் பொருளாதார வளர்ச்சி மேன்மேலும் ஒன்று குவித்தலை, தனி முதலாளிகளால் இனிமேல் நிர்வகிக்கப்பட முடியாத மாபெரும் நிறுவனங்களாக உற்பத்தியை சமூகமயமாக்குதலை நோக்கிச்செல்கிறது. ஒரு நிறுவனம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வளர்ச்சி அடைந்ததும் ''முதலாளியின் நேரடியான பார்வை'' மற்றும் அது ஏற்படுத்தும் அதிசயங்களைப் பற்றிய கதைகள் அனைத்தும் வெறும் பிதற்றலாக மாறிவிடுகின்றன. லண்டன் மற்றும் வட மேற்கு ரயில்வேயின் ''முதலாளியின் பார்வையைப்'' பற்றிக் கற்பனை செய்து பாருங்கள்! ஆனால் முதலாளி செய்ய முடியாததைத் தொழிலாளி, கம்பெனியின் கூலி வாங்கும் ஊழியர்கள் செய்ய **முடியும்,** அதை வெற்றிகரமாகச் செய்ய முடியும்.

ஆகவே முதலாளி தன்னுடைய லாபம் ''மேற்பார்வை செய்ததற்குக் கூலி'' என்று இனி உரிமை கோர முடியாது. ஏனென்றால் அவர் எதையும் மேற்பார்வை செய்யவில்லை. மூலதனத்தை ஆதரித்துப் பேசுபவர்கள் அந்த ஓட்டைச் சொற்றொடரை நம் காதுகளுக்குள் டமாரமடிக்கின்றபொழுது நாம் அதை நினைவுபடுத்திக் கொள்வோம்.

ஆனால் முதலாளி வர்க்கம் இந்த நாட்டின் மாபெரும் உற்பத்தி அமைப்பை நிர்வகிக்க முடியாததாகிவிட்டது என்பதை எடுத்துக்காட்டுவதற்கு நாம் சென்ற வார இதழில் முயற்சி செய்தோம். அவர்கள் ஒரு பக்கத்தில் எல்லாச் சந்தைகளையும் குறிப்பிட்ட இடைவெளிகளில் திரும்பத்திரும்பத் தம்முடைய தயாரிப்புகளைக் கொண்டு நிரப்புகின்ற வகையில் உற்பத்தியை விரிவுபடுத்தினார்கள், மறு பக்கத்தில்

அந்நியப் போட்டியை மேன்மேலும் எதிர்க்க முடியாதவர்களானுர்கள். ஆகவே நாட்டின் மாபெரும் தொழில்துறைகளின் முதலாளித்துவ வர்க்கத்தின் குறுக்கீடு இல்லாமல் நாம் சிறப்பான முறையில் நிர்வாகம் செய்ய முடியும் என்பதுடன் அவர்களுடைய குறுக்கீடு மேன்மேலும் தீமையாக மாறிக் கொண்டிருப்பதையும் நாம் காண்கிறேம்.

மறுபடியும் நாம் அவர்களிடம் சொல்கிறேம்: ''பின்னல் போ! தொழிலாளி வர்க்கத்துக்கு சந்தர்ப்பம் கொடு''.

*1881* ஆகஸ்ட் 1-2<br>தேதிகளில் எழுதப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில்<br>எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

# "கார்ல் மார்க்சின் மரணத்தை ஒட்டி" என்பதிலிருந்து

## II

அரசு என்று சொல்லப்படுகின்ற அரசியல் ஸ்தாபனம் படிப்படியாகக் கலைக்கப்பட்டு முடிவில் மறைந்து போவது எதிர்காலப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இறுதி விளைவுகளில் ஒன்ருக இருக்கும் என்ற கருத்தை 1845ம் வருடத்திலிருந்தே மார்க்சும் நானும் கூறிவந்திருக்கிறோம். உழைக்கின்ற பெரும்பான்மையினரைச் செல்வந்தர்களான சிறுபான்மையினரிடம் ஆயுதபலத்தைக் கொண்டு பொருளாதார ரீதியில் அடிமைப்படுத்துவதே அரசு என்ற ஸ்தாபனத்தின் பிரதான குறிக்கோளாக என்றும் இருந்திருக்கிறது. செல்வந்தர்களான சிறுபான்மையினர் மறைந்து விடும் பொழுது ஆயுதபலம் கொண்ட ஒடுக்கு முறை அரசு சக்தியின் அவசியமும் மறைந்து விடுகின்றது. அதே சமயத்தில் இந்தக் குறிக்கோளையும் எதிர்கால சமூகப் புரட்சியின் இதைக் காட்டிலும் மிக முக்கியமான இதர குறிக்கோள்களையும் அடைவதற்குப் பாட்டாளி வர்க்கம் முதலில் அரசு என்ற அமைப்பு ரீதியான அரசியல் சக்தியைத் தன் வசப்படுத்த வேண்டும், அதன் உதவியுடன் முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பை ஒழித்து சமூகத்தைத் திருத்தியமைக்க வேண்டும். இது ஏற்கெனவே கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்[95] (1847) இரண்டாம் அத்தியாயத்தின் முடிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

அராஜகவாதிகள் இதைத் தலைகீழாக்குகிறார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சி அரசு என்ற அரசியல் ஸ்தாபனத்தை ஒழிப்பதிலிருந்து தொடங்க வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்குப் பிறகு வெற்றியடைந்த தொழிலாளி வர்க்கம் உபயோகிப்

பதற்குத் தகுந்த நிலையில் இருக்கும் ஒரே ஸ்தாபனம் அரசே, அதைப் புதிய செயல்களுக்குத் தகவமைக்க வேண்டியிருக்கும். ஆனால் அந்தத் தருணத்தில் அதை அழிப்பதென்பது வெற்றியடைந்த தொழிலாளி வர்க்கம் தான் புதிதாக வென்றெடுத்த அதிகாரத்தை உபயோகிப்பதற்கு, தன் முதலாளி வர்க்க எதிரிகளை அமுக்கி வைப்பதற்கு, சமூகத்தின் பொருளாதாரப் புரட்சியை நிறைவேற்றுவதற்கு — அது இல்லையென்றால் மொத்த வெற்றியுமே பாரிஸ் கம்யூனைப் போலத் தோல்வியிலும் தொழிலாளி வர்க்கத்தின் படுகொலையிலும் முடிவடையும்—உள்ள ஒரே அமைப்பை அழிப்பதாகும்.

இந்த அராஜகவாத அபத்தங்களை அவற்றின் இன்றைய வடிவத்தில் பக்கூனின் தெரிவித்த முதல் நாளிலிருந்தே மார்க்ஸ் எதிர்த்தார் என்பதை நான் வெளிப்படையாகச் சொல்வது அவசியம் தானா? சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் மொத்த உள் வரலாறுமே அதை நிரூபிக்கும்.

*1883 மே 12ந் தேதியில் எழுதப்பட்டது.*

*மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# "குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்"

எனும் நூலிலிருந்து

## IX. *அநாகரிக நிலையும் நாகரிக நிலையும்*

*...வர்க்க விரோதங்களைக் கட்டுக்குள் வைக்க வேண்டியதின் அவசியத்திலிருந்து அரசு தோன்றியமையாலும், அதே சமயத்தில், அவ்வர்க்கங்களுக்கிடையே நடந்து வந்த மோதல்களின் மத்தியிலிருந்தே தோன்றியமையாலும் அது, பொது விதியாகவே, ஆக மிகவும் வலிமைவாய்ந்த, பொருளாதார வகையில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் அரசாக ஆகிறது; அந்த வர்க்கம், அரசின் மூலமாக, அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாக ஆகிறது; இந்த வழியிலே ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை ஒடுக்கிவைத்துச் சுரண்டிக் கொண்டிருப்பதற்கு அது புதிய சாதனங்களைப் பெறுகிறது. இப்படித்தான் பண்டைக்காலத்திய அரசு, எல்லாவற்றிற்கும் மேலாக, அடிமைகளை ஒடுக்கிவைப்பதற்கு அமைந்த ஆண்டைமாரின் அரசாக இருந்தது; அதே போலத்தான் நிலப் பிரபுத்துவ அரசு என்பதும் விவசாயப் பண்ணையடிமைகளையும் நிலப்பிரபுக்களுக்கு உழைப்பவர்களையும் ஒடுக்கிவைத்திருப்பதற்கமைந்த பிரபு வம்சத்தினரின் அரசாக இருந்தது; அதே போலத்தான், நவீன காலப் பிரதிநிதித்துவ அரசும் கூலியுழைப்பை மூலதனம் சுரண்டுவதற்கு அமைந்த கருவியாகும். இருந்தாலும், விதிவிலக்கு என்ற வகையில், சில காலப்பகுதிகள் அமைவதுண்டு; அவற்றில் சண்டையிடும் வர்க்கங்கள் பரஸ்பரம் சம பலத்தை அநேகமாகப் பெறுவதினால், வெளிப் பார்வைக்கு மத்தியஸ்தமாக வந்துசேருகிற அரசு அதிகாரம் சிறிது காலத்திற்கு அவற்றினின்றும் ஓரளவுக்குச் சுதந்*

திரம் பெற்றுவருகிறது. 17வது, 18வது நூற்றுண்டுகளைச் சேர்ந்த எதேச்சாதிகார முடியரசு என்பது இப்படிப் பட்டது தான்; பிரபு வம்சத்தினருக்கும் பூர்ஷ்வா வர்க்கத் தினருக்கும் இடையே அது சமநிலையை ஏற்படுத்திவைத்துக் கொண்டிருந்தது; முதல் பிரெஞ்சு சாம்ராஜ்ஜியத்தின், இன்னும் குறிப்பாக இரண்டாவது பிரெஞ்சு சாம்ராஜ்ஜி யத்தின் போனப்பார்டிஸமும் அப்படித்தான்; அது பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தையும், பாட் டாளி வர்க்கத்திற்கு எதிராக பூர்ஷ்வா வர்க்கத்தையும் போட்டி போட விட்டுக்கொண்டிருந்தது. இவ்விதமான செயலுக்கு மிகச்சமீபத்திய உதாரணம் பிஸ்மார்க் தேசிய இனத்தின் புதிய ஜெர்மன் சாம்ராஜ்ஜியமாகும்; அதில் ஆளு வோரும் ஆளப்படுவோரும் ஒருங்கே கோமாளிகளாகத் தோற்றமளிக்கிருர்கள்; இங்கே முதலாளிகளும் தொழிலாளி களும் ஒருவருக்கொருவர் சமஞக நிறுத்தப்படுகின்றனர், இரு சாராரும் சமமாகச் சுரண்டப்படுகின்றனர்—ஏழ்மைப் பட்டுள்ள பிரஷ்ய மாகாண ஜங்கர்களின்[96] நன்மைக்காக.

மேலும், வரலாற்றிலமைந்த அரசுகள் மிகப் பெரும் பாலானவற்றில் பிரஜைகளின் உரிமைகள் அவரவர்களுடைய செல்வத்திற்கேற்றபடிப் பங்குபடுத்தப்படுகின்றன; ஆக, அரசு என்பது உடைமை வர்க்கத்தின் ஸ்தாபனம், உடைமையற்ற வர்க்கத்திடமிருந்து அதைப் பாதுகாக்கவே அது இருக்கிறது என்ற உண்மையை இது நேரடியாக வெளி யிடுகிறது. சொத்துக்குத் தக்கபடிச் செய்திருந்த அதீனிய, ரோமானிய வகுப்பமைப்பிலும் இப்படித்தான் இருந்தது. மத்தியகால நிலப்பிரபுத்துவ அரசிலும் இப்படியேதான் இருந்தது; அதில், எவ்வளவு நிலம் யார் யாருக்குச் சொந்தமாயிருந்ததோ, அவ்வளவுக்கு அவனுக்கு அர சியல் அதிகாரம் பொருத்தமாக அமைந்திருந்தது. நவீன காலத்தியப் பிரதிநிதித்துவ அரசுகளின் வோட்டுரிமை யோக்கிய தாம் சங்களிலும் அதைப் பார்க்கலாம். இருந்த போதிலும், சொத்து வேறுபாடுகளுக்குள்ள இந்த அரசியல் அங்கீகாரம் முக்கியமேயல்ல. மாருக, அரசு வளர்ச்சியின் கீழ்க்கட்டத்தையே இது குறிக்கிறது. ...அரசின் உச்சவடிவம் ஜனநாயகக் குடியரசு என்பது; அது நமது நவீனச் சமுதாய நிலைமைகளின் கீழ் மேலும் மேலும் தவிர்க்க முடியாத ஒன்ருக ஆகிக்

கொண்டிருக்கிறது; பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் கடைசி நிர்ணயமான போரை இந்த அரசு வடிவத்திற்குள்ளேதான் நடத்தி முடிக்க முடியும்;—இந்த ஜனநாயகக் குடியரசுக்கு அதிகார பூர்வமாகச் சொத்து வேறுபாடுகளைப் பற்றி இன்னும் ஒன்றுமே தெரியாது. இந்தக் குடியரசில் செல்வம் தனது அதிகாரத்தை மறைமுகமாகச் செலுத்துகிறது, இருந்தாலும் முன்னைவிட நிச்சயமாகச் செலுத்துகிறது. ஒரு பக்கத்தில், அதிகாரிகளை நேரடியாக லஞ்ச ஊழலுக்குட்படுத்துவது—இதற்கு அமெரிக்கா சாஸ்திரீய உதாரணமாக விளங்குகிறது; இன்னொரு பக்கத்தில்; அரசாங்கத்துக்கும் பங்கு மார்க்கெட்டுக்குமிடையே ஒப்பந்தம் என்ற வடிவத்தில்; அரசாங்கக் கடன் அதிகமாக ஆக, பங்கு மார்க்கெட்டைத் தமது மையமாகக் கொண்டு போக்குவரத்து மட்டுமின்றி உற்பத்தியையே, தமது கையில் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் குவித்துக் கொள்வது அதிகமாக ஆக, இப்படி ஒப்பந்தம் செய்துகொள்வது மேலும் மேலும் சுலபமாகிறது. கடைசியாக வந்திருக்கிற பிரெஞ்சுக் குடியரசும் அமெரிக்கக் குடியரசும் இதற்கு மனத்தில் பதியத்தக்க உதாரணமாகும்; இத்துறையில் நமது பழைய அண்ணுத்தை சுவிட்ஸர்லாந்தும் தனது பங்கைச் செலுத்தியிருக்கிறது. அரசாங்கத்துக்கும் பங்கு மார்க்கெட்டுக்குமிடையே இந்தச் சகோதர ஒப்பந்தம் ஏற்படுவதற்கு ஒரு ஜனநாயகக் குடியரசு தேவையில்லை என்பதை இங்கிலாந்து நிரூபிக்கிறது, புதிய ஜெர்மன் சாம்ராஜ்ஜியமும் நிரூபிக்கிறது; ஜெர்மன் சாம்ராஜ்ஜியத்தில் சர்வஜன வோட்டுரிமையால் அதிகமாக உயர்ந்தது பிஸ்மார்க்கா, பிலைஹ்ரோடெரா என்று யாராலும் சொல்ல முடியாது. கடைசியாக, உடைமை வர்க்கம் சர்வஜன வோட்டுரிமை மூலமாக நேரடியாக ஆட்சி செய்கிறது. ஆகவே, ஒடுக்கப்பட்ட வர்க்கம், இங்கே பாட்டாளி வர்க்கம், தன்னைத் தானே விடுவித்துக் கொள்ளப் பக்குவம் பெருதிருக்கிற வரையில், அது அதன் பெரும்பான்மையான தொகையில் இப்போதையச் சமுதாய அமைப்பு ஒன்றுதான் சாத்தியமானது என்று கருதிக் கொண்டிருக்கும்; அரசியல் ரீதியிலே, முதலாளி வர்க்கத்தின் வாலாக, அதன் தீவிர இடதுசாரி அணியாக, அமைந்திருக்கும். இருந்தாலும் இந்த வர்க்கம் தன் சுய விடுதலைக்குப் பக்குவம் அடைகிற அளவுக்குத் தன்னை ஒரு கட்சியாக அமைத்துக்

கொள்கிறது, முதலாளிகளின் பிரதிநிதிகளையல்லாது தனது சொந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறது. இப்படியாகச் சர்வஜன வோட்டுரிமை என்பது தொழிலாளி வர்க்கத்தின் பக்குவத்தை அளவெடுக்கும் ஒரு கருவியேயாகும். தற்கால அரசில், அது அதற்கு மேலாக ஒன்றும் இருக்க முடியாது, என்றைக்கும் இருக்காது; ஆனால் அது போதும். எந்த நாளில் சர்வஜன வோட்டுரிமை என்ற உஷ்ணமானி தொழிலாளர்களிடையே கொதிநிலையைக் குறிக்கிறதோ, அந்நாளில் என்ன செய்ய வேண்டும் என்று தொழிலாளிகளும் முதலாளிகளும் நிச்சயமாகத் தெரிந்துவைத்திருப்பார்கள்.

எனவே, அரசு அனாதிகாலத்திலிருந்து இருந்து வந்ததல்ல. அது இல்லாதபடியே சமுதாயங்கள் இருந்து வந்துள்ளன, அவற்றிற்கு அரசு பற்றியோ அரசு அதிகாரம் பற்றியோ ஒன்றுமே தெரியாது. பொருளாதார வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில்—சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபடுவதுடன் இது அவசியகரமாகப் பிணைக்கப்பட்டிருந்தது—இப்பிளவின் காரணமாக அரசு அவசியமாகிவிட்டது. உற்பத்தி வளர்ச்சியில் இந்த வர்க்கங்கள் இருக்க அவசியமில்லை. என்று ஆகிறதோடு மட்டுமின்றி அவை உற்பத்திக்கு நேரடியான தடையாகவும் ஆகிவிடப்போகிற ஒரு கட்டத்தை இப்போது நாம் விரைவாக எட்டிவருகிறோம்; முன் கட்டத்தில் தவிர்க்க முடியாதபடி வர்க்கங்கள் எப்படி உதித்தனவோ, அதேபோல் தவிர்க்க முடியாதபடி அவை வீழ்ச்சியுறும். அவற்றுடன் அரசும் தவிர்க்க முடியாதபடி வீழ்ந்து போகும். உற்பத்தியாளர்களின் சுதந்திரமான, சமமான சங்கம் என்ற அடிப்படையில் உற்பத்தியை ஸ்தாபன ரீதியாக நடத்தப்போகிற சமுதாயம், அரசு இயந்திரம் முழுவதையும் அது அப்போது இருக்க வேண்டிய இடத்தில், அதாவது தொல் பொருள் மியூசியத்தில், கைராட்டை, வெண்கலக் கோடாலி ஆகியவற்றின் பக்கத்தில் கொண்டுபோய் வைத்துவிடும்.

*1884ல் 26 மே மாதத்தில் எழுதப்பட்டது*

*மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# கோபன்ஹேகனிலிருந்த ஹெர்சன் டிரியருக்கு எழுதிய கடிதத்திலிருந்து

**லண்டன், டிசம்பர் 18, 1889**

...நான் உங்களுடன் உடன்படாத ஒரு விஷயத்தை முதலில் எடுத்துக்கொள்கிறேன்.

மற்ற கட்சிகளுடன் எவ்விதமான மற்றும் ஒவ்வொரு ஒத்துழைப்பையும்—அவை மிகத் தற்காலிகமாக இருந்தால் கூட—கோட்பாட்டு ரீதியில் நீங்கள் நிராகரிக்கிறீர்கள். குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அது அதிகச் சாதகமானதாக அல்லது குறைந்தபட்சம் குறைவான தீங்காக இருந்தால் கூட அதைக் கைவிடாமல் இருக்கின்ற அளவுக்குப் போதிய புரட்சி என்னிடம் உண்டு.

புதிய சமூகத்துக்கு இட்டுச்செல்கின்ற ஒரே பாதையான அரசியல் அதிகாரத்தை வன்முறையான புரட்சி இல்லாமல் பாட்டாளி வர்க்கம் வெல்ல முடியாது என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். அந்தத் தீர்மானமான தினத்தன்று வெற்றியடைகின்ற அளவுக்குப் பாட்டாளி வர்க்கம் பலமுடையதாக இருக்க வேண்டுமென்றால் அது மற்ற எல்லாக் கட்சிகளிலிருந்தும் தனித்திருக்கின்ற—அவற்றுக்கு எதிரான—உணர்வு பூர்வமான வர்க்கக் கட்சியைக் கொண்டிருக்க வேண்டும். இதை நானும் மார்க்சும் 1847ம் வருடத்திலிருந்தே வற்புறுத்தி வருகிறோம்.

ஆனால் இந்தக் கட்சி சில குறிப்பிட்ட நேரங்களில் மற்ற கட்சிகளைத் தன்னுடைய நோக்கங்களுக்கு உபயோகிக்கக் கூடாது என்பது இதன் அர்த்தமல்ல. மற்ற கட்சிகள் பொருளாதார வளர்ச்சி அல்லது அரசியல் சுதந்திரத்தைப் பொறுத்த மட்டில் பாட்டாளி வர்க்கத்துக்கு நேரடியாகச் சாதகமான அல்லது முற்போக்கான நடவடிக்கைகளைச்

செய்தால் அவற்றை அந்தக் கட்சி தற்காலிகமாக ஆதரிக்கக் கூடாது என்பதும் இதன் அர்த்தமல்ல. ஜெர்மனியில் தலை மகன் உரிமை மற்றும் இதர நிலப்பிரபுத்துவ எச்சங்களை, அதிகார வர்க்கத்தை, காப்பு வரிகளை, சோஷலிஸ்ட்-எதிர்ப்புச் சட்டத்தை[97] மற்றும் கூட்டம் நடத்துவதையும் சங்கம் அமைப்பதையும் கட்டுப்படுத்துகின்ற சட்டங்களை எதிர்த்து உண்மையான போராட்டத்தை யார் நடத்தினாலும் நான் ஆதரிப்பேன். நம் ஜெர்மன் முற்போக்குக் கட்சியும்[98] உங்களுடைய டேனிஷ் Venstreயும்[99] உண்மையான தீவிரவாத முதலாளி வர்க்கக் கட்சிகளாக இருந்திருந்தால்—ஒரு பிஸ்மார்க் அல்லது எஸ்திருப்பின் முதல் உறுமலைக் கேட்டதும் புதர்களுக்குள் ஓடி ஒளிந்து கொள்கின்ற கேவலமான வாயாடிகளைக் கொண்ட கட்சிகளாகவே அவை இருக்கின்றன—அவற்றுடன் திட்டவட்டமான நோக்கங்களுக்காக எவ்விதமான மற்றும் ஒவ்வொரு தற்காலிகமான ஒத்துழைப்பையும் நான் ஒருகாலும் நிபந்தனையின்றி எதிர்த்திருக்க மாட்டேன். மற்றொரு கட்சி கொண்டு வருகின்ற பிரேரணைக்கு ஆதரவாக நம்முடைய சட்டமன்றப் பிரதிநிதிகள் வாக்களிப்பதும் ஒத்துழைப்பே—அவர்கள் அப்படி அடிக்கடி நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அது நமக்கு நேரடியான சாதகத்தைத் தருவதாக இருந்தால் அல்லது பொருளாதார மற்றும் அரசியல் புரட்சியின் திசை வழியில் நாட்டின் வரலாற்று ரீதியான வளர்ச்சி மறுக்க முடியாததாகவும் பயன்மிக்கதாகவும் இருந்தால் மட்டுமே நான் இதை ஆதரிப்பேன். அத்துடன் அதனால் கட்சியின் பாட்டாளி வர்க்க வர்க்கத் தன்மைக்கு ஆபத்தேற்படக் கூடாது. எனக்கு இதுவே கடைசி எல்லை. இந்தக் கொள்கை மிக முந்திய 1847ம் வருடத்திலேயே கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் எடுத்துக் கூறப்பட்டிருப்பதை நீங்கள் பார்க்க முடியும். இதை 1848ம் வருடத்தில், அகிலத்தில், எங்குமே நாங்கள் கடைப்பிடித்தோம்.

நிற்க, அறநெறிக் கோணத்திலிருந்து (அது இங்கே அவசியமில்லாதபடியால் நான் அதை விட்டுவிடுகிறேன்.) ஒரு புரட்சிக்காரன் என்ற முறையில் எனக்கு இலட்சியத்துக்கு இட்டுச்செல்கின்ற எந்த வழியுமே—மிகவும் வன்முறையானவை, மிகவும் சமாதானமானவை ஆகிய இரண்டுமே—பின்பற்றத்தக்கவையே.

அத்தகைய கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு நுண்ணறிவும் ஒழுக்கமும் தேவை. ஆனால் அவை அவசியமில்லாத எந்தக் கொள்கையாவது உண்டா? அது லஞ்ச ஊழல், அராஜகவாதிகள், நண்பர் மோரிஸ் ஆகிய ஆபத்துக்களை நமக்கு ஏற்படுத்துகிறது. ஆம். தொழிலாளி வர்க்கம் முட்டாள்களையும் மனோதிடம் இல்லாதவர்களையும், பச்சையாகச் சொல்வதென்றால் அயோக்கியர், கூட்டத்தையும் கொண்டதாக இருந்தால், நாம் செய்யக் கூடிய சிறப்பான காரியம் உடனே இடத்தைக் காலி செய்துவிட்டு வீட்டுக்குப் போவதே. ஏனென்றால் பாட்டாளி வர்க்கமும், நாம் அனைவருமே அரசியல் அரங்கத்தில் செய்யக் கூடிய வேலை ஒன்றுமில்லை. மற்ற எல்லாக் கட்சிகளையும் போலவே பாட்டாளி வர்க்கமும் தன்னுடைய தவறுகளிலிருந்து மிக வேகமாகக் கற்றுக் கொள்கிறது. இந்தத் தவறுகளிலிருந்து யாருமே அதை முழுமையாகப் பாதுகாக்க முடியாது.

எனவே முற்றிலும் செயல்தந்திரத்தைப் பற்றிய ஒரு கேள்வியை நீங்கள் கோட்பாட்டு நிலைக்கு உயர்த்துவது தவறு என்று நான் கருதுகிறேன். நான் இங்கே சாராம்சத்தில் ஒரு செயல் தந்திரப் பிரச்சினையைத் தான் பார்க்கிறேன். ஆனால் செயல்தந்திரத்தில் ஏற்படுகின்ற தவறும் கூட, சில சந்தர்ப்பங்களில், கோட்பாடுகளை மீறுவதற்கு வழிவகுக்கும்.

மூலம் ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

## கா. மார்க்சின் "பிரான்சில் உள்நாட்டுப் போர்" என்ற புத்தகத்துக்கு அறிமுகம்

...1871ம் வருடத்தில் பாரிஸ் கம்யூனின் நடவடிக்கை மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தை இருபது வருடங்களுக்குப் பிறகு, இன்று நாம் திரும்பிப் பார்த்தால் **பிரான்சில் உள்நாட்டுப் போரில்** தரப்பட்டுள்ள வர்ணனையோடு கூடுதலாகச் சிலவற்றைச் சேர்ப்பது அவசியம் என்பதைக் காண்போம்.

கம்யூன் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் பிளாங்கீ வாதிகள்; இவர்கள் தேசியக் காவற்படையின் மத்தியக் கமிட்டியில் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். அதில் சிறுபான்மையினர் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள். இவர்கள் பிரதானமாக, சோஷலிசத்தில் புரு தோன் மரபை ஆதரிப்பவர்கள். அந்த சமயத்தில் பிளாங்கீ வாதிகளில் அதிகப் பெரும்பான்மையினர் புரட்சிகரமான, பாட்டாளி வர்க்க உணர்ச்சியினுல் மட்டுமே சோஷலிஸ்டுகள், ஜெர்மனியின் விஞ்ஞான சோஷலிசத்தைக் கற்றிருந்த வையான் மூலம் சிலர் மட்டுமே கொள்கைப் பிரச்சினைகளில் அதிகமான தெளிவைக் கொண்டிருந்தார்கள். எனவே இன்று நம்முடைய கருத்தின்படி பொருளாதாரத் துறையில் கம்யூன் செய்திருக்க வேண்டிய பல நடவடிக்கைகளை அது செய்யவில்லை என்பது புரிந்து கொள்ளப்படக் கூடியதே. பிரான்ஸ் வங்கியின் (Bank of France) கதவுகளுக்கு வெளியே அவர்கள் பணிவோடும் புனிதமான அச்சத்தோடும் நின்று கொண்டிருந்ததை நாம் புரிந்து கொள்வது நிச்சயமாக மிகக் கடினமே. இது மோசமான அரசியல் தவறுகவும் இருந்தது. கம்யூன் வங்கியைக் கைப்பற்றியிருந்தால் அது பத்தாயிரம்

பணயக் கைதிகளைக் காட்டிலும் அதிகமான மதிப்புடைய தாக இருந்திருக்கும். அப்படி நடந்திருந்தால் பிரான்சின் மொத்த முதலாளித்துவ வர்க்கமுமே கம்யூனோடு சமா தானம் செய்து கொள்ளுமாறு வெர்சேய் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்திருக்கும். எனினும் பிளாங்கீவாதிகளையும் புரூதோன்வாதிகளையும் கொண்டிருந்த கம்யூன் எடுத்த பல நடவடிக்கைகள் சரியாக இருப்பதே இன்னும் அதிகமான வியப்பைத் தருகிறது. கம்யூனின் பொருளாதார ஆணைகளுக்கு —அவற்றின் பாராட்டத்தக்க அம்சங்களுக்கும் குறை சொல்லப்பட வேண்டிய அம்சங்களுக்கும்—முக்கியமான பொறுப்பு புரூதோன்வாதிகள் என்பது இயற்கையே. அதன் அரசியல் தவறுகளுக்கும் குறைகளுக்கும் பிளாங்கீவாதிகள் பொறுப்பாகிறார்கள். இருவரும் தங்கள் மரபு வழிக் கோட் பாடுகள் விதிக்கின்றவைகளுக்கு எதிரானவற்றை நிறை வேற்றியது—கோட்பாட்டுவாதிகள் அதிகாரத்தை வகிக்கும் பொழுது இது வழக்கமானதே—வரலாற்றின் முரண் நகையே.

சிறு விவசாயிகள் மற்றும் திறமையான கைவினைஞர் களின் சோஷலிஸ்டான புரூதோன் சங்கம் என்றாலே வெறுப்படைவார். அதில் நன்மையைக் காட்டிலும் தீமையே அதிகம் என்று கூறுவார். அது தொழிலாளியின் சுதந்திரத் துக்கு விலங்கு மாட்டுவதால் இயற்கையிலேயே மலட்டுத்தன மானது—தீமை நிறைந்தது என்று கூடச் சொல்லலாம். அது பலனில்லாத, தொல்லையான வெறும் கோட்பாடுதான். அது தொழிலாளியின் சுதந்திரத்துக்கு மட்டுமல்ல, உழைப் பின் சிக்கனத்துக்கும் எதிரானது. அதன் சாதகங்களைக் காட்டி லும் பாதகங்கள் மிக வேகமாகப் பெருகிவிடும். அதோடு ஒப் பிடுகின்ற பொழுது போட்டி, உழைப்புப் பிரிவினை மற்றும் தனியுடைமை உபயோகமான பொருளாதாரச் சக்தி களே. பெரிய அளவுத் தொழில்துறை, பெரிய நிறுவனங் களைப் போன்று மிகவும் அசாதாரணமான உதாரணங்களில் (புரூதோன் அவற்றை இப்படி வர்ணித்தார்) மட்டுமே, உதாரணமாக, இரயில்வே அமைப்பில், தொழிலாளர்கள் சங்கம் பொருத்தமாக இருக்கும். (**புரட்சியைப் பற்றிப் பொதுப் படையான கருத்து,** 3வது உருவரை என்ற நூலைப் பார்க்க.)

பாரிஸ் நகரம் கலைத்திறன் மிக்க கைத்தொழில் கேந்தி ரம். ஆனால் அங்கேயும் கூடப் பெரிய அளவு தொழில்துறை

அசாதாரணமானதாகக் கருதப்படுவது 1871க்குள் முடிந்து விட்டது. அது வரை கம்யூன் வெளியிட்ட ஆணைகளில் மிக முக்கியமானது பெரிய அளவுத் தொழில்துறைக்கும்—தயாரிப்புத் தொழிலுக்கும் கூட—ஒரு ஸ்தாபனத்தை அமைப்பதற்கும் இது ஒவ்வொரு தொழிற்சாலையிலுமுள்ள தொழிலாளர்களின் சங்கத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதோடு இந்தச் சங்கங்கள் அனைத்தையும் ஒரு மாபெரும் சம்மேளனமாக இணைப்பதற்கும் உத்தரவிட்டது. சுருக்கமாகச் சொல்வதென்ருல் **உள்நாட்டுப் போரில்** மார்க்ஸ் மிகவும் சரியாகக் கூறுவதைப் போல அந்த சம்மேளனம் கடைசியில் கம்யூனிசத்துக்கு அதாவது புருதோனுடைய கோட்பாட்டின் நேரடியான எதிர்நிலைக்கு வழி வகுத்திருக்கும். ஆகவே கம்யூன் சோஷலிசத்தில் புருதோன் மரபுக்கு சவக்குழியாகும். இன்று பிரெஞ்சுத் தொழிலாளி வர்க்க வட்டாரங்களிலிருந்து இந்த மரபு மறைந்து விட்டது. இங்கே ''மார்க்சியவாதிகளுக்குச்'' சிறிதும் குறையாத அளவில் ''சாத்தியவாதிகளிடமும்''[100] மார்க்சின் தத்துவம் ஆட்சி செலுத்துகிறது. ''தீவிரவாத'' முதலாளி வர்க்கத்தினர் மத்தியில் மட்டுமே இன்னும் புருதோன்வாதிகள் இருக்கிருர்கள்.

பிளாங்கீவாதிகளுக்கும் இதே கதிதான் ஏற்பட்டது. அவர்கள் சதி என்ற பயிற்சி நிலையத்தில் உருவானவர்கள்; அதன் கண்டிப்பான கட்டுப்பாட்டினுல் பிணைக்கப்பட்டவர்கள். ஒப்புநோக்கில் குறைவான எண்ணிக்கையைக் கொண்ட உறுதியான, நன்கு அமைக்கப்பட்ட நபர்கள் ஒரு குறிப்பிட்ட சாதகமான தருணத்தில் அரசின் சுக்கானைக் கைப்பற்ற முடியும் என்பதோடு, பெருந்திரளான மக்களைப் புரட்சியில் இழுத்துச் சென்று தலைவர்கள் என்ற சிறு குழுவைச் சுற்றி அவர்களைத் திரட்டுவதில் வெற்றியடைகின்றவரை தங்களுடைய எல்லையற்ற, ஈவிரக்கமற்ற சக்தியைக் கொண்டு ஆட்சியதிகாரத்தை வகிக்க முடியும் என்பது அவர்களுடைய கண்ணேட்டம். எல்லாவற்றுக்கும் மேலாக, புதிய, புரட்சிகரமான அரசாங்கம் எல்லா அதிகாரத்தையும் மிகவும் கண்டிப்பான, சர்வாதிகாரமான முறையில் தன்னிடம் குவித்துக் கொள்வது இதற்கு மிகவும் அவசியம். இதே பிளாங்கீவாதிகளைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த கம்யூன் உண்மையில் என்ன செய்தது? மாநிலங்களிலிருந்த பிரெஞ்சு மக்களுக்கு அது வெளியிட்ட எல்லாப் பிரகடனங்களிலும்

எல்லா பிரெஞ்சுக் கம்யூன்களும் பாரிசோடு ஒரு சுதந்திர மான சம்மேளனத்தை, முதன்முறையாக உண்மையிலேயே தேசத்திலுலேயே உருவாக்கப்படுகின்ற தேசிய ஸ்தா பனத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. முந்திய மத்தியப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின், இராணு வத்தின், அரசியல் போலீசின், அதிகார வர்க்கத்தின் ஒடுக் கும் சக்தி—இது 1798ல் நெப்போலியனால் ஏற்படுத்தப்பட்டு அதன் பிறகு வந்த ஒவ்வொரு புதிய அரசாங்கத்தினாலும் உபயோகமுள்ள கருவி என்று எடுத்துக்கொள்ளப்பட்டுத் தன் எதிரிகள் மீது பிரயோகிக்கப்பட்டது—துல்லியமாக இந்தச் சக்தியே எங்கும் வீழ்ச்சியடைய இருந்தது. அது பாரிசில் ஏற்கெனவே வீழ்ந்து விட்டது.

தொழிலாளி வர்க்கம் ஒரு தடவை அதிகாரத்துக்கு வந்துவிட்ட பிறகு பழைய அரசு இயந்திரத்தை வைத்துக் கொண்டு தொடர்ந்து செயலாற்ற முடியாது என்பதை அங்கீ கரிக்குமாறு கம்யூன் தொடக்கத்திலிருந்தே நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தது. சிறிது காலத்துக்கு முன்பு வென்றெடுத் திருக்கும் தலைமையை அது மறுபடியும் இழக்காமலிருக்க வேண்டுமென்றால் ஒரு பக்கத்தில் தொழிலாளி வர்க்கம் முன்பு தனக்கெதிராக உபயோகிக்கப்பட்ட பழைய ஒடுக்கு முறை இயந்திரத்தை ஒழிக்க வேண்டும், மறு பக்கத்தில், தன்னுடைய சட்டமன்றப் பிரதிநிதிகள் அதிகாரிகள் அனை வரும் விதிவிலக்கில்லாமல் எந்த நேரத்திலும் திருப்பி யழைக்கப்படக் கூடியவர்களே என்று அறிவித்து அவர்களுக்கு எதிராகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பழைய அரசின் தனிச்சிறப்பான குணம்சம் என்ன? சமூகம் தன்னுடைய பொது நன்மைகளை கவனித்துக் கொள் வதற்கு சொந்த உறுப்புக்களைப் படைத்திருக்கிறது, தொடக் கத்தில் சாதாரணமான உழைப்புப் பிரிவினை மூலம் இதைச் செய்தது. ஆனால் இந்த உறுப்புக்கள்—அவற்றுக்குத் தலைமை யாக அரசு அதிகாரம் இருந்தது—காலப்போக்கில் தங் களுடைய சொந்த விசேஷமான நலன்களைப் பின்பற்றிச் செல்லும் பொழுது சமூகத்தின் ஊழியர்கள் என்பதிலிருந்து சமூகத்தின் எசமானர்களாகத் தங்களை அமைத்துக் கொண் டன. இதை மரபு வழி முடியாட்சியில் மட்டுமல்ல, அதே அளவுக்கு ஜனநாயகக் குடியரசிலும் காண முடியும். ''அரசி யல்வாதிகள்'' தேசத்திலிருந்து மிகவும் தனியான, வலிமை

மிக்க பகுதியாக அமைந்திருப்பது வட அமெரிக்காவிலிருப்பதைப் போல வேறு எங்குமில்லை. அங்கே மாறி மாறிப் பதவிக்கு வருகின்ற இரண்டு பெருங் கட்சிகள் ஒவ்வொன்றுமே அரசியலை வியாபாரமாக வைத்திருக்கின்ற நபர்களால், மத்தியிலும் மாநிலங்களிலும் உள்ள சட்டசபைகளின் இடங்களுக்குச் சூதாடுபவர்களால் அல்லது தங்களுடைய கட்சியின் பெயரால் கிளர்ச்சி நடத்திப் பிழைப்பவர்கள், கட்சி வெற்றியடைந்ததும் பதவிகளை வெகுமதிகளாகப் பெறுபவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. இந்த நுகத்தடி பொறுக்க முடியாததாகிவிட்டது. அதைத் தூக்கியெறிவதற்கு அமெரிக்கர்கள் முப்பது வருடங்களாக மிகவும் பாடுபட்ட போதிலும் ஊழல் என்ற சதுப்பு நிலத்தில் மேன்மேலும் ஆழமாக அமுங்கிக் கொண்டிருக்கிறார்கள். சமூகத்தின் கருவியாக இருக்குமென்று ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்ட அரசு அதிகாரம் சமூகத்தைப் பொறுத்தவரையிலும் தன்னைச் சுதந்திரமானதாகச் செய்கின்ற நிகழ்வுப் போக்கு எப்படி நடைபெறுகிறது என்பதைத் துல்லியமாக அமெரிக்காவிலேதான் நாம் மிகவும் சிறப்பாகக் காண்கிறோம். இங்கே பரம்பரை ஆட்சியோ, பிரபுக்களோ, கிடையாது. சிகப்பு இந்தியர்களைக் கண்காணிப்பதற்காக உள்ள சில நபர்களைத் தவிர நிரந்தரமான இராணுவம் என்பது கிடையாது. நிரந்தரமான பதவிகள் அல்லது ஓய்வூதிய உரிமைகள் உள்ள அதிகார வர்க்கம் கிடையாது. ஆனால் இங்கே அரசியல் சூதாடிகளைக் கொண்ட இரண்டு மாபெரும் கோஷ்டிகள் இருக்கின்றன. இவர்கள் அரசியல் அதிகாரத்தை மாறி மாறிப் பெற்று மிகவும் ஊழலான நோக்கங்களுக்கு மிகவும் ஊழலான முறைகளில் அதைப் பயன்படுத்துகிறார்கள். பெயரளவுக்கு நாட்டின் ஊழியர்களாகவும் உண்மையில் அதன் மேல் ஆதிக்கம் செலுத்தி அதைக் கொள்ளையடிக்கின்ற அரசியல்வாதிகளின் இரண்டு மாபெரும் கார்த்தெல்களுக்கு எதிராக நாடு சக்தியில்லாதிருக்கிறது.

அரசும் அரசின் உறுப்புக்களும் சமூகத்தின் ஊழியர்கள் என்ற நிலையிலிருந்து சமூகத்தின் எசமானர்கள் என்ற நிலைக்கு மாற்றமடைவது முன்பிருந்த எல்லா அரசுகளிலும் தவிர்க்க முடியாதது. இந்த மாற்றம் ஏற்படாமல் செய்வதற்காகக் கம்யூன் இரண்டு உறுதியான வழிகளைக் கடைப்பிடித்தது. முதலாவதாக, நிர்வாகம், நீதி மற்றும் கல்வித்துறைப்

பதவிகள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட அனைவருடைய பொது வாக்கெடுப்பின் மூலம் நியமனம் செய்தது. மேலும் அதே வாக்காளர்களுக்கு எந்த சமயத்திலும் அவர்களைத் திரும்ப அழைக்கின்ற உரிமையையும் கொடுத்தது. இரண்டாவதாக, எல்லா அதிகாரிகளுக்கும் (உயர்ந்த பதவியோ, தாழ்ந்த பதவியோ) மற்ற தொழிலாளர்களுக்குத் தந்த ஊதியத்தை மட்டுமே கொடுத்தது. கம்யூன் ஒரு ஊழியருக்குக் கொடுத்த அதிகமான சம்பளம் 6,000 பிராங்குகளே. இவ்விதத்தில் பதவி வேட்டைக்கும் சுய முன்னேற்ற மோகத்துக்கும் உறுதியான தடை போடப்பட்டது. இவற்றைத் தவிர பிரதிநிதித்துவ சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குக் கருரான ஆணைகள் தரப்பட்டன.

கம்யூன் முந்திய அரசு அதிகாரத்தை நொறுக்கி அதனிடத்தில் ஒரு புதிய, ஜனநாயக அதிகாரத்தை ஏற்படுத்தியது உள்நாட்டுப் போரின் மூன்றாவது பகுதியில் நுணுக்கமாக வர்ணிக்கப்படுகிறது. எனினும் அதன் கூறுகளில் சிலவற்றைப் பற்றி இங்கே மறுபடியும் சுருக்கமாக எழுத வேண்டும். ஏனென்றால் ஜெர்மனியில் குறிப்பாக, அரசைப் பற்றி முட்டாள்தனமான நம்பிக்கை தத்துவஞானத்திலிருந்து முதலாளி வர்க்கத்தினருடைய உணர்வில் பல தொழிலாளர்களின் உணர்வில் கூடப் பொதுவாகக் கலந்து விட்டது. தத்துவஞானக் கருதுகோளின்படி அரசு என்பது ''பரமகருத்தின் ஈடேற்றம்'' அல்லது பூமியில் கடவுளின் இராஜ்யம் என்று சொல்லப்படுகிறது. அதாவது நிரந்தரமான உண்மையும் நீதியும் வாழ்கின்ற அல்லது வாழப் போகின்ற துறை என்று தத்துவஞானச் சொற்களில் மாற்றிச் சொல்லலாம். இதிலிருந்து அரசு மற்றும் அதனோடு சம்பந்தமுள்ள எல்லாவற்றையும் பற்றி மூடநம்பிக்கையான பக்தி தொடர்கிறது. சமூக முழுமைக்கும் பொதுவான விவகாரங்களையும் நலன்களையும் அவை கடந்த காலத்தில் பார்க்கப்பட்ட முறையிலன்றி அதாவது அரசு மற்றும் அதில் கொழுத்த சம்பளம் வாங்குகின்ற அதிகாரிகளின் மூலமாக அன்றி வேறு விதமாகப் பார்க்கக் கூடாது என்று மக்கள் தம் குழந்தைப் பருவத்திலிருந்தே கற்பனை செய்யப் பழகிவிட்டதால் இந்தக் கருத்து மிகச் சுலபமாக வேரூன்றி விடுகிறது. மக்கள் மரபு வழி முடியாட்சியில் தங்களுடைய நம்பிக்கையைக் கைவிட்டு ஜன

நாயகக் குடியரசின் பெயரால் சத்தியம் செய்யத் தொடங்கியவுடன் தாங்கள் மிகவும் துணிச்சலாக ஒரு காலடியை முன்னால் வைத்துவிட்டதாக நினைக்கிறார்கள் எனினும் யதார்த்தத்தில் அரசு என்பது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை ஒடுக்குகின்ற இயந்திரம் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை, இது முடியாட்சியைப் போல ஜனநாயகக் குடியரசுக்கும் உண்மையானதே. எவ்வளவு தாராளமாகப் பார்த்தாலும் அரசு என்பது, வர்க்கத் தலைமைக்கான போராட்டத்தில் வெற்றியடைந்த பாட்டாளி வர்க்கம் மரபு வழியாகப் பெற்ற தீமையே. புதிய, சுதந்திரமான சமூக நிலைமைகளில் வளர்ச்சியடைந்த தலைமுறை அரசு என்ற மொத்த மரத்தையும் குப்பைக் கிடங்கில் தூக்கியெறிய முடியும் காலம் ஏற்படுகின்ற வரையில் வெற்றியடைந்த பாட்டாளி வர்க்கமும் கம்யூனைப் போலவே அதன் மோசமான பகுதிகளை இயன்ற அளவுக்கு வெட்டிப் போடாமலிருக்க முடியாது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்! சமீப காலத்தில் இந்த வார்த்தைகளைக் கேட்டு சமூக-ஜனநாயக அற்பவாதி மிகவும் பீதியடைந்து நடுங்குகிறார். நல்லது. சரி. கனவான்களே! இந்த சர்வாதிகாரம் எப்படி இருக்குமென்று அறிய நீங்கள் விரும்புகிறீர்களா? பாரிஸ் கம்யூனைப் பாருங்கள். அதுதான் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம்.

பாரிஸ் கம்யூன் 20வது
ஆண்டு விழா—
**லண்டன்,** மார்ச் 18,1891

**பி. எங்கெல்ஸ்**

மூலம் ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

## "1891ம் வருட சமூக-ஜனநாயக வேலைத்திட்ட நகலின் விமர்சனம்"

என்பதிலிருந்து

## II அரசியல் கோரிக்கைகள்

நகலின் அரசியல் கோரிக்கைகளில் ஒரு மாபெரும் தவறு செய்யப்பட்டிருக்கிறது. எது இருக்க வேண்டுமோ அது சிறிதும் இடம் பெறவில்லை. எல்லா பத்து கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நம்முடைய பிரதான அரசியல் இலட்சியத்தை சாதிப்பதற்கு மிகவும் பல் வேறுன வழிகள் நமக்குக் கிடைக்கும் என்பது உண்மையே; ஆனுல் அந்த இலட்சியத்தைச் சாதிக்க முடியாது. மக்களுக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் வழங்கப்படுகின்ற உரிமைகளைப் பொறுத்தவரை இராஜாங்க அரசியலமைப்பு—கருராகப் பார்க்கும் பொழுது—1850ம் வருடப் பிரஷ்ய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரதியே. பிரஷ்ய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துக்கள் மிகவும் பிற்போக்கானவை. அவை உண்மையான எல்லா அதிகாரத்தையும் அரசாங்கத்துக்குக் கொடுக்கின்றன; ஆனுல் சட்ட மன்றங்கள் வரிகளை நிராகரிப்பதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லை. அரசியல் சட்டச் சண்டை நடைபெற்ற கால கட்டத்தின் போது[101] அரசாங்கம் அரசியலமைப்புச் சட்டத்தை விருப்பம் போல மாற்றிக் கொள்ள முடியும் என்பதை அது நிரூபித்தது. பிரஷ்ய சட்ட மன்றத்தின் உரிமைகள் தான் ரைஹ்ஸ்டாகுக்குக் (நாடாளு மன்றத்துக்கு) கொடுக்கப்பட்டிருக்கின்றன; அதனுல் தான் லீப்க்னெஹ்ட் ரைஹ்ஸ்டாக் எதேச்சாதிகாரத்தின் மூடுதிரை என்று வர்ணித்தார். இந்த அரசியலமைப்புச் சட்டத்தையும் அது ஏற்படுத்தியுள்ள சிறிய அரசுகள் அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு, பிரஷ்யாவுக்கும் ரைஸ்-

கிரைஸ்-ஷிலேஸ்-லொபென்ஸ்டைனுக்கும் ...இடையில்[102]— ஒரு அரசின் பரப்பளவு எத்தனை சதுர மைல்களோ அத்தனை சதுர அங்குலங்களை அடுத்த அரசு கொண்டிருக்கிறது— ''ஒற்றுமையை'' அடிப்படையாகக் கொண்டு ''உழைப்பின் அனைத்துக் கருவிகளையும் பொதுவான உடைமையாக மாற்ற'' விரும்புவது வெளிப்படையான அபத்தமே.

எனினும் அதைப் பற்றி எழுதுவது ஆபத்தானது. எனி னும் அதை ஏதாவதொரு வழியில் தாக்க வேண்டும். சமூக-ஜனநாயகப் பத்திரிகைகளில் பெரும் பகுதியில் பரவிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பவாதம் இந்த சமயத்தில் இது எவ்வளவு அவசியம் என்பதைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது. அவர்கள் சோஷலிஸ்ட் எதிர்ப்புச் சட்டம் மறுபடியும் கொண்டுவரப்படலாம் என்று அஞ்சி அல்லது அந்தச் சட்டம் அமுலிலிருந்த காலத்தில் கூறப்பட்ட எல்லா விதமான அதிக அவசரமான கூற்றுக்களையும் நினைவு படுத்திக்கொண்டு ஜெர்மனியில் இன்றைக்குள்ள சட்ட நீதியான அமைப்பு கட்சியின் அனைத்துக் கோரிக்கைகளையும் சமாதான வழிகளில் அடைவதற்குப் போதுமானவை என்று கட்சி கருத வேண்டுமென்று இப்பொழுது விரும்புகிறார்கள்.

''இன்றைய சமூகம் சோஷலிசத்தை நோக்கி வளர்ச்சி யடைந்து கொண்டிருக்கிறது'' என்று தன்னையும் கட்சி யையும் நம்பவைக்கின்ற முயற்சிகளே இவை. ஆனால் பழைய சமூக அமைப்பை அது அவசியமாகவே உதறிவிடுகிறதா, ஒரு நண்டு தன்னுடைய ஓட்டை உடைத்துவிடுவதைப் போல இந்தப் பழைய ஓட்டை பலவந்தமாக உடைத்துக் கொண்டு வரவேண்டாமா, மேலும் ஜெர்மனியில் கூடுதலாக இன்னும் அரை-எதேச்சாதிகார விலங்குகளை, அதைத் தவிர வும் வர்ணிக்க முடியாத படிக் குழப்பமடைந்திருக்கும் அரசியல் அமைப்பை நொறுக்க வேண்டாமா என்று அவர் கள் தம்மைக் கேட்டுக்கொள்வதில்லை. மக்களின் பிரதிநிதி கள் எல்லா அதிகாரத்தையும் தங்களிடம் வைத்திருக்கின்ற நாடுகளில்—அங்கே பெரும்பான்மையான மக்களுடைய ஆதரவு இருந்தால் ஒருவர் தான் சரி என்று கருதுகின்ற வற்றை சட்டபூர்வமான வழியில் செய்ய முடியும்— பழைய சமூகம் சமாதானமான வழியில் புதிய சமூகமாக வளர்ச்சி அடைவதை ஒருவர் கற்பனை செய்ய முடியும்; பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவைப் போன்ற ஜனநாயகக்

குடியரசுகளில், பிரிட்டனைப் போன்ற முடியரசுகளில். பிரிட்டனில் அரச பரம்பரை நட்ட ஈடாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு முடிதுறப்பது நாள்தோறும் பத்திரிகைகளில் விவாதிக்கப்படுகிறது, மக்களுக்கு எதிராக அரச பரம்பரை பலமற்றதாக இருக்கிறது. ஆனால் ஜெர்மனியில் அரசாங்கம் அநேகமாக சர்வ வல்லமை படைத்ததாக இருக்கிறது, ரைஹ்ஸ்டாகும் மற்ற பிரதிநிதித்துவ அமைப்புக்கள் அனைத்தும் உண்மையான அதிகாரம் இல்லாதிருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட ஒன்றை ஜெர்மனியில் ஆதரிப்பது, அதிலும் அதற்கு அவசியமில்லாத நேரத்தில் அதைச் செய்வது எதேச்சாதிகாரத்தின் மூடுதிரையை அகற்றிவிட்டு அதன் நிர்வாணத்தை மறைக்கின்ற திரையாகத் தானே மாறுவது என்று தான் அர்த்தம்.

இத்தகைய கொள்கை நெடுங்கால நோக்கில் கட்சியைத் தவறான பாதையில் இட்டுச் செல்வதற்கு மட்டுமே உதவும். அவர்கள் பொதுப்படையான, சூக்குமமான அரசியல் பிரச்சினைகளை முன்னணிக்குத் தள்ளுகிறார்கள்; அதன் மூலம் உடனடியான ஸ்தூலமான பிரச்சினைகளை மூடி மறைக்கிறார்கள். அவை முதல் மாபெரும் சம்பவங்களின் தருணத்தில், முதல் அரசியல் நெருக்கடியின் போது தாமாகவே தம்மை முன்னிலைப்படுத்தும். தீர்மானமான தருணத்தில் கட்சி திடீரென்று உதவியில்லாதபடி நிற்கும், தீர்மானமான பிரச்சினைகளில் நிச்சயமின்மையும் வேற்றுமையும் ஆட்சி செய்யும்—ஏனென்றால் இந்தப் பிரச்சினைகள் ஒரு போதும் விவாதிக்கப்படவில்லை—என்பவற்றைத் தவிர இதனால் வேறு என்ன விளைவு ஏற்படும்? காப்பு வரிகளைப் பற்றி, அவை முதலாளி வர்க்கம் மட்டுமே அக்கறை காட்ட வேண்டிய பிரச்சினை, தொழிலாளர்களின் நலன்களைச் சிறிதளவு கூட பாதிக்காது, அதாவது அந்த விஷயத்தில் எவரும் விருப்பப்படி வாக்களிக்கலாம் என்று சொல்லப்பட்டது. அப்பொழுது நடைபெற்றது மறுபடியும் ஏற்பட வேண்டுமா? ஏராளமானவர்கள் தற்பொழுது எதிர் முனைக்குப் போகவில்லையா? காப்பு வரிகளில் மயங்கிக்கிடக்கும் முதலாளி வர்க்கத்துக்கு மாறு பட்ட முறையில் அவர்கள் காப்டேன் மற்றும் பிரைட்டின் பொருளாதாரத் திரிபுகளை—இந்தக் கலப்படமில்லாத மான்செஸ்டர்வாதத்தை[103] — மிகவும் தூய்மையான சோஷலிசம் என்று போதிக்கவில்லையா? மிகப் பெரிய, பிர

தான இலக்குகளை அன்றாடம் தோன்றி மறைகின்ற நலன்களுக்காக இப்படி மறப்பது, பின்னால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பொருட்படுத்தாமல் அந்தத் தருணத்தின் வெற்றிக்காக இப்படிப் போராடுவதும் முயற்சிப்பதும், இயக்கத்தின் எதிர்காலத்தை அதன் நிகழ்காலத்துக்காக இப்படி பலியிடுவது—இது ''நேர்மையுடன்'' செய்யப்பட்டதாக இருந்தாலும்—அது சந்தர்ப்பவாதமே. ஒரு வேளை ''நேர்மையான'' சந்தர்ப்பவாதமே எல்லாவற்றையும் காட்டிலும் மிகவும் ஆபத்தாகும்.

இந்தச் சிக்கலான, ஆனால் மிகவும் முக்கியமான அம்சங்கள் எவை?

ஒன்று, ஏதாவதொரு விஷயம் நிச்சயமானதென்றால், அது நம்முடைய கட்சியும் தொழிலாளி வர்க்கமும் ஜனநாயகக் குடியரசு என்ற அமைப்பின் கீழ்தான் அதிகாரத்தைப் பெற முடியும் என்பதே. மாபெரும் பிரெஞ்சுப் புரட்சி ஏற்கெனவே எடுத்துக்காட்டியதைப் போல இது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் கூடப் பிரத்யேக வடிவமாக இருக்கிறது. நம்முடைய மிகச்சிறந்த நபர்கள் மிக்கேலைப் போல ஒரு சக்கரவர்த்தியின் கீழ் அமைச்சராவதைக் கற்பனை செய்ய முடியாது. குடியரசுக் கோரிக்கையை நேரடியாக வேலைத்திட்டத்தில் சேர்ப்பது சட்ட ரீதியாகப் பார்க்கும் பொழுது தக்கதல்ல எனத் தோன்றுகிறது, ஆனால் பிரான்சில் லுயீ ஃபிலீப்பின் கீழ் கூட இது சாத்தியமாக இருந்தது, இத்தாலியில் இப்பொழுது சாத்தியமே. ஆனால் ஜெர்மனியில் ஒரு குடியரசுக் கோரிக்கையைக் கூட வேலைத் திட்டத்தில் பகிரங்கமாக முன்வைப்பதற்குக் கட்சி அனுமதிக்கப்படவில்லை என்ற உண்மை ஒரு குடியரசை—குடியரசை மட்டுமல்ல, ஒரு கம்யூனிஸ்ட் சமூகத்தையும்—சொகுசான, சமாதான பூர்வமான வழியில் நிறுவ முடியும் என்ற நம்பிக்கை எந்த அளவுக்கு முற்றிலும் தவறு என்பதை நிரூபிக்கிறது.

எனினும் குடியரசு பற்றிய பிரச்சினையை விட்டுவிடுவது சாத்தியமே. ஆனால் என்னுடைய கருத்தில் **எல்லா அரசியல் அதிகாரமும் பொது மக்களின் பிரதிநிதிகளிடம் குவிக்கப்பட வேண்டும்** என்ற கோரிக்கை சேர்க்கப்பட வேண்டியதாகும், சேர்க்கப்பட முடியும். இதற்கு மேல் போக முடியாதென்றால் இப்பொழுது இதுவே போதும்.

இரண்டு, ஜெர்மனியைத் திருத்தியமைத்தல். ஒரு பக்கத்தில் சிறு அரசுகளைக் கொண்ட அமைப்பு ரத்துச் செய்யப்பட வேண்டும்: பவேரியா-வுர்ம்பர்க் விசேஷ உரிமைகள்[104] இருக்கும் பொழுது புரட்சி செய்ய முயன்று பாருங்கள். உதாரணமாக, துரீங்கியாவின் பூகோளப்படத்தைப் பாருங்கள். எவ்வளவு பரிதாபக் காட்சி! மறுபக்கத்தில், பிரத்யேகமான பிரஷ்யவாதம் ஜெர்மனியை அமுக்குவதை நிறுத்த வேண்டுமென்றால் பிரஷ்யா இனியும் இருக்கக் கூடாது, அது சுயாட்சி அதிகாரம் கொண்ட மாநிலங்களாகப் பிரிவினை செய்யப்பட வேண்டும். இன்று ஜெர்மனியை ஒரு கிடுக்கியைப் போல இறுக்கிக் கொண்டிருக்கும் எதிர் ஆய்வுரையின் இரண்டு பக்கங்களே சிறு அரசுகள் என்ற அமைப்பும் பிரஷ்யவாதமும். இதில் ஒரு தரப்பு மறு தரப்பு நீடிப்பதற்குக் காரணமாகவும் நியாயமாகவும் எப்பொழுதும் உதவி செய்யும்.

அதற்கு பதிலாக எதை ஏற்படுத்துவது? பாட்டாளி வர்க்கம் ஒரு குடியரசு, பிரிக்கப்பட முடியாத குடியரசு என்ற வடிவத்தை மட்டுமே உபயோகிக்க முடியும் என்பது என்னுடைய கருத்தாகும். அமெரிக்காவின் பரந்தகன்ற பிரதேசத்தில் கூட்டாட்சிக் குடியரசு—கிழக்கு அரசுகளில் அது ஏற்கெனவே ஒரு தீமையாகிவிட்ட போதிலும்—மொத்தத்தில் இன்னும் அவசியமாகவே இருக்கிறது. நான்கு தேசிய இனங்கள் இரண்டு தீவுகளில் வசிக்கும் பிரிட்டனில் அது முன்னே வைக்கப்பட்ட காலடியாக இருக்கும். அங்கே ஒரு நாடாளுமன்றம் இருந்த போதிலும் மூன்று வெவ்வேறான சட்டமியற்றும் முறைகள் ஏற்கெனவே அடுத்தடுத்து இருக்கின்றன. சிறு நாடாகிய ஸ்விட்சர்லாந்தில் அது நெடுங்காலமாகவே தீமையாக இருந்து வந்திருக்கிறது. ஐரோப்பிய அரசு அமைப்பில் அந்த நாடு முற்றிலும் செயல்படாத உறுப்பினராக இருக்கவிரும்புவதால் மட்டுமே அது பொறுத்துக் கொள்ளப்படுகிறது. ஸ்விட்சர்லாந்தை மாதிரியாகக் கொண்டு ஜெர்மனியைக் கூட்டாட்சி அரசாக்குவது பின்னால் எடுத்துவைக்கப்பட்ட மாபெரும் காலடியாக இருக்கும். அரசுகளின் ஒன்றியம் முற்றிலும் ஒற்றுமையான அரசிலிருந்து இரண்டு விஷயங்களில் வேறுபட்டிருக்கிறது: முதலாவதாக, உறுப்பாகவுள்ள ஒவ்வொரு அரசும் ஒவ்வொரு காண்டனும் தனியான சிவில், கிரிமினல், சட்டமன்ற, நீதி

முறை அமைப்பைக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றத்துடன் கூட்டரசுச் சட்டமன்றமும் இருக்கிறது; அதில் கான்டன்கள் —பெரியவையோ, சிறியவையோ எப்படி இருந்தாலும்— காண்டன்கள் என்ற முறையில் வாக்களிக்கின்றன. நாம் முதல் வேறுபாட்டை அதிர்ஷ்டவசமாக அகற்றிவிட்டோம்; அதை மறுபடியும் ஏற்படுத்துகின்ற அளவுக்கு நாம் குழந்தைகள் அல்ல. இரண்டாவது ஒன்றியக் கவுன்சில் (Bundesrat) என்ற வடிவத்தில் இருக்கிறது. அதை விட்டுவிடுவது நமக்கு நன்மையே. ஏனென்றால் நம்முடைய "கூட்டாட்சி அரசு" பொதுவில் ஒற்றுமையான அரசை நோக்கி ஒரு மாற்றமாக இருக்கிறது. 1866 மற்றும் 1870ம் வருடங்களின் போது மேலேயிருந்து நடைபெற்ற புரட்சியைத் திருப்பி விடக் கூடாது, கீழேயிருந்து ஏற்படுகின்ற ஒரு இயக்கத்தினுல் அதன் குறைகளைப் போக்கி முன்னேற்ற வேண்டும்.

ஆகவே இனி ஒரு ஒற்றுமையான குடியரசு. ஆனால் இன்றுள்ள பிரெஞ்சுக் குடியரசு போன்றது என்று அர்த்தமல்ல. அது 1798இல் ஏற்படுத்தப்பட்ட சக்கரவர்த்தி இல்லாத பேரரசு[105] என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை. 1792 முதல் 1798 முடிய ஒவ்வொரு பிரெஞ்சு மாவட்டமும் ஒவ்வொரு கம்யூனும் அமெரிக்காவை மாதிரியாகக் கொண்டு முற்றிலும் சுய அரசாங்கத்தைப் பெற்றிருந்தன. நமக்கு வேண்டியது இதுவே. சுய அரசாங்கத்தை எப்படி அமைக்க வேண்டும், அதிகார வர்க்கம் இல்லாமல் எப்படி நிர்வகிக்க வேண்டும் என்பதை அமெரிக்காவும் முதல் பிரெஞ்சுக் குடியரசும் நமக்கு எடுத்துக்காட்டியுள்ளன. ஆஸ்திரேலியாவும், கனடாவும் மற்ற ஆங்கிலக் காலனிகளும் இன்றளவும் கூட எடுத்துக் காட்டி வருகின்றன. இப்படிப்பட்ட மாநில மற்றும் கம்யூன் சுய அரசாங்கம், உதாரணமாக ஸ்விட்சர்லாந்தின் கூட்டாட்சியைக் காட்டிலும் மிகவும் சுதந்திரமானது. ஸ்விட்சர்லாந்துக் கட்டாட்சியில் கூட்டரசைப் பொறுத்த வரை காண்டன் மிகவும் சுதந்திரமானது, அதே சமயத்தில் மாவட்டம் மற்றும் கம்யூனைப் பொறுத்த மட்டிலும் கூட சுதந்திரமாகவே இருக்கிறது. காண்டன் அரசாங்கங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்களையும் நியமிக்கின்றன. ஆங்கில மொழி பேசப்படுகின்ற நாடுகளில் இந்த முறை பின்பற்றப்படவில்லை. எதிர்காலத்தில் பிரஷ்யாவின் Landrate

மற்றும் Regierungsrateஐப் போல இதையும் உறுதியாக ஒழிக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

இந்த விஷயங்களில் சில வேலைத்திட்டத்தில் அநேகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். நான் பிரதானமாக ஜெர்மனியில் இருக்கின்ற அமைப்பை—அங்கே இந்த விஷயங்களை பகிரங்கமாக விவாதிக்க முடியாது—வர்ணிப்பதற்காகவும் மற்றும் அத்தகைய அமைப்பை சட்டபூர்வமான முறையில் கம்யூனிஸ்ட் சமூகமாக மாற்றுவதற்கு விரும்புகின்ற நபர்களின் சுயமோசடியை வலியுறுத்துவதற்காகவும் இவற்றைக் குறிப்பிடுகிறேன். மேலும் மக்கள் நேரடியாகச் சட்டமியற்றுதல்; இலவசமான நீதிநிர்வாக முறை—இவை இல்லாமலும் நாம் முடிவில் வாழ முடியும்—ஆகியவற்றைத் தவிர மற்ற முக்கியமான அரசியல் பிரச்சினைகளும் இருக்கின்றன என்று கட்சியின் நிர்வாகக் குழுவுக்கு நினைவுபடுத்துவதும் என்னுடைய நோக்கமாகும். இன்றைய பொதுவான, ஸ்திரமில்லாத நிலைமைகளில் இந்தப் பிரச்சினைகள் எந்த நேரத்திலும் அவசரமாகிவிடலாம். நாம் இவற்றை ஏற்கெனவே விவாதித்து இவை பற்றி ஒரு உடன்பாட்டுக்கு வரவில்லை என்றால் என்ன நடக்கும்?

எனினும் பின்வரும் கோரிக்கையை வேலைத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள முடியும்; நேரடியாகச் சொல்ல முடியாதவற்றை குறைந்த பட்சம் மறைமுகமாக உணர்த்த அது உதவும்:

''பொது வாக்குரிமையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளின் மூலம் மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் கம்யூன்களிலும் முழுமையாக சுய அரசாங்கம். ஸ்தலங்களுக்கும் மாகாணங்களுக்கும் அரசு நியமித்த எல்லா அதிகாரிகளையும் ரத்துச் செய்தல்''.

*1891 ஜூன் 18 மற்றும் 29ந் தேதிகளுக்கு இடையில் எழுதப்பட்டது*

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

# ஜோவான்னி போவியோவுக்கு பதில்

பிப்ரவரி 2ந் தேதிய *Tribuna* பத்திரிகையில்[106] அச்சிடப்பட்டிருக்கும் கட்டுரையில் புகழ்மிக்க ஜோவான்னி போவியோ சமீபத்தில் முடியாட்சி முகாமில் சேர்ந்த இத்தாலிய சட்ட மன்றக் குடியரசுவாத உறுப்பினர்களை அரசாங்க வடிவத்தைப் பற்றிய பிரச்சினையை அலட்சியப்படுத்துவதற்காகக் குறை கூறியிருக்கிருர். இதைப் பற்றி எனக்கு அதிகமான அக்கறை இல்லை. பொதுவாக ஜெர்மன் சோஷலிஸ்டுகளைப் பற்றியும் குறிப்பாக என்னைப் பற்றியும் அதே கண்டனத்தைச் சொல்வதற்கு ஜெர்மன் சோஷலிசத்தைப் பற்றி நான் எழுதிய கட்டுரையை (*Critica Sociale*[107], ஜனவரி 16, 1892) அவர் உபயோகிப்பதைப் பற்றித் தான் எனக்கு அக்கறை.

அவர் பின்வருமாறு எழுதியிருக்கிருர்:

''சமீபத்திய எதிர்காலத்தில் சோஷலிஸ்டுகள் அதிகாரத்துக்கு வர முடியும் என்று பிரெடெரிக் எங்கெல்சுடன் சேர்ந்து கூறுகின்ற—ஆனல் அது எப்படிப்பட்ட அதிகாரம் என்று வரையறுத்துக் கூருத—சோஷலிஸ்டுகள் எத்தகைய தவறைச் செய்கிருர்கள், ஏன் செய்கிருர்கள் என்பதை இதில் காண முடியும். ஜெர்மனியின் நாடாளுமன்றத்தில் சோஷலிஸ்டுகள் பெரும்பான்மையை அடையப் போகின்ற அந்த அதிகமான தொலைவில் இல்லாத எதிர்காலத்தை எங்கெல்ஸ் கணித முறைகளின் மூலம் (வரலாற்றில் எண்கள் எப்பொழுதுமே நல்ல சான்றுக எனக்குத் தோன்றுவதுண்டு) ஓரளவுக்கு நிர்ணயிக்கிருர். இது சிறப்பான வாதமே: பிறகு?

''அது அதிகாரத்தைக் கைப்பற்றும்.

''மிகவும் சிறப்பானதே: ஆனால் எந்த அதிகாரம்? அது முடியாட்சி அதிகாரமா அல்லது குடியாட்சி அதிகாரமா அல்லது மிக முந்திய காலமான 1848 ஜனவரியில் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை தனக்குப் பின்னால் விட்டுவந்த வைத்லிங்கின் கற்பனை உலகத்துக்குக் கட்சி திரும்புமா?

''வடிவம் நமக்கு முக்கியமல்ல.

உண்மையாகவா?... ஆனால் அதிகாரம் ஸ்தூலமான வடிவத்தைக் கொண்டிருக்கும் பொழுதுதானே ஒருவர் அதைப் பற்றிப் பேச முடியும். புதிய வஸ்து, புதிய கருத்து தானாகவே வடிவத்தைப் படைக்கும், தன்னிடமிருந்தே அதை உற்பத்தி செய்யும் என்று கருதலாம். ஆனால் அதைப் புறக்கணிக்க முடியாது, புறக்கணிக்கக் கூடாது''.

புகழ் மிக்க போவியோவின் விளக்கத்தை நான் முற்றிலும் நிராகரிக்கிறேன் என்பது இதற்கு என்னுடைய பதில்.

எல்லாவற்றுக்கும் முதலாவதாக, ''சோஷலிஸ்ட் கட்சி பெரும்பான்மையை வென்று அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும்'' என்று நான் உறுதியாகச் சொல்லவில்லை. அதற்கு மாறாக, அதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே நம்முடைய ஆட்சியாளர்கள் நமக்கு எதிராக வன்முறையைப் பயன்படுத்துவார்கள் என்று பத்துக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது, இது நம்மை நாடாளுமன்றப் போராட்ட அரங்கத்திலிருந்து புரட்சிகர அரங்கத்துக்குக் கொண்டு போகும் என்பதை நான் வலியுறுத்தியிருக்கிறேன். ஆனால் நாம் தொடர்வோம்:

''அது அதிகாரத்தைக் கைப்பற்றும்—ஆனால் எந்த அதிகாரம்? அது முடியாட்சி அதிகாரமா அல்லது குடியாட்சி அதிகாரமா அல்லது மிக முந்திய காலமான 1848 ஜனவரியில் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை தனக்குப் பின்னால் விட்டுவந்த வைத்லிங்கின் கற்பனை உலகத்துக்குக் கட்சி திரும்புமா?''

இங்கே புகழ்மிக்க போவியோ உபயோகித்த ஒரு சொற்றொடரை உபயோகிக்க உத்தேசிக்கிறேன். அந்த அதிகாரத்தின் தன்மையைப் பற்றி சிறிதளவு சந்தேகம் ஒருவருக்கு ஏற்பட்டாலும் அவர் ''துறவி''யாகத் தான் இருக்க வேண்டும் என்பது உண்மையே.

அரசாங்க, பிரபுத்துவ மற்றும் முதலாளி வர்க்க ஜெர்மனி முழுவதுமே ரைஹ்ஸ்டாகில் உள்ள, நம்முடைய நண்பர்களைக் குடியரசுவாதிகள், புரட்சிக்காரர்கள் என்று குற்றம் சாட்டுகிறது.

எங்களைப் பொறுத்தமட்டில் தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் நடைபெறுகின்ற போராட்டம் முதலில் ஒரு சர்வாம்சத்தன்மையைப் பெறுவதற்கும் பிறகு அதன் உச்சமாகப் பாட்டாளி வர்க்கம் தீர்மானமான வெற்றி அடைவதற்கும் உரிய ஒரே அரசியல் வடிவம்—ஜனநாயகக் குடியரசு—மட்டுமே என்று நாற்பது வருட காலம் நானும் மார்க்சும் திரும்பத் திரும்பக் கூறிவந்திருக்கிறோம்.

ஏதாவதொரு ஜெர்மன் சக்கரவர்த்தி சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து தன்னுடைய அமைச்சர்களை நியமிப்பார், அவர் அப்படி விரும்பினால் கூட, தான் முடிதுறப்பதை முன்னூகிக்கின்ற நிபந்தனைகளை ஒத்துக்கொள்வார்—அப்படியில்லாவிட்டால் கட்சியின் ஆதரவைப் பெற முடியும் என்று அந்த அமைச்சர்கள் நம்ப முடியாது—என்று கற்பனை செய்கின்ற அளவுக்குப் புகழ்மிக்க போவியோ வெகுளி அல்ல, என்பது உண்மையே. எனினும் உண்மையைச் சொல்வதென்றால் ''நாம்'' வைத்லிங்கின் கற்பனை உலகத்துக்குத் திரும்பக் கூடும்'' என்று அவர் அஞ்சுவது என்னுடன் விவாதத்தில் ஈடுபட்டிருக்கும் இந்த நபரின் வெகுளித்தனம் உண்மையாகவே கணிசமானதே என்று என்னை நினைக்கச் செய்கிறது.

அல்லது புகழ்மிக்க போவியோ வைத்லிங்கைக் குறிப்பிடும் பொழுது ஜெர்மன் சோஷலிஸ்டுகள்—அவருடைய கருத்தின்படி—அரசியல் வடிவத்துக்குத் தருகின்ற முக்கியத்துவத்தைக் காட்டிலும் கூடுதலாக சமூக வடிவத்துக்குத் தரவில்லை என்று ஒருவேளை சொல்ல விரும்புகிறாரா? அப்படியானால் அவர் மறுபடியும் தவறு செய்கிறார். ஜெர்மன் சோஷலிசம் அனைத்து உற்பத்திச் சக்திகளையும் சமூகமயமாக்குவதைக் கோருகிறது என்று புரிந்து கொள்கின்ற அளவுக்கு அவர் ஜெர்மன் சோஷலிசத்தைப் பற்றிப் போதிய அளவுக்கு அறிந்திருக்க வேண்டும். இந்தப் பொருளாதாரப் புரட்சி எந்த முறையில் நிறைவேற்றப்படும்? நம்முடைய கட்சி எத்தகைய சந்தர்ப்பங்களின் கீழ் அதிகாரத்தைக் கைப்பற்றும், அது நடைபெறுகின்ற தருணம், அதை சாதிக்கப் பயன்படுகின்ற முறைகள் ஆகியவற்றை இது பொறுத்திருக்கும். போவியோவே சொல்வதைப் போல ''புதிய வஸ்து, புதிய கருத்து தானாகவே வடிவத்தைப் படைக்கும், தன்னிடமிருந்தே அதை உற்பத்தி செய்யும்''. சம்பவங்களின் எதிர்

பாராத திருப்பத்தின் விளைவாக நாளையே நம்முடைய கட்சி அதிகாரத்தைப் பெறுகிறதென்றால் எந்த வேலைத் திட்டத்தை நான் முன்வைப்பேன் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

''வடிவம் நமக்கு முக்கியத்துவமற்றதா?''

நானோ அல்லது வேறு எந்த ஜெர்மன் சோஷலிஸ்டுமோ இக்கருத்தை அல்லது இம்மாதிரியான வேறொரு கருத்தை எக்காலத்திலும் கூறியதில்லை என்று அறிவிப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். புகழ்மிக்க போவியோ தான் இப்படிக் கூறினார். இப்படிப்பட்ட அபத்தத்தை நாங்கள் சொன்னதாக அவர் எந்த அடிப்படையில் கூறுகிறார் என்பதைத் தெரிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

நிற்க. புகழ்மிக்க போவியோ என்னுடைய கட்டுரையின் இரண்டாம் பகுதியை (*Critica Sociale*, பிப்ரவரி 1) படிக்கின்ற வரை பொறுத்திருந்தாரானால் ஜெர்மன் புரட்சிகர சோஷலிஸ்டுகளை இத்தாலிய முடியாட்சிக் குடியரசுவாதிகளுடன் குழப்புகின்ற தவறைச் செய்வதிலிருந்து தன்னைக் காத்துக் கொண்டிருப்பார்.

*1892 பிப்ரவரி 6* **பிரெடெரிக் எங்கெல்ஸ்**

*மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# பாரிசிலிருந்த போல் லஃபார்குக்கு எழுதிய கடிதத்திலிருந்து

லண்டன், மார்ச் 6, 1894

...பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தமட்டில் பாட்டாளி வர்க்கத்தின் எதிர்கால ஆட்சிக்கு உபயோகிக்கத் தயார் நிலையில் இருப்பதில் தான் குடியரசு முடியாட்சியிலிருந்து வேறுபடுகிறது. நீங்கள் ஏற்கெனவே அதைப் பெற்றிருப்பது எங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது உங்களுக்கு ஒரு சாதகமாகும். நாங்கள் அதற்காக இருபத்து நான்கு மணி நேரமும் பாடுபட வேண்டியிருக்கும். ஆனல் அரசாங்கத்தின் ஒவ்வொரு வடிவத்தையும் போல, குடியரசு அதன் உள்ளடக்கத்தினுல் நிர்ணயிக்கப்படுகிறது. அது முதலாளி வர்க்க ஆட்சியின் ஒரு வடிவமாக இருக்கின்ற வரை அது எந்த முடியாட்சியையும் போல நமக்கு அதே அளவுக்குப் பகைமையானதே (இந்தப் பகைமையின் வடிவங்கள் வெவ்வேருனவை என்பதைத் தவிர). அது சாராம்சத்தில் சோஷலிஸ்ட் வடிவத்தைக் கொண்டிருக்கிறது என்று கருதுவது அல்லது முதலாளி வர்க்கம் அதன் மேல் ஆதிக்கம் செலுத்துகின்ற பொழுது சோஷலிஸ்ட் கடமைகளை அதனிடம் ஒப்படைத்தல் முற்றிலும் ஆதாரமற்ற கற்பனையாகும். நாம் அதனிடமிருந்து சலுகைகளைப் பறிக்க முடியும், நம்முடைய சொந்தக் காரியத்தை நிறைவேற்றுவதை அதன் பொறுப்பில் ஒரு போதும் விட்டுவிடக் கூடாது; ஒரே இரவில் பெரும்பான்மையாக மாறிவிடக் கூடிய அளவுக்கு பலத்தைக் கொண்ட சிறுபான்மையினுல் அதை நிர்வகிக்க நம்மால் முடிந்தாலும் கூட...

மூலம் பிரெஞ்சு மொழியில்
எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

# "பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்சினை"

என்ற நூலிலிருந்து

## II

...அப்படியானல் சிய விவசாயிகளின் பால் நம்முடைய நிலை என்ன? நாம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற சந்தர்ப்பத்தில் சிறு விவசாயிகளிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டியிருக்கும்?

முதலாவதாக, சிறு விவசாயியின் அழிவு தவிர்க்க முடியாதது என்பதை நாம் முன்னூகிக்கிரோம். ஆனல் நாம் தலையிடுவதன் மூலமாக அதைத் துரிதப்படுத்துவது நம்முடைய வேலையல்ல என்று பிரெஞ்சு வேலைத்திட்டத்தில் சொல்லப்பட்டிருப்பது முற்றிலும் சரியானதே.

இரண்டாவதாக, அரசு அதிகாரம் நம்மிடமிருக்கும் பொழுது சிறு விவசாயிகளின் உடைமையை பலவந்தமாகப் பறிமுதல் செய்வதைப் பற்றி (நஷ்ட ஈடுகொடுத்துச் செய்வதா, கொடுக்காமலே செய்வதா என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை) சிந்திக்கவும் மாட்டோம், பெரிய நிலவுடைமையாளர்களின் விஷயத்தில் தான் அப்படிச் செய்தாக வேண்டும் என்பது வெளிப்படை. சிறு விவசாயி சம்பந்தமாக நம்முடைய கடமை என்னவென்ருல் முதலில் அவரது தனிநபர் உற்பத்தியையும் தனியுடைமையையும் கூட்டுறவு உற்பத்தியாகவும் கூட்டுறவு உடைமையாகவும் மாற்றுவது தான். இதை பலவந்தமாகச் செய்யாமல், உதாரணத்தைக் கொண்டும் இந்த நோக்கத்துக்குச் சமூக உதவியைத் தந்தும் நிறைவேற்றுவோம். அதற்குப் பிறகு சிற விவசாயிக்கு இன்றைக்குக் கூட வெளிப்படையாகத் தெரிந்திருக்க வேண்டிய எதிர்கால அனுகூலங்களைக் காட்டுவதற்கு நிறைய வழிவகைகள் நம்மிடம் இருக்கவே செய்யும்.

டென்மார்க்கில் கோப்பன்ஹேகன் என்ற ஒரே ஒரு உண்மையான நகரம் மட்டுமே இருக்கிறது. எனவே டேனிஷ் சோஷலிஸ்டுகள் அந்த நகரத்துக்கு அப்பாலுள்ள விவசாயிகள் மத்தியில் செய்யப்படுகின்ற பிரச்சாரத்தை மட்டுமே நம்பியிருந்த காரணத்தால் அவர்கள் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னரே இத்தகைய திட்டங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு கிராமத்தை அல்லது ஒரு சமயவட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள்—டென்மார்க்கில் தனிப்பட்ட பெரிய குடியிருப்புகள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றன—தங்களுடைய நிலங்களை ஒன்று சேர்த்து ஒரு பெரிய பண்ணையை ஏற்படுத்துவது. அந்தப் பண்ணையில் பொது நிர்வாகத்தில் கூட்டாக விவசாயம் செய்து, மொத்த உற்பத்தியை ஒவ்வொருவரும் கொடுத்த நிலம், பணம், உழைப்பு ஆகியனவற்றின் விகிதாச்சார அளவில் பகிர்ந்து கொள்வது என்று திட்டமிடப்பட்டது. டென்மார்க்கில் சிறு நிலவுடைமை இரண்டாந்தரமான பாத்திரத்தை மட்டுமே வகிக்கிறது. ஆனல் சிறு நிலவுடைமை இருக்கின்ற ஒரு பகுதியில் இந்தக் கருத்தை நாம் பயன்படுத்தினுல், நிலங்களை ஒன்றுசேர்த்து மொத்த நிலப்பகுதியில் பெரிய அளவில் விவசாயம் செய்தால், இதுவரை உபயோகப்படுத்தப்பட்டுவந்த உழைப்புச் சக்தியில் ஒரு பகுதி மிகையாகிவிடும் என்பது தெரியவரும். இப்படி ஏற்படுகின்ற உழைப்புச் சேமிப்பு பெரிய அளவில் நடைபெறும் விவசாயத்தில் இருக்கும் முக்கியமான சாதகங்களில் ஒன்று எனலாம். இந்த உழைப்புச் சக்தியை இரண்டு வழிகளில் உபயோகிக்கலாம். பக்கத்திலிருக்கும் பெரிய பண்ணைகளிலிருந்து நிலத்தைக் கூடுதலாகப் பெற்று அதை விவசாயக் கூட்டுறவில் வைத்துக் கொள்ளலாம், அல்லது சம்பந்தப்பட்ட விவசாயிகள் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்வதற்குரிய சாதனங்களையும் வாய்ப்பையும் ஏற்படுத்திக்கொடுக்கலாம்; இது அவர்களுக்கு ஒரு துணைத் தொழிலாகவும் முதன்மையாகவும் இயன்றவரையிலும் அவர்களுடைய உபயோகத்துக்காகவும் இருக்கும். இரண்டு வழிகளிலுமே அவர்களுடைய பொருளாதார நிலையில் அபிவிருத்தி ஏற்படும்; அதே சமயத்தில் அந்த விவசாயக் கூட்டுறவை ஒரு உயர்ந்த வடிவத்துக்குக் கொண்டு செல்வதற்கும் மொத்தத்தில் அந்தக் கூட்டுறவின் மற்றும் அதன் உறுப்பினர்களின் உரிமைகளையும் கடமைகளையும்

அந்த மொத்த சமூகத்தின் மற்ற இலாகாக்களின் உரிமைகள், கடமைகளோடு சமப்படுத்துவதற்கும் தேவையான செல்வாக்கு அந்தப் பொதுவான, சமூக நெறிப்படுத்தும் அமைப்புக்குக் கிடைக்கிறது. ஒவ்வொரு குறிப்பிட்ட உதாரணத்திலும் இதை எப்படி நிறைவேற்றுவதென்பது அந்த உதாரணத்தின் சந்தர்ப்பங்களையும், நாம் எத்தகைய நிலைமைகளின் கீழ் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறோம் என்பதையும் பொறுத்திருக்கும். இந்தக் கூட்டுறவுகளுக்கு மேலும் பல சலுகைகளைக் கொடுக்கக் கூடிய நிலைமையில் நாம் இருப்பதும் கூட சாத்தியமே. உதாரணமாக, மொத்த ஒத்திக் கடனையும் தேசிய வங்கி ஏற்றுக்கொண்டு அதே சமயத்தில் வட்டி விகிதத்தைக் கணிசமாகக் குறைப்பது; பெரிய அளவில் உற்பத்தியை ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பொது நிதியிலிருந்து முன்பணம் கொடுத்து உதவுவது (இது பிரதானமாக அல்லது கட்டாயமாகப் பணமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்றில்லாமல் இயந்திர சாதனங்கள், இரசாயன உரம் மற்றும் இதர தேவையான பொருள்களாகக் கொடுக்கலாம்) முதலியவை.

விவசாயிகளின் வீடுகளையும் வயல்களையும் கூட்டுறவு முறையில் நடத்தப்படுகின்ற கூட்டுறவுச் சொத்தாக மாற்றுவதன் மூலமாகத் தான் நாம் அந்தச் சொத்துக்களை அவர்களுக்காகக் காப்பாற்றவும் பாதுகாக்கவும் முடியும் என்பதை விவசாயிகள் புரிந்து கொள்ளுமாறு செய்வதே முக்கியமான விஷயம். அதன் முக்கியத்துவம் தொடர்ந்து நீடிக்கும். தனிப்பட்ட நிலவுடைமையினால் ஏற்படுகின்ற தனிப்பட்ட விவசாயம் தான் விவசாயிகளை அவர்களுடைய அழிவை நோக்கித் துரத்துகிறது. தனிப்பட்ட விவசாயமே இருக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தினால் அவர்களுடைய காலாவதியாகி விட்ட உற்பத்தி முறைக்கு பதிலாக முதலாளித்துவப் பெரிய அளவு உற்பத்தி ஏற்படும்; அவர்கள் தங்களுடைய வீடுகளிலிருந்தும் வயல்களிலிருந்தும் விரட்டப்படுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும். இதுவே இன்றிருக்கும் நிலைமை எனலாம். இங்கே நாம் வருகிறோம். அவர்கள் பெரிய அளவு உற்பத்தியைக் கொண்டுவரக் கூடிய வாய்ப்பை அவர்கள் முன்வைக்கிறோம். இது முதலாளிகளுடைய நலனுக்காக இல்லாமல், அவர்களுடைய சொந்த நலனுக்காக, பொது நலனுக்காகக் கொண்டு வரப்படுகிறது.

இது விவசாயிகளின் சொந்த நன்மைக்கு உகந்தது, அவர்களுடைய விமோசனத்துக்கு இருக்கும் ஒரே வழி இதுவே என்று அவர்களைப் புரிந்து கொள்ளவைக்க உண்மையாகவே முடியாமற் போய்விடுமா?

முதலாளித்துவ உற்பத்தியின் அபரிமிதமான சக்திக்கு எதிராக உங்களுடைய தனிப்பட்ட உடைமைகளையும் உற்பத்தியையும் பாதுகாப்போம் என்று சிறு நிலவுடைமை விவசாயிகளிடம் இப்பொழுதோ அல்லது வேறு எந்த சமயத்திலோ நாம் உறுதி அளிக்கக் கூடாது. அவர்களுடைய சொத்து உறவுகளில்—அவர்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக—நாம் பலவந்தமாகத் தலையிடமாட்டோம் என்பதை மட்டுமே நாம் உறுதியாகக் கூற முடியும். மேலும், முதலாளிகளும் பெரிய நிலவுடைமையாளர்களும் சிறு விவசாயிகளுக்கு எதிராக நடத்துகின்ற போராட்டம் இன்று முதல் குறைந்தபட்சமான அநீதியான வழிகளில் நடத்தப்பட வேண்டும், அடிக்கடி நடைபெறுகின்ற நேரடியான திருட்டும் மோசடியும் இயன்றவரை தடுக்கப்பட வேண்டும் என்று நாம் வற்புறுத்த வேண்டும். இதில் நாம் ஒரு சில மிக விசேஷமான உதாரணங்களில் மட்டுமே வெற்றி பெற முடியும். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழ் நேர்மை எங்கே முடிவடைகிறது, திருட்டுத்தனம் எங்கே தொடங்குகிறது என்று யாரும் சொல்ல முடியாது. எனினும் பொது அதிகாரம் ஏமாற்றியவனுக்கு ஆதரவாக இருக்கிறதா அல்லது ஏமாற்றப்பட்டவனுக்கு ஆதரவாக இருக்கிறதா என்பது எப்பொழுதுமே கணிசமான வித்தியாசத்தை ஏற்படுத்தும். நாம் நிச்சயமான முறையில் சிறு விவசாயிக்கு ஆதரவாக இருக்கின்றோம். அந்தச் சிறு விவசாயியின் நிலைமையை இன்னும் அதிகமாகத் தாங்கிக்கொள்ளும்படி செய்வதற்கு, அந்த விவசாயி கூட்டுறவு அமைப்பில் சேருவதென்று முடிவு செய்துவிட்டால் அந்த மாற்றத்தை சுலபமாக ஏற்படுத்துவதற்கு, அவரால் இன்னும் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை என்றால் அவர் நன்கு ஆலோசித்து முடிவு செய்கின்ற வரையிலும் அந்தச் சிறு நிலவுடைமையை அவர் அதிக காலத்துக்கு வைத்துக்கொண்டிருப்பதற்கு நம்மாலியன்ற எல்லாவற்றையும் செய்வோம். தன்னுடைய சொந்த உழைப்பைக் கொண்டு உயிர் வாழ்கின்ற சிறு விவசாயி முற்றிலும் நம்மவர் என்பதற்காக மட்டுமின்றி, இது கட்சியின்

நேரடியான நலனுக்கு ஏற்றது என்பதனுல் இதைச் செய்கிருேம். விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தினுள் தூக்கி எறியப்படுகின்ற நிலைமையில் அவர்களில் எவ்வளவு அதிகமான நபர்களை நாம் காப்பாற்றுகின்ருேமோ — அவர்கள் விவசாயிகளாக இருக்கும் பொழுதே நம் அணிக்கு அவர்களை வென்று விட்டோமாளுல்—அவ்வளவு விரைவாகவும் சுலபமாகவும் சமூக 'மாற்றம் சாதிக்கப்பட்டு விடும். முதலாளித்துவ உற்பத்தி எல்லா இடங்களிலும் அதன் மிகத் தீவிரமான அளவுக்கு வளர்ச்சி அடைகின்ற வரை, கடைசியாக மிஞ்சுகின்ற சிறு கைவினைஞரும் சிறு விவசாயியும் முதலாளித்துவப் பெரிய அளவு உற்பத்திக்குப் பலியாகும் வரை சமூக மாற்றத்துக்குக் காத்துக்கொண்டிருப்பதில் நமக்கு எந்தப் பயனுமில்லை. இந்த நோக்கத்திஞல் விவசாயிகளின் நன்மையை முன்னிட்டுப் பொதுப் பணத்தைப் பயன்படுத்திச் செய்யப்படும் பொருளாயத தியாகம் முதலாளித்துவப் பொருளாதாரக் கருத்தோட்டப்படிப் பணத்தை வீணுக்குவது தான். எனினும் பொதுவாக சமூகப் புனரமைப்புக்கு ஏற்படுகின்ற செலவில் அது பத்து மடங்கு சேமிப்பை ஏற்படுத்துமாதலால் அது ஒரு சிறந்த முதலீடே. எனவே, இந்த நோக்கத்தின் பேரில் நாம் விவசாயிகளிடம் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ளலாம். இந்த முடிவுக்குத் தகுந்த ஸ்தூலமான ஆலோசனைகளைக் கூறுவதற்கு அல்லது நுணுக்க விவரங்களுக்குள் போவதற்கு இது இடமல்ல; இங்கே நாம் பொதுவான கோட்பாடுகளை மட்டுமே எடுத்துச்சொல்ல முடியும்.

நாம் சிறு நிலவுடைமைகளை நிரந்தரமாகப் பாதுகாக்க உத்தேசிக்கிருேம் என்ற அபிப்பிராயத்தை மட்டும் ஏற்படுத்துகின்ற வகையில் வாக்குறுதிகளை அளிப்பது சிறு விவசாயிகளுக்கு மட்டுமின்றி கட்சிக்கும் மிகப் பெரிய பாதகத்தைச் செய்வதாகும். அது விவசாயிகள் விடுதலை பெறக் கூடிய வழியை நேரடியாகவே தடுப்பதைப் போன்றதாகும்; கட்சியைக் காலித்தனமான யூத-எதிர்ப்பு நிலையின் தரத்துக்குக் கீழே இறக்கிவிடும். அதற்கு மாருக, முதலாளித்துவம் ஆட்சி செலுத்துகின்ற வரையிலும் விவசாயிகள் நிலைமையில் சிறிது கூட நம்பிக்கைக்கு வழியில்லை, அவர்களுடைய சிறிய நிலவுடைமைகளை அப்படியே காப்பாற்றுவது சிறிதும் சாத்தியமல்ல, கைவண்டியை ரயில்வண்டி நசுக்கிவிடுவதைப்

போல அவர்களுடைய சக்தியற்ற, காலாவதியாகிப் போன சிறு அளவு உற்பத்தி முறையை முதலாளித்துவப் பெரிய அளவு உற்பத்தி நசுக்கிவிடுவது முற்றிலும் நிச்சயமானது என்பதை விவசாயிகளிடம் திரும்பத்திரும்பத் தெளிவு படுத்துவது நமது கட்சியின் கடமையாகும். நாம் இதைச் செய்தால் பொருளாதார வளர்ச்சியின் தவிர்க்க முடியாத நிகழ்வுப் போக்குக்கு ஏற்ற படி நடந்தவர்களாவோம்; இந்த வளர்ச்சி நம் வார்த்தைகளில் இருக்கும் உண்மையைச் சிறு விவசாயிகளுக்கு நிச்சயமாக உணர்த்தும்.

நாம் இப்பொழுது பெரிய விவசாயிகளுக்கு வருவோம். இங்கே பரம்பரையாக வருகின்ற சொத்துக்களின் பிரிவினை மற்றும் கடன்கள், குடும்பக் கஷ்டங்களினுல் ஏற்படும் விற்பனை ஆகியவற்றின் விளைவாக, சிறு நிலவுடைமை விவசாயிலிருந்து பரம்பரையாகக் கிடைத்த சொத்தைச் சிதற விடாமற் பாதுகாத்த அல்லது அதனோடு கூடுதலாகச் சேர்த்துக்கொண்ட பெரிய நிலவுடைமையாளர் வரை, இடைநிலைக் கட்டத்தின் கலவையான அமைப்பைப் பார்க்கிறோம். எங்கே நடுத்தர விவசாயி சிறு நிலவுடைமை விவசாயிகளோடு வசிக்கிறாரோ அங்கே அவருடைய நலன்களும் கருத்துக்களும் அவர்களிடமிருந்து அதிகமாக வேறுபட்டிருக்காது. தன்னுடைய வகையைச் சேர்ந்தவர்களில் எவ்வளவு அதிகமானவர்கள் முன்பே சிறு நிலவுடைமை விவசாயிகளின் தரத்துக்குத் தாழ்ந்து போய்விட்டார்கள் என்பதை அவர் தன்னுடைய சொந்த அனுபவத்திலிருந்தே அறிந்திருப்பார். ஆனால் எங்கே பெரிய அளவு நடுத்தர விவசாயிகள் ஆதிக்கம் வகிக்கிறார்களோ, பொதுவாக விவசாய வேலைகளைச் செய்வதற்கு வேலையாட்கள்—ஆண்களும் பெண்களும்—தேவைப்படுகிறார்களோ, அங்கே நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. ஒரு தொழிலாளர் கட்சி முதலில் கூலி உழைப்பாளிகளுக்காக, அதாவது ஆண், பெண் வேலையாட்களுக்கும் தினக்கூலிக்கு உழைப்பவர்களுக்காகவும் போராட வேண்டியது அவசியம். தொழிலாளர்களின் கூலி அடிமைத்தனம் நீடிப்பதை உள்ளடக்கிய எவ்விதமான உறுதிகளையும் விவசாயிகளுக்குக் கொடுப்பது சந்தேகத்துக்கிடமின்றித் தடை செய்யப்படுகிறது. ஆனால் பெரிய அளவு, நடுத்தர விவசாயிகள் அந்த நிலையிலேயே நீடித்திருக்கும் வரையிலும் அவர்கள் கூலித் தொழிலாளர்களுடைய உதவியில்லாமல் தங்

களுடைய பண்ணைகளை நிர்வகிக்க முடியாது. எனவே சிறு அளவு விவசாயிகள் அப்படியே நிரந்தரமாக நீடிக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர்கள் மத்தியில் நாம் ஏற்படுத்துவது வடிகட்டிய முட்டாள்தனம் என்ருல் அதே வாக்குறுதியைப் பெரிய அளவு நடுத்தர விவசாயிகளுக்கு நாம் கொடுத்தால் அது துரோகம் செய்வதாகும்.

இங்கே மறுபடியும் இதற்கு இணையான நகரங்களில் உள்ள கைவினைஞர்களின் உதாரணம் இருக்கிறது. அவர்கள் விவசாயிகளைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு அழிந்து போய் விட்டார்கள் என்பது உண்மையே. ஆனல் பயிற்சியாளர்களோடு சேர்த்து கூலியாட்களைப் பயன்படுத்துபவர்கள் அல்லது கூலியாட்களின் இடத்தில் பயிற்சியாளர்களை வைத்திருப்பவர்கள் சிலர் இன்னும் இருக்கிருர்கள். இத்தகைய தலைமைக் கைவினைஞர்களில் தங்களுடைய வாழ்க்கையை அந்த விதமாகவே நிரந்தரப்படுத்திக்கொள்ள விரும்புபவர்கள் யூத-எதிர்ப்பாளர்களுடன் சேர்ந்து தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளட்டும்; அங்கேயிருந்து தங்களுக்கு எத்தகைய உதவியும் கிடைக்காது என்பதை அவர்கள் நன்ருகப் புரிந்துகொள்கின்ற வரையிலும் அங்கேயே இருக்கட்டும், தங்களுடைய உற்பத்தி முறை தவிர்க்க முடியாதபடி அழியப் போகிறது என்பதை உணர்ந்து கொண்ட மற்றவர்கள் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிருர்கள்; மேலும் எதிர்காலத்தில் மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஏற்படப்போகின்ற நிலைமையைப் பகிர்ந்து கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிருர்கள். மேலே கூறியிருப்பது பெரிய அளவு, நடுத்தர விவசாயிகளுக்கும் பொருந்தக் கூடியதே. அவர்களைக் காட்டிலும் தினக்கூலிக்கு அவர்களிடம் உழைக்கின்ற வேலைக்காரர்களான ஆண்கள், பெண்கள் மீது நாம் அதிகமான அக்கறை கொண்டிருக்கிறோம். இதை இங்கே சொல்வது அவசியமல்ல. இந்த விவசாயிகள் அவர்களுடைய வாழ்க்கை முறை தொடர்ந்து நீடிக்கும் என்று உறுதி மொழியை விரும்பினுர்கள் என்ருல் நாம் அத்தகைய நம்பிக்கையைத் தருவதற்குரிய நிலையில் இல்லை. வேண்டுமென்ருல் அவர்கள் எல்லா வாக்குறுதிகளையும் இஷ்டம் போலக்கொடுத்து, எதையுமே மறுக்காமல் மகிழ்ச்சி அடைகின்ற யூத-எதிர்ப்பாளர்கள், விவசாயக் கழகம் இன்னும் இவை போன்ற கட்சிகளோடு போய்ச் சேர்ந்துவிட

வேண்டும். பெரிய அளவு, நடுத்தர விவசாயிகளும் இதைப் போலவே முதலாளித்துவ உற்பத்தி முறை மற்றும் வெளி நாட்டிலிருந்து இறக்குமதியாகின்ற விலைமலிவான தானியத்தின் போட்டியில் சிக்கிச்சீரழிவது தவிர்க்க முடியாதது என்று பொருளாதார ரீதியில் நமக்குத் தெரிகிறது. இந்த விவசாயிகளிடம் அதிகரித்து வருகின்ற கடன்களும் எங்கு பார்த்தாலும் வெளிப்படையாகத் தெரிகின்ற அவர்களுடைய வீழ்ச்சியும் இதை நிரூபிக்கின்றன. இந்த வீழ்ச்சிக்கு எதிராக நாம் செய்யக் கூடியது ஒன்று தான். இங்கும் விவசாய நிலங்களை ஒன்றுசேர்த்துக் கூட்டுறவு முறையில் அமைக்க வேண்டும் என்று சிபாரிசு செய்வோம். இவற்றில் கூலியுழைப்பைச் சுரண்டுவது மென்மேலும் அதிகமாக அகற்றப்படும்; இவற்றை ஒரு மாபெரும் தேசிய உற்பத்தியாளர் கூட்டுறவின் கிளைகளாகப் படிப்படியாக மாற்றுவதையும் அதன் எல்லாக் கிளைகளும் ஒரே விதமான உரிமைகளும் கடமைகளும் கொண்டிருக்கும் வகையில் அமைப்பதையும் செய்யலாம். இந்த விவசாயிகள் தங்களுடைய உற்பத்தி முறை தவிர்க்க முடியாத வகையில் அழிந்து விடப் போவதை உணர்ந்து, அதற்குரிய அவசியமான முடிவுகளை வருவித்துக் கொண்டால் அவர்கள் நம்மை நோக்கி வருவார்கள்; அவர்கள் புதிய உற்பத்தி முறைக்குத் தங்களை மாற்றிக்கொள்வதற்கு நாம் நமது முழுத்திறமையையும் பயன்படுத்தி அவர்களுக்கு உதவி செய்வது நமது கடமையாகும். இல்லையென்றால் அவர்களை எக்கேடாவது கெட்டுப் போகுமாறு விட்டுவிட்டு அவர்களுடைய கூலித்தொழிலாளர்களை நோக்கி நாம் திரும்ப வேண்டும். அவர்கள் மத்தியில் நமக்கு அனுதாபம் இல்லாதிருக்காது. அநேகமாக இங்குமே கட்டாயமாகப் பறிமுதல் செய்ய வேண்டிய அவசியம் நமக்கு இல்லாமற் போய்விடலாம். மற்றவைகளைப் பொறுத்தமட்டில், எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற பொருளாதார வளர்ச்சிகள் இந்தக் கடின உணவைக் கூடச் செரித்துக் கொள்ளுமென்று நம்புவோம்.

பெரிய நிலவுடைமைச் சொத்துக்கள் மட்டுமே முற்றிலும் சுலபமான பிரச்சினையாகும். நாம் இங்கே சிறிது கூட ஒளித்து மறைக்கப்படாத முதலாளித்துவ உற்பத்தியுடன் ஈடுபட்டிருப்பதால் எப்படிப்பட்ட மனச்சாட்சி உறுத்தல்களும் நம்மைத் தடுக்க வேண்டியதில்லை. இங்கே நமக்கு

எதிராக நிற்பது பெருந்திரளாக உள்ள கிராமப்புறப் பாட்டாளி வர்க்கம் என்பதால் நமது கடமை தெளிவாக இருக்கிறது. நமது கட்சி அரசியல் அதிகாரத்தைப் பெற்ற உடனே அது தொழில் துறை முதலாளிகளிடமிருந்து பறிமுதல் செய்ததைப் போல பெரிய நிலவுடைமையாளர்களிடமிருந்தும் பறிமுதல் செய்ய வேண்டியதே. இந்தச் சொத்துக்களைப் பறிமுதல் செய்கின்ற பொழுது அவற்றுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதா, இல்லையா என்பது பிரதானமாக நம்மைப் பொறுத்த விஷயம் அல்ல: நாம் எந்த சந்தர்ப்பங்களின் கீழ் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறோம், குறிப்பாக, இந்த கனவான்கள், பெரிய நிலவுடைமையாளர்கள் எப்படிப்பட்ட போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பனவற்றைப் பொறுத்திருக்கும். எந்தச் சூழ்நிலையிலும் நஷ்ட ஈடு கொடுப்பதை அனுமதிக்க முடியாது என்று நாம் ஒரு போதும் கருதவில்லை. இவர்கள் அத்தனை பேரையும் மொத்தமாக விலைக்கு வாங்கி விட்டால் நம்முடைய வேலை மிகச் சுலபமாகி விடும் என்று தான் நினைப்பதாக மார்க்ஸ் என்னிடம் (எத்தனை தடவைகள்!) சொல்லியிருக்கிறார். ஆனால் இது இங்கே நமக்கு முக்கியமல்ல. இவ்விதம் மக்களிடம் திரும்ப வந்து சேருகின்ற பெரிய பண்ணைகளை அவற்றில் ஏற்கெனவே பயிரிடுகின்ற கிராமப்புறத் தொழிலாளர்களுக்குக் கொடுத்து அவர்களைக் கூட்டுறவு ஸ்தாபனமாக அமைக்க வேண்டும். அவர்கள் பொது மக்களின் கண்காணிப்பில் பாடுபடுவதற்கும் பலனடைவதற்கும் இந்தப் பண்ணைகள் அவர்களிடம் கொடுக்கப்படுகின்றன. இந்த உரிமை எந்த நிபந்தனைகளின் பேரில் அவர்களுக்குத் தரப்படும் என்பதைப் பற்றி இப்பொழுது எதுவும் நிச்சயமாகக் கூற இயலாது. எப்படி இருந்தாலும் ஒரு முதலாளித்துவ நிறுவனம் சமூக நிறுவனமாக மாறுவதற்கு முழுத் தயாரிப்புகள் செய்யப்பட்டுவிட்டன. திருவாளர் குருப் அல்லது திருவாளர் வொன் ஷ்தும்மின் தொழிற்சாலையில் நடைபெறுவதைப் போல ஓரே இரவில் அதை நிறைவேற்றிவிட முடியும். இந்த விவசாயக் கூட்டுறவுகளின் உதாரணம் பெரிய அளவு கூட்டுறவு உற்பத்தியின் சாதகங்களை இன்னும் ஏற்றுக்கொள்ளாதிருக்கின்ற கடைசி சிறு நிலவுடைமை விவசாயிகளையும், நிச்சயமாகப் பல பெரிய விவசாயிகளையும் கூட, ஒத்துக்கொள்ளச் செய்யும்.

எனவே நாம் இப்பொழுது விவசாயப் பாட்டாளிகளுக்கு முன்னுல் தொழில்துறைத் தொழிலாளர்களுக்கு முன்னே உள்ளதைப் போன்ற சிறப்புமிக்க எதிர்கால வாய்ப்புக் களைக் காட்ட முடியும். எனவே எல்பெ நதிக்குக் கிழக்கில் உள்ள பிரஷ்யாவின் விவசாயத் தொழிலாளர்களை நம் தரப் புக்கு வென்று கொள்வது உரிய காலத்தில்—அதுவும் மிகக் குறைவான காலத்தில்—நடைபெறக் கூடிய பிரச்சினையாக மட்டுமே இருக்கும். ஆனுல் கிழக்கு எல்பெயின் விவசாயத் தொழிலாளர்கள் நம் தரப்புக்கு வந்துவிட்டால் உடனே ஜெர்மனி முழுவதிலுமே புதுக்காற்று வீசும். கிழக்கு-எல்பெ பிரதேசத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களின் கொத் தடிமை நிலை தான் ஜெர்மனியில் உண்மையான பிரஷ்ய ஜங்கர்களின் மேலாதிக்கத்துக்கு—ஆகவே பிரஷ்யாவின் பிரத்யேகமான மேலாண்மைக்கு—முக்கியமான அடிப் படையாகும். எல்பெ நதிக்குக் கிழக்கில் உள்ள ஜங்கர்கள் தான் அதிகார வர்க்கம் மற்றும் ராணுவ அதிகாரிகள் அமைப்பின் பிரத்யேகமான பிரஷ்யத் தன்மையைத் தோற்று வித்தவர்கள், அதைப் பாதுகாப்பவர்களும் அவர்களே. இந்த ஜங்கர்கள் தமது கடன்களினுலும், வறுமைப்பட்டு வருவதனுலும் மற்றும் அரசையும் தனிப்பட்டோரையும் நம்பி உயிர் வாழ்வதனுல் மென்மேலும் அழிந்து கொண்டிருக் கிருர்கள். அதன் காரணமாகவே தங்களுடைய அதி காரத்தை விட்டுவிடாமல் மிகவும் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிருர்கள். இந்த ஜங்கர்களின் திமிரும் வெறியும் அகம்பாவமும் பிரஷ்ய தேசிய இனத்தின் ஜெர்மன் நாடாளுமன்றத்தை இன்றைய நிலையில் தேசிய ஒற்றுமையை அடைவதற்குரிய ஒரே வடிவம் என்ற முறையில் இந்த ரைஹ்ஸ்தாக் தவிர்க்க முடியாதது என்ற உண்மைக்குப் போதுமான அளவுக்குச் சலுகைகள் கொடுத்த போதி லும் கூட—உள்நாட்டில் மிக அதிகமான வெறுப்பை ஏற் படுத்தியிருப்பதுடன், அதன் மேதா விலாசமான வெற்றி களை மீறி வெளி நாட்டில் சிறிதும் மரியாதை இல்லாமற் செய்திருக்கிறது. பண்டைய ஏழு பிரஷ்ய மாநிலங்களின் நெருங்கி அமைந்துள்ள பிரதேசத்துக்குள்—அதாவது ரீஷின் மொத்த பிரதேசத்தில் சுமார் மூன்றில் ஒரு பகுதியில்—இங்கே சமூக மற்றும் அரசியல் அதிகாரத்தை ஏற்படுத்து கின்ற நிலவுடைமைச் சொத்துக்கள் இருப்பதை ஆதார

மாகக் கொண்டிருக்கிறது ஐங்கர்களின் பலம். நிலவுடைமை மூலமாக மட்டுமல்ல, அவர்களுக்குச் சொந்தமான பீட்-சர்க்கரைத் தொழிற்சாலைகள், மது தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் அந்தப் பிரதேசத்தின் முக்கியமான தொழிற்சாலைகள் மூலமாகவும் தான். ஜெர்மனியின் எஞ்சிய பிரதேசத்திலுள்ள பெரிய நிலவுடைமையாளர்களோ அல்லது பெரிய தொழிலதிபர்களோ இத்தகைய சாதகமான நிலைமையில் இல்லை. அவர்களில் எவரிடமும் நெருங்கி அமைந்த பிரதேசம் இல்லை. இரு தரப்பினரும் விரிவான பிரதேசத்தில் சிதறிக் கிடக்கிறார்கள். அவர்கள் பொருளாதார, அரசியல் தலைமைக்காகத் தமக்கிடையிலும் தங்களைச் சூழ்ந்துள்ள மற்ற சமூக சக்திகளுடனும் போட்டியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிரஷ்ய ஐங்கர்களின் ஆதிக்கத்தின் பொருளாதார அடிப்படை தொடர்ச்சியாக சீர்குலைந்துக் கொண்டிருக்கிறது. இங்கும் எல்லாவிதமான அரசு உதவியையும் மீறி (இரண்டாம் பிரடெரிக் காலத்திலிருந்து ஒவ்வொரு வாடிக்கையான ஐங்கர் வரவு-செலவுத்திட்டத்திலும் இந்த உதவி சேர்க்கப்பட்டிருக்கிறது) கடனும் வறுமையும் தடுக்க முடியாதபடிப் பரவிக் கொண்டிருக்கின்றன. சட்டத்தினாலும் மரபினாலும் அங்கீகரிக்கப்பட்ட மெய்யான அரைக்-கொத்தடிமைத்தனமும் விவசாயத் தொழிலாளர்களை வரைமுறை இல்லாமற் சுரண்டுவதற்குரிய சாத்தியமும் மட்டுமே நீரில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஐங்கர்களை நீர் மட்டத்துக்குச் சிறிது மேலாக இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறது. இந்தத் தொழிலாளர்கள் மத்தியில் சமூக-ஜனநாயக விதையை ஊன்றுங்கள், தங்கள் உரிமைகளைக் கோருகின்ற துணிவையும் ஒற்றுமையையும் அவர்களிடம் ஏற்படுத்துங்கள். உடனே ஐங்கர்களின் புகழ் முடிவுக்கு வந்துவிடும். அந்த மாபெரும் பிற்போக்கான சக்தி—ருஷ்ய ஜாரிசம் மொத்த ஐரோப்பாவுக்கும் எவ்வளவு காட்டுமிராண்டித்தனமான, கொள்ளைக்காரத்தனமான சக்தியாக உள்ளதோ அதைப் போல இது ஜெர்மனிக்கு இருக்கிறது—நீர்க்குமிழியைப் போல உடைந்துவிடும். பிரஷ்ய இராணுவத்தின் ''பொறுக்கியெடுக்கப்பட்ட படைப்பிரிவுகள்'' சமூக-ஜனநாயகத்துக்கு மாறுகின்றபொழுது ஏற்படுகின்ற சக்தி மாற்றம் ஒரு மாபெரும் கொந்தளிப்பைப் பிரசவிக்கும். அந்தக் காரணத்துக்காகவே மேற்கு ஜெர்மனியின் சிறு விவசாயிகளையும்

அல்லது தெற்கு ஜெர்மனியின் நடுத்தர விவசாயிகளையும் காட்டிலும் எல்பெ நதிக்குக் கிழக்கில் உள்ள விவசாயத் தொழிலாளர்களை வென்றெடுப்பது மிகவும் அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இங்கே, எல்பெ நதிக்குக் கிழக்கில் உள்ள பிரஷ்யாவில் தான் நம்முடைய இலட்சியப் பாதையில் மிகவும் தீர்மானமான சண்டையில் நாம் ஈடுபட வேண்டியிருக்கும். அக்காரணத்துக்காகவே அரசாங்கமும் ஜங்கர்களும் நாம் இங்கே நுழைவதைத் தடுப்பதற்கு தம்மாலியன்ற எல்லாவற்றையும் செய்வார்கள். நம் கட்சி பரவுவதைத் தடுப்பதற்குப் புதிய, வன்முறையான நடவடிக்கைகள் உபயோகிக்கப்படும் என்று பயமுறுத்தப்படுவது நிறைவேற்றப்பட்டால் எல்பெ கிழக்கில் உள்ள விவசாயப் பாட்டாளி வர்க்கத்தை நம்முடைய பிரச்சாரத்திலிருந்து பாதுகாப்பது அவர்களுடைய முக்கிய நோக்கமாக இருக்கும். எல்லாம் நமக்கு ஒன்றே. எப்படி இருப்பினும் அதில் நாம் வெற்றிபெறுவோம்.

*1894* நவம்பர் *15—24*
தேதிகளுக்கு இடையில்
எழுதப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

## குறிப்புகள்

1 இங்கிலாந்தில் 1640-60ம் வருடங்களின் போது நடைபெற்ற முதலாளி வர்க்கப் புரட்சியும் பிரான்சில் 1789-94ம் வருடங்களின் போது நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியும் இங்கே குறிப்பிடப்படுகின்றன.—38.

2 Helots—பண்டைக்கால ஸ்பார்ட்டாவில் விவசாயிகள் வசித்த பகுதி.—40.

3 உற்பத்திக் கருவியின் தனியுடைமையை அடிப்படையாகக் கொண்ட சுரண்டல் அமைப்பும் சமூகம் முரண் வர்க்கங்களாகப் பிரிந்திருப்பதும் சோஷலிஸ்ட் புரட்சியின் விளைவாக அகற்றப்படும் என்பதை இது குறிக்கிறது.—42.

4 கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் 1846ம் வருடத்தின் ஆரம்பத்தில் பிரஸ்ஸல்சில் **கம்யூனிஸ்ட் தொடர்புக் கமிட்டியை** நிறுவினார்கள். லண்டன், பாரிஸ், கொலோன் மற்றும் சில நகரங்களில் இத்தகைய கமிட்டிகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டன. கம்யூனிஸ்டுகள் மற்றும் முற்போக்காளர்கள் மத்தியில் சித்தாந்த மற்றும் ஸ்தாபன ரீதியான ஒற்றுமையை ஏற்படுத்துவதும் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு அந்நியமான போக்குகளை எதிர்த்துப் போராடுவதும் இக்கமிட்டிகளின் நோக்கம் என்று மார்க்சும் எங்கெல்சும் கூறினார்கள்.—43.

5 ஜோர்ஜ் சாண்டு, Jan Ziska, ஒரு வரலாற்று நாவல், அறிமுகம்.—45.

6 **கம்யூனிசத்தின் கோட்பாடுகள்** — கம்யூனிஸ்ட் கழகத்தின் செயல்திட்டத்தின் இரண்டாவது நகல்.
**கம்யூனிஸ்ட் கழகம்**—பாட்டாளி வர்க்கத்தின் முதல் சர்வதேச கம்யூனிஸ்ட் ஸ்தாபனம். மார்க்சும்

எங்கெல்சும் இதை நிறுவினுர்கள். 1847 முதல் 1852 முடிய இருந்தது.—47.

7 வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் ஒரே சமயத்தில் சோஷலிஸ்ட் புரட்சி நடைபெற்றுல் மட்டுமே அது வெற்றியடைய முடியும் என்ற கருத்து ஏகபோகத்துக்கு முந்திய முதலாளித்துவக் காலகட்டத்துக்குச் சரியானது. ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவத்தின் பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சி சமமில்லாதிருக்கும் என்ற விதியைக் கண்டு பிடித்த லெனின் சோஷலிஸ்ட் புரட்சி சில நாடுகளில் அல்லது தனியொரு நாட்டில் கூட வெற்றியடைய முடியும் என்ற முடிவுக்கு வந்தார். ஏகாதிபத்தியக் கட்டத்தில், முதலாளித்துவ அமைப்பு முழுவதும் ஒரு சோஷலிஸ்ட் புரட்சிக்குப் போதுமான அளவுக்கு முதிர்ச்சி அடைந்திருக்கும் பொழுது மிகவும் வளர்ச்சியடைந்த நாட்டில்தான் புரட்சி முதலில் வெற்றியடையும் என்பது அவசியமல்ல, நடுத்தர முதலாளித்துவ வளர்ச்சியைக் கொண்ட ஒரு நாட்டிலும் புரட்சி வெற்றி பெற முடியும் என்பதை லெனின் நிரூபித்தார்.—54.

8 **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை**—இதுதான் விஞ்ஞான கம்யூனிசத்தின் முதல் செயல்திட்ட ஆவணம்; மார்க்சும் எங்கெல்சும் கம்யூனிஸ்ட் கழகத்தின் செயல் திட்டமாகிய இந்த அறிக்கையை 1847 டிசம்பர்—1848 ஜனவரிக்கு இடையில் எழுதினுர்கள்.

முதலாளி வர்க்கம் தவிர்க்க முடியாதபடி வீழ்ச்சியடையும், சோஷலிசம் வெற்றிபெறும் என்று ''அறிக்கை'' விஞ்ஞான ரீதியாக நிரூபித்தது; புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் அது வரையறுத்துக் கூறியது.—59.

9 **சிலுவைப் போர்ப் பயணங்கள், சிலுவைக் குருசேட்கள்**—கி. பி. 1096-1270ம் வருடங்களுக்கு இடையில் அண்மைக் கிழக்குக்குச் சென்ற சிலுவைப் படையினர். மேற்கு ஐரோப்பிய நிலப்பிரபுக்களும் கத்தோலிக்க திருச்சபையும் இவர்களை அனுப்பிவைத்தன.—65.

10 வேலை நேரத்தைப் பத்து மணியாகக் குறைக்க வேண்டும் என்ற போராட்டம் இங்கிலாந்தில் 18ம் நூற்றாண்டின் முடிவிலிருந்து நடைபெற்றது. சாசனவாத இயக்கத்தின் (குறிப்பு எண் 17ஐப் பார்க்க) நிர்ப்பந்தத்தின் பேரில் நாடாளுமன்றம் 1847 ஜூனில் பத்துமணி வேலை நேரச் சட்டத்தை நிறைவேற்றியது. அது குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் மட்டுமே அமுலாகும்.—76.

11 1848 மார்ச்சில் ஜெர்மனியில் புரட்சி வெடித்தது. வியன்னு, பெர்லின் மற்றும் சில நகரங்களிலும் புரட்சிகள் ஏற்பட்டன. இவற்றில் தொழிலாளர்கள் முக்கியமான பாத்திரத்தை வகித்த போதிலும் அவர்களுடைய பலவீனமான ஸ்தாபன நிலைமையின் விளைவாக முதலாளி வர்க்கம் பலனடைந்தது.—98.

12 **புனிதக் கூட்டணி**—முதலாம் நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு ஆஸ்திரியா, பிரஷ்யா, ருஷ்யா ஆகிய நாடுகள் 1815இல் பாரிசில் ஒரு கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டன. புரட்சிகர இயக்கங்களை நசுக்குவதும் நிலப்பிரபுத்துவ—முடியரசு ஆட்சிகளை நீடிப்பதும் இக்கூட்டணியின் நோக்கமாகும்.—99.

13 மார்ச் புரட்சியின் விளைவாக 1848 மே மாதத்தில் அகில-ஜெர்மன் தேசிய அசெம்பிளி (ஃபிராங்புர்ட் சட்டமன்றம், பின்னர் ஸ்டுட்கார்ட் நாடாளுமன்றம் எனப்பட்டது) மெயின்-ஆற்றின் மீதுள்ள-ஃபிராங்புர்டில் கூட்டப்பட்டது. ஜெர்மனி அரசியல் ரீதியில் சிதறிப் போவதைத் தடுப்பதும் ஜெர்மனி முழுமைக்கும் அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரிப்பதும் அதன் கடமையாகும். ஆனல் அதன் மிதவாதப் பெரும்பான்மையினருடைய கோழைத்தனம் மற்றும் ஊசலாட்டத்தினுலும் குட்டி முதலாளி வர்க்க இடதுசாரி அணியின் தீர்மானமின்மை மற்றும் முரண்பாட்டினுலும் ஃபிராங்புர்ட் தேசிய அசெம்பிளி ஜெர்மன் புரட்சியின் அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றி உறுதியான நிலையெடுக்கத் தவறியது. எதிர்ப்புரட்சி சக்திகளின் தாக்குதலுக்கு எதிராகவும் தன்னுல் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஆதரவாகவும் மக்களைத்

திரட்டுவதற்கு அசெம்பிளி துணியவில்லை. 1849 மே மாதத்தில் அசெம்பிளி ஸ்டுட்கார்ட்டுக்கு மாற்றப் பட்டது. 1849 ஜூனில் எதிர்ப்புரட்சித் துருப்புகள் அசெம்பிளியைக் கலைத்தன.—100.

14 *Neue Oder-Zeitung* (''புதிய ஓடர் பத்திரிகை'') ஜெர்மனியில் வெளியிடப்பட்ட முதலாளி வர்க்க ஜனநாயக நாளிதழ்; இந்தப் பெயரில் பிரெஸ்லாவில் 1849—1855 வரை வெளியாயிற்று; 1855ல் மார்க்ஸ் இப்பத்திரிகையின் லண்டன் நிருபராகப் பணியாற்றினர்.—105.

15 குறிப்பு எண் 1ஐப் பார்க்கவும்.—110.

16 **புரூமேர்**—பிரெஞ்சு குடியரசு முறையிலான வருடத்தில் ஒரு மாதத்தின் பெயர்.

**பதினெட்டாம் புரூமேரின்போது** (1799 நவம்பர் 9) நெப்போலியன் போனபார்ட் பிரான்சில் அரசாங்கத்தை ஒழித்துவிட்டு ராணுவ சர்வாதிகாரத்தை ஏற்படுத்தினர்.—112.

17 *The People's Paper*—சாசனவாத இயக்கத்தின் பத்திரிகை; 1852 மே முதல் 1858 ஜூன் முடிய லண்டனிலிருந்து வெளியிடப்பட்டது. மார்க்சும் எங்கெல்சும் இப்பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினர்கள்.

**சாசனவாத இயக்கம்** — இங்கிலாந்தில் 1830க்களிலிருந்து 1850க்களின் நடுப்பகுதி வரையிலும் நீடித்த தொழிலாளர்களின் அரசியல் இயக்கம்; நாட்டிலிருந்த பொருளாதாரக் கஷ்டங்களும் தொழிலாளர்களுக்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டதும் இந்த இயக்கத்தைத் தூண்டி வளர்த்தன. பொதுவாக்குரிமையையும் மற்றும் சில கோரிக்கைகளையும் வலியுறுத்திய மக்கள் சாசனத்தை அமுல் நடத்த வேண்டுமென்று இந்த இயக்கம் கோரியது.—123.

18 1864 செப்டெம்பர் 24ந் தேதியன்று லண்டனில் நடைபெற்ற சர்வதேசத் தொழிலாளர் கூட்டத்தில் சர்வதேசத் தொழிலாளர் சங்கம் (பின்னர் ''முதலாவது அகிலம்'' என்று சொல்லப்பட்டது) அமைக்கப்பட்டது. கார்ல் மார்க்ஸ் அதன் தற்காலிகக் கமிட்டியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். செயல்திட்ட

ஆவணங்களைத் தயாரிக்கும் குழுவுக்கும் அவர் உறுப் பினரானுர்.—*130.*

19 **மூலதனம்**—முதலாளித்துவப் பொருளாதார அமைப் பின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் தவிர்க்க முடியாத வீழ்ச்சியை விளக்குகின்ற மாபெரும் நூல். முதலாளித்துவத்தை அழித்த பிறகு கம்யூனிசம் ஏற் படும் என்பதை மார்க்ஸ் இந்நூலில் விஞ்ஞான ரீதியாக நிரூபித்தார்.—*132.*

20 மார்க்ஸ் எழுதிய ''லுயீ போனபார்ட்டின் பதினெட் டாம் புரூமேர்'' என்ற புத்தகம் இங்கே குறிப்பிடப் படுகிறது. பிரான்சில் *1848—1851*ம் வருடங்களில் நடைபெற்ற புரட்சிகரமான சம்பவங்கள் ஸ்தூலமான வரலாற்று நோக்கில் ஆராயப்படுகின்றன. வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் முக்கியமான கோட்பாடு களான வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்கப் புரட்சி, அரசு மற்றும் பாட்டாளி வர்க்க சர் வாதிகாரம் ஆகியன இந்நூலில் நன்கு வளர்த்துக் கூறப் பட்டிருக்கின்றன.—*138.*

21 **பாரிஸ் கம்யூன் (1871)** பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை நிறுவுவதற்குச் செய்யப்பட்ட முதல் முயற்சி யாகும். அது *1871* மார்ச் *18* முதல் மே *28* வரை நீடித்தது. பாரிஸ் கம்யூன் அரசிலிருந்து திருச்சபையை யும் திருச்சபையிலிருந்து கல்விநிலையங்களையும் பிரித் தது. நிரந்தர ராணுவத்தைக் கலைத்துவிட்டுப் பொது மக்களுக்கு ஆயுதங்களை வழங்கியது. நீதிபதிகளும் அதி காரிகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், ஒரு அதிகாரியின் உயர்ந்த ஊதியம் தொழிலாளியின் சம்பளத்தைக் காட்டிலும் அதிகமாக இருக்கக் கூடாது என்ற கோட்பாடுகளைப் பின்பற்றியது, தொழிலாளர் கள் மற்றும் நகர ஏழை மக்களின் நிலைமையை முன் னேற்றுவதற்குப் பல நடவடிக்கைகளைச் செய்தது. *1871* மே *21*ந் தேதியன்று தியேரின் எதிர்ப்புரட்சித் துருப்புகள் பாரிசுக்குள் நுழைந்து கம்யூனை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தன; சுமார் *30,000* பேர்கள் கொல்லப்பட்டார்கள், *50,000* பேர்கள் கைது செய்யப்

பட்டார்கள், பல்லாயிரக் கணக்கானவர்கள் மீது கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன.—*138.*

22 **வெர்சேய்**—பாரிஸ் நகரத்தின் ஒரு பகுதியின் பெயர். பிரெஞ்சு அரசருடைய அரண்மனை இங்கே அமைந் திருந்தது.

**வெர்சேயினர்**—தியேரின் எதிர்ப்புரட்சி அரசாங்கத் துக்கும் வெர்சேயிலிருந்த அரசாங்கத் துருப்புகளுக் கும் பாரிஸ் கம்யூனர்டுகள் கொடுத்த பெயர்.—*138.*

23 **ஜூன் மாத எழுச்சி**—*1848* ஜூன் *23—26* தேதிகளில் நடைபெற்ற பாரிஸ் தொழிலாளர்களின் வீர மிக்க எழுச்சி. பிரெஞ்சு முதலாளி வர்க்கம் அதை அதிகமான குரூரத்துடன் ஒடுக்கியது.—*139.*

24 **ஜங்கர்கள்**—கிழக்குப் பிரஷ்யாவைச் சேர்ந்த பிரபுக் கள்-நிலவுடைமையாளர்களைக் குறிக்கும். ஜெர்மானிய நிலவுடைமையாளர்களைக் குறிப்பதற்கும் உபயோகிக் கப்படும்.—*139.*

25 இத்தாலியப் புரட்சியை நசுக்குவதற்காக பிரெஞ்சுத் துருப்புகளை அனுப்பியதைக் கண்டிப்பதற்காக குட்டி முதலாளி வர்க்க ''மலைக்'' கட்சி **1849 ஜூன் 13ந் தேதியன்று** ஒரு அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்தி யது. ஜூன் *13*க்குப் பிறகு அரசாங்கம் ஜனநாயகவாதி களுக்கு எதிராகத் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்தது.—*140.*

26 கார்ல் மார்க்ஸ் எழுதிய **பிரான்சில் உள்நாட்டுப் போர்** விஞ்ஞான கம்யூனிசத்தின் தலைசிறந்த செயல்திட்ட ஆவணமாகும். பாரிஸ் கம்யூன் எதிர்ப்புரட்சிச் சக்தி களின் ஆயுத பலத்தை எதிர்த்து வீரத்தோடு போராடிக் கொண்டிருந்த பொழுது ஐரோப்பாவிலும் அமெரிக்கா விலுமிருந்த சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு முதலாவது அகிலத்தின் சார்பில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.—*142.*

27 *1870* செப்டெம்பர் *4*ந் தேதியன்று பாரிசில் உழைக் கும் மக்களின் புரட்சிகர எழுச்சியின் விளைவாக இரண் டாவது பேரரசின் போனபார்ட் ஆட்சி வீழ்ச்சியுற்றது,

குடியரசு பிரகடனம் செய்யப்பட்டு 'தேசிய தற்காப்பு' அரசாங்கம் அமைக்கப்பட்டது. இத்தற்காலிக அரசாங்கத்தில் மிதவாத முதலாளி வர்க்கக் குடியரசுவாதிகளும் முடியரசுவாதிகளும் இடம் பெற்றிருந்தனர். —142.

28 கார்ல் மார்க்ஸ் எழுதிய ''பிராங்கோ-பிரஷ்ய யுத்தத்தைப் பற்றி சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் பொதுக்குழுவின் இரண்டாவது உரை'' என்ற நூலைப் பார்க்கவும் (மார்க்ஸ், எங்கெல்ஸ், ''தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள்'', 2ம் தொகுதி, 1976, பக்கங்கள் 195—201).—142.

29 **முறைமைவாதிகள்**—1792இல் பிரான்சில் தூக்கியெறியப்பட்ட புர்போன் அரச மரபை ஆதரிப்பவர்கள்; அவர்கள் பெரிய நிலப்பிரபுக்கள் மற்றும் உயர்நிலை மதகுருக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள். 1830இல், ஜூலை புரட்சி மற்றும் புர்போன்கள் இரண்டாவது முறையாகத் தூக்கியெறியப்பட்ட பிறகு இவர்கள் ஒரு அரசியல் கட்சியாகத் தம்மை அமைத்துக்கொண்டார்கள்.

**ஆர்லியான்வாதிகள்** — ஜூலை முடியாட்சியின் போது (1830-48) பதவி வகித்து. 1848 பிப்ரவரி புரட்சியின் விளைவாகப் பதவியிலிருந்து இறக்கப்பட்ட ஆர்லியான் குடும்பத்தின் (புர்போன் மரபின் இளைய பிரிவு) ஆதரவாளர்கள்; இவர்கள் நிதி மேல்தட்டினர் மற்றும் பெரிய முதலாளிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள்.

1848இல் பிப்ரவரி புரட்சிக்குப் பிறகு இரண்டு முடியரசுவாதக் கட்சிகளும் 'ஒழுங்குமுறைக் கட்சி' என்ற பெயரில் கூட்டணி அமைத்தன.—145.

30 "Chambre introuvable" (ஒப்புவமையில்லாத குழு)—சட்ட சபையில் மிகவும் பிற்போக்கான உறுப்பினர்களைக் கொண்ட குழு (1815-16).—146.

31 **நிலவுடைமையாளர் சபை** — 1871ம் வருட தேசிய அசெம்பிளிக்குத் தரப்பட்ட ஏளனம் நிறைந்த பட்டப் பெயர். இந்த சபை போர்டோவில் கூடியது; நாட்டுப்

புற நிலவுடைமையாளர்கள், அதிகாரிகள், லேவா தேவிக்காரர்கள், நாட்டுப்புறப்பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வர்த்தகர்கள் ஆகிய முடியரசு வாதப் பிற்போக்காளர்கள் அதிகமாக இருந்தனர்.—146.

32 தேசிய அசெம்பிளி 1871 மார்ச் 10ந் தேதியன்று கடன்களைத் தீர்ப்பதைப் பற்றி ஒரு சட்டத்தை இயற்றியது. அதன்படி 1870 ஆகஸ்ட் 13 முதல் நவம்பர் 12ந் தேதிக்குள் வாங்கிய கடன்களைத் தீர்ப்பதற்குத் தவணை கொடுக்கப்பட்டது. நவம்பர் 12க்குப் பிறகு வாங்கப்பட்ட கடன்களுக்குத் தவணை கொடுக்கப்படவில்லை. இச்சட்டம் தொழிலாளர்களுக்கும் ஏழை மக்களுக்கும் பலத்த அடியாக இருந்தது. சிறு வர்த்தகர்கள் பலர் ஓட்டாண்டிகளானார்கள்.—147.

33 Décembriseur —1851 டிசம்பர் 2ந் தேதியன்று நடைபெற்ற போனபார்ட்டின் திடீர்ப்புரட்சியில் பங்கெடுத்தவர்; ஜெனரல் வினுவா அதில் பங்கெடுத்தார், அவர் தலைமையிலிருந்த துருப்புகள் கலகம் செய்த குடியரசு வாதிகளை நசுக்கின.—147.

34 தியேர் அரசாங்கம் வாங்க உத்தேசித்த உள்நாட்டுக் கடனில் 30,00,000 பிராங்குகளுக்கும் அதிகமான தொகையைக் கமிஷனாக எடுத்துக் கொள்வதற்குத் தியேரும் அவருடைய அமைச்சர்களும் 'திட்டமிட்டிருப்பதாகப்' பத்திரிகைகள் எழுதின. கடன் கொடுக்க முன் வந்த நிதி வட்டாரங்கள் பாரிஸ் புரட்சியை விரைவில் நசுக்க வேண்டும் என்று கோரியதாகத் தியேர் பிறகு ஒத்துக்கொண்டார். பாரிஸ் கம்யூனை நசுக்கிய பிறகு 1871 ஜூன் 20ந் தேதியன்று இக்கடன் சம்பந்தமான சட்டம் நிறைவேற்றப்பட்டது.—148.

35 Capitulards—1870-71இல் பிரஷ்யத் துருப்புகள் பாரிஸ் நகரத்தை முற்றுகையிட்டிருந்த பொழுது சரணாகதி செய்ய வேண்டும் என்று கூறியவர்களுக்குத் தரப்பட்ட பட்டப்பெயர்.—149.

36 கையேனா—பிரெஞ்சு கயானாவில் (தென் அமெரிக்கா)

ஒரு நகரம்; கடுந்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளும் நாடு கடத்தப்பட்ட அரசியல்வாதிகளும் இங்கே அனுப்பப்பட்டனர்.—150.

37 *Le National* (''தேசியப் பத்திரிகை'')—பாரிசிலிருந்து 1830 முதல் 1851 முடிய வெளியிடப்பட்ட தினசரி. மிதவாத முதலாளி வர்க்கக் குடியரசுவாதிகளின் பத்திரிகை.—152.

38 1870 அக்டோபர் 31ந் தேதியன்று பாரிசில் 'தேசியத் தற்காப்பு' அரசாங்கத்துக்கு எதிராக ஒரு எழுச்சி ஏற்பட்டது. பிரஷ்யர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதைத் தெரிந்து கொண்டவுடன் தொழிலாளர்களும் புரட்சிகரமான தேசியக் காவலர்களும் நகர் மண்டபத்தைக் கைப்பற்றி, பொதுப் பாதுகாப்புக் கமிட்டி என்ற பெயரில், லுயீ பிளாங்கீயின் தலைமையில் புரட்சிகர ஆட்சியை ஏற்படுத்தினார்கள். நவம்பர் 1ந் தேதியன்று தேர்தல்களை நடத்துவதற்கும் கம்யூனிடத்தில் அதிகாரத்தை ஒப்படைத்து விட்டுத் தாங்கள் பதவி விலகிக்கொள்வதற்கும் ஒத்துக் கொள்ளும்படி நகர் மண்டபத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த 'தேசியத் தற்காப்பு' அரசாங்கத்தின் உறுப்பினர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஆனால் எழுச்சியில் ஈடுபட்டவர்களிடம் ஸ்தாபன பலம் இல்லை, தலைவர்களிடம் வேற்றுமைகள் இருந்தன. தனக்கு விசுவாசமாக இருந்த தேசிய காவலர் படைப் பிரிவுகளின் உதவியைக் கொண்டு அரசாங்கம் நகர் மண்டபத்தைக் கைப்பற்றி மீண்டும் அதிகாரத்தைப் பெற்றது.—153.

39 **பிரெட்டோன்கள்**—எல்லா இடங்களுக்கும் சுற்றிவருகின்ற படைப்பிரிவு. பாரிசின் புரட்சிகர இயக்கத்தை நசுக்குவதற்கு த்ரொஷூ இப்படைப் பிரிவை உபயோகித்தார்.

**கார்சிக்கன்கள்**—இரண்டாவது பேரரசின் போது காவல் துறையில் பணியாற்றும் சிப்பாய்களில் பெரும்பான்மையினர்.—153.

40 1871 ஜனவரி 22ந் தேதியன்று பிளாங்கீவாதிகளின்

முன்முயற்சியின் பேரில் பாட்டாளி வர்க்கம் மற்றும் தேசியக் காவலர் படையினரின் புரட்சிகர ஆர்ப்பாட்டம் பாரிசில் நடைபெற்றது. நகர் மண்டபத்தைக் காவல் செய்த துருப்புகள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தன. ஏராளமான ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். பாரிசில் எல்லா மன்றங்களையும் மூடியும் மக்கள் பொது இடங்களில் கூடக் கூடாதென்றும் உத்தரவுகள் வெளியிடப்பட்டன, பத்திரிகைகள் நிறுத்தப்பட்டன. புரட்சிகர இயக்கத்தை நசுக்கிய பிறகு 'தேசியத் தற்காப்பு அரசாங்கம்' பாரிஸ் சரணகதிக்குப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது.—*154*.

41 Sommations—ஒரு கூட்டம் அல்லது ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக வன்முறையை உபயோகிப்பதற்கு முன் செய்யப்பட வேண்டிய எச்சரிக்கை. *1831*ம் வருடச் சட்டத்தின்படி மூன்று முறை எச்சரிக்கை செய்த பிறகு வன்முறையை உபயோகிக்கலாம்.—*155*.

42 ஜெரிக்கோ—யூதர்கள் பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்த பொழுது முதன் முதலாக ஜெரிக்கோ என்ற நகரத்தைக் கைப்பற்றினர்கள் என்று பைபிள் நூல் கூறுகிறது.—*155*.

43 *1870* அக்டோபர் *31*ந் தேதி ''தேசிய தற்காப்பு அரசாங்கத்தின்'' உறுப்பினர்கள் நகர் மண்டபத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த பொழுது அவர்களைச் சுட்டுக் கொல்ல வேண்டும் என்று சில புரட்சிக்காரர்கள் கோரினர்கள். ஆனல் குஸ்தாவ் ஃபிலொரான் இதைத் தடுத்தார்.—*158*.

44 வொல்தேர் எழுதிய ''கான்டிடஸ்'', அத்தியாயம் *22*.—*158*.

45 கார்ல் மார்க்ஸ் எழுதிய ''பிரான்சில் உள்நாட்டுப் போர்'' என்ற பிரசுரத்தில் தியேர் தலைமை தாங்கிய எதிர்ப்புரட்சி கோஷ்டியின் அட்டூழியங்களை நிருபிக்கின்ற ஆவணங்கள் பிற்சேர்க்கையாக வெளியிடப்பட்டன.—*158*.

46 *The Times* (''காலங்கள்'')—லண்டனிலிருந்து 1785 முதல் வெளியாகின்ற ஆங்கில தினசரி. பழமைவாதப் போக்கைப் பின்பற்றுவது.—*159.*

47 Investiture—மத்திய காலங்களில் நிலவுடைமையாளர்களின் நிலங்களை விவசாயிகள் அல்லது மதகுருக்களிடம் குத்தகைக்கு விடும் பொழுது பின்பற்றப்பட்ட முறை. சமூக ஏணியில் கீழே இருந்தவர்கள் மேலே இருந்த மதச்சார்பில்லாத மற்றும் மதச்சார்புடைய நிலப்பிரபுக்களை முற்றிலும் சார்ந்திருந்ததை இது எடுத்துக் காட்டுகிறது.—*168.*

48 ஜிரோந்தவாதிகள்—பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியின் போது பெரிய வர்த்தக, தொழில்துறை மற்றும் நிலவுடைமை முதலாளி வர்க்கத்தின் கட்சி. *1792* ஆகஸ்ட் முதல் *1793* மே முடிய அவர்கள் ஆட்சியிலிருந்த காலத்தில் குடியரசை உடனடியாகப் பிரகடனம் செய்வதை எதிர்த்தார்கள், புரட்சியின் முன்னேற்றத்தைத் தடை செய்தார்கள், கடைசியில் எதிர்ப்புரட்சியோடு கூட்டுச் சேர்ந்தார்கள். ஜாகோபின் சர்வாதிகாரத்தின் போது (*1793* ஜூன்—*1794* ஜூலை) அவர்கள் நாட்டுப்புறங்களின் சுயாட்சி மற்றும் கூட்டாட்சியை ஆதரிக்கின்ற சாக்கில் ஜாக்கோபின் அரசாங்கத்தையும் அதை ஆதரித்த புரட்சிகரமான மக்களையும் எதிர்த்தார்கள்.—*168.*

49 *Kladderadatsch*—பெர்லினில் வெளியிடப்பட்ட கிண்டல் பத்திரிகை.

*Punch, or the London Charivari*—முதலாளித்துவ-மிதவாத நகைச்சுவை இதழ்.—*169.*

50 பிரெஞ்சு அரசியல் நிர்ணய சபை கடன்களைத் தீர்ப்பதைத் தள்ளிவைக்கின்ற மசோதாவை *1848* ஆகஸ்ட் *22*ல் நிராகரித்தது. அதனுல் குட்டி முதலாளி வர்க்கத்தில் கணிசமான பகுதியினர் அழிந்தனர், தங்களுக்குக் கடன் கொடுத்த பெரிய முதலாளிகளிடம் கருணை காட்டும்படி கெஞ்சினுர்கள். மார்க்ஸ் இந்த நிலையைக் குறிப்பிடுகிருர்.—*173.*

51 Frères ignorantins (''முட்டாள் சகோதரர்கள்'')—17ம் நூற்றுண்டின் நிறுவப்பட்ட ஒரு மத ஸ்தாபனத்தின் பட்டப்பெயர். அதன் உறுப்பினர்கள் ஏழைகளுடைய குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தார்கள். அக்கல்வியில் மத போதனே அதிகமாகவும் பொதுக் கல்வி குறைவாகவும் இருந்தது. பிரான்சில் ஆரம்பக் கல்வி மோசமான தரத்தையும் மதச்சார்புடையதாகவும் இருந்ததை மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிறுர்.—174.

52 நாட்டுப்புறங்களின் **குடியரசு யூனியன் கட்சி** — பிரான்சின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்து பாரிசில் வசித்தவர்களின் அரசியல் சங்கம். இச்சங்கம் பாரிஸ் கம்யூனே ஆதரித்தது, வெர்சேய் அரசாங்கத்துக்கும் முடியரசுவாத தேசிய அசெம்பிளிக்கும் எதிராகப் போராடும்படி அறைகூவியது.—174.

53 பாரிஸ் கம்யூன் வெளியிட்ட ''கிராமங்களிலுள்ள உழைக்கும் மக்களுக்கு'' என்ற அறிக்கை இங்கே குறிப்பிடப்படுகிறது. இது 1871 ஏப்ரல்—மே மாத ஆரம்பத்தில் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. தனிப்பிரசுரமாகவும் அச்சிடப்பட்டது.—174.

54 பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியின் போது நாடு துறந்து ஓடியவர்களின் எஸ்டேட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. பத்தாவது சார்லசின் பிற்போக்கான அரசாங்கம் 1825 ஏப்ரல் 27ல் நிறைவேற்றிய சட்டம் அவர்களுக்கு நட்ட ஈடுகொடுக்க வழி செய்தது. 1000 மில்லியன் பிராங்குகள் நட்ட ஈட்டுத் தொகை. இதற்கு வட்டி 3 சதவிகிதம். இதில் பெரும்பகுதி அரச பரிவாரத்தினருக்கும் பெரிய நிலவுடைமையாளர்களுக்கும் கொடுக்கப்பட்டது.—174.

55 குறிப்பு எண் 29ஐப் பார்க்கவும்.—176.

56 பிரான்சை இராணுவ மாவட்டங்களாகப் பிரித்து அவற்றை இராணுவ தளபதிகளின் நிர்வாகத்தில் ஒப்படைக்கின்ற அரசாணே இங்கே குறிப்பிடப்படுகிறது. அவற்றின் மேயர்களே நியமிப்பதற்கும் நீக்குவதற்கும் ஜனுதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டது. அதன்படி

கிராம ஆசிரியர்கள் போலீஸ் அதிகாரியின் கட்டுப் பாட்டில் வைக்கப்பட்டார்கள், பொதுக் கல்வியில் மதகுருவின் செல்வாக்கு அதிகரித்தது. இதைப் பற்றிய விவரங்களை மார்க்ஸ் **பிரான்சில் உள்நாட்டுப் போர்** என்ற பிரசுரத்தில் தருகிறார்.—*176*.

57 குறிப்பு எண் 30ஐப் பார்க்கவும்.—*178*.

58 பிக்புஸ் கன்னிப்பெண்கள் மடாலயத்தைச் சோதனை யிட்ட பொழுது ஏராளமான சித்திரவதைக் கருவிகள் அகப்பட்டன, கன்னிப் பெண்கள் பல வருட காலம் இருட்டறைகளில் பூட்டிவைக்கப்பட்டு தண்டிக்கப் பட்டது தெரியவந்தது. இரகசியமாகக் கொலை செய்யப் பட்டவர்களைப் புதைப்பதற்கு செயின்ட் லோரென்ட் மாதாகோவிலில் இரகசியக் கல்லறை இருக்கும் விவரம் தெரிய வந்தது. கம்யூன் இத்தகவல்களை 1871 மே 5இல் பத்திரிகைகளில் வெளியிட்டது, **மதகுருக்களின் அட்டூழியங்கள்** என்ற தலைப்பில் பிரசுரமாகவும் வெளி யிட்டது.—*179*.

59 **வில்ஹெல்ம்ஸ்ஹோயெ** — பிரஷ்யாவின் அரசர்களுக்குச் சொந்தமான கோட்டை, கேஸெல் என்ற இடத் துக்குப் பக்கத்தில் அமைந்திருக்கிறது, சக்கரவர்த்தி லுயீ நெப்போலியன் போனபார்ட்டும் பிரெஞ்சு இரா ணுவத் தளபதிகளும் இங்கே சிறைவைக்கப்பட்டிருந் தார்கள். அவர்கள் தங்கள் உபயோகத்துக்காக சிக ரெட்டுகளைத் தயாரித்தார்கள்.—*179*.

60 Absenteeists — தங்களுடைய சொந்தப் பண்ணைகளில் வசிக்காத நிலப்பிரபுக்கள்.—*180*.

61 Francs-fileurs (*சுதந்திரமாக ஓடிப் போனவர்கள்*)—முற்று கையிடப்பட்ட பாரிஸ் நகரத்திலிருந்து ஓடிப்போன முதலாளிகளுக்குத் தரப்பட்ட பட்டப்பெயர்.—*183*.

62 **கோப்லென்ஸ்**—மேற்கு ஜெர்மனியில் ஒரு நகரம். பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியின் போது பிரான்சை விட்டு ஓடிவந்த முடியரசுவாத நிலப்பிரபுக் கள் இந்நகரத்தில் தங்கிப் புரட்சிகர அரசாங்கத்துக்கு எதிராக சதிகளைச் செய்தார்கள். பதினான்காம் லுயீயின்

முந்திய நிதி அமைச்சரும் மோசமான பிற்போக்காளரு மான டெ காலோன் இங்கே அகதி அரசாங்கத்தை அமைத்திருந்தார்.—*183.*

63 **ஷுவான்கள்**—பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சி யின் போது பிரெட்டானியிலும் அதை அடுத்திருந்த பிரதேசங்களிலும் நடைபெற்ற எதிர்ப்புரட்சிக் கலகங் களில் பங்கெடுத்தவர்கள். பாரிஸ் கம்யூனின் போது வெர்சேய் அரசாங்கம் பிரெட்டானியில் திரட்டிய முடியரசுவாதப் படைப் பிரிவுகளுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது.—*184.*

64 பாரிசில் வெடித்த பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தாக்கத்தில் லியோன், மர்சேய் மற்றும் சில நகரங்களில் வெகுஜனப் புரட்சிகர நடவடிக்கைகள் ஏற்பட்டன. லியோனில் மார்ச் 22ல் உழைக்கும் மக்களும் தேசியக் காவலர்களும் நகர் மண்டபத்தைக் கைப்பற்றினுர்கள். மார்ச் 26ல் கம்யூனைப் பிரகடனம் செய்தார்கள். மர் சேய்யில் எழுச்சிவீரர்கள் நகர் மண்டபத்தைக் கைப் பற்றி போலீசுத் தலைமை அதிகாரியைக் கைது செய் தார்கள். ஏப்ரல் 5ந் தேதியன்று கம்யூனுக்குத் தேர்தல் கள் நடைபெறும் என்று அறிவித்தார்கள். லியோன், மர்சேய்யின் உழைக்கும் மக்களின் புரட்சிகர நடவடிக் கைகள் காட்டுமிராண்டித்தனமாக ஒடுக்கப்பட்டன. மர்சேய் நகரம் குண்டு வீசித் தகர்க்கப்பட்டது.—*186.*

65 குறிப்பு எண் 31ஐப் பார்க்கவும்.—*188.*

66 குறிப்பு எண் 29ஐப் பார்க்கவும்.—*188.*

67 **மும்மூர்த்திகள்**—கி. மு. முதல் நூற்றுண்டில் பண்டைக் கால ரோம் நகரத்தில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக செல்வாக்குள்ள அரசியல் தலை வர்கள் வகுத்த கூட்டணி.—*193.*

68 *Journal de Paris* (''பாரிஸ் சஞ்சிகை'')—1867இல் பாரி சிலிருந்து வெளியிடப்பட்ட வார இதழ்; முடியரசு வாத-ஆர்லியன்வாதப் போக்கைப் பின்பற்றியது.— *194.*

69 முதலாம் நெப்போலியன் ருஷ்யாவின் மீது படையெடுத்தபொழுது, நடைபெற்ற தேச பக்தப் போரின் போது, மாஸ்கோ நகரத்தில் வசித்தவர்கள் தங்களுடைய வீடுகளுக்கு நெருப்பு வைத்துவிட்டு மாஸ்கோவை விட்டு வெளியேறினார்கள்.—*197.*

70 **பிரிட்டோரியன்கள்**—பண்டைக் கால ரோம் நகரத்தில் சக்கரவர்த்தி அல்லது தளகர்த்தரினுடைய சொந்தப் படை; இவர்களுக்கு அதிகமான சலுகைகள் இருந்தன; இவர்கள் அரண்மனைப் பதவிச் சண்டைகளில் பங்கெடுப்பதும் தமக்கு வேண்டியவர்களைப் பதவியில மர்த்துவதும் உண்டு. பிற்காலத்தில் ''பிரிட்டோரியன்கள்'' என்ற சொல் கைக்கூலிகளையும் இராணுவ அத்துமீறல்களையும் குறிக்கின்ற சொல்லாயிற்று.—*199.*

71 *1871*ம் வருடத்தில் மே *28*ந் தேதியன்று புனித ஞாயிற்றுக்கிழமை (Trinity) விடுமுறை நாள் வந்தது.—*201.*

72 குறிப்பு எண் *18*ஐப் பார்க்கவும்.—*202.*

73 தேசியக் காவலர்களின் மத்தியக் கமிட்டி *1871* மார்ச் *22*ந் தேதியன்று பாரிஸ் நகர மக்களுக்கு விடுத்த வேண்டுகோளைக் கார்ல் மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிறார். இந்த வேண்டுகோள் ஒரு சுவரொட்டியாக வெளியிடப்பட்டது. ''பிரெஞ்சுக் குடியரசின் அதிகார பூர்வமான பத்திரிகையிலும்'' பிரசுரிக்கப்பட்டது.—*205.*

74 நட்ட ஈடு கொடுப்பதைப் பற்றி தேசியக் காவலர்களின் மத்திய கமிட்டியின் நிலையை விளக்குகின்ற கட்டுரையை மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிறார். இக்கட்டுரை ''பிரெஞ்சுக் குடியரசின் அதிகார பூர்வமான பத்திரிகையின்'' இதழ் *83*இல் *1871* மார்ச் *24*இல் வெளியிடப்பட்டது.—*210.*

75 **ஃபலான்ஸ்டர்கள்**—பிரெஞ்சுக் கற்பனாவாத சோஷலிஸ்ட் ஷார்ல் ஃபூரியேயின் இலட்சிய சோஷலிச சமூகத்தில் உற்பத்தி மற்றும் நுகர்வுச் சங்கங்களின் உறுப்பினர்கள் வசித்த மாளிகைகளின் பெயர்.

இகாரியா—பிரெஞ்சுக் கற்பனவாதக் கம்யூனிஸ்ட் எடியென் கபே எழுதிய தத்துவ நாவலில் சித்திரிக்கப் படுகின்ற கற்பனை நாடு.—217.

76 குறிப்பு எண் 21ஐப் பார்க்கவும்.—218.

77 **ஸெடான் சண்டை**—1870 செப்டெம்பர் 1-2 தேதி களில் நடைபெற்ற சண்டையில் பிரஷ்யாவின் துருப்பு கள் மாக்மாஹோனின் தலைமையிலிருந்த பிரெஞ்சுத் துருப்புகளை முறியடித்தன. 1870-71ம் வருடங்களில் நடைபெற்ற பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தத்தில் இது தீர் மானகரமான சண்டையாகும்.—220.

78 முதலாவது அகிலத்தின் பாரிஸ் உறுப்பினர்கள், ஜெர் மன் எதிர்ப்புக் கழகத்தைப் போல, தன்னுடைய பிரிவு களிலிருந்து எல்லா ஜெர்மானியர்களையும் வெளியேற்றி விட்டார்கள் என்ற வதந்தியை *Paris-Journal* என்ற பிற்போக்குப் பத்திரிகை பரப்பியது. இந்த அவதூறை சர்வதேசத் தொழிலாளர்கள் சங்கத்தின் பாரிஸ் பெட ரல் கவுன்சில் பொதுக் குழுவுக்கு அனுப்பிய விசேஷ அறிக்கையில் அம்பலப்படுத்தியது. பொதுக்குழுவின் சார்பில் இதை அம்பலப்படுத்தி கார்ல் மார்க்ஸ் எழுதிய கடிதத்தை *Times* தினசரி வெளியிட்டது.

பாரிஸ் நகரத்தின் பிரபுக்களும் முதலாளிகளும் **ஜெர்மானியர் எதிர்ப்புக் கழகத்தை** நிறுவி அதற்கு நிதியுதவி செய்தார்கள். இந்த ஸ்தாபனத்துக்கும் தொழிலாளர் களுக்கும் எத்தகைய சம்பந்தமும் கிடையாது.—220.

79 நெப்போலியனுடைய ராணுவ வெற்றிகளைச் சிறப்பிப் பதற்காக எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பீரங்கிகளை உருக்கி அந்த வெண்கல உலோகத்தைக் கொண்டு **வெண்டோம் ஸ்தூபி** 1806-10ம் வருடங் களில் பாரிசில் நிறுவப்பட்டது. அதன் உச்சியில் நெப் போலியனுடைய உருவச்சிலை இருந்தது. பாரிஸ் கம் யூனுடைய உத்தரவின் பேரில் 1871 மே 16ந் தேதி யன்று அது இடிக்கப்பட்டது. 1875இல் அந்த ஸ்தூபி பிற்போக்காளர்களால் மறுபடியும் நிர்மாணிக்கப் பட்டது.—221.

80 பக்கூனினைப் பின் பற்றிய அராஜகவாதிகள் இங்கே குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள் புரட்சிகரப் போராட்டத்தில் ஸ்தாபனத் தலைமையின் அவசியத்தை நிராகரித்தார்கள்; தொழிலாளி வர்க்கக் கட்சி, பாட்டாளி வர்க்க அரசு அவசியம் என்பதையும் மறுத்தார்கள்.—224.

81 இத்தாலியின் மாபெருங் கவிஞரான தாந்தே (1265—1321) தன்னுடைய ''தெய்விக நாடகம்'' என்ற காவியத்தில் நரகத்தின் வாயிலில் எழுதப்பட்டிருப்பதாகக் கூறும் வரிகளை எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார்.—226.

82 **கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம்** என்ற நூலைக் கார்ல் மார்க்ஸ் 1875 ஏப்ரல்—மே மாதங்களில் எழுதினார். ஜெர்மனியில் இரண்டு தொழிலாளர் ஸ்தாபனங்கள்—சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சி (ஐஸனுக்வாதிகள்), ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கம் (லஸ்ஸால்வாதிகள்) ஒன்றுபட்ட சோஷலிஸ்ட் தொழிலாளர்கள் கட்சியாக இணைவதற்கு 1875 மே 22—27 தேதிகளில் கோத்தாவில் ஒற்றுமை காங்கிரஸ் நடைபெற்றது. இந்த ஒற்றுமை காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நகல் செயல்திட்டத்தை மார்க்ஸ் விமர்சனம் செய்தார்.

ஜெர்மன் தொழிலாளிவர்க்க இயக்கத்தில் ஏற்பட்டிருந்த பிளவை அகற்றுவதில் மார்க்சும் எங்கெல்சும் அக்கறை கொண்டிருந்த போதிலும் லஸ்ஸால்வாதிகளுடன் சித்தாந்தத் துறையில் சமரசங்கள் செய்வதையும் சலுகைகள் கொடுப்பதையும் அவர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள். அவர்கள் நகல் திட்டத்தில் இடம் பெற்றிருந்த தவறான கருத்துக்களைக் கூர்மையாக விமர்சனம் செய்தார்கள். எனினும் காங்கிரஸ் அந்த நகல் திட்டத்தை சாதாரணமான திருத்தங்களுடன் ஏற்றுக் கொண்டது.—230.

83 1869 ஆகஸ்ட் 6—9 தேதிகளில் ஐஸனுக் என்ற இடத்தில் ஜெர்மனி, ஆஸ்திரியா மற்றும் ஸ்விட்சர்லாந்தின் சமூக-ஜனநாயகவாதிகள் கூடி, ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியை நிறுவினார்கள். இவர்கள் பின்னர் ஐஸனுக்வாதிகள் என்று அழைக்கப்

பட்டனர்; இக்கட்சியின் திட்டம் (1869ம் வருடத்திய ஐஸஞக்திட்டம்) பிரதானமாக முதலாம் அகிலத்தின் கோட்பாடுகளுடன் பொருந்தியிருந்தது.—230.

84 **ஜெர்மன் மக்கள் கட்சி** 1865இல் நிறுவப்பட்டது. முக்கியமாக தெற்கு ஜெர்மன் பிரதேசங்களைச் சேர்ந்த குட்டி மற்றும் நடுத்தர முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகள் இக்கட்சியில் சேர்ந்திருந்தார்கள். இக்கட்சி பிரஷ்யாவின் தலைமையில் மத்தியப்படுத்தப்பட்ட ஜனநாயகக் குடியரசு என்ற முறையில் ஜெர்மனியை ஒன்றுபடுத்துவதை எதிர்த்தது, பிரஷ்யாவையும் ஆஸ்திரியாவையும் உள்ளிட்ட ஜெர்மன் ''பேரரசு'' என்ற கருத்தை ஆதரித்தது. முதலாவது அகிலத்துடன் நெருக்கமாக இருந்த சாக்சனியின் தொழிலாளர்கள் கட்சி 1866இல் மக்கள் கட்சியில் சேர்ந்து அதன் இடதுசாரி அணியாக அமைந்திருந்தது. இக்கட்சி பின்னர் மக்கள் கட்சியிலிருந்து வெளியேறி 1869இல் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியை (ஐஸஞக்வாதிகள்) நிறுவுவதில் பங்கெடுத்தது.—231.

85 **லஸ்ஸால்வாதிகள், லஸ்ஸால்வாதம்**—ஜெர்மன் தொழிலாளர்கள் இயக்கத்தில் 1860—1870க்களில் தோன்றிய சந்தர்ப்பவாதப் போக்கு; 1863இல் நிறுவப்பட்ட ஜெர்மன் தொழிலாளர்கள் பொதுச் சங்கத்தின் தலைவராக இருந்த குட்டி முதலாளி வர்க்க சோஷலிஸ்டான ஃபெர்டினண்டு லஸ்ஸாலின் பெயருடன் இணைக்கப்பட்டது. சட்டபூர்வமான பிரச்சாரம், பொது வாக்குரிமை, பிற்போக்கான முதலாளி வர்க்க-ஜங்கர் அரசிடமிருந்து நிதியுதவி பெறுகின்ற உற்பத்தியாளர்கள் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் சோஷலிசத்தை அடைய முடியும் என்ற சீர்திருத்தவாத பிரமைகளை லஸ்ஸால்வாதிகள் பரப்பினார்கள். அரசு வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட அமைப்பு என்றும் அதை படிப்படியாக 'சுதந்திரமான மக்கள் அரசாக' மாற்ற முடியும் என்றும் அவர்கள் கருதினார்கள். முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்கள் மிகக் குறைவான கூலி உயர்வு கூடப் பெற முடியாது என்று வலியுறுத்துகின்ற ''கூலி

களின் இரும்புச் சட்டம்'' என்ற விஞ்ஞானப் போலி யான தத்துவத்தை லஸ்ஸால் உருவாக்கினர். லஸ்ஸால் வாதிகள் அதை ஆதாரமாகக் கொண்டு தொழிலாளி வர்க்கம் மற்றும் தொழிற்சங்கங்களின் பொருளா தாரப் போராட்டத்தை நிராகரித்தார்கள்.—*231.*

86 இங்கே மார்க்ஸ் ''மராத்'' என்ற சொல்லைக் கிண்ட லாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். லஸ்ஸால்வாதப் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பத்திரிகையான *Neuer Social-Demokrat* (''புதிய சமூக-ஜனநாயகவாதி'') யின் தலைமை ஆசிரியரான வில்ஹெல்ம் ஹாசெல்மனை அவர் குறிப்பிடுகிறார்.

**மராத் ஜான் பால்**—*(1743-1793)* பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியில் *(1789-1794)* ஜாக்கோபின்வாதி களின் தலைவர்களில் ஒருவர்; ''மக்கள் நண்பன்'' என்ற பத்திரிகையின் ஆசிரியர்; எதிர்ப்புரட்சிக்காரர்களின் திட்டங்களை அதில் அம்பலப்படுத்தினர்.—*247.*

87 **சமாதானம் மற்றும் சுதந்திரக் கழகம்**—ஸ்விட்சர்லாந் தில் *1867*இல் குட்டிமுதலாளி வர்க்கக் குடியரசுவாதி களும் மிதவாதிகளும் இந்த முதலாளித்துவ சமாதான ஸ்தாபனத்தை நிறுவினர்கள். 'ஐரோப்பிய ஐக்கிய அரசுகளை' ஏற்படுத்துவதன் மூலம் யுத்தங்களைத் தடுக்க முடியும் என்று இக்கழகம் வலியுறுத்தி மக்கள் மத்தியில் தவறான எண்ணங்களைப் பரப்பியது; பாட் டாளி வர்க்கத்தை வர்க்கப் போராட்டத்திலிருந்து திசை திருப்பியது.—*248.*

88 **மால்தஸ், தாமஸ்** *(1766—1834)*—ஆங்கில மதகுரு, பொருளியலாளர். பிற்போக்கான மக்கள் தொகைத் தத்துவத்தை முன்வைத்தவர். தொழிலாளி வர்க்கத் தின் வறுமை முதலாளித்துவச் சுரண்டலினுல் ஏற்பட வில்லை, நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியைக் காட்டி லும் மக்கள் தொகை மிக அதிகமாகப் பெருக்கமடை வதனுல்தான் வறுமை ஏற்படுகிறது என்று அவர் கூறினர். மக்கள் தொகை மிகவும் அதிகரிக்கின்ற பொழுது கொள்ளை நோய்கள், பஞ்சம் யுத்தங்கள்

ஆகியவற்றின் மூலம் இயற்கை தலையிட்டு மக்கள் தொகையைக் குறைக்கிறது என்று அவர் கூறினார். —250.

89 *L'Atelier* (''தொழிற்சாலை'')—பாரிசில் 1840க்களில் வெளியிடப்பட்ட சஞ்சிகை; கிறிஸ்துவ சோஷலிசத்தை ஆதரித்த கைவினைஞர்கள் மற்றும் தொழிலாளர்களுடைய கருத்துக்களைப் பிரதிநிதித்துவம் செய்தது. —253.

90 Kulturkampf (கலாச்சாரத்துக்கான போராட்டம்)— 1870க்களில் பிஸ்மார்க்கின் அரசாங்கம் மதச்சார்பற்ற கலாச்சாரம் என்ற பதாகையின் கீழ் நிறைவேற்றிய சீர்திருத்தங்களுக்கு முதலாளி வர்க்க மிதவாதிகள் கொடுத்த பெயர். இச்சீர்திருத்தங்கள் கத்தோலிக்க திருச்சபைக்கும் நிலவுடைமையாளர்கள் மத்தியில் பிரிவினைவாத மற்றும் பிரஷ்ய-எதிர்ப்புப் போக்குகளை ஆதரித்த மத்திய கட்சிக்கும் எதிராகச் செலுத்தப் பட்டன. மதவேறுபாடுகளை விசிறிவிட்டுத் தொழிலாளர்களை வர்க்கப் போராட்டத்திலிருந்து திசை திருப்புவதும் பிஸ்மார்க்கின் நோக்கமாகும். 1880க்களின் தொடக்கத்தில் தொழிலாளர்கள் இயக்கம் மேலோங்கிய பொழுது இச்சீர்திருத்தங்களில் பெரும்பகுதி ரத்துச் செய்யப்பட்டது.—260.

91 **சுதந்திர மக்கள் அரசு**—1870க்களில் லஸ்ஸால்வாதிகளின் செயல்திட்டத்தில் இடம் பெற்ற கோரிக்கை.—269.

92 **பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டம்.** இக்கட்சி 1879இல் நிறுவப்பட்டது. அதன் வேலைத் திட்டம் 1880 மே மாதத்தில் தயாரிக்கப்பட்டது. அதன் தத்துவப் பகுதியை (அறிமுகம்) கார்ல் மார்க்ஸ் எழுதினார். குறைந்தபட்ச வேலைத்திட்டத்தை ஜூல் கேட்டும் போல் லஃபார்கும் எழுதினர்கள். தத்துவப் பகுதி பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியை எதிர்நோக்கிய கடமைகளைக் கம்யூனிஸ்ட் தத்துவத்தின் அடிப்படையில் நிறுவியது என்று எங்கெல்ஸ் கூறினார். 1880 நவம்பரில் நடைபெற்ற கட்சிக் காங்கிரசில் வேலைத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.—277.

93 பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் 1831இல் நிறைவேற்றப் பட்டுப் பிரபுக்கள் சபையில் 1832இல் ஏற்றுக் கொள்ளப் பட்ட சீர்திருத்தச் சட்டம் இங்கே குறிப்பிடப்படு கிறது. பிரபுக்களும் நிதி மேல்தட்டினரும் அரசியலைத் தமது ஏகபோகமாக வைத்திருந்த நிலைமையை இச் சட்டம் மாற்றியது. தொழில்துறை முதலாளி வர்க் கத்தினர் நாடாளுமன்றத்துக்குள் நுழைய முடிந்தது. இந்தப் போராட்டத்தில் முக்கியமான சக்தியாக இருந்த பாட்டாளி வர்க்கமும் குட்டி முதலாளி வர்க் கமும் வாக்குரிமை பெறவில்லை.—283.

94 தானியச் சட்டங்கள் — இங்கிலாந்துக்குள் தானிய இறக்குமதியைக் கட்டுப்படுத்துகின்ற அல்லது தடை செய்கின்ற சட்டங்கள் பெரிய நிலவுடைமையாளர் களின் நன்மைக்காகக் கொண்டுவரப்பட்டன. பெரிய நிலவுடைமையாளர்களுக்கும் தொழில்துறை முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் தானியச் சட்டங்களைப் பற்றி நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக அவை ரத்துச் செய்யப்பட்டன.—283.

95 குறிப்பு எண் 8ஐப் பார்க்கவும்.—290.

96 குறிப்பு எண் 24ஐப் பார்க்கவும்.—293.

97 ஜெர்மனியில் சோஷலிஸ்ட்-எதிர்ப்புச் சட்டம் 1878 அக்டோபர் 21ந் தேதியன்று கொண்டுவரப்பட்டது. எல்லா சமூக-ஜனநாயக மற்றும் தொழிலாளர் ஸ்தா பனங்களையும் தொழிலாளர் பத்திரிகைகளையும் இச் சட்டம் தடைசெய்தது. சோஷலிஸ்ட் பிரசுரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன, சமூக-ஜனநாயகவாதிகள் ஒடுக்கப்பட்டார்கள். தொழிலாளி வர்க்க இயக்கத்தின் நிர்ப்பந்தம் காரணமாக இச்சட்டம் 1890 அக்டோபர் 1ந் தேதியன்று ரத்துச் செய்யப்பட்டது.—297.

98 ஜெர்மன் முற்போக்குக் கட்சி 1861இல் நிறுவப்பட்டது. வர்த்தக முதலாளி வர்க்கம், சிறு தொழிலதிபர்கள், சில கைவினைஞர்கள் இக்கட்சிக்கு ஆதரவளித்தனர். பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மனியை ஒற்றுமைப் படுத்துதல், அகில-ஜெர்மன் நாடாளுமன்றத்தைக்

கூட்டுதல், நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பான மிதவாத மந்திரிசபையை அமைத்தல் ஆகியவற்றை முற்போக்குக் கட்சி ஆதரித்தது. ஜெர்மனி ஒற்றுமைப்படுத்தப்பட்ட (1871) பிறகு இக்கட்சி தொழிலாளி வர்க்கத்தையும் சோஷலிஸ்ட் இயக்கத்தையும் கண்டு அஞ்சியது. எனவே அரை-எதேச்சாதிகார ஜெர்மனியில் பிரஷ்ய ஐங்கர்களின் ஆதிக்கத்தை சகித்துக்கொண்டது. 1884இல் முற்போக்குக் கட்சி தேசிய மிதவாதக் கட்சியின் இடதுசாரி அணியுடன இணைந்து ஜெர்மன் சுதந்திர சிந்தனைக் கட்சியை உருவாக்கியது.—297.

99 Venstre (இடது)—டென்மார்க்கில் 1870க்களில் அமைக்கப்பட்ட முதலாளி வர்க்க மிதவாதக் கட்சி; பெரிய மற்றும் நடுத்தர நிலவுடைமையாளர்கள், நகர முதலாளி வர்க்கத்தில் ஒரு பகுதியினர் ஆகியோரைப் பிரதிநிதித்துவம் செய்தது.—297.

100 சாத்தியவாதிகள்—பிரெஞ்சு சோஷலிஸ்ட் இயக்கத்தில் ஒரு சந்தர்ப்பவாதப் போக்கு; இப்போக்கின் விளைவாக பிரெஞ்சுத் தொழிலாளர்கள் கட்சி பிளவுற்றது; இதன் தலைவர்கள் 'சாத்தியமானவற்றுக்கு' மட்டும் போராடினால் போதும் என்று கூறியதால் இப்பெயர் ஏற்பட்டது.—301.

101 1860க்களின் தொடக்கத்தில் பிரஷ்ய அரசாங்கத்துக்கும் சட்டமன்றத்திலிருந்த முதலாளி வர்க்க-மிதவாதப் பெரும்பான்மையினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இராணுவத்தைச் சீரமைப்பதைப் பற்றி யுத்த அமைச்சர் வொன் ரோன் சமர்ப்பித்த மசோதாவை சட்டமன்றம் நிராகரித்தது. ஆனால் அரசாங்கம் சீக்கிரத்தில் ''இராணுவத்தின் போர்க் குணத்தை ஊக்குவிப்பதற்கான'' நிதி ஒதுக்கீடுகளுக்கு சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றது. ஆனால் அது உண்மையில் இராணுவத்தைச் சீரமைப்பதற்கே உபயோகிக்கப்பட்டது. 1862 மார்ச்சில் மிதவாதப் பெரும்பான்மையினர் இராணுவ வரவு-செலவுத் திட்டத்தை அங்கீகரிக்க மறுத்து, பொறுப்புடைய அமைச்சரவை நியமிக்கப்

பட வேண்டும் என்று கோரிய பொழுது அரசாங்கம் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதிய தேர்தல்களை நடத்தியது. 1862 செப்டெம்பரில் பிஸ்மார்க்கின் தலைமையில் ஒரு பிற்போக்கான அமைச்சரவை நியமிக்கப்பட்டது. அமைச்சரவை அடுத்த மாதத்திலேயே சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு இராணுவ சீரமைப்பைத் தொடங்கியது; சட்டமன்றத்தின் அனுமதி இல்லாமல் பெருந்தொகையைச் செலவிட்டது. 1866இல் பிரஷ்யா ஆஸ்திரியாவைத் தோற்கடித்ததும் பிரஷ்ய முதலாளி வர்க்கம் பிஸ்மார்க்கிடம் சரணடைந்த பொழுதுதான் இச்சண்டை முடிவடைந்தது.—306.

102 1871இல் ஜெர்மன் பேரரசில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 'அரசுரிமை கொண்ட' இரண்டு சுண்டைக்காய் அரசுகளின் பெயர்களை எங்கெல்ஸ் கிண்டலாக இணைத்து எழுதியிருக்கிறார்.—307.

103 **மான்செஸ்டர்வாதம்** அல்லது **வர்த்தக சுதந்திரம்**—19ம் நூற்றுண்டின் முதற்பாதியில் நிலவிய பொருளாதாரப் போக்கு. வர்த்தக சுதந்திரவாதிகள் தொழில் துறை முதலாளி வர்க்கத்தின், எல்லாவற்றுக்கும் மேலாக பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்தார்கள். வர்த்தக சுதந்திரத்தையும் பொருளாதார விவகாரங்களில் அரசு தலையிடக் கூடாது என்ற கோட்பாட்டையும் ஆதரித்தார்கள். 1840—1850க்களில் வர்த்தக சுதந்திரவாதிகள் சுயேச்சையான அரசியல் கோஷ்டியாக இருந்த பிறகு 1860க்களில் மிதவாதக் கட்சியில் சேர்ந்தார்கள். துணி உற்பத்தியாளர்களான காப்டேன் மற்றும் பிரைட் தலைமை தாங்கிய **மாஞ்செஸ்டர் மரபு** என்று சொல்லப்படுவது வர்த்தக சுதந்திரத்தை பொருளாதாரச் சிந்தனையில் ஒரு போக்கு என்ற முறையில் எடுத்துக் கூறியது.—308.

104 தெற்கு ஜெர்மன் அரசுகளான பவேரியாவும் வுர்டம்பர்கும் வட ஜெர்மன் கூட்டாட்சியிலும் (1870) ஜெர்மன் பேரரசின் அரசியலமைப்புச் சட்டத்திலும் (1871) விசேஷ உரிமைகளைப் பெற்றிருந்தன. உதாரணமாக,

பிராந்தி மற்றும் பீர் மீது விசேஷ வரி விதிக்கின்ற உரிமை, தபால், தந்தித்துறையின் மீது கட்டுப்படுத்தும் அதிகாரம் முதலியன. பவேரியா தன்னுடைய இராணுவத்தையும் இரயில்வே அமைப்பையும் தானே நிர்வாகம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. கூட்டாட்சிக் கவுன்சிலில் பவேரியா, வுர்டம்பர்க் மற்றும் சாக்சனியின் பிரதிநிதிகள் வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தமான விவகாரங்களில் ரத்துரிமை கொண்ட விசேஷமான குழுவாக இயங்கினர்.—*310*.

105 *1799*ல் பதினெட்டாவது புரூமேரில் (நவம்பர் *9*ந் தேதி) நெப்போலியன் போனபார்ட் திடீர்ப்புரட்சியின் மூலம் தன்னை முதல் கான்சலாகப் பிரகடனம் செய்து கொண்டது இங்கே குறிப்பிடப்படுகிறது. இந்த திடீர்ப்புரட்சி பிரான்சில் முதலாளி வர்க்க எதிர்ப்புரட்சியை முழுமையாக்கியது. *1804*இல் பிரான்ஸ் ஒரு பேரரசு என்றும் நெப்போலியன் அதன் சக்கரவர்த்தி என்றும் பிரகடனம் செய்யப்பட்டது. முதலாவது பேரரசுக் காலத்தின் (*1804-15*) பல அதிகார வர்க்க அமைப்புக்கள்—ஆட்சிகள் மாறிய போதிலும்—மூன்றுவது குடியரசுக் காலத்திலும் (*1870—1940*) நீடித்தன.—*311*.

106 *La Tribuna*—இத்தாலிய முதலாளி வர்க்க மிதவாதப் பத்திரிகை; *1883* முதல் ரோம் நகரத்திலிருந்து வெளியிடப்பட்டது.—*313*.

107 *Critica Sociale* (''சமூக விமர்சனம்'')—இத்தாலிய சோஷலிஸ்ட் கட்சியின் இதழ்; மாதமிரு முறை வெளிவந்தது. *1890*க்களில் இப்பத்திரிகை மார்க்ஸ், எங்கெல்சின் நூல்களை வெளியிட்டு இத்தாலியில் மார்க்சியத்தைப் பரப்புவதில் பெரும் பங்காற்றியது.—*313*.

## பெயர்க் குறிப்பகராதி

**அலெக்சாந்திரா**—*டென்மார்க்கின் அரசரான ஒன்பதாம் கிறிஸ்தியனுடைய மகள், 1863இல் வேல்ஸ் இளவரசரைத் திருமணம் செய்து கொண்டாள்; அவர் 1901இல் எட்வார்டு என்ற பெயருடன் இங்கிலாந்தின் அரசரானார்.—154.*

**ஆஃபர் [Affre], தெனீ ஒகுஸ்ட்** *(1793—1848)—பாரிஸ் மாநகர ஆர்ச்பிஷப் (1840-1848). —199.*

**ஆர்லியன்ஸ்**—*பிரெஞ்சு அரச மரபு (1830—1848); புர்போன் அரச மரபின் இளைய பிரிவு.—178.*

**ஆவுயெர் [Auer], இக்னஸ்** *(1846—1907)—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சிப் பிரமுகர்.—230.*

**எக்கெரேன் [Heeckeren], ழோர்ழ் ஷார்ல் டான்தேஸ்,** *உயர் குல பிரபு (1812—1895)—பிரெஞ்சு அரசியல்வாதி, போனபார்ட் ஆதரவாளர்.—155.*

**எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக்** *(1820—1895).—45, 60, 64, 112, 230, 305, 313.*

**எர்வே [Hervé], எட்வார்** *(1835—1899)—பிரெஞ்சு எழுத்தாளர், முதலாளி வர்க்க மிதவாதி.—194.*

**எஸ்திருப் [Estrup], யாக்கப் பிரெணிவும் ஸ்கவேனியுஸ்** *(1825—1913)—டென்மார்க்கின் பழமைவாத அரசியல் தலைவர், நிதி அமைச்சர் மற்றும் பிரதம மந்திரி (1875—1894).—297.*

**ஒரேல் டெ பலடீன் [Aurelle de Paladines], லுயீ ழான் படீஸ்ட் டெ** *(1804—1877)—பிரெஞ்சு ஏசு சபையின் தலைமை நிர்வாகி, பாரிசில் தேசியக் காவலர் படையின் தலைமைத் தளபதியாக (மார்ச் 1871) இருந்தார்.—147, 148, 151.*

ஒஸ்மான் [Haussmann], ழோர்ழ் எழேன் *(1809—1891)—பிரெஞ்சு அரசியல்வாதி, போனபார்ட் ஆதரவாளர், 1851 டிசம்பர் 2 திடீர்ப்புரட்சியில் பங்கெடுத்தவர், பாரிஸ் நகரத்தைச் சீர்திருத்திக் கட்டும் வேலையை இயக்கியவர்.—177, 197, 198.*

ஃபாயர்பாஹ் [Feuerbach], லுட்விக் *(1804—1872)—ஜெர்மன் பொருள்முதல்வாதத் தத்துவஞானி, மார்க்சுக்கு முந்திய காலகட்டத்தைச் சேர்ந்தவர்.—41.*

ஃபாவர் [Favre], ழூல் *(1809—1880)—பிரெஞ்சு வழக்குரைஞர், இராஜியவாதி, தேசியத் தற்காப்பு அரசாங்கத்திலும் தியேர் மந்திரிசபையிலும் வெளிநாட்டு அமைச்சர் (1870-71); பாரிஸ் கம்யூனை ஒழித்தவர்.—143,148,153, 157,179,189,223.*

ஃபிரான்கெல் [Frankel], லேவோ *(1844—1896)—ஹங்கேரிய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் முக்கியமானவர்; பாரிஸ் கம்யூனில் உறுப்பினர், மார்க்ஸ் எங்கெல்சின் சகதோழர்.—221.*

ஃபிலொரான் [Flourens], குஸ்தாவ் *(1838—1871)—பிரெஞ்சுப் புரட்சியாளர், இயற்கை விஞ்ஞானி, பிளாங்கீவாதி, பாரிஸ் கம்யூன் உறுப்பினர், 1871 ஏப்ரலில் வெர்சேய் படைகளால் படுகொலை செய்யப்பட்டார்.—147,153,158.*

ஃபூரியே [Fourier], ஷார்ல் *(1772—1837)—பிரெஞ்சுக் கற்பனாவாத சோஷலிஸ்ட்.—39.*

கவெனியாக் [Cavaignac], லூயீ எழேன் *(1802—1857)—பிரெஞ்சுத் தளபதி, இராஜியப்பிரமுகர், 1848 மே முதல் யுத்த அமைச்சர், பாரிஸ் தொழிலாளர்களின் ஜூன் மாத எழுச்சியைக் குரூரமாக ஒடுக்கியவர்.—199.*

காப்டேன் [Cobden], ரிச்சர்டு *(1804—1865)—இங்கிலாந்தைச் சேர்ந்த தயாரிப்பாளர், அரசியல்வாதி, வர்த்தக சுதந்திர இயக்கத்தின் முன்னணிப் பிரமுகர், தானியச் சட்ட எதிர்ப்புக் கழகத்தை நிறுவியவர்.—308.*

காலிஃபே [Galliffet], காஸ்தோன் அலெக்சாந்தர் ஒகுஸ்ட், *மார்கிஸ் (1830—1909)—பிரெஞ்சு ஜெனரல், பாரிஸ் கம்யூனின் கொலையாளி.—157,159.*

**காலோன் [Calonne], ஷார்ல் அலெக்சாந்தர் டெ** *(1734—1802)—பிரெஞ்சு ராஜியப்பிரமுகர், பிரெஞ்சுப் புரட்சியின் போது எதிர்ப்புரட்சி நாடு துறந்தவர்களின் தலைவர்.—183.*

**காவுத்ஸ்கி [Kautsky], கார்ல்** *(1854—1938)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, தொடக்கத்தில் மார்க்சியத் தத்துவாசிரியராக இருந்து, பிறகு சந்தர்ப்பவாதியாக மாறியவர், மத்தியவாதத்தின் சித்தாந்தி.—288.*

**கிளாட்ஸ்தன் [Gladstone], வில்லியம் யூவர்ட்** *(1809—1898)—பிரிட்டிஷ் இராஜியப்பிரமுகர், லிபரல் கட்சித் தலைவர், பிரதம மந்திரி (1868—74; 1880-85; 1886; 1892-94).—258.*

**கிளைவ் [Clive], ராபர்ட்** *(1725—1774)—வங்காளத்தின் கவர்னர் (1757-60 மற்றும் 1765-67) இந்தியாவில் பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் கொள்ளைக்கார முறைகளைத் தொடங்கி வைத்தவர்.—120.*

**கிஸோ [Guizot], பிரான்சுவா பியேர் கியோம்** *(1787—1874)—பிரெஞ்சு வரலாற்றாசிரியர், பிற்போக்கான கருத்துக்களை ஆதரித்த ராஜியப்பிரமுகர்.—59,127.*

**குருப் [Krupp], பிரெடெரிக் அல்ஃபிரேட்** *(1854—1902)—ஜெர்மனியின் இரும்பு மற்றும் எஃகுத் தொழில் பெரு முதலாளி, ஜெர்மனியின் இராணுவத் தொழிற்துறையிலும் முக்கிய புள்ளியாக இருந்தவர்.—326.*

**குஸேன்-மொன்தபான் [Cousin-Montauban], ஷார்ல் கியோம் மரீ அபொலினேர் அன்டுவான் டெ பலிக்கவோ** *(1796—1878)—பிரெஞ்சுத் தளபதி, போனபார்ட் ஆதரவாளர், யுத்த அமைச்சர் மற்றும் அரசாங்கத் தலைவர் (1870 ஆகஸ்ட்-செப்டெம்பர்.)—147.*

**கூகல்மன் [Kugelmann], லூட்விக்** *(1830—1902)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, 1848-49ல் ஜெர்மனியில் வெடித்த புரட்சியில் பங்கெடுத்தவர், முதலாவது அகிலத்தில் உறுப்பினர், மார்க்ஸ், எங்கெல்சின் நண்பர்.—138,140.*

**கூக் [Cook], ஃபிலவியுஸ் ஜொஸேஃபுஸ்** *(1838—1901)—அமெ*

*ரிக்க இறைமை இயலார், போஸ்டனில் மதபோதகர், மதத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் இடையில் ஒத்துழைப்பு அவசியம் என்று வாதாடியவர்.—264.*

**கெட்லொகோன்** [Coëtlogon], **லுயீ ஷார்ல் எமனுயேல்** *(1814—1886)—பிரெஞ்சு அதிகாரி, போனபார்ட் ஆதரவாளர், 1871 மார்ச் 21ல் பாரிசில் நடைபெற்ற எதிர்ப்புரட்சி நடவடிக்கையை அமைத்தவர்களில் ஒருவர்.—155.*

**கேதே** [Goethe], **யோஹன் வோல்ஃப்கான்க்** *(1749—1832)—ஜெர்மானியக் கவிஞர், எழுத்தாளர், சிந்தனையாளர்.—250.*

**கேய்ப்** [Geib], **ஔகுஸ்ட்** *(1842—1879)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி.—230.*

**கொர்போன்** [Corbon], **குலோட் அன்தீம்** *(1808—1891)—பிரெஞ்சு இராஜியவாதி, அரசியல் நிர்ணய சபையில் (1848-49) குடியரசுவாத உறுப்பினர், பாரிஸ் நகரப் பகுதிகளில் ஒன்றின் மேயர், தேசிய அசெம்பிளியின் உறுப்பினர் (1871).—144.*

**சாண்டு ஜோர்ழ்** [George Sand], **(அரோரா டு டெவான்)** *(1804—1876)—பிரெஞ்சு எழுத்தாளர்.—45.*

**சார்லஸ் முதலாவது** *(1625—1649)—இங்கிலாந்தின் அரசர் (1625-1649).—38.*

**டர்புவா** [Darboy], **ஜோர்ழ்** *(1813—1871)—பாரிஸ் மாநகரத்தின் ஆர்ச்பிஷப், பணயக்கைதியாக வைக்கப்பட்டு 1871 மே மாதத்தில் கம்யூனால் சிரச்சேதம் செய்யப்பட்டார்.—199.*

**டன்தோன்** [Danton], **ஜோர்ழ் ழாக்** *(1759—1794)—பிரெஞ்சுப் புரட்சியில் முக்கியமானவர், ஜாக்கோபின் வலதுசாரி அணியின் தலைவர்.—116.*

**டாசிட்டஸ் (பப்ளியஸ் கர்னீலியஸ்)** [Tacitus] *(58—117)—ரோமன் வரலாற்றாசிரியர்.—194.*

**டியுஃபோர்** [Dufaure], **ழூல் அர்மான் ஸ்தனிஸ்லா** *(1798—1881)—பிரெஞ்சு வழக்குரைஞர், இராஜியப் பிரமுகர்,*

*ஆர்லியான்வாதி, பாரிஸ் கம்யூனுக்கு எதிராக கொடும் பாதகங்கள் செய்தவன்.—147,157,185,187.*

**டியுவால்** [Duval], **எமீல் விக்தோர்** *(1840—1871)—பிரெஞ்சுத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கியமான பிரமுகர், முதலாவது அகிலத்தில், தேசியக் காவலர் படையின் மத்தியக் கமிட்டியில் மற்றும் பாரிஸ் கம்யூனில் உறுப்பினர், 1871 ஏப்ரல் 4ல் வெர்சேய் துருப்புகள் அவரைக் கைது செய்து சுட்டுக்கொன்றன.—157.*

**டிரியர்** [Trier], **ஹெர்சன்** *(1851—1918)—டென்மார்க்கைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதி, டென்மார்க் சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரி அணியின் தலைவர்.—296.*

**டுவேய்** [Douay], **அபேல்** *(1809—1870)—பிரெஞ்சு ஜெனரல்.—192.*

**டெமரே** [Desmarest]*—பிரெஞ்சுப் போலீஸ் அதிகாரி, ஃபிலொரானைக் கொலை செய்தவன்.—158.*

**தமிஸியேர்** [Tamisier], **பிரான்சுவா லொரான் அல்ஃபோன்ஸ்** *(1809—1880)—பிரெஞ்சுத் தளபதி மற்றும் அரசியல்வாதி, குடியரசுவாதி, பாரிஸ் தேசியக் காவலர் படையின் தலைமைத்தளகர்த்தர் (1870 செப்டெம்பர்-நவம்பர்).—153.*

**தமெர்லான்—திமூரைப்** *பார்க்க.*

**திமூர் (தமெர்லான்)** *(1336—1405)—மத்திய ஆசியாவைச் சேர்ந்த தளபதி, பல நாடுகளை வெற்றிக்கொண்டவர்.—158.*

**தியேர்** [Thiers], **லுயீ அடோல்ப்** *(1797—1877)—பிரெஞ்சு வரலாற்றுசிரியர், அரசாங்கப் பிரமுகர், குடியரசின் ஜனாதிபதி (1871-1873), பாரிஸ் கம்யூனைக் கொன்றவன்.—139, 142, 143, 147, 148, 149, 151, 154, 157, 158, 159, 162, 165, 174, 179, 182, 183, 186, 187, 188, 190, 191, 193, 194, 196, 197, 199, 202, 210, 220.*

**தொமா** [Thomas], **கிலெமான்** *(1809—1871)—பிரெஞ்சு ஜெனரல் மற்றும் அரசியல்வாதி, முதலாளி வர்க்கக் குடியரசு*

*வாதி; 1848 ஜூன் மாதப் பாரிஸ் எழுச்சியை நசுக்கு வதில் பங்கெடுத்தவர்; பாரிஸ் தேசியக் காவலர் படையின் தளபதி (1870 நவம்பர்—1871 பிப்ரவரி); 1871 மார்ச் 18ந் தேதியன்று எழுச்சியுற்ற படைவீரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.—152, 153, 160, 186, 188, 191.*

**தொலேன்** [Tolain], **அன்ரீ லுயீ** *(1828—1897)—பிரெஞ்சு செதுக்கு ஓவியக் கலைஞர், வலதுசாரிப் புருதோன்வாதி, பாரிஸ் கம்யூனின் போது வெர்சேய் தரப்புக்குக் கட்சி மாறியவர், பிறகு அகிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்.—159.*

**த்ரொஷூ** [Trochu], **லுயீ ழூல்** *(1815—1896)—பிரெஞ்சுத் தளபதி, அரசாங்கப் பிரமுகர், தேசியத் தற்காப்பு அரசாங்கத்தின் தலைவர், பாரிஸ் இராணுவத்தின் தலைமைத் தளகர்த்தர். (1870 செப்டெம்பர்—1871 ஜனவரி) நகரத்தின் தற்காப்பை வஞ்சகமாக வெளியிட்டவன்.—142, 143, 150, 153, 197.*

**நியூவென்ஹைஸ்** [Nieuwenhuis], **ஃபெர்டினண்டு டமெலா** *(1846—1919)—நெதர்லாந்தின் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முக்கிய பிரமுகர், டச்சு சமூக-ஜனநாயகக் கட்சியை நிறுவியவர், 1888 முதல் நாடாளுமன்ற உறுப்பினர், 1890க்களில் அராஜகவாதத்தை ஆதரித்தவர்.—279.*

**நெப்போலியன் முதலாவது (போனப்பார்ட்)** *(1769—1821)—பிரான்சின் சக்கரவர்த்தி (1804—1814 மற்றும் 1815).—112, 145, 153, 176, 212.*

**நெப்போலியன் மூன்றுவது (லுயீ நெப்போலியன்)** *(1808—1873)—இரண்டாவது குடியரசின் ஜனாதிபதி (1848-1851), பிரான்சின் சக்கரவர்த்தி (1852-1870).—142, 150, 151, 162, 163, 169, 174, 176, 179, 184, 187, 188, 190, 206, 212, 257, 293, 302.*

**பக்கூனின், மிஹயீல் அலெக்சாந்திரவிச்** *(1814—1876)—ருஷ்யப் புரட்சியாளர், எழுத்தாளர், அராஜகவாதச் சித்தாந்தி.—230, 291.*

**பர்பே** [Barbès], **அர்மான்** *(1809—1870)—பிரெஞ்சு குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, 1848 புரட்சியில் முக்கிய பங்கெடுத்தவர், அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்.—123.*

**பலடீன்—ஒரேல் டெ பலடீனைப்** *பார்க்க.*

**பலிக்கவோ—குஸேன்-மொன்தபானைப்** *பார்க்க.*

**பிகார்** [Picard], **எர்னேஸ்ட்** *(1821—1877)—பிரெஞ்சு வழக்குரைஞர், அரசாங்கப் பிரமுகர், தியேர் அரசாங்கத்தில் உள்நாட்டு இலாகா மந்திரி, பாரிஸ் கம்யூனைக் கொன்றவர்.—148, 157, 199.*

**பியா** [Pyat], **ஃபெலீக்ஸ்** *(1810—1889)—பிரெஞ்சுப் பத்திரிகையாளர், நாடகாசிரியர், அரசியல்வாதி. குட்டிமுதலாளி வர்க்க ஜனநாயகவாதி.—223.*

**பியுஷே** [Buchez], **ஃபிலீப்** *(1796—1865)—பிரெஞ்சு அரசியல்வாதி, வரலாற்றாசிரியர், முதலாளி வர்க்கக் குடியரசுவாதி, கிறிஸ்துவ சோஷலிசச் சித்தாந்தி. —253.*

**பியெத்ரீ** [Pietri], **ஜோஸேப் மரீ** *(1820—1902)—பிரெஞ்சு அரசியல்வாதி, பாரிஸ் மாநகரத் தலைமைப் போலீசு அதிகாரி (1866-1870).—184.*

**பிராக்கே** [Bracke], **வில்ஹெல்ம்** *(1842—1880)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் (ஐஸனுக்வாதிகள்) பிரமுகர்; மார்க்ஸ் எங்கெல்சின் நண்பர்.—230.*

**பிரெடெரிக் இரண்டாவது** *(1712—1786)—பிரஷ்யாவின் அரசர்.—328.*

**பிரைட்** [Braight], **ஜான்** *(1811—1889)—இங்கிலாந்தைச் சேர்ந்த தயாரிப்பாளர், அரசியல்வாதி, தானியச் சட்ட எதிர்ப்புக் கழகத்தை நிறுவியவர், அதன் தலைவர்.—308.*

**பிலேஹ்ரோடெர்** [Bleichröder], **கேர்சன்** *(1822—1893)—ஜெர்மன் நிதியதிபர், நிதி விவகாரங்களில் பிஸ்மார்க்கின் ஆலோசகர், பல ஊகவாணிகத் திட்டங்களைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியவர்.—294.*

**பிளன்ஷே** [Blanchet], **ஸ்தனிஸ்லா** *(உண்மையான பெயர் புரீய்) (பிறப்பு: 1883)*—போலீஸ் ஒற்றன், பாரிஸ் கம்யூனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டான்; ஆனால் உண்மை அம்பலப்படுத்தப்பட்டு 1871 மே மாதத்தில் கைது செய்யப்பட்டான்.—*179*.

**பிளாங்கீ** [Blanqui], **லூயீ ஒகுஸ்ட்** *(1805—1881)*—பிரெஞ்சுப் புரட்சியாளர், கற்பனாவாதக் கம்யூனிஸ்ட், பிரான்சின் முதலாளி வர்க்க அரசாங்கங்களுக்கு எதிராகப் புரட்சிகர நடவடிக்கைகளை அமைத்தவர்.—*123, 147, 153, 199, 299, 300, 301*.

**பிஸ்மார்க்** [Bismarck], **ஓட்டோ எடுவார்டு** *(1815—1898)*—பிரஷ்யாவின் பிரதம மந்திரி *(1862-1871)*; ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் சான்சலர் *(1871-1890)*.—*145, 148, 169, 179, 183, 189, 200, 201, 220, 247, 248,249, 294, 297*.

**புயேர்-கெர்தியே** [Pouyer-Quertier], **ஒகுஸ்டேன் தொமா** *(1820—1891)*—பிரெஞ்சுத் தயாரிப்பாளர் மற்றும் அரசாங்கப் பிரமுகர், நிதி அமைச்சர் *(1871-1872)*, ஃபிராங்க்புர்ட்டில் ஜெர்மனியுடன் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கெடுத்தவர்.—*147,148,189*.

**புருதோன்** [Proudhon], **பியேர் ஜொஸேப்** *(1809—1865)*—பிரெஞ்சு எழுத்தாளர், குட்டிமுதலாளி வர்க்கத்தின் சித்தாந்தி, அராஜகவாதத்தை நிறுவியவர்களில் ஒருவர்.—*44, 299, 300*.

**பெக்கியோர்** [Pecqueur], **கான்ஸ்தன்தேன்** *(1801—1887)*—பிரெஞ்சுப் பொருளியலாளர், கற்பனாவாத சோஷலிஸ்டு.—*133*.

**பெபெல்** [Bebel], **ஔகுஸ்ட்** *(1840—1913)*—ஜெர்மனியில் சமூக-ஜனநாயகத்தை நிறுவியவர்கள் மற்றும் அதன் தலைவர்களில் ஒருவர்; மார்க்ஸ் எங்கெல்சின் தோழர்.—*230*.

**பெர்ழெரே** [Bergeret], **ழூல் விக்தோர்** *(1839—1905)*—தேசியக் காவலர் படை மற்றும் பாரிஸ் கம்யூன் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்.—*155*.

**பேன்** [Pène], **அன்ரீ டெ** *(1830—1888)—பிரெஞ்சுப் பத்திரிகையாளர், முடியரசுவாதி, 1871 மார்ச் 22ந் தேதியன்று பாரிசில் நடைபெற்ற எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை அமைத்தவர்.—155.*

**போவியோ** [Bovio], **ஜோவான்னி** *(1841—1903)—இத்தாலியக் கருத்து முதல்வாதத் தத்துவஞானி, அரசியல்வாதி, குடியரசுவாதி, மத எதிர்ப்பாளர், 1876 முதல் நாடாளுமன்ற உறுப்பினர்.—313, 315.*

**போனப்பார்ட்**—*நெப்போலியன் முதலாவது பார்க்கவும்.*

**போனப்பார்ட் லுயீ**—*நெப்போலியன் மூன்றுவது பார்க்கவும்.*

**மல்ஜூர்ஞல்** [Maljournal] *(பிறப்பு: சுமார் 1843)—தேசியக் காவலர் படை அதிகாரி, அகிலம், தேசியக் காவலர் படை மத்தியக் கமிட்டி மற்றும் பாரிஸ் கம்யூனில் உறுப்பினர்.—155.*

**மாக்மாஹோன்** [Mac-Mahon], **மரீ எட்ம் பட்ரீஸ் மொரீஸ்** *(1808—1893)—பிரெஞ்சு மார்ஷல் மற்றும் அரசியல்வாதி, போனப்பார்ட் ஆதரவாளர், பாரிஸ் கம்யூனைக் கொன்றவர்.—191, 199.*

**மார்கன்** [Morgan], **லூயிஸ் ஹென்ரி** *(1818—1881)—அமெரிக்க ஆராய்ச்சியாளர், வரலாறு, இன வளர்ச்சி மற்றும் பண்டைக்கால நாகரிகத்தை ஆராய்ச்சி செய்தவர்.—60.*

**மார்க்ஸ்** [Marx], **கார்ல்** *(1818—1883).—230, 282, 296, 301, 315, 326.*

**மால்தஸ்** [Malthus], **தாமஸ் ராபர்ட்** *(1766—1834)—மதகுரு, ஆங்கிலப் பொருளியலாளர், மக்கள் தொகையைப் பற்றி விஞ்ஞானத்துக்குப் புறம்பான கருதுகோளின் ஆசிரியர் (குறிப்பு எண் 90ஐப் பார்க்கவும்).—250.*

**மிக்கேல்** [Miquel], **யோஹன்** *(1828—1901)—ஜெர்மன் அரசியல்வாதி, 1890க்களில் பிரஷ்யாவின் நிதி அமைச்சர்.—309.*

**மில்தன்** [Milton], **ஜான்** *(1608—1674)—ஆங்கிலக் கவிஞர்,*

''சுவர்க்க நீக்கம்'' முதலிய காவியங்களை எழுதியவர்.—206.

மெட்டர்னிஹ் [Metternich], கிளெமென்ஸ், இளவரசர் *(1773—1859)—ஆஸ்திரிய அரசாங்கப் பிரமுகர், பிற்போக்கு வாதி, சான்சலர் (1821-1848), புனிதக் கூட்டணியை அமைத்தவர்.—59.*

மொண்தெஸ்கியே [Montesquieu], ஷார்ல் *(1689—1755)—பிரெஞ்சு சமூகவியலாளர், பொருளியலாளர், அறிவியக்கத்தின் எழுத்தாளர்.—168.*

மோரிஸ் [Morris], வில்லியம் *(1834—1896)—ஆங்கிலக் கவிஞர், கலைஞர், எழுத்தாளர், சோஷலிஸ்ட் சங்கத்தை (1884—1889) அமைத்தவர்.—298.*

மோள் [Moll], யோசிஃப் *(1812—1849)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் முக்கியமான பிரமுகர், 1848ல் ஜெர்மனியில் வெடித்த புரட்சியில் பங்கெடுத்தவர், 1849இல் கொல்லப்பட்டார்.—97.*

மௌரர் [Maurer], கியோர்கு லுட்விக் *(1790—1872)—ஜெர்மன் வரலாற்றாசிரியர், பண்டைக் கால மற்றும் மத்திய கால ஜெர்மனியின் சமூக அமைப்பை ஆராய்ந்தார்.—60.*

ரஸ்பைல் [Raspail], பிரான்சுவா *(1794—1878)—பிரெஞ்சு இயற்கை விஞ்ஞானி, எழுத்தாளர், சோஷலிஸ்டு; புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துடன் நெருக்கமாக இருந்தவர், 1830 மற்றும் 1848ம் வருடப் புரட்சிகளில் பங்கெடுத்தவர்.—123.*

ரூஸ்ஸோ [Rousseau], ழான் ழாக் *(1712—1778)—பிரெஞ்சு அறிவியக்கவாதி, ஜனநாயகவாதி, குட்டி முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தவாதி.—235.*

ரொபினே [Robinet], ழான் பிரான்சுவா எழேன் *(1825—1899)—பிரெஞ்சு மருத்துவர், வரலாற்றாசிரியர், குடியரசுவாதி, 1870-1871ல் பாரிஸ் நகரம் முற்றுகையிடப்பட்ட பொழுது பிராந்தியம் ஒன்றின் மேயராக இருந்தவர்.—202.*

லஃபார்க் [Lafargue], போல் *(1842—1911)—பிரெஞ்சு மற்றும்*

*சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் முக்கிய பிரமுகர், எழுத்தாளர், தலை சிறந்த மார்க்சியப் பிரச்சாரகர், பிரெஞ்சுத் தொழிலாளர்கள் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர், மார்க்ஸ் எங்கெல்சின் சீடர், சகதோழர்.—317.*

**லஸ்ஸால் [Lassalle], ஃபெர்டினண்டு** *(1825—1864)—ஜெர்மன் சோஷலிஸ்டு, ஜெர்மன் தொழிலாளர்களது பொதுச் சங்கத்தை (1863) நிறுவியவர்; பிரஷ்யாவின் தலைமையில் ''மேலேயிருந்து'' ஜெர்மனியை ஒற்றுமைப்படுத்துவதை ஆதரித்தவர், அவரும் அவருடைய ஆதரவாளர்களும் ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சந்தர்ப்பவாத அணியாக இருந்தனர்.—231, 236, 237, 239, 240, 245, 246, 247, 249, 250, 251, 252.*

**லாங்கே [Lange], பிரெடெரிக் ஆல்பெர்ட்** *(1828—1875)—ஜெர்மன் தத்துவஞானி, புதிய காண்ட்டியவாதி.—250.*

**லீப்க்னெஹ்ட் [Liebknecht], வில்ஹெல்ம்** *(1826—1900)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கியமான பிரமுகர், ஜெர்மனியில் சமூக-ஜனநாயகத்தை நிறுவி அதற்குத் தலைமை தாங்கியவர்களில் ஒருவர், மார்க்ஸ், எங்கெல்சின் நண்பர், சகதோழர்.—230, 231, 306.*

**லுயீ-ஃபிலீப்** *(ஆர்லியான் கோமகன்) (1773—1850)—பிரான்சின் அரசர் (1830-1848).—152, 169, 187, 253, 256, 309.*

**லெ ஃபிலோ [Le Flô], அடோல்ப் எமனுயேல் ஷார்ல்** *(1804—1887)—பிரெஞ்சுத் தளபதி, இராஜியவாதி மற்றும் அரசாங்கப் பிரமுகர், தேசியத் தற்காப்பு அரசாங்கத்திலும் தியேர் மந்திரிசபையிலும் யுத்த அமைச்சர் (1870-1871).—154, 159.*

**லெகோன்ட் [Lecomte], குலோட் மார்தேன்** *(1817—1871)—பிரெஞ்சுத் தளபதி, 1871 மார்ச் 18ல் புரட்சி இயக்கத்தின் படைவீரர்களால் கொல்லப்பட்டார்.—152, 154, 160, 186, 188, 191.*

**வலன்தேன் [Valentin], லுயீ எர்னேஸ்ட்**—*பிரெஞ்சுத் தளபதி, போனப்பார்ட் ஆதரவாளர், பாரிசில் 1871 மார்ச் 18ல்*

*நடைபெற்ற புரட்சிகர எழுச்சியின் முற்பொழுதில் தலைமைப் போலீசு அதிகாரியாக இருந்தவர்.—147, 148, 184.*

**வினுவா** [Vinoy], **ழொஸேப்** *[1800—1880)—பிரெஞ்சுத் தளபதி, போனப்பார்ட் ஆதரவாளர், 1851 டிசம்பர் 2ந் தேதித் திடீர்ப்புரட்சியில் பங்கெடுத்தவர், பாரிஸ் கம்யூனைக் கொன்றவர்களில் ஒருவர்.—139, 147, 148, 151, 154, 155, 158.*

**வில்ஹெல்ம் முதலாவது** *(1797—1888)—பிரஷ்யாவின் அரசர் (1861-1888), ஜெர்மனியின் சக்கரவர்த்தி (1871-1888).—190.*

**வெய்டமையர்** [Weydemeyer], **யோசிஃப்** *(1818—1866)—ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முக்கிய பிரமுகர், அமெரிக்காவில் மார்க்சியத்தை முதன்முதலாகப் பரப்பியவர்; மார்க்ஸ், எங்கெல்சின் நண்பர், சகதோழர்.—117.*

**வைத்லிங்** ]Weitling], **வில்ஹெல்ம்** *(1808—1871)—ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் முக்கியமான பிரமுகர்; கற்பனாவாத சமத்துவ கம்யூனிசத்தின் தத்துவாசிரியர்.—314, 315.*

**வெயான்** [Vaillant], **எட்வார் மரீ** *(1840—1915)—பிரெஞ்சு சோஷலிஸ்டு, பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர்.—299.*

**வொல்தேர்** [Voltaire], **பிரான்சுவா மரீ (அருவே)** *(1694—1778)—பிரெஞ்சுத் தத்துவஞானி, அங்கத எழுத்தாளர், வரலாற்றாசிரியர், அறிவியக்கத்தின் முன்னணியில் இருந்தவர்.—158, 174.*

**ழகொமே** [Jacquemet]—*பாரிஸ் மாநகர ஆர்ச்பிஷப்பின் தலைமைத் துணைவர் (1848).—199.*

**ழொபேர்** [Jaubert], **இப்பலீத் பிரான்சுவா,** *கவுண்ட் (1798—1874)—பிரெஞ்சு ராஜியப் பிரமுகர், முடியரசுவாதி, தியேர் அரசாங்கத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் (1840), தேசிய அசெம்பிளியில் உறுப்பினர் (1871).—202.*

ஜிஃபென் [Giffen], ராபர்ட் *(1837—1910)*—*இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளாதார மற்றும் புள்ளியியல் அறிஞர், நிதிவிவகார நிபுணர்.—272.*

ஷன்கர்னியே [Changarnier], நிக்கொலா ஆன் தெயொடுல் *(1793—1877)*—*பிரெஞ்சுத் தளபதி, அரசியல்வாதி, முடியாட்சியை ஆதரித்தவர், 1849 ஜுன் 13ந் தேதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைத்தவர்.—156.*

ஷெஃபெர் [Scheffer]—*தேசியக் காவலர் படை மற்றும் பாரிஸ் கம்யூன் உறுப்பினர்.—159.*

ஷ்தும் [Stumm], கார்ல் *(1836—1901)*—*ஜெர்மன் தொழில் முனைவர்.—326.*

ஸல்திக்கோவ், அலெக்சேய் திமீத்ரியெவிச், *இளவரசர் (1806—1859)*—*ருஷ்ய எழுத்தாளர், கலைஞர், பிரயாணி; இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தவர் (1841-1843 மற்றும் 1845-1846).—120.*

ஸிமோன் [Simon], ழூல் *(1814—1896)*—*பிரான்சின் அரசாங்கப் பிரமுகர், தேசியத் தற்காப்பு அரசாங்கத்திலும் தியேர் மந்திரிசபையிலும் பொதுக்கல்வி அமைச்சர் (1870-1873), கம்யூனுக்கு எதிரான போராட்டத்தைத் தூண்டியவர்களில் ஒருவர்.—148.*

ஸல்லா (லூஸியஸ் கர்னேலியஸ் ஸல்லா) *(கி. மு. 138—78)*—*ரோமானியத் தளபதி, அரசாங்கப் பிரமுகர்; கான்சல் (கி. மு. 88); சர்வாதிகாரி (கி.மு. 82-79).—144, 193.*

ஸெஸ்ஸே [Saisset], ழான் *(1810—1879)*—*பிரெஞ்சுக் கடற்படைத் தளபதி, அரசியல்வாதி, முடியரசுவாதி.—156.*

ஹக்ஸ்லி [Huxley], தாமஸ் ஹென்ரி *(1825—1895)*—*இங்கிலாந்தைச் சேர்ந்த இயற்கை விஞ்ஞானி, டார்வினைப் பின்பற்றியவர்.—206.*

ஹாக்ஸ்த்ஹாவுசன் [Haxthausen], ஔகுஸ்ட் *(1792—1866)*—*பிரஷ்யாவைச் சேர்ந்த அதிகாரி, எழுத்தாளர், ருஷ்யாவில் பிரயாணம் செய்து அங்குள்ள நில உறவுகளைப் பற்றிப் புத்தகம் எழுதியவர்.—60.*

**ஹெகல்** [Hegel], **கியோர்கு வில்ஹெல்ம் பிரெடெரிக்** *(1770—1831)*—*ஜெர்மன் கருத்துமுதல்வாதத் தத்துவஞானி, இயக்கவியல் முறையைக் கையாண்டு பிரபலமடைந்தவர்.—127.*

**ஹைன்ஸென்** [Heinzen], **கார்ல்** *(1809—1880)*—*ஜெர்மன் எழுத்தாளர், குட்டி முதலாளி வர்க்கக் குடியரசுவாதி.—117.*

**ஹோஹன்ஸோலர்ன்கள்** [Hohenzollerns] —*பிரான்டன்பர்கிலும் (1415-1701), பிரஷ்யாவிலும் (1701-1918), ஜெர்மன் சாம்ராஜ்யத்திலும் (1871-1918) ஆட்சி செலுத்திய அரச வம்சத்தினர்.—178.*

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

*41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*
*சென்னை—600098.*

ஷோ-ரூம்

*136, அண்ணாசாலை, சென்னை—600002.*

கிளைகள்

*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.*
*3—4, நேரு ஸ்டேடியம், கோயம்புத்தூர்—641001.*
*42/7 சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.*
*செர்ரி ரோடு, சேலம்—636001.*

விற்பனை நிலையங்கள்

*3—22—75—D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன்.*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.*